கடவுள் துணை.

மஹாமருத்துவம்பொருந்திய

# போகமுனிவர்

திருவாய்மலர்ந்தருளிய

# சத்தகாண்டம்-எகூ.

## மூன்றாவது காண்டம்.

---

### காப்பு.

அண்டபராபரமானமுதலேகாப்பு
அடியேனுங்காலாங்கிநாயர்பதங்காப்பு
புகன்றுநின்றகாலாங்கிகுருபதமேகாப்பு
புகழானவல்லமுனிசித்தர்பதங்காப்பு
தகன்றபெரியோர்ஞானிதாள்பதமேகாப்பு
சதாசிவத்தின்சுடரொளியேதனிப்பதமேகாப்பு
நிகன்றசத்தகாண்டமதுயேழாயிரந்தான்
நிகழ்த்தினேன்மூன்றாவதுகாண்டமிதுதானே. க

தானானகாண்டமிது மூன்றாங்காண்டம்சதுர்யுகத்து வதிசயங்கள்சாற்றலாகும், கோனானயென்னையர்காலாங்கிநாதர் கூறினார்திரேதாயுகத்தினதிசயத்தை, வானானகாலாங்கிநாயருக்குவயதல்லோவைந்துரண்டுபத்துமாச்சு, தேனானயென்னையர்குருவாமையர் திரேதாவினதிசயத்தைச் செப்பினாரே. உ

செப்பினார்காலாங்கிகுருவாமையர் சிறந்ததொரு குளிகையது பூண்டுகொண்டு, ஒப்பமுடன்கடலேழும்சுத்திவந்து ஓங்குபெறகைலங்கிரிகாணவென்று, மெப்புடனேகைலங்கிரியாதிபீடம் மேன்மையுடனடிவாரத்தண்டைபக்கம்கொப்பெனவேகுளிகைகொண்டேயிறங்கினாம்கோடானகோடிமுனிரிஷிகண்டாரே. ங

கண்டவுடன்ரிஷிகளெல்லா மோடிவந்து கடுகெனவேவதிசயித் துக்காணவந்தார், தெண்டனிட்டுயடிபணிந்து தாழ்ந்திட்டாராம்திற மானசித்துதனைக்கண்டபோது, அண்டமுனிராட்சதன்போல்சித்தர் கூடம்அங்கனவேகாலாங்கிகுருவைக்கண்டு, விண்டபடிசொரூபமென் றசித்துதன்னைவிபரமுடன் கேட்டாராம்சித்தர்தாமே. ச

தாமானசித்தர் முனிகேட்கும்போது சதாசிவமூந்திடுக்கிட்டு மனங்கலங்கி, நாமானகாலாங்கிகுருவாமையர்நாதாக்கள்சித்தகளைக் காணவென்று, வேமானகுளிகைகொண்டுவந்தேன்சாமி வெகுகாலம் கோடிவரைதம்மைக்காண, நாமானவார்த்தைதக்குச் சந்தோஷித்துக் கருத்துடனேநல்வார்த்தையுரைத்திட்டாரே. ரு

நவகண்டரிஷியைக்காலாங்கிகுருகண்டது.

உரைக்கையிலேநவகண்டரிஷிகள்தானும் வுயர்நாகமலையினது யடிவாரத்தில், திறக்கமுடன்சமாதியதுவிலேயும்பண்டார் திறலானநவ கண்டரிஷியுங்கண்டார், சிறக்கமுடனவைகண்டரிஷிபாசிர்மம்சென் றுரூமெங்களையர்குருவாந்தேவர், இறக்கம்வைத்து வவரெனக்குவுப தேசங்கள் யெழிலாகத்தானுரைத்தார்கண்டார்தாமே. சா

கண்டமாமுனியோரும்வுபதேசிக்க காலாங்கிகுருதானும்களிப் புகொண்டு, மண்டலமெல்லாம்புகழும்நவகண்டதேவர் மார்க்கமுட னெந்தனக்குவதீதஞ்சொல்வீர், விண்டலத்தினதிசயங்கள் யாவுஞ் சொல்லிவேதாந்தத்தாயினதுரூபஞ்சொல்லி, கொண்டனைத்துவெந்த னுக்குகுறைவைத்தீர்த்து கோடியுகங்காணவெனக்குறைதீர்ப்பீரே.

தீர்க்கவென்றுகேட்டவுடன்நவகண்டர்தாமும்திரளாகநானுயு கமதிசயங்கள்யாவும், பார்க்கவேயெடுத்துரைத்தார் குருநாதர்க்கு பாங்குபெறயாவற்று மறிந்துகொண்டார், ஆர்க்கவேயென்னையர்கா லாங்கிநாயர் அவருடையவிசுவாசவருளும்பெற்றார், மார்க்கமுடன் யென்னையர் ஞானம்பெற்று மாநிலத்தில் வெகுகாலம் யிருந்திட் டாரே. அ

இருந்தமுனிகாலாங்கி வெகுகோடிகாலம் யெழிலானவித்தை களுமற்புதங்கள்செய்தார், குருந்தமுடன்யெந்தனுக்கு ஞானவுப தேசம்கூறினார் சங்கற்பமனந்தம்பேர்க்கு, திருந்தவேவுபதேசமான பின்புதீரமுடன்சமாதிக்குயேதுகொண்டார், பொருந்தவேயடியேனு ம்வுபதேசம் பெற்றுபுறப்பட்டேன்ஜெனபதிதேசந்தானே. கூ

தேசமாமின்னம்வெகு தேசமெல்லாம் சிறப்புடனே குளிகையது பூண்டுகொண்டு, ஆசையுடன்சத்த சாகரமுங்கண்டேன் அன்பாகப்பாடிவிட்டேன் சத்தகாண்டம், பூசையுடன் யேழாயிரக்காவியத்தை புகட்டினேன் லோகத்துமாந்தற்கப்பா, யாசையுடன்பரிபாழையில்லாமற்றான் பாரினிலேபாடிவிட்டேன் பண்பதாமே. ௧௦

போகர்பாரிஷ்தேசம்கண்டது.

பண்பான குளிகையது பூண்டுகொண்டேன் பாங்கான பாரீசபதியைக்கண்டேன், திண்பான பச்சை யென்றமலையைக் கண்டேன் திகழானகந்தருவர் மனிதர்கண்டேன் நண்பானமனிதற்கு ரெக்கையுண்டு நாதாக்கள் குளிகைகொண்டு பறந்தாற்போல, கண்பானகந்தருவர் மாந்தரப்பா கடையானமலை மீதிலிருந்தார்பாரே. ௧௧

பார்த்தேனே கந்தருவர் தன்னைக்கண்டேன் பாகுடனே யவர்பக்கல் சென்றுயானும், நேர்த்தியுடன் மேலோகவதிசயத்தை நேர்ப்புடனேயானுமல்லோ கேட்டேன் மைந்தா, தீர்த்தமுட னிந்திரனார் கொலுச்சிறப்பைத்திறமுடனே யெந்தனுக்குத்தாமுரைத்தார், சார்த்தமுடன் அம்மலையில்சுனையுமுண்டு சட்டமுடன் சுனையோரஞ்சென்றிட்டேனே. ௧௨

கொங்கணரைக்கண்டது.

சென்றேனே சுனைகண்டேன் குகையுங்கண்டேன் சிறப்பான கொங்கணவர் பதியுங்கண்டேன், குன்றானமலையோரம் சமாதியுண்டு கூட்டமுட னங்கிருந்தார்சித்தர்கூட்டம், பன்றானபூசையது ஆசிரமத்தைப்பாங்குடனே கண்டுவிட்டேனடியேனப்பா, வன்றான திரேதாயினுகத்திலப்பா வர்க்கமுடனெல்லவரும் பிறந்தார்தாமே. ௧௩

தாமான வர்க்கத்தோ ரனேகருண்டு சார்புடனே வவர்களிடம் சென்றுயானும், நாமானவஞ்சலிகள் மிகவுஞ்செய்து நடுக்கமுடனிற்கையிலேவடியேன்றன்னை, பூமானசித்தர்முனிகூட்டத்தார்கள் புத்தியுள்ளபாலா நீயாரென்றார்கள், காமான காலாங்கிதனைநினைந்து கர்த்தனிடசீஷனென்று வுரைத்திட்டேனே. ௧௪

உரைத்துமேயென்பேரு போகரென்றேன் வுறுதியுடன் சீனபதிபோயிருந்தேன், திரைகடல்களேழுவரை சுத்திவந்தேன் தேசாந்தேசமுள்ள சித்தர்தம்மை, வரைமுறைகள்தப்பாமல்கண்டுவந்தேன் வளமுடனேகுளிகையதுவலுமையாலே, இரையவனார் கொங்கணவர்பாதங்காண வெழிலுடனே வந்திட்டேன் பாரிஷ்தானே. ௧௫

தானென்று சொல்லுகையில்சித்தர்கூட்டம் சடுக்கெனவேகொ
ங்கணவர் பக்கஞ்சென்று, தேனான சமாதியிடம்வாசற்பக்கம் தே
வாதிதேவருட சமாதியோரம், கோனான குருவான சாமிபாதம் குறி
ப்புடனே யெல்லோருங் கூட்டமிட்டு, பானான காலாங்கிநாயர் சீஷர்
பட்சமுடன் தன்பாதம் வந்திட்டாரே. கசு

வந்தாரேபோக ரிஷிபாலன்றானும் வண்ணமுடன்றானுரைத்தா
ர்சித்தரெல்லாம், அந்த முடனவர்சொல்ல கொங்கணவர்தாமும்
அன்பான காலாங்கிபேரைக்கேட்க, சந்தோஷமுண்டாகி சமாதி
தன்னில் சட்டமுடன் வருவதற்கு விடையுஞ்சொன்னார், கந்தருவர்
போலவல்லோக் குளிகைபூண்டு கர்த்தரிடம் சென்றேனே போகர்
நானே. கஎ

போகரென்று சொன்னேனே யடியேனுந்தான் பொங்கமுட
னெந்தனுக்குத்திரமாகி, ஆவலுடன் கொங்கணவர் பாதம்போற்றி
அப்பனேசரணமென்றுபணிந்திட்டேன்யான், காவலுடன்தான்கட
ந்து வந்தபாலா பாரினிலே சித்தரப்பா ரிஷிகள்கோடி, சாபமுடன்
றுந்தனையும்சபிப்பாரப்பா சாக்கிறதைபவர்களிடம் சார்பாய்நில்லே

நிற்கையிலே வுத்தாரமெதிர் சொல்லாதேகுறைகுறைகள் நேர்ந்
தாலும்பதரிடாதே, சிற்பரனார்காலாங்கிதனைநினைந்து சிருடனேயவ
ர்களுக்குத் தொண்டுபண்ணி, அற்புதங்கள் யாவையுந் கண்டறி
ந்துஅவர்களிடம் விசுவாசமருளும்பெற்று, சற்பனையோடெந்நாளுங்
காலாங்கிதம்மைச் சதாகாலம் கருத்தினிலே நினைத்திடாயே. ககூ

நினைக்கையிலே யெண்ணமெல்லாஞ் சித்தியாகும் நீடூழிகாலம்
வரை யிருக்கலாகும், உனைப்புகழ்வார் லோகத்துமாந்தரெல்லாம் ஓ
கோகோநாதாக்க ளிவர்போலுண்டோ, முனையான காலாங்கிசீஷனெ
ல்லோமூதலகில் பேர்கொண்டசீஷனென்பார், இனையளவுயாம்சொ
ன்ன வுபதேசங்கள் தீர்க்கமுடனென்னாளுங் கொள்ளுவீரே. உ0

கொள்ளவென்றுவின்னமொரு வுபதேசங்கள்குவலயத்தில் யா
ம்சொல்வே னுந்தமக்காய், விள்ளவே யெமைப்போல யாருஞ் சொல்
லார்மேதினியில் யாமுரைத்தோம்பட்சம்வைத்து, உள்ளபடி ஞான
வுபதேசமெல்லாம் ஊடுருகவெந்தனுக்கு ஓதித்தேதான், எள்ளளவு
யிடையூறுவாராமற் றானெந்தனுக்கு வரமதுவுங் கொடுத்தார்பாரே.

சீனபதிக்குவந்து கமலமுனிக்கு கொங்கணர்பிரஸ்தாபம்சொன்னது.

பாரேதான் சீனபதிதன்னில்வந்து பட்சமுடன் கமலரிடம்வந்
தேனப்பா, சீரேதான்கமலருக்குவடியேன்தானும் சிறப்புடனே வெ

ங்கணவர் செய்திசொன்னேன், நேரேதான்கமலருமேசந்தோஷந்தா
ர்நேர்மையுடன் விடைபெற்றுப் பதிக்குள்வந்தேன், வேரோதான் வி
னோதங்கள் வதிநஞ்செய்தேன் மிக்கானசினபதிக் குள்ளேதானே.()

சாரக்கட்டு செந்தூரப்போக்கு.

தானானவின்ன மொருமார்க்கங்கேளு தயவாகச் சொல்லுகிறே
ன்மாணுக்கற்காய், பானைசாரமது கட்டிவாங்கிப் பக்குவமாய்ப்புட
ம்போட வரிசைகேளு, தேனான சீனமதுவொன்றேயாகும் தெளிவா
னகாரமது வொன்றேயாகும், வேனான மிந்துப்புவளையலுப்பு வெடி
யானவுப்பதுவு மொன்றாய்க்கூட்டே. ௨௩

கூட்டவேசிப்பி யென்றசுண்ணாந்தானும் குணமானபூநீறு வொ
க்கச்சேர்த்து, நீட்டமுடன்வெண்கரு வாலரைத்துமேதான் நிலையா
னசாரமதுக்கங்கிபூட்டி, வாட்டமுடன்ரவிதனிலேகாயவைத்து வள
மாகசீலையதுவலுவாய்செய்து, நாட்டமுடன்குழிவெட்டிமணல்தான்
கொட்டி நலமாகப்புடம்போடப் பத்துமாமே. ௨௪

பத்தானபுடமதுவு மிந்தபாகம் பாகமுடன் முன்போலப்போ
ட்டுத்தீரு, புத்தானசாரமதுகட்டிப்போகும் போக்கானபுகையதுவு
மடங்கியேதான், தத்தானதந்தம்போலாகும்பாரு மகத்தானசார
மிது சித்தர்வேதை, சித்தான செந்தூரமென்னசொல்வேன் சிவன்
தானு மாயிக்குத்தான் சொன்னாரே. ௨௫

சொன்னவுடனுமைதானும் காலாங்கிக்குச்சூட்சமுடன்தானுரை
க்க காலாங்கிதாமும், நனையமாய் யெந்தனுக்குச் சொன்னபாகம்
நாட்டிலேலோகாதாக்கள் கூறவில்லை, பொன்னான செந்தூரம் மார்க்கங்
கேளு புகழானசாரமது கட்டிக்காப்பா, மன்னானபொன்னுவரையின்
மூலி மயங்காமல்தேங்காய்போல் கவசஞ்செய்யே. ௨௬

செய்யவேசீலையது செய்துபின்பு செழிப்புடனே ரவிதனிலே
காயவைத்து, பையவேதளவாயின்சட்டிமேலே பாங்குபெற வுப்பத
னைக்கொட்டிமைந்தா, மையவேகட்டி நடுமையம்வைத்து மறவாம
லுப்பதனை மேலேகொட்டி, முய்யவேமேல்சட்டி கொண்டுமூடி மூசி
யாமல் தானெரிப்பாய் சாமமெட்டே. ௨௭

எட்டானசாமமது யெரிக்கும்போது மெழிலானசாரமதுசிவப்
புயேறி, திட்டானகட்டியதுசிவந்துகாட்டும் திறமுடனேகவசமதுதி
றந்துபாரு, மட்டானசிவப்புடனேமங்கல்காட்டும்மார்க்கமுடன்கட்

டிதனைகாற்றில்வைநீ, கட்டானசெந்தூரம் பூர்த்துக்காட்டும் கடுஞ்சு றுக்கு வேதையிதுவோடுமாமே. உஅ

ஓடவேசெந்தூரம் பதனம்செய்து வுத்தமனே செம்பதனில்தாக்கும்போது, கூடவே களிம்பதுவுமிகவுநீங்கி குணமுடனே மாற்றதுவுமெட்டதாகும், நீடவேபழுப்பான் பொன்னுகாணும் நேர்மையுடன் பத்துக்கு ரெண்டுவெள்ளி சாடவேதானுருக்கி வாரடித்துச் சட்டமுடன் புடம்போட பசுமைகாணே. உகூ

காணவே சுடரொளியின் பசுமைதங்கம்பாருலகில் சித்தரல்லால் ஆர்செய்வார்கள், பூணவே கருவாளியாகவேண்டும் புத்தியுள்ளான் பாக்கியவானாகவேண்டும், மாணவேசாத்திரங்கள் கற்றோர்காண்பார்மடையனே வாய்வீணன் காணமாட்டான், நாணவே நல்லொழுக்கனுயிருந்து நாதாக்கள்கிருபையது பெற்றோர்தாமே. ௩௦

பெற்றாலும் பேரின்பம் பெறவேவேண்டும் பேடிபோல் மண்ணைசைபெண்ணைசைதன்னை, அற்றவற்கே லகிரியானந்தம் வாய்க்கும் ஆனந்தபரஞ்சுடருங் காணலாகும், மற்றாலுமொன்று மில்லை வையந்தன்னில் மயங்கினுலொன்றுமேகாணமாட்டார், பற்றற்ற ஞானியாயிருந்தாயானால் பாருலகில்சர்வசித்து மாடலாமே. ௩க

ஆடலாஞ் சாரமென்றகட்டியாலே அப்பனேகட்டினதோர் சாரந்தன்னை, கூடவேசாரத்துக்குறுதிகேளு குணமுடனே சாரணைகள் செய்வாயப்பா, நீடவேசாரத்தில் குழிபோல்பண்ணி நேர்ப்புடனே சூதமதைவுள்ளேதாக்கி, போடவே நெருப்பதனில் கட்டிவைக்கப் பொங்சமுடன் சூதமதுவெண்ணையாமே. ௩உ

## சூதசெந்தூரம்.

வெண்ணையென்றசூதமதை யெடுத்துமைந்தாகிபாமுடன் சொல்லுகிறேன் சாற்றக்கேளு, கண்ணனிடமூலியதுக் குள்ளேவைத்துக் கருவாகச்சீலைபதுவலுவாய்ச்செய்து, திண்ணமுடன் கோழியென்ற புடத்தைப்போடு திருவானசூதமதுமடிந்துகொல்லும், எண்ணமுடன்சூதமதைசெந்தூரிக்க எனஞ்சொல்வேன்விபரமதாய்கேளுகேளே

கேளேதான்சூதமிடை வொன்றேயாகும் கெடியானவீரமிடை காலேயாகும், பாளேதான் துத்தமது திருசுதாலும் பாங்கான கெந்தியதுகாலதாகும், வீளேதான்காந்தமதுசிலையுங்கூட்டிவிரிவானவளையலென்றவுப்புகூட்டி, தூளேதான் மதியுப்புகாரத்தோடு துடியான இந்துப்பு காலதாமே. ௩௩

காலானபூரீறுவுப்புமாகும்கருவானசாரமுடன் பூரந்தானும்பாலானவரிதார மடலுப்பாரும், மகத்தான சினமதுகாலாய்ச்சேர்த்து வேலானபொற்றலைபின்சாற்றாலாட்டி, விருப்பமுடன்ரவிதனிலேகாயவைத்து பாலாள பொடிசெய்து ாவதாக்கிப் பாலகனே செந்தூர மார்க்கங்கேளே. ௩௫

கேட்கவே காசியென்ற குப்பிக்கேழு கெடிதான சீலைபதுவலுவாச்செய்து, நீட்டமுடன் குபபிக்குள் மருந்தைப்போட்டு நினைவாகமரக்கல்லு கொண்டுமூடி, தாட்டிகமாய்சட்டிதனில் மணலைகொட்டிசாங்கமுடன்குப்பிகடுமையம்வைத்து, வாட்டமுடன் மேலுமந்தமணலைக்கொட்டிவகுப்புடனே மேல்சட்டி கொண்டுமூடே. ௩௬

மூடவே சீலைபது வலுவாய்ச்செய்து முசியாமல் வாலுகையில் யேற்றிமைந்தா, நாடவே கமலாக்கினியெடுசோமம் நலமுடனேதானெரிப்பாய்மதிப்பதாக, நீடவேதியாறியெடுத்துப்பாருநினைவுடனே குப்பியது கறுத்துக்காணும், சாடலேகுப்பியது வுடைத்துப்பாரு சாங்கமுடன்செந்தூரமதீதமாமே. ௩௭

அதீதமாஞ்செந்தூரம் பதனம்பண்ணு அப்பனேவெள்ளியுதில் பத்துக்கொன்று, வதிதமுடன் தானுருக்கி குருவொன்றீய வளமுடனேகறுத்தநிதங்காணும்பாரு, சதிதமாம்வோட்டில்வைத்த துதிப்போடுசாங்கமுடன் பசுமையதுமாற்றேயெட்டு, சதிதமுடன் பத்துக்குவொன்று தங்கம் கருவாகத்தானுருக்கி சாய்த்திடாயே. ௩௮

சாய்க்கவேவாரடித்துப்புடத்தைப்போடு சட்டமுடன்பசுந்தங்கமாகும்பாரு, காய்க்கவேசெம்புதனில்பத்துக்கொன்றுகடின முடன்றானுருக்கி யெடுத்துபாரு, மாய்க்கவே கரியோட்டி லூதிப்போடு மகத்தானசெம்பதுவும்பழுப்புபொன்னும், தேய்க்கவேபத்துக்கு வொன்றுதங்கம் தேற்றமுடன்றானுருக்கிப் புடத்தைபோடே. ௩௯

போடவே மாற்றதுவுமதிகமாகி புகழானபொன்னதுவும் காந்திமெத்த, நீடவேகாதாக்கள் செய்யும்வேதைகிலையானமாணுக்களறிவாறேதான், கூடவே கருவாளி காண்பான்பாரு குணமில்லான்குடிகெடுக்கும் பாவிகாணுன், நாடவேகாலாங்கி பாதம்போற்றி நலமுடனே பாடிவைத்தேன் நன்மைபாரே. ௪௦

## தாம்பாச் சுன்னம்.

நன்மையாமின்ன மொருகருமானங்கேள் நாட்டிலே யாரறிவாரிந்தப்போக்கு, கன்மையாம் தாம்பூரத்தட்டுவாங்கி கருவாகவுப்பு

புளிகாரஞ்சேர்த்து, இன்மையாம்பழச்சாற்றால் தானரைத்து திறமுடனே செம்புக்குகவசம்செய்து, நன்மையுடன் ஓட்டிவிட்டுச்சீலைசெய்துநலமுடனேபுடம் போடசுத்தியாமே. சக

சுத்தியாமிப்படியேபத்து முறைதான்பாடசெருக்கமுடன்செம்புக்குபாதிமருந்தாகும், மத்தியேபுடம்போட்டசுத்தியாகும்மகத்தானசுத்திசெய்து பொடியதாக்கி, துத்தமுடன்வெள்ளையென்ற பாஷாணந்தான் துடியானவீரமுடன்காரந்தானும், சத்தியுடன்சூதமதுக்கூடச்சேர்த்துசதுராகபேரண்டம்சரியாய்க்கூட்டே. சஉ

கூட்டியே தானரைப்பாய் பெருக்கம்பாலால் குமுறவேநாற்சாமமரைத்தபோது, வாட்டமுடன்மெழுகதனை யெடுத்துமைந்தாவளமுடனேசெம்புதனை ராவிக்கொண்டு, நீட்டமுடன் தான்பிசறிமூசைக்கிட்டுநேர்புடனே சில்விட்டுச்சீலைசெய்து, நாட்டிகமாய் சரவுலையில் வைத்தூதூதுசாங்கமுடன் சுன்னமதுவாகுந்தானே. சஙு

வாகானசுன்னமதை யெடுத்துமைந்தாவளமையுடன்முன்போலசரக்குச்சேர்த்து, பாகானபதமுடனே ஊதூதுபசப்பற்ற பற்பமதுவாய்க்கும்பாரு, வேகானபற் பமது வைத்துதாமூது வேகாதுபச்சையென்ற செம்புதானும், போகாது களிம்பதுவுமற்றுநீங்கி புகழானபற்பமதுதவளமாச்சே. சச

ஆச்சிந்தப்பற்பத்தைப் பின்னுமைந்தா அழகுபெற சிற்றண்டம் சவ்வுபோக்கி, பேச்சொன்றுமில்லாமல் சரியாய்கூட்டிப் பேராகமூசையிட்டு சீலைசெய்து, காச்சென்றபச்சையதுநீங்கிப்போக கடுந்தீயில்பின்னொருக்கா லூதித்தீரு, மாச்சென்று மில்லாதபற்பமாச்சுமகத்தானபற்பமது பின்னுங்கேளே. சரு

பின்னுமேபற்பமதைக்கல்வமிட்டுப் பேர்ரானசாரமென்றசெயநீர்தன்னால், மின்னவேதானரைப்பாய்நாலுசாமம்மிக்கானசரக்கதனைமூசைக்கிட்டு, கன்னனைசீலையதுவலுவாய்ச் செய்துகருவாகவூதிடவேபற்பமாகும், மன்னனபற்பமதை யெடுத்துமைந்தா மகத்தானரஸ்தாளிப்பழத்தில்தாக்கே. சசு

தாக்கவேபழமதுவுமிறங்கிக்காட்டும் தனியானபசும் வெண்ணைதன்னிலப்பா, நோக்கமுடன் வரிசியெடையனுபானத்தில் நட்பமுடன்தானருந்த தேகம்கற்றாண், சேர்க்கமுடன் நரைதிரையுமற்றுப்போகும் சூட்சமுடன் கண்ணிரண்டுந்துலக்கங்காணும், ஆக்கையதுயிறுகியல்லோ சட்டைதள்ளும் அவனிதனில்நீயு மொருசித்தனுமே. சஎ

ஆமேதான் வாலையது போலேதோற்றும் அப்பனே வயத்ததுவு ம்பண்பாய்காட்டும், நாமேதான்சொன்னபடிபற்பங்கொண்டால் நாட் டிலேயுன்னையொரு சித்தனென்பார், வேமேதான் பற்பமதுவெள்ளி யத்தில்விருப்பமுடன்றானுக்கி குருவொன்றிய, தேமேதான்மாற்ற துவும்வெட்டதாகும் தேசத்திலசித்தர்செய்யும் வேதையாச்சே. ௪௮

வேதையிலே தாம்பூரத்தில் வேதையப்பா வெகுகோடி வேதை யிதுதாம்பரவேதை, பாதையாம் சித்தர்செய்யும் வேதைமாற்கம் பா ருலகில்கருவாளி செய்வான்பாரு, தீதையிலே சண்டாளத் துரோகி யோர்க்குநிலைகெட்டுமுறைகெட்டு தோஷதோன்றும், ஆதமுடன்பற் பமென்றபற்பந்தன்னை அநுபானமெண்ணைதனில் கலந்திடாயே. ( )

கலந்தஎண்ணை பணவெடைதானந்திசந்தி கவனமுடன்றானருந் தவாலையாவாய், பலமதிகமுண்டாகும் பாலர்க்கப்பாபாரினிலே ராசா க்கள்காண்பாராகில், வலமுடனேயோடிவந்து ஆசிர்மித்து வரைகோ டிதிரவியங்கள்மெத்தயீய்ந்து, நலமுடனே பற்பமதைக் கைக்கொள் வார்கள் நாட்டிலேபற்பமது நவிலொண்ணாதே. ௫௦

## தங்கசெந்தூரம்.

ஒண்ணுனதங்க மென்றகாசுதன்னை வுத்தமனேகளஞ்சிய[illegible] ததாகும், கண்ணுனரேக்கதுவும் கொண்டுவந்து கவனமுடன் மா[illegible] யென்ற பத்திரிதன்னால், குண்ணுனகாரமது பொரித்துப்போட்டு குன்றியிடைசீனமது வொக்கச்சேர்த்து, கண்ணுனநாற்சாமமறைத்த போது தாக்கானமெழுகுபோ லாகும்பாரே. ௫௧

பாரேதான் மெழுகதனைவட்டுசெய்து பண்பாகவித்னிலேகாய வைத்து, நேரேதான் வோட்டிலிட்டுச் சீலைசெய்து நேர்பூரகப்புடம் போடச் செந்தூரிக்கும், காரேதான் செந்தூரமெடுத்துப்பாரு கறுப் பானசெந்தூரம் போலேகாணும், தீரேதான் பத்துமுறைப் படியே போடு திறமானசெந்தூர மாகுந்தானே. ௫௨

தானேதான் செந்தூரமெடுத்துமைந்தா தாரமுடன்கெந்தியது காலாய்க்கூட்டி, மானேதான் கட்டினதோர் சாரமொன்று மார்க்கமு டன் யெட்டிலோர்பாகஞ்சேர்த்து, நாமேதான்சொன்னபடி செயநீர் தன்னால் நலமாகத்தானரைப்பாய் நாலுசாமம், வேமேதா னுறுவகை செயநீர்தன்னால் விருப்பமுடனரைத்துபில்லை விரைவாய்தட்டே. ௫௩

தட்டையிலேபில்லையது பணம்போலாக சாங்கமுடன் தட்டியல் லோசாயப்போடு, வட்டமென்ற வகல்தனிலே பரப்பிமைந்தா வளமு

டனே வகல்மூடிசிலைசெய்து, மட்டமென்றகோழியதுபுடமதாக மதி
ப்புடனேவோட்டிவிடசிவப்புமாகும், திட்டமுடனிப்படியே மூன்று
முறையப்பா சிறப்பாகப்புடம்போடச் சிவக்குந்தானே. ருச

சிவப்பானசெந்தூரம் பதனம்பண்ணு தேசத்தில்கிட்டாது சிவ
யோகிக்கு, தவக்கியானியானுக்கால் மெலஞ்சித்தி தாரணியிலவன்
போல சித்தனுண்டோ, பவமுடையோர்க் கிந்நூல்தான் வாய்க்காதப்
பா பாரினிலே விட்டகுறையானவற்கு, சிவன்செயலால்கிடைக்குமே
யிந்நூலப்பா தேசத்திலமற்றவர்க்குக் கிடையாதன்றே. ருரு

மிருத்துவரிஷிக்கும்காலாங்கிக்குஞ்சாபம்.

தானனமுன்யுகத்தில் காலாங்கிக்கு தாக்கானமிருத்துவரிஷியி
ன்சாபம், கோனனபொன்னகாம் போயிருந்துகோடித் தார்க்கண்ண
பிரான்றன்னையப்பா, தேனனதிரேதாயினுகத்தில்தானும் தெளிவான
சுத்தனுங் காலாங்கிவையா, பானனகுருசுவாமி சாபத்தாலே பாலனு
ங்காலாங்கி சாபம்போச்சே. ருசு

போனபின்பு காலாங்கி குருவாஞ்சாமி பொன்னகாம் போயிரு
ந்துபட்டமாச்சு, தானவனுங் கருவூரர் கமலர்தாமும் தயவுடனேசீன
ப்திபோயிருந்து, வானவனுங்காலாங்கி சீஷனென்னை வரவழைக்க
கியாபகத்தில் நினைத்தபோது, பானமுடனடியேனுங் குளிகைபூண்டு
பறந்திட்டேன் சீனபதிதேசந்தானே. ருஎ

தேசமென்றால்தேசமது போயிருந்தேன் சிறப்பானகமலமுனி
தன்னைக்கண்டேன், ஆசையுடன் அவர்பாதம்பணிந்தேனப்பா அப்ப
வேகுருசாபம் நிவர்த்தியாச்சு, பூசையுடன் காலாங்கி நாயர்தம்மை
பூசித்தேன் திரேதாயி னுகத்திலப்பா, நேசமுடன் பெந்தனுக்குகலி
யுகத்தில் நேர்மையுடன் சாடமதநிவர்த்தியாச்சே. ருஅ

ஆனபின்புகலியுகத்தில் நாற்றுபத்தில் அன்புடனே குளிகை
கொண்டுபறந்துயானும், வானவனுக்கொப்பான போகரென்றுவைய
கத்தில் கீர்த்தியுடன் பேரும்பெற்றேன், தேனனகாலாங்கி பாதஞ்
சென்றுதெரிசித்து அவருடையவருளுங்கொண்டேன், கோனனயெ
ன்னையர் குருவினாலே கோடி யுகங்குவலத்தில் வாழ்ந்திட்டேனே ருகூ

மகவேவுக்குநான்குபாகத்திலிருக்கும்

அதிசயம்.

வாழ்கவே குளிகையதுபூண்டுகொண்டுவையகத்தில் சுற்றியெங்
கும் பார்க்கவென்று, வீழாதகுளிகையுடன் மேருசென்றேன் விருப்

பமுடன்நாற்றிசையும் காணும்போது, தாழ்கவே மேருவுக்கு வடபாகத்தில் தாக்கானமனிதரெல்லாம் தங்கவர்னம், மூழ்கவேவயததுதான்லட்சமாகும் முனியானதெய்வமது சத்தியாமே. ௬௰

சத்தியாம் மேருவுக்கு [illegible]முக்கேயப்பா சார்பான மனிதரல்லோ நீலவர்னம், நித்தியமாம்வயததுதான் ரண்டுலட்சம்நிலையான தெய்வமதுவிஷ்ணுவாகும், புத்தியுடன் மேருவுக்குமேற்கேயப்பா புகழான மனிதரப்பா ரத்தவர்னம், சுத்தியுடன் கோறுவதுகைலையாகும் சொரூபமென்ற போதமென்னும் நிலைநிற்பாரே. ௬௧

நிற்பாரே வயததுதான் ரண்டுலட்சம் நித்தியமுஞ் சொரூபமென்றநிலையுங்காண்பார், சிற்பமுடன்மேருவுக்கு தெற்கேயப்பா சிறப்பானமனிதரப்பா மைனவர்னம், கர்மமென்றவயததுதான் நூறென்பார்கள் கலியுகத்தி லிருப்பதுவுமில்லைதானே, சொற்பமென்ற வயதுதனில் மாண்டுபோவார்சுந்தரனே அக்கிரமங்கள் மிகவுண்டாமே. ()

உண்டானமனிதரப்பா கொடியசெய்கை வுற்பனமாமரியாதியில்லாமாண்பர், மிண்டானமுறைதப்புஞ் சண்டிமாண்பர் மீளாதகொடியதொருபாவியாகும், சண்டாளமையல்கொண்டு தாறுமாறாய் சடுதியிலேசடமழிந்து போவாரப்பா, பண்டானசூதுகளும் பொய்யுமாகும் பாங்கானமனிதரப்பா நடத்தைபாரே. ௬௩

பாரேதான் சாத்திரங்கள் மெத்தவுண்டு பாங்கான பொய்ஞானி மெய்ஞானியுண்டு, சிரேதானுண்ணுவது வனேகவர்னம் சிறப்பான காய்கறிகள் பாலுங்கொள்வர், நேரேதான் பழவர்க்கம் கொள்வாரப்பாநிறையான லாகிரிகளனந்தங்கொள்வார், வேரேதான் மனிதரப்பா மூன்றுபாகம் முன்சொன்னமனிதரப்பா பழமுண்பாரே. ௬௪

வீரமெழுகு.

உண்பானவின்னமொரு மார்க்கங்கேளு ஒளிவானவீரமது கொச்சிவீரம், திண்பானசினத்தின் வீரமப்பா திறமானவீரமதுபலமொன்றாகும், பண்பானவீரத்தின் தயிலம்பாரு பாங்கான ஆனையென்ற விலாங்குதானும், நண்பான விலாங்கதனை தயிலமாக்கி நலமாக கெந்தகத்தைவிட்டுதாக்கே. ௬௫

தாக்கவே சேரென்றகெந்திதன்னை தயவாகத்தானரைப்பாய் நாலுசாமம், நோக்கவேதானரைத்துப் பின்னுங்கேளு நுணுக்கமுடன்

குழித்தயில மிறக்கிப்பின்பு, தேக்கவேவீரமதுசுறுக்குதாக்கு தெளி வுடனேவீரமதுகட்டேயாகும், பாக்கவேமேற்கவசம்சொல்லக்கேளு பதிவாக துருசுடனே சிங்கியாமே. சுசு

சிங்கியென்ற மிருதாருசிங்கியப்பா செழிப்பானபூரமுடன் துத் தமாகும், இங்கிதமாம்சூரமுடன் காரமாகும் பெழிலான காந்தமுட ன்குருந்தக்கல்லாம், தங்கமுடன்சவ்வாதுபுனுக்குபூரம்தகமையுள்ள வபினியுடன்கெந்திதானும், அங்கமுள்ள லிங்கமுடன் சினந்தானும் அப்பனேவகைவகைக்கு விராகமென்றே. சுஎ

ஒன்றான யித்தனையும் சரியாய்க்கூட்டி வுத்தமனே தேன்விட்டு மெழுகதாக்கி, பன்றானமெழுகுபதம் தன்னிலாட்டிபதமுடனே மெ ழுகதனை யெடுத்துமைந்தா, நன்றானவீரத்துக்கங்கிபூட்டி நலமாகப் புடம்போட்க் கட்டும்பாரு, அன்றானமெழுகதனை வைந்துபங்காக்கி அப்பனே வீரத்துக்கங்கிபூட்டே. சுஅ

பூட்டியே யிப்படியேயைந்து தரமப்பா புகழாகக்கலசத்தில்சிலே செய்து, நீட்டமுடன் மணல்மறைவில்புடத்தைப்போடு நெடிதானவீ ரமதுகட்டும்பாரு, வாட்டமுடன் மேற்கவசம் தன்னைப்போக்கி வள முடனே யைந்துதரம்பூசியேதான், பூட்டமென்றபுடந்தனிலே போ ட்டாயானால் புகழானவீரமது கட்டும்பாரே. சுசு

கட்டானவீரமதுமணியெடுத்து கண்ணானகண்மணியேகருத்தா ய்க்கேளு, மட்டானவுப்பதுவும் சேர்த்துப்பாரு மதிப்பானவெடியுப் புவளையலுப்பு, தட்டானபாறையென்றவுப்புகூட்டி தளராதகல்லுப்பு சமனாய்ச்சேர்த்து, வட்டானசட்டிதனில்போட்டுமைந்தா வளமுடனே திருகுகள்ளிப் பாலேவூத்தே. எ0

ஊத்தயிலே பாலதுவுமிகவும்பொங்கி வுத்தமனே சுண்டமட்டும் யெரிப்பாயப்பா, நாத்தமுள்ள கள்ளியது பாலுஞ்சுண்டி நலம்பெற வேகட்டியல்லோ சுண்டிருக்கும், ஏத்தமுள்ளமேல்சட்டி கொண்டு மூடியெழிலாகச் சீலையதுமிகவுஞ்செய்து, போத்தமுடன் வாலுகையி லடுப்பிலேத்திப் பொங்கமுடன்தானெரிப்பாய் சாமமெட்டே எக

எட்டானசாமமது யெரிக்கும்போது யென்மகனே வுப்பதுவும் வுரிகிக்கட்டும், மட்டானவுப்பதுவும்கட்டியல்லோ மார்க்கமுடன் பற் பமதுபோலேகாணும், இட்டான வுப்பதுவும் பொடியதாக்கித் திற லானசட்டிதனில்பாதிபோட்டு, கட்டானவீரமதை நடுவில்வைத்துக் கருத்துடனேமற்றபொடி மேலேபோடே. எஉ

போடேதான் சட்டிநீகொண்டுமூடி பொங்கமுடன் தானெரிப்பாய்மூன்றுநாளும், நீடேதான் யெரித்தபின்பு யெடுத்துப்பாருநெற்றிசிவன் தானெரித்த பற்பமாகும், வாடாத பற்பமது புகலப்போமோவளமையுள்ள பற்பமது பதனம்பண்ணு, தேடான செம்பெடுத்துப்பத்துக்கொன்றுதெளிவுடனேதானுருக்கி கொடுத்திடாயே. ௭௩

கொடுத்தவுடன் செம்பதுவுமூறலேகி குணமாகும் ரவிதானும் கட்டிப்போகும், தடுக்காமல் வெள்ளிதனில் நாலுக்கொன்று சாங்கமுடன்றானுருக்கிக்கொடுத்துப்பாரு, படுமூன்னே வெள்ளியதுபழுக்கும்பாரு பாங்கானமாற்றதுவுமேழதாகும், தொடுகுறிபோல்நாலுக்கு ஒன்றுதங்கம் தோராமல்தான் கொடுத்து வுருக்கிடாயே. ௭௪

உருக்குமுகந்தான்கொடுத்து வாரடித்துவுத்தமனே புடம்போடப்பழுப்புமாகி, தடுக்கென்ற பொன்னதுவும் தங்கமாகி தாரணியில் சித்தர்செய்யும் வேதையாகும், குருக்குமுதல் லனேகவிதவேதைகளும் கோடானகோடி முறையினாலாகும், பருக்கலென்றசிவப்புநிறம்கலையப்பா பாங்குபெறபற்பமதைபிசறியூதே. ௭௫

ஊதையிலே மூசைக்குள் ளிட்டுமைந்தாவுறுதியுடன் சில்லிட்டு சீலைசெய்து, தோதமுடன்குகை வைத்து வூதும்போது துப்புறவாய் சுன்னமது புகலப்போமோ, நீதமுடன் சுன்னமதையனுபானத்தில் நிலைமையுடன் வெண்ணெயதனில்கொண்டுபாரு, சாதமுடன்மண்டலந்தான்கொண்டுவந்தால் சார்பாகும் மேகவகைபோகுந்தானே. ()

போகுமே மேகவகையிருபத்தொன்றும் பொல்லாதநீரிழிவுகுன்மச்சூலை, ஏகுமேநீர்சொறிப்பு நீர்ப்பணைப்பு யென்மகனே வாசனத்தின்கடுப்புதீரும், யாகமுடன்வனுபானந்தன்னிலீயபறக்குமடா நோயேது காந்தலேது, தாகமுடன் வூஷ்ணங்களெல்லாம் போகும் சதாகாலம் தேகமது குளிர்ச்சியாமே. ௭௭

குளிருமேதேகமதுகற்றாணுகும்குடிகெடுக்கும் சயரோகமகன்றுபோகும், நளிருடனேநரம்பு வலிசடலம்விட்டு நடுங்கியேகானசத்தில்தானேபுக்கும், விளிருடனேகண்துலக்கமிகுதிகாட்டும்விரைவுடனேசுவாசமது கீழ்நோக்கும், களியுடனேயிருமலது சடலம்விட்டு கண்ணுமேயெப்போது மணுகாதாமே, ௭௮

தாமேதான் தேகமதுகற்றாணுகும் தனியானவாதமதுகீழ்நோக்காகும், காமேதான் சேத்துமங்கள் தொண்ணூற்றாகும் கடல்போகும்தப்பாதுகருதிப்பாரு, வேமேதான்பத்தியங்கள் வொன்றுமில்லை

வெகுகோடிகாலமதுதேகம்போகா, நாமேதான்காலங்கிநாதர் பா
தம் நான்வணங்கி போகரிஷிநவின்றவாறே. எகூ

வாறான நூல்பார்த்து கால்கள்பார்த்துவளப்பமுட னடிமுடியுந்
தானும்பார்த்து, கூறானகடைபார்த்துக்குறிப்பும்பார்த்து கோடான
கோடிமுறை தானும்பார்த்து, சேறானகைபாகஞ் செய்யாகந்தான்
செழிப்புடனே செய்பவனேசித்தனாவான், நாறானபூவதுவில்மணஞ்
சேர்ந்தாற்போல்நாட்டிலே செய்பவன்யோகியாமே. அ0

லிங்கதாரசெந்தூரம்.

யோகமுடனின்னமொருமார்க்கம்பாருயொளிவீசும்தாரமுடன்
லிங்கந்தானும், சாகமுடன்வானையுடதயிலத்தாலேசட்டமுடன்தாள
கத்தைவரைத்துமைந்தா, பாகமுடன்லிங்கத்தின் மேலேபூசிபக்குவ
மாய்ரவிதனிலே காயவைத்து, தாகமென்றமூலைப் பாலைச்சுருக்கு
தாக்க தகைமையுடன் தான்கருகிவுதிருமாமே அக

உதிர்ந்ததொருசரக்கதனை யெடுத்துமைந்தா ஓங்குபெறகல்வ
த்திலிட்டுமேதான், கதிர்ந்திடவே வாறுவகைசெயநீர்தன்னால்கதிப்
புடனேதானரைப்பாய் நாலுசாமம், சதிருடனேபில்லைபதுதட்டியே
தான்சாங்கமுடன்ரவிதனிலேகாயவைத்து, மூதிராமல்ஓட்டிலிட்டுச்
சிலைசெய்து மூசியாமற்புடம்போடச் சிவக்குந்தானே. அஉ

சிவப்பான செந்தூரம்யென்ன சொல்வேன் சிவசிவாவெள்ளி
செம்பில் பத்துக்கொன்று, நலமுடனேவொன்றுதள்ளிஊதிப்போடு
நாதாக்கள் செய்யுமிது வேதைகாணும், தவமுடையஞானிகட்குவெ
ட்டுகாணும் தப்பாது லோபிகட்கு வாய்க்காதப்பா, பவநீக்கி யிருப்
பவர்க்குயிந்தபாகம் பலிக்குமே தப்பாதுபண்புளோர்க்கே. அ௩

லோகமாரணம் கூட்டுமுறைதொந்தம்.

பண்பான காலாங்கிபாதந்தொட்டுப் பாடுகிறேன்மாணுக்கள்பி
ழைக்கவென்று, நண்பான தங்கமது களஞ்சிபத்தேயாகும் நலமான
செம்பதுவும்களஞ்சிரண்டு, திண்பானவெள்ளியதுகளஞ்சிரண்டுதிற
முடனேநாகமது களஞ்சிகாலு, வண்பானவங்கமது குன்றியிரண்டு
வாகாகத்தானுருக்கி யெடுத்துப்பாரே. அச

எடுக்கையிலேமாற்றதவு மெட்டதாகும் யென்மக்காள்லோகத்
துவாதிமார்க்கள், சடுக்கமென்னும்பத்திபினாலறியமாட்டார் சட்டமு
டன்வாைதீர்ந்து வார்த்தைசொல்வார், துடுக்கானவேதைமுகம் கா
ணமாட்டார்துறைமுகமுங்காணா மல்வெருமையாவர்,படுக்காளியுடன்
கூடி பதமுங்கெட்டுப்பாரினிலேயலைவார்கள் தாங்கள்தாமே. ()

நாய்போலவலைவார்சள் சண்டிமாண்பர் நாதாக்கள்கைமறைப்பு வொன்றுங்காணூர், பேய்போன்ற பேபரல்லேலாவினைப் கட்டுப்பி சகின்றி கெட்டவர்கள்கோடாகோடி, தாய்போலபஞ்சலோகந்தானி ருக்கச் சதாகாலம் சீவனத்துக் குறைவுண்டாமோ, மாய்கையென்னு ங்களை நீக்கிமைந்தாபாரில் மன்னவன்போல் வாழுவது சித்தனுமே

சித்தனுமின்ன மொருமார்க்கங்கேளு சேர்பெறவேசெம்பதுவும் வொன்றேயாகும். புத்தியுள்ளசிஷாநீபுகல்வேண்டாம்புகழானவெள் ளியது மூன்றேயாகும், புத்தமுள்ளதங்கமது வாறேயாகும் சூட்ச முள்ள வெண்காரம்குன்றிரண்டு, மொத்தமுடன் குகையிலிட்டுத்தா னுருக்கிமோசங்கள் வராமல் சாய்த்திடாயே. ௮௭

சாய்க்கவே பொன்னதுவுமெட்டதாகும்சரிபான நிறையுடனே வூட்டங்காணும், ஏய்க்காதுபுடத்துக்குவுறுதிதங்கம்பெவராலுமிடை பாகங்காணமாட்டார், மாய்க்கவேநாதாக்கள் கூட்டுபாகம் நாமல்லோ மானிடர்க்குபட்சம்வைத்தேன், கர்க்கவேபொன்வேண்டுமானலப் பாகருத்துடனேயிப்படியே செய்துபாரே. ௮௮

பாரப்பா கூட்டுமுறை யின்னங்கேளு பாளமென்றதங்கமது நா லேகாலாம, சீரப்பாசுத்தமுளசெம்புதானும் சிறப்புடனேவொன் றறையுமரிக்கலாகும், கூறப்பாவெள்ளியது வரிக்கால்முக்கால்குறை யாமலிடைபாகங்குணமாய்க்கொண்டு, வாரப்பாநாகமதுகுன்றிரண்டு வளமுடனே தானுருக்கியெடுத்துக்கொள்ளே. ௮௯

கொள்ளவே மாற்றதுமெட்டறையுமாகும் கோளாறுநீங்கியல் லோமாற்றுகாணும, எள்ளளவும் பிசகின்றிபுடத்துக்கேகா யெழி லானபொன்னதுவும பசுமைமெத்த, தள்ளவேவேண்டாங்காணிந்த பாகம் தாரணியில்கிடைப்பதுவுமரிதேயாகும், உள்ளபடிசொன்னே மேகாலாங்கிதம்மைவுறுதியுடன் நான்வணங்கியுரைத்தேன்தானே.

தானனபஞ்சகர்த்தாளாடுங்கூத்து தாரணியிலின்னமுண்டுசாற் றக்கேளு, பாரானபசுதங்கம் வாறேகாலாம்பாங்கான செம்பதுவு மொன்றேமுக்கால், தேனனவெள்ளியது வரைக்காலாகும் தெளி வான நாகமதுகுன்றிமூன்று, மானனசரக்கெல்லாம்வொன்றாய்க்கூட் டி மாசிபெறகுகையிலிட்டுவுருக்கிடாயே. ௯௧

உருக்கியபின் றனெடுத்து வுடைத்துபாரு வுத்தமனேபொன் னதுவேமாற்றுயெட்டு, பெருக்கமுள்ளவேலைக்குநயமுமாகும்பொ

ன்காகமிதற்கீடு புகலப்போமோ, செருக்குடைய யித்தங்கம் பசுமை யாகுமஜெகதலத்தில் நாதாக்கள் செய்யும்வேதை, திருகனுடன்கை மறைப்புமெத்தவேண்டும் தேசத்தில்கிட்டாது யோகிக்காமே. ௩௨

யோகியென்றால் சமுசாரிக்காகும்வேதை யொருவரால்வுள்ளா ணிகழல்காணார்கள், தேவியுடன்றானிருந்துவாழும் வித்தைதேசத் தில் கிட்டாதுகர்மிகட்கு, ஆவியுடன்காயமது வழிந்திட்டாலும்அப் பனேயொருவருக்கும் விள்ளவேண்டாம், தேவிகளோமெத்தவுண்டு படுக்காளியப்பாபட்சமுடன்நேசிப்பார்தூரத்தள்ளே. ௩௩

தள்ளுவது பூதலத்தில் மெத்தநன்று தருமவான் கிடைப்பதுவு மரிதேயாகும், உள்ளபடியின்னமொருமார்க்கம்பாருவுற்பனத்தையா ராய்ந்துவுருக்கித்திரு, சள்ளேயென்றுவிடுகாதே மைந்தாபாருசாத்தி ரமும்பொய்யாது மெய்யேயாகும், கள்ளமின்றிசெம்பதுவுமிரண்டே காலாம்கருவான வெள்ளியதுவ்ரைநாலாமே. ௩௪

நாலானவெள்ளியது நாலரையுமாகும் நலமான செம்பொன்னு மிரண்டேகாலாம், கோலானநாகமதுவொன்றேகாலாம்குறிப்புடனே குகையிலிட்டுவுருக்கித்திரு, பாலானவெள்ளியது பசுமையாகிபழுப் புடனேபொன்னதுவு மாற்றேழாகும், சூலானவர்ணமது வுள்ளே நிற்கும் சூட்சமுடன்வாரடித்துப் புடத்தைப்போடே. ௩௫

போட்டதுவும் பொன்னதுவுமிகுதியாகி பொங்கமுடன்மாற்று யர்வுகாணும்பாரு, நீட்டமுடனின்னமொருகருமானங்கேள் நெடிதா னதங்கமது நாலேகாலாம், வாட்டமுடன் செம்பதுவு மொன்றேகா லாம்வளமானநாகமது முக்காணியாகும், தேட்டமுடன்வெள்ளியது வரிக்கால்காலாய் தெளிவானவங்கமது குன்றிபாமே. ௩௬

குன்றியுடன்தாமெடுத்துவொன்றாய்ச்சேர்த்துக் குறிப்புடனே குகையிலிட்டு வுருக்கிப்பாரு, கண்றானமாற்றதுவுமெட்டேயாகும் தாக்கானபொன்னதுவும் நயப்புமாகும், மன்றான பொன்னதுவை வாரடித்துப்பக்குவமாய்ப்புடம்போடபசுமைகாணும், வென்றானசித் தர் முனிரிஷிகள்பாகம் மேதினியிலதீதமென்ற வித்தைதானே. ()

தானென்ற வித்தையிதுயின்னஞ்சொல்வேன் சதாசிவமுமுமை யவட்குச் சொன்னபாகம், வேனென்றதங்கமதுவரிக்கால்ரண்டு வெ ளுப்பான செம்பதுவு முக்காலாகும், காமென்றகட்டியதோர்நாகம் கால்தான் கருவானவெள்ளியது வொன்றேபாதி, யாமென்ற வெண் காரங்குன்றிகாணும் பாகமுடன்குகையிலிட்டு வுருக்கிடாயே. ()

ஆனபின்புபொன்னதுவுமச்சந்கொண்டு அன்புடனேவாரடித்துப்புடத்தைப்போடு, பானமென்றபொன்னதுவுமாற்றுகாணும்பாங்கானவேனைகயிதுசித்தர்வேதை, கானமென்றகருமானமின்ன மொன்றுகருக்குடனேசொல்கிறேன் மைந்தாகேளு, வானமென்றதங்கமதுவொன்றுகூட்டி வளமாகசெம்பதுவுங்காலுகூட்டே. ௯௯

கூட்டியேவெள்ளியதுவரிக்காலாகும்குணமானநாகமதுவரிக்காலாகும், வாட்டமுடன்தானுருக்கியெடுத்துப்பாரு வளமுடனேமாற்றதுவுமொன்பதாகும், நீட்டமுடன்வாரடித்துப்புடத்தைப் போடு நெடிதாகமாற்றதுவுமேழதாகும், தேட்டமுடன்சித்தர்களாம்செய்யும்வேதைதேசத்தில் சிவயோகிக்காணுவானே. ௱

அப்ரேக்குசெந்தூரம்.

காணுவான்கருவாளிதான்பான்பாரு காசினியில்புத்தியுள்ளான் விதியுள்ளோர்க்கும், மாணவேயின்னமொருமார்க்கம்பாரும கந்தானசெந்தூரம்மகிமையப்பா, ஊணவேகிருஷ்ணபிரோகம்தானும்வுத்தமனேசேரதுவுநாலதாகும், கானனவெண்ணையது செய்துகொண்டு கருவாகமையின்மனதையெடுத்துக்கொள்ளே. ௱௧

கொள்ளவேநீதமதுசேர்தாண்டண்டு, கூரானவெடியுப்பு சேர்த்தான்பாதி, வில்லவேகெந்தியதுசேர்தான்காலம் வீரனவ்யச்சத்துசேர்தானகாலாம், துள்ளவேமூறையுர்தான்வொக்கக்கூட்டி தோராமல்குழிக்கல்லில்போடுமைந்தா, அள்ளவேஎருக்கன்பால் விட்டரைத்து அப்பனேபில்லையதுதட்டிடாயே. ௱௨

தட்டியேரவிதனிலேகாயவைத்து சாங்கமுடன்ஓட்டிவிட்டுச்சீலைசெய்து, மட்டமென்றகெசபுடமேபோட்டுமல்லோ மார்க்கமுடனவிட்டுயெடுத்துப்பாரு,திட்டமுள்ளசெந்தூரம்கறுப்பாய்காணும் திரும்பியேயிப்படியேபத்துமுறைபோடு. வட்டமுடன் செந்தூரம் கரியோடாகுமார்க்கமுடன் சிவப்பதற்குமின்னம்பாரே. ௱௩

பாரேதான்செந்தூரம்சிவப்பதற்கு பாகமுடனறுவகைசெயநீர்தன்னால்,நேரேதான்சாரமதுயெட்டுசாமம்,நேர்ப்புடனேதானரைப்பாய்வெண்ணெய்போலே, வேரேதான்பில்லையதுதட்டிமைந்தாவிபாமுடன்ரவிதனிலேகாயவைத்து, சீரேதான்வோட்டிவிட்டுச்சீலைசெய்து சிறப்பாகப்புடம்போடச்சிவக்குந்தானே. ௱௪

தானனசெந்தூரம்நூறுபுடமாகும் தாக்கானவருணைதம் சொல்லப்போமோ, வேனனசெந்தூரம்சத்துக்கொன்றுவிபாமுடன் தங்கமதுவொன்றுசேர்த்து, கானனவாறுவகைசெயநீர் தன்னால் கருத்துடனேயில்லைதட்டிக்காயவைத்து, மானனகோழியெனறபுடந்தான் போடுமோசற்றசெந்தூரம்புகலொண்ணாதே. ௭௫

புகலவேசெந்தூரம்பதனம்பண்ணுபொங்கமுடன்வெள்ளிசெம்பில்பத்துக்கொனறு, நிகலவேதானுருக்குருவொன்றீய நிலையான மாற்றதுவுமெட்டதாகும், அகலவேநாலுக்குவொன்றுதங்கம் அப்பனேகூட்டுமுறைதன்னில்சேர்த்து, நகலவேதானுருக்கி யெடுத்துப் பாருநகைமையுடன்மாற்றதுவுமிகுதியாமே. ௭௬

ஆமேதான்செந்தூரஞ்சோதித்துப்பார் அப்பனேபச்சைமண் பாண்டந்தன்னில், தாமேதான்சலம்விட்டுதுவாரஞ்செய்து சட்டமுடன்செந்தூரம்குன்றிதானும், போமேதான்போட்டவுடன்பாண்டம்தூக்குபோக்கான துவாரங்களடைத்துக்காணும், நாமேதான்சொன்னபடிவரைதப்பாதுகலமுள்ளசெந்தூரபதீதம்பாரே. ௭௭

அதீதமாஞ்செநதூரக்குன்றியுண்ணு அப்பனேமேகவகையிருபதும்போம், சுதீதமென்றமதுமேக மொழிந்துபோகும், கடல்போகும்நீரிழிவுகாணாதோடும், சதீதமென்றசெந்தூரமனுபானங்கள் சாற்றுகிறேன்வல்லாரைச்சூரணந்தான், பதிதமென்றவாவாரைச்சூரணந்தான்பட்சமுடனனுபானமுண்ணுவீரே. ௭௮

உண்ணயிலேதேனைகும் செய்யுமாகுமுத்தமனே பசுவெண்ணைதானுமாகும், நண்ணயிலேகிரதங்கள்லேகியங்கள் நலமானசூரணங்களனுபானந்தான், கொண்ணையுடன்பூவதுவுங்கிஷாயந்தன்னில் புகட்டவேமேகங்கள்போகும்பாரு, திண்ணையிலேகியாமூவகைதன்னிலீயதெறிக்குமடாமேகவகைதிண்ணந்தானே. ௭௯

திண்ணமுடன்காயமதுயிறுகிக்காட்டும் இரிந்தாலும்சுவாசமது மேல்நோக்காது, வண்ணமுடன்சதாகாலந்தேகம்கற்றாண் வளமையுடன்யெப்போதும்வாழலாகும், அண்ணலெனும்பராபரத்தைபணுகவேண்டும்பணுகாட்டால்காயுமில்லைபூவுமில்லை,சுண்ணமுடன்காலாங்கிதனைவணங்கி தாழ்மையுடன்பாடிவைத்தேன்பண்பாய்த்தானே.

பண்பானகாண்டமது யென்னசொல்வேன் பாரினிலேநாதாக்கள்செய்யும்வேதை, கண்பானகர்மிக்குவாய்க்குமோசொல் கசடற்ற

மாண்பருக்குவாய்க்குமல்லால், திண்பானவிதியாளிகருவாளியானல் திறமுடனேயறிந்துகொள்வானபுண்ணியவானும், நண்பானபோகரி ஷிசொன்னமார்கம் நாட்டிலேயாரேனுஞ்சொல்லார்தாமே. ககக

தாம்பரசெந்தூரம்.

சொல்லவேதாம்பூரவேதை சொல்வேன் சுத்தமுடன்தாம்பூரத் தட்டுகாணும், வெல்லவேசேரதுதான்ரண்டதாகும்வெளியானகெந் தகமும்நாலதாகும், கொல்லவேதூளாக்கியெடுத்துமைந்தாகோளாறு கேராமல்சொல்லக்கேளு, புல்லவேதளவாயஞ்சட்டிதன்னில்பொங்க முடன்கெந்தகத்தைக்கீழேபோடே. ககஉ

போடவேகெந்தகத்தைப்பாதிபோடு போக்கானகெந்தகத்தின் மேலேயப்பா, நாடவேவதின்மேலேதட்டைவைத்து நலமாகமேலு மந்தகெந்திபோடு, கூடவேமேல்சட்டிகொண்டுமூடி குமுறவேசீலை யதுவலுவாய்ச்செய்து, பாடவேவாலுகையாம்டுப்பிலப்பா பாங்கு பெறத்தானெரிப்பாய்சாமமெட்டே. ககஙு

எட்டானசாமமது யெரிக்கும்போது யென்மகனேதாம்பரமும் வெட்டையாகி, கட்டானவெட்டையது தொட்டியாகி கடுங்காரச் செம்பினதுதொட்டிபார்சு, முட்டாளாயிருக்காமல் மைந்தாகேளு முயலவேதாம்பரத்தையெடுத்துமைந்தா, திட்டமுடன்கல்வமதிலிட் டுமைந்தா திறமுடனே பொடியதுவாம்நொறுக்கிடாயே. ககச

நொறுக்கியேகுநமதுசமனுச்சேர்த்து நோக்கமுடன்றுனரை ப்பாய்சாமம்நாலு, பறுகவேமைபோலேயரைப்பாயப்பா பாலகனே வில்லைதட்டிக்காயவைத்து, திறமுடன்வகலிலிட்டுசீலைசெய்துசிறப் புடனேகுழிதோண்டிமணலைக்கொட்டி, பறுகமுடன்நடுமத்திவகலை வைத்துப்பாங்குடனே மேலுமந்தமணலைக்கொட்டே. ககரு

கொட்டவேதிமூட்டிபுடத்தைப்போடு பொலிவாகபெருவதுதா ன்முப்பதாகும், சட்டமுடன்தியாறியெடுத்துப்பாரு சாங்கமுடன்க ளங்குபோலிருக்கும்பாரு, கட்டமுடனிப்படியே பழச்சார்விட்டுக் கதுமையுடன்தானரைப்பாய்நாலுசாமம், வட்டமுடன்முன்சொன் னமார்க்கம்பாரு வகையுடனேயப்படியேபத்துபும்போடே. ககசு

பத்தானபுடமது வும்தீர்ந்தபின்பு பாகமுடன்செந்தியதுகளஞ் சிரண்டு, புத்தானரசஞ்சேர்ந்ததாம்பரத்தில் பூட்டியேதானரைப்பா ய்பழச்சாற்றுலே,முத்தமுடன்றுனரைப்பாய்நாலுசாமம்முக்கியமாய்

பில்லைதட்டிகாயவைத்து, சித்தமுடன்ரவிதனிலேகாயவைத்துச் சீர்
பெறவேவோட்டிவிட்டுசில்லுமூடே. ௧௧௭

மூடவேவெளிப்புடமாய்போடுமைந்தா முகிழவேவாட்டியது
பத்ததாகும்சாடவேதீமூட்டிபுடத்தைப்போடுகாற்றில்லாவிடந்தனி
லேபோடவேண்டும், காடவேதீபாறியெடுத்துமைந்தா சாங்கமுடன்
பின்னுமந்தபாகம்போல, கூடவேகெந்திகைத்தான் களஞ்சிரண்டு
கூசாமல்தான்போட்டுஅரைத்திடாயே. ௧௧௮

அரைக்கையிலேபழச்சாற்றாலரைக்கவேண்டும் அப்பனேநாற்
சாமமரைக்கவேண்டும், குறைபாமல்முன்போலப்புடத்தைப்போடு
குடிலமுடன்புடமதுவும்வன்பதாகும், நிறையானநிறமதுவுமங்கிருந்
தால், நினைவாகவின்னமொருவொன்பதப்பா நறைக்காணப்பாகமது
பிசகாமல்கண்டிதமாய்ப்புடம்போடச்சிலக்குந்தானே. ௧௧௯

தானானசெந்தூரம்பதனம்பண்ணு தகமைபெறவெள்ளிதனில்
பத்துக்கொன்று, கோனானகுருவருளால்வணங்கியேதான் கொற்றவ
னேதானுருக்கிகுருவொன்றீய, தேனானகருபோலயிருக்கும்பாருசெம்
மையாம்வோட்டிவிட்டுவூதிப்போடு, பானானமாற்றதுவு மெட்டதா
கும் பான்மையுடன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௧௨௦

போகருடவாக்கதுவும்பொய்யாதப்பா பூதலத்தில்வாதிகளே
காணப்போறார், சாகமுடனிம்மருந்துவியாதிபோக சாங்கமுடன் ச
தாரூபவியாதிகெல்லாம் பாகமுடனனுபானம்கொண்டபோது பற
க்குமடாவியாதியெல்லாம்பண்பாய்த்தானும், வாகமுடன்தேகமது
கற்றானாகும்வல்லுடலமிறுகியதுமேனியாமே. ௧௨௧

மேனியாம்காந்தியதுமிக்கவேயின்னும் மிக்கானநரைதிரையுமற்
றுப்போகும், கானிமையாய்கண்ணிரண்டுங்குளிர்ந்துகாணுமகடுங்கா
ளைக்கொப்பானசூரனாவாய், பாணிமையாம்பருவமதுசதாகாலந்தா
ன்பாலிக்குமெய்ப்போதுமாயுளுண்டாகும், நானிமையாய்நாலாங்கிரா
யர்பாதம் நண்ணியேசாற்றலுற்றேன்கவிலக்கேளே. ௧௨௨

கேளேதான்யோகமுறைநடத்தவேண்டும் கெடியானஸ்தூலத்
தைநிறுத்தவேண்டும், வீளேதான்போகாமல்வாசிபாரு விண்காலம்
போனாலேயோகம்பாழாம், தாளேதான்சிதாபாசம்காணவேண்டும்
சாதாகாலம்சிற்பரத்தைப்பற்றவேண்டும், ஆளேதான்மனோன்மணி
யைப்பணியவேண்டும் ஆத்தாளைப்பூசித்தால்வாழலாமே. ௧௨௩

## தாம்பரசெந்தூரம்.

வாழலாமின்னமொருகருமானங்கேள் வகையுடனேநாதாக்கள் கைமறைப்பு, சீழலாமெத்தவுண்டுநேர்மைபாரு கிலையானவாதவித்தைதகுதுமல்ல, காழலாம்வெகுகோடிசித்தர்வேதை மாண்பரோவொருபோதளவுசொல்வார், தாழலாம்பலநூலுபார்த்திட்டாலும் தாரணியில்வெனைப்போலபகராரன்றே. ௧௨௪

அன்றானசாஸ்திரங்கள்யாவும்பார்த்தேன் அடிமைப்போல்சொன்னவர்களாருமில்லை, குன்றானபர்வதம்போல்பாடிவைத்தார் கோடானகோடிநூலனேகமுண்டு, தான்றான நூலெல்லா மறைப்பேயாகும் தகைமையுடன்காண்பதுவுமெளிதேயாகும், பன்றானமானிடர்கள்சுட்டுகெட்டுப் பாரிலேமாண்டவர்கள்கோடிதாமே. ௧௨௫

கோடியாம்தாம்பரத்தின் துட்டேயப்பா கோளாறுவாராமல்சுத்தித்தேதான், வாடியேதிரியாதேமகிபாகேளு வணக்கமுடன் தாம்பரந்தான்சேர்த்தாலும், கூடியேதாளகமும்சேர்த்தானெட்டு குணமுடனேபொடியாக்கிசெப்பக்கேளு, நாடியேதளவாயாஞ்சட்டிதன்னில் நாதாக்கள்சொன்னபடிநாட்டிடாயே. ௧௨௬

நாட்டவென்றால்சட்டியிலேதாம்பாதி நலமுடனேகீழ்போட்டு நவிலக்கேளு, வாட்டமுடன் துட்டுநடுமையபம்வைத்து வகையுடனே மேலுமந்தப்பொடியைப்போட்டு, தேட்டமுடன்மேற்சட்டிகொண்டு மூடி தெளிவுடனேசீலைபதுவலுவாய்செய்து, காட்டமென்றவாலுகையிலடுப்பிலேறிக் கனமுடனேபெண்சாமமெரித்திடாயே. ()

எரிக்கையிலேதுட்டதுதான்களங்கமாகி யெழிலானவெட்டையதுபோலாம்பாரு, நெருக்கமுடன்களங்குதனையெடுத்துக்கொண்டு நெடிதானகளங்குக்குநேரேரசுதம், பருக்கமுடன்றான்சேர்த்துப்பகாக்கேளும், பாகம்போல்பழச்சாறுவிட்டுமைந்தா செருக்கமுடன்குழியம்மிதன்னிலிட்டுச் சிதராமல்தானரைப்பாய்சாமமெட்டே. ௧௨௮

எட்டானசாமமதுபரைக்கும்போது யெழிலானவெட்டைபோலாகும்பாரு கட்டானதாம்பரத்தைப் பில்லைதட்டி கருவாகாவிதனிலேகாயவைத்து, துட்டானதாம்பரத்தின்பில்லைதன்னைத் துறையுடனேவகல்தனிலேயிட்டுமைந்தா, சட்டமுடன்குழிதனிலே மணலைக்கொட்டிசாக்கமுட்ன்குழிநடுவில்பில்லைவையே. ௧௨௯

வைக்கவேமேலுமந்தமணலைக்கொட்டி வளமாகத்திமூட்டிபுடத்தைப்போடு, மெய்பக்கவேகோழியென்றபுடத்தைப்போடு மேன்மை

பெறத்தானெடுத்துப்பின்னுங்கேளு, சைக்கவேபத்துமுறையிப்படி
யேபோடு சார்பாகச்செந்தூரங்கறுப்புகாணும், மொய்க்கவேசெந்தூ
ரமெடுத்துக்கொண்டு மொழிபெறவேதாரமதுகளஞ்சிறண்டே. ()

ரண்டானதாரமுடன்களங்குசேர்த்து நெடிதானபழச்சாறுயிட்
டுமைந்தா, திண்டானநார்சாமமரைத்தபோது திறமானமயினம்போ
லாகும்பாரு, உண்டானபில்லைபதுலகுவரச்செய்து வுத்தமனேரவித
னிலேகாயவைத்து, கண்டானவகலிலிட்டுச்சீலைசெய்து கனமுடனே
பத்துதெருவில்புடத்தைப்போடே. ௧௱௧

போடவேசெந்தூரமேகவர்னம் பொங்கமுடன்றானெடுத்துப்
பார்க்கும்போது, நீடவேசெந்தூரந்தானெடுத்து நீட்சியுடன்பின்னு
மரிதாரங்கூட்டு, கூடவேதான்போட்டுப்பொடித்துமைந்தா குணமு
டனேதானரைப்பாய்பழச்சாற்றாலே, வாடவேதானரைத்துப்பில்லை
தட்டி வளமுடனேரவிதனிலேகாயப்போடே. ௧௱௨

காய்ந்தபின்புமருந்ததனைப்புடமேபோடுக் கருவாகயிப்படியே
வைந்துபத்துபோடு, சாய்ந்ததொரு கைபாகம்செய்பாகந்தான் தட்
டாமல்போட்டுவரச்சிவப்புகாணும், மாய்ந்ததொருதாம்பரத்தான்சி
வக்காவிட்டால் மறவாமல்பின்னுமஞ்சிபத்தேபோடு, தேய்ந்துமே
செந்தூரமென்னசொல்வேன் தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ()

யோகமென்றால்பாகமெதைமறவாமற்றான் யொளிவாகப்புடந்
தோறும்தாரம்காலாம், பாகமுடன்களஞ்சிரண்டுபோட்டரைத்துக்
கருவாகப்புடம்போடச்செந்தூரிக்கும், சாகமுடன்செந்தூரமென்
னசொல்வேன் சட்டமுடன்வெள்ளிதனில்பத்துக்கொன்று, தேகமு
டன்தானுருக்கிகுருவொன்றீய வீரானசெந்தூரம்வேதைபாமே ()

வேதையாம்மார்க்கமதுயெட்டும்பாரு வேகமுடன்செந்தூரம்தே
னிலுண்ண,பாதையாம்குரணங்கள்லேகியங்கள் பலமானகிரதங்கள்
வெண்ணைதன்னில், தாதையாம்தானருந்தவிபாதிரூபம் சண்ணுமே
தாம்பரத்தின்செந்தூரத்தால், பேதையாம்தேகமது கற்றாணுகும்
பொங்கமுடனிம்மருந்துகுருவுமாமே. ௧௱௫

குருவானமருந்ததனைப்பதனம்பண்ணு குவலயத்தில்குஷ்டமு
தல்ரோகிக்கப்பா, திருவானமருந்ததனைதின்றுவப்பா திறமுடனேம
ண்டலந்தான்கொண்டபோது,பருவானதேகமடாகற்றாணுபாரினி
லேவெகுகோடி காலம்வாழ்வாய், தருவானகாலரிஷி சித்தன்போல
தாரணியில்சீபுமொருசித்தனுமே. ௧௱௬

சித்தானசித்தர்முனிசெய்யும்வேதைதேசத்திலோரேனுஞ்செய்யமாட்டார், பத்தியுடன்காலாங்கிநாயர்பாதம் பட்சம்வைத்துவடியேனுமுங்களுக்காய்முத்திபெறபடிவணங்கிசுவாமிதன்னை முடிவணங்கியிந்நூலைவெளியில்விட்டேன், புத்திமானாயிருந்தால் யெல்லாஞ்சித்திபூதலத்தில் முழுமக்களறியார்தாமே. ௧௩௭

தாமானசாத்திரங்கள்மிகவுஞ்சொல்லி தாரணியில்சித்தனைப்போல்பினத்திக்கொண்டு, பேமானியாகவல்லோதிரிந்துகொண்டு பேரானசாத்திரங்கள்பொய்புமாக்கி, சாமானியவான்போலவாதுபேசிசதாகாலம்போனிபிடவாசையாலே, சாமானியசைதன்னியவாசையாலே கடைகெட்டு இடைகெட்டுகலங்கினாரே. ௧௩௮

கலங்கியேபேடிபோல்நாமங்கொண்டு கதிதனக்குயிடையூறுசெய்துகொண்டு, மலங்கியே துப்புரவாயெல்லாந்தோற்றுமானிலத்தில்மதிப்பற்றுமானங்கெட்டு, தவங்கெட்டுபதிகெட்டுபழமுங்கெட்டுதாறுமாறாகவேகஞ்சாகொண்டு, புலம்பியேமதுபானமிகுதியாகி பூதலத்தில் கெட்டலைந்தார் கோடிதாமே. ௧௩௯

கோடியாமிருந்தவரையானுமப்பா, பூதலத்தில்குளிகைகொண்டு பறக்கும்போது, வாடியேயிருந்தவரைகண்டேன்கோடி வாய்பிறப்பைக்கண்டறிந்தேன்லக்கோயில்லை, நாடியேகாலாங்கிநாயர்பாதம் நான் தொழுது பாடிவிட்டேன்மறைப்பையெல்லாம், தேடியேயலையாமல் மாணாகேளு தேசத்தில்சித்தனைப்போல் வாழ்துவாயே. ௧௪௰

நாகவெள்ளி,

வாழ்கவேநாகமதுசேரைவாங்கி நலம்பெறவேயிலுப்பைநெய்யில்சுத்திசெய்து, சூழ்கவேகண்ணாடிக்கல்லினாலே முயலவேதானரைத்துக்கங்கிபூட்டி, தாழ்கவேகோழியென்றபுடந்தானப்பா தப்பாது மூசைக்குள்நாகம்வைத்து, ஏழ்கவேபொடிதனையேதூவிமைந்தாயெழிலாகவுருக்குபோல் சீலைசெய்யே. ௧௪௧

செய்யவேசீலையதுகாய்ந்தபின்பு செப்பினேன்கோழியென்றபுடந்தானப்பா பையவேபோட்டபின்புயெடுத்துப்பாரு பாங்கானநாகமதுமஞ்சளேகி, மெய்யவேகண்ணதுவுமிகவொடுங்கி மிக்கானநாகமதுவெளுமையாகும், பெய்யவேயிப்படியேபத்துமுறைபோடுபோரானவெள்ளியதுபேசலாமே. ௧௪௨

பேசலாம்சுக்கானின் கல்லையப்பா பெருமையுடன்சேரதுவும் நானெடுத்து, நாசமுளநாறுவகை செயநீர்தன்னால் நலம்பெறவேதா

ரைப்பாய்நாலுசாமம், பாசமுடன்பில்லை தட்டிக்காயவைத்து பாக முடன்வோட்டிவிட்டுசீலைசெய்து நேசமுடன்ரவிதனிலேகாயவைத்து நிதமுடனேகெசபுடத்தில் போட்டிடாயே. கசங

போடவேபற்பமதுவென்னசொல்வேன் பொலிவானதவளமது திறம்போலாகும், கூடவேநாகத்துக்கக்கிகூட்டி குமுறவேமூசையில் கீழ்மேலிட்டு, தேடவேகுழிவெட்டிப்புடத்தைப்போடு தெளிவாகு ம்நாகமதுதெளிமையாகும், நாடவேபத்துமுறையிப்படியே போடு நலமானதுய்யானுக் கொப்பதாமே. கசச

ஒப்பானவெள்ளியது பத்துக்கொன்று ஒக்குபெறசுயவெள்ளி கூட்டியாடு, செப்பானபாத்திரங்களிதற்கிடல்ல சேனவிதவாபரண மிதனுலாகும், உப்பானதாய்ப்புக்குவெளுமைகாட்டும் ஓகோகோநர தாக்களநீதவித்தை, மெப்பானசாத்திரங்கள்வுளவுபார்த்துமேன்மை யுடன் பாடிவைத்தேன் பண்பாய்த்தானே. கசரு

தானானசாத்திரத்தில்வனேகம்பேர்கள் சட்டமுடன்பாடிவைத் தார்வேண்டுமாற்கம் வேனானவெகுநூலில் வெள்ளிசொன்னார்வெளி யாகச்சொல்லவில்லையிந்தபாகம், பானானகாலாங்கிதனைவணங்கிப்பா டினேன்சத்தகாண்டம்பண்பதாக, கோனானகுருவருளால் வடியேன் தானும்குவலயத்தில் பிரைத்துவிட்டேன்மாந்தற்காமே. கசசு

ஆமேதானின்னமொருகருமானங்கேள் அப்பனே வெள்ளியென் றநாடிக்காரம், நாமேதான் துலாமதுவுமொன்றேபாகும்சார்பான வேங்கையுடபாலாலாட்டி, வேமேதான் சாமமதுவரைத்துமேதான் விருப்பமுடன்பில்லைதட்டிக்காயவைத்து, நாமேதான்சொன்னபடிவ கலில்வைத்துநலமபெறவேசீலைபது வலுவாய்ப்பண்ணே. கசஎ

பண்ணியேகோழியென்றபுடத்தைப்போடு பாகமுடன்பற்பம துபகரப்போமோ, வண்ணமுடன்பற்பத்தைவெள்ளீயத்தில் வாகா கக்கொடுத்திடவேநீரைவாங்கும், திண்ணமுடன்பத்துக்குவொன்று தாக்குதிரமானவெள்ளீயம் நீரைவாங்கி, வண்ணமுள்ளவெள்ளியது சொல்லப்போமேவளமையுடன் காதாக்கள்கூத்துதானே. கசஅ

கூத்தானகைபாகம்செய்பாகந்தான் குவலயத்தில்கோடியுண்டு யார்தான்காண்பார், மாத்தானசாத்திரத்தில்மறைத்துவைத்தார் மா ர்க்கமுடனடியேனுந்தாள்பணிந்துவேத்தானகாலாங்கிநாயர்பாதம்வி ருப்பமுடன்போற்றியல்லோதொழுதேன்யானும், நேர்த்தியுடன்பாடி வைத்தேன்போகர்யானும்நேர்மையுடன்மாணாக்கள்பிழைக்கத்தானே

ஞானமுனிவர்களில் சித்தர்தாமும் நயவாகப்பாடிவைத்தார் வெகுநூலப்பா, கோனனகமலமுனிரிஷிகள்தானும்கொட்டினார்கோடிமுறைஎன்னைப்போல, தேனானசாத்திரத்தில்பெண்ணைப்போல தெளிவாகச்சொல்லவில்லையாருமப்பா, வானனபென்னூலில் ஒன்றும் பொய்யா வளமையுடன்போகரிஷிவண்மைபாரே. கடு0

வண்மையாம்போகரிஷிமார்க்கம்பாரு வாகாகதன்னுடையநூல்கள்யாவும், உண்மையாம்சித்தருக்கும்ரிஷிகளுக்கும் ஒருபோதும் பொய்யாதுமெய்யேயாகும், தண்மையாய்பாடிவைத்தேன்சத்தகாண்டம் சதாகாலமானிடற்குவுறுதிநூலாம் திண்மையாம்குருநூலாமேழாயிரந்தான் திரமாகவாய்த்ததுவேசினத்தார்க்கே. கடுக

சீனமென்றல்தேசமதுபுதுமைமெத்தசிறப்பானநூல்களெல்லாமங்கேயுண்டு, வானமுடன்தானிருக்குமதிசயங்கள் வாகானபூலோகமர்மமெல்லாம், ஞானமுடன்பாடிவைத்தார்கமலர்தாமுமாகிலத்தில் பாடிவைத்தார்கோடாகோடி, தாளமதுயிருக்குமிடம்யாமுங் கண்டோம்தாரதலத்திலேமைபோலகாண்பாருண்டோ. கடுஉ

## போகர்வானத்துமீன்.

உண்டானவெள்ளியதுபோக்குச்சொல்வேன்ஓகோகோகாதாக்கன்பரிசவேதை, பண்டானவெள்வங்கம்சேர்தானென்று பாளமென்றசக்காள்கல்ச்சுன்னம்போடு, திண்டானகாடியென்றசுண்ணம்போடு திறமாகதானுருக்கியெடுத்துப்பாரு, வண்டானவெள்வங்கம்நீரைவாங்கிவாகான வெட்டையதுவாகும்பாரே. கடுங

வெட்டையாம்ரூநமதுவொக்கச்சேர்த்து வெடியுப்புசுன்னமது நாலாய்ச்சேர்த்து, சட்டமுடன்தானுருக்கிஎடுத்துப்பாரு கசடற்றதுய்யானம்வெள்ளியப்பா, மட்டமென்றவெள்ளியதுஒக்கச்சேர்த்து, மகிப்புடனேசரியெடையாய்சேர்த்துப்பாரு திட்டமுள்ளரூபாய்க்குசரியதாகும் திறமானவெள்ளியதுபோக்குத்தானே. கடுச

## இரசசெந்தூரம்.

போக்கென்றுவிடுகோதேபுண்ணியாகேள் புகலுகிறேன்ரூநமென்றசெந்தூரத்தை, நீயென்றகெந்தகத்தின்தயிலமப்பா திறமானபாஷாணத்தயிலங்கூட்டி, காயென்றகருஞ்சூரைத்தயிலஞ் சேர்த்துகருவாகத்தானரைப்பாய்சேரைரூதம், பேயென்றசுரைக்காயின்தயிலத்தாலே பிசகாமல்தானரைப்பாய்சாமமெட்டே. கடுரு

எட்டானசாமமதுவரைத்தபோது என்மகனேசூதமதுமடிந்து போச்சு, கட்டானசூதமதுமாண்டபோது கானலாம்கோடிவித்தைச் சூதத்தாலே, இட்டமுடன்சூதத்தைபில்லைதட்டிவெழிலானரவிதனி லேகாயவைத்து, மட்டானஓட்டிலிட்டுச்சீலைசெய்து மார்க்கமுடன் புடம்போட சிவக்குந்தானே. க௫௬

சிவப்பானசெந்தூரம்பதனம்பண்ணு சிவசிவாவெள்ளிதனில் பத்துக்கொன்று, நயப்புடனேதானுருக்கிகொடுத்துப்பாரு நலமான மாற்றதுவுமெட்டதாகும், பயமுடனேபத்துக்குஒன்றுதங்கபாகமு டன்தானுருக்கிவாரடித்து, புவமுடனேபுடமதுவுமூன்றுபோடபுண் ணியனேமாற்றதுவும்பசுமையாமே. க௫௭

பசுமையாந்தங்கமதுயென்னசொல்வேன்பாரினிலேநாதாக்கள் செய்யும்வேதை, நிசமுடையபுண்ணியற்குவாய்க்குமல்லால் நிஷ்டூரப் பாவிகட்குவாய்க்குமோசொல், வசுவானபசுபதியோகியோர்க்குவாய் த்தாலேகுருபூசைக்கொவ்வும்வேதை, சிசுபாலற்கொப்பானசிவயோ கிக்குசிறப்புடனே வாய்க்குமிது திண்ணந்தானே. க௫அ

## திரிகுளிகைசெந்தூரம்.

தானான திரிகுளிகைசொல்லக்கேளு சாற்றுகிறேன்ரசமுடனே தாரங்கெந்தி, கோனான குருபறன்றனைகுளிறலே கூறுவேனறுவகை செயநீர்தன்னால், வேனான நாற்சாமமரைத்தபோது மிக்கானசெயநீ ரால்சூதமாண்டு, பானானசுறக்கிரண்டுமொன்றாக்கூடி பதமுடனே மெழுகதுபோலாகும்பாரே. க௫௯

பாரேதான்மெழுகதனைவட்டுதட்டிபாகமுடன் ரவிதனிலேகாய வைத்து, சீரேதான்ஓட்டகலில்வைத்துமூடி சிறப்புடனேசில்லிட்டுச் சீலைசெய்து, நேரேதான்மணல்மறைவில்புடத்தைப்போடுநேர்ப்பாக வாறினபின்னெடுத்துப்பாரு, கூரேதான்செந்தூரமென்ன்சொல்லே ன்கோடியதோர்மேகவன்னமாகுந்தானே. க௬0

வன்னமாஞ்செந்தூரமிப்படியேபத்துவள்ளமுடனே போட்டுவாசி பாரங்கேளு, சுன்னமென்றகடுங்காரமிகவுமாகி சுடரொளியாங்காந்தி யதுமெத்தப்பற்றி, வின்னமில்லாகரடுகளுமில்லாமற்றான் மிக்கான பூப்போலவுநிறுங்கண்டீர்; சொன்னபடியின்னுமந்த செந்தூரத்தை ச்சுகமுடனேதாரைத்துதங்கக்கூட்டே. க௬௧

கூட்டையிலேபத்துக்குஒன்றுதங்கம்குணமாகத்தான் சேர்த்து வரைத்துமைந்தா, வாட்டமுடனறுவகைசெயநீர்தன்னால் வளமாக

த்தானரைப்பாய்நாலுசாமம், நீட்டமுடன்ரவிதனிலேகாயவைத்து
நினைவாகப்பின்னுமதைப்பொடியதாக்கி, தேட்டமுடன்காசியென்ற
குப்பிதன்னைத் தெளிவாகச்சிலைசீலைதுவலுவாய்ச்செய்யே. கசுஉ

செய்யவேகுப்பியதுகாய்ந்தபின்பு திறமுடனேசரக்கெல்லாங்கு
ப்பிக்கேற்றி, பையவேமாக்கல்லால்சொண்டுமூடி பாங்குபெறசீலைய
துவலுவாய்ச்செய்து, மெய்யுடனேதளவரையாஞ்சட்டிதன்னில் ஓமே
ன்மையுடன் மணலதனைக்கொட்டிமைந்தா, உய்யவேகுப்பிநடுமையம்
வைத்து உத்தமனேமேலுமந்தமணலைக்கொட்டே. கசுஉ

கொட்டையிலேகுப்பிவாய்த்தெரியமூடி குடிலமுடன்மேற்சட்
டிக்கவிழ்த்துமைந்தா, திட்டமுடன்சீலைதுவலுவாய்ச்செய்து திற
முடனேவாலுகையாமடுப்பிலேற்றி, சட்டமுடன் தானெரிப்பாய்எட்
டுசாமம்சார்பாகவாறினபின்னெடுத்துப்பாரு, வெட்டவெளிக்காறு
டாவிடத்திலப்பா விருப்பமுடன்குப்பியைநீவைத்துப்போற்றே.

போற்றவேமூன்றுநாளானபின்பு பொங்கமுடன்குப்பியைதிற
ந்துபார்க்க, ஏற்றமுள்ளசெந்தூரமிகவும்பார்த்து யென்மகனேகாந்
தியதுபுகலப்போமோ, தேற்றமுடன்சிஷாவிற்பதனம்பண்ணு திரமு
டையசெந்தூரமனுபானந்தான், கூற்றனுக்கிடையின்றிதேனிலுண்
ணக் குடிலம்விட்டேகுமடாதிண்ணந்தானே, கசுரு

திண்ணமாய்வெண்ணைதனில்கொள்ளலாகும் திறமானநெய்யி
லும்கொள்ளலாகும், வண்ணமுள்ளசூாத்திலகொள்ளலாகும் வாகா
னலேகியத்தில்கொள்ளலாகும், எண்ணமுடன்யெய்தவனுபானத்தா
லும் எழிலுடனேமண்டலங்கள்கொள்ளலாகும், உண்ணபின்சகல
ரூபணியாதியெல்லாம் வுத்தமனேதேகம்விட்டுச்சுண்ணும்தானே. ()

சண்ணுமேமேகமென்றராஜனுக்கு சத்துருவாமிம்மருந்துசாற்
றக்கேளு, குண்ணிவிடும்சில்விஷங்கள்யாவனைத்துங் குவலயத்தில்கிற்
காதுபறந்தேயோடும், திண்ணமுடன்செந்தூரப்போக்குசொல்வேன்
திறமுடையமக்களாயிருப்பாயானால், நண்ணமுடன்வெள்ளிசெம்பில்
பத்துக்கொன்று நலமுடனேகொடுத்துருக்கமாற்றெட்டாமே.

மாற்றானவெள்ளிசெம்பையூதிப்போடு மகத்தானவெள்ளியது
மாற்றுமாகி, தேற்றானபகமையதுபதிகங்கொண்டு தெளிவுடனேமா
ற்றதுவுமெட்டதாகும், சாற்றவேசிவயோகிசெய்யும்வேதை தாரணி
யிலாரேனுஞ்செய்யமாட்டார், போற்றவேபுத்தியுள்ளானவானகில்
பொங்கமுடன்செய்துகொள்வான்வாதியாமே. கசுஅ

, வாதியாய்சகலவிதவன்மையெல்லாம் வாகுடனேகண்டறிந்து வளமாய்ச்சொல்வேன், சாதியிலேயொருவனப்பாசன்மார்க்கன்றான் தாரணியில்தானிருப்பான்ஒருவர்காணார், மாதிமையாம்துஷ்டருட ன்கூடமாட்டான் மானிலத்திலடக்கமுற்றுவாழ்வானப்பா, சோதிம யங்காணுவான் சுத்தான்றான்சூட்சாதிமர்மத்லைதவெளிவிடானே.

விட்டானேயாமாளுல்தலைதெறிக்கும்வேதாந்தத்தாயவளுமுன் னேநிற்காள், தொட்டதொருவேலையெல்லாந்துளரப்போகும் தொ டருமேவினைதானும்துறந்திக்கொள்ளும், விட்டகுறைநேருமானல் தாமேயெய்தும் விண்ணுலகில்நாதாக்கள்செய்யும்வேதை, தட்டியே பருபரியைத்தொழுதுபோற்றி தாரதலத்தில்சித்தனப்ப பிறப்பாய் தானே. கஎ0

தானனிஷ்டையிலேயிருந்துகொண்டு சதாநிஷ்டைருத்திரநிஷ் டைமாலிநிஷ்டை, கோனனமயேஸ்பரியின்நிஷ்டைதானும் குறிப்பா ணபிர்மநிஷ்டைதானேடொக்க, வேளுகயிருந்துகொண்டு சதாகா லந்தான் விருப்பமுடன்ரேசகபூரகமும்செய்து, மாளுக்கும்பகத்திலி ருந்துகொண்டுமார்க்கமுடன்மூலமதைபழுத்திப்பாரே. கஎக

அழுத்தியேகமலமதிலிருந்துகொண்டு அப்பனேபிரமத்தைக்கா ணலாகும், வழுத்தவேகுண்டலியில்மூலந்தாக்கி வாகுடனேபிரமத் தைநிஷ்டைகொள்ளு, தொழுகமலினிடனிஷ்டையப்பா தோருமல் வஷ்டாங்கம்செய்துக்கொண்டு, விழுகவேகும்பகத்தில் வாசிபூட்டி விஷ்ணுவைசதாகாலம்காணலாச்சே. கஎஉ

காணவென்றால்வஷ்டருத்திரத்தைக்கேளு கருவானபூரகத்தை க்கும்பகத்தில்பூட்டி, தோணவேவளுகதத்தில்வாசிபூட்டி தொழுது மேலுத்திரைக்கண்டுபேசி, வீணவேசகலபாக்பமும்பெற்று விண்ணி லேவலதுகாலைதூக்கிமைந்தா, கோணவேபாதத்தை நிலத்திற்றூக்கி குப்புரவாய்கிழேநோக்கி, மாணவேவிசுத்தியிலேயிருந்துகொண்டு மா ணிலத்தில்மகிபலைய்வழாலாமே. கஎங

வாழலாமயேஸ்பரனு பாதங்கண்டுவகுப்புடனே நிஷ்டைவந்து மதிறமாய்த்தொட்டு, வீழலாம்சதாசிவத்தின்நிஷ்டைதன்னை விருப் பமுடன்கண்டறிந்துவீழல்போகாமல், தாழவேயோகதண்டைகைபி லேந்தி, தளமுடனேவிபூதிதன்னைத்தளமாய்ப்பூசி மாழவேசதாசிவ த்தைப்பணிந்துபோற்றி மயங்காமல்மனோன்மணியைதொழுதுநில்லே.

நிற்கையிலேமனோன்மணியாளமுர்தமீவாள் நிகருனவமுர்தமது கொண்டபோது, துற்கையுடன்காளிமுதல்நடுங்குவார்கள் துடியா

னதேகமதாகற்றானுக்கும், சற்பனைகள்மிகவுடனே வதிகமாகிசதாகா
லப்பூரணத்திலகித்துநின்று, உற்பனமாம்மதிபமூர்த லேகியத்தைவு
ண்டுமல்லோசதாநிஷ்டைப்பணிகுவாயே, கஎரு

மதிபமூர்தலேகியம்

பணியவேமதிபமூர்தம் சாற்றக்கேளுபாங்கான கெஞ்சாவின்வி
தைநாற்சேரு, கணிதமுடன்சாதிக்காய்சாதிபத்திரிகருவான கிராம்பு
டனேடமாட்டியமொக்கு, தணிபவேலவபினியுடன் கசகசாவும் சாங்க
முடன்வகைக்குவொருசேர்தான்பாதி, மணிபோலதான் வறுத்துச்
சூரணித்துமயங்காமல் தான்செய்யும்வகையைக்கேளே. கஎசு

கேட்கவேசர்க்கரையாய் பாகுதன்னில் கெணிதமுடன்சூரண
த்தைகொட்டிக்கிண்டி, நாட்டிகமாய்நெய்தேனும் விட்டுக்கிண்டிசார
பாகக்கிளறிபல்லோகுளிகைபண்ணி, வாட்முடடனந்திசந்திதானருக்
வளமுடனேதீபவொளிகண்ணிற்றோற்றும், நாட்டமுடன்சித்தர்மு
னிரிஷிகள்தாமும்நாணிலத்தில் போகுவதுக்தெரியுமாமே. கஎஎ

தெரியுமாம்கேசரத்தில்போகுமாற்கம்தேசத்தில் விநோதவகை
யாவுந்தோற்றும், அரியுடனேசிவன்முதலுங்காணலாகும் ஆகாயவ
திசயங்கள்யெல்லாந்தோன்றும், பரியொளிபோல்கைலங்கிரிகண்ணி
ற்காணுப்பாருலில்நீயுமொருசித்தனாவாய், சரியுடனேகாலாங்கிநாய
ர்பாதம்பணிந்து மேபோகரிஷிபாடினேனே. கஎஅ

பாடினேன்சத்தகாண்டமேழாயிரந்தான் பாரிலுள்ளமானிடற்
குபண்பதாக, தேடியேகிட்டாதுமிகவாருய்ந்து தெளியுடனேபாடி
வைத்தேன்குறுநூலாக, கூடியேநல்லோரிடமுஞ்சார்ந்து குவலய
த்தில்யெப்போதுமிருந்துவாழ்வாய், வாடியேயலையாதே யுண்மைக
ண்டுவளமுடனே யென்றூலைவணங்கிபோற்றே. கஎகூ

வல்லாரைக்கற்பம்

போற்றவேகற்பமொன்றுபுகலக்கேளு பொலிவானவல்லாரையா
ர்காண்பார்கள், ஆற்றவேவல்லாரைக்கற்பந்தானும் வவனிலேவுண்ட
வர்கள்மெத்தவுண்டு, நீற்றமுடன்கைபாகம்செய்பாகந்தான் நீனிலத்
தில்கண்டவரும்யாருமில்லை, மாற்றமுடன்குருவருள்கள்பெறவேவே
ண்டும் பெறுவிட்டால்பூவில்லை காயில்லைதாமே. கஅ0

இரண்டாவது வல்லாரைக்கற்பம் கருபிண்ட மறிய,

தாமானபூரமதுஒன்றேயாகும் தாக்கானவெல்லமது ரண்டே
யாகும், காமானஎருக்கன்பால்தன்னிலாட்டிக் கரிவாகமைபோலயா

ட்டிமைந்தா, வேமானகற்புடைபமதுக்கிப வெளியாருமைந்துமாத க்கற்ந்தாலும், சாமானயின் நிலவல்லாரைதன்னில் சட்டமுடனிக்கரு வைப்போட்டிடாயே. கஅக

போடவேகல்வமதில்பிட்டு மைந்தா பொக்கமுடன்தானைரைப்பா ய்காலுசாமம், நீடவேதானைத்துவானபின்பு நினைவாகப்பாணித னிலடைத்துக்கொண்டு, கூடவேகுழிவெட்டிப்பூமிதன்னில் குடில முட்டின்றுன்புதைத்துபின்புகேளு, ஆடவேமண்டலங்கள்சென்றுதா லுல் அப்பவல்லோகாயாதி கற்பமாச்சே. கஅஉ

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அப்பனே மதியமூர்தங் கொண்டாயானல், மூச்சடங்கிதன்னிலேயைக்காணலாகும் முயலான பூரணத்தைநன்னலாகும், பேச்சென்றவமுர்தவழிகாணலாகும்பே ரானசிவபூசையறியலாகும், பாச்சென்றசத்திசிவங் காணலாகும்பரா பரத்தின்சின்மயத்தின் பற்றதன்றே. கஅங

## செங்கடுக்காய் லேகியம்.

நன்றானபேரொளியைக்காணலாகும் நாதாந்தத்திரவுகோல் கா ணலாகும், குன்றானவேதாந்தக்கற்பமெல்லாங் கோடிக்கு கோடிவ ரைகாணலாகும், தன்றானசெங்கடுக்காய்சேர்தானப்பா தயவுடனே தானிடித்துச்சாற்தானீக்க, வென்றானபாகமிது பத்துமுறைதானும் விரும்பியேதானிடித்துச் சூரணங்கள்செய்யே. கஅச

செய்யவேசூரணத்தைஎடுத்துமைந்தா தினம்பேர்துகாடியிலே லரைத்துமேதான, பையவேகுன்றியிடையுண்டு வந்தால்காலனுங்கி டமேதுசாவுமேது, நொய்யவேதேகமதுகற்றூணுதம் நோக்காடு வாரா துநுணுக்கமெத்த, மெய்யவேகாலாங்கிநாயர்பாதம் விருப்புமு டன்றான்பணிந்து விளம்பிட்டேனே. கஅரு

விளம்பிட்டேன்கைபாகம் செய்பாகந்தான் வித்தியாசங்களது மிகவாராமல், குளம்பிட்ட நூல்களெல்லாமிகவாராய்ந்து குறிப்புட னேகண்டறிந்தகற்பமாகும், தளம்பிட்டசதாநூலும் பார்த்தாலென் னசாக்சமுடன்காணுபவன் யோகவானும், அளம்பிட்ட யிதிகாச வித்தையெல்லாம் அறிபவனேலோகத்தில்சித்தனாகே. கஅசு

சித்தனைப்பிறந்தாலுங்கீர்த்தியுண்டு தேசத்தில் வெகுபேர்கள் மெச்சுமாண்பன், பத்தனைப்பிறந்தாலும்பதவிண்டு பாருலகில்புனி தனைவாழலாகும், பித்தனைப்பிறந்தாலும் வொன்றுங்காணுன் பே சரியமாட்டாதபுலவனுவான், எத்தனைதான்கற்றாலு மென்னலாபம் நீடுழிசமாதியிலே யிருக்கதன்றே. கஅஎ

காரிய பற்பம்,

நன்றானபின்னமொருமார்க்கம்பேரு நலமானகரியங்கம்சேர்த்தா
னப்பா, பன்றான நகடாக்கி செப்பக்கேளுபாங்கான ஆவாரைபஞ்சா
ங்கந்தான், குன்றான சாக்கதுவைக் குடுவைக்குள்ளே குணமுடனே
தான்போட்டு தகட்டை வைத்து, அன்றானபொடிமேலே தகடுவை
த்து அப்பனே வதன்மேலே பொடியைப்போட. ௧௮௮

போடையிலே கீழ்மேலும் பொடியைப்போட்டுப்புகழாகத்தா
போட்டுசீலைசெய்து, நீடவேகெசமான குழியைவெட்டி நினைவாகப்
புடம்போடக் கரிவங்கந்தான், கூடாதேவெந்ததுவும்காடுமாகி குடில
முடன்பற்பமது சோளம்போலாம், பாடவேயிப்படியேபத்துபுட
ம்போடு பாங்கானபற்பமதுதவளமாச்சே. ௧௮௯

ஆச்சப்பா பற்பத்தையெடுத்துக்கொண்டு அப்பனேபொரித்த
ண்டஞ்சிற்றண்டந்தான், நீச்சப்பா சரியாகயெடுத்துக்கொண்டுநினை
வாகவெண்கருவால் தன்னாலாட்டி, மாச்சலன்றிசிறுபில்லையாகத்தட்
டிமதிப்புடனே ரவிதனிலே காயவைத்து,தீச்சலென்றகரியோட்டி
லிட்டுமைந்தா திறமுடனேகோழியென்றபுடத்தைபோடே. ௧௮௯

போடவே பற்பமது காறமேறிப்புகழ்னவெண்மைநிறம்புகல
ப்போமே, கூடவேபத்துமுறை யிப்படியேபோடுகுணமானபற்பம
துகூறப்போமோ, நீடவேபற்பத்தை யனுபானத்தில்சேர்மையுடன்
றானருந்த மேகமெல்லாம், ஓடவேகடல்போகுமென்றுசொல்லி வுத்
தமனே போகரிஷி புகன்றவாறே, ௧௯௨

வாறானகபரோகம் சயரோகங்கள் வாகுடனே கிரந்திமுதல்கா
ணாதோடும், கூறான பாண்டுடனே வீக்கம்போகும் பொல்லாதசய
ரோகம்காமாலைபோகும், சேறானபவுத்திரங்கள்முளைமூலங்கள்கெடி
தானகிரந்தி முதல் சீசன்னலாகும், சேறானவெள்ளையொடு சில்விஷ
ங்கள் சீறியேயோடுமடா திண்ணந்தானே. ௧௯௨

மாற்றுயர்வு வேதை.

திண்ணமாமின்னமொருபாகங்கேளு தெளிவாகக்கல்லுப்புபடி
தானென்று, வண்ணமுடன் புளியாரை சாற்றினாலேவளமையுடன்
றானரைப்பாய் நாலுசாமம் கண்ணமுடன் பில்லைதட்டிக்காயவைத்
துக்கருட்துடனே வோட்டிலிட்டுசீலைசெய்து, நண்ணமுடன்பத்தெ
ருவில் புடத்தைப் போடுநாதாந்தத்தாயெனக்குச்சொன்னவாறே.

சொன்னபடி யப்படியேயரைத்துமைந்தா சுத்தமுடன்ரவியிலிட்
டுக்காயவைத்து நன்னயமாய் சீலைசெய்து புடத்தைபோடு கலம

பெறவேவைந்துபத்துவிப்படியேபோடுமுன்னுரைத்தபாகமதுபிசகி டாமல் முனையானவுப்பதுவும்[?]ங்குமட்டும், பன்னவேபுடம்போட ச்செந்தூரிக்கும் பாலகனேசெந்தூரம்பதனம்பண்ணே. ௧௯௪

லமதுகூடச்சேரு, நிதமுடனேகற்பூரத்தயிலந்தானும் நேர்ப்புடனே
தாழைமலருப்புகூட்டி, பேதமில்லாயேலரிசிதயிலந்தானும் பேறான
பன்னீரும்விட்டுக்காய்ச்சி, பாதமுடன்கருப்பெட்டிபொன்றுசெய்து
பாகுடனேகாய்ச்சியதைவிட்டிடாயே. ௩௮௮

விட்டவுடன் மற்றநாளெடுத்துப்பாரு வேகமுடன்பளிங்கென்
றகர்பூரந்தான், சட்டமுடன்பலகைபோல்கட்டியாகி சார்புடனேதா

ன்றிரண்டுயிருக்கும்பாரு, அட்டதிசைதான்புகழும்பூரமாச்சு ஆச்சரி யம்காதாக்கள்செய்வாருண்டோ, மட்டமென்றகற்பூரம் செய்வாரப் பாமாநிலத்தில் சித்தர்முனிசெய்வார்பாரே. ௩௮௯

பாரப்பாகற்பூரமனேகமுண்டு பாங்குடனே செய்குபவர்கோ டாகோடி, நேரப்பாசினபதிக்கற்பூரந்தான் நீணிலத்தில்செய்பவரு முலகிலுண்டோ, சேரப்பாவெகுகோடிசித்தரப்பா செய்தார்கள்கற் பூரம்வினோதமாக, ஆரப்பாவெனைபோலச்செய்ததில்லை அப்பனே யானுமல்லோமுரைசெய்தேனே. ௩௯0

ஆகாயத்தில் போகர்கூண்டுவித்தை.

செய்தேனேயின்னமொருகருமானங்கேள் செயலானபிருக்கு வித்தைசெப்பக்கேளு, மெய்யானவித்தையதுசூட்சவித்தை மேல் போகும்வித்தையதுகூண்டுவித்தை, பொய்யானவித்தையிது சொல் லப்போமோ பூதலத்தில்கருவாளிகண்டுசெய்வான், வெயில்காணுமா காஷவித்தையப்பாமேல்போகும்கூண்டிடணிடவித்தைதானே. ௩௯௧

தானாகவித்தையிது சொல்வேன்கேளும் தகைமையுள்ள இரும் பினிலேகாந்தஞ்சேர்த்து, பாணகத்தானு நக்கிநம்பிபாக்கி பாலகனே சிறுகம்பிநூல்போலாக்கி, வேணுகூண்டுதான்வடிதான்பத்து விருப் பமுடன்னீளமதுவடிதான்பத்து, மாணுகநாற்சதுரமாக்கியல்லோ மா ர்க்கமுடன்கம்பியால்கூண்டுகட்டே. ௩௯௨

கட்டயிலேசுற்றிலும் தூணிருத்திக் கருத்துடனேநடுக்கம்பிச தூரமிட்டு, தொட்டில்போல்தான்சமைத்துசுடர்கள்வைக்கச் சூட்ச முடன்கம்பிக்குள்ளேமாட்டி, சட்டமுடன்சுற்றிலும் நாற்பட்டாலே சாங்கமுடன்தானமைத்து கிளிப்போல்கட்டி, திட்டமுடனடிவாசல் தாள்திறந்துதீர்க்கமுடன் மேல்வாசல்மூடிப்போடே. ௩௯௩

போட்டவுடன்கற்பூரத் தயிலத்தூட்டிப் பொங்கமுடன்விளக் கொளித்தானவைத்துபாலா, நாட்டமுடன்கும்மட்டம்போல் சோதி த்துநயமுடனே காற்றடக்கச்செய்துபின்னும், மூட்டமுடன்வாயுவ துஉள்ளேதங்கிமுயர்ச்சியுடன் மேலெழும்பிப்போகும்பாரு, வாட்ட முடன்கூட்டதுதான்ஆகாஷத்தில் வளமையுடன் போவதற்குத்திற முண்டாச்சே. ௩௯௪

உண்டானபோகையிலே காற்றினாலே ஓகோகோசெல்லுமது வாகாயத்தில் கண்டாலேமானிடர்கள்காணும்போது கைலாசமே லுவரைசெல்லும்பாரு, அண்டமுடனாகாசமேலேநோக்கி அதற்கப்பால்

போகும்வழிகாணார்பாரு, விண்டலத்தின்வித்தையிது மாச்சரியமாகும் வெட்டவெளிவித்தையிது சூட்சம்பாரே. ௩௯௫

சூட்சமாங்கூண்டுவித்தை தலைதூரமோடும் தொல்லுலகில்கருவாளிகாண்பான்பாரு, மாட்சியுடன்வாயுவினால்பிறந்தவித்தை மானிலத்தில்மன்னவர்கள் மயங்கும்வித்தை, தாட்சியுடன்பாலரெல்லாமாடும்வித்தை சாதாகாலமாடுதற்குவினோதவித்தை, சீட்சியுடனிராக்காலமாடும்வித்தைமேன்மையுடன் போகரிஷிபுகன்றிட்டேனே. ௩௯௬

## கெந்தருவித்தைசமுத்திரத்திலிறங்க.

இட்டேனேயின்னமொரு மார்க்கம்பாரு வெழிலானகெந்தருவவித்தையப்பா, சட்டையொன்றுயிரும்பாலேசெய்துகொண்டு சாங்கமுடன்தலைதனிலேகுழையமைத்து, சட்டமுடன்சங்கிலியால்கயிருபூண்டுகருத்துடனே மார்பதனில்தானணிந்து, திட்டமுடன்கழுத்துமிகமுடல்செய்து தெளிவுடனேநாசிவழிக்குழைசெய்வாயே ௩௯௭

குழைதனிலேவடகலைதென்கலை மாத்திக்குறிப்புடனேநாசிவழிகாற்றுசெல்ல, இழையுடனேதிரிபோலகயிருண்டாக்கி வெழிலானஅயிருக்குள்துவாரமிட்டு, பிழையொன்றும்நேராமல்கழுத்தைச்சுற்றி பிடரிபிலே முடிச்சியுடன்பின்னல்செய்து, நுழையாமல்சமமதுவும்திருவல்பூண்டு நுணுக்கமுடன்தேகமதில் பூண்டுகொள்ளே. ௩௯௮

பூண்டுமேகாவடியிலிரும்புமாட்டிப் பொங்கமுடன்யிரும்புக்குகுண்டுவைத்து, நீண்டுமேதானுமல்லோடுதாணிகட்டி நெடிதான்வாரிதியில்மத்திபத்தில், தாண்டியேமரத்தினின்றுகுதிக்கும்போதுதாழ்வாகத்தாரணியைக்காணலாகும் வேண்டியேராமுழுத முள்ளிருந்துவிருப்பமுடன்மேலேறிவருகலாமே, ௩௯௯

வருகவென்றால்மேல்நிற்கும் சூட்சந்தன்னை வாகுடனேயோராள்தான்தூக்கினுக்கால், பெருகலுடன்சமுத்திரத்தை விட்டுமைந்தா பெருமையுடன் கரைவழியேகாணலாகும், துரிதமுடன்கடலுள்ளே சென்றுநீயும் தலைபாதபொருள்களெல்லாம் காணலாகும்,பருவமுடனிதிகாசவித்தையப்பா பாகமுடன்போகரிஷிபாலித்தேனே. ௪௦௦

## சமுத்திரத்தில்இராவணன்கோட்டைமுழுகினது

பாலித்தேனின்னமொரு மார்க்கம்பாரு பாருலகில் யாருந்தான்சொன்னதில்லை, சாலித்தகிரேதாயினுகத்திலப்பா சத்தசாகரம்பொங்கிமேல்வழிந்து, வாலித்துகோட்டையது சலமேகொண்டுமண்மூடிசலமதுவுமிகவேகோர்த்து. பாலித்துதேசமல்லா முழுகிற்றென்றுபாலித்தார்காலாங்கியெனக்குத்தானே. ௪௦௧

தானனகிரேதாயி னுகத்திலப்பா சதகோடிசூரியருங் கண்ட
தில்லை, வேனனராவணனர் கோட்டைக்குள்ளே வெளிகாணகோட்
டையது ஏழுசுத்த, கோனனயென்னையர் காலங்கிநாயர் குளிகை
யிட்டுகோட்டைக்குள்சென்றாங்கே, பானனகிரேதாயினுகத்துசித்
தர்பண்புடனேயிருந்தாரும் கோடிபேரே. ௪0௨

பேரானசித்தர் முனிரிஷிகள்கோடி பேருலகில்யிருந்தாருமநே
கம்பேர்கள், சீரானகோட்டைக்குள்சமாதிகண்டேன்சிறப்பானசமா
திமுன் ராட்சசகூட்டம், பாரானகிங்கிலிபரூபிரம்பேர்படைபொருத
வென்மேலே வந்தபோது, நேரானகாலாங்கி நாயர்தாமும் நெறிமு
றைமைவழுவாது நெறிசொன்னரே. ௪0௩

சொன்னதொரு காலாங்கிநாதருக்குசொரூபமென்றசித்தரெல்
லாமொன்றாய்க்கூடி, நன்னயமாயிராவணனர் கோட்டைகுள்ளேக
லம்பெரியவதிசயங் கள்யாவுஞ்சொன்னர், பன்னயமாய்சமாதியிடஞ்
சென்றபோதுபார்த்தார்கள்கோடிமுனிரிஷிகள்தேவர், மன்னவனர்
கோட்டைக்குள்வந்ததற்கு வாகுடனேதண்டனைகள்மிகுதியாச்சே.

ஆச்சுதாம் காலாங்கிநாதருக்கு அப்போதேசாபமதுநேர்ந்தத
ங்கே, மாச்சலுடன்காலாங்கி நாதர்தாமுமகத்தான சொரூபமென்
றகுருவைஎண்ணி, நேச்சலுடன்சாபமதை நிவர்த்திசெய்யநேர்மை
யுடன்தன்மனதில் நினைத்தபோது, கூச்சலென்றசாபமது நிவர்த்தி
யாச்சுகொற்றவனேதிரே தாயினுகத்தில்தானே. ௪0௫

தானனயுகத்திலப்பாகாலாங்கிநாதர் தகைமையுடன் சாபமதை
தீர்த்துக்கொண்டார், கோனனஎன்னையர்காலாங்கிநாதர்குவலயத்தி
ல்கோடியுகம்குளிகைபூண்டார், தேனனரிஷிகளிடசாபத்தாலுந்தே
ரினர்ராவணனர் கோட்டைக்குள்ளே, மானனசமாதியிடம் கிட்டிப்
போனர் மகத்தானதேவ முனிகண்டிட்டாரே. ௪0௬

கண்டவுடன்காலாங்கிநாதர்சாமிகருத்துடனே சமாதியிடம்செ
ன்றபோது அண்டமுனிராக்ஷதர்களசுரர்கள் கூட்டம்அணிபணியாய்
வுலாகொடுத்து நின்றாரங்கே, சண்டையிடும் ராவணனர் சமாதிகண்
டார் சாங்கமுடன்ரிஷிகளெல்லாமங்கிருந்தார், தெண்டமுடன்சமா
தியிடம்சென்றபோது தீரமுடனுளவை எல்லாங்கேட்டிட்டாரே.

கேட்கையிலே சதகண்டராவணன்தான்நெடியான சமாதியது
கண்டிட்டாராம், நாட்டமுள்ளசமாதியதநிலைமையத்திற்கலம்பெரிய
கோட்டைக்கு மேற்புறத்தான், [illegible]

யானசாமியுட கோட்டையாகும், வாட்டமுடன்சமாதி பதுகிட்டிப் போனார் வாகுடனே சித்தர் முனிகாவல்தானே. ௪0அ

## இராவணன் நவரத்தினசமாதி.

காவலுடன் ரிஷிக்கூட்ட மகராள்தானும் காவலனர்கோட்டை பதுசமாதிமுன்னே, ஆவலுடன் காணவென்று போகும்போது அங் குள்ளராட்சதர்க ளசுராள்கூட்டம், ஏவலென்னும் கிங்கிலியராயி ரம்பேர்எழிலானகோட்டைவழி தான்மறிப்பார், பாவலுடன்காலா ங்கி வார்த்தைகூறிபதிபோர்கயுபாயமதுகண்டிட்டாரே. ௪0௯

காணவேசமாதிபதுமேற்புரத்தில் கனகமணிநவரத்தினசமாதி கண்டார், வேணவேவுபசாரமுடன் காலாங்கிநாதர் விடைபட்டுச்சமா தியிடஞ்சென்றாரங்கே, காணமுடன் தலைகுனிந்துவார்த்தை கூறிநலம் பெரியசமாதியிடஞ் சென்றிட்டாராம், பாணம்போலசரீரி வாக்கியந் தான்பாரினிலேசத்தமது கேட்கலாச்சே. ௪௧0

கேட்டவுடன்காலாங்கி நாதர்தாமும்கிருபையுடன் சமாதியிடம் போகவஞ்சி, நாட்டமுடன் நமைமபம் கோட்டைக்குள்ளே நலமுட னேகாலாங்கிபெருமூச்சிட்டு, தேட்டமுடனிராவணனர்பாதம்காண தேர்வேங்தேயெனக்கு குறைநேரலாச்சு, கோட்டமுடன் மனக்கு றைகள்நேர்ந்ததென்று கூறினார்காலாங்கி நாதர்தாமே. ௪௧௧

தாமானகாலாங்கிநாதர்சாமி தன்மையுடன் அவர்களிடம்பேசாம ற்றுன், நேமமுடன்காலாங்கிநாதர்தாமும் நெறியுடனே யங்கிருந்து மறுபக்கந்தான், போமெனவேதன்மனதிலடக்கிசாமி பொலிவுடனே, கீழ்ப்புரமாய்இருப்பும்போது, தேமமுடன்கோட்டைக்குள் ரிஷிகள் கோடிதெளிமையுடன் கண்டாரும் கோடிபேரே. ௪௧௨

கோடியாம்ரிஷிமுனிவர் கோடாகோடி கோமகனர்கோட்டைக் குள்வாசற்பக்கம், நீடியேசமாதியிடம் நின்றிட்டாராம் நித்திலங்கும் பூமகனர்சமாதிபக்கம், தேடியேபார்க்குகையில் சமாதிமுன்னே திக மான சித்தொருவரங்கிருந்தார், நாடியேயவரிடத்திற்கண்டுபேசி நய முடனேராவணன் சேதிகேட்டிட்டாரே. ௪௧௩

## இராவணன்பாட்டன் துவாபரயுகத்துச்சங்கதி.

கேட்கையிலே துவாபரயுகத்திலப்பா கெடியானயென்பாட்டன் ராவணற்கு, சூட்சமுடன்ரிஷிசாபம் நேர்ந்ததென்று சூட்சமுடன் ஏந்தனுக்குசித்துசொன்னார், வேட்கமுடன் ரிஷியினிடசாபத்தாலே வேதமுடன்கோட்டையது யழியவென்றும், நீட்கமலசூர்ப்பணகியங் கமாகி நீடாகிகோட்டையது பிடியென்றாரே. ௪௧௪

இடியென்றசாபத்தால் இலங்கைதானும் யெழிலானபதிகள்மு
தல்எல்லாம்போய், நொடிக்குள்ளே வாரிதியுமிகவும் பொங்கிநோக்க
முடன்ராவணனார்தம்பியானோர், படிகடந்துசமாதிக்குப் போகநன்
றுபட்சமுடன்பாரினிலேயிருக்கலாகா, குடிகொண்ட மயிலிராவண
னொக்கக்கூட்டமுடன் சமாதிக்குளானாரே ௪௬௫

ஏகவேராமர்வெகுகோபத்தாலும் யெழிலானசீதையின் சாபத்
தாலும், போகவேகோட்டைமுதல் யாவுங்கெட்டு பொன்னிலங்கைதி
தனக்குபோகவென்று, சாகமுடன்சமாதிக்குபிடமுந்தேடிசட்டமுட
னிலங்கைபதிகடலோரத்தில், பாகமுடன்கோட்டையது நடுமையத்
தில்சர்வரும்சமாதியது நின்றிட்டாரே. ௪௬௬

நின்றதொருசமாதி முதலெல்லாம்பார்த்து நேர்மையுடன்துவா
பரத்துசேதிகேட்டு, தன்றனதுவரலாறு யாவுஞ்சொல்லிசட்டமுடனு
பதேசம்பெற்றுமேதான், குன்றும்லைவாரிதியாரும்பார்த்து குவலய
த்தில் காலாங்கிவந்துமல்லோ, சென்றுமேசமாதிக்குப் பருவமானார்
சிறப்புடனேகாலாங்கி நாதர்தாமே. ௪௬௭

நாதரும்சமாதிக்குப் போகுமுன்னே நலமுடனே யடியேனும்
போகர்தாமும், பாதமுடனவர் பாதம்பணிந்துகொண்டு பாரினிலே
யுபதேசம்யாவும்பெற்று, நீதமுடன்சீஷனில் நற்சீஷனாகி நிமையுடன்
நாதனுடனருளும்பெற்று, போதமுடனுலகுதனில் குளிகைபூண்டு
புறப்பட்டுபோனேனே சீனந்தானே. ௪௬௮

சீனபதிபெண்களுக்குகற்பவெண்ணெ

தானான சீனபதிசென்றேன்யானும் தன்மையுடனே கருவெண்
ணெய்சாற்றக்கேளும், வேனான சிற்றிலுமணக்கினெண்ணெய் விரை
வானவரிக்குமட்டி நதிக்குமட்டி, கோனான கழற்சிக்காய்முடக்கொத்
தானும்கூறானவிராலியுடன் காட்டுள்ளிதானும், பானான பிரமியுடன்
வறுகுதானும்பாங்கான மூலியிடச்சாறுகூட்டே. ௪௬௯

கூட்டவேயெண்ணெயதுபங்கொன்றாதும் குமுறவேசார்மூலிப
ங்கொன்றாதும், நீட்டமுடன் சரியெடைபாயெடுத்துக் கொண்டு நெ
டிதானபுங்கன்வேர் சங்கன்வேரும், வாட்டமுடன்கொடிவேலிபங்க
ம்பாளை வாகானகிளுவையுடவாகைதானும், மீட்டமுடன் கிளுவை
யதுசங்குதானும்நெடிதான தலைச்சுருளிகாக்கணமே. ௪௭௦

காக்கமுடன்திரிகுமரிவெள்ளைச்சாறை கருவானமூவகையின்
வேறுங்கூட்டி, நோக்கமுடன்வகைக்கு ஒருபலமதாக

ன்றானிடித்துகூடப்போடு, தேக்கமுடன்கஸ்தூரிக்கள்ளி தானும்தேர்ந்துமேதானெடுத்துபிழிந்தசாறு, தூக்கமுடன்வகைக்குவொருகாலதாகதுப்புரவாஎண்ணைதனில்கலந்திடாயே. ௪௨௧

கலந்துமேவதிற்போடுங்கற்பங்கேளு கருவானதிப்பிலியும்கடுகுதானும், அலர்ந்தகடுக்காயுடனே கடுகுரோணி அப்பனேவால்மிளகுசீரந்தானும், மலர்ந்ததோர் வால்மிளகுகுரோசாணிதானுமார்க்கமுடன்கருஞ்சீரம்கஸ்தூரிமஞ்சள், கிலர்ந்தமஞ்சள் தன்னுடனே வரத்தைகூட்டிநெடிதான சுக்குடனே சிறுநாகப்பூவே. ௪௨௨

பூவானயிந்துப்புதிப்பிலிதானும் பொங்கமுடன் பெருங்காயஞ்சாதிக்காயாம், மாவானசாதிக்காய் சாதிப்பத்திரி மாற்கமுடன்செங்கொண்டைதாளிசந்தானும், சேவானசிவதை நிலவாகைவேறும் சிறப்பானகோரைபிடகிழங்குதானும், காவானசுக்குடனேதான்றிக்காயும்கருவானநெல்லியுடன் ஓமந்தானே. ௪௨௩

ஓமமுடன்வாய்விளங்கம்விடையந்தானும்ஒப்பமுடன்மாசிவென்றகாயுங்கூட்டு, தாமமுடன்வகைக்கு ஒருபலமதாகத்தகைமையுடன்றானிடித்துகூடப்போடு, வாமமுடன்வடுப்பேற்றி எரிக்கும்போதுவாகானவெண்காரம் விராகனென்று, தூமமுடனிந்துப்பு விராகன்ரண்டுசெயமானகரியுப்பு விராகனென்றே. ௪௨௪

ஒன்றானயிவையெல்லாம் பொடித்துப்போட்டு வுத்தமனேமெழுகுபதந்தனிலிறக்கி, நன்றானக்கலசத்தில் பதனம்பண்ணு நலமாகமண்டலஞ்சென்றெடுத்துக்கொண்டு, தன்றானவீட்டுக்கு விலக்கமானதயவானமுதநாள்தான் மூன்றுநாளும், குன்றுமல்காலையிலேரண்டுகொள்ளுணமாகுபாறுவிதசூலைபோமே. ௪௨௫

போமேதான்கெற்பமென்றசூலைபோகும்பொல்லாதகெற்பத்தின்வாயுபோகும், தாமேதான் கெற்பத்தின்ரோகம்போகும்தளியானகெற்பத்தின்திரட்சிபோகும், வேமேதான்சூதகத்தின்வாயுபோகும்வெகுளாமல்குன்மத்தின்கட்டிபோகும், நாமேதான்சொன்னபடிபத்தியந்தான்நலமானவெள்ளாட்டுபால்தான்கூட்டே. ௪௨௬

கூட்டவேநாலாம்நாள் வென்னீராலே குமுறவேஸ்தானமதுசெய்யவேண்டும், நாட்டமுடனன்றுமுதல் நான்குநாளும்நலமாகவிழுதியிலைபாலுங்கூட்டி, வாட்டமுடன்றானருந்தி வந்திசந்திவாகாகவேமூநாள்எண்ணைமூழ்க, நீட்டமுடன் மூன்றுமுறை யிப்படியேசெய்யநீணிலத்தில்கெற்பமதுவிளையும்பாரே. ௪௨௭

பாரேதான்வானுக்குமிக்க பாகம்பட்சமுடன்றானருந்த ரோகம்போகும், சீரேதான்திங்களுக்கு வைந்துநாளு திரமையுடன்மூன்று

முறையுண்ணவேண்டும், கேளேதான்பத்தியமுமுன்போற்நாரு கேளு
ணமேகமதுகசரோகம்போல், வாரேதான் காலாங்கிநாயர்பாதம் வண
ங்கியேபோகரிஷிவறைந்திட்டேனே. ௪௨௮

அறைந்திட்டேன்பலகருக்கடையாராய்ந்து அப்பனேமானிடர்
கள்பிழைக்கவென்று,நிரைந்திட்டேன்ருத்திரங்களுறுதிபார்த்துதெ
ளிமையுடன்பலநூலும்பெருநூல்பார்த்து, குறைந்திட்டருட்சாதிரு
ட்சம்பார்த்து கூறினேன்சித்தர்நூலெல்லாம்பார்த்தேன், முறைந்தி
ட்டேனிந்தவண்ணம்யாருஞ்சொல்லார் முயற்சியுடன்பாடிவைத்தே
ன்காண்டந்தானே. ௪௨௯

தானானகாண்டத்தில்மூன்றுங்காண்டம் தகைமையுள்ளகருக்கு
ருவயாவுஞ்சொன்னேன், வேனானஎன்னையர்காலாங்கிநாயர் விருப்
பமுடனுபதேசமனேகஞ்சொன்னார், கோனானவுபதேசம்யாவுங்கே
ட்டு கொட்டினேன்சத்தமென்றகாண்டமப்பா, பானானகாண்டமே
ழாயிரந்தான் பாகமுடன்பாடிவைத்தேன்போகர்தாமே. ௪௩0

தாமேதான்மொழிந்திட்டாரனேகங்கோடி தகைமையுடன்கண்
டறிந்தேன்சதாகாலந்தான்,வேமேதான்சித்தர்முனிரிஷிகளப்பா வெ
னைப்போலயாருந்தான்சொல்லவில்லை, சாமமுடநூல்களெல்லாஞ்சா
பஞ்சொன்னார் சாங்கமுடனளவுகருசொல்லவில்லை, நாமமுடனடி
யேனும்விரித்துரைத்தேன் நலமாகசீனபதியுலகத்தோர்க்கே. ()

உலகானசீனபதிமார்தாப்பா வுளவுமுதல்கருக்கெல்லாங்கண்
டாரங்கே, நிலவுபோல்சொல்லிவிட்டேன்மாந்தர்க்கப்பா நிட்சயமக
ளெல்லாந்தான்கண்டுகொண்டார், கல்வியுடனுமல்லோவுறவுகொ
ண்டு காணுதகாட்சியெல்லாமங்கேகண்டேன், தலமதிகமானதொரு
சீனதேசம் தாரணியிலெவ்வாருஞ்சொல்லப்போமோ. ௪௩௨

போகாதுவாதிசேடனிலுமாகப் பொங்கமுடன்சித்தரிலுமாகா
தப்பா, வேகாதபிணம்போலவுமல்வாரப்பா விருதாவாய்நூல்சொல்
லிமறைத்தாரங்கே, சாகாதகற்பமதுவுறுதிசொன்னார் சாங்கமுடன்
கற்பத்துக்குயிர்தானில்லை, ஆகாதசாத்திரங்கலைத்துஞ்சொல்லிஅப்
பனேசாபமதுசொன்னார்தானே. ௪௩௩

காணவேசர்பமதுசொன்னாரங்கே கருவாகயெனைப்போற்சொ
ன்னாரில்லை, தோணவேதோணுதபொருள்களெல்லாம் முறையுடனே
முறையுடனேசொன்னேன்யானே, மாணவேயென்னூலைப்பார்த்த

பேர்க்குமறைப்புமுதல்திறைப்புமுதல்யாவுமில்லை, நாணவேசாத்திர ங்கள்முறைதப்பாமல் நலமுடனேபாடிவைத்தேன்நன்மைபாரே.

## போகர் கருலேகியக்கிரதம்.

பாரேதானின்னமொருகருமானங்கேள் பாடுகிறேன்மாணுக்கள் பிழைக்கவென்று, நேரேதான்வரிக்குமட்டிசார்தாநாழி நேரானகன் னிச்சார்சாறுநாழி, வாரேதான்மாருலிங்நச்சாறுநாழி வாதானவிழு தியிடச்சாறுகூட்டே. சஙடு

கூட்டியேபழச்சாறுநாழிதானுங் குணமானபசுநெய்யும்நாழிகூ ட்டு, நாட்டமுடனிதுவெல்லாமொன்றாய்க்கூட்டி வளமையுடன்தா ன்சேர்த்துமருந்துகேளு, நீட்டமுடன்திப்பிலியும்சுக்குதானும்நெடி தானவெள்ளுள்ளியிலுப்பைப்பூவே. சஙசு

பூவானசவர்க்காரமிந்துப்போடு புகழானநவாச்சாரம்கடுக்காய் தானும், நாவானபெருங்காயம்வெண்காரந்தான் நலமானவாளுவைசீ ரந்தானும், பாவானஓமமுடன்கடுகுரோணி பாங்கானவரப்பொடியும் கருப்புக்கட்டி, மாவானசாதிக்காய்கிராம்புதானு மகத்தானகடுக்கா ய்த்தான்றிக்காயே. சஙஎ

காயானநெல்லிக்காய்சுக்குதானும் கருவானமிளகுடனேகோஷ் டந்தானும், தாயானயேலமுடன்வளையலுப்பு தாக்கானவெடியுப்பு வெவச்சாரந்தான், மாயானயிந்துப்புகல்லுப்போடு மகத்தானசவர்க் காரம்பலமதீரும், தூயானயிதுவெல்லாம்சமனுக்கூட்டி துப்புற வாய்சீனியதுசரியாய்க்கூட்டே. சஙஅ

கூட்டியேவாலுகையிலடுப்பிலேற்றிக்கு முறவேசேறுபோலாகக் காய்ச்சி, நாட்டமுடன்கலசமதில்பதனம்பண்ணு நலமுடனேயந்திச ந்திகொண்டாயானல், வாட்டமுடன்கவுசையொடுகுன்மம்பாண்டு வாகானதொண்டைமுதல்மலட்டுப்பூச்சி, காட்டகத்தேபோகுமென் றுபோகர்தானும் கருத்துடனேபாடிவைத்தகிரந்தந்தானே. சஙகூ

தானனகிரதமதுபட்சந்தானும் தயவுடனேகொண்டவற்குகெற் பமுண்டாம், கோனனவிஷபாண்டுசோகைபோகும் குடிகெடுக்கும் கெற்பமென்றரோகந்தீரும், மானனைக்கு-ச்சல்வாயுபோகு மகத் தானசூலைமுதல்ரோகம்போகும், தேனனவிப்புருதிமாலைதீரும்தெளி வானஷகமுடக்குபோகுங்காணே. சச0

காணவென்றால்பிடிப்புவலி சந்துவாதங்கழல்வாதம் குடல்வாத ம்காணுநோடும், காணவேவயிற்றுவலிவிம்மல்போகும் நரம்பெல்லா ம்பிகுத்திருத்தல்களினமாகும், ஈணவேபிறவிச்சுபித்தம்போகும் எ ழிலானவாதமென்றதெண்பதும்போம், சிணவேவயிருளைவுபெருமூ ச்சேகும்சிறப்பானபத்தியந்தானில்லையாமே. சசக

ஆமேதான்மருந்துண்ணுங்காலந்தன்னில் அப்பனேவாயுவென் றபதார்த்தங்தள்ளு, போமேதாசிதளமாம்பண்டமாகா பொலிவான காரமுதல்மிகவுமாக, தாமேதானிச்சாபத்தியந்தான்காரு சார்பாக மற்றதெல்லாமாகும்பாரு, நாமேதான்சொன்னபடி போகர்நூலுநா ட்டிலேபொய்ங்காதுகளினமாமே. சசஉ

ஊர்க்குருவிலேகியம்.

களினமுடனின்னமொருமார்க்கம்பாரு காதாக்கள்சொன்னதில் லைநாட்டுளோர்க்கு, களினமென்றவடைக்கலந்தானுமேயாகும் கருவர ண்வாண்குருவிகொண்டுவந்து, மளினமுடனேரோகமுதல்எல்லாம்நீக்கி மாசற்றகுடல்தலைகளெல்லாம்போக்கி, பளினமுடன்கருங்கோழிநத் தஞ்சேரில் பாகமுடன்தான் பொரித்துயெடுத்திடாயே. சசங

எடுத்துமிகப்பார்க்கையிலே யென்னசொல்வேன் யெழிலான சேரியதுசுண்டியேதான், தொடுத்ததொருவடைக் கலமுமொன்று ப்சேர்த்து துப்புரவாய்திரண்டுமல்லோகரிபோலாகி, விடுத்ததொ ருமாமிஷத்தையெடுத்துகொண்டு விபரமுடன்சொல்லுகிறேன்மை ந்தாகேளு, கொடுத்திடவேலவணவகைப்பத்துதானும் கூறுவேன் பளிங்குட்டினசெப்பக்கேளே. சசச

செப்பவென்றால்இந்துப்புவராகனரண்டு தெளிவானகல்லுப்பு வராகன்ரண்டு, ஒப்பமுடன்வளையலுப்பு வராகன்ரண்டுஒளிவானம தியுப்புவராகன்ரண்டு, செப்பமுடன்சாரமதுவராகனரண்டு நேரான வங்காரம்வருகன்ரண்டு, கொப்பமுடன்சவர்க்காரம் வராகன்ரண்டு குமுறவேயித்தனையும்பொடியாய்ச்செய்யே. சசரு

செய்யவென்றால்பொடிதனிலே சேர்க்கக்கேளுசெயலானசுக்கு டனேமிளகுகூட, பெய்யவேவோமமுடன் சிரந்தானும்போனகரி யபோளந்தானப்பா, மெய்யானபூரமென்றபற்பந்தானும் மேலான ரசமென்றசெந்தூரந்தான், மையானபொடியாக்கி வொன்றாய்ச்சேர் த்துமாற்கமுடனெல்தேனுங்கூட்டிடாயே. சசசு

கூட்டையிலேசர்க்கரையு மொன்றுப்சேர்த்து குணமாகத்தா ன்கிளறிபதனம்பண்ணு, நாட்டமுடன்லேகியத்தை மண்டலந்தான் நலமுடனேகொண்டுவரபலனக்கேளு திட்டமென்றநாளையிலேவயிர் நோய்போகும் திறமானக்ஷீக்கமகோதரம்போம், வாட்டமுடன் சூதத்தின்திரட்சிபோகும் வாகானகட்டிமுதல்சூலைபோமே. சசஎ

சூலையுடன்வாயுவென்ற தெண்பதும்போம் சூக்ஷுமத்தின்நீரே ற்றமசன்றுபோகும், காலையிலேவாயூறலற்றுப்போகும் கதிப்புடனே கொதிப்புமுதல் காணுதோடும், மாலையிலேதான்காணுமண்டைக்குத் துமயக்கமுடன் றலையிடியுமாறிக்காணும், ஆலையிலேபகப்பட்டகரும் புபோல அகன்றுமேபோகுமடாபிணிகள்தாமே. சசஅ

பிணியானருதுகாலவியாதிரோகம் போனகெற்பத்தின் ரோக ம்போகும், அணியானருத்திரமாங்குடல் தான்மூட்டி அப்பனேவாயு வென்றகட்டிதானும், நணியானமகோதரமுமணுகாதப்பா நாடாது குடல்வலியும்போகும்பாரு, கணியானசோரிபதுகட்டிப்போகும் கா ரானகெற்பநோய்போகுந்தானே. சசகூ

தானேகேள்சூதகத்தின்வாயுதீரும் தாக்கானகசரோகமெல்லா ம்போகும்,வேனேதான்கிபிர்வாதம்குடலில்வாதம் மிக்கானபட்சமெ ன்றவாதம்போகும், கோனேதான்கெண்டையென்றவாதம்போகும் கொடிதானயிடுப்புவலிபோகும்பாரு, மானேதான்முழங்காலில்வாத ம்போகு மகத்தானபாதமதுவீக்கம்போமே. சருo

வீக்கமதுயேகுமதுவென்னசொல்வேன் மிக்கானதேகமதுயிள ப்புமெத்த, தூக்கமதுமதிகமுடன்சன்னலாகும் துடியானநரம்புமுத ல்துடிப்புமெத்த, தாக்குடன்சூடுதான்தலைமேற்கொண்டு சதா காலம்தலைவலியுமிகுதிகாட்டும்,ஊக்கமுடன்தயிலமதுசொல்வோம்பா ருவுத்தமனேபோகரிஷிஉண்மைகாணே. சருக

கெற்பச்சூட்டுக்குதயிலம்.

உண்மையாமின்னமொருமார்க்கம்பாரு வுத்தமுனோதாக்கள் சொன்னதிலலை, வணமையுடன்தயிலமதுசாற்றக்கேளு வாகானவெ ண்ணையதுசேர்தானப்பா, திண்ணமுடன்கைபாண்சாற்சேர்தானப் பா தினமானமுடக்கொத்தான்சேர்தான்யாதி, நண்ணமுடன்கருந்து [illegible] சேர்தானப்பா [illegible] சேர்த்தக்கூட்டே, சருஉ

கூட்டவே தழுதாழைச்சார்தானுழி குணமானவழுதலையின் சார்தானுழி, நீட்டமுடன் பசளைச்சார்தானுழிநெடிதானகுமரிச்சார் சார்தானுழி, தேட்டமென்ற நீர்பூண்டு சார்தானுழிதெளிவானகரந்தைச்சார் சார்தானுழி, வாட்டமுடன் பசுவின்பால்நாழியாகும்வளமான கடைசரக்குசாற்றக்கேளே. ௬௰௩

கேளேதான்கற்பவகைசாற்றைக்கேளும்கெடியானவாலுழுவையரிசிதானும், தாளமுடன் நன்னாரிமுத்தக்காசு தாக்கானசீரகமும் ஓமந்தானும், நீளமுடன் கார்போக மேலக்தானும் நிலையானகோஷ்டமுடன் மதுரந்தானும் பாளமுடன் வகிற்கட்டைசெம்பூரானும்பாங்கானசந்தனமுடன் தேவனுமே. ௬௰௪

தேவனும்பட்டையுடன் கருஞ்சீரந்தான்தேற்றானுமெட்டியுடன்சித்தரத்தை, காவமென்ற வால்மிளகு சாதிக்காயும்கருவானபூப்பனையும் தண்ணீர்மிட்டான், சாபமென்ற கரிமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் சார்பானவெள்ளையென்றமிளகுகூட்டி. தூபமென்றசாம்பிராணிசமனதாக துப்புரவாய் மூக்கண்ணின் பாலாலாட்டே. ௬௰௫

ஆட்டியேமெழுகுபதந் தன்னிற்காச்சி அப்பனேதான்வடித்துபதனம்பண்ணு, தாட்டிகமாய் சீசாவிலடைத்துமைந்தா தகைமையுடன்ஒருதிங்களானபின்பு, நாட்டமுடன்தயிலமதை பிரயோகித்தால்நாடாது கெற்பத்தின் சூலைபோகும், ஓட்டமுடன்கெற்பத்தின் வாயுபோகும் ஓகோபொய்யாது உண்மையாமே. ௬௰௬

உண்மையாம்தயிலமாம் உறுதிமெத்தவுத்தமனேபொறிச்சூடுவிட்டேபோடும், திண்மையாம்பிடரிவலிசன்னிபோகும் திறளானவேர்வையது துள்ளியோடும், வண்மையாம்கையெரிவுகாலெரிவுதானுமகத்தானவாயுவென்றதெண்பதுவும்போம், நண்மையாம்காந்தலதுமிகவேறுதானினமுடன்போகரிஷிநவின்றவாறே. ௬௰௭

கந்தகத்திருவகம்.

வாறானவின்னமொரு மார்க்கம்பாரு வளமையுடன் கெந்தகமும் சேர்தானென்று, கோறனசினமது சேர்தான்ரெட்டிநெடிதானபூநீறு சேர்தான்காலாம், பாறுணஉப்பதுவும்சேர்தான்பாதி பளிங்கானவளையலென்[illegible]ப்புதானும், தேறுனயெவாச்சாரம்சேர்தான்காலாம்சிறப்பானசரக்[illegible]கெல்லாம் பொடியாய்ச்செய்யே. ௬௰௮

செய்யவேவ்வாலையென்றபானைக்குள்ளேசிறுடனேசரக்கெல்லாம் போட்[illegible], லபயவேசக்கரமாம் வாலைவைத்துப்பாகமுடன்திறாவத்தைதயிறக்கிப்பாரு, மூய்யவேமூன்றுமூறையிக்தயாகமூயற்சி

யுடன்ருனிறக்கியெடுத்துக்கொண்டு, துய்யநல்ல சீஷாகிலடைத்துக் கொண்டு துப்புரவாய்கற்பாணைமூடிடாயே. ௪௫௯

மூடவே திராவகத்தின் காரமப்பா மூவுலகந்தானெறிக்கும்கதி ரோன்போல சாடவே சரக்குக்கு காலனாகும் சாங்கமுடன் திராவக கமோசுருக்குமெத்த, நீடவேதிராவகத்தைபதனம்பண்ணிநிலைப்புட னேயின்னமொருமார்க்கம்பாரு, கூடவேகண்டருடதிராவகத்தைக்கூ றுவேன் மாணுக்கள்பிழைக்கத்தானே. ௪௬௦

## துருசு திராவகம்.

தானான துருசது தான்சேர்ந்தாளென்றுதாக்கான சீனமதுசேர் தாளென்று, வேனான பூநீறுசேர்தான்பாதிவேகமுடன்கல்லுப்புசேர் தான்காலாம், கோனான் வெண்காரம் சேர்தான்காலாம்கொப்பென வேவிவையெல்லாம் பொடியதாக்கி, மானானஎனதையர் குருவையெ ண்ணிமார்க்கமுடன்பானைதனில்கொட்டிடாயே. ௪௬௧

கொட்டியேகுருசொன்ன வளவாய்க்கூட்டிகுணமாகச்சக்கரமா ம்பானைதன்னில், திட்டமுடன்வாலைவைத்துச் சீலைசெய்துசிறப்புட னேயிருபக்கம்புனலும்வைத்து, சட்டமுடனடுப்பேற்றி எரிப்பாயா னால் சார்புடனே திராவகமுமிறங்கும்பாரு, நட்டமில்லாதிராவகமு மெடுத்துப்பாரு நாதாக்கள் செய்யார்கள நீதந்தானே. ௪௬௨

அதீதமென்ற வித்தையிது வாலைவித்தை அவனியிலேசெய்யுவ துவரிமைகாணும், கதீதமென்ற திராவகத்தைப்பதனம்பண்ணுகரு வானருதத்துக்குறுதிகாலன் நதீதமென்ற கண்டருடதிராவகத்தால் நாட்டிலே வெகுகோடி செய்வாரப்பா, பதீதமென்றதிராவகங்களின் னஞ்சொல்வேன்பாகமுடன் போகரிஷிபயின்றவாறே. ௪௬௩

## சாரத்திராவகம்.

பயின்றதொரு வின்னமொரு மாற்கம்பாரு பாங்கானசாரமது சேர்தாளென்று, நவின்றதொருபூநீறுசேர்ந்தான்பாதிநலமானசீனம துசேர்தாளென்று, துயின்றதொரு கல்லுப்பு சேர்தான்கால்தான்சு யமானவெண்காரம் சேர்தாளென்று, அயின்றதொரு சரக்கெல்லா மொன்ருய்க்கூட்டி அப்பனேகலசமென்றபாணைக்கேற்றே. ௪௬௪

ஏற்றவேசக்கரமாம் வாலைவைத்து எழிலாகச்சீலைபதவனுவாய் செய்து, காற்றதுதான் போகாமல் அடுப்பிலேற்றி காகமென்றபா ணைக்குகுழலும்வைத்து, போற்றமுடன் புனல்வழியேசலமும் போக பொங்கமுடன் தானெரிப்பாய் சாமகேரம், கூற்றனைப்போல்திராவக முமிறங்கும்பாரு கொடிதானவேதமதிசொல்லொண்ணுதே. ()

சொல்லவேகாவேது பாவுமேது சொற்பெரியதிராவகமும் கார மெத்த, வெல்லவேசரக்குக்கு மித்திரகாலன் வெகுகொடியன்வெகு கெடியன்சாரனப்பா, புல்லவேதிராவகத்தைபதனம்பண்ணு பொங்க முடன் சீஷாவில் விட்டுமைந்தா, மெல்லவேமேற்கல்லுகொண்டுமூடி மிக்கானதிராவகத்தைவுறுதிபண்ணே. சசுசு

வெடியுப்புதிராவகம்.

பண்ணவேபின்னமொரு மாற்கம்பாருபாங்கானமதியுப்புசேர் தானொன்று, உண்ணவே சீனமதுயிருசேராகும் வுத்தமனேசாமது கால்சேராகும், திண்ணமுடன் பூநீறுசேர்தான்பாதி தெளிவானகல் லுப்புசேர்தான் கால்தான், வண்ணமுடன் சரக்கெல்லாமொன்றாக் கூட்டிவளமாகத்தான் பொடித்து கலசமாட்டே. சசுஎ

ஆட்டியே வாலுகையைமேலேவைத்து அப்பனே சீலையதுவலு வாய்ச்செய்து, நீட்டியே திராவகமு மிறக்கிபாரு நிலையான திராவக மோகாந்தமெத்த, பூட்டகமாய்தானெடுத்துச்சீஷாவிற்குள்புகழாகத் தானடைத்து பதனம்பண்ணு, நாட்டமுடன்திராகவகமோ நவிலப் போமோகாதாக்கள் செய்யார்கள் நன்மைபாரே. சசுஅ

பாஷாணத்திராவகம்.

நன்மையுடன்பின்னமொருமாற்கம்பாருநாதாக்கள்கண்டத்தில் லேசுளுக்குவேதை, உண்மையாயுரைக்குகிறேன் பாஷாணந்தான்வுத் தமனேசங்கென்ற பாஷாணந்தான், திண்மையுடன்சேரதுதானொன் றேயாகும்தெளிவானசீனமதுரெண்டேயாகும், நன்மையுடன் பூநீறு காலேயாகும் கதிப்பானவளையலுப்பு கால்தான்கூட்டே. சசுகூ

கூட்டவென்றால் கலுவத்திற் பொடியாய்ச்செய்து பொங்கமு டன்கலசமென்ற பானைதன்னில், நீட்டமென்றபொடிதனையேபாண் டமிட்டு நேர்புடனே வாலுகையைமேலேவைதது, தாட்டிகமாய்மூடி யதுவலுவாய்ச்செய்து சாங்கமுடன் திராவகத்தையெறக்கிபாரு நா ட்டமுடன் திராவகத்தை பதனம்பண்ணு நலமாகசீஷாவிலடைத்தி டாயே. சஎஓ

அடைத்துமேதிராவகமோகாரமெத்த அப்பனேதிராவகத்தால் லோகம்நீறும், புடைப்புடனேலோகத்துக் காலனாகும்புகழாகசத்து ருமித்துருதானாகும், படைப்புடனே திராவகத்தால காரசாரம்யாக முடன்றான்மடியும் பண்போமெத்த, கடைப்புடனேயிதனாலேவம்மு மாளும்கருவானதிராவகமுமென்பார்தானே. சஎக

### சங்கு அயத்திராவகம்.

தாமானவின்னமொரு கருமானங்கேள் தகைமையுடன்வயமது
தான்சேர்ந்தானென்று, காமானபாஷாணம் சரிதாககடிதானவயத்
துடனே ஒக்கச்சேர்த்து, நாமான பூநீறு வரையதாகநலமானவளைய
லுப்புக்காலதாக, பாமானசீனமதுரெட்டிப்பாகபாகமுடன்றான்போ
ட்டுக்கலசமூடே. ௪௭௨

மூடயிலே வாலுகையை மேலேவைத்து முயற்சியுடன்சீலைபது
வலுவாய்ச்செய்து, தேடையிலே வடுப்பேற்றிஎரிக்கும்போதுதெளி
வாகதிராவகமுமிறங்கும்பாரு, நாடயிலே புனலாலேசலமுமோடிநல
மானதிராவகத்துக்குயிருமாச்சு, ஊடையிலேதிராவகத்தால்காரமெ
த்தவுத்தமனே செந்தூரக் குருவுமாச்சே. ௪௭௩

ஆச்சென்றுவிடுகாதே யின்னப்பாருஅப்பனே செந்தூரமிதனு
லாகும், போச்சென்று போகாதேபுண்ணியாகேள்பொங்கமுடனின்
னமொரு பாகஞ்சொல்வேன், தீச்சென்ற பாஷாணஞ்சகலத்துக்கும்
தெளிவாகயிந்தமுறைசெய்யலாகும், மூச்சப்பா சகலவிதபாஷாணத்
தின்மூர்க்கமெல்லாஞ்சத்துருவால் முறிக்கலாச்சே. ௪௭௪

### சீரகத்திராவகம்.

முறிக்கலாம் பலகோடிவேதையாகும் மோசமில்லைதிராவகங்க
ள்காரமெத்த, தறிக்கலாமின்னமொரு பாகங்கேளு, தாக்கானசீரக
மும்சேர்தானப்பா, செரிக்கவேசலமதுதான் ரெட்டிப்பாகும் சிறப்
புடனே பூநீறுகாலதாகும், நெறியுடனேபாண்டமெனும்கரகத்துள்
ளேகோர்புடனே சலத்தோடே கொட்டிடாயே. ௪௭௫

கொட்டியேகரகத்தின்மேலேயப்பாகுணமாகவாலுகையை மேலே
வைத்து, திட்டமுடன் சீலைதுவலுவாய்ச்செய்து திறமுடனேயடுப்
பேற்றியெரிப்பாயானால், நட்டமில்லாத்திராவகமுமிறங்கும்பாருநல
மானசீரகத்தின்வேகமெத்த, பட்டவுடன்பித்தம்நாற்பதுவும்போ
கும்பாங்கானசீரகத்தின் பண்புதாமே. ௪௭௬

தாமானசீரகத்தின் தலையிற்தண்ணீர் தயவுடனே மூன்றுமுறை
யிப்படியே செய்ய, பாமானவாலுகையால்காரமேறிப்பரிவுடனேபுகை
யோடுகெடிதானாகும், காமானதயிலமது என்னசொல்வேன்காசினி
யில்சித்தர்களுங் காணமாட்டார், பூமானும்காலாங்கிநாதர்பாதம்புக
ழ்ச்சியுடன் பாடினேன் போகர்தானே. ௪௭௭

### ஓமத்தயிலம்.

தானானவின்னமொரு பாகம்பாருதயவுடனே சொல்லுகிறேன்
மைந்தாகேளு, வேனானஓமமது சேர்தானப்பாவேகமுடன்கொண்டு

வந்து பாண்டமிட்டு பானுனசலமதுவும்ரேட்டிப்பிட்டுபாகுடனே பூரீறுகாலதாக, மானுனசலமதனை விட்டபின்பு மதிப்புடனே வாலு கையைமேலேவைவயே. சஎஅ

வைக்கவேசிலையதவலுவாய்ச்செய்து வாகுடனே திராவகத்தை வாங்கிமைந்தா, மெய்க்கவே மூன்றுமுறை யிப்படியேசெய்து மேன் மையுடன்திராவகத்தை எடுத்துக்கொண்டு, மொய்க்கவே முன்சொ ன்னதிராவகமுமப்பா மோசமதுவாராமல்செப்பக்கேளு, பொய்க்கா மல் சரியெடையா எடுத்துக்கொண்டு, பொன்னவனே வெள்ளுள்ளி சேர்தான்போடே. சஎகூ

## பெருங்காயவைப்பு.

போடவேதிராவகத்திலாட்டுமையந்தா புகழானவெள்ளுள்ளிகை போலாகும், நீடவேபூண்டுக்குகாயமேரி நிலையான வெள்ளுள்ளிகார மாச்சு, பாடவேசெம்மறியின் தோலாலப்பா பாகமுடன்தான்பொ திந்து தைத்துப்போடு, சாடவேமண்டலஞ் சென்றெடுத்துப்பாரு சரக்கானபெருங்காயம்காரமாச்சே. சஅ0

காயமாமின்னமொருமார்க்கம்பாரு கருவான காசியென்றகட்டி யப்பா, நேயமுடன்சொல்லுகிறேன் மைந்தாகேளு நேர்புடனேவகி லத்தின்தூளுகூட்டி, பாயமுடன்பாக்கினிடகிஷாயந்தன்னுல்பாகமு டன்மூன்றுநாளாட்டிமைந்தா, தூபமுடன்ரவிதனிலே காயப்போடு அப்புரவாம் காசியென்றகட்டியாச்சே. சஅக

## இரும்புசாயம் ஆடைகளுக்குவாணம்.

கட்டியென்னும் ரத்தமென்றபாளமாச்சு காசினியிலாருந்தான் கண்டதில்லை, திட்டமுடன் சொல்லிவிட்டோம் சினத்தார்க்கு திற முடனே கண்டறிந்தோர் புத்திவானும், சட்டமுடனின்னமொரு பாகம்சொல்வோம் சார்வானயிரும்பினிட சத்தைவாங்கு, வட்டமெ ன்ற கொப்பறையில் தப்பைக்கொட்டி, வாகுடனேசெம்மரத்தின் தூள்தான்போடே. சஅஉ

போடையிலேசலமதுதான்பாண்டமிட்டுப் பொங்கமுடன்பட் சம்சென்றெடுத்துப்பாரு, கூடையிலேயிரண்டுமொன்றாய் சேர்ந்து கொண்டுகுணமானசிட்டம்போலிருக்கும்பாரு, நாட்டமுடனிரும்பெ ன்றவாலைகுள்ளே நனிமுடன்தான்கொட்டி வரைத்திட்டேதான், சாடவே சிலைகட்டு காரமேற்றிச்சார்பாககளர்கட்டி யோரத்தித்தே.

தித்தையிலேபலபலவாம் ரூபம்காட்டும் சிவப்புமுதல் பஞ்சவர் ணம்காணலாகும், தித்தையிலேகாரங்களில்லாப்பக்கமதெளிவானவர்

னக்கள்காணலாகும், நித்தமுடன்வரணக்களெழுதலாகும் நிதமா
னயிரும்பினிடகாரக்தன்னால், சித்தமுடன்செம்பினிடசத்துசேர்த்து
சிறப்பாகத்தானுருக்கி யெடுத்திடாயே. சஅச

எடுத்துமே வயநினிடபாகம் போல யெழிலாகவகிலமாம் பட்
டைத்தூளும், தொடுத்துமேசெம்பினிட்சத்துசேர்த்துநேற்றமுட
னுலைதனிலரைத்துக்கொண்டு, தடுத்துமேவயநினிடவர்னத்தாலும்
தாக்கான்செம்பினிடவர்னத்தாலும், அடுத்துமே சிலைகட்டுவர்ணமா
ச்சவப்பனே சினபதிவுளவுதானே. சஅரு

சின, நிகாயிதபுகைபாலை.

உளவானசினபதிவேதைமாற்கம் வுத்தமனே வேடிக்கையின்ன
ஞ்சொல்வோம், தலமானகாயிதம்சன்னமட்டும் தான்செய்யும்விபர
ங்கள்சாற்றக்கேளு, நடமானதடமதுவும் கெஜநூறு நம்களினமுட
னகலமதுகெசநூறாகும், மளமானசுற்றோரகிராதிக்கம்பி மாற்கமுட
ன்றனமைத்துவாலைபூட்டே. சஅசு

பூட்டவென்றால்நலைபக்கம் கரும்பாலைபோலபுகழானகுழியொ
ன்றுதடாகமொன்று,நீட்டமுடன்தடாகத்தின்சுற்றுவோரம் நிலையா
னவாய்க்கால்போல் குழம்புண்டாக்கி, பூட்டமுடன் குழைதனிலே
யாலைவைத்துப் பொங்கமுடன்தொட்டியென்ற வொன்றுண்டாக்கி,
வாட்டமுடன்தொட்டிக்குள் தூன்போல்கம்பி வகுப்புடனேதான
மைத்து சக்கரபாட்டே. சஅள

சக்கரமுமாட்டியேவாலைதன்னைச் சாங்கமுடன்புகையென்றவா
லைதன்னால், தக்கபடிதிருப்பனுடன் கோணிதன்னைச் சாந்தமுடன்
தானரைத்துகுளத்துக்கேற்றி, ஒக்கவேதெளிவதனை மேலேநோக்கி
வுவன்மையுடன்போகவே, வழியுண்டாக்கி பக்கமுடன்தெளிவதனில
பூநீர்சேர்த்துசார்புடனேதொட்டிதனில் கரைத்திடாயே. சஅகூ

கரைத்துமேமூன்றுநாள் சென்றபின்பு கருவாகதொட்டிதனில்
சரக்கைவைத்து, நிரைப்புடனே படல்கட்டிக் காயிதத்தை நேர்புட
னேதானெடுக்கவண்ணம்பாரு, திரைப்புடனே வாலையென்றகையில்
ப்பாதிறமானபிரதமையொன்றிருக்கும், முறைப்படியே கைத்னிலே
படல்தானியமுனையாமல்தொட்டிதனில்கலக்கிடாயே. சஅல

கலக்கையிலேவண்டலது படல்மேற்சார்ந்து கடினமுடன்சக்க
ரத்தைசுத்திவந்து கலந்தினது, மேடையிலேசட்டக்தன்னில்நிலைமை
யுடன்றனமைத்துமேலேவைக்கும், புலப்புடனேமறுவாலைதனிலிரு
ந்துபுகழாகச் சிலையதுமூடிக்கொள்ளும், தலப்புடனேபின்னுமக்த
பதுமைதானும் தடாகத்தில்வண்டல்தனை யெடுக்குந்தானே. சகூ0

எடுக்குமேசக்கரமாமாலைதன்னால் எழிலானவண்டலுடன்சரக்கைசெல்லாம், தொடுக்கவேமேற்படியில் கொண்டுசென்று திப்புரவாய்வாலையென்ற சட்டந்தன்னில், படுக்குமேபடல்தானும் விட்டபோது பாங்குடனேசிலைய தமூடிக்கொள்ளும், அடுக்குமேயிப்படியே பலகாலுந்தான் ஆலைய தசமூன்றுமேயோடுந்தானே. ௪௯௧

ஓடயிலேமுதற்றாந்தாலைதன்னில் வெளிவானகாகிதங்கள் சன்னமாகும், நீடமுடனிரண்டாங்காலாலைதன்னில் நேர்புடனேதானடக்குமவண்மைபாரு, சாடலுடன்பஞ்சியென்றவாலையுண்டு சட்டமுடன் முன்குழைபோலாணித்தூணும், வாடலுடன்குளமதனில் வண்டல்சேரும் வாகுடனேபஞ்சியென்றவண்டல்தானே. ௪௯௨

வண்டலுடன்சுத்தித்த பூநீரப்பா வாகுடனேதான் சேர்த்து குழம்புபோலாம், அண்டமெனும்கட்சத்திரவொளிவுவீசும்அப்பனே வண்டல்தனைகலக்கிக்கொண்டு, தண்டமுடன்சக்காவாலை தன்னைச்சாங்கமுடன் றான்திருப்பிரதமைதானும் கொண்டபடிபடல்சாத்தி வண்டல்தன்னைக் கொப்பனவேதானெடுக்கும்வண்மைபாரே. ௪௯௩

பார்க்கையிலேபடல்சாத்தி தானெடுத்துப் பாகமுடன்மேற்புறத்தில்கொண்டுசென்று நீர்க்கமுடன்சட்டமென்ற படலின்மேலே திறமாகத்தானமைக்கும் மேல்வட்டத்தில் ஆர்க்கமுடன்தன்மேலே சிலைகொண்டு அப்பனேமேல்மூடியாலையாலே, நீக்கலதுபடலதனை மேலேசாத்தும் நெடிதானசக்கரத்திநேர்மைதானே. ௪௯௪

காணயிலேசக்கரமாமாலைதன்னில் கருத்துடனேதான்முடுக்கச்சலமும்நீங்கி, நீணமுடன்கசுவலதுநீங்கியேதான் நேரானகாயிதமும் சன்னமாச்சு; வேணபடிமூன்றாங்காலாலைதன்னில்வேகமுடன் திருப்பவுபாயங்கேளு, மாணவென்றசக்கரமுமாடிநிற்கும் மன்னவனேநடுக்குளமாங்குழிதான்பாரே. ௪௯௫

குழியானசதுரமதுபள்ளத்துள்ளே கூரானநூணதுதான் நடுமையத்தில், வழியானசக்கரமாமாலைதன்னில் வகுப்பானபஞ்சினிடமஷ்டுதன்னால், முழியானபூநீறு மொக்கச்சேர்த்துமுயலவே தான்மசிந்துகுழிக்குள்தானும், கழியானமயனம்போலாகும்பாரு கருத்துடனே றானெடுக்குங்கருவைக்கேளே. ௪௯௬

கருவானமேல்வட்டஞ்சக்கரத்தில் கடினமுடனலையதுவோடிப்பாயும், திருவானவண்டலதுமேலேதானும் தெளிவுடனேபடல்மேலேசென்றுநிற்கும், குருவானநடுமைய சக்கரன்தானும் கொப்பெ

னவேமேல்வட்டம்படல்தான்சாத்தும், தருவானவண்டல்மேல்படல் தான்மூடி சார்பாகசீலைபதுபரவிக்கொள்ளே. ௪௯௭

கொள்ளயிலேமேல்சட்டம் நின்றுமூடிக் கொப்பனவேபடலா லேயாலைசுற்றி, மெள்ளவேசீலையதுமேலேமூடி மேன்மையுடன்சல மதனைவடியச்செய்யும் தள்ளயிலேசக்கரமாம் பலகையாலே சாங்க முடன் வாலைபின்றன்திருப்பல்காணும், துள்ளியேதிருப்பலதுகின்ற போது சூட்சத்தால்காயிதமுமெடுக்கலாமே. ௪௯௮

எடுக்கலாம்வாலைவிட்டு எடுத்தபோது பெழிளானகாற்றதனில் காயப்போடு, தொடுக்கவேரவியென்ற வொளிதான்பட்டால்தோற்ற முடன் காயிதமும்வெளுப்புமெத்த, படுக்கமுடனிப்படியேயாலைதன் னுல் பலபலவாம்காயிதங்களெடுக்கலாகும், கொடுக்கவேவாலைகளு மனேகமுண்டு கொப்பெனவேயதன்கூறு சொல்லலொண்ணாதே.

சொல்லவேநஞ்சிதனைமேலேயூசி சுத்தமுடன்காயிதங்களெடுக் கலாகும், வெல்லவேசஞ்சினல்வாலைதன்னில்மெருகுடனேசக்கரமா முருளையுண்டு, புள்ளவேயுருளைக்குப்பஞ்சூட்டிப் பொங்கமுடன் தோலாலேயாலையாகும், பங்கமில்லாக்காயிதத்தையாலைக்கிய பாகமு டன்மெருகுடனே தள்ளும்பாரே. ௫௦௦

தள்ளயிலேசக்கரமுமோடித்தாலும் சாங்கமுடன்றுனெடுத்து வடுக்கும்பாரு, துள்ளியேபடல்தானும்மேலேயேற்றித் துப்புரவா யடிவாரத்தொட்டிக்குள்ளே, மெள்ளவேகொண்டுசென்று படுக்கிப் பின்புமேற்புறத்தில்சட்டமதிலேறிநிற்கும்,கொள்ளவேசட்டமென்ற வாலையப்பா கொடிதானவாலைக்குகூறுண்டாமே. ௫௦௧

கூறானவாலையிலேவேரமப்பா கொப்பனவேகட்டுவகைதறிக்க லாகும், தாரானகாயிதமுஞ்சுற்றோரந்தான் சாங்கமுடன்திருகியல் லோகிற்கும்பாரு, சேறானவாலையதுவேவாடிக்கொண்டு தெளிவான புகையுடனேவாடிநிற்கும், பாறானகட்டுவகைதறித்தபின்பு பாக முடன்கீழ்புறமாய்தள்ளலாச்சே. ௫௦௨

ஆச்சென்றவாலையதுகித்தந்தாலும் அப்பனேலட்சமதுகோடிக் கோடும், காச்சலென்றகடிதாசிசெய்யும்நேர்மை காசினியில்சித்தர் முனிசெய்ததில்லை, மாப்சதுடன்சீனபதியானுஞ்சென்று மார்க்க முடன்கருவானவேலைதயாரவும், பாச்சலுடன்காலாங்கிநாதர்தம்மால் யாலித்தேன்வெகுகோடிவித்தைதானே. ௫௦௩

## வரணபேதகடிதாசிசெய்யும்விபரம்

வித்தையாமின்னமொருபாகம்கேளு வேடிக்கை விநோதமென்றவித்தையப்பா, சுத்தமுடன்பஞ்சவர்ன மையினாலேசுருதியுடனாலே தனிலேற்றிமைந்தா, பத்தமுடனாலேவாய்ப்படலின்மேலே பாங்குடனேபூசியல்லோவாலைக்குள்ளே, வெத்திபொன்ற காகிதத்தை வாலைதன்னில் விருப்பமுடன்றான்கொடுத்துசெப்பக்கேளே. ௫௦௪

கேளேதான்காகிதம்படிந்தபின்பு கெடியான வன்னமென்றபேதிதன்னை, தாளவேதிராவகமாய் எடுத்துக்கொண்டு தகைமையுடன் சபுரியின்றன்மயிரினாலே, மீளவேகத்தையாய்க் கட்டிக்கொண்டு விருப்பமுடன்றான்றெளிக்க வாணம்பாயும், சாளவேகடிதமெல்லாம்வரணபேதம் சார்பாகக்காட்டியல்லோ பரவுந்தானே. ௫௦௫

தானானவனேகவிதம்செய்யலாகும் தகைமையுடன் வர்ணமென்றவாலைதன்னால், கோனான யென்னுடைர் காலாங்கிநாதர் கொட்டினார் லோகத்திலனந்தம்வேதை, பானுகயென்னைப்போல வெளியரங்கம்பாடினார்லோகத்து மாந்தற்கில்லை, தேனானவமுர்தம்போல் சத்தகாண்டம்திரட்டினேன் யேழாயிரமுண்மைபாரே. ௫௦௬

## சீனத்தார்க்கு வஸ்துபோதை

உண்மையாமின்னமொருபாகம்கேளு வுத்தமனேவஸ்துவென்றபோதையப்பா, இன்மையாய்நெல்லிவேர் பனையின்வேரும் திறமான மாதளையின்கெஞ்சாவேறும், கண்மையாம் நன்னாரியல்ரிவேறும்கருவானவாவாரைவேறுதானும், பண்மையாம்கிச்சிலியின்வேறும்கூட்டி பாங்கானவேலனிடபட்டை கூட்டே. ௫௦௭

கூட்டியேவெள்வேலன் பட்டைதானும் குணமான சரியெடையாஎடுத்துக்கொண்டு, மாட்டியேபெரும்பாண்டம்தன்னிலிட்டுமதிப்புடனேசலமதுவும்நிறம்பவிட்டு, வாட்டமுடன்பத்துநாளூறிப்பின்பு வகுப்புடனேசாக்கதனில் பனவெல்லந்தான், நீட்டமுடன்தான்போட்டுயெடுப்பிலேற்றிநிலைமையுடன்திராவகமாயிறக்கக்கேளே. ௫௦௮

இரக்கவென்றால்வாலையது திராவகத்தை எழிலானபாண்டமதுயிறக்கிப்பாரு, சிறக்கவேதிராவகமும் காரமெத்த சீரான திராவகமும்பதனம்பண்ணு, முறைக்கவேவஸ்து சத்திசரக்குகன்னேமுப்பவேநாதாக்கள்செய்யமாட்டார், இறக்கவேபலநாளும்கண்டாறுய்ந்து தீரமுடன்பாடிவைத்தேன் மாந்தற்தாமே. ௫௦௯

ஆமேதான்சரக்குசுத்தி கொண்டபோது அப்பனேவருளுண்டு ஞானமுண்டு, தாமேதான் நாதாக்கள்மனமுவந்து தயையுடனேவே ணடுதொல்லாமீவார்பாரு, போமேதான்புகழுண்டு செல்வமுண்டுபொ லிவானகருணையுடன்வாழுமுண்டு, வேமேதானெப்போதுமனமுவந் துவிருப்பமுடன்பட்சமதுவைப்பார்பாரே. ருகo

தானனசதாநிலையைக் காணலாகும் தாக்கானசின்மயத்தையறி யலாகும், வேனனவறுகோணவட்டத்துள்ளே வேண்டியதோர் கரு விகரணதியெல்லாம், மானனவாராதாரத்திலுண்மைமார்க்கமுடன்கா ணுதற்குமயக்கமில்லை, கோனனசிற்பரத்தை யடுக்கலாகும் கொற்ற வனேதவநிலையில் நிற்பதாமே. ருகக

சற்பராஜன்மாத்திரை.

நிற்பாரேயின்னமொருமார்க்கம்பாரு நிலைபான மாணுக்கள்பிழை க்கவென்று, துற்பரவாய்குளிகையது சொல்லப்போமோ துடியான பாஷாணசற்பராஜன், பற்குணமாம்பாஷாணமொருவர் காணார்பாரு லகில்கண்டறிந்துபகுத்துரைப்பேன், சற்பமென்ற குளிகையதி பெ ருமைமெத்த சர்வகுணரோகிகட்கும் புகட்டலாமே. ருகஉ

புகட்டலாம்சங்கென்ற பாஷாணந்தான் புகலவேகளஞ்சிஎடை எடுக்கலாகும், பகட்டுடையதாளகமுங் களஞ்சிரண்டு பாங்கானபூரம துகளஞ்சிநாலு, தகட்டானவப்பிரகம் களஞ்சிரண்டு தகைமையுள்ள வீரமது களஞ்சியொன்று, மகட்டுடைய துரிசியதுகளஞ்சி யொன்று மாசற்றரசமதுவும் களஞ்சியொன்றே. ருகங

ஒன்றானசூதமுடன் துத்தங்கூட்டி வுத்தமனேசிங்கியதுகளஞ்சி மூன்று, பன்றானகெந்தகமும்களஞ்சியாறு பாங்கானலிங்கமதுகளஞ் சிநாலு, கன்றானகெவுரியது களஞ்சியொன்றுகருவானதீமுறுகள்கள ஞ்சியொன்று தன்றானமனேசிலையும் களஞ்சியொன்றுதாக்கானசூட னுமேகளஞ்சியொன்றே. ருகச

களஞ்சியாம்காந்தமது களஞ்சிரண்டுகடிதானபொன்னிமிளைகள ஞ்சியொன்று, தளமுடையசூதசெந்தூர மொன்று தாக்கான வரப் பொடியுங்களஞ்சியொன்று, மளமானவயத்தொட்டிக் களஞ்சியொன் றுமார்க்கமுடன் செங்கந்தி களஞ்சிரெண்டு, பளமானகருக்கடல் கள ஞ்சிரண்டு பாங்கான சீனமதுகளஞ்சிநாலே. ருகரு

நாலானகல்நாறு களஞ்சியெட்டு நலமானகல்மதம் களஞ்சியாறு பாலான சிலாசத்துக் களஞ்சிரண்டுபலிவான பூனமது களஞ்சி நாலு

சேலானமுத்தகதுவும் களஞ்சிரண்டு செயலானசங்கதுவுங்களஞ்சியா
று, கோலானமான்கொம்பு களஞ்சியெட்டு கூரானவகிற்சிலையுங்கள
ஞ்சிபத்தே. ௫௧௬

பத்தானகடைசரக்குசாற்றக்கேளு பாங்கானசுக்கதுவுங்களஞ்சி
யெட்டு, மூத்தானமிளகதுவுங்களஞ்சியாறு முயலானபாங்கியது கள
ஞ்சியெட்டு, மத்தானலவங்கமதுகளஞ்சிநாலு மகத்தானசாதிக்காய்
களஞ்சிரண்டு, சித்தானரோசனையுங்களஞ்சியாறு சிறப்பானவால்மிள
குகளஞ்சிமூன்றே. ௫௧௭

மூன்றானமிளகுடனேகருவாய்ப்பட்டை மூர்க்கமாய்கருஞ்சீரம்
களஞ்சிரண்டு, தான்றானபத்திரியுங்களஞ்சியொன்று தருவான தக்
கோளம்களஞ்சிரண்டு, கான்றானகார்கோலங்களஞ்சியொன்று கரு
வானமாசிக்காய்களஞ்சிரண்டு பான்றானதேசாவரம்களஞ்சியொன்று
பாகமுடன்வாய்விளங்கரெண்டாய்ச்சேரே. ௫௧௮

சேர்க்கையிலேவசம்பதுவும் களஞ்சியொன்று செயலானசேங்
கொட்டைகளஞ்சியொன்று, மார்க்கமுடன்கடுக்காய்த்தோல்களஞ்சி
ரண்டு கருவானகருஞ்சீரம்களஞ்சியொன்று, தீர்க்கமுடன்நற்சீரங்க
ளஞ்சியொன்று திடமானசிறுதேக்குகளஞ்சியொன்று, ஏர்க்கவேதா
ளகமுங்களஞ்சியெட்டு எழிலானமுந்திரிகளஞ்சிரண்டே. ௫௧௯

இரண்டானஎள்ளுடனேகளஞ்சிரண்டு இப்லானஏமமுடன்கள
ஞ்சிரண்டு, பண்டானகொள்ளுடனேகளஞ்சியொன்று, பாங்கானவெ
ட்டிவிரைகளஞ்சியொன்று, குண்டானதேறான்விரைகளஞ்சிரண்டு
கொடிதானகொடிவேலிகளஞ்சியொன்று, திண்டானவாலுழுவைகள
ஞ்சியொன்று திறமானசோம்பதுவும்களஞ்சிநாலே ௫௨௦.

காலுடனேதிப்பிலியுங்களஞ்சியொன்று நலமானகஸ்தூரிகளஞ்
சியொன்று, பாலுடனேகுங்குமப்பூகளஞ்சியொன்று பாங்கானகோடி
யதுகளஞ்சிநாலு, சேலுடனேமுத்தமதுகளஞ்சிரெண்டு செழிப்பான
தான்றிக்காய்களஞ்சிநாலு, காலுடனேநெல்லியதுகளஞ்சிரண்டு கரு
வானமுள்ளளியதுகளஞ்சியாறே. ௫௨௧

ஆறானசிவதையதுகளஞ்சிநாலு அப்பனேநன்னாரிகளஞ்சிபத்து,
நேறானபற்படாம்களஞ்சியாறு நேறானசிறுதேக்குகளஞ்சிரண்டு, தா
றானபற்படகம்களஞ்சிரண்டு தளிரானசோரியதுகளஞ்சிரண்டு, சேறா
னசெம்பூரான்களஞ்சிரண்டு சிறப்பானதேசாவின் வரமுந்தானே. ()

தானான வரமதுவும் கழஞ்சிரண்டு தாக்கானமயிலிறகு கழஞ்சி
னாலு, வேனான வலம்புரியுங்கழஞ்சியொன்று வியர்வான ஏலமது கழஞ்
சிஎட்டு, பானான சாம்பிராணி கழஞ்சிநாலு பதமான ரோகணியுங்கழ
ஞ்சியெட்டு, தாமான மகரப்பூ கழஞ்சிரண்டு தகைமையுடன் குரோசா
ணி கழஞ்சிபத்தே. ௫௨௩

பத்தான நாகப்பூ கழஞ்சியொன்று பாகமுடன் சித்தரத்தை கழ
ஞ்சியொன்று, சித்தான நிலப்பனையுங்கழஞ்சியொன்று சிறப்பான பூ
மிசர்க்கரை தானொன்று, புத்தான வட்டதிப்பிலி தானொன்று புகழான
வாய்விளங்கம் கழஞ்சியொன்று, மூத்தான வன்னமெனும் பேதிதானு
முயற்சியுடன் சாத்திரத்தின் பேதிதானே. ௫௨௪

பேதியாம் மாமிஷமுங்கழஞ்சியொன்று பேரான இருமஞ்சள் மர
மஞ்சள் தானும், வாதியாய் குன்றிமணி கழஞ்சியாறு வகுப்பான முட்டி
யுடன் பேராமுட்டி, சாதிபா மதுரமுடனக்கிராகாரம் சாங்கமுடன் கழ
ஞ்சியதரண்டதாகும், மேதியாம் கெருஞ்சியதரண்டதாகும் மேலான
கழஞ்சியதிரண்டதாமே. ௫௨௫

தாமான வெள்ளுள்ளி கழஞ்சியாறு தாக்கான கசகசா கழஞ்சிரண்டு,
காமான சாரக்கெல்லாமொன்றாய்க்கூட்டிக் கருவாகத்தானரைக்கவிபா
ங்கேளு, நாமான மூலிவகையுரைப்போம்பாராய் நாட்டிலேநாதாக்கள்
சொன்னதில்லை, பாமான கையான்சார்சாமம்நாலு பாங்குடனே தான
ரைப்பாய்மைந்தா கேளே. ௫௨௬

கேளேதான் நற்கையான் சாமம்நாலு கெடியான பொற்கையான்
சாமம்நாலு, பாளேதான் போகாமல் பரைப்பாயப்பா பாகமுடன் குலா
மல்லிசாற்றினாலே, தாளவே தக்காளிச்சாற்றினாலே சாங்கமுடன்று
னரைப்பாய்நாலு சாமம், மாளவே புளியாரை சாமம்நாலு மயங்காமல்
தானரைப்பாய்மகிபா தானே. ௫௨௭

தானேகேள் நீலியின்றன் சாமம்நாலு தகுவான வாதொண்டைச்
சாமம்நாலு, மானேகேள் பொன்னுவரைச்சாமம்நாலு மாற்கமுடன்
பாற்சுரண்டி சாமம்நாலு, தேனேகேள் மலைத்தேனு சாமம்நாலு தெளி
வான நீர்மிட்டான் சாமம்நாலு, வேனான வுதும்பைச்சாமம்நாலு விரு
ப்பமுடன் தானரைப்பாய்பண்பாய்தானே. ௫௨௮

பண்பான தாளிச்சார் சாமம்நாலு பாங்கான கற்றாழைச்சாமம்
நாலு, இன்பான கொள்ளிலைச்சார் சாமம்நாலு இடமான யிருள்ளிச்சாம
ம்நாலு, நண்பான வரிக்குமட்டிச்சாமம்நாலு நலமான பேய்க்குமட்டி

ச்சாமம்நாலு, கண்பானகருப்பன்சார்சாமம்நாலு கதிரானமேனிச்சா ர்சாமம் நாலே. ருஉகூ

நாலானமுசுக்கைச்சார்சாமம்நாலு நலமானமாதுளையின் சாமம் நாலு, காலானமுருங்கைப்பூச்சாமம்நாலுகடிதானமுடக்கொத்தான் சாமம்நாலு, தாலானமாக்துளிருசாமம்நாலுதாக்கானசெங்தோன்றிச் சாமம்நாலு, நூலானவெங்தோன்றிச்சாமம்நாலு நுணுவுடனேசெம் பருந்திச்சாமம்நாலே. ருகூ0

சாமந்தானரைக்கையிலேயின்னங்கேளு சாங்கமுடன்பழச்சாற் றுலாறுசாமம், நேமமுடன் தான்ரைப்பாய் தேங்காய்ப்பாலால்நேரான வாறுவகைசெயநீர்தன்னால்தாமமுடன்எண்சாமமரைத்தபோது[illegible] மையுள்ளசரக்கெல்லா மடிந்துமல்லோ, சாமமுடன்மெழுகதவ[illegible] மைபோலாகி சார்பானவெண்ணெபோலிருக்கும்பாரே. ருகூக

பாரேதான்மெழுகெடுத்துபதனம்பண்ணு பாங்கானகாயசித்தி மருந்தென்பார்பார், சீரேதான்மண்டலங்கள்கொண்டுசென்றால் திற ளானவியாதியதுஏகும்பாரு, கூரேதான்சொன்னபடிவியாதிமாற்கம் கூறுவோமாணுக்கள்பிழைக்கவென்று, நேரேதான்மேகமென்றதிரு பதும்போம் நெடிதானகுஷ்டம்பதினெட்டுபோமே. ருகூஉ

போகுமேகரப்பன் பதினெட்டுபோகும் பொல்லாதகுன்மமது எட்டும்போகும், ஏகுமேவாயுவென்றதெண்பதும்போம் யெழிலான பித்தம்நாற்பதும்போகும், சாகுமேசேத்துமங்கள் தொண்ணூற் றுரும்சார்வானகிரந்தி பதினெட்டும்போகும், வேகுமேசூலையதுபதி னெட்டும்போகும் வேகமுடன்பரையாப்பு வெள்ளைபோமே. ருகூங

வெள்ளையென்றரோகமதாராஜரோகம் வெளிகாணுமேகமதுகச ரோகம்போம், கிள்ளையென்றசயமதும்பதினெட்டும்போம் கிழான பாண்டுமுதல்மகோதரம்போம்,வள்ளையென்றகாமாலையாறும்போகும் வாகானநீரிழிவுமதுமேகம்போம், கொள்ளைகொண்ட வயிற்றுவலி விம்மல்போகும் கொடிதானசுரமுதலுமகன்றுபோமே. ருகூச

அகன்றுபோம்சகலவிதநோய்கள்தானும் அப்பனேதேகமதுவ ன்னிமீறும், துகன்றதொருவனுபானமறிந்து கொண்டால்துடிப்புட னேநரம்பெல்லாம்வலித்துக்காட்டும், புகன்றதொருதேகமது காந்தி வீசும்புகழானகாயமதுயிருகுயபாரு, நிகன்றதொருகாயாதிகற்பமெ ன்பார்நீணிலத்தில் சித்தர்செய்யும்வேதையாமே. ருகூரு

வேதையாம்கோடிவழி வேதையுண்டு வேகமுடன்செய்பாகம் யாருஞ்செய்யார், பாதையாமிம்மருந்துவநீதமெத்த பாகமுடன்யான் முடித்தேனிந்தபாகம், தோதமுடன்சித்தர்முனிரிஷிகள்தானுந்தோற்றமுடன்தான் முடித்தாரனந்தபாகம், காதமுடன்காலாங்கிநாயர்பாதம்கருத்துடனேயான்வணங்கிபாடினேனே. ருநசு

நவநீதகற்பம்.

பாடினேனின்னமொருபாகம்கேளு பாங்கானகோமேதம் புஷ்பராகம், தேடியேவப்ரேகம்பச்சைகெம்பு சிறப்பானவயிரமதுசங்குமூந்து, கூடியேபவளமதுநவதாதாகும் கொப்பெனவேவாறுவகைசெய்நீர்தன்னால், நீடியேசமனெடைபாளடுத்துக்கொண்டு நேர்மையுடன்றானரைப்பாய்சாமம்நாலே. ருநஎ

நாலானசாமமதுவரைத்துமைந்தா நலமுடனேபில்லையதுதட்டியேதான், கோலமுடன்ரவிதனிலேகாயவைத்துக் குறிப்பாகஓட்டிலிட்டுச்சீலைசெய்து, ஞாலமுடன்சீலையதுகாய்ந்தபின்பு நளினமுடன்கனயெருவிற்புடத்தைபோடு, தாலமுடன்புடமாறியெடுத்துப்பார்க்கதவளநிறபற்பமதுகாந்தியாச்சே. ருநஅ

ஆச்சென்றுவிடுகாதேமைந்தாகேளு அப்பனேசொர்னமென்றபற்பந்தானும், மாச்சலுடன்நாலுக்கோர் நவநீதவித்தைமாட்டாவிரண்டுமொன்றாய்க்கல்வமிட்டு, காச்சனுடனாறுவகைசெயநீர்தன்னால் கருத்துடனே தானரைப்பாய்நாலுசாமம், மூக்கடங்கத்தானரைத்துபில்லைதட்டிமுயலவே ரவிதனிலேகாயப்போடே. ருநகூ

போடவேபில்லையதுகாய்ந்தபின்பு பொங்கமுடன்வோட்டிலிட்டுச்சீலைசெய்து, நீடவேகோழியென்றபுடத்தைப்போடு நீணிலத்தில்நீயுமொருசித்தனாவாய், தேடவேகாயாதி கற்பபற்பம் தேர்ந்தாலும்யாருந்தான்சொல்வதில்லை, பாடவேபலநூலுங்கண்டாராயந்துபாவித்தேன் லோகத்துயாந்தற்காமே. ருசo

ஆமேதான்பற்பமுறைபாருஞ்சொல்லார் அப்பனேமானிடர்கள்பிழைக்கவென்று, நாமேதான்பலநூலுங்கண்டாராய்ந்துநளினமுடன்பாடிவைத்தேன்சத்தகாண்டம், போமேதான்வீணிலேமனம்செல்லாமல்பொங்கமுடனிப்பாகம் செய்தாயானால், மாமானகாயகற்பமிதுதானாகுமகத்தான பற்பமதுநவிலொண்ணாதே. ருசக

ஒண்ணுதுபற்பத்தைப்பணவிடைதானு முத்தமனேவெண்ணெ
ய்தனில்கொண்டாயானால், நண்ணுதுநோயேதுரோகமேது நாடாது
காலனுமேநாடமாட்டான், திண்ணுலுங்காயகற்பமிதற்கொவ்வாது
திறமையுடன்செய்துகொண்டோன்புத்திவானும், வண்ணுலுமுடியா
துபாரிலப்பா பாக்கியவான்செய்துகொள்ளும்வேதையாமே. ()

### சூரணங்களனுபானம்.

வேதையிலேயின்னமொருபாகம்கேளு விருப்பமுடன்சூரணங்க
ளெதுவானாலும், தீதையிலேவனுபானந்தெரிந்துகொண்டால் தேகம
துகற்றூணுமாகும்பாருபோதையிலேகாயாதிபற்பமாகும்பொங்கமுட
னுண்டவற்குபலனுண்டாகும், பாதையிலேயேகமென்ற யிருவும்பா
கும் பாரினிலேநீயுமொருசித்தனாமே. ௫௪௩

### புட்டிக்குள்கோழிமுட்டை விடுகிறசாலம்.

சித்தனுமின்னமொருமார்க்கம்பாரு சிறப்பானபெருஞ்சாதிகோழி
யொன்று, முத்தலாய்க்கொண்டுவந்து வவயமிட்டுமுதன்மையாமுட்
டைதனையெடுத்துமைந்தா, சுத்தமுள்ள பூநீராம்புட்டியென்றுசூட்ச
முடன்சின்னவாய்க்கொண்டதாக, வெத்தியுடன்புட்டிக்குள்முட்டை
போகவிருப்பமுடன் சொல்லுகிறேன்பண்பாய்க்கேளே. ௫௪௪

பண்பானமுட்டைதனைசெப்பக்கேளு பாகமுடன்காரமென்றகா
டிதன்னில், திண்புடனேமூன்றுநாள் முட்டைதன்னைத் திறமுடனே
யூறினபின்னெடுத்துப்பாரு, நண்பானமுட்டையதுகாரமேறிநனிலவே
வோடதுதான் சவ்வுபோலாம், தண்பானமுட்டையதுதளர்ந்துபோ
கும் தாக்கடாபுட்டியென்றசீஷாதானே. ௫௪௫

தானானசின்னவாய்ச் சீஷாக்குள்ளே தள்ளடாமுட்டைதனையுள்
ளேபோகும், வேனானமுட்டையது சென்றபின்புவிருப்பமுடன்பாணி
யென்றதண்ணீர்தானும், கோனான புட்டிக்குள்ளாம்பவிட்டு குறையாம
ல்சீஷாவைமூடிப்போடு, கோனானமுட்டையது கல்லுபோலாம்தீவிர
மாய்பாணிதனையூத்திடாயே. ௫௪௬

ஊத்தியபின்புட்டிதனை மூடிபோடு வுத்தமனே ராசரிடம்சென்
றுநீயும், நேத்தியுடன் புட்டிதனை கைகொடப்பா நேரானபுட்டிதனை
ப்பார்க்கும்போது, மாத்தனுடன் புட்டிக்குள் முட்டையப்பா மன்ன
வனேசென்றவழிவகைதவித்தை, காத்தனுடனாச்சரியவித்தைதன்னைக்
காண்கிலையாரசொல்லாமையன்னுவாரே. ௫௪௭

மயங்குவார்வித்தைகபிதுமண்டலத்தில்மாற்றானுங்கண்டறியான் விநோதவித்தை, தயங்கியேசெய்தாலும்காணமாட்டார் தகைமையுள்ளகருவாளிகாண்பான்பாரு, புயங்கமுடன்தாரணியில் மற்றோராலும் புகழ்ச்சியுடன்செய்யுவதுவருமையாகும், வயங்கமுடன்காலாங்கிநாதர்பாதம் வாகுடனேதாள்பணிந்துபாடினேனே. ௫௪௮

## தங்கநிமிளைவேதை.

பாடியேயின்னமொருகருமானங்கேள் பாலகனேமாணாக்கள்பிழைக்கவென்று, தேடியேநிமிளையதுதங்கமப்பா தெளிவானநிமிளையதுகூறக்கேளு, வாடியேதிரியாதேமன்னுபாரு மகத்தானசெம்புக்குத்தகட்டின்மேலே, நீடியேசூதமதைமேனிச்சாற்றால் நேர்மையுடன்றானரைத்துபூசிடாயே. ௫௪௯

பூசியேநிமிளைதனைப் பொடித்துக்கொண்டு பொன்னவனேகரியோட்டில்துட்டுவைத்து, ஆசியேநிமிளைதனைசன்னமாக வப்பனேகீழ்மேலும் பொதிந்தபின்பு, காசிக்குச்சிலையதுவலுவாய்ச்செய்து கருத்துடனேகவுதாரிபுடந்தான்போடு, மாசிபோல்வர்ணமது மிகவுண்டாகி மன்னவனேதாம்பரமும்பழுக்கும்பாரே. ௫௫௦

பாரேதான்தாம்பரமும்பொன்னுமாகும்பாங்கானநிமிளையதுவர்ணமெத்த, சீரேதானுருக்கிப்பார் மாற்றெட்டாகும் சிறப்பானவானவிமதுதாம்பரவேதை, வேறேதான்காணவுமோவதீதவேதை வேலனல்கைசிமிட்டுவித்தைவித்தைசித்தர், கூறேதான்சீனபதிமார்க்கத் தார்கள் குறிப்புடனே செய்வார்கள்கோடிதானே. ௫௫௧

கோடிபாய்வேதையிது கோடாகோடி கொட்டினேன்மாணாக்கள்பிழைக்கவென்று, நீடியேநிமிளைதனைக் காணமாட்டார் நிமிளையில்வரணமதைபறியமாட்டார், மூடியேபித்தளைபோல் கல்லுமப்பாமுறுக்கலுடன் சிட்டம்போலிருக்கும்பாரு, தேடியேயலைந்தாலும் கிட்டாதப்பாதேசத்தில் வதீதமென்ற சிட்டம்பாரே. ௫௫௨

சிட்டமுடன்கல்லதனைசெந்தூரித்தால் சிவப்புடனே தங்கமதுசெந்தூரந்தான், கிட்டமென்றநிமிளையது வர்ணமெத்தகெடியானசெந்தூரங்குன்றியுண்ணு, குட்டமென்ற தேகமதுபொன்போலாகும் குறையாதுவயதனுதான்கெவினியாவாய், மட்டமுடன்வெள்ளிசெம்பில் பத்துக்கொன்றுமயங்காமல்கொடுத்திடவேமாற்றெட்டாமே. ௫௫௩

எட்டான மாற்றதுவுமதிகமாகி யெழிலானபுடத்துக்குவுறுதித ங்கம், மட்டானசங்கமது பசுமையாகு மகத்தானவேதையிது சித்தர் வேதை, கட்டானகிமிளையதுகருவுவேதைகாசினியிலாருந்தான்சொ ல்லமாட்டார், சட்டமுடன்'காலாங்கிதனைவணங்கிசார்புடனேபோக ரிஷிபாடினேனே. ௫௫௪

## பன்னியப்சா.

பாடவேமாற்றுயர்வு பகரக்கேளுபாங்கானதுருசதுவும்பலமோ வொன்று, நீடவே துருசுக்குசுண்ணம்பப்பாகிலையானசுண்ணமதைக் கவசம்செய்து, தேடவேமூன்றுநாள் காய்ந்தபின்பு தெளிவுடனே காடையென்ற புடத்தைப்போடு, கூடவேகவசமதை பிரித்துபாரு கொற்றவனே துருசதுவும்வெளுக்கும்பாரே. ௫௫௫

பாரேதான் துருசதுவுமொன்றேயாகும் பாங்கானலிங்கமது வொன்றேயாகும், சீரேதான்சூதமது ஒன்றேயாகும் சிறப்பானகார மதுஒன்றேயாகும், நேரேதான் எலிக்காலின்தழைபிழிந்தே நேர்ப்பு டனே தானரைப்பாய் நாலுசாமம், தீரேதான்சிமிழ்தனிலே பதனம் பண்ணுதிறமாகமட்டமென்ற பொன்னிற்போடே. ௫௫௬

போடவேமூன்றுபுட மூபிசோலேபொங்கமுடன் தாட்டின்மே ல்லேசாய்பூசி, தேடவேபூங்காவி தன்னிற்போடு தெளிவாகமாற்றது வுமொன்பதாகும், நீடவேயுருகிப்பார் மாற்றேகாது நிலையானபுட் டித்துக்குவலுத்ததங்கம், சாடவேமட்டமது பழுப்புமாகாசாங்கமுட ன்பசும்பொன்னிற் போடக்கேளே. ௫௫௭

கேளேதானிவ் வேதைசிடிகைவேதை கெணிதமுடனுதாக்கள் செய்யும்வேதை, கோளேதான்வாறுதுகுருவின்மார்க்கம்கூறுவேன் னின்னமொரு மார்க்கம்பாரு, தானேதான்வுப்பினிட செந்தூரத்தை தாக்குடனே செய்வதற்கு தகமைகேளு, வீணேதான்செந்தூரப்போ க்குஞ்சித்தர் வீணிலே சொல்லியல்லோ மறைத்தார்தாமே. ()

## உப்புசெந்தூரவேதை.

தாமானவுப்பதுவுஞ்சேர் தாமொன்றுதாக்கானதுருசதுவும்சோ தான்காலாம், வாகானதும்பமென்ற பூண்டினாலே வகையுடனேதா னரைப்பாய்நாலுசாமம், காமானபில்லையது தட்டிமைந்தா கருவாக கவிதனிலேகாயவைத்து, நாமானவோட்டிலிட்டுச் சீலைசெய்துநலமா கப்புடம்போடக்கட்டிப்போமே. ௫௫௯

ரூபம்வேண்டும் வேதாந்தத்தாயினது வருமேளவேண்டும், நித்திலங் கும்பதாம்புயத்தின் சூட்சங்காண நிலையானவாசிவழியறிவாய்தானே

## கெந்தகக் களங்கு.

தானானகெந்தகத்தின்மார்க்கங்கேளு தயவானகெந்தகமும் களஞ்சியொன்று, வேனானதங்கமது களஞ்சியொன்று வெழிலானவேலனிட பிசினிதன்னால், பானானகெந்தகத்தின் மேலேயப்பா பாகமுடன் சத்தியல்லோவங்கிபூட்டி, தேனானதேனதுவுந் தானெடுத்து தெளிவுடனேகாரமதை பொரித்துப்போடே. ௬௭௮

போட்டுமேசாம்பிராணி பூரந்தானும் பொங்கமுடன் களஞ்சியதுசெப்பக்கேளு, தாட்டிகமாய்தேனதிலே யரைத்துமைந்தா சாங்கமுடன்கெந்திக்கு வங்கிபூட்டி, நோட்டமுடன்சுடராவி தீபந்தன்னில் நோக்கமுடன்றான்கொளுத்தி யெடுத்துப்பாரு; வாட்டமுடன் கெந்தியது தங்கஞ்சேர்த்து வாகுடனேகளங்கமது போலாம்பாரே.

பாரேதான்கனங்கமது வுருக்கிப்பாரு பாகமுடன்பிரிதீவின்களங்குமாகும், சீரேதான்களங்கெடுத்து மன்னுகேளு. சிறப்பானவெள்ளிசெம்பில் பத்துக்கொன்று, நேரேதான்றானுருக்கி கொடுத்துப்பாரு நோனமாற்றதுவு மாறுகாணும், வேரேதான்கரியோட்டி லூதிப்போடு வெளுமையாம்பசும்பொன்போல் தோற்றுந்தானே.

தோற்றவேபின்னுமந்த பொன்னைத்தானும் தோராமல்வாரடித்து புடத்தைப்போடு, மாற்றலென்றதிறைசவுடு களிம்புமேகி மன்னவனேபொன்னதுவும் பசுமைகாட்டும், நாற்றமென்ற செம்பதுவுங் கொஞ்சம்நிற்கும் நாயகனேபுடத்துக்கு மேகாதப்பா, கூற்றனென்னும்வங்கமது கொடுத்துவூத கொற்றவனேசவளையது பசும்பொன்னாமே ௬௮௧

பொன்னானபொன்னுக்குச் சரிநேர்தங்கம் பூட்டடாயெடைக்கிடைதான் தங்கஞ்சேரு, மன்னுகேள்மாற்றதுவு மெட்டரையுமாகும்மகத்தானபொன்னதுவும்சிவப்புமெத்த, தென்பொதிகைதனில் வாழும் சித்தர்பாவும் தெளிந்துமேகெந்தகத்தின் மார்க்கங்கொண்டார், வின்னமில்லாபொன்னதுவும் சித்தர்வேதை விருப்பமுடன்பாடிவைத்தேன் காண்டமேழே. ௬௮௨

## வேதவியாசர் பாஷாணமெழுகு.

காண்டமாமின்னமொரு கருமானங்கேள் கருத்துடனே யாமுரைப்பேபா மாணுகேளே, தீண்டாதபாஷாணம் சேர்தான்வாங்கி திற

மானகொடிக்கள்ளிச் சார்தானப்பா, மாண்டுமேபாஷாண மெண்ணே போக மாற்கமுடன்சுருக்கதுவு மெட்டுசாமம், ஆண்டதுவும் நூறு வயதானவேம்பு அப்பனேபட்டையது சிவிக்கொள்ளே. சுஅந

கொள்ளவேபட்டையது தயிலம்வாங்கிகொப்பெனவேதயிலமது சுறுக்குதாக்கு, விள்ளவேசுருக்கதுவு மெட்டுசாமம் விருப்பமுடன் ரூன்கொடுத்து எடுத்துப்பாரு, மெள்ளவேகட்டியது புகையடங்கி மேன்மையுடன் பாஷாணமிருக்கிக்காட்டும், தள்ளவேசிவனரின்வேம் புதானும் சாங்கமுடன்சுருக்கிட்டு நீற்றிப்போடே. சுஅச

நீற்றியபின்னாலிவெல்லாம் வெளிபோகாமல் நேர்பாகச்சட்டியால் மூடிப்போடு, ஆற்றியபின் மருந்தெடுத்துக் காயப்போட்டுஅப்பனேமறுசீலைக் குள்ளேவைத்து, சாற்றியபின்முன்போல நீற்று நீற்றுச் சாதகமாய்பதினொருக்கால் நீற்றுநீற்று, மாற்றியபின் மருந்தெடுத்து அண்டோட்டிவிட்டு வளமாகமேல்மூடி சீலைசெய்யே.

செய்திட்டுவைந்தெருவில் புடத்தைபோடு திரமாகச்சவர்க்காரச்சுன்னமாகக், கொய்திட்டசித்தரெல்லாம் வழலைதன்னைக் குவிர்தபடி சொல்லாமல்மறைத்துப்போட்டார், உலத்திட்டுப்பிள்ளைகள்தன்னைப்பார்த்து வுலகத்தோர்கரிகொள்லகாகில்லாமல், எய்திட்டு ஏங்கியேவறுமைபூண்டு இறந்திறந்துபோனவர்கள் கோடிதானே. சுஅசு

தானென்றநூல்பார்த்துவுலகவாதி தனித்துமேமனம்புண்ணாய் வெறுமையுற்று, வாவென்றவுலகத்தோர் சிரிக்கக்கேட்டுமருட்கொண்டபிசாசுபோல் வாயுலர்த்தி, ஊனென்றசொத்துக்குமிடமில்லாமலூண்பாரையுடுப்பாரை பார்த்துசங்கி, நானென்ற ஆணவத்தால் கெட்டோமென்று நாய்போலதிரிந்துமண்ணுள் மாளுவாரே, ()

மாளாமலிருக்கவல்லோ வழலைதன்னை மறையாமல் சொல்லிவிட்டே னேழாயிரத்துள்ளே, கோளானசீஷருக்கு நூலியவேண்டாங் கொடுத்தாக்கால்ரவிகோடி நரகமெய்தும், தாளானஎன்னூலில் வழலைதன்னைச் சாற்றினேனொருசொல்லுந் தவறில்லாமல், நாளான அம்பாத்துக் கொப்பாய்ச்சொன்னே னுதாக்கள்பதமறியச் சொன்னேன்காணே.
சுஅஅ

காணப்பாபுடம்போடவழலைதன்னைக் கடுங்காரச்செயநீரில் தோய்த்துப்போடு, பூணப்பாஏழுநாள் ரவிற்போட்டுப் போானசுன்ன

மென்ற குகையினூது, தோணப்பா எடுத்தூடனே பூப்போல்நிற்குந் தொடுகுறிபோல் சரக்கையெல்லாந் துடியாற்கொல்லுங், வீணப்பா கெடுக்காதே என்னூலைப்பாரு வேதாந்தமாயினைதத்தான்பூசிப்பாயே

## பூரச்சுன்னம்.

பூசித்துவழலையைத்தான் சுன்னம்பண்ணு புத்திகெட்டவாதிகளே மற்றொன்றாகா, நேசித்துவழலையினி லுப்பைக்கட்டு நிலைத்தபின்புபூரணத்தைச் சுன்னம்பண்ணு, ஆசித்துப்பூரத்தால் தாளகத்தைப்பண்ணு அதிதமாந்தாளகத்தால் வங்கத்தைநீற்று, வாசித்து வாலைதனைப் பார்த்தாலாமோ வாதமென்ன கொஞ்சத்திலாமோ சொல்லே. ௯௯0

சொல்லென்றவங்கத்தில் துரிசதனைநீற்றுதுரிசியினுல்சிங்கிபண்ணுகூதங்கட்டு, மல்லென்றசூதத்தால் காயசித்தி மக்களேகெவனத்திலெட்டெட்டுஞ்சித்தி, அலலென்றகேழ்வியினால் வாதஞ்சுட்டுஆற்றுமல்பொய்யொன்றா லென்னசொல்வேன், நில்லென்றா லெறிந்தகல்லும் நிற்குமோசொல் நிர்மூடவாதிகளே வழலைநீபாரே. ௯௯௧

பாரென்றவழலையென்ற கன்னமொன்று பரிவாகச்சுன்னமொன்று கூட்டியாட்டே, நேரென்றசலமாகுஞ் சலத்தினுள்ளே நேர்ப்பாகக்கற்பூரம்வாரியிட்டுக், காரென்றாவியில்வைத்துவுப்பாய்பண்ணிக் கடுகஐந்துசுண்ணமதில் வைத்துவூற்ற, நூறென்றமல்லிகைபூப்போலாஞ்சுன்னந் துரிசானசாரயிடை சுண்ணங்கூட்டே. ௯௯௨

## சாரநீர் வுப்புக்கட்டு.

சாரமிடசெயநீரும் வீரம்போட்டு தயங்காதகல்லுப்புச் சூடன்தானும், ஆரமிட்டவெடியுப்பு சீனக்காரங் ஐந்தையுந்தான் வகைக்கிரண்டு பலமேகூட்டி, காரமிட்டசெயநீரு லரைத்துருட்டிகடுரவியிற் போட்டுவர தினந்தானேழு, தாரமிட்டசுண்ணம்பு போலேயாகுந் தயங்காதகுழம்புபோல் பண்ணிக்கொள்ளே. ௯௯௩

பண்ணியதோர்குழம்புக்குள் பாறையுப்பு பலம்பத்து நிறுத்தெடுத்து பாக்குபோல, ஒண்ணியதோர் குழம்புக்குள் பிசரிவாட்ட உற்றுநன்றாய் குழம்பையெல்லாம் பிரட்டிபோடு, நண்ணியதோர் தியிற்குள் மூதிரவாட்டி நலமானவுவர்மண்ணும் கிளிஞ்சினீறும் கண்ணியதோரமுரிவிட்டு பிசைந்துகொண்டு கடுகவேகீழ்மேலு மடைபோல்மூடே. ௯௯௪

முடியேசட்டியிலேயிட்டுநன்றாய் மூடிந்தபின்பு அன்பதெருவடுக்கிப்போடு, நாடியேகுளிர்ந்தபின்பு எடுத்துப்பாரு நலமான தங்கம்

போலிறுகிக்கட்டும், சூடியேகவசமெல்லாந் தள்ளிப்போட்டு துடியானகட்டுகொடி யில்லைவாங்கித், தேடியேபழச்சாறு விட்டரைத்து திறமாகக்கவசித்து புடத்தைப்போடே. ௬௯௪

புடம்போட்டுவுப்புமணி பார்த்தால்மக்காள் பேருனமுத்துமணி போலக்காணும், விடம்போட்டசிவன்வந்து நிர்த்தஞ்செய்வார் வேதாந்தமாயிங்கே யட்டசித்தியாவாள், தடம்போட்டநிராதார வெளியுஞ்சொல்வாள் சதாநித்தம்குருபதத்திற் சரணம்பண்ணி, வடம்போட்டுயுப்புமணி செபித்தாலையா மகத்தானசித்தியுமா மாட்டிப்பாரே. ௬௯௫

உப்புபாத்திரம்.

மாட்டிப்பார்மெழுகாலே கிண்ணிபண்ணிமண்கட்டிமெழுகதனை தள்ளிப்போட்டு, ஊட்டிப்பாருப்புருக்கி யதிலேவார்த்துஉத்தமனே உப்பினுடகிண்ணிதன்னில், தீட்டப்பாரடித்தூரில்சீலைசெய்து சிறப்பானவாலுகையின் மேலேவைத்து, வாட்டிப்பார்சூதமது சிறங்கை விட்டு மயிற்கொன்றைச் சாற்றினால் சுருக்குப்போடே. ௬௯௬

சுருக்கிடவேசூதமது வெண்ணெய்போலாந்துடியானசூட்டனுட தீயில்வாட்டி, உருக்கிடவே சரண்டிதனி லெண்ணெய்குத்தி யுருக்கமணிபோல்நின்றுடுங்கரியினுள்ளே, உருக்கிடவேசெம்பட்டில் தாழ்வடமாய்கோர்த்து உத்தமனேஐந்தெழுத்து மெட்டெழுத்திமோதி, நருகிடவேமனோன்மணித்தாய் முன்வந்துநிற்பாள் நாடினதெல்லாஞ் சொல்லி ரட்சிப்பாளே. ௬௯௭

ரட்சிக்கவுப்பைநன்றாக்கட்டிபாடு நாதாந்த வழியைத்தான் முன்னேபண்ணு, பட்சிக்கச்சூதத்தைச் செந்தூரம்பண்ணு பார்க்கவே வேணுமென்றால் சாரணையைத்திரு, குட்சிக்குள்வாயுவெல்லா மறுத்துத்தள்ளு குடிலமாம்நாகத்தில் வழிவாங்கு, பிட்சையெடுத்துண்ணுமவிருமபாட்டிப்பாரு பெண்மாயனைப் கைதனையறுத்துப் பின்பாய்நில்லே. ௬௯௮

நில்லென்றால்வாழ்வுனக்கு நிற்குமோடா நேராகவழியை துசிக்கிணைக்கால், அல்லென்றகுபேரனைப்போல் வாழ்வுண்டாகுமாதித்தனுள்ளளவுமுண் டுடுக்கலாகும், கல்லென்றகல்லுப்பு கட்டிற்றானால் காரமாஞ்சூதத்தை கவ்விக்கொல்லும், மல்லென்றசூதத்தி லெட்டெட்டுஞ்சித்தி வாய்வினாராய்த்திரிந்தால் மண்ணுய்ப்போமே ()

போகாமலுப்பைமுந்திக்கட்டியுண்ணு பொய்யொன்றுஞ்சொல்லாதேபுகழாய்பெண்ணே, ஏகாதேமனதுதன்னிலிச்சியாதேயெவ்வுயிருந்தன்னுயிர்போ லெண்ணிப்பாரு, வேகாததெதிஎன்று பாருபாரு

வேளியோடே மனத்திருந்தியொன்னப்பாரு, பாகாமல்வாசிபைத் தான்மூலத்திலுன்னு பராபரியைப்பூசித்துப்பானம்பண்ணே. ௭00

பானமென்றால் வெகுபிரிய மென்தாய்க்கப்பா பரிவானசுத்தி யொடுபலகாரமன்னம், ஊனமில்லாபுட்பமொடுவைத்துபூசி வுயர்ந்த மணிதாயார்க்குஊட்டிப்பின்பு, தானமென்றகுருவுக்குவுடல்பொரு ளுமாவி தயவுடனேகுருவுக்குத்தாரையூற்றி, வாவென்றமூலத்தில் வாசிபைத்தான்மூட்டி சிவசிவாவென்றுசொல்லிபாணம்பண்ணே.

பண்ணவேபோகமுனிஏழாயிரங்கோர்வைபாடினேன் சித்தர்க் காமென்றுசொல்லி, திண்ணமுடன்வயித்திபத்தின்சார்புநூலை திரட் டிவைத்தேனிந்நூலுக்குறுதிமெத்த, வண்ணமுடன்செய்பாகம்மறிந் துசெய்தால் வலுவானநோயகன்றுபுனிதனுவாய், எண்ணமுடன்கா வியமாய்ச்சத்தகாண்டம் இபற்றினேனேழாயிரக்காண்டந்தானே. ()

லிங்கக்கட்டு

தானனவின்னமொருகருமானங்கேள் தாக்கானலிங்கமதுபலந் தானப்பா, வேனைகட்டியொருலிங்கத்திற்கு வேகமுடன்முலப்பா லில்சுறுக்குசாமம், கோனைசங்கன்சார்பலங்கார்சாமம் குழிப்புட னேசுறுக்கிடவேகட்டிப்போகும், காளைமேற்போக்குமின்னங்கேளு கருவானவழிஞ்சியிடதயிலம்வாங்கே. ௭0௩

வாங்கியேலிங்கமதுசுறுக்குத்தாக்க வரிசைபெறலிங்கத்தின்குந ந்தானும், தேங்கியேயுள்ளடக்கியிறுகிக்கட்டும் தெளிவானகெந்திய துபுகையடங்கும், ஒங்கியேலிங்கமதுகட்டிற்றானல் ஓகோகோநாதாக் களதிகமென்பார்,ஏங்கியேதிரியாதேமன்னுபாரு எழிலானலிங்கமது யிறுகிப்போமே. ௭0௪

போமென்றுவிடுகாதேபுகலக்கேளு புத்தியுள்ளபாலகனேயின் னஞ்சொல்வோம், தாமென்றமேதியின்பால்கற்றாழம்பால் தயவாகச மனிடையாயெடுத்துக்கொண்டு, காமென்றலிங்கமதைசுறுக்குதாக்கு நாயகனேலிங்கமதுவுருக்குபோலாம், காமென்றலிங்கத்துக்கங்கிசொ ல்வேன் கருவானதாம்பரத்திற்களங்குசெய்யே. ௭0௫

செய்யவேகளங்குடனேசூதந்தானும் சிறப்பானசிங்கியுடன்தா ரங்கூட்டு, பையவேஅரைப்பொடியுங்கூடச்சேர்த்து பாகமுடன்நிம் பழத்தின்சாற்றாலாட்டி,பெய்யவேசோடசமாம்பங்கதாக்கி பேரான லிங்கத்தின்மேலேபூசி, துய்யவோவிதனிலேகாயவைத்து துப்புரவா ய்சுண்ணம்புசீலைமாட்டே. ௭0௬

மாட்டிவேடமிப்புடமாம்தன்னிலிட்டு மயங்காதேமன்னவனே
பெடுத்துப்பாரு, தாட்டிகமாய்சோடசயாய்புடந்தானப்பா சாங்கமு
டன்முன்சொன்னபடியேபோடு, நீட்டமுடன்லிங்கமதுவுருகிக்கட்
டும் நெடுங்கம்பிலிங்கமதுவுருகிப்பாயும், வாட்டமுடன்செந்தூரஞ்
செய்தாயானால் வாகானவேதைமுகங்காணலாமே. எ0எ

காணலாம்சதகோடிசூரியன்போல்தாக்கானபிரகாசமானசோதி,
நீணவேலிங்கமதுவென்னசொல்வேன் நிலையானகவனசத்திகுளிகை
யென்பார், தோணவேமதியுடனேயேழுங்கூட்டி தோராமல்செம்பது
வுமூன்றுங்கூட்டி பூணவேதங்கமதுவொன்றுகூட்டிப் புண்ணியனே
மூசைதனிலுருகிடாயே. எ0அ

உறுக்குமுகந்தானறியார்மூடர்பாதி வுலகுதனில்மெத்தவுண்டு
வுரைக்கக்கேளு, நெருக்கமுடன்லோகமதுவுருகும்போது நேர்புட
னேகுறுவொன்றுதன்னையீவாய், தெறுக்கமுடன்கண்விட்டு ஆடும்
போது தோரானகாரமதைபின்னுமீவாய், செறுக்குடனேகரிபோலயி
ருக்கும்பாரு செம்மைபெறவோட்டில்வைத்துவூதிப்போடே. எ0கூ

போடவேமூன்றுமுறைவூதிப்போடுபொன்னவனேபொன்போ
லேமாற்றுகாணும், நீடவேமாற்றுலுகாணும்பாரு நிலைத்துதடாவாத
வித்தைநிசமதாச்ச, கூடவேதங்கமதுவொன்றுகூட்டி குறிப்பாகவார
டித்துப்புடத்தைப்போடு, ஆடவேசீவனத்துக்கிடமேசென்று அப்ப
னேயுறுந்தவசில்நின்றிடாயே. எ௧0

நிற்கையிலேவாணிவந்துதிர்த்தஞ்சொல்வாள் நிராமயத்தின்சோதி
யதுசொரூபந்தோன்றும், துற்கையென்னுங்காளியவளொதுங்கிநிற்
பாள், துரைராசசுந்தரன்போல்சித்தனாவாம் பற்குணன்போல்வீரா
திவீரனாவாய், பாருலகில்வுன்னையொருரிஷியாமென்பார் அற்பமெ
ன்றுநினையாதேவருள்மைந்தாகேள் அறுந்தவசில்நிலைதனையே நாடிக்
கொள்ளே. எ௧௧

கொள்ளையிலேகுருவர்க்கஞ்சிழனென்பார் குவலயத்திலுன்மகி
மைகாணமாட்டார், தெள்ளுதமிழ்வடமொழியைப்பிரித்தாராய்ந்து
திரட்டிவைத்த மாணுக்கனென்பார்கண்டீர், புள்ளிமயிலேறுஞ்சுப்ர
மணியன்சுவாசம் பூரணத்திலிருகலைகள் அறிந்துநன்றாய், பள்ளுதமி
ழ்நாடகத்தைப்பற்றுமற்றோன் பாருலகிலிருப்பவன்சித்தனாமே. ()

சித்தனைப்பிறந்தாலும்பிறக்கவேண்டும் சின்மயத்தின்சுடரொ
ளியைப்பற்றவேண்டும், பத்தனாயிருந்தாலுமென்னலாபம் புரியாகக

மிழுதனையகற்றவேண்டும், முத்தமிழில்வல்லவரா யிருக்கவேண்டும் மூதுலகில்கீர்த்திதனை யடையவேண்டும், வித்தகனாகத்தியற்குச்சீடனாக விண்ணுலகிலிருப்பவனே யோகிபாமே. ௭௧௩

யோகமென்றால்யோகமதை நிறுத்தவேண்டும் யோகத்தினிராமயத்தைபரியவேண்டும், போகமெனுமாய்கைதனையொழிக்கவேண்டும்பொங்கமுடன்பேரின்பந்தேடவேண்டும், சாகமுடனிருப்பதற்கு கற்பம்வேண்டும் சட்டமுடன்சமாதிநிலை யறியவேண்டும், வேகமுடன்காயமதைநிறுத்தவேண்டும்வெட்டவெளியம்பரத்தையூனிப்பாரே

பார்க்கையிலே ஞானமது வந்தாற்து பாரினிலே பரிசனங்கள் கெட்டார்கோடி, தீர்க்கமுடன்பொய்வேடங் கொண்டுமல்லோ திறமுடனேயோகமதைக் கண்டோமென்பார், நாக்கமலபீடமதில் வீற்றிருக்கும் நாதாந்தமனோன்மணியைக் கண்டோமென்பார், ஏர்க்கமுடன்பொய்யாதுமிகவும்பேசி எழிலானசாத்திரத்தை யறியார்தாமே.

அறியாதமுழுமக்க ளனேகம்பேர்கள் அவனிதனில் கும்பகும்பலாகக்கூடி, நெறியானவழிதனையே கடந்து நித்தம் நேர்புடனே மதியழிந்துபோனார் கோடி, குறியானசாத்திரத்தை விட்டுவிட்டு குவலயத்தில் கெட்டவர்கள் கோடாகோடி, முறியனைப்போலவாய் பினத்தல் மிகவும்பேசி மோசமுடன்பாலவழிக்கேகினாரே. ௭௧௬

ஏகினொன்றனுமே யாமறிந்து யெழிலுடனேகாலாங்கி நாதர் தம்மை, பாகமுடன்றான்வணங்கி பணிந்துபோற்றி பதாம்புயத்தை என்னாளும் மனதிலுன்னி, வேகமுடனடியேனும் பலநூல்பார்த்து வெளியானகருக்குருவும் வுரைக்கவெண்ணி, போதமெனும்பெருநூலேழாயிரத்தில் பொங்கமுடன்பாடிவைத்தேன் கருக்கள்தானே

தானான பெருநூலேழாயிரத்தில் தாக்கான காண்டமிது மூன்றாங்காண்டம், தேனான குருமொழிகளனந்தமுண்டு தேசத்தில் பரிபாஷைபனேகமுண்டு, மானான மறைப்புமுதலுளவுமெத்த மண்டலத்தில் கண்டவரும் விண்டோரில்லை, கானனகாலாங்கி நாதர்தாமும் கனகமெனும் நவமணிபோல் கருதினாரே. ௭௧௮

கருதினார்வடியேனுங் கண்டோராய்ந்துகாசினியில்மானிடர்களறியவேண்டி, கருதியெனும்பிரணவத்தை சினத்தார்க்குசூட்சமுடன்காட்டவென்று அடியேன்தானும், பருதியெனுகுளிகை தனைப்பூண்டுகொண்டு பரந்தேனே சீனபதிக்கடலோரந்தான், உறுதிபுடனப்பதியிலிரங்கியானும் ஓகோகோவெகுகாலமிருந்திட்டேனே. ௭௧௯

இருந்திட்டேன் கோடிவரை யுகாந்தகாலம் யெழிலானசூட்சா தினித்தையாவும், திருந்திடவேசினபதி யுலகுள்ளோர்க்குதிட்டமுட ன்கைமறைப்புயாவுஞ் சொன்னேன், பொருந்திடவே யவர்களிடஞ் சேர்ந்துயானும்போகித்தேன்வெகுகோடிகாலமப்பா, செருந்திடவே போகமதுசெய்ததாலே சிறப்பானபோகனென்றுபேருண்டாச்சே

ஆச்சப்பா யென்னைப்போல்பெயருள்ளார்களப்பனேவையகத் திலாருமில்லை, மாச்சலென்னும்நவகோடி ரிஷிகளுண்டுமாநிலத்தில்ப் தினெண்பேர் சித்தருண்டு, கூச்சலென்னும்திருமூலவர்க்கத்தார்கள் கோடானகோடிபே ரனந்தமுண்டு, மூச்சடங்கி மாண்டசித்தர் கோ டாகோடி முறைமையுடன் சமாதிதனில் கோடியாமே. எ௨௧

கோடியாஞ் சமாதிதனிலிருந்தோர்மெத்த கூறவேமுடியாது வலயத்தில், தேடியேசமாதிநிலை கண்டாராய்ந்து தெரிசனைகளில்லா மல் மாண்டார்கோடி, நீடியேசாத்திரத்தைப்பாராமற்றான் நெறிதப் பிமாண்டவர்கள் கோடாகோடி, நாடியேகாலாங்கிநாதர்பாதம் நான் பெற்றேன்கோடிமுறை வுண்மைதானே. எ௨௨

தாமான ராஜரெல்லாம் தாரணியில்தலைமாறி நூலைப்பார்த்து, சாமானகருக்களெல்லாங்காணுமற்றான் சார்பானநூல்படிக்கேவகை யுங்கேட்டு, சாமானதலையேடுங் கடையேடுந்தான் காணுமல் மதி கெட்டு மூப்பைவிட்டார், நாமானபடியாலே யுளவறிந்து நாதாக்கள் கைமறைப்பைதெளியிட்டேனே. எ௨௩

வெள்ளிசெந்தூரம்.

இட்டேனே யின்னமொரு மார்க்கங்கேளு யெழிலானமதிதனை யோராவிமைந்தா, சட்டமுடன் பலமதுதானிறுத்துக்கொண்டு சாங் கமுடன்கெந்தியதுகாலதாக, கிட்டமென்றசிட்டமது காலுங்கூட்டி கவனமென்றகூதமது சரியாய்ச்சேர்த்து திட்டமுடன் வேங்கையது தயிலத்தாட்டி திரத்துடனே நாற்சாமமரைத்திடாயே. எ௨௪

அரைத்துமேயில்லைதட்டி காயவைத்து அப்பனேயோட்டிலிட் டுச்சீலைசெய்து, திரைப்புடனோவிமுகத்தில்காயவைத்து திரமுடன் மணல்மறைவிற் புடத்தைப்போடு, முறைப்படியேமண்லாரியெடுத் துப்பாருமூதண்டசெந்தூர மென்னசொல்வேன், குறையாமல் பத் துபுடமிப்படியேபோடு குறியானசெந்தூரம் சிவப்புமாமே. எ௨௫

ஆமேதான்செந்தூர மருணன்போலாம் அப்பனேபுடம்போட சிவப்புமெத்த, வேமேதான்முறையோடுசெய்தாயானால் விண்கொள்

ளாவேகமதுவீரங்காட்டும்,போமேதான்செந்தூரம்வெள்ளிசெம்பில் போக்கோடுமுறையோடுங் கொடுத்துப்பாரு, நாமேதான்சொன்ன படியோட்டில்வைத்து நலமாகவீதிடவேபசுமைதானே. எஉசு

தானனபசுமையதுமிடைதானிற்கும் தாக்கானசெம்பதுவுமற் றும்போகும், வேனனதங்கமதுநாலுக்கொன்று விருப்பமுடன்வாா டித்துப்புடத்தைப்போடு, தேனனபொன்னதுவு மாற்றெட்டாகும் தெளிவானபுடத்துக்குஉறுதிதங்கும்,கோனனயெனதையர்காலாங்கி நாதர் குருபரன்றன்முறைப்படியேகூறினேனே. எஉஎ

கூறினேன்வெள்ளியென்றசெந்தூரத்தை குணமானதிரிகடுகு சூரணத்தில், மீறியேவனுபானமறிந்துகொள்ள மிக்கானரோகமெல் லாமகன்றுபோகும்,சீறியேமேகமென்றபிணிகள்போகும்சிவப்பான தேகமதுவண்டுபோலாம்,- மாறியேவாசியதுகீழ்நோக்காகும் மகத் தானரோகமெல்லாமகன்றுபோமே. எஉஅ

அகன்றுபோம் வாயுதென்றவென்பதும்போம் அப்பனேகச ரோகமகன்றுபோகும், தகன்றுமேமேல்மூச்சுகாணுதோடும் தாக்கா னவாய்நூரல்விட்டுப்போகும், புகன்றமேசில்விஷங்கள்காணுதோடும் புகழுடனேமதிமயக்கம்பொருமியோடும், சகன்றுமேபாண்டுவகை போகும்போகும் சார்பானமேவிளைப்புதீர்ந்துபோமே. எஉகூ

தாளகக்கட்டு.

போமேதாமின்னமொருமார்க்கம்பாரு பொங்கமுடன்தாளக மும்பலமொன்றாகும், தாமேதான்துருசதுவும்பலமொன்றாகும் தா க்கானசுருள்ளிச்சாற்றினாலே,வேமேதான்தாளரைப்பாய்நாலுசாமம் விருப்பமுடன்மைபோலயாட்டிமைந்தா, நாமேதான்சொன்னபடி கலசம்செய்து நலமாகரவிதனிலேகாயப்போடே. எஙo

போடவேசுண்ணம்புச்சிலைசெய்துபொங்கமுடன்கல்வமதிலிட் டுமைந்தா, நாடவேமேல்வாய்க்குசிலையேழு நலமாகரவிதனிலேகாய லைவத்து கூடவேபத்தெருவிற்புடத்தைப்போடு கொற்றவனேபுட மாறிஎடுத்துப்பாரு, தேடவேதாளகமுங்கட்டிப்போகும் தெளிவான வங்கமதுதிரளுந்தானே. எஙக

தானனதாளகமும்வங்கமானால்தாக்கானகுருவுக்குதற்காலந்தா ன், வேனனசெம்புக்குநாலிலொன்று விருப்பமுடன்றான்கொடுத்து ஊதிப்போடு, பானனசெம்பதுவுங்கட்டிப்போகும் பாங்கானவூரலது

யேகும்பாரு, தேனானமனேனல் மனியாள்கித்தரூபி செம்புக்குபுடம்
போடசுத்தியாமே. எ௱௨

சுத்தமாஞ்செம்புக்குவெள்ளிகாலு சுகமுடனேசெம்பதுவுமொ
ன்றேயாகும், முத்தமுடன் தங்கமதுவொன்றேபாகும் முபலானமூ
சைதனிலுருககிப்பாரு, சித்தமுடன்வாரடித்துப்புடத்தைப்போடு
தெளிவானமாற்றதுவுமதிகங்காணும், பத்தமுடன்புடத்துக்குவுறுதி
தங்கம் பாலகனேசித்தர்செய்யும்வேலையாமே. எ௱௩

## தாளகக்கட்டு.

வேலையாமின்னமொருபாகங்கேளு வேடிக்கைசிமிட்டிவித்தை
வாதம்பாருபாதையாம்தாளகமும்தலமொன்றாகும் பாங்கான துரிசி
யதுபலமொன்றாகும், காதையாம்பேயத்திப்பால்தானப்பா பாலகனே
பாலதுவைகட்டிக்கேற்றிசாதகமாரவிமுகத்தில் துலைத்துப்பாலாசா
ங்கமுடன்வுமிநீராலரைத்திடாயே எ௱௪

அரைக்கயிலேமெழுகதுபோ லாகும்பாரு அப்பனே துரிசிக்குக்
கவசங்கட்டி, கிரைக்கையிலேமூன்றுபுடமிப்படியேபோடு நிலையான
தாளகமுமுருகிக்கட்டும், திணக்கவே துரிசிக்குச்சரிநேரொக்க திற
மானவீரமதுகோரதாக,முறைப்படியேவுமிநீராலரைத்துமைந்தா மூன்
போலபுடம்போடக்கட்டிப்போமே. எ௱௫

கட்டியதோர்படமதுவும்பத்தேபோடு கருவானதாளகமுமடிந்
துகொல்லும், திட்டமுடன் தாளகத்தைக்கொடுக்குமார்க்கம் தீர்க்க
முடன்செப்புகிறேன்மைந்தாகேளு, மட்டமுடன்பொன்னாகச்செய்
வதற்கு மயங்காதேவெள்ளிசெம்பிலபத்துக்கொன்று, வட்டமுடன்
றூருருக்கிகுருவொன்றீய வாகுடனேகரிபோலயிருக்கும்பாரே.

பாரேதான்கரியோட்டிலூதிப்போடு பாகமதாய்செம்பதுவும்
நீங்கியேதான், நீரேதான்வெள்ளியதுமாற்றுகாணும் நிலையானபொ
ன்னதுவுமாறுமாகும், சேரேதான் தங்கமதுவொன்றுசேர்த்து சிறப்பு
டனேவாரடித்துப்புடத்தைப்போடு, கூரேதான்பொன்னதுவுமெட்
டுமாகும் குணமானபிறவியதுவாகுந்தானே. எ௱எ

தானனதங்கமதுபசுமைகாணும் தாக்கானபொன்னதுவுஞ்சிவ
யோகிக்காம், வேனனபொன்னதுவும்ரிஷிகள்சித்தர் விருப்பமுடன்
றூன்செய்யுமதீரவித்தை, கோனனகாலாங்கிநாதர்பாதங் குறிப்புட
னேயானவணங்கியதீதங்கேட்டு,பானனமானிடர்கள்பிழைக்கவேண்
டிப் பாடினேன்சத்தகாண்டம்பண்பாய்த்தானே. எ௱அ

பண்பானபோகரிஷியடியேன்தானும் பாகமுடன்செய்துமக்
லோகண்டாராய்ந்து, நண்பான சாத்திரத்தைவிரித்தாராய்ந்துநண்

பான சிவயோக மிருநிகொட்டும், நாதாக்கள் வித்தைநபிது நவிலபோ மோ கண்பானவிதியானி காண்பான்பாரு கைலாச காணிபது லபிக் குந்தாமே. எருகூ

நாகக்கட்டு.

தாமான முன்னமொரு பாகங்கேளு தயவுடனே சொல்லுகிறே ன் தண்மையாக, காயானநாகமொரு பலந்தான்வாங்கு கருவான கு கைபிலிட்டு வுருக்கிக்கொண்டு, பாமானசாரமதை பலந்தான்கொண்டு பதமுடனே கிராசமது தன்னைமீவாய்நாமேதான்சொன்னபடி நாகந் தானும் நயமுடனே கண்ணாவு மடையும்பாரே. எசo

அடைவுடனே நாகமது தன்னையப்பா அப்பனேபில்லைபதுநக டதாக்கி, படையுடனே தாளகமும் சிந்திதானும்பசமுடனே சரியெ டையாயெடுத்துக்கொண்டு, தடையறவே நிம்பழத்தின் சாற்றாலாட் டிதாக்கான நாகத்துக்கங்கிபூசி, சடையுடனேரவிதனிலே காயவைத் துச் சாங்கமுடன் புடம்போடக் கட்டியாமே. எசக

கட்டியாம் நாகமதை யெடுத்துக்கொண்டுகருவாகத்தானுருக்கி பின்னுங்கேளு, திட்டமுடன் வீரமதை நொறுக்கிக்கொண்டு திகழ் பெறவே களஞ்சியது கிராசமீவாய், மட்டியென்ற கண்ணுடி பூநீரப் யாமார்க்கமுடனிருகளஞ்சி பொடித்துக்கொண்டு சட்டமுடன்கிரா சமது கொடுக்கும்போது சார்பானநாகமது சவளையாமே. எசஉ

சவளையாம் நாகமது பின்னுமப்பாசாங்கமுடன்றானுருக்கிபின் னுங்கேளு, கவளமுடன்நிமிளையது களஞ்சிரண்டு கணக்காகத்தானு ருக்கி கிராசமீவாய், தவளமது நாகமதுயென்ன சொல்வேன் தாக் கானமுழுக்கட்டுயெல்லாகும், பவளம்போ லிருக்கியது வுருளை போலாம் பாங்கானநாகத்தின் பான்மையாமே. எசங

பான்மையாம் நாகமதைக் கொடுக்குமார்க்கம் பாகமுடன்சொ ல்லுகிறேன் பண்பதாக, மேன்மையாய்செம்பதுவைதகடதாக்கி மிக் கானசெம்புக்கு கெந்திநாலு, மான்மையாய் பழச்சாற்று லரைத்து மைபோல மபங்காமல் தகட்டுக்குப்பூசிப்போடு, காண்மையுடன்கரி யோட்டில் காச்சிப்போடு களிப்பான செம்பதுவும் கட்டிப்போமே.

போமேதான் செம்பதுவுமூறநீலகி பொங்கமுடன் வரணமது சிவப்புமெத்த, நாமேதான்சொன்னபடிநாகந்தன்னைநாட்டமாசெம் புக்கு நாலுக்கொன்று, வேமடாதானுருக்கி யெடுத்துப்பாரு மிக்கா ணசெம்பதுவுமாற்றுகாணும், தாமேதான்மாற்றதுவு மேழாதாகும் தனியாக விலைமது பிடிக்குந்தானே. எசநி

தானேதான் தகடடித்துப்புடத்தைப்போடு தனியானசெம்பது வுமூட்டங்காணும், மானேகேள்திரைசவுடுகளிம்போடுரல் மார்க்கமு டன்சவளேயதுயெல்லாம்போகும் தேனேதான்பினியதிகம்வூட்டம் காய்ப்பு திகழானபுடாயப்புகாகரப்பு, ஏனேதாளித்தனேயும்பொரு ந்திகிற்கும் பெழிலானபொன்னதுவும்பிறவியாச்சே. எசசு

ஆச்சப்பாபிறவியதௌன்னசொல்வேன் ஆச்சரியமாச்சரியம்வா தவித்தை, மூச்சப்பாவிடுகாதேமற்றோருக்கு முயலானசித்தர்முனி கண்டாராளுல் எச்சப்பாயுந்தனுக்குயிடையூறுண்டா மென்மகனே சாபமதுயெய்தும்பாரு, பேச்சப்பாவாராதுசிடிகைவேதை பேருல கில்நீயுமொருசித்தனுமே. எசஎ

சித்தனும்சிவபூசைக்குறுதிதங்கம் சிறப்பானசமுசாறிக் கேற்ற வேதை, முத்தமுடன்கருவாளிகாண்பான்பாரு மோசமில்லேசாபமி ல்லேமுனிவர்வேதை, கித்தமுமேபூசையதுநேமநிஷ்டை கிலையானதே சத்திலிருந்துகொண்டு, சத்தமுடன்சமுசாரதொல்லேவிட்டு சராசா த்தையொழிப்பவனேயோகியாமே. எசஅ

துருசுகுரு.

ஆமேதானின்னமொருமார்க்கம்பாரு அப்பனேமாணுக்கள்பி ழைக்கவென்று, வேமேதான் துருசதுவும்பலமொன்றுகும் வேகமு டன்முன்போலதானரைத்துப்புடத்தைப்போடு, நாமேதான்சொன் னபடிகூட்டிக்கொண்டு நன்மையுடன்கப்பலாய்ப்பாலேதாக்கே. ()

தாக்கவேநாள்மூன்றுதப்பாமற்றூன் தயவுடனேதுருசுக்கு பா லேயூட்டு, நோக்கமுடன்ரவிதனிலேகாயவைத்து நுணுக்கமுடன்பற் பத்தையெடுத்துக்கொண்டு, தேக்கவேரசமதுவைசரியதாக திகழுட னேநிம்பழத்தின்சாற்றாலாட்டி, தூக்கவேபில்லேயதுதட்டிமைந்தா துப்புறவாய்ரவிதனிலேகாயப்போடே. எடுo

காயவேவோட்டிவிட்டு சீலேசெய்து கருவாகக் குக்குடமாம்பு டத்தைப்போடு மாயரசமதுதான்மடிந்துகொண்றுநயமுடனேகண் டறதுபற்பமாச்சு, தோயவேபின்னுமந்த பழச்சாற்றாலாட்டி தோரு மல்முன்போலப்பில்லேதட்டி, காயவேவோட்டிவிட்டுச் சீலேசெய்து தண்மையுடன் புடம்போடசுன்னமாச்சே. எடுக

ஆச்சப்பாசுன்னமதுயென்னசொல்வேன் அப்பனேகண்கொள் ளாவேதையாச்சு, மாச்சவென்றசுன்னமதை மதியிற்றூக்குமயங்கா தேபத்துக்குளொன்றுபோடு, பாச்சனுடன்வெள்ளியதுயெட்டுகாணு ம் பாகமுடன்வாரடித்துப்பிடத்தைப்போடு, காச்சனுடன்கலாய்ப் புக்குவுறுதிதங்கம் கருவாளிகண்டாலேவிடுவார்தாமோ. எடுஉ

## செம்புரேக்குவேதை.

தாமானவின்னமொருபாகங்கேளு தாக்கானசெம்பென்ற ரேக்குதானும், காமானவேஷங்கள் பூணுவோர்க்குகருவானசினபதிரேக்குதானும், வேமானமானதொருகாந்தஞ்சேர்த்துவிருப்பமுடன்காரமது கூடச்சேர்த்து, பாமானவெள்ளியது சரிநேரொக்க சாதகமாய் தான்சேர்த்து வுருக்கிடவே. ௭௱௨

உருக்கவேசெம்பதுவும் ஒன்றாப்ச்சேர்த்து வுத்தமனேகாந்தத்தின்சத்துசேர்த்து, பெருக்கமுடன்வெள்ளியது வறணமேரிபோன மாற்றதுவுமிகவுமாகி, செருக்கமுடன்வாவியதுகட்டிப்போகும்சிறப்பானவாணிக்குவாறேகாலாம், சுருக்கமுடன்பத்துக்கு ரண்டுதங்கம் தாக்கவேமாற்றதுவுமேழதாமே. ௭௱௪

ஏழானமாற்றதுவு மிருதிகாட்டும் யெழிலானபொன்னதுவும்பசுமைமெத்த, காழானபிறவிபது பென்னலாகுங் கருவானவேதையிதுசித்தர்வேதை, நாழானநாதாக்கள் செய்யும்வேதை நளினமுடன் யாம்சொன்னோ மாண்பருக்கு, கூழான வேதையிது யல்லகண்டீர் கொற்றவனே போகரிஷி கூறினோமே. ௭௱௫

கூறினோம் சினபதிவேதைமார்க்கம் குவலயத்திலாரேனும் கண்டதுண்டோ, மாறினதோர்கருமானமுளவுமார்க்கம்மகத்தானசுளுக்குமுதல்கருவுவேதை, தேறினதோர் கண்கண்டவேதையாவும் திரட்டினேன் பூதலத்தார்க்கென்றுசொல்லி, ஆறினங்கள்பிரவிமுதல்வைப்பெல்லாந்தான் அப்பனேயாமுறைத்தோம் வளமையாமே. ௭௱௬

## இரசவெண்ணெய்.

வளமையாமின்னமொருபாகங்கேளு மகத்தானநாதாக்கள் கூறவில்லை, இளமையாம்போகரிஷிபடியென்றாலும் எழிலாகக்கூறுகிறேன்பற்பதாக, களமையாஞ்சூதமதுசேரொன்றாகும் கனமானகண்டாதுசேரொன்றாகும், தளமையாம் நிம்பழத்தின் சாற்றாலாட்டி தாழ்மையுடன்தானரைப்பாய் சாமமெட்டே. ௭௱௭

எட்டானசாமமதுவரைக்கும்போது யென்மகனேசூதமது மடிந்துமல்லோ, கட்டான்சூதமது வெண்ணெய்போலாம்கசடானகண்டாதுநீங்கியேதான், திட்டமுடன்வெண்ணெயதுகல்வமிட்டுத்திறமாகத் தானரைப்பாய் தகரச்சாற்றால், சட்டமுடன் எண்சாமம்வரைக்கும்போது சார்பானசூதமது வெண்ணெயாமே. ௭௱௮

வெண்ணையாம்சூதமுடன் கருவுமத்தை விருப்பமுடன்பிசறிய
ரைக்கும்போது, கண்மையுடன்வெண்ணையது மடிந்து போகும் கரு
வானராசமென்றவெண்ணையாச்சி, திண்ணமுடன் சூதமதுவெண்ணை
யானால்திறமானலோகத்திலனந்தம்வேதை, கண்ணமுடன் செந்தூ
ரம் பண்ணக்கேளும் கழலானவேதையது கோடியாமே. எ௬௯

கோடியாம்வேதையிலே செந்தூரங்கேள் குறிப்பான கெந்திய
துவரைக்குப்பாதி, நாடியேசிலையதுவுமொன்றுக்குகால் நலமான வீ
ரமது வரிக்காலுக்கொன்று, தேடியேவாறுவகை செயநீர் தன்னால்
தெளிவாகதானரைப்பாய்,நாலுசாமம், வாடியேதிரியாதே மன்னுபா
ரு மாற்கமுடன்றானரைப்பாய் சாமம்நாலே. எ௭0

நாலானசாமமது வரைக்கும்போது நாயகனேசூதமது மடிந்து
சாகும், காலானரவிதனிலேவைத்துக் கனமாகப்பொடிபண்ணிபெடு
டுத்துக்கொண்டு, சாலானகுப்பிக்குச்சீலையேழுசார்பாகத்தான்செய்
துவாயைவிட்டு ,பாலானகுப்பிக்குள் மருந்தையிட்டுப் பாலகனேமா
க்கல்லால் கொண்டுமூடே. எ௭௧

மூடவேகுப்பிக்குச்சீலைசெய்துமூர்க்கமுடன்றான்செய்து ரவியி
ல்வைத்து, நாடவேதளவாயாஞ்சட்டிதன்னில் நலமுடனே பூமணக்
கீழேகொட்டி, தேடவேசட்டிமையந்தன்னில் தெளிவாகக் குப்பிநடு
மையம்வைத்து, கூடவேமணலதனைமேலேகொட்டி குப்புறவாய்மே
ல்சட்டிசீலைசெய்யே. எ௭௨

செய்யவேவாலுகையாமடுப்பில்தானும்சிறப்பாகதீமூட்டி யெரி
ப்பாயப்பா, பையவேஎண்சாமமெரித்தபோது பாலகனேசெந்தூரம
ருணன்போலாம், தொய்யவேசூதமதுசெந்தூரத்தால் தொடரலாம்
கோடிமுறைவேதையாவும், செயபவேசெந்தூரம் பதனம் பண்ணு
செய்பாகம் கைபாகமுறைவிடாதே. எ௭௩

முறையோடுஞ் செய்தாக்கால் எல்லாஞ்சித்தி முறைதப்பிசெய்
தாலோ எல்லமோசம், கரையேறவேண்டுமானால் சூதம்பாரு கண்
கெட்டவாதியானால்சூதந்தள்ளு, பறைபானசூதமதுராசபோசன்பா
ரினிமேல்சூதம்விட்டால் வாதம்போச்சு, நிறைமியாடுசாத்திரங்க ளுள
வாராய்ந்து நிற்பவனேசித்தர்களிலொருவனாமே. எ௭௪

ஒருவனும்பேருள்ளான்ராசியுள்ளான் வுலகத்திலல்லவற்கும்வா
ய்க்கும்மாசொல், பெருமையுடன்வீண்பேச்சு மெத்தபேசி பேருல
கிலாய்போல பினத்துவார்கள் அருமையது கண்டறியமாட்டாரசம்

பா, அப்பனேகரைகண்டமுனிதான்னென்பான், வெருமையாய்வாப் பினத்தல்மிகவும்பேசி வெகுகோடிமாண்டார்கள்மண்ணில்தானே. ()

தானனசெந்தூரம்கொடுக்குமார்க்கம் சாங்கமுடன்சொல்லுகி றேம்தன்மையாக, வேனுனவெள்ளியதுவாறதாகும்வேகமுடன்செம் பதுவுநாலதாகும், கோனுனமூசைதனிலுருக்கிக்கொண்டு குருநனை யேதான்கொடுத்துவூநிப்போடு, தேனுனகரிபோட்டிலூதம்போது தெளிவானபசுப்பொன்னுயாகுந்தாமே, ௭௬௬

தாமானபொன்னதுவு மாற்றுகும் தனியானநங்கமதுநாலுக் கொன்று வாமானமென்றதொருமட்டத்தோடுவகையானபாகமுடன் வாரடித்து, சாமானமானதொருகாவிக்கல்லில் சட்டமுடன்புடம் போடதங்கமாகும், வேனுனவெணதையர்காலாங்கிநாதர் விருப்பமு டன்யான்வணங்கிவிருத்திட்டேனே. ௭௬௭

விரித்திட்டேன்குடவனிலேபத்துக்கொன்று வீரமுடன்தொடு த்திடவேமாற்றெட்டாகும், செரித்திடவேமட்டமென்ற பரிகள்மே லேசிறப்புடனேவுமிரால்செந்தூரத்தை, குரித்திடவேபொன்றகட் டின்மேலேபூச பொங்கமுடன்மாற்றதுவும்பத்தேயாகும், முரித்திட வேசவனேயதுபோலாம்பாரு மூனையானமாற்றதுவுமதேங்காணே.

காணவென்றால்செந்தூரங்குன்றியுண்ண காயாதிகற்பமதுவீறு மெத்த, தோணவேவனுபானமெதுவானாலும் துரையோடுமுறையோ டுங்கொண்டாயானுல், நீணவேதேகமதுகற்றாணுதும் நிலைத்ததடா தூலமதுசாவேயில்லை, வாணவேநாதாக்கள்சொல்லவில்லை வையகத் திலபோகரிஷிவகுத்திட்டேனே. ௭௭௯

வடிதிட்டேன்செந்தூரப்போக்குதானும் வளமுடனேமானுக் கள்பிழைக்கவென்று, தொகுத்திட்டேனின்னம்வெகுமனந்தங்கோடி தோராமல்நூலதனைகண்டாராய்ந்து, பகுத்திட்டேன்சூதமென்றசெ ந்தூரத்தைப் பலபலவாய்பாடிவைத்தார்சித்தரெல்லாம பிருத்திட் டமானதொருமூன்றுங்காண்டம் பிசகாமல்பாடிவைத்தேன்சத்தந் தானே. ௭௭௦

சத்தமுடன்ஏழுவகைகாண்டஞ்சொன்னேன் சாகாமாமிந்நூ லுக்கொருநூலில்லை, சித்தரெல்லாமொன்றாகக்கட்டியென்னை சிறப் புடனேமமதிலடைத்திட்டார்கள், சுத்தமுடன்யடியேனுக்காள்வண ங்கி துரைராஜர்காலாங்கிதனைநினைந்து, பத்தியுடன்வடியேனுமனதி லுன்னி பட்சமுடன்கூட்டமதிற்சென்றிட்டேனே. ௭௭௧

## சித்தர்கள்போகரை அஞ்சலிகேட்குதல்.

சென்றேனேநாதாக்கள்முனிவர்பக்கல் சேனையுடன்ரிஷிகூட்ட மங்கிருந்தார், நின்றேனேநெடுநேரமசித்தர்பக்கல் நினைத்துமேகாலாங்கிதனைநினைக்க, பன்றானநாதாக்கள்முனிவர்சித்தர் பலபேருமென்தனுக்குபாசீர்மித்தர், குன்றானரிஷிமுனிவரென்னைப்பார்த்து கூறுவாரஞ்சலிகள்கோடிதானே. எஎஉ

தானானபோகர்முனிசொல்லக்கேளும்சார்பானசாத்திரத்தியனுளவுயாவுங், கோனானகாலாங்கிதன்பலத்தால் கொட்டினீர்வித்தை எல்லாம்வெளியாய்ப்போச்சு, மானானவித்தையெல்லா மித்தமட்டு மரைப்புடனேவைத்தாலே மதிப்புண்டாகும், வேனானவித்தைகளை விருதாவாக விரைதிட்டால்லோகமெல்லாஞ்சித்தாய்போமே. எஎ௩

போமென்றபடியாலேயினிமேலப்பா பொங்கமுடன்கருக்குருவைவெளிவிடாதே, நாமொன்றுசொல்லுகிறேன்சித்தமாய்க்கேளு நாதாக்கள்சகலரும்பலநூல்சொன்னார் வாமென்றுநூல்களுக்குச்சாபஞ்சொன்னார், வகையுடனேசாபமதைநிவர்த்திசெய்து, தாமொன்றுசெய்தவர்கள்கோடிலொன்று தக்கபடிசெய்தாரனேகருமே. எஎ௪

அனேகராமாண்பர்கள்மெத்தக்கூடி அண்டாண்டசராசரங்கள் திரட்டினார்போல், சினேகரால்சிறுபாலர்யாவுமொக்க சிறப்புடனே கும்பல்கும்பலாகக்கூடி, யனேகமுடன்சாத்திரத்தைகண்டாருய்ந்து சண்டாளர்மருமத்தைவெளியிற்சொல்லி, முனேந்திரனைப்பாபத்துக் கேதுவாகி மூர்க்கமுடன்தவநிலையைக்கெடுத்தார்தாமே. எஎ௫

## கருக்கள்பாயவெட்டையியம்.

காயானகரிவங்கம்சேர்தானென்று சாற்றுகிறேன்மாணாக்கள் பிழைக்கவென்று, வேமானமானதொருசருமாக்கல்லை வேகமுடன் கெந்தியதுசமனாய்ச்சேர்த்து, சாமானமானதொருநிமிளையப்பா சட்டமுடன்கொண்டுவந்துபின்னுக்கேளு, பூமானமானதொருபடிகந்தன்னை புகழாகத்தானெடுத்துசரியாய்க்கூட்டே. எஎ௬

கூட்டையிலேபஷாணம்சரிநேரொக்க குறிப்புடனேதானிடித்துபூநீர்சேர்த்து, நாட்டமுடன்கண்ணாடிவாலைதன்னில் நயமுடனே சரக்கெல்லாம்வாலையிட்டு, பாட்டமென்றயடிப்பானைக்குள்ளேபோட்டுப் பாகமுடன்திறவகத்தையெறக்கிக்கொண்டு,நீட்டமுடன்நீவங்க முருகும்போது நீதான இறவகத்தைவூத்திடாயே. எஎஎ

ஊத்தையிலே வங்கமது கட்டிப்போகும் வுத்தமமேனேர்வாங்கி வெட்டையாகும், சுத்தனென்னும் திராவகத்தால் வங்கந்தானும் குடிபோடும் நீர்தானு மெரிப்போகும். சாத்தமென்னும்வுக்ரகம்செய்யலாகும் சார்பானகருக்களே பாச்சலாகும், நீத்தமுடன்கருந்தட்டிவார்க்கும்போது நிலையானவுருக்க ளெல்லாந் தோன்றும்பாரே. ()

## இரும்புவுருக்கு.

பாரேதானின்னமொருகருமானங்கேள்பாகமுடன் மாணுக்கள் பிழைக்கவென்று, நேரேதான் இரும்பினிடமணலைவாரிநேர்புடனே மூசைபிட்டு வுருக்கும்போது, சீரேதான்கண்விட்டுவாடும்போது சிறப்பான திராவகத்தைகுத்திப்பாரு, நேரேதான்பிருப்பதுவும்வெட்டையாகி நேர்புடனே கருவுருக்கள் பாயுந்தானே. எளசு

தானான வுருத்திரண்டுபாயும்போது தனியானபிரும்பதுவும்சவளைபோலாம், தேனனையிரும் பதுவுஞ்சவளையாகும் தெளிவானவுருக்கினத்துவெட்டையாகும், மானனதங்கம்போல்கண்விட்டாம்பொற்கமுடன்பிரும்பினிட வேதைமார்க்கம், கானனதேசத்தார் சீனத்தார்கள்கருவாளி யாகையினால்கண்டார்தாமே. எஅ0

## தாதுவிர்த்திதர்ம் பூலக்குளிகை.

காமான குளிகையொன்றுசொல்லக்கேளும் தாக்கான சாதிக்காய்கிராம்போடேலம், காமான மராட்டியமா மொக்கினேடு கருவானயேலக்காய் லவங்கப்பட்டை, பாமானகுரோசாணி யோமந்தானும்பாக்கானபத்திரியுமிளகுதானும், வாமானமென்றதொருகச்சூர்தானும் வாகானபச்சை யென்ற பூரமாமே. எஅக

பூரமாங்கஸ்தூரி குங்குமப்பூபுகழானரோசனையுந்திப்பூண்டப்பா, காரமாங்கு டோரியது சமனுய்க்கூட்டி கருவாகவெள்ளீரோலரைத்துமைபோல், தீரமாங்கடலைபோ லுண்டைசெய்துதிறமாக நிழலுலர்த்திப்பதனம்பண்ணு, வீரமாமதன்ரதி தன்னேடொக்க விருப்பமுடன்ரும்பூலம்வருந்துவாயே. எஅஉ

அருந்துகையாலுன் மீதிலிச்சைகொண்டு அனையவேயெண்ணமதுமிகவுண்டாகி, திருக்கவேபோகமது செய்திட்டாலும் தீராதும்மாதர்மேலாசையப்பா, பொருந்தவேதேகமது கரிப்பேயில்லை பொங்காதுவிந்ததுவுங்கட்டிப்போகும், குருந்த முடன்ரும்பூலமருந்திப்பின்பு கொற்றவனே யெளரீரையாண்டிடாயே. எஅங

உண்மையிலேபித்தமது கீழ்நோக்காகும் வுகாரமென்ற மயக்கம
துமேலேறாது, திண்ணமுடன்கலவியது மன்மதன்போல் நிகட்டாது
மாதர்மேலாசைநீங்கா, உண்ணமதுமிகவாகுமெந்தநாளும் இளைக்கா
துதேகமதுகற்றாணுகும், வண்ணமுடனிப்பாகம் யாருஞ்சொல்வார்
வையகத்தோர் சித்தாடச் சொன்னதாமே. ௭௮௪

## பொன்மைகாகிதங்கள் ஒட்டம்.

தாமானமைபொன்று சொல்லக்கேளும்சார்பான காகிதத்தின்
தங்கவர்ணம், காமானமஞ்சளென்ற கோபிதன்னால் கலரவிடுவிளாம்
பிசினைச்சமனதாக, பூமான்போலோருருவம் பெழுதியப்பாபொங்க
முடனவ்வுருவில் தூவக்கேளு, வேபானமானதொருசரக்குசொல்வே
ன்வித்தகனேமேன்மை யுடன்செய்துபாரே. ௭௮௫

செய்யவே சாரமதுபலமொன்றாகும் சேர்மானங் கெந்தியொரு
பலமொன்றாகும், துய்யவே சூதமதுபலமொன்றாகும் துப்புறவாம்
வெண்வங்கம்பல மொன்றாகும், வையவேகாரமதுசீனம்காலாய்நாட்
டமுடன்கல்வமதில் பொடித்துநன்றாய், பெய்யவேபொடியாக்கிகுப்
பிக்கிட்டுயென்மகனே கல்லாலேசில்லுபோடே. ௭௮௬

போடவே சீலைபதுவலுவாய்ச்செய்து பொங்கமுடன்களவாயா
ஞ்சட்டிதன்னில், கூடவேமணலை தனைபாதிகொட்டிகுப்புறவாய்புட்
டிநடுமையம் வைத்து, மூடவேமணல்தனைமேலேகொட்டி முக்கிய
மாய் சட்டிகொண்டு மேலேமூடி, நீடவே சீலையதுவலுவாய்ச்செய்து
நினைவாகரவிதனிலே காயப்போடே. ௭௮௭

காய்ந்தபின்புவாலு கையாமேந்திரத்தில் கருவாகத்தீமூட்டிபெட்டு
சாமம், தேர்ந்திடவே தானெரிப்பாய் மைந்தாகேளுதோற்றமுடன்
பதங்கமது யேறிநிற்கும், மாய்ந்திடவேசொர்ன மென்றபதங்கந்தா
னும்மகத்தான பதங்கத்தை யெடுத்துக்கொண்டு, வாய்ந்திடவே
முன்சொன்னவரணந்தன்னில் மார்க்கமுடன் றன்தேய்க்க சொலிப்
புண்டாமே. ௭௮௮

சொலிக்கவே யெவ்வர்ணம் மானுலுந்தன் சூட்சமுடன் முன்
னெழுதிமேலேதூவு, பலிக்கவே பிசினியது பதங்கந்தன்னை பாகமு
டன்தானிழுக்கும் பண்மைப்பாரு, ஒலிக்கவே ஜெகசோதி யென்ன
சொல்வேனுத்தமனே ரூபலாவர்ணந் தோற்றும், கெலிக்கவேபதங்க
மதுசொர்னமென்பார் பேரானவெள்வங்கக் கூத்துதானே. ()

கூத்தானகாகிதங்கள்வரணபேதம்கூறுவேன்மானுக்கள் பிழை
க்கவென்று, நாத்தானவெள்வங்கம் சூதந்தானும் நாயகனேவரிதாக

மடல்துத்தந்தான், காந்தானலிங்கமுடன்செங்கால்பச்சை கருவான
நாகமொடுகெந்திதானும், தூத்தானசாரமுடன்மதியுப்போடு துடி
யானகண்டரொடுபேதியாமே. ௭௯௦

பேதியாம்வரப்பொடியும்பச்சைகோழி பேரானதாரமுடன்சங்
கால்பச்சை, சோதியாம்மித்தனையும்வரணபேதம் தோரா தருபமது
மதிகங்காட்டும், வாதியாம்கண்டறிவார்சரக்கின்பேதம் வகையுட
னேமற்றவர்கள்காணமாட்டார், நீதியாமித்தனையுமாறுதாரம்கிலையான
வரணத்துக்குறுதியாமே. ௭௯௧

## நேத்திரரோகத்தயிலம்.

உறுதியாமின்னமொருபாகம்பாரு வுண்மையாயுரைக்கிறோம்
பண்பதாக, நிறுதியாய்நெல்லிக்காய்சார்தானாழி நீடானகையான்சா
ர்சாருநாழி, பறுதியாமூசுக்கைச்சார்நாழியாகும் பாங்கானவெள்ளர்
சார்தானாழி துறுதியாம்வெள்ளெண்ணெய்படிதானென்று துடிப்
புடனெயாவின்பால்படிதானென்றே. ௭௯௨

ஒன்றானவெளநீருபடிதானென்று வுத்தமனேயிதிற்சேர்க்கும
ருந்துகேளு, பன்றானகற்றவகைகடுக்காய்கான்றி பாங்கானசிவதை
யுடன்நெல்லிதானும், வன்றானவிலாமிச்சுவெட்டிவேரு தாக்கான
சந்தனமூமகிலுங்கூட்டி, குன்றானநன்னாரிகோரைதானும் குறிப்பான
பச்சிலையுமொக்கச்சேரே. ௭௯௩

சேர்க்கவேமதிமதுரம்தேவதாரம் சிறம்பானசச்சோலம்சிரங்
கூட்டி, பார்க்கவேமுட்டியுடன்சாம்பிராணி பாகமுடன்யேலக்காய்
கோஷ்டந்தானும், தீர்க்கமுடன்வலம்புரியுமிடம்புரியுமாகும் திறமா
னசீரகமுமொக்கக்கூட்டு, ஏர்க்கவேசடாமாஞ்சிபூலாதானும் யெழி
லானதண்ணீர்விட்டான்கிழங்குதானே. ௭௯௪

கிழங்கானசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி கெணிதமுடன்வ
கைவகைக்குப்பலந்தான்காலம். தழங்கானசரக்கெல்லாமொன்றாய்
க்கூட்டித் தயவாகதேங்காய்ப்பால்தன்னிலாட்டி, வழங்கானவெண்
ணெய்தனில்கலக்கியப்பா வாகுடனேவெழுகுபதமதன்னிற்காச்சி
பழக்கமுடன்கணபதியைப்போற்றியேதான்பாகமுடன்சிவப்பதாய்
காச்சிடாயே. ௭௯௫

காச்சவேயெண்ணெய்தனைவடித்துக்கொண்டு கலங்காமல்சிஷாவில்
டைத்துமைந்தா, பாய்சலுடன்வாரத்திற்கிரண்டுமுறையப்பா பால
னேமுழுகிலசப்பலினைக்கேளு நீச்சலெண்றமிடறிவலி[illegible]ளிபாதம்

திகழானமயக்கமுதல்காணாதோடும், பாச்சலுடன்நேத்திரத்தின்ரோ
கம்போகும் மகத்தானவொருதலைநோய்யேகும்பாரே, ௭௬௬

ஏகுமேகபாலவலிசன்னிபாதம் யெழிலானதலைகனப்புமெல்லா
மாறும், போகுமேமந்தாரகாசம்போகும் பொலிவானகண்கூச்சல்
புழுவெட்டும்போம், சாகுமேகண்ணில்நீர்வடிதலும்போம் சார்பான
குத்திருமல்சன்னலாகும், பாகுடனேயித்தயிலம்கொள்ளும்போது
பறக்குமடாகேத்திரநோயகளும்பாரே. ௭௬௭

அகனுமேபத்தியமோயரையக்கேளு அப்பனேகரப்பனென்ற
பதார்த்தந்தள்ளு, நிசலவேபகல்நித்திரைக்கொள்ளலாகா நீடேழுநாள்
வரைக்கும்போகமாகா, தகாவேசீதளமாம்பண்டமாகா தாக்கான
புளிகையுமதிகமாகா, புகலவேகாலாங்கிநாயர்பாதம் புகழுடனேயா
ன்வணங்கிபுகன்றிட்டேனே, ௭௬௮

புகன்றிட்டேன்தயிலமதுவென்னசொல்வேன் புகழானசந்தனு
இதிதற்கொவ்வாது தகன்றிட்டசாத்திரத்திலநேகமுண்டு தக்கவே
யாருந்தான்சொல்லவில்லை, அகன்றிட்டசாத்திரத்தி லனேகமுண்டு
அப்பனேயான்சொன்னகவிபோலல்ல, பகன்றிட்டநாதாக்கள்முனி
வர்தாமும் பாடினார்கோவைகளுமனந்தமுண்டே. ௭௬௯

உண்டானசாத்திரங்க ளனேகமுண்டு வுத்தமனேயென்போல
யாருஞ்சொல்லார், இண்டானபோகரேழாயிரந்தான் திரட்டினேன்
சத்தகாண்டந்திறமதாக, பண்டானசீனபதியுலகைத்தாற்குப் பலபல
வாயேதிவைத்தேன்பான்மையாக, சண்டாளமானதொருதேசத்தா
ற்குச் சாற்றினால்பாவம்வருமென்னலாமே, ௮00

## சூடாமணித்தயிலம்.

என்னலாமின்னமொரு கருமானங்கேள் யெழிலானதயிலமது
மின்னஞ்சொல்வோம், பன்னவேசதாவேருமூலிதானும் பாகமுடன்
சார்நாழிதானேயாகும், நன்னயமாய்குலாமல்லிமூலிச்சாறும் நாட்டி
லுள்ளபொன்முசுட்டைசார்நாழி, தன்னயமாயசிராசெங்கழுநீரப்
பா தன்மையுடன்சார்நாழிதானுங்கூட்டே. ௮0௧

கூட்டவேதை வேலைச்சாறுநாழி குணமானபாவட்டைச்சாறு
நாழி, நீட்டமுடன்தாமரைப்பூசாறுநாழி நேரானகொத்தான்சார்
சாறுநாழி, பாட்டமுடன்முதியார்குச்சாறுநாழி பாங்கானகுமரிச்சா
ர்ச்சாறுநாழி, தேட்டமென்றதைவேலைச்சாறுநாழி தேனனமனேன்
மணியாள்சாறுகூட்டே. ௮0௨

கூட்டியேநல்லெண்ணைபடிதானொன்று குணமானவாவின்பால் படிதானொன்று, நாட்டமுடன்கடைசரக்குசாற்றக்கேளு நலமானகிராம்புடனேயேலந்தானும்,வாட்டமுடன்சாதிக்காய்சாதிபத்திரி வனமானகுரோசானியோமந்தானும், நீட்டமுடன்தக்கோலம்பரங்கிப்பட்டை நேரானவால்மிளகுசுக்குதானே. ௮0௩

தானானசுக்குடனேகருவாய்ப்பட்டை சாதகமாய்கடுக்காயும்தான்றிமுத்தம், வேனானநெல்லிக்காய்மிளகுதானும் விருப்புமுடன்கொடிவேலிபட்டையப்பா,'பானானபாற்சுறண்டிபட்டைதானும் பாங்கானவலம்புரியுமிடம்புரியுந்தானும், கோணானமுசுட்டையுடன்தும்பைதானும் கூரானசெம்பூரான்பட்டைதாமே. ௮0௪

பட்டையுடன்கருஞ்சீரகம்கார்போகந்தான் கருவானகிச்சிலியும் பச்சிலையுந்தானும், திட்டமுடன்வகிற்கட்டைதேவதாரி திடமானசந்தனமும்பூலாவாகும், குட்டமருங்கவிப்பமலைதீண்டாப்பாலை குறிப்புடனேபட்டையொடுகுறிஞ்சான்வேரும், நுட்பமுடன்விராலிபிடபட்டைதானும் நுணுக்கமுடன்யாவாரைப்பட்டைதாமே. ௮0௫

தாமானபட்டையெல்லாமென்றநாக தாக்குடனேவகைவகைக்குகளஞ்சிரண்டு, சாமானமானதொருபற்பந்தானும் சாங்கமுடன்றுனெடுத்துதேங்காப்பாலில், தூமணமாகவல்லோரொன்றாய்க்கூட்டித் துப்புரவாய்தானரைப்பாய்மைபோலப்பா, நாமானநூல்வேதப்படி தான்பாரு நாயகனேமூலிபிடக்கூடப்போடே. ௮0௬

போடவேதான்கலக்கியொன்றாய்தானும் பொங்கமுடன்தானெரிப்பாய்மெழுகதாக, நீடவேநீயாறிஎடுத்துப்பார்க்க நிலையானதயிலமதுயென்னசொல்வேன், கூடவேபச்சையென்றபூரந்தானும் குணமானசாம்பிராணிக்களஞ்சிகூட்டு, தேடவேகுங்குமப்பூ கஸ்தூரிதானும் தெளிவானரோசனையும்பொடித்துபோடே. ௮0௭

பொடியுடனேதான்போட்டுபோறவைத்துப் புண்ணியனேமுழுகிவரப்பலனைக்கேளு,கெடியுடனேதும்மலும்சீதளம்போம்;கெடிதானகபமுதலும்காணுமோடும், கொடிபோன்றமேகத்திரன்பாலம்போகும் கொடிதானசயரோகமகன்றுபோகும், அடியானகண்ணிலம்பிலூறல்போகும் தூக்கமுடன்சோம்பலதுமகலும்பாரே ௮0௮

பாரேதான்கண்ணோய்கள்தொண்ணூற்றாறும் பாங்கானயிமைத்தடிப்புபுள்ளிபோகும், நேரேதான்வாயுவெண்பதுவும்போகும்தெ

டிதானசேத்துமங்கள்கீழ்நோக்காகும், கூரேதான்மயக்கமொடுவாந்தி போகும் குணமாகும்விக்கலொடுபெருமல்போகும், தேரேதான்பீனசமுமெட்டுபோகும் தெளிவாகும்கண்ணிரண்டும்தெளிவாந்தாமே.

சூதவெண்ணை.

தாமானகருமானமின்னமொன்று சாற்றுகிறேன்மாணாக்கள்பிழைக்கவென்று, கோமானுக்கொப்பானசூதராசன் குறிப்பாகத்தானெடுத்துசேர்தானப்பா, நாமானகண்டரது சேர்தான்ரெண்டு நலமானதும்பைப்பூச்சாற்றினாலே, சாமானசாமமொருரெண்டாக சாங்கமுடன்தானரைப்பாய்சாகுமட்டே. ௮௧௦

மாட்டானசூதமதுமடிந்துகொல்லும் மாசற்றவெண்ணையதுபாகவென்றால், திட்டமுடன்முமறியினாற்கழுவிப்போடுதிரளானவெண்ணையதுமைபோலாகும், சட்டமுடன்வெண்ணைக்குசப்தமில்லை சாதகமாய்கைதனிலேயெடுக்கலாகும், நட்டமில்லைபத்துக்குயொன்றுதங்கம் நாதாக்கள்முறைப்படியேகூட்டிக்கொள்ளே. ௮௧௧

கொள்ளவென்றால்யேமரசவெண்ணையாச்சு தோடானகுறுக்குவழிமேவலாச்சு, எள்ளளவுகோளாறுநேராதப்பா யெழிலானசூதமதுமடிந்ததானால், விள்ளவேயெவராலுமுடியாதப்பா விண்ணிலேசட்டலைந்தார்கோடாகோடி, கொள்ளைகொள்ளப்போனவற்குஇந்தப்போக்கு குறுதிவழிகிடைத்தாலேசித்தனாமே. ௮௧௨

சித்தனைப்பிறந்தாலும்பிழைக்கவேண்டும்சீரானசாஸ்திரத்தையறியவேண்டும், சுத்தமுடன்தியானிபோலிருப்பான்மட்டை சுந்தரம்போல்பேசியல்லோமொழியுங்காணான், சித்தமுடன்சிவயோகநிலையில்நின்று நிர்மூடப்பயல்களுக்குவேதஞ்சொல்வான், கத்தனைப்போல்பிரமசிருஷ்டிசெய்வேனென்பான் காசினியில்கதைமுடிக்குங்கழுதையாமே, ௮௧௩

ஆமேதான்புல்லறிவுவாளனானால் அப்பனே ஆப்பதத்தைமனதிலுன்னி, நாமேதான்சொன்னபடிரிஷிகள்பக்கல் நலமுடனேசென்றுமல்லோநயமும்பேசி, போமேதான காலமுதல் வீண்போகாமல் பூவுலகில்புண்ணியனாயாவதற்கு, நேமமுடனஷ்டாங்கநிலையிற்சென்று நேர்புடனேகுருபதத்தைமனதிலுன்னே. ௮௧௪

உன்னியேநிற்கையிலேவாமிவந்து உத்தமனேயுந்தனுக்குவழியுஞ்சொல்வாள், கன்னியெனும்மயேஸ்பரியாள்நிற்கும்போது காவலனேகண்டுமனமயங்கவேண்டாம், பண்ணவேயுந்தனுக்குபிராணயாம

ம் பாலிப்பாள் வாதமுடன்யோகமார்க்கம், சொன்னபடிதப்பாதகு
வையுண்டானால் சூட்சமுடன்மேயரியுந்துரையில்நில்லே. ௮௧௫

நிற்கவென்றால்பதியேது மைதானேது நிலைகெட்டவாணவத்தை
யடக்கவேண்டும், துற்கைவெனிமந்திரங்களகற்றவேண்டும் துஷ்டபூ
தகாக்கிரகமகற்றவேண்டும், சொற்களேனும் பீஜாட்சரமந்திரத்தை
துறையோடுமுறையோடுஞ்செலுத்தவேண்டும், கற்கடகராசியிலே
பிறக்கவேண்டும் கன்னிதுலாம்சிம்மமென்றால்கருதுவாரே. ௮௧௬

கருதுவார்நாதாக்கள்கணக்குங்காண்பார் கண்டறிந்துபிரணவ
த்தையுரைப்பார்தாமும்,சுருதிபொருள்நால்வேதசாத்திரத்தின்சூட்
சாதிசூட்சமெல்லாஞ்சுட்டிக்காட்டி, பருதிமதிகேசரத்தின்குளிகை
மார்க்கம் பட்சமுடன்காண்பித்துவுளவுஞ்சொல்லி, நிருதியென்னும்
திசைநோக்கும்வழியுங்காட்டி நீதியுடன்ஞானோபமோதுவாரே. ()

ஓதுவார்பொருளறிந்தகள்ளனானால் உத்தமனேயவர்மனதைதே
த்திநீதான், நீதியெனுஞ்சன்மார்க்கவலையிற்சென்று நித்தமுடன்பெ
ரியோர்க்குதொண்டுபண்ணி. சாதியிலேதாழ்ந்தவராயிருந்திட்டாலு
ம் தவநிலையில்பெரியவராமென்றேயெண்ணி, பாதிபதிசடையணிந்த
தம்பிரான்போல் பாலித்தாலுந்தனுக்கு பண்பதாமே. ௮௧௮

பண்பான உந்தனுக்குவிட்டகுறைதானும் பாருலகிலபிக்குமடா
முன்சென்மத்தால், திண்பானதேகமதுகற்றானாக திறமையுடனெந்
நாளுமிருப்பதற்கு, நண்பாகமுன்சொன்னசூதவெண்ணை நாதாக்கள்
முறைப்படியேசொன்னேனப்பாலும், கண்பானயேமரசவெண்ணைத
ன்னை கருவாகசெந்தூரஞ்செய்துபாரே. ௮௧௯

ஏமரசசெந்தூரம்.

பாரப்பாசூதமென்றசெந்தூரத்தை பாலகனேமுறையோடுசெ
ய்தாயானால், நேரப்பாயுனைபோல வுலகிலுண்டோ நீணிலத்தில்நீயு
மொருசித்தனாவாய், தீரப்பாவெண்ணையதுவொன்றேகாலாம் திரமா
ணகெத்தியதுமுக்காலாகும், கூரப்பாசாரமென்ற செயநீர்தன்னால்
கொற்றவனேதானரைப்பாய்சாமம்நாலே. ௮௨௦

நாலானசாமமதுவரைத்துமைந்தா நாயகனேரவிதனிலேகாயப்
போடு, பாலானமேருவென்ற குப்பிக்கேற்றிப்பாலகனேதானெரிப்
பாய்சாமம்நாலு, நூலானமுறைப்படியேயெரித்தாயானால்நுணுக்க

முடன்செந்தூரமென்னசொல்வேன்சேலானசெந்தூரம் பதனம்பண்
ணு செம்மையுடன்போக்குவகைசெப்பக்கேளே. ௮௨௧

செப்பவென்றால்வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று செழிப்புட
னேருனுருக்கிகுருவொன்றீய, ஒப்பமுடன்சரிபோலயிருக்கும்பாரு
வுத்தமனேவோட்டிலிட்டுவூதிப்போடு, தப்பறவேமாற்றெட்டுகாணு
ங்கண்டீர்தாக்குவாய் நாலுக்கோர்தங்கஞ்சேர்த்து, தப்பறவேவார
டித்துப்புடத்தைப்போடு திப்மைபெறமாற்றதுவுமொன்பதாமே.

தாமானமாற்றதுவுமதிகமாகிதாரணியில்மார்தருக்கு மிருதுதங்
கம், நேமமுடன்சிவயோகிதங்களுக்கு நிஷ்டைக்குயானதொருதங்க
மாகும், பானமெனும்வஸ்துசத்திநேமநிஷ்டைப் பண்பாகப்பராபரி
க்குபாலித்தேதான், ஞானமுடன்சாதாகாலவேதயாகம் கீர்த்தியுட
ன்றான்படிததுசெலவுசெய்தே, ௮௨௩

செய்யவென்றாலதிதிபரதேசியற்குச் செப்புகிறேன்காவிகாஷாய
மப்பா, தையலென்னுமாதருக்குவஸ்திரதானம் சதாகாலஞ்செய்வ
தற்குமனமுங்கொள்வாய், வெய்யலிலேதாகவிடாய் தீருதற்குவிருப்
பமுடன்கேணிகுளம்யெடுக்கநன்று, மைபலெனும்கையரைகன்னி
தானம்மாட்சியுடன்செய்யவென்றுமதிப்பிட்டாரே. ௮௨௪

அயக்களங்குசெம்புவேதை.

மதிக்கவேயின்னமொருகருமானங்கேள் மாசற்றஅயமதுதான்
சேர்தானொன்று, துதிக்கம்வசெம்பதுவுஞ்சேர்தான்பாதிதுடியான
கண்டாதும்சேர்தான்பாதி, கதிக்கவேகாரமதும்சேர்தான்காலாம் கரு
வானசாரமதுசேர்தான்காலாம் விதிப்படியேசரக்கெல்லாமொன்றாய்
க்கூட்டி வித்தகனேகல்வமதில்பொடித்திரயே, ௮௨௫

பொடித்துமேவச்சிரமாங்குகையிலிட்டு பொன்னவனேசில்லி
ட்டுச்சீலைசெய்து, வெடிக்காமல்ரவிதனிலேகாயவைத்து வேகமுடன்
சரவுலையில்வைத்தூது, நடிக்கவேமூசைதனையுடைத்துப்பாரு நளி
னமாஞ்சரக்கதுவுஞ்செம்புசேர்ந்து, துடிப்பானஅயமதுவுஞ்சத்தே
யாகி துறையானகளங்கமதுபோலாம்பாரே. ௮௨௬

பாரேதான்அயமதுவும்களங்கமானல்புடமினிலேசெம்புவித்தை
நிசமதாச்சு, சீரேதான்செம்புமிகர்வங்கஞ்சேர்த்து சீர்பெறவேகரி
யோட்டிலூதிப்போடு, நேரேதான்செம்பதுவுமூறலேகி நெகிழான
வாதத்துக்குறுதியாச்சு, நீரேதான்வெள்ளிதனில நாலுக்கொன்று
திகழாகதானகொடுத்துவுறுக்கிப்பாரே. ௮௨௭

உறுக்கையிலேமாற்றதுவுமாறேதானும் உத்தமனேவயச்சவளை யென்னலாகும், செருக்கமுடன்தங்கமதுநாலுங்கொண்டு சேரவே தான்கூட்டியுருக்கிரு, பெருக்கமுடன்வாரடித்துபுடத்தைப்போடு பேறானதங்கமதுவர்ணமாகி, குருக்கலுடன்மாற்றதுவும்எட்டேகா லாம் குருவானவாக்கதுவும்மெய்யாங்காணே. ௮௨௮

காணவென்றாலுந்தனக்குவறுமைமீறி கடன்தனக்குமூப்புணிநே ர்ந்தபோது, நாணவேமச்சமடம்பயிர்ப்புதானும் நளினமுடனுந்தம க்குநேருங்காலம், தோணவேசீவனத்துக்கில்லாவிட்டால் தேற்றமு ள்ளவேதையிதுசெய்துபாரு, ஊணவேசமுசாரத்தொல்லைபோக்கை எழிலானவாதத்தால்திருத்தலாமே. ௮௨௯

திருத்தலாம்வறுமை வருங்காலந்தன்னில் நீமகனேயிவ்வேதை மாரியுண்ணு, செருக்கமுடன்கோடிவரையுண்ணலாகும் செம்மையுட னிச்சவளைசெந்தூரித்தால், பொருக்கமுடன்செந்தூரப்போக்குசொ ல்வேன் பொங்கமுடன்சவளையதுவொன்றேயாகும், கருத்துடனேதங் கமதுசரிகாலாக கருவாகத்தான்கூட்டியுருக்கிடாயே. ௮௩௦

## அயச்சவளை செந்தூரம்.

உருக்கையிலேகட்டினதோர்கெந்திதானும் வுந்தமனேகிராசம துசவாய்பாதி, நருக்கையிலேகளங்கமதைதகல்வமிட்டு நாதாக்கள்சொ ற்படியேசெப்பக்கேளும், முருக்கலெனுங்கையாஞ்சார் சாமங்காலு முசியாமல்தானரைப்பாய்மைந்தர்நீயும், வருக்கமுடன்ரவிதனிலேகா யப்போடு வாகுடனேகுப்பிதனிலடைத்திடாயே. ௮௩௧

குப்பியென்றால்காசியென்றகுப்பிதானும் குணமானசீலையதுவ லுவாய்ச்செய்து, தப்பிதங்கள்வாராமல்மாக்கல்கொண்டு தளராமல் வாய்மூடிசீலைசெய்து, ஒப்பமுடன்தளவாயாம்சட்டிதன்னில் உத்தம னேபொடிமணலேபாதியிட்டு, நெப்பமுடன்குப்பிநடுமையந்தன்னில் உத்தமனேபொடிமணலேபாதியிட்டு, நெப்பமுடன்குப்பிநடுமையந் தன்னில் நேர்மையுடன்மேலுமந்தமணலைமூடே. ௮௩௨

மூடவேமேல்சட்டிக்கொண்டுமூடுமுறையோடுநாதாக்கள்சொல் லைப்போல, வாடவேதிரியாதேமயங்கவேண்டாம் வாகுடனேவாலு கையாமேந்திரத்தில், நீடவேயெண்சாமமெரித்தபோது நீதியுள்ள பாலகனேநிசமாய்கேளு, சாடவேசெந்தூரமென்னசொல்வேன் தளு க்கற்றசந்திரன்போல்தளும்புந்தானே. ௮௩௩

தானானசெந்தூரமருணன்போலாம்தாக்கானபிரகாசமானசோதி, வேனானகொங்கணவர்செய்தபாகம் மேதினியிலாருந்தான்செய்யவி

ல்லே, கோளுனைனதையர்காலாங்கிநாதர்குருசொன்னபடியாள்வாய் செய்தேன்யாளும், தேனுனசெந்தூரப்போக்குதன்னை தேசத்தார்சி னத்தார்க்குறைத்திட்டேனே. ௮௱௪

உரைத்திட்டேன்சினபதிதேசத்தார்க்கு உகைமையுடன்செய் திவைத்தேன்பிந்தபாகம், வரைந்திட்டசெந்தூரப் போக்குதன்னை வளமுடனேமண்டலந்தான்கொண்டபோது, குரைத்திட்டார்கோரி யதுமேனிதானும் குறையாமல்குன்றியதுபோலேகாணும், பரைத்தி ட்ட்வடிவுமதுசிவப்புகாணும் பளபளப்புமென்னுளுமதிததாமே ()

அதிதமாமின்னமொருபாகங்கேளு வப்பனேயான்கண்டவரை க்குஞ்சொல்வேன், துதிதமுடன்செந்தூரமுண்டபோது துறையான மேக்கமென்றதிருபதும்போம், கதிதமுள்ளபாறுவனைநீரும்போகு ம்கபத்துடனேயிளைமுதல்காணுதோடும், பதிதமுள்ளலிங்கத்தின்புத் துபோகும் பாங்கானகண்டத்தின்மாலேபோமே. ௮௱௬

மாலையுடன்சுவாசகாசங்கள்போகு மன்னவனேவிப்புருதிநிகட் டிபோகும், வாலேயாம்வபதநுவ்மதிகமெத்த வாகுடனேநரைதிரையு மற்றுப்போகும், காலேயிலேமருந்துண்ணுங்காலந்தன்னில் காலாரநட ந்துவரமெத்தநன்று, வெளியிலுமெப்போதுஞ்சோம்பலாக வீணிலே காலமதுகழிக்கநன்றே. ௮௱௭

நன்றுசோம்பலதுநீக்கியல்லோ நாயகனேகஷ்டமென்றவேவதை பாரு, தன்றானமேனியதுபிணிநாட்டாதுசதாகாலந்திமிரேனுங்கிட்டா தப்பா, பண்றானமருந்ததுவும்வீறுகாணும் பரிதிபோல்தேகமதுகற் றாணுகும், நின்றுமிரவமதுதீண்டிட்டாலும் நேரானவிஷமதுதானே ராதன்றே. ௮௱௮

ஏராதுவிஷமதுவுமேல்நோக்காது பெண்மகனேஎங்காளுங்கற்ப மான, கூரானதேகமதுபோலேதோற்றும் குறையாதுவாசியதுயடங் கியோடும், பேரானநாதாக்கள்முனிவர்பாகம் பேருலகில்கிட்டாதபு ண்ணியோர்க்கு, நேரானசெந்தூரம்சொல்லொணுது நேர்மையுடன் பாடிவைத்தேன்போகர்தாமே. ௮௱௯

காயகற்பவுண்டை.

தாமானவின்னமொருமார்க்கம்பாரு தயவானசிறுபாலாசாற்றக் கேளும், குமான்களுண்பதற்குவுண்டைசொல்வேன் கொற்றவனே கருஞ்சீரம்நற்சீரந்தான், வெமானமுட்டியதுசிற்றுமுட்டி விரைவான பேராவின்முட்டிதானும், நாமானதிரிமஞ்சள்தானுமாகும் நாட்டிலுள் ளவேலிபருத்தண்டதாமே. ௮௱௰

ரண்டாமூலமதுசிவப்புமூலம் செடிதானகறுப்பாலமூலர்தா ம், கண்டாஙகத்திரியுமிரண்டதாகும் கருவானமஞ்சளெனறதத்திரி தானும், இண்டானவெண்கத்திரிதானுமப்பா துரையானகருவே லன்வெள்வேலன்தான், உண்டானபத்தியதாண்டதாகும் வாகுட னேபேயத்திநல்லத்தியாமே. அசக

அத்தியுடன் துத்தியதாண்டதாகும் அப்பனேவட்டமென்றது த்திதானும், மத்தியாந்தட்டமென்றதுத்திதானும் மன்னவனேமிளக துவுமிரண்டதாகும், சுத்தியாம்நன்மிளகுவால்மிளகுதானும் துரை யானகருஞ்சூரையப்பா, வெத்திபெறவலம்புரியு மிடம்புரியுமாகும் வேகமென்றவேப்பிலையுமிரண்டதாமே. அசஉ

தாமானகருவேப்பிலையுமாகும் தாக்கானமலையின் வேப்பிலையு மாகும், தூமானமழிஞ்சிபதாண்டதாகும் துவர்ப்பானயோமழிஞ்சிபி ரங்கழிஞ்சியுமாகும், காமானவேளையது ரண்டதாகும் கதிப்பானநல் வேளைமுக்காவேளை, நாமானஓமமதுரண்டதாகும் நலமானகுராசா னிநல்லோமமாமே. அசங

ஓமமுடன்பிரண்டையதுரண்டதாகு முத்தமனேநற்பிறண்டை ஒத்தையப்பா, தாமென்றவாலியுமிரண்டதாகும் தாக்கானகல்லா லைநல்லாலையப்பா, நேமமுடன்கள்ளியதுரண்டதாகும் நெடிதான கொடிக்கள்ளிகொம்புக்கள்ளி, காமமென்றவூமத்தைரண்டதாகும் க ருவானவூமத்தைமருளூமத்தையாமே. அசச

மத்தையுடன்வுள்ளியதுரண்டதாகும் மகத்தானவெள்ளுள்ளி யீருள்ளியப்பா, சத்தானதாமரையுமிரண்டதாகும் சார்வானகுழித் தாமரைநற்றாமரைதானும், முத்தானதிப்பிலியுமிரண்டதாகும் மூலை யானயானையின்திப்பிலியுமாகும், சத்தானவரிசையிடதிப்பிலிதானும் சார்பானநிலாவிரையுமிரண்டதாமே அசரு

தாமேதான்சூரத்துவிரையுமாகும் தாக்கானநாட்டிலுள்ளவிரை யுமாகும், வேமேதான்சரையதுவுமிரண்டதாகும் வெடிப்பானநற்சு ரையும்பேய்சுரையுமாகும், நாமேதான்சொன்னபடிகொன்றைரண்டு நற்கொன்றைமயிற்கொன்றைரண்டதாகும், போமேதான்சீந்தியது ரண்டதாகும் பொற்சீந்திநற்சீந்திதானுஞ்சேரே. அசசு

சேரேதான் பசளைபதுரண்டதாகும் சிறப்பானகரும்பசளைசெம்
ந... யுமாகும், தூரேதான் கையானுமிரண்டதாகும் துடியானநற்
வை... ன்பொற்கையான்றாய், சாரேதான் கிரந்தியதுரண்டதாகும் சா
...று... ன்சிவகிரந்தைவிஷ்ணுதானும், நேரேதான் பாளையதுரண்ட
தாகும் நெடிதானபங்கனிடபாளைதானே அசஎ

தானானபாளையதுவாடுதிண்டா தாக்கானசின்னியதுபெருஞ்சி
ன்னிதானும், மானானசிறுகின்னிதானுங்கூட்டு மைந்தனேமுருங்கை
யதுரண்டதாகும், வேனானபேய்முருங்கைநல்முருங்கைதானும் வேக்
முடன்தான்கூட்டுமெத்தநன்று, பானானத்தாமைரண்டதாகும் பா
கமுடன்கல்னிடதாமையாமே. அசஅ

தாமையாம்சோத்தினிடதாமையாகும் தாக்கானகருங்கொள்
ளுசெங்கொள்ளுமாகும், வாமையாம்பேய்வாமைநல் வாமைப்பா
வாகுடனேகருணைபதுரண்டதாகும், மோமையாம்நல்கருணைபொற்
கருணையாகும் மூதண்டநெல்லிபதுரண்டதாகும், காமையாம்நெல்லி
யருநெல்லியாகும் கடிதானகரும்பதுவுமிரண்டதாமே. அசகூ

ரண்டுடனேவெண்கரும்புசெங்கரும்புதானும் நிலையானவாகை
யதுரண்டதாகும், திண்டானபெருவாகைசிறுவாகையப்பா திறமான
நொச்சியதுரண்டதாகும், பண்டானகருநொச்சி வெண்ணொச்சிதா
னும்பாகமுடன்றான்சேர்க்கமெத்தநன்று கொண்டனுடன்நாவலது
ரண்டதாகும் கொடிதானகருநாவல்வெண்ணாவல்தானே. அஎ0

தானானநங்கைபது ரண்டதாகும் தாக்கானபொரியானின்சிறி
யான்றானும், வேனானவிளாவதுவுமிரண்டதாகும் வேகமுடன்குட்டி
விளாபெருவிளாவுமாகும், கோனானவவரையதுரண்டதாகும் கொடி
தானநல்லவரைகோழிபவரைதானும், பானானகடுக்காயுமிரண்டதா
கும் பாங்கானபொற்கடுக்காய்கற்கடுக்காய்காணே. அஎக

காணவேவாவாரை ரண்டதாகும் கருவானபொன்னிவாரை
யாகும், தோணவேநல்லவாவாரையாகும் தோராமல்கூட்டுவதுமெத்
தநன்று, சாணவேவாமணக்குரண்டதாகும் சாங்கமுடன்சிற்றிமண
ணாக்குதானும், வேணவேபெரியவாமணக்குமாகும் மேதினியில்கண்
டறிந்துகூட்டுவாயே. அஎஉ.

கூட்டுவாய் வகைவகைக்கு சேரொன்றாக குறிப்பாகயிவைகண் டுசேர்வைகண்டு, மாட்டுவாய் சித்திருடபாகங்கண்டு மதிப்புடனேமூ லியுட பதமுங்கண்டு, நீட்டுவாய்பட்டையுட அளவுங்கண்டு நேர்புட னேசரக்கெல்லாம் ஒன்றாய்க்கூட்டி, வாட்டமுடன் தானிடிப்பாய்சரக் கையெல்லாம் வாகுடனேதான்போடவளமைகேளே, அ௫௩

கேளேநீ பாண்டமதிலிட்டுமைந்தா கிநபையுடன்பேரீச்சங்கா ய்தானப்பா, மாளேநீகொடிமுந்திரிபழமுந்தானும் மார்க்கமுடன் வ வகைக்கு ஒருசோதாக, வாளேதான்மலைத்தேனுங் கூடச்சேர்த்து வளமுடனேகற்கண்டு சரியாய்ச்சேர்த்து, பாளேதான் போகாமல்ரவி யில்வைத்து பாகமுடன் சிசாவில் பதனம்பண்ணே அ௫௪

பண்ணவேகாயாதி கற்பவுண்டைபாருலகில்ராதாக்கள்ரிஷிகள் தாமும், வண்ணமுடன்மாணாக்கள்பிழைக்கவென்று வாகுடனே சின பதிதேசத்தாற்கு, திண்ணமுடனயிப்பாகஞ் செய்து வைத்தேன்திற மையுடன் காயாதி கற்பந்தன்னை, நன்னமுடன்யுண்டுமல்லோ மார் தாமும் நானிலத்தில் சித்தரைப்போலிருந்திட்டாரே. அ௫௫

இருந்திட்டார் வெகுகோடி காலமப்பா எழிலானசித்தர்முனி தம்மைப்போல, குருந்திட்டசமாதிதனிலிருந்துக்கொண்டு; குருவான போகரைத்தான் மனதிலெண்ணி, திருந்திட்டசிவயோகந்தன்னில் நி ன்று தீரமுடன்காயத்தைதிருத்திக்கொண்டு, பொருந்திட்டமாகவல் லோவாசிதன்னை பூட்டியே யுள்ளடக்கி புரிந்திட்டாரே, அ௫௬

புரிந்திட்டகாயமது மூச்சடங்கி பொங்கமுடன்வெகுகோடிகால ந்தானும், பரிந்திட்டமாகவல்லோசமாதிதன்னில்பரிதிமதி காணமல் யிருந்தாரப்பா, சரிந்திட்டமாகவல்லோ சரிகைதன்னை சாக்கிரதைசு ழுத்தியுடன்கிரியையோடு, துரிந்திட்டதுரியாதி தாமம்பூண்டுதுப்ப ரவாய்மண்மறைவில் யிருந்தார்தாமே. அ௫எ

தாமானகாயாதி யுண்டைதன்னை தற்காலம் மானிடர்கள்கொள் வாராஞல், பூமான்கள்வெகுகோடி காலமப்பா பூவுலகில் தானிருப் பேபார்வயதோமெத்த, சீமான்கள் காயாதியுண்டிட்டாலும் சிரேபெற வேமாய்கைதன்னை யொழிக்கவேண்டும், நாமானவாயுநவே நந்தன்னை காட்டினேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. அ௫அ

தானனகற்பமது உண்ணும்போது தகைமையுடன்புளிபுகையுந் தள்ளவேண்டும், வேனனகற்பமது கொண்டபோது வேகமுடன்வா சியது கீழ்நோக்காகும், கோனனமண்டலந்தான் கொண்டாயானால் கொடுங்காசைபீளையது தொண்ணூற்றாறும, மானனவாதமென்றதெ ண்பதும்போம் மதிப்புடனே பித்தம் நாற்பதுவும்போமே. அருகூ

போமேதான்மேகமது வீருபத்தொன்று பொலிவானசிரந்திய அபதினெட்டும்போம், !லேமேதான்சூலைபதினெட்டும்போகும்விருப் பமுடன் குன்மமென்ற தெட்டும்போகும், நாமேதான் சொன்னபடி பாண்டாறும்போம்நாடாது விஷவசியும்நவிலொண்ணாது, சாமேதா ன்சன்னிபதின்மூன்றும்போகும் சார்பானகக்கலுடன் வாந்திபோமே.

வாந்தியாம் விக்கலுடன் வரோசிகம்போம்வருத்ததொருபீனச மூமெட்டும் போகும், காந்தலெனும் தேகமது குளிர்ச்சிகாணும்கண் கூச்சம்பெருமூச்சு காணாதோடும், பாந்தலெனும்பாணமதுபோலாம் நோய்கள் பறக்குமடாதேகமதிற்சன்னலாகி, சாந்தமுடனென்றனு ம்தனிர்ச்சிகாணும் சதாகாலமெந்நாளும் கற்றானேமே. அகூக

கல்லானதானுக்கு வீணைவேறுண்டோ காசினியிற் சித்தனைப் போல் நீயுமாவாய், வல்லானசித்தர்முனி ரிஷியென்பார்கள்வையகத் தினுனைக்கண்டோர் நடுங்குவார்கள், புல்லானமானிடனுயிருந்திட்டா லும் பூதலத்தினுன்னையொரு நாதனென்பார், வெல்லானரிஷியென்று நடுங்குவார்கள் வேதாந்ததாயருள் தான்வேண்டும்பாரே. அகூஉ

பாரேதான்பராபரியாளருளும்வேண்டும் பாருலகில்சித்தர்முனி கடாட்சம்வேண்டும் சீரேதான் விட்டகுறை காணவேண்டும்சிறப்பா னதொட்டகுறை சேரவேண்டும், நேரேதான்லலாட்டகருவிருக்கவே ண்டும் நேர்புடனே இதுவெல்லாம் கூடினுக்கால், கூரேதான் நினைத் ததெல்லாஞ்சித்தியாகும் கொற்றவனே நீயுமொருசித்தனாமே. ()

போகர் சத்தசாகரங்கண்டது.

ஆமேதான்பின்னமொரு கருமானங்கேள்யப்பனே யான்கண்ட வரைதான்கேளு, போனேனேசத்தசாகரமுங்கண்டேன் பொங்கமு டனேழுவகை தோற்றங்கண்டேன், நானேதான் அஷ்டவகை தீவுக ண்டேன் நாட்டமுடனஷ்டபாலகரைக்கண்டேன், கோனேதான்ஈன னையர் ... ங்கிளாதர்ருருபதந்தைவணங்கியல்லோ போனேன்பாரே

வெள்ளையானைமீதில் தேவேந்திரனைக்கண்டது,

புரரேதான்குளிகையொன்றுபூண்டுகொண்டுபட்சமுடன்நீவுக ளிற்செல்லும்போது, நேரேதான்வெள்ளையானைமீதிலேறி நேர்புட னே இந்திரனும்போகக்கண்டேன், தேறேதான்யடியேனுஞ்சிறுபா லன்றான் சீக்கிறமாய்அடியேனும்பின்றொடர்ந்தேன், நீரேதான்தே வேந்திரபகவான்தானும் நிர்த்தமுடன்என்றனையும்யாரென்றாரே, ()

யாரென்றுகேழ்க்கையிலேயடியேன்றானும் அப்பனேகால்நடுங் கிமெய்நடுங்கியேதான், சிருடனேகாலாங்கிசீஷனென்றேன் சிறப்புட னேயானுமல்லோபக்கல்சென்றேன், பார்புகழும்தேவேந்திரனென் னைப்பார்த்து பாலகனேசிறுவயதுள்ளபாலா, நேருடனேஎன்முன் னேபயமில்லாமல் நேர்மையுடன்வந்ததினால்சாபந்தானே. அசுசு

தானனசாபமதுசொல்லும்போது தன்மையுடன்குளிகைபூண்டு வந்தேன்சாமி, கோனனையெனதையர்காலாங்கிநாதர் குருபதத்தை வணங்கிநித்தம்விடையுங்கேட்டு, பானனபாரபரியாளுரையுங்கேட்டு பட்சமுடன்சத்தசாகாமுங்காண, நானனபோகரிஷி வருகும்போது நளினமுடன்தெவிசனங்கள்கிடைக்கலாச்சே, அசுஎ

கிடைத்ததென்றுசொல்லுகையிலடியேன்றானும் கீர்த்தியுடன் றானுரைக்கச்சாமியப்போ, படைத்தலைவர்கிங்கிலியாயிரம்பேர் பாங் குடனேயுந்தினைசூழ்ந்திருக்க. உடைபூண்டபெண்களுடன் கோடா கோடி வுத்தமரைசூழ்ந்துகொண்டுதாமிருந்தார் நடைநொடிரம்பை யுடன்மெல்லிதானும், நாட்டியமாமேனகையுமிருந்ததாமே. அசுஅ

தாமுடனேதிலோர்த்தமையுமூர்வசியுந்தானும் தகமையுடன்கொ லுக்கூடமங்கிருந்தார். நேமமுடன்தபோதனர்கள்கோடாகோடி நேர் மையுடன்கைலாசகிரியிலதானும், வாமமுடன்தவசிறுப்பார்லக்கோ யில்லை, வாகுடனேரிஷிகூட்டமனேகந்தானும், சேமமுடனிந்திரனோ டிருக்கக்கண்டேன் சேனவதிசயங்களெல்லாந்தெளிந்திட்டேனே. ()

தெளியவேயடியேனும் காத்திருந்தேன் தேவேந்திரப்கவானு மெந்தனுக்கு, எளியனுமெந்தனுக்குகிருபைவைத்து எந்தனதுபதி தேடிவந்தகாலே, வெளிபரங்கமாகவேதான்சாமிதானும் வேடிக்கை விநோதமெல்லாங்காண்பித்தேதான், ஒளியானசோதியென்னுமாசிர மத்தில் உத்தமனேயிடதுபக்கமிடந்தந்தாரே. அஎ0

தக்கவுடனடியேனுமங்கிருந்து சதகோடி சூரியசிம்மாதனத்தில் சொந்தமுடன்சுகித்திருந்து கேள்விகேட்டுகேள்விக்குஉத்தாரவிடை யுஞ்சொல்லி, அந்தமுடன்தேவர்களின்பக்கம்போயி அந்தரலோகத்து மர்மமெல்லாம், விந்தையுடன்றானறிந்தேன் விணோதமெல்லாம்விருப் பமுடன்றானுரைப்பேன்மகிமைகேளே, அஎக

## போகர்அமராபுரிகண்டது.

கேளப்பாவமராபுரிசென்றேன்யானும் கொடியானகோட்டை முதலுளவுகண்டேன்,தாளப்பாதங்கமதில்கோட்டையப்பா தாக்கான மாளிகையுங்கோபுரந்தான், வாளப்பாவீதிகளின்தேர்களப்பா வகுப் பானசோலைமுதல்தோப்புமுண்டு, நீளப்பாமல்லிகைப்பூசாலையுண்டு நீடாழிகோட்டைக்குவலங்கமுண்டே. அஎஉ

உண்டானவசுவங்கள்கூட்டமுண்டு உத்தமனேவெள்ளானைக்கூ ட்டமுண்டு, இட்டானகோட்டைக்குள்ளனேகமாதர் சிறப்புடனேநா ட்டியங்கள்செய்துநிற்பார். பண்டானகனிவகைகளனேகமுண்டு பாங் கானதேவதா கனியென்பார்கள், வண்டானகூட்டங்கள்கீதம்பாடும் மகத்தானதொனியோசையனேகம்பாரே. அஎங

பாரேதான்நவரத்தினமலையுமுண்டு பாலகனேவெகுகோடிரிஷி கள்கண்டேன், மேரேதுடன்மேருவுமிதற்கீடல்ல மெத்தவுண்டுவதி சயங்கள்சொல்லப்போமோ, நேரேதான்வாக்கினையின்பக்கல்சென் றேன் நெடிதானவடக்குபுரம்கொண்டுசென்றார், சீரேதானுக்கினைகள் மெத்தவுண்டு சிறப்புடனேகண்டுமல்லோ திடுக்கிட்டேனே. அஎச

திடுக்கிட்டுப்பார்த்தளவில்கிங்கிலியரப்பா சிறன்கூட்டமாயிரம் பேரோடிவந்து, ஒருக்கமுடன்தூதுவர்களாயிரம்பேர் வுத்தமர்களா னவர்களொன்றாய்க்கூடி, நடுக்கமுடன்நரகமதிலிழுத்துக் கொண்டு நாட்டமுடன்றள்ளுகின்றவளமைகண்டேன், ஒடுக்கமுடன்மாந்தர் களைதான்குறித்து வுத்தமரேசெய்பாவஞ்சொல்லென்றாரே. அஎரு

சொல்லென்றுகேட்கையிலே தூதர்தாமும் செப்பலுற்றாரவர் செய்தபாபந்தன்னை, வெல்லவேபூசைமுகமிடர்செய்தோர்கள் வேக முடனுடைமைதனைகொள்ளைகொண்டோர் புல்லவேமிருகமென்றசீவ ன்தன்னைபெருக்கமுடன்வதை செய்துகொன்றுபோட்டோர், அல்ல லுடன்கைசயோகஞ்செய்தபேரை அகடழித்துநாணம்வரச்செய்தோர் தாமே. அஎசு

செய்யவேதபசுகட்குயின்னல்செய்தோர் செயலானபாக்கியத் தைதங்கொள்ளைகொண்டோர், மெய்யுடனேபுருஷனுக்குவுண்மையே

சிமேதினியில் சோரத்தும்மசெய்தபேரும், கைதவமாய்ஞானிகட்கு யிடர்செய்தோரும் காசினியில் நற்பெண்டீர் கொடுத்தபேரும், வெ யில்தனிலேமாடுகட்குசலங்காட்டாமல்வெட்டவெளி தனனிலேதான் விட்டோர்தாமே. அஎஎ

விட்டுபெரியோர்களைத்தானகமேபேசி வேதாந்தத் தின்மையெ னும்நாதர்தம்மை, கொட்டுமேபறடு கடித்தியிடங்கொடாமல்தோரு மல்சதாகாலத்துன்பஞ்செய்தோர், நட்டமுடன்யகதிபரதேசிதம்மை நாடோறுமைய மிடாதிட்டபேரும், வட்டமுடன் குழந்தைகட்குபா ல்கொடாமல்வாகுடனே வதைசெய்தோர் பாவியாமே. அஎஅ

பாவியாயிருந்து குஷ்டரோகமாகி பாரினிலேவெகுகோடிபாப ஞ்செய்தோர், பூவினிலே வழக்கோரஞ் சொன்னபாவி பொன்தனை யேயபகரித்தபாவியோரும், தேவியெனுமம்பாளின் பூசைமார்க்கம் தேடியேமிக்க கெடுதிசெய்தபேரும், நாவினிலேபாஷாணந் தடவிய ல்லோ நாயகனைக்கொன்ற தொருபுண்ணியோர்க்கே அஎகூ

புண்ணியனுமனியாயஞ்செய்தபேரைபேரின்பவீட்டதனை ஜோடித் தோர்கள், திண்ணமுடன் வைகுண்டப் பதியிலெல்லாம் திசைகெட் டுமுறிபட்டுகிடக்கும்வண்ணம், நண்ணமுடனிதுகளெல்லாங்கண்டே ன்யானும் நனினமுடன் வக்கினியின் சுவாலைகண்டேன் தண்ணமுட ன்வட்டையென்ற குழியுங்கண்டேன் தாக்கானவரணையென்ற குழி கண்டேனே. அஅ௦

கண்டேனே முதலையுடசுனையுங்கண்டேன் காறுறுவோடைகளி ல்பானைகண்டேன், தண்டமுள்ளகாடுகள் போலனந்தங்கண்டேன் த ண்மையுள்ளதீரகிற்றள்ளக் கண்டேன், கொண்டல்வண்ணனச்சுத னையங்கேகண்டேன் கோடான கோடிமனுராசர்கண்டேன், தெண்ட முடன்ரிஷிக்கூட்டங்கோடி சேனைகொற்றவனை சூழ்ந்திருக்கப்பார்த் திட்டேனே. அஅக

பார்த்தேனே ஏமபுரத்துச் சாங்கமெல்லாம் பாழ்நரகுடுகுழி யாவுங்கண்டேன், தீர்த்தமுடன்லிங்கமது தெரிசித்தேன்யான்சிறமு டனேகோடிமுனிதபசிகண்டேன்சேர்த்துமே வைகுண்டபதியைக் க ண்டேன் சேனைதிரள்கூட்டமதைசேனைகண்டேன்பார்த்துமேவந்தே ன்யான்பரலோகத்தைபராபரியாள் கிருபைதன்னால்பார்த்திட்டேனே

பார்க்கவென்றால் எந்தனதுகணக்கு கண்டேன்பாரினில் மூன் றுயுகமிருக்கக்கண்டேன், தீர்த்தமுடன் கணக்கெல்லாம் பார்த்தாரு ய்ந்துதிறமுடனே கண்டுவந்தேன் தெளிவதாக, ஏர்க்கவேசத்தலோ

கத்தின்மார்க்கம் எனைப்போலக்கண்டவருமொருவருண்டோ, ஈற்க
மலவட்டத்தானாயிபாதம்நான்வணங்கிகண்டறிந்தேனவிலத்தானே.

## வைகுண்டத்தில் பிரமாவைக்கண்டது.

தானான முன்யுகத்திற்பிரமாவுக்குதாக்கானஈஸ்பரியாள்தந்தசா
பம், கோனான எனதையர்காலாங்கிநாதர்குருசாமி பெந்தனுக்குசொ
ன்னதுண்டு, தேனான பிரமாவும்வைகுண்டத்திற்றேர் வேந்தராசரிட
மிருக்கக்கண்டேன், பானான ரிஷிக்கூட்டமாயிரம்பேர்பாங்குடனே பி
ரமனிடம்கண்டேன்பாரே. ௮௮௪

கண்டேனேயின்னம் வெகுவதிசயத்தைக் காசினியிலாருந்தான்
கண்டதில்லை, திண்டானவரத்துமகோடி கூறென்றனூ வுத்தமனே
யவரவர்கள்செய்தபாவம், கொண்டானமட்டுக்கும்வாக்கினையுங்குறி
ப்புடனே நேமிப்பார் தருமராசன், சண்டாளமானதொருகர்மிபோற்
குசதாகாலமாக்கினைகள் நேருந்தானே. ௮௮௫

நேரவென்றால் புண்ணியர்கள் மெத்தவுண்டுநெடுங்காலம் தவசி
ருப்பார் மனுக்கள்கோடி, சேரவேவெகுநாளாயிருந்து பார்த்தேன்
சேனைதிரள் கூட்டங்கள் புண்ணியவான்கள், கூறவேமுடியாதுசேட
சாரம் சொன்னாலும்நம்பார்கள் கர்மிமாண்பர், திறமுடனேவடிவேனு
ம்கிட்டிருந்துதிகழுடனே கண்டேனேபோகர்தாமே. ௮௮௬

தாமானபின்னமொரு கருமானங்கேள் தயவாகச்சொல்லுகிறே
ன்தன்மையாக, சாமானமானதொரு வகத்தியர்தாமும்சாங்கமுடன்
வைகுண்டந்தன்னிற் கண்டேன், கோமானுங் கொங்கணவர் செய்த
பாவம்குவலயத்தில் முற்பிறப்பில்மெத்தவுண்டு, பூமானும்கொங்கண
ரைகேள்விகேட்டுபுத்தி யுடன்தண்டனைக்குள்ளாக்கினாரே. ௮௮௭

ஆக்கினர் விடைக்காட்டார் தன்னைக் கண்டேன் அப்பனேயவர்
செய்தவினைதான்கேளு, பாக்கியங்களனேகமதாய்க்கொண்டு மென்ன
பாருலகில்சிவதருமமில்லைப்பா, ஏோக்கமுடன்வவர்செய்த பூர்வபு
ண்ணியம்கோடிக்குள்ளோராசனவன்கண்டாருய்ந்து, தாக்கவென்று
அவர்மீதில்பட்சம்வைத்துகஷ்டமில்வாக்கினைக்குள் சென்றிட்டாரே.

சென்றவுடன் சிவவாக்கியர்தன்னைக் கண்டேன்சிறப்புடனேயவ
ர்தம்மைகேள்விகேட்டார், ஒன்றுமில்லையவர்மீதில்குற்றமில்லையுத்த
மனேவைகுண்டப்பதியில்தாமும் குன்றின்மேலிடங் கொடுத்தார்து
தர்தாமும் கொப்பெனவேசாமிக்குத் தொண்டனுக்கி, வென்றிடவே
சதாகாலம் கைலாசத்தில்வேகமுடன்வீற்றிருக்கவெடுவுண்டாச்சே.

ஆச்சப்பாபிரமமுனி தன்னைக்கண்டேன் அப்பனேயவர்செய்த கொடுமைகேளுப், மூச்சடங்கிபிணம்போலயிருக்கநித்தன் முடிமீதில் செம்மாலை யணிந்துகொண்டு பாச்சலுடன் வெருதேசம்வோடிச் சென்று பாடுபட்டுதிரவியங்கள் சேகரித்து, மூச்சலுடன்சாத்திரங் கள்படித்துக்கொண்டுமாருட்டமாகவல்லோமறைந்தார்தாமே ௮௧௦

மறைத்தபொருளான திருல்சித்துதம்மை மார்க்கமுடன்வைகு ண்டத்தன்னிற்சென்று, குறைந்தபொருளுளவுகளை மறைத்ததாலே கோடானகோடிபாவம்நேர்ந்ததென்று, நிரைத்தனமாய்தன்மனமெ ண்ணலானார் நேர்மையுடன்வைகுண்டப்பதியின்சேதி முறைப்படியே செய்யவென்றுநாதர்தாமும்மூபன்றுமேவாக்கினைகள்செய்திட்டாரே

செய்யவேகமலமுனி தன்னைக்கண்டேன் சேர்வைமுகம்கானு கையிலடியேன்பக்கல், பையவேதீர்ப்புமிகச்செய்யக்கண்டேன் பாழ் நரகில்சிலபேர்களிழுக்கக்கண்டேன், தொய்யவேகாலனவன்கிருபை வைத்து திம்புரவாய்யெக்நாளும்தர்மஞ்செய்ய மெய்யுடனேதீர்ப்பு ரைக்ககண்டேன்யானு மேதினியில்சொன்னாலும்பொய்யென்பாரே.

பொய்யென்பார்பூதலத்தார்சொல்லுவார்கள் பொங்குமுடன்யா ன்கண்டவரையிற்சொல்வேன், மெய்யுடனேபுலிப்பாணிதன்னைக்கண் டேன்மேதினியிலனேகமதாப்பாபஞ்செய்தார், கைதவமாயவர்செய் தபாவந்தன்னை கண்டுமெல்லோயெமதர்மராஜன்தானும், பையவேவா க்கினைகள்செய்யக்கண்டேன் பாழ்நரகிலிழுத்து போகக்கண்டேன் தானே. ௮௧௩

தானனபுண்ணாக்கர் தன்னைக்கண்டேன் தாக்கானயவர்செய்த கொடுமைமெத்த, தேனானவென்னையர்காலாங்கிநாதர் தேர்வேந்த ரானவரும்சொன்னதுண்டு, பானனபுண்ணாக்கர்தன்னையானும் யமப ணிடையிலேதனில்கண்டேனப்பா கோணனபுண்ணாக்கர்செய்தபாபம் கோடியுண்டுலக்கில்லையென்பார்காணே. ௮௧௪

மாறப்பாவஞ்சமாய்வீட்டுக்குள்ளேமன்னவனேநடுமையம் நின்றுகொண்டு, கூறப்பாசெத்தவரைகாணவென்றுகுறிப்புடனே பட்சம்வைத்துகாண்பதற்கு, நேரப்பாவந்தவர்பேர்வூர் தானென்னகில்லாணயிருப்பிடமும் ரூபமென்ன, ஊரப்பாமுன்னிருந்த ரூபமென்னவுத்தமனேயிறந்தபின்புரூபங்கேளே. அஎ

கேளவேவடிவந்நின் வரணங்கேளு கெடியானவாடை யென்றரூபங்கேளு, நீளவேவாபரணப்பெயருங்கேளு நிலையானைத்தொழிலபின்னங்கேளு, மீளவேமரபினிடகுலாச்சாரந்தான் மிக்கானவொழுக்கமென்றவாசாரங்கேள் மாளவேமாண்டதோர்வருஷங்கேளு மன்னவனேமாதமென்றமுடிவுங்கேளே. அஅ

கேட்கையிலேயிறந்தகோர் நாளுஞ்சொல்லும்கெவுனமுடன்நாழிகையும் முன்னேகூறும், நீட்கமுடனடையாளம்சொல்லும்போது நிஷ்களங்கமாகவல்லோ உண்மைதோன்றும், சூட்சமுடன் குறளிக்குதிலகவித்தைசுத்தமுடன்சொல்லுகின்றதன்மையுண்டு, வேட்கமுடன்பில்லிதனை வசியஞ்செய்து லோகமதில் வெருசித்து வாடலாமே.

ஆடலாம் வெகுதந்திரம் குறளிக்குண்டு அப்பனேசூனியமுமிதனுலுண்டு, தேடவேகுட்டியதுமலைகுட்டிதானும்தெளிவுடனே நாசொன்னகாரியத்தை, ஊடவேஒளித்திருந்து வதைபச்செய்யும்வுத்தமனேயிருள்மாளிகாணலாகும், நாடவேஜாலக்காள்மோகினியுந்தானும் நலமானகுட்டியென்ற வீரியனுந்தானே. ௬௦

தானுனவீரியனும் ஆரியனும்வேண்டும் தகமையுள்ள வீரியனுயிருப்பானுனல், வேனுனமந்திரத்தை மிகவேபேசும் மிக்கானகிரமவிதிதானடத்தும், பானுனகுருமுறைபோல்பாகஞ்சொல்லும் பால

கனேயாகமது குறுதிகூறும், தேனனவீரியனுங்குட்டிதன்னை தெளிவுபெறலோகமதில்வசியஞ்செய்யே. ௬௧

செய்யவேகுட்டியெனும் வசியமானால் ஜெகத்திலே கோடிவித்தையாடலாகும், பையவேமாக்கர்மேலேவதாகும் பாங்குடனேகல்லதனைபெறியலாகும், மெய்யுடனே ஜெகஜாலவித்தையப்பா மேதினியிலாருந்தான்செய்யவில்லை, பெய்யவேசங்கலியன் கறுப்பன்தானும் பேரானவண்ணமாரேழுமாமே. ௬௨

ஏழானவண்ணமார்காவலாளர்எழிலான ஜாலமென்றமாளிதன்னில், பாழானவையன்மார்பிடாரிதானும் பச்சையென்ற தேவதையும் காளியோடு, வாழாதகுமரிகளுஞ்சத்தகன்னி வளமுடனே பச்சையென்றபல்லக்குதன்னை தாழாமல்தோளதனிலெடுத்துக்கொண்டு தகமையுடன் காளிதனை தூக்குவாரே. ௬௩

தூக்கியேஜாலமென்றமாளிதன்னில் தப்புரவாய்காவலுடனிருந்துகொண்டு நேசக்கமுடன் தேவதையை வசியஞ்செய்து கொடிக்குள்ளேகோடிவித்தையாடலாகும், பார்க்கவென்றுலோகமதில்மாந்தர் யாவும், பதைபதைத்து நடுநடுங்கிககருவார்கள், வாக்குடனேவாமுனைக்குபதமுந்தந்து வாகுடனேசெல்லுமென செப்புக்தானே. ௬௪

செல்லவென்றால் யின்னம்வெகுகூத்துகேளீர் செயலானநாதர்முனிரிஷிகள்தாமும், வெல்லவேபூதமதை வசியஞ்செய்து வேணவுபசாரமதாவதன்மையாலே, புல்லவேயேவல்தனைச் செய்யவென்று புகழாகவசியமது செய்துகொண்டு, மெல்லவே தம்பணிக்கி ஆனதாக்கி மேன்மையுடன் சித்துகளுமாடினாரே. ௬௫

ஆடினார்வெகுகோடிகாலமப்பா அவனியிலேசித்தர்களுமுனிவர்தாமும், கூடியேபில்லியென்ற பூதந்தன்னை குணபடுத்திதம்வசமாய் செய்துகொண்டு, தேடியேவெகுகோடிநிதிகள்தன்னைதேசமதில் பூதத்தின்வசியத்தாலே, நீடியேகர்ப்பாந்தகாலமட்டும் நீனிலத்தில்தாமிருந்தார் சித்தர்தாமே. ௬௬

சித்தானசித்துவகையின்னஞ்சொல்வேன் ஜெகதலத்திலனேகவிதபூதமுண்டு, முத்தானவேதாளபூதமப்பா மூதுலகில் ராஜர்களும் வசியஞ்செய்வார், சித்தமுடன்வேதாளமுந்தானும் நேர்மையுடன்விக்கிரமாதித்தனுக்கு, சுத்தமுடன் வாகனமாயிருந்துகொண்டு தொல்லுலகில் வெகுகால மிருந்தார்தாமே. ௬௭

இருக்குமே யின்னம்வெகு வினைதங்களு மெழிலானஜாலமெ
ன்றமாளிதன்னில், பொருந்தவேயெல்லவரும்பார்க்கவேதான் பொ
லிவான யெக்காளஜாலந்தன்னை, திருந்தவே யெழுநூற்றியிருபதுக்
குள் திறமானமாளிகையாம்பக்கோரத்தில், வருந்தியே தானிருந்து
ஜாலமாளி வாகுடனே குடியிருப்பு கண்டோம்பாரே. ௯௮

கண்டோமேயின்னமொருகருமானங்கேள் கருவானநகார்ச்சுன்
றசிர்மத்தில், தண்டுளவமாலையணிபூண்டுகொண்டு தக்கனுட யாக
மதில்தானிருந்து, கொண்டல்வண்ணனச்சுதனும் கோமான்தானும்
குடியிருப்பு, கோட்டைதனில் காவல்நின்ற துண்டரிகமானதொரு
ராட்சதபூதம் துடியானதேவனுபூதமாமே. ௯௯

ஆமேதான் பூதமதுதன்னைத்தானும் அப்பனேஜாலமென்ற மா
ளிதன்னில், பேரமேதான்நடுமையம்மத்திவாசல் பொங்கமுடன்கறு
வீரன் பத்திரகாளி, வேமேதான்கறுப்பண்ணன் டாகினிதானும்மிக்
கான காட்டேரிசங்கிலிநாயன், தாமேதான்சொன்னபடி மசானவிற்
சட்டமுடன் தெய்வங்களனேகமுண்டே. ௧௦௦

உண்டான தெய்வங்களனேகமுண்டு வுத்தமனே சர்வகலைக்கியா
னமுண்டு, பண்டான பொய்களவு சூதுமுண்டு பண்பான விசுவாச
நில்லைகண்டீர், திண்டான ராட்சதமாம் பூதந்தன்னில் திறளான நவ
கோடி ரிஷிகளெல்லாம், கண்டிதமாய்யித்தாதி பூதந்தன்னில் காசி
னியிற் கோடிவித்தையாடலாமே. ௧௦௧

ஆடலாம்பலபேத பூதந்தன்னால்வப்பனே வஷ்டகர்ம வித்தை
யாகும், நீடவேஜாலமென்றமாளிதன்னில் நேர்புடனே கோடிவரை
யாடலாகும், பாடவேபூதங்கள் தன்னிலும்பாங்குடனே சங்கீதங்
கூறலாகும், தேடவே எக்காளஜாலந்தன்னை தெளிவுடனே யாட்டி
வைக்கும் பூதம்பாரே. ௧௦௨

பூதங்கள்பலபேதவாத்தியங்களை வாசிக்கும்ஜாலம்.

பாரேதானஷ்டவிதமாளிதன்னில் பாங்குடனேவஷ்டவிதவாத்
தியங்கள், நேரேதானொருமாளி சின்னமாகும் நேர்ப்புடனே ஒரு
மாளி திரிச்சங்காகும், வேரேதானொருமாளி பிரம்மதாளம் வேகமு
டன்ஒருமாளி துத்தாரியாகும், சேரேதானொருமாளி தம்பூறுமாகும்
சிறப்பானவொருமாளி மத்தளமுமாமே. ௧௦௩

ஆமேதானொருமாளி கைத்தளமுமாகும் வப்பனேயொருமாளி
தம்பறையுமாகும், வாமேதானெட்டுவித மாளிதன்னில் வாகுடனே

பலபேதவாத்தியங்கள், நாமேதா னிருமித்தவண்ணமாகும் நலமுட னே மாளிதனில் சென்றமேதான் பாமேதான், மந்திராட்சாத்தை யோத பாடுமேபலவித வாத்தியங்கள்தானே. ௪0௪

தானனவாத்தியங்கள்கேட்கும்போது தகமையுடன்மாந்தரெ ல்லாம்பிரமிப்பாகும், கோனனமாளிகனில்குடியிருப்புகொற்றவனே யாருந்தானில்லைகண்டீர், தேனனவமிர்தமதுபோலேபல்லோ தெளி வான வாத்தியங்கள்கூறலாகும், பானன பலபேத தொனிகள்தோற் றும் பாரினிலே மாந்தரெல்லாம் பிரமிப்பாரே. ௪0௫

போகர்கோகர்ண ஜாலம்.

பாரேதான்யெழுநூற்றியிருபதுக்குள் பகருவேன்கோகர்ண ஜா லந்தன்னை, நேரேதான் நெடுஞ்சாலமாளிகைக்குள் நேர்மையுடன் கிடையொன்றுநாட்டியேதான், வாரேதான்நெடுங்கம்பி நாலுபக்கம் வாகுடனே தானிறுத்திஸிட்டம்பூண்டு, சேரேதான் மேல்வட்டங்கயர் கள்மாட்டி சிறப்புடனேகீழ்வட்டம் மணிகள்மாட்டே. ௪0௬

மாட்டவே நடுக்கம்பந்தன்னிலேதான்மகிப்புடனேமேற்சிகரம் நின்றுகொண்டு, ஒட்டமுடன்கயறுதனைப்பிடித்துக்கொண்டு ஓங்கார சபதமுடன் சுத்திவந்து நாட்டமுடன் தரணிதனை யண்ணார்ந்துபார் த்து நயமுடனேகுளிகைதனைவாயிற்பூண்டு, தேட்டமுடன் துதிக்கை யிலே கரணம்தன்னை தெளிவாகக்காணுதற்கு ஜாலங்கேளே. ௪0௭

கேளேதான் வஞ்சனமாம் மையைத்தீட்டி கெவனமுடன்லாட மதில்வசியம்பூண்டு, பாளேதான்போகாமல் கருவுதன்னை பாங்குட னே தேகத்திற்பூசக்கேளு, நாளேதான் வாணரூபங்கெஜரூபமாக்கி நானிலத்தின்மேலிருந்து குதிப்பாயானால், சூளேதான்சகஸ்திரமாம் யானைதோற்றம் சுந்தானே பார்வைக்குவாதாயந்தானே. ௪0௮

தானனசகஸ்திரமாம் யானைரூபம்தகமையுடன் மாந்தரெல்லா ங்காணலாகும், பானனபராபரத்தை காணமாட்டார் பாரினிலே கோகர்ணவித்தைகாண்பார், தானனவித்தையது கோகர்ணவித்தை தேசத்தில்கிட்டாதுமாந்தருக்கு,வேனனசீனபதிதேசத்தார்கள் விரு ப்பமுடன்செய்கின்ற ஜாலமாமே. ௪0௯

ஆமேதான் மச்சென்றமாளிதன்னில் அப்பனே கோகர்ணவித் தைசெய்வேன், தாமேதான் கயர்தனிலே மேலேநின்று தாக்கான வூசியென்ற காந்தந்தன்னால், வாமேதான் வுச்சாணி தன்னிலப்பா

வேகமுடன் னின்றுகொண்டுகரந்தைவீச, சாமேதான் சகத்திரமாங் கரங்கள் தானும் சரஞ்சரமாய்வந்துவிழக் காணலாமே. ௧௧௦

காணலாம்வஞ்சனமாங்கருவினாலே காசினியில்வெகுகோடி வித்தைகாண்பீர், பூணலாம்மந்திரத்தின் வசியத்தாலும் போக்கான பிரணவத்தின் வாறலாலும், தோணவே தேவதையும் வசியத்தாலேதோற்றமுள்ள கருவியிடபேதத்தாலும், நாணவே சதாகாலம் மாளிசென்று நாட்டமுடன் ஜாலவித்தையாடலாமே. ௧௧௧

ஆடலாம்ஜெககோடி பதிகள்கோடி அப்பனேவெகுகாலமிருந்துகொண்டு, தேடலாம்சின்மயத்தின் கேசரமாம்வித்தை தெளிவுடனே ஆடுதற்குபின்னங்கேளு, கூடலாம் கேசரத்திலிருந்துகொண்டு கோடான கோடிவித்தையாடலாகும், நீடலாம் வானரத்தின் வித்தைகேளும் நெடிதான அங்குதனர்வித்தையாமே. ௧௧௨

வித்தையிலேயின்னமொருவித்தைகேளும் வீரனும் அங்குதனர் வனுமார்தானும், சித்தமுடன் வஞ்சனமாமைமைத்தானும் நீடுறவே வுள்ளங்கைதன்னிற்றூக்கி, சுத்தமுடன் கேசரத்தி லிருந்துகொண்டு துப்புரவாய்வட்சரத்தை யோதும்போது, மத்திபத்தில் நடுமையமிருந்துகொண்டு மானிலத்தில் வஞ்சனத்தைப்போடுவாரே. ௧௧௩

போடையிலேஜாதிவர்ணஞ் சொல்லக்கேளும் பொலிவான நீலவிழித்தானுமாக, நீடயிலேபூனையென்றநேத்திரமாகும் நீடாழிவஞ்சனத்தைப்பார்க்கவென்றால், கூடயிலேகுபேரனென்றபட்டணந்தான் குவலயத்தின் நிதிகளெல்லாங்காணலாகும், தேடயிலே வனுமானும் முன்னேநிற்கும் தெளிவானதேவதையுங் காணலாமே. ௧௧௪

காணயிலேபிரணவத்தையோதும்போது கருவான மைதனிலே மகிமைகேளு, தோணவேவீரபத்ரன்முன்னேநிற்பான்தோற்றுகையிலனுமாருங் கொண்டுசெல்லும், பூணவே ஸ்ரீராமர்வைத்தபொன்னை பொங்கமுடன் பாதாளவஞ்சனத்தில், நாணவேயனுமாரும் மிகவே சொல்லும் நாட்டமுடன்நிதியெடுக்க ஜாலமாச்சே. ௧௧௫

## போகர் அஞ்சனத்தில்ராமர்திரவியத்தையெடுத்தது.

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு அப்பனே யான்கண்டவரைக்குஞ்சொல்வேன், நாச்சனுடனெழுநூற்று சொச்சம்வீட்டில் நடுவானமத்திமத்தில் சதுரம்போடு, வீச்சுடனே பதினைந்து வரைதான்போடு விவரமுடன் குறுக்குவரைபதினைந்தாகும், ஏச்சனுடன் நெடுகுவரைபதினைந்தாகும் எழிலான நூத்தியம்பதரையுமாச்சே,

அறையானவிடுமுனை சூலம்போடு அப்பனே ரீங்காரங்கொண்டு
மோது,நிரையோடிஓங்காரமுள்ளடக்கிதிட்டமுடன்எட்டியென்றபீட
மீதில்,முறையோடு மௌனமதா யிருந்துகொண்டு மூன்றெழுத்து
மைந்தெழுத்தும்ஓதித்தீரு, சிறையானவைரவனும் முன்னேநிற்பான்
சிறனுடன்பிரணவத்தை யோதுவீரே. ககஎ

ஓதுகையில் அஞ்செழுத்தையுள்ளடக்கி உத்தமனே னவ்வெழு
த்தைமவ்வெழுத்திலூணி, தீதாவேபகையாளி தன்னைநோக்கி திட்ட
முடன்கற்பூரவொளிதான்கொண்டு, காதலுடன் வட்சரத்தை யுள்ள
மர்த்திகருவாகச்செய்பவனேசித்தனாகும்,கோதலுடன்வஞ்சனத்தை
கையில்தீட்டி நோக்கமுடன் செய்பவனேசித்தனாமே. ககஅ

ஆமேதான் பிரணவத்தையுச்சரித்து ஆண்டவனைத்தானினைந்து
வருளும்வோதி, தாமேதான் பாதாளவஞ்சனத்தை தாரணியிலெல்ல
வருங்கண்டுமெச்ச, வேமேதான் சத்துருமித்துருவுதானும் வேகமு
டன சென்றுமல்லோ வுறவுபேசி, நாமேதான் ரீங்காரம் வுள்ளடக்கி
நாட்டமுடனோங்காரம் உள்ளேபூட்டே. ககக

பூட்டுகையில் பிரணவத்தையோதும்போது பொங்கமுடன்ச
துருமித்துருவுமாகும், நாட்டுகையிலநசிமசிமசி யென்றேயோத ந
மடா வஞ்சனத்தின் தயிலத்தாலே, வாட்டுகையில்குறளிமுதல்
பேதம் வஞ்சனுமேதனிமுதல் வசியமாகும், சூட்டுகையில்காலனவ
நிரேநிற்கான் துரைராஜவஞ்சனத்தின் மையின்போக்கே.

போக்கான காலாங்கிநாதர்பாதம் பொங்கமுடன் யான்வ
சினதேசம், நோக்கமுடன்காம்மலேவனூர்திரங்கள் நொடிக்குள்
ன்றுமல்லோ வேதைபார்த்தேன், தாக்கவே சினபதிதேசத்
சட்டமுடனெந்தனையுங் குருவாயெண்ணி, வாக்குடனேகுரு
யாஞ் சிஷனென்றுவசனித்தார் கோடியுகம் வசனித்தாரே. அ

வசனித்தார் சினபதி மாந்தரெல்லாம் வறைகோடி தின லா
வருக்கக்கோடி, நிதமுடனேயென்வாக்குமெய்யென்றெண்ண லே
புலகமெலாம்வசனிப்பார்கள், தசமுடனேதாரணியிலஞ்சனத
தாக்குடனே வெகுமாந்தர்செய்துபார்த்து, பிசகில்லாப் சிரு
தை மெய்யென்றெண்ணி பேருலகில்மாந்தரெல்லாந்துதித்து ௨கூ

துதித்தாரேகாலாங்கிநாதர்தம்மை தோற்றமுடன் வித்
வாசிர்மித்து, மதிப்புடனே யவர்பாதம் தான்வணங்கி கான

வெப்போதும்கருணை கூர்ந்து, கதிப்புடனே சமாதிதனிலிருந்தாகொ
ண்டு சதாகாலம்லாடமதில்லையேபூண்டு, விதிப்பபனே தானெண்ணி
விண்ணின் மீதில் வெகுகாலம் தானிருந்தார் மாந்தர்தாமே. கஉரு

## வைத்தியசூட்சமுப்பூ.

தாமானவின்னமொருமார்கம்பாருதயவுடனேமாணுக்கள்பிழை
க்கவென்று, கோமானும் பங்குனி சித்திரையிலப்பா கொற்றவனே
பூநீறுவிளையுங்காலம், மானான பூனீரைத்தானெடுத்து மார்கமுடன்
செப்புகிறேன்மைந்தாகேளு, பானான பூநீரைப்படிதான்ரண்டு பாக
முடன் வாரிவந்துசெப்பக்கேளே. கஉச

செப்பவென்றுசுகற்சுண்ணம்படிதான்நான்கு தெளிவானவமுரி
யதுபடிதான்பத்து, ஒப்பமுடன்கல்லெண்ணைபடிதான்வைந்து வுத்த
மனேயிரண்டையுந்தான்கலக்கிக்கொண்டு, நெப்பமுடன்தெளிவிறுத்
துப்பின்னுங்கேளு நேர்புடனேதான்காய்ச்சவுப்பேயாகும், துப்பற
வேயுப்பதுவு மிகவேபூர்க்கும் துறையாகயுப்பதுவை பததுமுறைகா
ய்ச்சே. கஉரு

காச்சிடவே சாம்பலது செப்பக்கேளு கருவானசாம்பலதுஎரு
க்கம்பலப்பா, நீச்சென்ற வெருச்சாம்பல் கொண்டுவந்து நிசமான
விழும்பதுவைத்தானெடுத்து, பாச்சிபேசல்லாவை மேலேபோட்டுப்
பணத்முடன்குழம்பதுவைமேலேயூத்து, ஏச்சலென்ற வுண்டைதனே
குவத்துக்கொண்டு வெழிலானரவிதனிலே காயப்போடே. கஉசு

முன்காய்ந்தபின்பு பாண்டமதிலிட்டுமைந்தா கவனமுடன் வரைப்
பாண்டம் போட்டுமேதான், தோய்ந்திடவே மல்லியென்ற மிலையை
மகிமையா சுத்தமுடன் வதன்மேலே வைத்துக்கொண்டு, தோய்ந்திட
லனும் மற்சட்டிக்கொண்டுமூடித் தெளிவாக சீலையது வலுவாய்ச்செ
பொங்கு ரய்ந்திடவே தீயெரிப்பாய் காலுசாமம்பதமுடனே தானெடு
சொல்லு பின்னுங்கேளே. கஉஎ

ங்லுங்கேள் யேரியிலே வளர்ந்தபிண்டம் பேரான யிறச்சிபு
திகங்கொண்டு, வின்னமுடன் துவாரமதனிட்டுமைந்தா விவர
ஆரமதவொன்றேயாகும், கன்னலுடன்பச்சையென்ற பூரங்
கைக்குக்கருவானபூநீறும் சரியாய்ச்சேர்த்து, பன்னவே சிப்பிக்குத்
நடுவானிட்டுப் பாலகனேயிம்மருந்தில் குன்றிபோடே. கஉஅ

தான்பேர்
நெடுகுவலயா மருந்ததுதான் போட்டபின்புகுமுறவேதளவாயாஞ்
சுண்ணில், வென்றிடவேயடுக்கடுக்காய் பரப்பிமைந்தாமேல்மூடி

ற்றில்லாவொடுக்கந்தன்னில், பன்றிடவேவைத்தவுடன் சலமிறங் கும் பட்சமுடன்ஜெயநீரை யெடுத்துப்பாலா, நான்றிடவே மேற் சொன்ன பூநீற்சேர்த்து சாக்கமுடன்றுனரைப்பாய் சாமமாலே ()

காலானசாமமது வரைக்கும்போது கலமான வுரவன்குழிபா னிதானும், காலான ரூதமுடன்பச்சைபூரங் கருவான வாறுபுள்ளி தன்டுஞ்சேர்த்து, பாலானசீனமுடன் சாரஞ்சேர்த்து பாகமுடன் தானரைப்பாய் லகுவதாக, வேலான பில்லைபது தட்டிமைந்தா வேக முடன் ரவிதனிலே காயப்போடே. கூ௦

போடேதான்பில்லைபது காய்ந்தபின்பு பொங்கமுடன் போரண் டஞ்சுத்திசெய்து, நீடேதான்வகல்தனிலே யிம்பரப்பிரேர்மையுடன் பில்லைதனைமேலேவைத்து, நாடேதான்மேனுமந்தப்பொடியைப்போ ட்டு துப்புறவாய்மேல்மூடிசீலைசெய்து, காடேதான்ரவிதனிலேகாய் ந்தபின்பு கனமாகக்கோழியென்ற புடந்தான்போடே. கூ௧

புடமதுதான்றீயாறியெடுத்துப்பாரு பொங்கமுடன் சுண்ணா பாமட்டிபோலாம், திடமுடனே பத்துமுறையிப்படியேபோடு திற மானசுண்ணமதுவாகும்பாரு, தடமானசுண்ணமதுயெடுத்துக்கொண் டுதாமையுடன்போரண்டம் சிற்றண்டத்தோடு, கடமானசிப்பியொடு நண்டுதானும் கருவானநத்தையொடு சமனதாமே. கூ௨

நத்தையுடனிவையெல்லா மொன்றாய்க்கூட்டி கலம்பெறவேசிற் றண்டக்கருவாலாட்டி, முத்திபெற மூசையிட்டுஊதிப்பாரு வுத்தம னேசுண்ணம்பாயிருக்கும்பாரு, பத்தியுடன் வுலையில்வைத்து ஆதம் போது பாங்கானசுண்ணம்பாயிருக்கும்பாரு, வெத்தியுடன் சுண்ண மதையெடுத்துக்கொண்டு வேதாந்தத்தாயினது வருளைப்போற்றே.

போற்றியே சுண்ணம்பைத்தானெடுத்துப் புகழாக மூசையொ ன்றுபிடித்துமேதான், ஆற்றியேமுன்சொன்ன முப்புச்சுன்னம் அப் பனேதானெடுத்து மூசையிட்டு, நாற்றியேதேவதைக்குப் பூசைசெ ய்து நுறைபோல முறைபோலசீலைசெய்து, மாற்றியே சுண்ணம்புச் சீலைசெய்து மயங்காமல்புடம்போட தீர்ப்போமே. கூ௪

தீறியதோர்பற்பத்தையெடுத்துக்கொண்டு திண்ணவாகயிப்படியே பத்துமுறைபோடு, கூறியதோர்பற்பமது குருபற்பமாச்சுணமான காரமென்றகாலனாகும், மீறியதோர் சாக்கெல்லாங் கொல்லுங்காலன் மிக்கானபற்பமது குருவுமாகும், தேறியதோர் பற்பமதிலெந்தபாகம் தெளிவாகச்செய்தாலும் தாக்கிடாதே. கூ௫

தாக்கவென்றால்கிரதங்கள் லேகியங்கள் தலைமையுள்ளசெந்தூரம்பற்பம்யாவும், நோக்கமுடன்குளிகைகள்பாடம்யாவும் நுணுக்கமுடன்மாத்திரைகள்கட்டுவகையாகும், சூட்சமுடன்தயிலங்களெண்ணைமுதல்யாவும் சுளுவானசூரணங்கள்ரசாயனங்கள்முதலாய், தூக்கமுடன் கடுகளவுபட்டால்போதும் துரையானமருந்தெல்லாம் வீறுமாமே. ௧௩௬

வீறானவவுஷதங்கள் முப்பூபட்டால்விடுபட்டுபோகுமடாபிணிகளேது, கூறானவவுஷதங்கள் காரமெத்த குடிலமுடன் நோயெல்லாஞ்சுண்ணும்பாரு, சீரானநேத்திரங்கள்சிவந்துகாட்டும் செடிதானமேனியது கறுப்புமாகும், தூரானநோயெல்லாங் காடேபோகும் துப்புறவாய் முப்பூவின்மகிமைதானே. ௧௩௭

தானானமுப்பூவின்மகிமையாலே சட்டமுடன்சரக்கெல்லாங்கட்டும்பாரு, பானானசூதமது துள்ளியோடும் பாங்கானகெந்தியதுநீறிப்போகும், தேனானலிங்கமது செந்தூரிக்கும் தேற்றமுடன் பூரமதைப்பொருமிக்கொல்லும், கோனானவீரமது பற்பமாகும் கொடிதான பாஷாணம் சாகும்பாரே. ௧௩௮

பாரேதான் நவதாதுமுப்பத்திரெண்டும் படுமுன்னேசரக்கெல்லாமடிந்துகொல்லும், நேரேதான் லவணவகை யிருபத்தைந்தும் நேரானகற்பவகைமுன் நூற்றுச்சொச்சம், கூரேதான்சொன்னபடிசூட்சமுப்பு குன்றியிடைபட்டாக்கா லெல்லாமாளும், வீரேதான் சரக்குக்கு நெடுங்காலனுகும் மிக்கான துருசுக்கு குருவுமாமே. ௧௩௯

குருவான கண்டாதுருருவுமானுல் குவலயத்தில்கோடிவித்தையாடலாகும், திரிவானவாமியவள்முன்னேநிற்பாள் திக்கெல்லாமெச்சுதற்குசித்தனுவாய், மருவானநாதாக்கள் ரிஷிகள்தாமும் மதிப்புடனேயுந்த[illegible] வரமுமீவார், கருவானவுளவறிந்த சித்தனுவாய் காசினியிலுன்னைப்போல் சித்தனுண்டோ. ௧௪௦

உண்டோதான் வையகத்தில்சித்தனுண்டோ ஓகோகோ யுந்தனையும்ரிஷிதானென்பார், திண்டானதேவமுனியுன்னையென்பார்திறமையுள்ள நாதாக்கள்குருவேயென்பார், சண்டாளமானதொருகருமிமாண்பர் சட்டமுடன் பொய்நாதனென்பார் கண்டீர், கண்டாலும் விடுவாரோ சித்துரூபம் காசினியில்சபித்திடுவாருண்மைபாரே. ௧௪௧

(சித்தர்கள் முப்பூவைக்கேட்குதல்.)

பார்க்கவென்றால்நாதாக்கள் சித்துரூபம்பட்சமுடன் வந்தனுடனருகில்வந்து, தீர்க்கமுடன்வருந்தியல்லோ முப்புகேட்பார் திகழுட்

னேகுருவெனக்குவேண்டுமென்றார், கார்க்கவென் றமஞ்சாடிகுருகே ட்டாலும் கர்த்தனே யுந்தனிடகடாட்சமென்று, மூர்க்கமது வாரா மல் முன்னேநின்று முடிவணங்கியடிபணிந்து மொழிசொல்வீரே.()

மொழியான வார்த்தைக்கு முன்னேநின்று மோசமதுவாராமல் முடிவுசொல்லி, வழியான துரையோடு மார்க்கஞ்சொல்லி வகையுட னே யவர்தமக்குத்தொண்டுசெய்து, பழியான வார்த்தைக்கு யிடங் கொடாமல் பட்சமுடனவர்மீதில் கிருபைவைத்து, சுழியானவாசி முனை தன்னைநோக்கி சூட்சாதிசூட்சமதைக்கேட்டிடீரே. கசரு

கேட்டவளவிலுன்மீதில் கிருபைவைத்து கேழ்விக்குத்தாரவிடை யுஞ்சொல்லி, நாட்டமுடன் பரிபோகமிகவுஞ்செய்து நயமுடனேசார சமுறைதாமுறைத்து, தேட்டமுடன் மனதிறங்கச் செய்துகொண்டு தெளிவானகுருவதனையடைந்துகொள்ள, வாட்டமுடன்லகுவுடனே பின்னுங்கேட்பார் வகைமோசம்போகாதே மன்னுகேளே. கசசு

சித்தர்கள்மகிழ லேகியம்.

கேட்கவேயவர்தமக்கு களிப்புகொள்ள கெவனமுடன்குளிகை யென்றலேகியங்கேள், சூட்சமுடன் மாணுக்கள் பிழைக்கவென்று தொல்லுலகிலடியேனுங்கருணைகூர்ந்து, நீட்டமுடன் கோரக்கர்மூலி தன்னை நேர்மையுடன் தாமெடுப்பாய் சேர்தான்ரெண்டு, வாட்கமல வட்டமென்றபாண்டந்தன்னில்வகையுடனேகாலாங்கிசொற்படிக்கே

சொல்லானசொல்லுக்கு குறைநேராமல் தோற்றமுட னுமின் பால்படிதான்கொண்டு, புல்லானசீலைதனைவேடுகட்டிபுகழானகெஞ் சாவைமேலேவைத்து, கல்லான பாண்டமதை மேலேமூடி கடியான வாலுகையாமேலேவைத்து, வெல்லவேதீயெரிப்பாய் சாமம்ரெண்டு விருப்பமுடன்சுண்டமட்டும் யெரித்திடாயே. கசசு

எரிக்கவே யிப்படியே பத்துமுறைதானும் யெழிலானகெஞ்சா வைசுத்திசெய்து, வெரிக்கவசம்போவதற்கு யின்னுஞ்சுத்தி வேகமு டன்சொல்லுகிறேன்மைந்தாகேளு, பொரிக்கவசம் நிம்பழத்தின்சா ற்றினாலே பொருந்தவேபத்துமுறை முன்போற்றீட்சை, சரியுமேசெ ப்புகையில் கெஞ்சாசுத்தி சட்டமுடன் காலாங்கி யுரைத்ததாமே.()

தாமானகெஞ்சாவை யெடுத்துக்கொண்டுசட்டமுடன்ரவிதனி லேகாயப்போடு, காமானகல்லுரலில் போட்டுமைந்தா கருவாகத்து ளிடித்துப் பொடியாய்ச்செய்து, வேமானமானதொரு வபினிதன்னை வேகமது போவதற்குப்பின்னுங்கேளு, சாமானமாகவேதான் பௌ ரீர்தன்னால் சட்டமுடன்றீட்சையது பத்துசெய்யே. கசஅ

செய்யவேயபினுக்குதீட்சைபப்பாசெப்புகிறேன்வருண்மைந்தா யின்னம்பாரு, துய்யவேபசுங்பாலாப்பசுமோராகும்துப்பாவாய்சுத்தி ய்தானன்றாய்ச்செய்து, செய்யவேபத்துமுறைதீட்சைதானும் போான வபினிக்குச்செய்யவேண்டும், உய்யவேதீட்சையதுயாாபின்பு உத்த மனே கடைசாக்கு செப்பக்கேளே. ௧௪௯

கேளேதான்சுக்குடனேவால்மிளகுதானும் கெடியானகேசகே சாமசாட்டிமோக்கு, வேளேதான்லவங்கமுடன்லவங்கப்பட்டைவே கமுடன்ஜாதிக்காய்சாதிப்பத்திரி, கோளேதான்நோமல் ஜஜிராவும் குணமானருமஸ்திபாஜிபந்து, பாளேதான்போகாமல்பேதானுவும்பா க்குபெறலவங்கமென்ற பட்டைதானே. ௧௫0

தானைபட்டையுடன் யிம்பூராவும்தாக்கானமாசிக்காய்தான்றிக் காயும், மானைகடுக்காயும் மகரப்பூவும்மாசற்றயேலமுடன்நெல்லிக் காயும், கோனைகுமட்டியின் விரையினோடுகொடிதானவூமத்தின்வி ரையுந்தானும், பானைகெஞ்சாவின் விரையுந்தானும்பளிங்கானகொ டிவேலிமூலியாமே. ௧௫௧

ஆமேதான் மூலியொடு சூரைவித்து அப்பனே வேலியென்றப ருத்திதானும், தாமேதான் வலம்புரியுவிடம்புரியுமாகும் தாக்கானவ வமுக்காாவின்தோல் தானும், வேமேதான்தாதுமாதுளையின்வேறும் மிக்கான வாத்தலரிசுருளிதானும், காமேதான் சொன்னபடி யிருவே லிகூட்டி நயம்பெறவேசூரணமாய்ச்செய்து கொள்ளே. ௧௫௨

கொள்ளவே கற்கவகை யின்னஞ்சொல்வேன்கோளாறுநோாம ல்குருபதத்தால், விள்ளவேதக்கோலம் பரங்கிப்பட்டை விருப்பமுட ன்வாலுளுவைதிப்பிலியுமாகும், மெள்ளவேயிருசீரங் காட்டுச்சீரம் மேலானவாய்விளங்கம்ஓமந்தானும், அள்ளவேசோஜனேயும்பூலாவாகு ம் அப்பனே பூமிசக்கரையுமாமே, ௧௫௩

சக்கரையுஞ்சிந்திலொடு சதாவேலிதானும் தாக்கானபெருவா கைசிறுவாகையாகும், ஒக்கவே தண்ணீரின்மிட்டானுகும் உற்பனமா ம்தம்பலப்பூச்சிதானும், சிக்கவேபாதிரிமுல்லைதானும்சீாவாஞ்செங் கழுநீர்ப்பூண்டுமாகும், தக்கவே சிவகாந்தை விஷ்ணுகாந்தை சட்ட முடன் சாட்டாணைக்கூடச்சேரே. ௧௫௪

சேரவேவசுவாசி மிளகுதானும் சிறப்பானவோமுடன்ரேவல்சி ன்னி, தீறவேவிச்சியுட்னலம்வித்துதிறமானபேயத்தி விரையுமாகும்

பாரமுடன் கடலாஞ்சியட்டைதானும்பாங்கானடுவண்ணுகண்பட்டை கூட்டி, வாரவேவிளாம்பழத்தின்வித்துக்கூட்டி, வகுப்பானகலுமிச்ச ன்வித்துவாமே. கருரு

வித்தானகரிமிரட்டிவேறுங்கூட்டி விதமானகரும்பசளை செம்ப சளையாகும், மூத்தானவெள்ளையென்ற குன்றிதானும்முளையானவரச னிடவித்துதானும், சித்தானகுறிஞ்சாவின் வித்துங்கூட்டி சிறப்புட னேயெட்டியென்ற வித்துமாகும், சுத்தானவித்தாதி சரக்கையெல் லாம் சூட்சமுடன் களஞ்சியது வெடுத்துக்கொள்ளே. கருசு

எடுக்கவென்றால்சரக்கெல்லாமொன்றாய்க்கூட்டி எழிலானசூரண மாய்ச்செய்துக்கொண்டு, தொடுக்கவேமுன்சொன்ன சரக்கோடொ க்கதுறையோடும்முறையோடும்சேர்வைகண்டு, கொடுக்கவேசீனியது பாவுசெய்து கொற்றவனே சூரணத்தைப்போட்டுமேதான், விடுக்க வேநெய்தேனும் விட்டுக்கூட்டி விருப்பமுடன் மெழுகுபதந்தன்னிற் கிண்டே. கருஎ

கிண்டையிலே மதுரமாம் திராட்சிதானும் கிளையானகதலியிட தேனுமாகும், பண்டுடனேகொடிமுந்திரிரசமுமாகும்பாங்கானகுங்கு மப்பூ கஸ்தூரிதானும், விண்டிடவேவாலுகைபாமடுப்பிலேறறி வீரா னஜலமதுவும் போகக்கிண்டி, கண்டுமேமெழுகுபதந்தனிலிறக்கிகண பதியை தானினைந்து கருத்திலில்லே. கருஅ

நிற்கையிலே கணபதியுங் கந்தன்றானும்நிருவாணி மயேஸ்வரியு மெதிரில் நிற்பாள், நிற்கையெனும் பத்திர காளியம்மன் திரைமுக மாய்நின்றுகொண்டு காட்சியீவாள், பற்குணனுமற்சுனற்குதந்தகாட் சி பாலகனே யுந்தனுக்குமீவாள்பாரு, விற்பிடித்தமன்னரெல்லாக்கா ளிக்கல்லோ விண்ணுலகில் தான்நடுங்கி விடுபட்டாரே. கருக

பட்டாரோராஜர்முடி மன்னரெல்லாம் பத்திரகாளியம்மன்சாபத் தாலே, கெட்டலைந்துமாண்டதொருவேந்தரெல்லாம் கெடியானவெந் தனதுகுருவினாலே, விட்டகுறையிருந்ததொருநேர்மையாலேவேதாந் தகாலங்கிரதர்தம்மால்,பட்டமுடிமன்னரெல்லாமீண்டுதாம்பாரினி லேநெடுங்காலம் வாழ்ந்திட்டாரே. ககூ0

வாழ்ந்திட்டகாலமது தன்னிலேதான்வாகுடனேமாந்தரெல்லா மொன்றாய்க்கூடி, தாழ்ந்திட்டரிஷிகோடிமுனிவருக்கு தகமையுடன் லேகியத்தைச்செய்யவென்று, ஆழ்ந்திடவேதம்கருத்தில்மனதிலுன் னி அப்பனேசினபதி மார்க்கஞ்சென்று, சூழ்ந்திட்டபோகரைதானடி வணங்கிசூட்சமுடன்பாகமதை யறிந்தார்தாமே. ககூக

அறிந்துமே காயகற்பலேகியத்தை அன்புடனே நாதாந்தரிஷிக ளுக்கு, செரிந்துமேபாகமுடன் செய்துமேதான் சிறப்புடனேயுன்ப தற்கு கற்பமீந்தார், முறிந்துமே யானந்தகற்பந்தன்னை முப்பொழுது முண்டுமல்லோ களித்துமேதான், வெறிந்துமே சினமதுவு மொடிங் கியேதான் வெட்டவெளிதனிலிருந்து கும்பித்தாரே. கசுஉ

கும்பித்து நிற்கையிலே சிவயோகிதானும்குவலயத்தில்மானிடர் மேலிச்சைகொண்டு, தம்பனங்கள்முதலான வசியமார்க்கம்ஜெகத்தி லேவஷ்டவித கருமம்யாவும், சும்பனமாம் கொக்கோகலீலையாவும் குட்சாதிருட்சமெல்லாஞ்சுளுவாய்ச்சொல்லி, சம்பகத்திலிருந்துகொ ண்டுசதாநிஷ்டையாவும் சட்டமுடன் தாமறிந்தார் பலமாந்தர்தாமே

தாமானசித்தர்களு முனிவர்தாமும் சதகோடி சூரியர்போல் பிர காசித்து, பூமானுங்கருவாளியானபேர்க்குபுகழுடனேயிப்பாதஞ்சொ ன்றைல்லோ,காமானமாகவேதான்காயகற்பம்கருத்துடனேசெய்தார் கள் மனுக்கள்கோடி, நாமேதான் சொல்லிவிட்டோம் மறப்பையெ ல்லாம் நலமுடனே நாதாக்கள் செய்வார்பாரே. கசுச

லேக்கியத் தத்துவம்.

பாரேதான் லேகியத்தின் பெருமைகேளு பாருலகிலறிந்தமட்டு ஞ் சொல்வேன்பாரு, நேரேதான் தூதுளங்காய்ப்பிரமாணந்தான்நேர் மையுடன் வுண்டவர்க்கு முறமைசொல்வேன், சேரேதான் ஆவின் பால்கொள்ளவேண்டும் செம்மையுடனவர்தமக்குக் காட்சிமெத்த, கூ ரேதான் கெவுனமுடன் குளிகைகொண்டுகொற்றவனேவதிசயங்கள் சொல்வார்காணே. கசுரு

காணவே வானுல்கில் போகுஞ்சித்தர்கண்ணுக்குற்றேற்றுவது மெய்போலாகும், பூணவேசூரியனுமெதிரேநிற்பான் பொங்கமுடன் சந்திரனும்நேரேநிற்பான் வேணவேலாகிரிகளுண்டபோது வெகு வானவினோதவகை சொல்லலாகும், தோணவேநேத்திரங்களிருந்து கொண்டு தொல்லுலகில் கண்டதெல்லாம் பினத்துவாரே. கசுசு

பினத்துவார் ஆகாசமார்க்கந்தன்னை பெருமையுடன் அதிசயங்க ள் மிகவுஞ்சொல்வார், நினப்புடனேகண்ணுக்கு தோற்றம்யாவும் நி லையானவதிசயம்போல் கூறுவார்கள், புனப்புடனே பித்தமதுமேலே சொக்கி புகழானகபாலத்தை வாட்சிசெய்யும், தினப்புடனே சரீர மெங்கும தினவுண்டாகும் திரளானதேகமது சொக்கிப்போமே. ()

சொக்கவேகாயாதி பூரணத்தால்தொல்லுலகிலதிவகைமெத்த க்கூறும், திக்கவேமலைகுகைகள் வனாந்திரத்தில்சிறப்புடனேசித்தர்க

ளைக் கண்டேனென்பார், ஒக்கவேயவர்களிடங்கூடிருந்து உத்தமனே காயகற்பங் கொண்டேனென்பார், தக்கவேகைலங்கிரிகண்டேனென் பார் சாயுச்சியபோதையிலே யிருந்தார்பாரே, கசுஅ

போதையிலே ஞானமுண்டு வருளுஞ்சொல்வார்பொங்கமுடனே திசயங்கள் விநோதஞ்சொல்வார், தீதையிலே கற்பமது வுண்டபோது திரளான தத்துவங்கள் மிகவுஞ்சொல்வார், பாதையிலே யிருந்து கொண்டு கண்ணைமூடி பாரினிலேபரியாச வார்த்தைசொல்வார், வாதையிலேயன்னமது தேவையில்லை வைகுண்டபதிதனிலே கேட்பார் பாரே. கசுசு

கேட்கையிலே லாகிரிகள்மிகவுமிஞ்சி கெடியானவடிதடிகள்மிக வுண்டாகி, மூட்கமுடன்கீழ்விழுந்து பிரண்டெழுந்துமுனையானகு ம்பகத்திலிருப்பேனென்று, தாட்கமலபீடமதில் வீற்றிருக்கும் தாயானமயேஸ்வரியைக் காண்பேனென்றும், சூட்சமுடன் சுந்தரனார் தானென்று சொல்லுவார் பலதுதியுஞ் சொல்லுவாரே. கஎ0

சொல்லுவார் பரிபூரணானந்தத்தை சூட்சமுடன் ஞானவெளி சோதியென்பார், வெல்லுவார் லாகிரியைக் கடந்தோமென்பார் வேதாந்தவெட்டவெளி யறிந்தோமென்பார், புல்லுவார் பூவுலகைமறந் தோமென்பார், பூதலத்திலென்னைவிட குருவோவென்பார், அல்லலற்று மாய்கைதனை மறந்தேனென்பார் அப்பனே குளிகையுட வேகந்தானே. கஎக

போகர் சிறுகற்பம்.

தானானயின்னமொரு கருமானங்கேள் தகைமையுடன்காயாதிகற் பந்தன்னை, பானனகாலாங்கி நாதர்பாதம் பாரினிலேதான் பணிந்து வடியேன்றானும், தேனானகற்பமது சிறுகற்பந்தான் தேசத்தில் மாந்தர்கள் பிழைக்கவென்று, மானனவபினியது சேர்தானப்பா மார்க்கமுடன்கெஞ்சாவின் சேர்தானென்றே. கஎஉ

ஒன்றானயிரண்டையுந்தான் தேனையூட்டி வுத்தமனே கல்லுாலிலிடித்துத்திரு, நன்றானபுகையிலையை மேலேசுத்தி பாங்குடனே பெருக்கிலையைவதன்மேல்சுத்தி, நன்றானபனைவெல்லங் கவசஞ்செய்து நலமாகபூமிதனில் புதைத்துப்போடு, வென்றிடவே மண்டலந்தான் சென்றபோது விருப்பமுடன்தானெடுத்து செப்பக்கேளே. கஎங

செப்பவென்றால் கவசமதை நீக்கிப்போடு தெளிவுடனேயபினி யதுகாரமாகி ஒப்பமுடன் கோரக்கர் மூலியாலே ஓகோகோமகிமைகளுமிகவுண்டாகும், வெப்பமதுவபினிக்கு மிகவுண்டாகிவீறுடனே பித்தமதுவதிகங்காட்டும், தப்பிதங்கள் நேராமல் வபினிக்கேதான் சாத்துகிறேன்சுத்திவகை சொல்லக்கேளே. கஎச

சொல்லவென்றால்பன்னீரால் மைத்தாரீயும் சுத்தமுடன் தானரைப்பாய் நாலுசாமம், வெல்லவே இராட்சியென்ற பழாசத்தால் மேன்மைபெற வெண்சாமமரைப்பாயப்பா, புல்லவேமலைத்தேனு மிரண்டுசாமம் புகழுடனே தானரைப்பாய் புதல்வாநீகேள், செல்லவேமைபோல வரைத்துமேதான் சீர்பெறவே சிமிழ்தனிலே பதனம்பண்ணே. ௧௭௫

பண்ணவே குளிகையது துதளங்காய் பாகமுடன்றானெடுத்து வருந்தும்போது, நண்ணவேகாயாதி கற்பமாகும் நலமானகன்னிரண்டுஞ் செருவல்கொஞ்சம், எண்ணவேமயக்கமது வதிகங்காணும் மெழிலானபுன்னகையுமிகுதியாகும், தண்ணமுடன்தேகமது காந்தலாகும் சதாகாலம் நிஷ்டையிலே யிருப்பார்தாமே. ௧௭௬

தாமானசெபந்தனிலே யிருந்துகொண்டு சதாகாலநிஷ்டையிலே வழியுந்தேடி. சேமமுடனுந்தமக்கு மொழியுஞ்சொல்லி சிறப்புடனேயாசீர்மப்பேருரைத்து, வேமமுடன்சோடவுபசாரமோதி வேகமுடன் பிரணவத்தை மனதிலெண்ணி, நாமமுடன் காலாங்கிதனை நினைந்து நவின்றிட்டேன் போகரிஷி நவிலத்தானே. ௧௭௭

காயகற்ப சூரணம்.

தானனயின்னமொரு கருமானங்கேள் சாற்றுகிறேன்மாணுக்கன் பிழைக்கவென்று, கோனனயெனதையர் காலாங்கிநாதர் குருபதத்தைவடியேனுந் தாள்பணிந்து, வேனனகாயகற்ப சூரணத்தை விருப்பமுடன்பாலுரைப்பேன் பின்னுங்கேளீர், மானனமகதேவரிஷிகள்தானும் மானிலத்தில்மறைத்துவைத்தார் பான்மையாமே.

பான்மையாம்கொங்கணரு மிந்தபாகம் பாரினிலேகளங்கமறச் சொல்லவில்லை, மேன்மையுடனகஸ்தியரும் புலஸ்தியருக்கப்பாமேதினியில் விளக்கமறச் சொல்லவில்லை, வான்மையுடன் புலிப்பாணிக்கிந்தபாகம் வசனித்தார் ஆயிரத்துவன்னூருக்குள், கோன்மையுடனெனைப்போலச் சொன்னாரில்லை நுட்பமதைமாந்தர்க்குச் சொன்னேன்பாரே. ௧௭௯

பாரேதான்கக்குடனே வாய்விளங்கம் பாக்குடனே திப்பிலியும் வசுவாசிதானும், நேரேதான்பிளகுடனே தான்றிக்காயும் நேரானகடுக்காயு நெல்லிக்காயும், கூரேதான்சித்திரமாம் மூலத்தோடுகொடிதான்சிவதைவேர் சித்தரமுட்டி, வீரேதான்வாலுளுவை சோம்புமேலம் விருப்பமுடன்செந்தோன்றி வேருமாமே. ௧௮௦

வேருனவெட்டிவேர் துத்திமூலம் வெளியானவாவாரை பஞ்சமூலம், கூருனதாதுமாதுளையின்வேருங் குணமானசெங்கொட்டை

சிவனார்வேம்பு, நாருனசெங்காலிவேறி[illegible]டு நறுங்கந்தம்பீனறிபட்டைதானும், பாருனபூதமாம் விருட்சத்தோடு பாங்கானகருங்குன்றி வேதுமாமே. க௬க

ஆமேதான்கருங்காலி பட்டைதானும் அப்பனேசெனுமறைவேறினோடு தாமேதான்வெம்பாடம்பட்டைதானுந் தாக்கானகொழிஞ்சியிடபட்டைமூலம், வேமேதான்சிராவியிட மூலந்தானும் விரையான பேய்மிரட்டி பட்டைமூலம், நாமேதான்சொன்னபடி வகிற்கட்டைதானும் நலமானசந்தனமும் செஞ்சாந்துமாமே. க௬உ

சாந்தானபூவந்திபட்டைதானும் சதுரானவெண்ணுவல்பட்டையோடு, காந்தமெனும்வேய்கையுட பட்டைதானும் கருவானவுதிரமாம் மூலத்தோடு, பாந்தமெனும் கொங்கலவன் மூலத்தோடு பனிங்கானசிராவியிட மூலந்தானும், வேந்தர்கைக்கோலூன்றி விருட்சமூலம் விரைவானபட்சையுட மூலந்தானே. க௬ங

மூலமொடுகரும்பசலை செம்பசலைதானும் முஷ்டியுடன்கருவாகை பெருவாகைதானும், சிலமுடன்பற்படாமயிம்பூராவும் சிறியானின் நங்கையுடன்பெரியாநங்கை, காலமெனும்புளியாரை சிறியாறைதானும் தகமையுள்ளநிலவேம்பு கருவேம்புதானும்,பாலமெனும் பொடுதலையாஞ்சிந்திலோடு பசுமையாம்பொற் சிந்திநற்சிந்தியாமே.

சிந்திலொடுசெவ்வாழை கருவாழைதானும் சிறப்பானவுப்பதுவும்தானுமாகும், சாந்திமலர்நந்தியாவட்டமூலம் சார்புடனேகொன்றைவேர் புன்னைவேறும், தாந்திகழுஞ்செங்கழுநீர்ப் பூண்டுதானும் தகமையுள்ளவட்டாரி துத்திமூலம், ஏந்தலெனுமயிற்கொன்றையிருவாட்சிதானும் யென்மகனே வகைக்குஒரு பலமாய்த்தூக்கே. க௬டு

தூக்கையிலேதூக்கமது வதிகங்காணு தொல்லுலகில் மூலிவகைசமனதாக,ஏக்கமுடன்மூலவகை செட்டிப்பாக யெழிலானசூரணமாய் செய்துகொள்ள, கோக்கமுடன்ரவிதனிலே காயப்போடு நுணுக்கமுடன்கல்லுரலில் மாவதாக்கி,பாக்கவேதான்சூரணத்தைச் சுத்தி செய்து பசும்பாலில்புட்டாவி செய்திடாயே, க௬சு

செய்பவென்றூல்கைபாகஞ் செய்பாகங்கேள் செப்புகிறேன்தளவாயாஞ் சட்டிதன்னில், பையவேயாவின்பால் பாண்டமிட்டுபாகமுடன்சூரணத்தை சீலைமேலே, மொய்பவேபுட்டுபோல்பிசறிவைத்து மூசியாமல்மேல்சட்டி கொண்டுமூடி, வெய்யவேதானெறிப்பாய்கண்டமட்டும் வென்மகனே தானெறிப்பாய் புகலக்கேளே. க௬எ

கேளேதான்ரவிதனிலே காயப்போடு கெணிதமுட னிப்பாகம் பத்துபோடு, கோளேதான்வாராமற்சூரணத்தை கொப்பெனவே தானெடுத்து செப்பக்கேளு, பாளேதான்நேரமற் சீனிசேர்த்துபத முடனே மண்டலந்தான் கொண்டாயானல், நாளேதான்தேகமது கற்றாணுகும் நவினமுடன்போகரிஷி நவின்றவாரே. கஅஅ

வாரானகற்பமென்றசூரணத்தை வாகுடனேகொள்பவனுஞ் சித்தனுவார், நேருனசினபதிமாந்தருக்கு நேர்மையுடன் ருனுரைத்த கற்பமாகும், சீரானகற்பமது வுண்டபேர்க்குதேசத்தில்வபதல்லோ லக்கோயில்லே, காரானகடந்தமுனி சித்தனென்பார் காயாதிகற்பத் தின் பான்மைதானே. கஅகூ

தானுனகற்பமது வுண்ணும்போது சதாகாலம் நிஷ்டையிலே யிருக்கலாகும், வேனுனகற்பத்திற் குறிதிசொல்வேன் யெளியாங்க மாகவல்லோ திரியவேண்டாம், பானுமதிசூரியனும் பார்க்கவொண்ணு பாலகனேயொடுக்கமதி லிருக்கவேண்டும், தேனுணபுளிபுகையுந் தள்ளவேண்டும் தேசமதில்காயத்தை நிறுத்துவாயே. ககூ0

நிறுத்துகையிலஷ்டாங்க யோகம்வேண்டும் நிலேபானசமாதி தனி லிருக்கவேண்டும், பொருத்துமே சிவயோகந் தன்னிற்சென்று போக்கானவாசியைத்தா னிருத்தவேண்டும், கனுத்துமேவாத்துமத் தின் நிலேயைக்காண கலியுகத்தில்வெகுகால மிருந்தார்தாமும், மறுப்புடனேபிறவியதுகாணுமற்ருன் மானிலத்தில்மடிந்தவர்கள் கோடியாமே. ககூக

கோடியாஞ்சித்தர்களு முனிவர்தாமும்குவலயத்தேகற்பமுண்டு யிருந்தார்தாமும், பேடியாஞ்சிலமாந்த ரவரைப்பார்த்து பேரின்ப நிலேதனேயே யொழித்தாற்போலும், நாடியேயவர்களிடஞ் சென்றுமேதான் நயனமுடன்லகுவார்த்தை மிகவும்பேசி, வாடியேயவர்பதத் தில்கிட்டிநின்று வாகுடனேகற்பமதை முறைகேட்டாரே. ககூஉ

முறையுடனேகற்பமதை வாங்கிக்கொண்டு மூதலகில்வெகுபேர்கள் செய்யவெண்ணி,கறைகண்டவயித்தியன்போல்மனதிலெண்ணி காசினியில்மூறைகெட்டுத் தாருமாருப், திரைமருவுதெறியாமல்தேர்ந்தேதான்போல திறமையுடனனுபோகந் தெரியாமற்ருன், குறைமனதாய்சூரணத்தை செய்துமேதான் குவலயத்தில்கெட்டவர்கள் கோடியாமே. ககூ௩

கெட்டலேந்துபோனவர்கள் கோடாகோடி கெவனமுடன் செய்யாதார் கோடாகோடி; சுட்டலேந்துபோனவர்கள்கோடாகோடிகுட்ச

முடன்வயிதிபத்தைக் காணார்கோடி, பட்டலைந்துகெட்டவர்கள்பாடுப
ட்டு பதமிழந்துபோனவர்கள் கோடாகோடி, திட்டமுடன்சாஸ்திர
த்தைப்பாராமற்றான் திடங்குலைந்து நலிந்துபோனார்தாமே. கசுச

போனாரேமூதலகில் பெரியோர்யாவும் பொலிவானசாஸ்திரத்
தைப் பொய்யென்றெண்ணி, ஏனோதான்மானிலத்தில்சுட்டுக்கெட்டு
வேளிதங்களாகவல்லோ மாண்டுபோனார், நானேதான்கண்டமட்டுஞ்
சாஸ்திரத்தை நன்குடனேயாராய்ந்து பலநூல்கண்டு, பானுமதி
சுடர்போலேதிரட்டியல்லோ பாடிவைத்தேன்சத்தகாண்டம் பண்பா
ய்த்தானே. கசுரு

பண்பானசாஸ்திரத்தை பாடிவைத்தேன் பாரினிலேமாண்ப
ரெல்லா மறந்துபோனார், திண்பானசீனபதி மார்க்கத்தோர்கள் திற
முடனேகண்டறிந்து யெடுத்துக்கொண்டார், நண்பானசாஸ்திரத்தை
மெய்யென்றெண்ணி நயமுடனேபலம்விளையுமென்று கந்து கண்பான
நூற்கோர்வையாவுங்கண்டு காசினியில்மாந்தருக்கு கருதினேமே.

செப்பிடுவித்தை.

கருதவேயின்னமொரு கருமானங்கேள்காசினியில்மானிடர்கள்
பிழைக்கவென்று, தருதமுடன்ஜாலமென்ற வித்தைசொல்வேன்
தொல்லுலகில் செப்பிடு வித்தைக்கண்டோர், பருவமுடன்கன்னியென்ற
பெண்ணைத்தானும் பாங்குடனேஜோடிகைகள் மிகவேசெய்து, உருவ
முடன்கைச்சிலையாங் கையிலீந்து உத்தமனேவாளுமொரு கையி
லீயே. கசுஎ

ஈயவேலோகமென்றவாய்வினாலே யெழிலானபிரதமைகளொன்
றுசெய்து, மெய்யுடனேரூபமதை தானமைத்து மேன்மையுடன்காந்
தமென்ற சத்தைதானும், கைதனிலேதானுருக்கி சேர்வைகொண்டு
கசடறவேயிரும்புக்குக் காரமேத்தி, பெய்யவேயிடைகண்டு யினமூங்
கண்டு போனகருக்குருவுந் தானுங்காணே. கசுஅ

காணவென்றால்பிரதமைக்கி வுயிரேயில்லை காசினியில்வாவென்
றரூபமப்பா, தோணவேரூபமது வார்த்தையில்லை தோற்றமுடன்
பார்வையது ஒளியேயில்லை, வேணவேகண்ணுக்கு விஜோதவித்தை
வேடிக்கைப்பார்த்தவர்க்குப் பகடியாகும், ஊணவேவடகரத்தில்பது
மையேந்தி வுத்தமனேயிடகரத்தில் வாளையீயே. கசுகூ

வாளுடனேகேடகமுங்கையிலேந்தி வளமையுடனிடப்புறத்தில்
வாளினாலே, தாளுடனேபூமிதனி லிருந்துகொண்டு தகமையுடன்
கேடகத்தைப்பதுமைமீதில் மாளுவதுபோலாகவாளைவீசி வல்லுயி
ரைவாங்குகின்ற வீரனைப்போல், கோளுகளுநேராமல் குமரிதன்னால்
கொற்றவனே வாளுதனை சக்கரத்திலீயே. உ00

சக்கரமாம் வாளுதனைகேடகத்திலேந்தி சட்டமுடன் முன்பின்னுப்பிரட்டியேதான், மிக்கவுடல்கீழ்விழவே வாளும்மேலேமேலான வாளுமது பதுமைகீழே, தொக்கவுடல் பதுமையது மேலேயாகும் தொல்லுலகில் வாளுமதுகீழேயாகும், தக்கபடிசெப்பிடுமாஞ் சாலந்தன்னில் சட்டமுடன்பதுமையது தோரொண்ணாதே. ௨௦௧

தோர்க்காது பதுமையதுவாளினாலே தொல்லுலகில் பதுமையதுமேலேநோக்கும், பார்க்கவே லோகத்துமாந்தருக்கு பாங்கான செப்பிடு ஜெகஜாலந்தான், ஏர்க்கவே வதிசயத்தை மிகவேகாட்டும் யெழிலாக பிடிப்பார்மாந்தர்கண்டிர், மார்க்கமுடன்மாந்திரீக மென் பார்காணீர் யென்மகனே ஜாலமென்றவித்தைதானே. ௨௦௨

வித்தானவித்தையிது ஜாலவித்தை மேதினியில் ஜெகஜாலவித்தையப்பா, சித்தானசித்தர்முனி ரிஷிகள்தாமும் சிறப்புடனே பூவுலகிலாடும்வித்தை, சுத்தானகோட்டையிது யின்னஞ்சொல்வேன் சுருபமென்றகாந்தமது கோட்டையப்பா, குத்தானகல்லதுதான் நடுமையத்தில் கொற்றவனே சங்கிலிகளணியாய்மாட்டே. ௨௦௩

மாட்டையிலே நடுக்கம்பம்மீதிருந்து நடுவானகுத்துக்கால் மீதிரங்கி, கோட்டையதுவாசலது காந்தக்கோட்டை கொப்பெனவேநடுவாசல்வந்துநின்று, நீட்டமுடன் கன்னிகையில்வாள்கொடுத்து நீளமுடன் நெடுக்குவரை சுத்திவந்து, மூட்டமுடன் கேடகத்தை கோட்டைமீதில் முனைநடுவாம்மத்திபத்தில் முன்னேவையே. ௨௦௪

வைத்துமேதலைகீழாய் சுத்திவந்து வளமுடனேகுத்துக்கல்மீதிருந்து, குத்துடனே பிரதமையைகேடகத்தால் குறிப்புடனே நேர்பார்த்துபாரின்மீது, எத்தலுடன் கேடகத்தைதகையிலேந்தி யெழிலான பிரதமையைமேலேவைத்து, சுத்தியகோட்டைவழி தான்கடந்து சூட்சமுடன் பிரதமையைகீழ்வையே. ௨௦௫

கீழானபதிதனிலே பிரதமையும்நிற்க கீர்த்தியுடன் கேடகமுந்தழுவிவிளையாட, தாழானபூமிதனில்கேடகமுநின்றுசட்டமுடன்பிரதமையும் யெகிரிக்குத்த, சாழானகோட்டைக்குள் சண்டையதிவேகம் சாங்கமுடன்பத்மயுகம்சரிமுறிதலாக, நீழான செகஜாலவித்தையிதுதானுந்நீணிலத்திலதிகமெனும் பதுமைவித்தைதானே. ௨௦௬

பதுமையாங்கோட்டைக்குள் காவலதிகாரிபாங்குடனேயெதிர்நின்றுபேசும் படைதன்னை, புதுமையுடன் பிரதமைதானெழுந்து

புகழ்ச்சியுடன் கேடகத்தின்கீழிருந்து, கதுமையுடன் கேடகத்தை தலைமேல்கொண்டு களிவுடனேசதாகாலம் நடிக்கச்செய்யும், மதுரமுடன்யெசட்ணியால்பேசச்செய்யும் மகாகோடி விநோதங்களின்னங் கேளே. ௨௦௭

### பிரதமையைக்கன்னிப்பெண் பிரம்பாலடித்தது.

கேட்கையிலேகன்னிகையாள் பிரம்பெடுத்து கிருபையுடன்வசனிக்கும்போதுமங்கே, நீட்கமுடன்பிரதமையும்வாய்திறந்து நிட்சயமாய்முன்னின்றுபேசும்பாரு, வாட்கையுடன்கேடகத்தினுத்தங்கண்டுவெளமையுடன் கைதொடுத்துவார்த்தைகூறும், வேட்கமுடன்குறளியின்றன்வசியத்தாலேவேடிக்கைவிநோதவித்தை பேசம்பாரே.௨௦௮

பேசுகையில் மார்க்கரெல்லாம் பிரமைகொண்டு பேருலகில்செப்பிடுவித்தைபோல,வீசுதமிழ்க்கவிவாணர்முனிவர்தாமும்விண்ணுலகிலிம்முறைபோற் சொன்னதில்லை, காசுபணஞ் செலவழித்தோர் கோடியுண்டுகாசினியிலென்முறைபோற்செய்ததில்லை,மாசுமறையில்லாமல்போகர்தாமும் வசனித்தோம் மானிடர்கள்பிழைக்கவென்றே.

### மகாகாயகற்பசெந்தூரம்.

பிழைக்கவென்று மின்னமொரு கருமானங்கேள் பேரானசீனபதிமார்க்கருக்கு, தழைக்கவே காயாதிகற்பஞ் சொன்னேன் தாரணியில் திரேதாயினுகத்திலப்பா, முழக்கமுடன் காலாங்கிநாதர்தாமும் முனிவருக்கு தானுரைத்தகாயகற்பம், வழக்கமதுபிசகாமல் யானுமல்லோ வசனித்தேன்கலியுகமாய் முதலிற்றானே. ௨௧௦

தானானகலியுகத்திலடியேன்றானும் தகமையுடன் குளிகையது பூண்டுகொண்டு, கோனான வென்னுடையர்காலாங்கிதம்மை குருபதத்தையெந்நாளுமனதிலுன்னி, தேனானசீனபதி மார்க்கஞ்சென்று தெளிவுடனேயானுரைத்தேன் முறைமையோடு, வேனான வெளியரங்கமாகவல்லோ விருப்பமுடன்பாடிவைத்தேன் போகர்தாமே. ௨௧௧

தாமானசீனபதி மார்க்கத்தோர்கள் தாரணியிலிவ்வேதையதிகமென்று, பூமானும்யோகிகளும்ரிஷிகள்தாமும் பொங்கமுடன் செய்வதற்குமனதிலுன்னி, காமானமாகவேதான் சத்துருவைக்கண்டு கவனமுடன் மித்துருவை யொன்றாய்ச்சேர்த்து, நாமேதான் சொன்னபடி சோதித்தல்லோ நலமுடனேசீனத்தார்கண்டார்காணே. ௨௧௨

காணவென்றால் வெகுகோடிகாலந்தானும் கருவானநூலெல்லா முனைவுபார்த்து, தோணவே சரக்கெல்லாங்கண்டாராய்ந்து தோற்ற முடன்சோதித்தார்மித்துருதன்னால், நாணவேகுகைதோறுஞ் சோதி த்தல்லோ நலமுடனேசத்துருக்கள்மிகவாராய்ந்து,பூணவேயோரள வாய்ச்சத்தையெல்லாம் புகழுடனே தானெடுக்கும் விபரங்கேளே ()

அயச்சத்து.

கேளேதான் அயத்தினுடசத்துசொல்வேன்கெவனமுடன் அய மதுதான்சேர்தானென்று, பாளேதான் போகாமலோகந்தன்னை பக் குவமாய்பொடியாகயெடுத்துக்கொண்டு, கோளேதான்கோராமல் நிம் பழத்தால்கொற்றவனேநாற்சாமமறைத்தபோது, வீளேதான்களிம் பற்று வெளுக்கும்பாரு விருப்பமுடனமுறியினால் கழுவிப்போடே.

போடேதான் அயப்பொடிக்கி திரட்டிமைந்தா பொங்கமுடன் சாரமதுகாரமாகும், நீடேதான்சீனமதுகல்லுப்பாகும்கொடிதானசம் பழத்தின்சாற்றினாலே, கூடேதான் தானரைப்பாய் ரெண்டுசாமம் குமரவேசலமதனாற்கழுவிப்போடு, பாடவேஅயமதுவும் சுத்தியாச்சு பாலகனே சத்தெடுக்க வகையைத்தேடே. ௨௧௫

வகையானகாரமது பலம்பத்தாகும் வளமுடனே செவ்வல்லிப் பூச்சாற்றாலே, தொகையுடனேபத்துநாளரைத்தபோது துறையோ டுவெண்காரமெழுகுமாகும், பகையானபெரிகாலன்பாலினாலே பாக முடன் றனைக்கவிபரங்கேளு, சிகையுடனேவரைப்பொடியு மொ ன்றேயாகும் சீரானகாரமது நேர்தான்சேரே. ௨௧௬

சேர்த்துமே யெரிகாலன் பாலினாலே சிறப்புடனே தானரைப் பாய்நாலுசாமம், பார்த்துமே வச்சிரமாங்குகையில்தானும் பாங்குட னேதானெடுத்துசீலேசெய்து, பூர்த்தியுடன் ரவிதனிலேகாயவைத்து புகழாகசரவுலையில்வைத்தூது, தீர்த்துமேவயமதுவு முருகியல்லோ திறமானசத்ததுவு மாகுந்தானே. ௨௧௭

தானானசத்துக்கு பின்னங்கேளு தகமையுடன் வெங்காரங்கூட ச்சேர்த்து, பானனமுன்சொன்ன சத்தைதானும் பாகமுடன் தான ரைப்பாய்யெரிகாலந்தான், தேனானதேனதுவுங் கூடச்சேர்த்து தெ ளிவாகமுன்போலவரைப்பாயப்பா, கோனானயெனதையர் காலாங்கி நாதர் குருசொன்னசொற்படியே செய்திடாயே. ௨௧௮

செய்யவேவச்சிரமாங் குகையில்வைத்துசெம்மையுடன் ஓட்டை வைத்துச்சீலைசெய்து, பையவேரவிதனிலேகாயவைத்து பான்மையுடன் சரவுலையில்வைத்தூது, துய்யநல்லவயமதுவுங் களங்குமாகும் துப்புரவாய் மூசைதனையுடைத்துப்பாரு, பொய்யல்லா வயமதுவும் மணிபோல்கிற்கும் பொலிவானசத்தென்ற மணியைவாங்கே. உ௧௯

வாங்கியே மணியெடுத்து யலையவேண்டாம் வளமுடனே மணிதனையேயுடைத்துப்பாரு, தூங்கியேதிரியாதேமாண்பாகேளு துய்யநல்லவயமதுவுஞ்சத்தேயாச்சு, ஓங்கியேமணிதனையேபதனம்பண்ணுவுத்தமனேயின்னமொருமார்க்கம்பாரு, ஏங்கியேநிற்காதேயின்னஞ்சொல்வேன் யெழிலானவப்ரேகசத்தைவாங்கே. உ௨௦

## அப்ரேகசத்து.

சத்தானசத்ததுவு மின்னஞ்சொல்வேன் தாரணியில் நாதாக்கள் முனிவர்தாமும்,சித்தானரிஷிதேவர்சொன்னதில்லை சீர்பெறவே தொகுப்புடனேவடியேன்றானும், முத்தானநூலெல்லாம் கண்டாராய்ந்து மூதுலகில் கீர்த்தியுடன் சொன்னேன்யானும், புத்தானகிருஷ்ணதிரேகர்தன்னை புகலுகிறேன்மாணுக்கள் பிழைக்கவென்றே. ()

பிழைக்கவேநவநீதஞ் சேர்தான்ரெண்டு பிழைமோசம் வாராம லெடுத்துக்கொண்டு, தழைக்கவே முன்சொன்ன காரமப்பா சாங்கமுடன்நாலுக்குவொருபாகந்தான், கழைக்கவே குழிக்கல்லு தன்னிலிட்டுகருவானதேனதனிலாட்டிமைந்தா, உழைக்கவே வச்சிரமாங் குகையில்வைத்து உத்தமனேகுகையில்வைத்து சீலைசெய்யே. உ௨௨

சீலையென்றால்சீலையதுகாரச்சீலை சீரானசுண்ணம்புச்சீலையப்பா வேலையெனும்ரவிதனிலேகாயவைத்துவிருப்பமுடன் சரவுலையில்வைத்தூதி, காலையதுசாமமதுதான்துவக்கி கருவுடனேசத்துதனையூதித்தீரு, மாலையிலேமூசைதனை யுடைத்துப்பாரு மன்னவனே சத்தென்ன வருணனுமே. உ௨௩

அருணனு மாதித்த னிதற்கொவ்வாது வப்பனேயப்ரேக சத்துமாச்சு, கருணமதுதப்பாமல் பின்னுங்கேளு தகைமையுடன் சத்துதனையெடுத்துக்கொண்டு, கருணையுடன்முன்சொன்ன சத்துதானும் களிப்புடனேதானெடுத்துக்கல்வமிட்டு, வருணனுப்புகரியுப்பு பொட்டிலுப்பு வகையுடனேதான்போட்டு வறைத்திடாயே. உ௨௪

அரைக்கையிலே யாறுவகைசெயநீர்தன்னா லப்பனே தானரைப்பாய்நாலுசாமம், திரைக்கையிலே மெழுகுபதந்தன்னிலாட்டி திறமையுடன் வச்சிரமாங் குகையில்வைத்து, குறைக்கையிலேசில்லிலிட்டுச்சீலைசெய்து கொற்றவனே ரவிதனிலே காயப்போடு, முறைப்படியே ரவிதனிலேகாயவைத்து முன்போலசரவுலையிலேத்திடாயே. ()

ஏத்தியேதீமூட்டிவுருக்கும்போது யெழிலான மூசைபதுவமுகியேதான், நாத்தமுடன் நவநீதவாசம்வீசும் நலமானசரக்கதுவு முருகிப்போச்சு, காத்திரமாம் குகைதனையே யுடைத்துப்பாரு கருவான வப்பிரகசத்துமாச்சு, சூத்திரமாமிப்பாகங் கண்டறிந்து சுளுக்குடனே பாடிவைத்தேன் காண்டம்நான்கே. உஉசு

நாலானகாண்டமது யின்னங்கேளு நலமானசத்ததுவு முன்போலேதான், காலானகுழிக்கல்லிலிட்டுமைந்தாகருத்துடனேதேன்விட்டு யரைப்பாய்நீயும், பாலானவச்சிரமாங் குகையிலிட்டு பாலகனேசீலையது வலுவாய்ச்செய்து, மேலான ரவிதனிலே காயவைத்து மேன்மையுடன்தானெடுத்து செப்பக்கேளே. உஉஎ

செப்பவென்றால் சரவுலையில்வைத்தூது செம்மையுடன் நவநீதம்சத்துமாகும், ஒப்பில்லையுனக்கிடு ஒருவருண்டோ வுத்தமனேநீயுமொருசித்தனல்லோ, தப்பிதங்கள்வாராது சத்துதன்னால் தகமையுடன்மூசைதனை யுடைத்துப்பாரு, மெப்புடனே சத்துமதுவெளியேவீசும் மேன்மையுடனிப்பாகம் பத்துமுறைதீரே. உஉஅ

தீரவென்றால்நவநீதசத்துமாகும் திறமையுடன் சத்துதனையெடுத்துக்கொண்டு, காரமுடன் பூனீருசரியாய்ச்சேர்த்து கருத்துடனே தேன்விட்டு யரைப்பாய்பின்னும், சாரமுடன்வச்சிரமாங் குகையில்வைத்துபாலகனேசில்லிட்டுசீலைசெய்து, ஈரமதுபோவதற்கு ரவியில்வைத்து பென்மகனேகாய்ந்தபின்பு யெடுத்துக்கொள்ளே. உஉசு

கொள்ளவே சாவுலையில் வைத்தூது கொற்றவனே சத்ததுவையென்னசொல்வேன், மெல்லவேமூசைதனை வுடைத்துப்பாரு மேலான சத்ததுதா னென்னசொல்வேன், விள்ளவேசத்துதனை யெடுத்துக்கொண்டு விருப்பமுடன் பீங்கானிற் பதனம்பண்ணு எள்ளளவுங்குறைபொன்று நேரதப்பா யெழிலானசத்தினுடவேகந்தானே. ()

கெந்தகச்சத்து.

வேகமாமின்னமொருகருமானங்கேள் விருப்பமுடன்கெந்தியென்றசத்துசொல்வேன், பாகமாங் கெந்தியதுசேர்தானென்று பாங்கானபூனசஞ்சேர்தானென்று சாகமுடன்பூனாகம் மண்ணைப்போக்கி

சட்ட்முடன் பெரிகாலன்பாலாலாட்டு, மேகமென்றவர்ணம்போலிரு க்கும்பாரு மேன்மையுடன் காரமதுகாலாய்க்கூட்டி. உ௩க

கூட்டியே தானரைப்பாய் நாலுசாமம் குமுறவேவச்சுராமாங் கு கையில்வைத்து, மாட்டியேசில்லிட்டுச்சீலைசெய்துமயங்காமல்ரவிதனி லே காயப்போடு, சூட்டியேவாலுகையாமேந்திரத்தில் சூட்சமுடன் நடுமையம் மூசைவைத்து, நாட்டமுடன் சத்துக்குத் துருத்திநாலு நயம்பெறவே யூதிடவே சத்துமாமே. உ௩உ

சத்தான மூசைதனையுடைத்துப்பார்க்க சார்பான கெந்தியது சத்துமாகி, வித்தானபூநாகச் சத்திலேவீருணகெந்தியது சத்துமா ச்சு சத்தானகெந்தியதுசத்துமானால் சுந்தரனே வெகுகோடிவித்தை யாடும் யுத்தான பூனாகந்தன்னிலப்பா பொன்னவனே கெந்தியது சத்துமாச்சே. உ௩௩

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு வப்பனேகாலாங்கிநாதர் வாக்கு, போச்சென்று வுலகத்தில் பொய்யாதப்பா பொலிவாகசித் தர்முனி ரிஷிகள்தாமும், நீச்சென்ற பூநாகம்மறந்தாரப்பா நீணிலத் தில் காலாங்கிநாதராய்ந்து மாச்சலுட னிப்பாகஞ் சொன்னாரையா மண்டலத்தில் கண்டவர்க ளில்லைதானே. உ௩௪

தானனவேதமுனிரிஷிகள்தாமும் தாரணியிலனேகவிதஞ்சொ ன்னாரையா, கோனனயெனதையர்காலாங்கிநாதர் குருசொன்னபடி பளவாயானுஞ்சொன்னேன், பானனசத்துவகை சாத்திரத்தில் பா டினார் பலபேதவன்னமாக தேனன யின்னூல்போலாருஞ்சொல்லார் தெளிவாகப்பாடிவைத்தேன் காண்டம்நான்கே. உ௩௫

காண்டமேழாயிரத்தில்நடுக்காண்டந்தான் காசினியில்மாண்பர் கள்பிழைப்பதற்கு, தூண்டுகோல்போலவே யிந்நூல்தன்னை துறை யோடுமுறையோடுஞ் சொன்னேன்யானும், வேண்டியதோர் கருமா னமின்னூல்தன்னில்விருப்பமுடன்பாடிவைத்தேன் நான்காங்காண் டம், ஆண்டகையாமெனதையர்காலாங்கிநாதர்அருளிருந்தால் பொ ருள்வாய்க்கு மன்பாய்த்தானே. உ௩௬

அன்பானகெந்தியது சத்துதன்னை யப்பனே யாமுரைப்போ மின்னுங்கேளு, தென்பான பிரிதிவியின்விளைவுமார்க்கம் தேசமுடன் செம்மண்ணும் பூனாகந்தான், முன்பாக முன்சொன்ன முறைபார்த் ரேறும் முக்கியமாய் கெந்தியிடசத்தைத்தானும், சன்பாத பூனாகஞ் சரியாச்சேர்த்து சட்டமுடன்தானரைப்பாய் சாமம்நாலே. உ௩௭

நாலானபெரிகாலன்பாலினாலே நயமுடனே தானரைக்கும்போ துமங்கே, பாலானபாலதுவுங்கூடச்சேர்த்து பாகமுடன்சத்துதனை யுறவதாக்கி, சேலானசெம்பினுட சத்துதன்னால் செம்பையென்ற பூனாகங்கெந்திசத்து, மாலானகந்திபது சத்துமார்க்கம் வையகத்தி லாரெடுப்பார் வதிதந்தானே. உ௫அ

அதிகமாய்கெந்திபதுசத்துதன்னை வப்பனேவச்சிறமாங் குகை யில்வைத்து, கதிதமுள்ளமூசைதனி லடைத்துமைந்தாகவனமுடன் சில்லுட்டுச்சீலைசெய்து, பதிதமுள்ளரவிதனிலேகாயவைத்துபணிங்கு பெறசாவுலையில் நடுமையத்தில், துதிதமுடன்கரிபோட்டு ஊதும் போது துடியானதுரித்தியது நாலுமாட்டே. உ௫௯

மாட்டடாநாற்சாமமுருக்கித்திரு மன்னவனே சத்தாரியெடுத் துப்பாரு, நீட்டடாமூசைதனை யுடைத்துப்பாரு நிலையானகெந்தி யதுசத்துமாச்ச, கூட்டடாயிப்படியே பத்துமுறைதிரு குணமான பாகமிது சத்துபாகம், நீட்டடாகெந்தியுடசத்துதன்னை திறமுடன் மீங்காணிற் பதனம்பண்ணே. உ௬௦

நாகச்சத்து

பண்ணவென்றா லின்னமொருபாகம்பாருபாரினிலேநாதாக்கள் செய்ததில்லை, நண்ணமுடன்மானிடர்கள் பிழைக்கவென்றுநயமுட னேகாலாங்கிநாதர்பாதம், எண்ணமுடன்யான்வணங்கி பணிந்து போற்றி யென்மகனேயுங்களுக்காய்ச் சொன்னேன்பாரு வண்ண முள்ளநாகமது சேர்தானென்று வளமையுடன் தானெடுத்து செப் பக்கேளே. உ௬௧

செப்பவென்றால்நாகமது சேர்தானென்று சிறப்பானசூதமது சேர்தானென்று, ஒப்பமுடன்காரமது சேர்தான்பாதி ஓகோகோ பூனீர்தான் சேர்தான்பாதி, செப்பமுடன்குழிக்கல்லி லொன்றாய்ப் போட்டு நேர்மையுடன்வாறுவகை செயநீர்தன்னால், தப்பிதங்கள் வாராம லரைப்பாய்மைந்தா தகமையுடன்றானரைப்பாய் சாமம் காலே. உ௬௨

ராலானசாமமதுவரைக்கும்போதுநாயகனேநாகமதுவிநடங்கி, மாலானமயினமது போலேயாகும் மகத்தானதாளகமுங் கூடச்சேர் த்து, சூலானநாகமதுகற்பத்துள்ளே சூதமென்றாரசாவுங் கூடச் சேர்த்து, காலானகதிர்மேகந் தன்னைப்போல கண்ணுக்குத்தோன் றிடுமே மயினமாமே. உ௬௩

ஆமேதான்மயினமதைதானெடுத்து வப்பனேவச்சிரமாங் கு கையில்வைத்து, தாமேதான்சில்லிட்டுச் சீலைசெய்து தகமையுடன்

ரவிதனிலேகாயவைத்து, போமேதான்சரவுலையில் வைத்தூதுபொ
ங்கமுடன் துருத்தியது ரெண்டேயாகும், நாமேதான்சொன்னபடி
நாகச்சத்து ராசாக்கள்கண்டதில்லை நளினந்தானே. உசச

நளினமாஞ்சத்துதனையெடுத்துப்பாரு நலமானநாகத்தின் சத்
தேயாகும், பளினமுடன்சத்துதனை முன்போல்மைந்தா பாலகனே
பின்னுமதைக்கல்வமிட்டு, துளிதமுடன்தாளகமுஞ் சூதம்சேர்த்து
துகளறவேபூரீறுக் கூடச்சேர்த்து, மளினமுடன்வாறுவகை செய
நீர்தன்னால் மார்க்கமுடன்றானரைப்பாய் மன்னுகேளே. உசரு

மன்னுநீமயங்காதே யின்னுங்கேளு மதிப்புடனே தானரைப்
பாய் நாலுசாமம், தென்னுநீதிறமுடனே மெழுகதாக்கித திறமுடன்
வச்சிரமாங் குகையில்வைத்து, பொன்னுநீசீலையது வலுவாய்ச்செய்
து பொங்கமுடன் ரவிதனிலேகாயவைத்து, என்னுநீசொன்னபடி
முன்போலப்பா வெழிலுடனேசரவுலையி லேத்திடாயே. உசசு

ஏத்தியேநடுமையம்தானிறுததி யெழிலுடனேசரவுலையை யூதும்
போது, சாத்திரத்திலுள்ளபடிதப்பாகாதூதகைமையுடன் சத்தது
வும்வீயமாகும், கூத்தனுமேதானடுங்கும் வேதைமாற்கம் குவலயத்
திலலொருவரால் கூறப்போமோ, நேத்தியுடன்சத்ததுவை யெடுத்
துப்பாரு யென்னசொல்வேன்மக்களா யின்னுங்கேளே. உசஎ

கேளேதான்நாகமது சத்துவாங்கி கெவனமுடன் முன்போல
வரைப்பாய்நீயும், கோளேதான்வாராமல்குற்றம்நீங்கி கொற்றவனே
நாகமதுசத்துவாங்கி, பாளேதான்போகாமல் பின்னுங்கேளு பாக
முடன்முன்சொன்ன சரக்கையெல்லாம், தூளேதான்பொடிபண்ணி
கல்வமிட்டு துப்புறவாய்செயநீரி லரைத்திடாயே. உசஅ

அரைத்துமேயாறுவகை செயநீர்தன்னால் அப்பனேமயினம
போல்மெழுகதாக்கி, குறைத்துமேவச்சிரமாங் குகையில்வைத்து
கொற்றவனேசில்லிட்டுச் சீலைசெய்து, திறைத்துமேரவிதனிலேகாய
வைத்து திறமுடன் வாலுகையாமேந்திரத்தில், முறைத்திடவேநடு
மையந்தானிருத்தி முசியாமல்கரியதனைக் கொட்டிடாயே. உசகூ

கொட்டியேசத்துதனையூதும்போது குமிப்புடனேதுருத்தியது
ரெண்டதாகும், திட்டமுடன்நாற்சாமமூதித்தீரு திறமானகுகை
தனையே யுடைத்துப்பாரு, வட்டமென்றயில்லையதாம் வுருகிநிற்கும்
வளமான சத்ததுவுஞ் சொல்லப்போமோ, நட்டமில்லை நாகத்தின்
சத்துதானும் நலமானதாரத்தீ னியமாமே. உருo

ஆமேதான்நாகமதுசயமானால் அப்பனேகோடானகோடிவித்தை,நாமேதான்சொன்னபடியிந்தமார்க்கம் நலமுடனேபத்துமுறை செய்யவேண்டும், தாமேதான்சத்தெடுத்துப்பதனம்பண்ணு சாங்கமுடன்பின்னமொருகருமானங்கேள், வேமேதான்வங்கத்தின்சத்து சொல்வோம்விபரமுடன்மாணாக்கள்பிழைக்கவென்றே. உ௫௧

## வங்கச்சத்து.

பிழைக்கவேவங்கமதுசேர்தானென்று போரானசிங்கியதுசேர்தானென்று, வழக்கமுடன்மனோசிலையுஞ்சேர்தான்பாதி வாகுடனே தானுருக்கிகல்வமிட்டு, பழக்கமுடன்தேனதுவைவிட்டுவாட்டி பளிங்குடனேவச்சிரமாங்குகையிலேந்தி, தழைத்திடவே சில்லிட்டுசீலை செய்து தகையுடன்ரவிதனிலேகாயவையே. உ௫௨

காய்ந்தபின்புவச்சிரமாங்குகையைத்தானும் கனமுடனேசரவுலையில்வைத்தூது, தீய்ந்திடவேகுகையதுவுகழுகியேதான் நிறமான வங்கமதுவுருகிநிற்கும், பாய்ந்திடவேவங்கமதுகளங்குமாகும் பாரினிலேசித்தர்செய்யும்வேதையாச்சு, தோய்ந்திடவேவேதைமுகம்பாருங்காணார் தொல்லுலகில்கருவாளிகாண்பான்பாரே. உ௫௩

பார்க்கவேவங்கமதை யெடுத்துக்கொண்டு பரிவாககல்வமதில் பொடியாய்ச்செய்து, தீர்க்கமுடன்முப்பூவுக்காலதாக திறமுடனே தேன்விட்டுயரைத்தாயானால், மார்க்கமுடன்மெழுகதுவும்வெண்ணை போலாம் மயங்காமல்வச்சிறமாங்குகையில்வைத்து, ஏர்க்கவேமேல்மூடிசீலைசெய்து, யெழிலாகரவிதனிலேகாயவையே. உ௫௪

காயவேமூசைதனையெடுத்துக்கொண்டு கவனமுடன்சுண்ணம்புச்சீலையின்னும், 'தோயவேயேழுசீலையின்னுஞ்செய்து தோராமல்ரவிதனிலேகாயவைத்து, நேயமுடன்சரவுலையில்வைத்தூது நேர்மையுடன்சத்ததுவும்மணியாய்போகும், உபாயமுடன்மூசைதனையுடைத்துப்பாரு வுத்தமனேவெள்ளியென்றமணிபோலாமே. உ௫௫

ஆமென்றமணியெடுத்துசொல்லக்கேளு வப்பனேசூதமதுநேரேயாகும், காமென்றடாஷாணம்நேரேயாகுங் கருவாகயிரண்டையுந்தான்வரைத்துமல்லோ. நாமென்றவங்கத்துக்கங்கிபூட்டி நாயகனே சுண்ணம்புச்சீலைசெய்து, தாமென்றரவிதனிலேகாயவைத்து சட்டமுடன்குழல்தனிலேவுருக்கிடாயே. உ௫௬

உருக்கியேமூசைதனையுடைத்துப்பாரு வுத்தமனேகளங்கமது
யென்னசொல்வேன், நருக்கியேபின்னுமதைமூசையிட்டு நயமுடனே
வுருக்கிப்பார்களங்குமாகும், பெருக்கியேகளங்கெடுத்துப் பின்னுங்
கேளு பேராசமூசைதனையுருக்கிப்பாரு, செருக்கமுடன்களங்கதுவு
மென்னசொல்வேன் சிறப்பானபோகநாதயாகந்தானே. உ௫௭

## தாம்பரச் சத்து.

பாகமாமின்னமொருகருமானங்கேள் பாலகனேமாணாக்கள்பி
ழைக்கவென்று, யூகமாம்தாம்பரத்தின்சத்துசொல்வேன் யுரப்பன
மாமதின்சுத்திபின்னுங்கேளு, நாகமென்றசில்விஷந்தைநீக்குதற்கு
நலமாகப்பூநீரில்சுத்திசெய்து, சாகமுடன்தாம்பரத்தைசுத்திசெய்ய
சார்பானமுறையோடுகதைசொல்வேனே. உ௫௮

சொல்லவென்றால்தாம்பரமாங்கொடியகாலன் தொல்லுலகிலூா
லதுபோவதற்கு, வெல்லுகின்றபூநீருசேர்காரனென்று விளைநமுள்ள
செம்பதுவுஞ்சேர்காரன்ரெண்டு, கொல்லுகின்றவீரமதுசேர்தான்கா
லாம் குணமானசீனமதுசேர்தான்காலாம், புல்லுகின்றகருங்குன்றி
சேர்தான்காலாம் புகழானசிற்றண்டஞ்சேர்தான்காலே. உ௫௯

காலானசரக்கெல்லா மொன்றாய்க்கூட்டி காட்சிபெறநல்லமதி
லிட்டுமைந்தா, பாலானசெயநீராம்சாரநீராம் பக்குவமாய்தானரைப்
பாய்சரக்கையெல்லாம் மேலானசெயநீராம்சாமம்நாலு மேன்மையுட
ன்தானரைப்பாய்மைந்தாகேளு, கோலானமாத்திரைப்போல்செய்து
கொண்டு கொற்றவனேகிம்பழத்தின்சாற்றாலாட்டே. உ௬௦

ஆட்டவென்றால்விதிசொல்வேன்மதிபாய்க்கேளு வப்பனேசுத்தி
த்ததாம்பரத்தை, நீட்டமுடன்மருந்தையெல்லாம்தாம்பரத்தில்நீதியு
டன்கீழ்மேலும்பூசிப்போடு, வாட்டமுடன்ரவிதனிலேகாய்ந்தபின்பு
வகையுடனேவோட்டிலிட்டுசீலைசெய்து, தேட்டமுடன்கோழியெ
ன்றபுடத்தைப்போடு தெளிவாகபுடமாறியெடுத்துப்பாரே. உ௬௧

பார்க்கையிலேசெம்பதுவும்பொருமிக்காட்டும் பதமதுதான்ச
ரியாச்சுதாம்பரங்கள், நீர்க்கமுடன்பனைதனிலேயடித்தபோது திற
முடனேசெம்புக்குவதர்தான்போகும், மூர்க்கமென்றவூாலதுயற்றுப்
போச்சுமுழுமக்கள்தாமறியார்செம்புவூரல், சேர்க்கையிலேயிந்தமு
றைபத்துபாகம் செய்வையுடன்புடம்போட்டுயெடுத்துப்பாரே. ()

எடுத்துமிகப்பார்க்கையிலேயென்னசொல்வேன் வெளிதமாஞ்
செம்பதுவும் யேத்தமெத்த, அடுத்துநின்றபேர்களுக்கு மிந்தபாகம்

அறியாமற்செய்பவனேபுத்திபுள்ளான்தொடுத்தகுறிதன்முறைபோ
ல்செய்யுமாசான்றோற்றமல்கண்ணுக்குச்செய்வான்பாரு, கெடுத்து
மேமுறைபோலச் செய்துகாட்டி கெவனமுடன் வுட்கருவைக் காட்
டான் தானே. உசுரு

தானனதாம்பரத்தை யெடுத்துக்கொண்டு தண்மையுடன்குரு
சொன்னநேர்ப்பாகந்தான், கோனனெனதையர் காலாங்கிநாதர்
குருசொன்னவாக்கதுபோல் தாம்பரத்தை, மானனதாம்பரத்தைச்
சேர்ந்தான்கொண்டுமாட்டடவச்சிரமாய குகையிற்றானும்,வேனன
செம்புநின்றுருகும்போது விருப்பமுட னதிற்போட சாகுதேளே.

சாக்கென்றால் வீரமது வெள்ளைபாகும் தாக்கானபாஷாணம்
கெவுரியாகும், திரக்கமுடன்காரமது பூரமாகும் திகழான சூதமது
சரிநேராகும், உரக்கமுடன் சரக்கெல்லாஞ்சரியாய்த்தூக்கி வுத்தம
னேகல்வமதில் பொடியாய்ச்செய்து, இரக்கமுடன் தாம்பரத்துக்கி
வைசேர்பாதியெழிலுடனேகிராசமது நினைவாய்ப்போடே. உசுடு

போடவே செம்புருக்கிக்கிராசமீவாய் பொங்கமுடன்லகுவதா
ய்தாக்கிக்கொண்டு, நீடவேசெம்புதனை யறிப்பின்புநினைவாகமூசை
தனையுடைத்துப்பாரு, கூடவேசெம்பதுவுங் களங்கமாகும் குணமா
னவூறலதுயற்றுப்போச்சு, வாடவேதிரியாதேமைந்தாகேளு வருப்பு
டனேயிப்பாகஞ் செய்துபாரே. உசுசு

பார்க்கையிலேசெம்பதுவுங்களங்கமாகி பரிசுத்தகளங்கமதுயெ
ன்னசொல்வேன், தீர்க்கமுடன்களங்கதனையெடுத்துக்கொண்டுதீரமு
டன்கல்வமதிலிட்டுமைந்தா, ஏர்க்கவேபொடிசெய்து மைபோலாக்கி
யெழிலானதேனதனில்வறைந்துமேதான், தீர்கமுடன் மூசைதனில
டைத்துமைந்தா சிறப்புடனே சீலைசெய்துரவியில்தாக்கே. ()

தாக்கவேமூசையதுகாய்ந்தபின்புதகமையுடன் சரவுலையில்வை
த்தூதி, நோக்கமுடன்செம்பதுவும்வூறலற்றுகொடிக்குள்ளேகளங்
கமென்றபேருமாச்சு, தூக்கவேசெம்பென்றகளங்குதானும்துரையா
னவேதைமுகம் தன்னிற்றேன்றும், வாக்கதுதான்தப்பாது போகர்
தாமும்வரமுடனே பாடிவைத்த வண்மைபாமே. உசுஅ

## காயகற்ப செந்தூரசத்துவகை.

வண்மையாம் சத்தெல்லாஞ்சமனதாக வளமுடனேதானுறுக்கி
யெடுத்துக்கொண்டு, தண்மையுடன்தங்கமதுநாலுக்கொன்று தாக்க
வேகளங்குடனேதங்கஞ்சேர்த்து, திண்மையாம் களங்கதுவும் ஒளியு

வீசம்திர்க்கமுடன் களங்குக்கு வெட்டிலொன்று, உண்மையாம்கெ
ந்திபதகூட்டியேதான் உத்தமனே தானரைப்பாய சாமம்நாலே. ()

பொற்றலை கையாந்தகரை.

நாலானசாமமது வரைக்குமபோது நலமானசூதமதைவெட்டி
லொன்று, வேலானபொற்றலைபின் சாற்றலாட்டி விருப்பமுடன்பி
ல்லையதுலேச்ரய்தட்டி, மாலானரவிதனிலேகாயப்போமோர்க்கமுடன்
வோட்டிவிட்டுச்சீலைசெய்து, தாலானகெஜபுடத்தில் போட்டாயானு
ல்தளிர்ச்சியுடன் வெந்ததுவும் கறுப்புமாமே. உஎ௦

கறுப்பானசெந்தூரந்தனையெடுத்து கருவாகவைகயாளின்சாற்றி
னாலே, உறுப்பாகதானரைப்பாய்நாலுசாமம் வுத்தமனேமுன்போல
பில்லைதட்டி, தெறுப்பானபில்லையதுகாய்ந்தபின்புதேற்றமுடன்வோ
ட்டிவிட்டுச்சீலைசெய்து, குறுப்பானகெஜபுடத்தில்போட்டாயானால்
கொற்றவனே செந்தூரமாகுந்தானே. உஎக

தானானசெந்தூரஞ்சிவப்பதற்கு தன்மையுள்ளபுடமதுவுமைம்
பதாகும், கோனானவென்னையர் காலாங்கிநாதர் குருசொன்னபடி
யாகபுடமேபோடு, மானானபுடமதுமன்பதானல் மகத்தானசெந்தூ
ரஞ்சிவப்புமெத்த, தேனானசெந்தூரந்தனையெடுத்து செப்புகிறேன்
பின்னுமொருபாகங்கேளே. உஎஉ

பொடுதலைமூலி.

பாகம்போம்யென்னாதே கெந்திதாரம் பகருமந்தசெந்தூரம்
நாலுக்கொன்று, வேகமுடன் சரக்கதனையொன்றாய்ச்சேர்த்துவிருப்
பமுடன்சூதமதுவெட்டிலொன்று, சாகமுடன்சரக்கெல்லாமொன்று
ய்ச்சேர்த்துசட்டமுடன்தானரைப்பாய்நாலுசாமம், நேசமுடன்பொ
டுதலையின்சாற்றினாலே நேர்ப்பாகதானரைத்துபில்லைதட்டே. ()

தட்டியேரவிதனிலேகாயவைத்துதகமையுடன்வோட்டிவிட்டுச்
சீலைசெய்து, சட்டமுடன் கெஜபுடமாய்போட்டாயானால் சார்பான
செந்தூரஞ்சிவப்புகாணும், நட்டமில்லாபுடமதுவு மைம்பதாகும்
நயமுடனேபாகமதுதவறிடாமல், இட்டமுடன் புடம்போடச்செ
ந்துரிக்கும் யெழிலானசெந்தூரஞ் சொல்லொணாதே. உஎச

சொல்லவென்றால் நாவில்லைப்பாவுமில்லை சுந்தரனேசித்தர்செப்
பும்வேதையாச்சு, வெல்லவேசெந்தூரமார்க்கந்தனைவிருப்பமுடன்கா
ரமதுகொள்வதற்கு, புல்லவேபின்னுமொருபாகங்கேளு புகழானசெ

க்தூரஞ்சிவப்புகாண, கொல்லவேவிலாரியின் தயிலத்தாலேகொற்ற
வனே தானரைப்பாய் சாமமெட்டே. உஎ௫

## விலாரிமூலி.

எட்டான சாமமது வரைத்தபோது மெழிலானசெந்தூரம் மெ
ழுகுபோலாம், திட்டமுடன் தானரைந்துபில்லைதட்டி தீர்க்கமுடன்
ரவிதனிலேகாயப்போடு, சூட்டமதுபில்லைபதாய்தட்டியேதான்குறி
ப்புடனேசீலைசெய்ய வகையைக்கேளு, வட்டமென்ன வோட்டிலிட்
டுச் சீலைசெய்து வளமைபெறகெஜபுடமாம் போட்டுத்தீரே. உஎசு

தீரவென்றால் புடமாறியெடுத்துப்பாரு திறலான செந்தூரஞ்
சொல்லப்போமோ, சாரவேசெந்தூரந்தனையெடுத்து சாங்கமுடன்
விராலியிடதயிலத்தாலே, பாரமுடன் தானரைப்பாய்நாலுசாமம்
பதராமல்மெழுகதுபோ லாகவேதான், நேரமுடன்பில்லையது லகு
வாய்த்தட்டி நேர்ப்புடனே ரவிதனிலேகாயப்போடே. உஎஎ

போடவேவோட்டிலிட்டுச் சீலைசெய்து பொங்கமுடன் கெசபு
டமாம்போட்டுத்தீரு, நீடவேயிப்படியே ஐந்துபத்து நினைவாகப்பு
டம்போடச்செந்தூரிக்கும் தேடவேசெந்தூரம்யெடுத்துப்பாரு தே
சிகனேகாரமது கூரொண்ணாது, பாடவேயின்னம்வெகு மூலிசொல்
வேன் பாலகனேயறிவாய்ப் பண்பாய்த்தானே. உஎஅ

## வல்லாரை மூலிகை.

பண்பானமூலிகைதான் சொல்லக்கேளு பாரினிலேமெத்தவுண்
டு காயகற்பம், திண்பானமூலி வல்லாரைகற்பம் திறமான மூலியது
சார்பிழிந்து, நண்பானசெந்தூரங் கல்லமிட்டுநயம்பெறவே மூலியிட
சாற்றாலாட்டி, வண்பாகநாற்சாம மறைத்தபோதுவளமாகமெழுகது
போ லாகும்பாரே. உஎகூ

பாரேதான்மெழுகதனை பில்லைதட்டி பாகமுடன் ரவிதனிலே
காயப்போடு, சீரேதான் வோட்டிலிட்டுச்சீலைசெய்து சிறப்புடனே கெ
ஜவிடந்தான்போட்டுத்தீரு, நேரேதான் செந்தூரங் காரமேறி நெறி
யான காயகற்பகுருவுமாச்சு, தீரேதான்பின்னுமிந்த செந்தூரத்தை
தீர்க்கமுடன்புடம்போட வகையைத்தேடே. உஅ0

தேடயிலேசெந்தூர மைம்பதாகும் தேற்றமுடன்புடிமதுவும்தி
கங்கொண்டால், கூடயிலே செந்தூரங்காரமேறி குறிப்புடனே கா
யாதிக்குறிதியாச்சு, நீடயிலேயிப்படியே தீர்தங்யானல்நீனிலத்தில்

நீயுமொரு சித்தனாவாய், பாடயிலேயொருவருந் தான்சொல்லவில்லை பாரினிலேயின்னூல்போ லொருனூலுண்டோ. ௨௮௧

### புளியாரைமூலி.

உண்டேதான் வையகத்தில் பலநூலுண்டுவுத்தமனே சாஸ்திரங்கள்கோடியுண்டு, கண்டேனேநானும்வெகு நூல்கள்தன்னை கவடற்ற நூலிதுதான்மெய்நூலாகும், திண்டானவேதமுனி நூல்கள் சொன்னார் திகழுடனேகாசினி லனேகமுண்டு, கொண்டானகொண்டபடி வினைநஞ்சொன்னார் குவலயத்தி லின்னூல்போலில்லைதாமே

தானான செந்தூரஞ்சாற்றக்கேளு தகமையுடன் புளியாரைச் சாற்றினாலே, பானானசெந்தூர மறைத்துமேதான் பதமுடனே பில்லைதட்டிக்காபவைத்து, வேனானவோட்டிலிட்டுச் சீலைசெய்து விருப்பமுடன்செஜபுடத்தில்போட்டையானால், கோனானகுருநாதர் சொன்னவாக்கு குவலயத்தில் பொய்யாது மெய்யாம்பாரே. ௨௮௩

பாரேதான் செந்தூரங்காரமேறி பாகமுடன் காயாதிகற்பமாகும், வேரேதான்வைந்து த்து புடமேபோடு நெறியானபுடமதுவுந் தப்பாவண்ணம், கூரேதான்சொன்னபடி செந்தூரிக்கும் கூர்பான காரமது சொல்லப்போமோ, வேரேதானின்னமொரு மார்க்கம் சொல்வோம் வேதாந்தத்தாயினது வருள்தான் காணே. ௨௮௪

### பொன்னாவரைமூலி.

காணவென்று லின்னமொரு மாற்கம்பாரு கருவானசெந்தூரப் போக்கு சொல்வேன, தோணவே செந்தூரந்தனையெடுத்து துறையுடனேகல்வமதிலிட்டுமைந்தா, பூணவேபூநீருமுப்புச்சுண்ணம் புகழாகத்தான்போட்டு பெட்டிலொன்று, வேணவே பொன்னினாவரையாலே விருப்பமுடன் தானரைப்பாய் சாமம்நாலே. ௨௮௫

நாலானசாமமது வரைத்தபோது நயமுடனே வெண்ணெயது போலேயாகும், பாலகனேவெண்ணெயதுபிதற்கொவ்வாதுபாலகனே சித்தர்முகம் வேதையாச்சு, சேலானவனமூலி தன்னையப்பா செம்மையுடன்தான்கூட்டி எறைத்தபோது, மாலானசத்தெல்லாம் மடிந்துமேதான் மகத்தானசெந்தூர முடியலாச்சே. ௨௮௬

ஆச்சென்றுவிடுகாதே மைந்தாகேளு வப்பனே பில்லையதுதட்டியேதான், காச்சலென்ற ரவிதனிலே காயப்போடு கருவானவோட்டிலிட்டுச்சீலைசெய்து, பாச்சலுடன்கெசபுடமாம் போட்டுநீரு பால

கனையாறியபின்னெடுத்துப்பாரு,மூச்சடங்கிப்புடமதுதான்வெந்து
தானால் மோசமில்லைவாராதன்றே. உஅஎ

வாராது தோஷமதுநேராதல்லோ வகுப்பானசெந்தூர முறுதி
காணும், நேரானசெந்தூரந் தனைஎடுத்து நேர்மையுடனகல்வமதி
லிட்டுப்பின்னும், சேரானபொன்னினைவாரைமூலிநேசரவேதான் விட்
டுவெறைத்துமேதான்நேரானமைபோலரைத்துமல்லோ கிஷ்களமாய்ப்
பில்லைபது தட்டிப்போடே. உஅஅ

போடவேரவிதனிலே காய்ந்தபின்பு பொங்கமுடன் வோட்டி
லிட்டுச்சீலைசெய்து, நீடவேகெசபுடமாய்ப்போட்டையானால் நேரான
செந்தூரமென்னசொல்வேன், கூடவேயிப்படியாய்ஐந்துபத்துகொற்
றவனே புடமதுதான் தீர்ந்தாயானால், நாடவேசெந்தூர மென்ன
சொல்வேன்நாதாக்கள் கைமறைப்புகண்டு பாரே. உஅகூ

பாரேதான் சித்தர்முனிரிஷிகள் தாமும்பாருலகில்செய்வதுதா
ன்வதீதமார்க்கம், நேர்மையுடன் பலநூலுங் கண்டாராய்ந்து சீரே
தான்வனேகவித காயகற்பம்சிறப்புடனே தான்முடித்தார்லக்கோயி
ல்லை, வேரேதான்வநேகநூல்யானுங்கண்டேன் வுற்பனத்தையுளவ
றிந்துசொல்லார்தாமே. உகூ0

தாமானகருவெல்லாமறைத்துப்போட்டார் தகமையுடன்திரு
மூலவர்க்கத்தார்கள் நாமேதான்சொன்னபடி நூலாராய்ந்து நாட்டி
னுள்ளவவளப்பமெலாங்கண்டார்பாதி,தேமேதான்காயாதிகறபசாங்
கம் தெளிவாகச்சொன்னவர்களொருவரில்லை, பூமானுங்காலாங்கிநா
தர்தாமும் புகழுடனேபாடிவைத்தார்கோடியாமே. உகூக

கோடியாஞ்சித்தர்களிலொருவருண்டு கூறினர்பலபலவாய்கண்
டாராய்ந்து, தேடியேமானிடர்கள்பிழைக்கவென்று தெளிவாகப்பா
டிவைத்தார்சித்தர்தாமும், பாடியதோர்நூலெல்லாம்பழுகாராய்ந்து
பாரினிலேபலபலவாம்பேதஞ்சொன்னார் நாடியேபோகரிஷி அடியே
ன்றானும் நயம்பெறவேயுலகமதில்நவினறிட்டேனே. உகூஉ

நவின்றிட்டேனின்னமொருகருமானங்கேள் நாட்டினுள்ளமா
னுக்கள்பிழைக்கவென்று, நவின்றிட்டசாத்திரத்தின்யுத்தாயுத்தம்
தன்மைபெறவெகுசூளுவபாராய்ந்தேதான், புவின்றிட்டேன்பொன்
னினாமத்தைதன்னால் கருவாகதானறைப்பாய்சாமமெட்டே. உகூங

பொன்னூமத்தைகுழலி.

எட்டானசாமமது செந்தூரத்தை யெழிலாகத்தானரைப்பாய் மைந்தாநீயும், திட்டமுடன்மைபோலே தானரைந்துதிர்க்கமுடன் பில்லையது லகுவாய்த்கட்டிசட்டமுடன் ரவிதனிலேகாயவைத்துசா ங்கமுடன் ஓட்டிலிட்டுச்சீலைசெய்துவட்டமென்றகுழிதனிலேவெறு வடுக்கிவா குடனேபுடமதவும் போடுபோடே. உகூச

போட்டவுடன் தீபாறியெடுத்துப்பாரு பொலிவான செந்தூர மென்னசொல்வேன், நீட்டமுடன்செந்தூரங்காரமேறி நீனிலத்தில் காயாதிகற்பமாச்சு, வாட்டமுடன் செந்தூரமிந்தபாகம் வண்மையு டன்வைந்துபத்துபுடந்தான்போடு, தாட்டிகமாய்செந்தூரமருணன் போலாம் தாரணியிலொரு வருந்தான்செய்யார்தானே. உகூரு

தானனசெந்தூரமதீ நவிந்தைதாரணியிலொருவருந்தான்செய் தகில்லை, கோனனபெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனர் தம்ப தியிலடியேன்சென்று, வேனனசாத்திரத்திலுளவுபார்த்து வேகமுட ன்சீனபதிசென்றுயானும், பானனகுளிகைதனை பூண்டுகொண்டுபறந் திட்டேன்சீனபதிதேசங்காணே. உகூசு

காணவேசீனபதிசென்றேன்யானும் கமலமுனிசீர்பாதங்கண்டு போற்றி, வேணவுபசாரமதுமிகவுஞ்செய்து வெற்றியுடன்குளிகை யதுபூண்டுகொண்டு, பாணமதுபோலெழும்பிவடியேன்றானும் பக்க லென்றசமாதியது நின்றேன்யானும், நாணவேதலைகுனிந்து நின்ற போது நாதராங்கமலமுனிவிடைசொன்னாரே. உகூஎ

விடையொன்றுசொல்லுகையிலடியேன்றானும் விருப்பமுடன் வுத்தாரஞ்சொல்லுற்றேன், தடையில்லாவாக்கதுவுங்கமலர்தாமும் தாட்சியுடனெந்தனுக்குவுரைத்ததாலேமடைபோன்றசெநூற்காய கற்பமமகதேவர் மகிட்சியுடன்செய்யலுற்றார், அடையூறுவாராமல் யெந்தனுக்கு யெழிலானவாக்கதுவுங்கொடுவென்றேனே. உகூஅ

கொடுவென்றுகேட்கையிலேசித்துதாமும் கொப்பெனவேயெ ந்தனுக்குச்சாபந்தீர்ந்து, படிமுன்னேசாக்கெல்லாங் கட்டிப்போக பாரினிலேகாயாதிகர்ப்பந்தானும், தொடுகுறிபோலெந்தனுக்குவுள வுஞ்சொல்லி,தோஷமதுபோர்வதற்குமுறையுஞ்சொல்லி விடுவதலும் பிணிநீக்கக்காயகற்பம்விருப்பமுடன்வாக்களித்தார்முறைபுர்தானே

தானானகமலமுனிநாதர்தாமும் தகமையுடனெந்தனுக்கு வாக்களித்தார், கோனானகாலாங்கிநாதர் பாதம்கும்பிட்டுவெடியேனுந்தாள் பணிந்து தேனானசாத்திரத்தைக்கண்டாராய்ந்து திரட்டிவைத்தேன் போகரேழாயிரந்தான், பானானகாலாங்கிதனைநினைந்துபாடிவைத்தேன்சத்தகாண்டம் பண்பாய்த்தானே. ௯௦௦

## செந்தூரப்பெருமை ரோகநிதானம்

தானேதான் செந்தூரப்பெருமைதன்னை சாற்றுகிறேன்மானுக்கன்பிழைக்கவென்று, மானேகேள்வனுபானமினமதிர் துலயங்கரமல்மானிடர்கள்கொள்வதற்கு, தேனேதான் பசும்வெண்ணெநெய்யுமாகும் தேற்றமுடன் பாலாகுஞ்சூரணந்தான், ஊனானலேகியங்கள்கிருதமாகும் வுத்தமமேயிஞ்சிரசம் முலைப்பாலாமே. ௯௦௧

ஆமேதான்சக்கரையுமெழுகுமாகும் அப்பனேயிந்தவித வனுபானங்கள், நாமேதான்சொன்னபடிசிகிச்சைசெய்தால் நாடாதுதேகம்வனுபிணிகள்போகும், போமேதான்பொல்லாதநோய்கள்போகும் பொலிவானரோகத்தின் மார்க்கஞ்சொல்வேன், வேமேதான்பிணிக்குறிப்பு வுளவுசொல்வேன் வேகமுடன்நாயாதிகற்றங்கேளே. ()

## தீரும் வியாதி.

கேளேதான்வாயுவென்றதெண்பதும்போம் கெடியானபித்தம நாற்பதும்போம், நாளேதான்கிரந்திபதினெட்டும்போகும்நாடாது ஜன்னிபதிமூன்றும்போகும், பாளேதான் பாண்டுவகையாறுந்தீரும் பாலகனேமூலமிருபதும்போகும், வீளேதான் அதிசாரரோகம்போகும் வீரானகிராணியென்றதாறும்போமே. ௯௦௩

ஆரானவாதமென்றரோகம்போகும் அப்பனேசிலேத்மமதுதான் னூற்றாறும், காரானகெடியரோகம்பதினெட்டும்போம் கருவான காசமென்றரோகமெட்டும், வேறானவுளமாந்தை ரோகம்போகும் விருப்பமுடன்பிரமியங்களைந்தும்போகும், கூறானமேகமென்றவிருபத்தொன்றும் கொற்றவனேசடலம்விட்டு யேகும்பாரே. ௯௦௪

பாரேதான்குட்டமது பதினெட்டும்போம் பாங்கானசோகையென்ற ரோகம்போகும், நேரேதான் மகோதரங்களெட்டும்போகும்நெடிதானவிஷபாகமாறும்போகும், சேரேதான் சூலைபதினெட்டும்போகும் செழிப்பானகுன்மமென்றதெட்டும்போகும், யேரேதான் பெரும்பாடுரோகம்போகும்மேலானகல்லடைப்புவாறும்போமே

பேரமேதான் விப்புரிதிரோகம்போகும் பொலிவானகரப்பன் பதினெட்டும்போகும், வேமேதான் பவுத்திரங்களனைத்தும்போகும் விருப்பமுடன் நேத்திரநோய் தொண்ணூற்றும், நாமேதான்சொன்னபடிவதிரோகங்கள் நாட்டிலுள்ளவதிசூரியெல்லாம்போகும், தாமேதான்பீநிசங்களெட்டும்போகும் தாக்கானசிறகிநோயனைத்தும் போமே. ௯௦௬

சிறமானநோயுடனே யின்னஞ்சொல்வோம் சீரானதாகமென்றரோகம்போகும், வரமானவிக்கல்வலி ரோகம்போகும் வகையான சுவாசமென்றரோகம்நீங்கும். உரமானவாக்கியென்ற ரோகம் போகும் வுத்தமனே மார்புநோய்தனைவிடடேங்கும், பரமானகம்மலென்றரோகம்போகும் பார்த்திபனேசகலவிஷ ரோகம்போமே. ௯௦௭

போமென்றுவிடுகாதே யின்னஞ்சொல்வோம் பொலிவானவாண்குறியின் ரோகம்போகும், தாமெனவே பெண்குறியின் ரோகம் போகும் தாக்கான மருந்துவகை வீறும்போகும், நாமெனவேமலட்டுவலிரோகம்போகும் நாடாது கசரோகமெல்லாய்நீங்கும், வேமென வேகாயாதிகற்பமாற்கம் விருப்பமுடன் செய்யின்றவீரந்தானே ()

வீரமாஞ்சில்விஷங்களற்றுப்போகும் வேகமென்றபிலுவையெ ன்னுங்கட்டிப்போகும்சாரமாம்ரத்தவிஷமற்றுப்போகும்சதாகாலம் மேலினைப்பு தேர்ந்துபோகும், தூரமாங்காதவழிநடக்கலாகும் நடந் தாலும் வாசியது கீழேநோக்கும், பாரமாக்தேகமது கற்றாணுகும் பாரினிலே வெகுகால மிருக்கலாமே. ௯௦௯

இருக்கலாங் கோடியுககற்பகாலம் யிருந்தாலும்நரைதிரையும் ஒன்றுமில்லை, சுருக்கமுடன் மேனியது தளர்ந்திடாது தளர்ந்தாலும் நாம்புக்குவலுவுமுண்டு, பெருக்கமுடன்காயாதிகற்பகாலம் பேருலகில் நீயுமொருசித்தனவாய் உறக்கமுடன்செந்தூரங்கொண்டபேர்க்கு வுலகத்தில்வயதுகணக்கில்லைதானே. ௯௧௦

கணக்கில்லைகாலன்வந்தணுகமாட்டான்காசினியில்நீவெகுகாலம் மிருக்கலாகும், பிணமாகிமூச்சடங்கியிருந்திட்டாலும் பேருலகினுன் னையொருசித்தனென்பார், க்ஷணநேரம்வாசியைநீ நடத்திட்டாலும் சதாசிவன்தான் நீயென்றுசொல்லுவார்கள், மணமுடனேபூமிதனில் வாழலாகும் மண்ணுலகில் வேந்தரெல்லாம் நடுங்குவாரே. ௯௧௧

நடுங்குவார்வுனைக்கண்ட சீஷவர்க்கம் நாடோறும் வுந்தனுக்குப் பணியேசெய்து, ஒடுங்கியேயுந்தனிடபக்கஞ்சென்று வுபசாரவார்த் தைகளுமதிதம்பேசி,கொடுத்தவசியானதொருயுந்தனுக்குநேசமது

வாராமல் முன்னேநின்று, படுந்துயரமிகவாகிமனதிலெண்ணி பட்சமுடன்சதாநித்தஞ்சேவிப்பாரே. ௫௧௨

சேவிப்பார்தவநிலையிலொடுங்கிநின்று சேர்வையுடன்காட்சிதனைக்காணவென்று, கோவிப்புவாராமல்குருவைத்தானும்கொற்றவனும்மென்னும்பணிந்துநின்றுதாவிப்பாம்சோடசோபசாரத்தோடு தண்மையுடனேவனுக்குமுதலாய்நின்று, சாவிப்புவாராமல்புனிதவனுப் சதகோடிகாலம்வரைபணிசெய்வாரே. ௫௧௩

பணியானநீயுமொருசித்தனைப்போல் பாலகனேயென்னுமிருப்பதற்கு, அணியானசிவயோகத்தானிற்சென்று ஆத்தானைசாதகித்தம்பூசிததேதான், தனிவோடுசமாதிநிலைநின்றுகொண்டு துப்புறவாய்மேல்மூச்சுதனையடக்கி, மணியானபூரகத்தைமேலேநோக்கி மார்க்கமுடன்வனுகதத்தைப்பூட்டிப்பாரே. ௫௧௪

பூட்டிமிகப்பார்க்கையிலேபொலிவுதோன்றும் பொங்கமுடன்சுழுத்திதனைமேலிறுத்தி, ஆட்டமர்க்கைதனிவோனுப்புகுந்தாப்போலவப்பனேயஷ்டாங்கந்தன்னிற்சென்றுகூட்டுமுறைவகையறிந்துசிவயோகிதானும் குணமுடனேயங்கசித்திபெற்றுக்கொண்டு, பாட்டுநயமறிந்துமல்லோபாரினமீது பாரமுடன்தவசிருந்தல்மெத்தநன்றே.

நன்றானயோகமதையறியவேண்டும் நாயகனேயென்னும்பூசைவேண்டும், குன்றானமாய்கைதனையருக்கவேண்டும் கொடிதானபொருளாசைநீக்கவேண்டும், பன்றானசாத்திரத்தைப்பலவும்பார்த்துபாரினிலேகோளாறுயறியவேண்டும், சென்றாலும்ராசருடஞ்சொல்லவேண்டும் செயலானபாக்கியத்தைநீக்கனன்றே. ௫௧௬

நீக்கவேபொருளாசையவர்க்குச்சொல்லி நிதியெலாந்தானமீக்கமதியுஞ்சொல்லி, போக்கவேகர்மானுபவத்தைநீக்கிப்பொங்கமுடன்யென்னும்ஞானமோதி, வாக்கதுவும்பிசகாமல்வழியோருக்கு வண்மையுடன்தானமதுசெய்யச்சொல்லி நோக்கமுடனவரவர்க்குத்தக்கபாகம் நுண்மையுடன்கொடுப்பதுவேதருமமாமே. ௫௧௭

காயாதிகற்பமுண்டவர்கள் அஷ்டசித்திபெற.

தருமமாங்காயாதிகற்பமுண்டோர் சதாகாலஞ்சாயுச்சியம்பெறுவதாகும், கருமமாம்வஷ்டாணபீடைதானும் காசினியில்வெறுப்பதுவேயோகமார்க்கம், சருமமுடன்காயமதுபூமிதன்னில் சட்டமுடனிருந்தாலுங்கரிப்பேறாது, மருமமுடன்சித்தாதிசித்தரெல்லாம மானிலத்திலிப்படியேவழங்கினாரே. ௫௧௮

வழக்கமுடன் தானிருந்தார்சித்தாசித்து வையகத்தில்காயாதிகற் பமுண்டுபழக்கமதுமிகவாய்பாரினிற்குள்பதிவிருந்தார்வெகுகோடி காலந்தானும் முழக்கமுடன் ஆண்டுக்கோர்கோஷ்டிகாட்டும், மூதுல கில்கண்டவர்கள்பிரமிப்பார்கள், பழக்கமுடன்சிஷவர்க்கம்பிதுவே பாகந் தாரணியில்வெகுசித்து ஆடினரே. ௫௬௯

சிஷர்கள் ஆசானுக்கு அஞ்சலிசெய்தது.

ஆடினார்சித்தர்முனிரிஷியைப்போல அவனிதனில்கோடிமனுத வசியோர்கள், தேடியேசமாதியிடநிலையைக்கண்டுதேற்றமுடன்பெரி யோரையடுத்துமேதான், கூடியேகும்பல்கும்பலாய்ச்சேர்ந்துகுருவா னதவநிலையைக்காணவென்றுநாடியேசொரூபமென்றநிலையைக்காண நலமுட்னேகாத்திருந்தாரனேகம்பேரே. ௫௭௦

பேரானவழிதனிலே வதிதம்பூண்டு பேருலகில்யுமொருசித்த னைப்போல், தூரானகெட்டவழிசெல்லாமற்றான் துரைராஜசுந்தரன் போலிருந்துகொண்டு, வாரானசாத்திரத்தின்வன்மைபார்த்து வன் மையுடன்வாதமதையறிந்துகொண்டு, தேரானயோகமதைநிலைநிறுத் தி தேற்றமுடனயோகநிலைக்கிடமும்தேடே. ௫௭௧

தேடையிலேவிட்டகுறைநேர்ந்ததானல் தெளிவுடனேயுந்தனு க்குலபிக்கும்பாரு, கூடயிலேவாசான்தான்னில்லாவிட்டால் கொற்ற வனேகாயாதிகற்பம்போதும், பாடையிலேசென்றாலும்திரேகம்போ மோபாரினிலேதெரியாமலிருந்தோர்கோடி, நீடையிலேகாயாதிசெந் தூரந்தான் நிலைத்துநடாதேகமதுகற்றாலுச்சே. ௫௭௨

கற்றாலும்பொற்றாலுங்கருங்கல்லாகும் காசினியில்காயாதிகற் பமாச்சு, நற்றாலுங்காயாதிசெந்தூரந்தான் நாயகனேமுக்கோடி தவஞ்செய்தாலும், கற்குணமும்வீராதிவீரன்போலும் பாரினிலேச துகோடிசூரியனைப்போல், துறகுணங்கள் தானகன்று சித்தனுவாய் துரைராஜசிவயோகியாவாயே. ௫௭௩

ஆகையிலேசெந்தூர முண்டபேர்க்கு அவனிதனில் நரையில்லை திரையுமில்லை, சாகையிலேசேத்துமங்களணுகிடாதே செத்தாலும் ஆவியதுவெளிபோகாது, போகையிலேதம் ஞ்செயனும்சிரசுக்குள்ளே பொங்கமுடன்தான்வசித்துக்கற்பகாலம், வேகையிலேதீயதனில்வெந் திட்டாலும் வெகுசுறுக்காய்தேகமது துள்ளும்பாரே. ௫௭௪

பாரேதான்தேகமதுதுள்ளும்போது பாரினிலேசெகஜாலவித்தை யென்பார், நேரேதான்சவமுகத்தில்நிற்கும்போது நெருப்பானத

ண்லதுவும்விந்துபோகும் கூரானமானிடர்கள்சொல்வதென்றால்குவ
லயத்தே ஜெசஜாலவித்தையென்பார், தூரேதான்மசானத்திலிருந்து
கொண்டு துப்புறவாய்ச்சவமதனை பழிசொல்வாரே. ௫௨௫

பழியானசெந்தூரங் காயகற்பம்பாருலகிலுண்டவர்க்குக் காய
ம்போகா, வழியான செந்தூரம் யார்தான்செய்வார் வண்மையுள்ள
சிவயோகிதானே செய்வான், மொழிவானகருவாளி யானமாந்தர்
மோசமின்றி காசுதனை செலவுசெய்து, கழியானசெந்தூரப்போக்கு
தன்னை கனமுடனேசெய்பவனே புனிதனாமே, ௫௨௬

புனிதனும் பின்னமொரு மார்க்கம்பாரு புகழானசெந்தூரஞ்
செய்பக்கேளும், வனிதமுடன் வெள்ளிசெம்பில்பத்துக்கொன்று
வாகுடனே தானுருக்கி குருவொன்றிய, கனிவானகரியோட்டிலூதி
ப்போடு கருவானசெம்பதுவுங் கொஞ்சம்நீங்கி, தனியான வெள்ளி
யது வரணமேறி தகமையுடன் பொன்னென்றமாற்றுமாச்சே ()

ஆச்சப்பா குடவனிலேபத்துக்கொன்று அப்பனேபாய்ச்சிட
வே மாற்றெட்டாகும் மாச்சப்பாசெம்புதனில் பத்துக்கொன்று பா
ங்குபெறமாற்றதுவுமெட்டதாகும் பேச்சப்பாபிசகொன்று மில்லை
தானும் பேரானதங்கமதுபத்துககொன்று மூச்சப்பாவிசாம லூரு
க்கியேதான் முதன்மையுடன் தானெடுக்கக்களங்குமாமே. ௫௨௮

களங்கான தங்கமனதயெடுத்துக்கொண்டு கருணையுடன் வெ
ள்ளிதனில் பத்துக்கொன்று விளங்கவே தானுருக்கி யெடுத்துக்கொ
ண்டு வேகமுடன் வாரடித்துப்புடத்தைப்போடு அளங்கமுடன்
தங்கமது விளையும்பாரு அப்பனே சிவதத்துக்கு வுருக்கித்தங்கம் நளங்
கமுடசிவராஜயோகஞ்சென்றுநாட்டிலே தாமிருந்தார் கோடியாமே

கோடியாந்தவகோடிரிஷிகள்கோடி குவலயத்தில்சத்துவகைய
றியாமற்றான் கோடியேசுட்டலைந்து கெட்டார்கோடி தெரிசனங்கள்
காணாமல்மாண்டார்கோடி வாடியேமனந்தளர்ந்துவழிகாணாமல்வகை
கெட்டுநூல்பார்த்துமறந்தார்கோடி கூடியேயொருவரிடமமுறைகள்
கேட்டு, கூர்மையுடன்பாராமல்கெட்டார்தாமே. ௫௩௦

கொங்கணவர் சாயகற்பம்.

தாமானபின்னமொருகருமானங்கேள் தகமையுள்ளசித்தர்முனி
கொங்கணவரப்பா சாமான்யமானதொருசாத்திரத்தை சதுரானசங்
கமதிற்கொண்டுசென்று பூமான்கள்சித்துவகையிருக்குங்கூட்டம்புக
ழ்ச்சியுடன்வழிபாடுசென்றுமங்கே சாமான்யமானதொருகொங்கண
வர்தாமும் மதிப்புடனேசபைநடுவேசென்றிட்டாரே. ௫௩௧

சென்றிட்டகொங்கணவர்சித்துதாமுஞ்சிறப்புடனேசித்தர்முனி தம்மைக்கண்டு வென்றிட்டசாத்திரத்தைவாதுபேசி விருப்பமுடன் சத்துவகைமிகவும்பேசி கன்றிட்டகருக்குருவை தெரிந்துகொண்டு கருத்துடனேகுருமுடிக்கமனதிலெண்ணி பன்றிட்டசாத்திரத்தைத் தோஷஞ்சொல்ல பாரினிலேசத்துவகைமுடித்தார்காணே, ருருஉ

காணவேபத்துவகையெடுக்குமார்க்கம்கடந்தமேதோர்ஞானிமுதல் சித்தர்தாமும் தோணவேபாஷாணம்முப்பத்திரெண்டும் துறையோடும்முறையோடுஞ்செப்பக்கேளு பூணவேவகைவகைக்குப்பலமதாக புகழுடனேதனைதனில்நாலுசாமம் வேணவேதானரைப்பாய் மைந்தாகேளு விருப்பமுடன்வெண்ணெயதுபோலேயாட்டே. ருருரு

ஆட்டிபேரவிதனிலேகாயவைத்து அப்பனேமூசைதனிலடைத்துமைந்தா பூட்டிபேவாலுகையாமேந்திரத்தில் புகழாகதானரைப் பாய்மையோலாக நாட்டிபேமூசைதனிலடைத்துமைந்தா நலம்பெறவேசில்லிட்டுசீலைசெய்து நீட்டமுடன்சரவுலையில்வைத்தூதுநேரானசரக்கெல்லாம்புகைந்துபோமே ருருச

போகுமேசரக்கெல்லாஞ்சத்தேயாகிபொங்கமுடன்மியமதுபோலேயாகும் சாகுமேபாஷாணம்புகைந்துமல்லோ சத்துபோல்சத்தாகிகளங்கமாகி வேகுமேசரவுலையில்புகைடண்டாகி வேகமுடன்அஞ்சனத்தின்கல்போலாகும் பாகுடனேவுருக்கியதோர்மூசைதன்னை பதமுடனேதானெடுத்துவுடைத்துப்பாரே. ருருரு

பாரேதான்பாஷாணஞ்சரக்குசேர்ந்து பாகமுடன்தானுருகிகரியாய்நிற்கும் நேரேதான்பூநீகம்மண்ணைப்போக்கி நேர்மையுடன்சத்துக்குநேர்சேராசகூரேதான்வினயமுடனென்றூச்சேர்த்துகொற்றவனேகல்வமதிலிட்டுப்பின்பு வேரேதான்ஆவின்னெய் தன்னாலாட்டி வேகமுடன்மூசைதனிலடைத்திடாயே, ருருசு

[illegible]டைக்கவென்றால்வச்சிரமாங்குகையில்வைத்து அப்பனேசில்லிட்டுசீலைசெய்துதடையறவேரவிதனிலேகாயவைத்து சாங்கமுடன் சரவுலையில்வைத்தூது மடைபோன்றதீபதனால்வெந்துசத்தாய் மார்க்கமுடன்னியம்போலுருகிநிற்கும் இடைகடிவேகளங்கமதையெடுத்துக்கொண்டு யெழிலான அங்கமதுநேர்தானகூட்டே. ருருஎ

கூட்டியேதானுருக்கி யெடுத்துக்கொண்டு கொற்றவனேகல்வமதிலிட்டுமைந்தா நாட்டிகமாம்பொற்றலையின்சாற்றினாலே தண்மை

யுடன்தானனைப்பாய்நாலுசாமம் நீட்டமுடன்தானறைத்துபில்லை
தட்டி நேர்புடனேரவிதனிலேகாயவைத்து வாட்டமுடன்வோட்டி
லிட்டுச்சிலைசெய்து வளமையுடன்சரவுலைமேலேற்றிடாயே. ௩௩௮

ஏற்றியேவுருக்குமுகம்தன்னிலேதான் யென்மகனேதுருத்தியது
நாலதாகும் போற்றியேவாலாம்பிகைதனைநினைந்து பொங்கமுடன்
மூசைதனைநெருப்பிலிட்டு தூற்றியேகரியதனைமேலேகொட்டி துப்புர
வாமூசையதுபழுகுமட்டும் நாற்றிசையுந்தீபரக்கவூதவூது நாயக
னேசத்தெல்லாமுந்துமாமே. ௩௩௯

முத்தானசத்ததுவுஞ்சொல்லப்போமோ மூதலகில்பாரேனுங்
கண்டதுண்டோ சித்தானமுனிரிஷிகள்செய்யும்வேதை தேசத்தில்
மற்றவரால்செய்யப்போமோ வித்தானகளங்கமதுகாயகற்பம் விண்
ணுலகில்கருவாளிசெய்வான்பாரு சத்தானசத்துதனையெடுத்துமைந்
தா சார்புடனேமூசைதனையுடைத்துப்பாரே. ௩௪0

உடைத்துமிகப்பார்க்கையிலேஎன்னசொல்வேன் ஓமோமோநா
தாக்கள்ரிஷிகள்வேதைபுடைத்திமேசத்துகளைதாவெடுத்துபுகழாக
கல்வமதிலிட்டுமைந்தா புடைப்புடனேவீரமென்ற செயநீர்தன்னால்
களிப்புடனே தானரைப்பாய்சாமம்நாலு படைப்புடனேபில்லைதட்டி
காயவைத்து பாங்குபெறவோட்டிலிட்டுச்சிலைசெய்யே. ௩௪௧

சிலையென்றால்யெழுசிலைவலுவாய்ச்செய்து சிறப்புடனேசெம்ம
ண்ணைமேலேபூசிகாலைதனில்கெஜபுடத்தில்போட்டுமல்லோ கருவாக
மூன்றுநாள்பொறுத்தபின்பு மாலையென்னும்மூன்றுநாள்மாலைப்பா
மயங்காமல்தானெடுப்பாய் மைந்தாநீயும் வாலையென்னும்திரிபுரை
பாம்புவணிவாலை தண்மையுடன்தானினைத்துயெடுத்திடாயே. ௩௪௨

எடுத்துமிகப்பார்க்கையிலேயென்னசொல்வேன் யெழிலானசெ
ந்தூரமெத்தமெத்த அடுத்துநின்றபேர்களைநீதூரத்தள்ளி அப்பனே
செந்தூரமெடுத்துக்கொண்டு தொடுத்தகுறிதப்பாமல்பின்னுங்கேளு
தோராமல்கல்வமதிலிட்டுமைந்தா கொடுத்துமேமுன்சொன்னசெய
நீர்தன்னால் கொப்பனவேதானறைப்பாய்சாமமெட்டே. ௩௪௩

எட்டானசாமமதுவரைக்கும்போது யெழிலானவெண்ணையது
போலேயாகும் கட்டானசூதமதுநாலாய்ச்சேர்த்து கருவாகதானரை
ப்பாய்சாமம்ரெண்டு மட்டானபில்லையதுசிறுகத்தட்டி மதிப்பாரவி
தனிலேகாயவைத்து தட்டானபதிதனிலேகுழிதான்வெட்டி ஏதகமை
யுடன்புடம்போடவமிசைகேளே. ௩௪௪

வரிசையென்றால்வரிசையதுசெப்பக்கேளும் வாகுடனேகுழிதனிலேமணல்தான்கொட்டி சரியானமண்மேலேவுப்பைகொட்டி சார்பாகபில்லைதனைமேலேவைத்து பரிவுடனேமேலுமந்தவுப்பைக்கொட்டி பண்புடனேமணல்தனைமேல்பரப்பி குறிபானகுழிப்புதுபோல்வுமிதான்கொட்டி கொற்றவனேமேல்தனிலேயெருவுபோடே ௩௪௫

போட்டவுடன்தீமூட்டிப்புடந்தான்போடுபொன்னவனேமூன்றுநாளாறுமட்டும் தாட்டிகமாய்தனையெடுத்துபார்க்கும்போது சட்டமுடன்செந்தூரமருணன்போலாகும் மாட்டிமையாய்யிந்தமுறைஐந்துபத்து மயங்காமல்தான்போடவரிசைகேளு பாட்டினதுமுறையேனும்பொய்யுமாகா பாரினிலேகொங்கணவர்பாகமாமே. ௩௪௬

பாகமாங்கொங்கணவர்பாகந்தானும்பாரினிலேயாரேனுஞ்செய்ததுண்டோ கோபமாய்முனிசொன்னவாக்குப்பொய்யோ கொற்றவனேகொங்கணவர்வார்த்தைபொய்யோ ஏகவழித்தனைக்கடந்த ஞானவசித்து யேற்றமுடன்மானிடர்கள்பிழைக்கவென்று சாகமுடன்செய்துவைத்தார்யிந்தபாகம் சட்டமுடன்கொங்கணவர்நாதர்தாமே. ()

தானானசெந்தூரமென்னசொல்வேன் தாரணியில்மாமுனிவர்ரிஷிகள்தாமும் தேனானபாகமிதுகைபாகந்தான் தேற்றமுடனாராய்ந்துகேள்விகேட்டு கோனானவெனதையர்காலாங்கிநாதர் சொன்னவளவாக்குணமுங்கண்டு பானானசெந்தூரப்பாகங்கண்டு பாரினிலேசந்தேகநீங்கினாரே. ௩௪௮

நீங்கினார்கொங்கணவர்கைபாகத்தில்நீடூழிகாலம்வரைதனுங்கம்பார்த்து தூங்கியேதிரியாமல்சித்துதாமும் துறையோடுமுறையோடுஞ்செய்துகொண்டார் ஒங்கியேபாகமதுகைவிடாமல் வுத்தமனேசெய்துமல்லோகுளிகைபூண்டு ஏங்கியேபோகாமல்மைந்தாநீயும் வெழிலுடனேயிப்பாகஞ்செய்திடாயே. ௩௪௯

செய்யவென்றால்வெகுகோடிமோக்தர்தாமும் செம்மையுடன்செய்துமல்லோமுறைதான்காணார் ஐயமவேகருவாளிசெய்வான்பாரு பாரினிலேமற்றவரேகாணார்காணார் நைடவருங்கோபத்தார்செய்யமாட்டார் நாட்டிலுள்ளசாத்மீகர்செல்வார்பாரு துய்யவேவாதவித்தைசெய்வோர்தாமும் துப்புரவாய்செய்வதுவுந்திண்ணமாமே, ௩௫௦

போகர்சீனபதியில் நவவிதவர்ணஞ் செய்தது.

திண்ணமாமின்னமொரு கருமானங்கேள் திகழான வாணமெ ன்றபோக்குசொல்வோம், வண்ணமுடன்பஞ்சவர்ணவிதங்கள்சொல் வோம் வகுப்புடனேயதிற்பிறந்தவர்ணநான்காம், நண்ணமுடன்வாயு வென்றயிரும்புதன்னில் நலமானவர்ணமது ரூபபேதம்கண்ணபிரான் வர்ணமது போலேயாகும் காசினியில் சித்தர்செயும் வேதையாச்சே.

வேதையிலே யின்னமொரு போக்கைக்கேளும் வீறான சிறிய கண்ணுகந்தானு, தீதையிலேதானுருக்கிமதியுப்போடு திகழானகள ங்குபோனுருகும்பாரு, போகமுடன்சூதமதைக் கூடச்சேர்த்து பொ ங்கமுடன்தானரைப்பாய் நாலுசாமம், நாகமுடன் சாரமென்ற செய நீர்தன்னால் நளினமுடன் தானரைத்து செப்பக்கேளே. ௩௫௨

செப்பவென்றால் வளையலுப்பு கூடச்சேர்த்து சிறப்புடனேநிம் பழச்சார்தானும்விட்டு, ஒப்பமுடன் வென்னீரில் கலக்கிக்கொண்டு வோங்குபெற செம்பென்றதகட்டைதானும், நெப்பமுடன் தகடடி த்து சலத்திற்போடே நேரானவர்ணமது மேலேதாவி, துப்பாவா வொளிவீசுந் தகட்டின்மேலே சூரியன்போல் தங்கமென்ற வர்ணமா மே, ௩௫௩

ஆமேதான் வர்ணமொடு சிவப்புபச்சை அப்பனே கிலமென்ற கறுப்புகாணும், தாமேதான்ரசமதனைக்கூடச்சேர்த்து தன்மையுடன் சீசாவி லடைத்துமைந்தா, வேமேதான்தகடதனைத்தோய்க்கும்போது விதமானசஞ்சாயவர்ணங்காணும், நாமேதான் சொன்னபடி ரூபாவர் ணம் நயமுடனேதகடதனி லேறும்பாரே. ௩௫௪

பாரேதான் யிரும்புக்கு யிந்தமார்க்கம் பாகமுடன் செய்துவந் தால் பண்பதாகும், நேரேதான் வங்கமதுதகடடித்து நேரான முன் சொன்ன சரக்கிலேதான், வாரேதான்வங்கமதையுருக்கியேதான்வள முடனே காய்ச்சியல்லோ தோய்ச்சிப்பாரு, கூரேதான் துரிசியிடகா ரத்தாலே கொற்றவனே பலபேதம் விளையுந்தானே. ௩௫௫

விளையுமேசகலவிதரூபாபேதம் வேகமுடன் தோன்றுவதுயுண் மைபாரு, களையுடனே சூதத்தால் யெல்லாந்தோற்றும் காமரூபவடி வமெல்லா மிதிலேதோன்றும், தளவுடனே தாளகத்தின் புகையினா லே தகமையுள்ள கெந்தியது காரத்தானும், சுளையுடனே புத்தது போல் புகைபெழும்பி சொர்ணமென்னுவேகமென்ற வர்ணமாமே.()

## கருவங்கபற்பம்.

வாணமாயின்னமொரு போக்குச்சொல்வேன் வாகானகருவங்க பற்பங்கேளு, காணமாங் கருவங்கஞ் சேர்தாமொன்று தகமையுடன் தகடடித்துசெப்பக்கேளு, மூாணமாக்கருங்காவிகிழங்குதன்னை முதன்மையுடன்தானரைத்து மூசைசெய்து, இரணமாங்குகைக்குள்ளே தகடைவைத்து திர்க்கமுடன்முன்சொன்ன முப்புபோடே. ௫௫௭

போட்டுமேசில்லெட்டுச் சீலைசெய்து பொங்கமுடன்ரவிதனிலே காயவைத்து, காட்டென்றபெருவதனை கெஜமதாக்கி கருவாகக்குழி வெட்டிப்புடத்தைப்போடு, மூட்டென்றபுடமாறி மூன்றுநாள்தான் முக்கியமாய் நிருவாணிபூசைசெய்து, நாட்டிகமாய்ப் புடந்தனையே திறந்துபாரு தளுக்கற்றகருவங்க பற்பமாமே. ௫௫௮

ஆமேதான் பற்பமதை யெடுத்துக்கொண்டு அப்பனே சிற்றண்டம்சௌவுபோக்கி, தாமேதான் பற்பமெடை சரியாய்தூக்கி தகைமையுள்ள சிற்றண்டங்கூடச்சேர்த்து, போமேதான் வெண்கருவால் மிகவேயாட்டி, பொங்கமுடன்தானரைப்பாய்நாலுசாமம், நாமேதான் சொன்னபடிபில்லைதட்டி நலமாகரவிதனிலே காயவையே. ௫௫௯

வைத்ததொருபில்லைதனையோட்டிவிட்டு வண்மையுடன்சீலையது வலுவாய்ச்செய்து, நைத்ததொருகுழிதனிலேபுடமேபோடு நலமான கெஜபுடத்தில்வெந்துநீறும், தைத்ததொரு புடமாறியெடுத்துப்பாரு தளர்ச்சியுள்ளபற்பமது சொல்லப்போமோ, மெத்திடவேபற்பமதை பதனம்பண்ணு மேதினியில்சித்தர்செயும் வேதையாச்சே. ௫௬0

ஆச்சென்றுவிடுகாதே யின்னங்கேளு அருமையுள்ளபாலகனே பின்னுஞ்சொல்வேன், மாச்சமென்றகற்பமதை வனுபானத்தில் மார்க்கமுடன் பணவிடைதான்கொண்டபோது, மேச்சமென்றமேகமது யிருபத்தொன்று மேதினியில்கண்காணுதோடும்பாரு, வீச்சமென்று பிரவிச்சுசன்னிபோகும் வீரமுடன் தாதுவிர்த்தியதிகமாமே. ௫௬௧

அதிகமாங்குன்மமென்ற தெட்டும்போகும் ஆண்மையுடன்குறிநோய்களனைத்தும்போகும், சதிரானகுஷ்டமது பதினெட்டும்போம் சட்டமுடன் சீழ்வுமாறும்போகும், மதிமேகமென்றதொரு ரோகம்போகும் மாசற்றதேகமது வன்னிநீரும், துதியுடனே தாரணியில் சதாகாலந்தான் துப்புரவாய்யோகநிலை சமாதிதேடே. ௫௬௨

தேடையிலேசமாதிநிலைதன்னைக்கண்டு தெளிவாககேள்விகளில் னேயங்கேட்டு, கூடயிலேசிவயோகநிலையினின்றகுணமானவழிபாடு

தன்னையெடுத்து, மாடையிலேயினமென்ற கோபந்தள்ள மதிப்புடனே தாரணி யிருந்துகொண்டு, நீடையிலேகரிவங்க பற்பந்தன்னை நீனி லத்திலுண்பவனே சித்தனுமே. ௧௫௫

சித்தனுப்பேர்ந்தாலும் மதிகள்வேண்டும் சிறவென்ற சினமது வைத் தள்ளவேண்டும், பத்தியுடன்பாதாம்புயத்தை யெந்நாளும் பட்சமுடன் மனந்தனிலே நினைக்கவேண்டும், நித்தியமும் பரவெளி யில் நிற்கவேண்டும் நீடாழியுலகாசை யொழிக்கவேண்டும், முத்தி யுடனஷ்டமா சித்திதன்னை மூதுலகில்பெறுபவனே யோகியாமே.

வெள்வங்க பற்பம்.

யோகமென்றால்போகமதைத் தள்ளவேண்டும் யொருவருடன் வீண்வார்த்தைக் கூறலாகா, போகமதைநீக்கிவிட்டு பூமிதன்னில் புகழாகவாசியோகந் தன்னிற்சென்று, தாகமுடன்கானப்பால் தன் னைக்கொண்டு சதாகாலம்னிஷ்டையிலே யனுமானித்து, வேகமுடன் விட்டகுறைவந்தபோது வெறுப்பன்றி பொறுப்புடன் மீள்வீர் தாமே. ௧௫௬

மீளுவதுபின்னமொரு கருமானங்கேள்! மிக்கானவெள்வங்க பற்பஞ்சொல்வேன், தானுமையாய் வெள்வங்கந் சேர்தானென்று தகமையுடன்சவுட்டுப்புச் சேர்தான்பாதி, கோளகற்றிதகடடித்து மேலேபூசி கொற்றவனேயாவாரைபஞ்சாங்கத்தில், மாளுறையாய் வெள்வங்கம்நீற்றுதற்குமானிலத்திற் பஞ்சாங்கப்புடத்தைப்போடே

போடவேவெள்வங்கம் பொருமினிற்கும் பொலிவான சோள மதுபோலேயாகும், நீளவேசோளமென்ற பொரியெடுத்து நீட்சியுட கல்வமதி விட்டுமைமந்தா, கூடவேயாறுவகை செயநீர்தன்னால்கொற் றவனேதானரைப்பாய் சாமம்நாலு, சாடவேமைபோலே வெண்ணெ யாக்கிச் சட்டமுடன்தானரைத்து வில்லைதட்டே. ௧௫௭

தட்டியேரவிதனிலேகாயவைத்து சதுரகவோட்டிவிட்டுச்சீலை செய்து, திட்டமுடன்குழிவெட்டிப் புடத்தைப்போடு பிரமாணபுட மதுதான் கெஜமேயாகும், மட்டமென்றபுடமதுவும் ஒன்றேயாகும் மறவாமல்மூன்றுநாள் பொறுத்தபின்பு, சட்டமுடன்தானெடுத்துப் பார்க்கும்போது தவளனிறம்போலாக யிருக்கும்பாரே. ௧௫௮

பாரேதான்பற்பமதை தன்னையெடுத்து பாகமுடன்கல்வமதிவிட் டுப்பின்பு,நேரேதான்கிளிமூக்குமிழுக்கு தன்னை நேர்புடனேசார்பிழிந் துசொல்லக்கேளு, சீரேதான்வெள்வங்கபற்பந்தன்னை சிறப்புடனே

தானரைப்பாய் நாலுசாமம், கூரேதான்வெண்ணெயது போலேமைந்
தா குறிப்பாகதானரைத்து பில்லைதட்டே. ௫௱௬௯

பில்லையென்றால்பில்லையது காசதாக பெருமையுடன் தட்டியல்
லோ ரவியிற்போடு, கல்லுபோல்தானுலர்த்தி யெடுத்துக்கொண்டு
கருதாகவோட்டிவிட்டுச் சீலைசெய்து, அல்லன்றிகெஜபுடத்தில்போ
ட்டாயானால் அப்பனேபற்பமது தவளம்போலாம், வெல்லவேபற்ப
மதையெடுத்துக்கொண்டுவிருப்பமுடன்கிழங்குச்சார்தன்னாலாட்டே.

கிழங்கென்றால்கிழங்கதுவுங் கொல்லன்கோவை கெடியானசாற
தனை பிழிந்துகொண்டு, பழக்கமுடன் தானரைத்து பில்லைதட்டிபாக
முடன்ரவிதனிலே காயவைத்து, மழுங்கவேவோட்டிவிட்டுச் சீலை
செய்து புகழாககெஜபுடத்தில் போட்டாயானால், விழுங்கவேபற்ப
நிறங் கொக்குபோலாம் விண்ணுலகில்செய்பவரும் அருமைதானே.

அருமையாம்பற்பமதை யெடுத்துக்கொண்டு அப்பனேசிமிழ்
தனிலே பதனம்பண்ணு, பெருமையுடன்பணவிடைதான் சர்க்கரை
யிற்கொள்ள பேரானநவமூலமொன்பதும்போம், சிறுமைபடச்செய
ரோக மெல்லாம்போகும், சேர்மானமானதொரு கசரோகம்போம்,
ஒருமையுடன்தேகமது கற்றூணாகும் வுத்தமனேயுனக்கீடு சொல்
வாருண்டோ. ௫௱௭௨

உண்டோதான்வையகத்தில் வுனக்கீடுண்டோ வுத்தமனே ரா
ராஜபதியுநீதான், கண்டபடிபலபலவாஞ் சாத்திரத்தை கருத்திலே
சத்தேனும் விளையாமற்றான், விண்டபொருளொன்றிருக்க வொன்
றைகொண்டு விட்டகுறைதொட்டகுறை யில்லையென்று,சண்டியென்
னும்மானிடரைப் போலேநீயும் சதாகாலமிருப்பதுநன் கல்லதாமே.

நன்கல்லாசாத்திரத்தைத் தாறுமாறாய் நலமுடனேபாராமற்
கெட்டலைந்து, புன்கவிகளொன்றிருக்க வொன்றைப்பார்த்து புரா
தனத்தின் பொருளறியார்மட்டிமாண்பர் வன்கொடுமைசெய்பவரோ
டிணங்கிச்சென்று வாதாடிபலகாலும் வார்த்தைபேசி, தென்பொதி
கைதனிலிருக்கும் சித்தர்நூலைத் தெளிவாகப்பாராத மட்டிமாடே.

மாடானமாடிதுதான்சென்மமாடு மாநிலத்தில்நூலறியா மட்டி
மாடு, கூடானகூடழியுஞ்சண்டிமாடு குவலயத்தில்மெத்தவுண்டுகூற
ப்போமோ,தேடானபாக்கியமுமிங்கிருக்க தேசத்தில்சுட்டலைந்தோர்
கோடாகோடி, பாடானவழியறிந்துகாணுமற்றான் பாரினிலேவிட்ட
குறைக்காளாவாரே. ௫௱௭௫

## குதச்செந்தூரம்

ஆவாரேபின்னமொருகருமானங்கேள் அப்பனேகுதமென்றராச
ன்தன்னை,சாவானகள்ளியென்றமரத்தில்தானும் சட்டமுடன்தான்கு
டைந்துசொல்லக்கேளும், பூவானகுதமதைவதனில்விட்டு துப்புறவா
ய்யதின்றுனைமேலேகொட்டி, காயானசீலையது வலுவாய்ச்செய்து நல
மாகவாறுதிங்கள்கழித்துப்பாரே. கஎரு

பார்க்கையிலேகுதமதுகாரமேறி பாலகனேவெண்ணையதுபோ
லேயாகும், தீர்க்கமுடன்வெண்ணைதனையெடுத்துக்கொண்டு திறமு
டனேகல்வமதிலிட்டுக்கேளு, ஏர்க்கவேமுன்சொன்னமுப்பூதானும்
யெழிலாகக்களஞ்சியது கூடப்போட்டு,நீக்கவேகுதமென்றவெண்ணை
தன்னில் நிலையானதுருசுபலந்தன்னைப்போடே கஎசு

போடவேபற்பமதுகூடச்சேர்த்துப் பொங்கமுடன்கெந்தியென்
றசெயநீர்தன்னால், நீடவேதானரைப்பாய்சாமம்நாலு நீட்கமுடன்வெ
ண்ணையதுபோலேமைந்தா, கூடவேயில்லையதுதெல்லுபோலே குண
மாகத்தான்செய்தாவியில்வைத்து, தேடவேவோட்டிவிட்டுச்சீலைசெ
ய்து தெளிவுடனேபுடம்போடபற்பமாமே. கஎஎ

பற்பமாங்கெசபுடத்தில்நீறும்பாரு பாலகனேசிமிழ்தனிலேபத
னம்பண்ணு, அற்பமென்றுவிடுகாதேபுண்யவானே வன்புடனேவெ
ண்ணைதனில்குன்றியுண்ண, கெற்பமேரோகமதிலிருக்கும்நோய்கள்
குலையோடேபோகுமடாபின்னுங்கேளு, அற்பலத்தைநீக்கியல்லோ
வலுவைக்காட்டும் துடியானபற்பத்தின்நேர்மைதானே. கஎஅ

நேர்மையாம்மேகமென்றரோகம்போகும் மேனியதுபளபளக்கு
ம்சிவந்துகாட்டும், கூர்மையாம்கபரோகம்சில்விஷங்கள் கொடிதானவ
யிற்றுவலிமேலிளைப்பு, நீர்மையாம்பௌத்திரமாம் மூனைமூலங்கள்
தீமைசெய்யுங் கண்டத்தின்மாலைபோகும், வார்மையுடன்கன்னே
சைகன்னக்குத்து தனமானகிரந்திமுதலற்றுப்போமே. அஎகூ

அற்றுமேபீசமதினின்றரோகம் அப்பனேகால்விக்கம்கைவிக்க
ம்போம், முற்றுமேநரம்புகளும்முறுக்குமீறி முனையானதாதுவிர்த்தி
யதிகமாகும், பற்றுது அரையாப்புகொறுக்குமூலம் படருமேதாமரை
யுமற்றுப்போகும், வற்றுமேதேகமதுவலுத்துக்காட்டும் வன்மையு
டன்மேனியதுபின்னுந்தானே. கஅ0

## மேகரோகத்தயிலம்.

தானுனையின்னமொருகுட்சஞ்சொல்வேன் தகமையுடன்மானிட
ர்கள்பிழைக்கவென்று,கோனுனையெனதையர்காலாங்கிநாதர்குருபதத்

ணையடியேனுந்தாள்பணிந்து, பானுனபராபரியைமனதிலெண்ணி பா டினேன்காண்டமேழாயிந்தான், தேனுனயின்னூல்தான் குருநூலா கும் தேசத்திற்கிட்டாதுசிவயோகிக்கே ௬அக

சிவயோகியானவர்க்குமெல்லாங்கிட்டும் தேசத்தில்மற்றவர்க்குக் கிட்டாதப்பா, தவயோகியென்றுலேகற்பங்கொள்வான் தாரணியில்ம ற்றவர்கொள்ளமாட்டார், நலயோகம்பெற்றவரும்சிவயோகியாவார் நா ட்டிலேமற்றவருமாவாரோதான், பவமகற்றும்புண்ணியர்க்குமெல்லா மெய்தும் பாரினிலேசித்தனைப்போல்வாழலாமே. ௬அஉ

ஸ்நானவிதி.

வாழலாம்வெகுகோடிகாலமப்பா வரிசைபெறத்தலை முழுகவிபர ங்கேளு, கீழவேநெல்லியுடன்மிளகுதானும்நெடிதானகடுக்காயும்மஞ் சள்கூட்டி, காழவேபரிசிவைந்துக்கூட்டி கருவாகசமமெடையாய்யெ டுத்துக்கொண்டு, தாழவேவகையாஞ்சாற்பாலுங்கூட்டிச் சாங்கமுடன் தானரைப்பாய்சாமம்நாலே. ௬அ௩

நாலானசாமமதுவரைத்திமைந்தா நலமுழுனேல்தானமதுசெய் யும்போது, காலானகாலனுக்குமிடமேயில்லை கண்ணிரண்டுங்குளிர்ச் சியதுமிகவேடாகும், பாலானவிழியிரண்டுமெரிச்சல்நீங்கி பாலகனே சிரசுவலிதானேபோகும், மாலான்மண்டையிடிக்கபாலத்துக்கு மார்க் கமுடன்சடலம்விட்டேகும்பாரே. ௬அ௪

ஏகுமேகண்ணோய்கள்தொண்ணூற்றாறும் பெழிலானமண்டை யிடிக்கபாலக்குத்து, போகுமேவாதபித்தந்தலைகெட்டோடும் பொலி வானவாசியதுகீழ்நோக்காகும், வேகுமேயாவியதுமயிர்க்கால்பற்றி வெளிதனிலேகாற்றூடேசேரும்பாரு,பாகுடனேதேகமதுகற்றூணா கும் பாலகனேகாயாதிகற்பமூழ்கே ௬அ௫

மூழ்கினபின்பெண்ணுகாமதுபானந்தான் முக்கியமாய்மூன்றும ண்டலந்தானப்பா, மாழ்கியேசேராதேமனங்கொள்ளாதே மன்னவ னேமூன்றுமுறையிப்படியேகாரு, தாழவேகற்பமதுகொண்டபோது தாரணியிலுன்னைப்போலொருவனுண்டோ, வாழ்கவேகற்பகோடிகா லமப்பா வளமையுடன்தானிருந்துகற்பங்கொள்ளே. ௬அ௬

சாரணைகுருமூலி.

கொள்ளவேயின்னமொருகருமானங்கேள் கொற்றவனேயாம்க ண்டவரைக்குஞ்சொல்வோம், மெள்ளவேசாரணையாமூலியப்பா மேன் மையுடன்சேர்த்துதான்கொண்டுவந்து, துள்ளவேபொடியாக்கிமைந் தாநீயும் துரையுடனேனிழல்தனிலுலர்த்திக்கொண்டு,கள்ளவேகுரண மாய்செய்துக்கொண்டு சற்பனையாய்ச்சுத்தியதுசெய்துகேளே. ௬அ௭

கேளைதான்பிட்டாவி செய்துக்கொண்டு கிருபையுடன்முன்
மூறை சுத்திசெய்து, பாளைதான்போகாமல் சூரணத்தைப் பாங்கு
பெறாவிதனிலே காயவைத்து, விளைதான் திப்பிலியு மிளகுதானும்
விருப்பமுடன்சேகமு மொன்றுங்கூட்டி, காசேதான் போகாமல்
சீனிசேர்த்து நலமுடனே சூரணமாய்க் கொண்டுபோரே, ௱௮

கொண்டவுடன் வாயுவென்றகுன்மம்போச்சு கொடிதானசூலை
யொடு வாதம்போகும், பண்டுடனே கால்குடைச்சல் பறந்துபோ
கும் பாரினிலேயென்னாலை வெளிவிடாதே, இன்டுடனேசித்து மத்
தை யறுத்துப்போடும் இறயானவுளைமாந்தை யேகும்பாரு, அண்ட
முடன்காயாதி கற்பமாகும் அப்பனேமூலியிட வேகங்காணே, ()

## தாம்பிரபற்பம்.

காணவென்றுவின்னமொரு மார்க்கம்பாரு கருவானதாம்பிரத்
தின் மார்க்கஞ்சொல்வேன், தோணவேதாம்பிரத்தின் தட்டுவாங்கி
துப்பாவாய்லேசாகத் தகடுதட்டி மாணவேசெய்கொடுவேலிதன்னை
மயங்காமல் தானரைத்து வுண்டைசெய்து, வேணபடி துகைபிடித்து
தாம்பாத்தை மெதுவாகவதிற்பொதிய விபரங்கேளே. ௱௰

கேட்கவென்றால்சிலையது வனுவாய்ச்செய்து கெவனமுடன்ரவி
தனிலே காயவைத்து, நீட்டமுடன்குழிவெட்டி பெறுவடிக்கி நிஷ்
களமாய்ப் புடம்போட வெந்துநீறும், நூட்கமுடன்படமாறி யெடுத்
துப்பாரு பொன்னவனே துட்டுதான் பொருமிவெள்ளை, தாட்கம
லாயகியாள்பாதத்தானை தப்பாதுபற்பத்துக் குறுதியாச்சே. ௱௰௧

ஆச்சென்றுவிடுகாதே பின்னுங்கேளு அப்பனேகல்வமதிலிட்டு
மைந்தா, பேச்சொன்றும்பேசாதே பொடியதாக்கிப் போரணமுன்
சொன்ன முப்புசேர்த்து, மாச்சலென்றசாரத்தின் செயநீர்தன்னால்
மானமேமூன்றுநாள் செழுகரைத்து, பாச்சலுடன்பில்லையது லகு
வாய்த்தட்டி பாலகனேரவிதனிலே காயவையே, ௱௰௨

காய்ந்தபின்புசில்லோட்டில் சீலைசெய்துகனமானகெஜபுடமாய்
போட்டுத்திரு, மாய்ந்துமேதாம்பாமு மூரலற்று மாசற்றபற்பமது
தவனம்போலாம், தீய்ந்துமேலூரலது மாண்டுபின்பு திரமான பற்ப
மது குருவுமாகி, சாய்ந்தலுடன்வாதத்திற் குறுதிபாக்க [illegible]யான
குறுபற்ப மிதுவென்பார்கள், வேய்ந்துமேசிமிழ்தனிலேப[illegible]பண்
ணு வேதாந்தத்தாய்நமக்கு வருள்சொல்வாளே. ௱௰௩

சொல்லவென்றால் வெள்ளிதனில் யெட்டுமாற்று சொர்ணமது
பிறவிக்கு யீடுமாச்சு, நல்லதொருபிறவியிடத் தங்கமென்பார் காதா
க்கள்செய்கின்ற வேலையாச்சு, புல்லறிவுவுடையதொரு பத்திமான்

ஞர் பூதலத்தில் செய்துமல்லோ யோகஞ்செய்வார், வில்லணிந்த வேந்தர்களுஞ் செய்யலாகும் விருப்பமுடன்வாதத்தின் பெருமை பாரே. உ௯௪

பார்க்கவென்றால் தாம்பரத்தின் பற்பந்தன்னைப் பாங்குடனே நெல்லிடைதான் கொண்டபோது, தீர்க்கமுடன்வனுபான ஜீமறிந்து கொண்டால் திறமுடனேதேகமது கற்றாணுகும், சேர்க்கமுடன் வாயுவென்ற தென்பதும்போம், செயலானபித்தமது நாற்பதும்போம் மூர்க்கமுடன் சேத்துமங்கள் தொண்ணூற்றாறும், மூட்டோடே போகுமடா முடிவுதானே. ௩௯௫

தானேகேள்பற்பமது கொண்டபோது தாக்கானவாசியது கீழ் நோக்காகும், மானேகேள்சிவராஜயோகங்கிட்டும் மன்னவனேநீயு மொருசித்தனுவாய், வேமேதான்சொன்னபடி யோகமார்க்கம்வெளி ப்படையாய் யெப்போதுங் காணலாகும், நாமேதானுரைத்தபடியே மூகாண்டம் கடுகாண்டமிதிலதிகங் காணலாமே. ௩௯௬

## தங்கபற்பம்.

காணலாமின்னமொரு மார்க்கம்பாருகனமான மாணுக்கள்பிழை க்கவென்று பூணலாம்தங்கமென்றகாசுதன்னைப் புகழாகத்தானெடுத் துச்செப்பக்கேளு, தோணவேமூலியது கவுழ்தும்பைத்தான் தோற் றமுடன் முன்சொன்ன முப்புசேர்த்து, வேணவேதானரைத்து மூ சைசெய்து விருப்பமுடன்காசதனை யுள்ளேவையே. ௩௯௭

வைத்துமேசிலையது வனுவாய்ச்செய்துவளமைபெறாவிதனிலே காயவைத்து, தைத்தமுடன்குழிவெட்டிப் புடமேபோடு தாக்குட னே கெஜபுடத்தில் வெந்துநீறும், பைத்தவிழாமூசைதன்னை யெடு த்துப்பாரு பாலகனே தங்கமென்ற காசுதானும், கைத்தவமாய் பொ ருமியதுநொறுங்கினிற்கும் காவலனேதானெடுத்து செப்பக்கேளே.

செப்பவென்றால்நாவில்லைப்டாவுமில்லை செயலானபாக்கியமுவித னுலாகும், ஒப்பமுடன்தானெடுத்துக் கல்வமிட்டு வுத்தமனேகவு தும்பைச்சாற்றினலே, கொப்பனவே தானரைப்பாய் நாலுசாமம் கொற்றவனே வெண்ணையதுபோலேயாகும், எப்படியும்வெண்ணை யதுபோலேயானல் யெழிலானபற்பத்துக் காதியாச்சே. ௩௯௯

ஆதியாம்பூமியுடனுகத்தாலே அப்பனேதங்கமது பற்பமாகும், சோதியாம்தங்கமென்ற வெண்ணைதன்னைச் சுருதியுடன்பில்லையது லகுவாய்த்தட்டி, வாதிகள்செய்பாகம்போல மனதினூணி மயங்கா மல்ரவிதனிலேகாயவைத்து, சாதியாமோருவில் புடத்தைப்போடு தப்பாதுகெஜபுடத்தில் நீறுமாமே. ௪௦௦

நீறியதோர்பற்பமதைபின்னுங்கேளு நேர்மையுடன்தானெடுத்துக்கல்வமிட்டு, கூறியதோர்வாக்கதுவும்பிசகாமற்றான்குணமாகதானரைப்பாய் செயநீர்தன்னால், மாறியதோர்சாரமென்றகெந்திநீறு மார்க்கமுடன்றானரைப்பாய் மைபோலாக, மீறியேபோகாமல் வெண்ணையாக்கி மிதியுடன்பில்லைதட்டிக் காயப்போடே. ௬0௧

போடேதான்ரவிதனிலே காயவைத்துப்பொங்கமுடன் வோட்டிலிட்டுச்சீலைசெய்து, நாடேதான்குழிவெட்டிப் புடத்தைப்போடு நலமுடனேகெஜபுடத்தில் தீறம்பாறு, கூடேதான்புடமதுவைத்திறந்து பார்க்க குணமானபற்பமதுதவளம்போலாம், தேடேதான் பற்பமதைப் பதனம்பண்ணு தேசத்தில்கிட்டாதுசிவயோகிக்கே. ()

கிட்டாதுபாவிகட்கும்கருமிகட்கும் கீர்த்தியுள்ளயுத்தமர்க்குப் பலிக்கும்பாரு, எட்டாதபொருளெல்லாமிதிலேதோற்றும் வெழிலானவுடலாவிப்பொருள்களெல்லாம், விட்டாலும்விடுகுறைகளெல்லாங்காணும் வெழிலானவிதியிருந்தால் லபிக்கும்பாரு, முட்டாளாயிருக்காமல் முடிமன்னநீ முறையோடேசெய்துமல்லோமுடிவுகாணே.

## அநுபானம்.

காணவென்றால் பற்பமதைபுன்னக்கேளு கருவானலேகியங்கள் கிரதமாகும், தோணவே நெய்தேலும் வெண்ணையாகும் தோற்றமுடன் யிஞ்சிரசம்முலைப்பாலாகும், பூணவேயிந்தவித வனுபானங்கள் புகட்டினால் காயகற்பமாகும், காணவேவகைபாகம் செய்பாகங்கள் நலமுடனேதாமறிந்துவுண்ணுவீரே. ௬0௪

உண்ணையிலேசேத்துமங்கள் தொண்ணூற்றாறும் வுத்தமனேபித்தமது காப்பதும்போம், நண்ணமுடன் வாயுவென்றதெண்பதும் போம் நயமானமேகவகையிருபத்தொன்றும், குண்ணவேகுன்மமென்றதெட்டும்போகும் கூரானக்ராந்திபதினெட்டும்போகும், வாகாக நீரழிவுயாறும்போமே. ௬0௫

ஆறானகலமேகம் அகன்றுபோகும் அப்பனேவுளமாந்தை கவிசிபோகும், வாரானகுஷ்டம்பதினெட்டும்போகும் வாகானவண்டத்தின் வாய்வுபோகும், தூறானமேகப்புத் தீர்ந்துபோகும் துடியான நரம்பெல்லாம் முறுக்கேபோகும், சாறானமூலிகைகளிதற்கொவ்வாது சட்டமுடன்போகரிஷியுரைத்ததாமே. ௬0௬

உரைத்தோமேசினபதி மாந்தருக்கு வுத்தமனேகண்ணா வுணவையெல்லாம், கிரைத்துவிட்டேன் வெள்ளையென்றமாந்தருக்கு

நிறையானகைமுறையும் முழுதுஞ்சொன்னேன், கரைத்துவிட்டே
ன் காயாதிகற்பந்தன்னை, கருவாகவுளவுதனையறிந்துகொண்டார், ம
ரைத்துமேகற்பமதுயுண்டபோது பறக்குமடா நோயேது பிணிதா
னேதே. ௪௦௭

ஏதானதங்கபற்பமுண்டபோது யெழிலானதேகமதுகற்றாணு
கும், வாதானநமனுக்குஅருதியில்லை வந்தநோய்தீர்ந்துவிடும் வசனி
த்தேனுன், சூதானதங்கமதையுண்டபேர்கள் நுரைகோடிகாலம்வ
ரை யிருக்கலாகும், தீதானபிணிகளது யிதிலேதோயும் திரளான
நோய்பிணியும் பறக்கும்பாரே. ௪௦௮

பாரேதான்தங்கமதைகொண்டபோது பாரினிலேயேயுமொரு
சித்தனுவாய், வேரேதான்சாத்திரத்தின்வுளவுபார்த்து தெளிவான
கைமுறைகளறியவேண்டும், நேரேதான் அறிந்தாலும் வொன்றுமில்
லை நேர்பான வழியோடுசெய்தால்சுத்தி, கூரேதான்குணங்கண்டு கு
றியுங்கண்டு கொப்பெனவேசெய்பவனேஞானியாமே. ௪௦௯

ஆமேதான் தங்கபற்ப முண்ணும்போது அப்பனேபத்தியங்க
ளுரைக்கக்கேளும், நாமேதானசொன்னபடி புளியுப்பாகா, நலமுட
னேபாலன்னநகொள்ளநன்று, தேமேதான்பத்துநாள் யிப்படியே
கொண்டுதெளிவாக மண்டலந்தான் கொள்ளக்கேளு, வேமேதான்
சுட்டபுளியுறத்துப்பாகும் வேகமுடன்மண்டலந்தான் வுண்டுகொ
ள்ளே. ௪௧௦

கொள்ளவேபற்பமது வுண்டுகொண்டு கோடானகோடிமுறை
சித்துசெய்வீர், விள்ளவேகன்னியென்ற மாயாகற்பம் வீணிலையனு
போக மிகவுந்தள்ளு, மெள்ளவே கைபாகஞ் செய்பாகத்தை மே
தினியில்கண்டறிந்துபின்னுங்கேளு, எள்ளளவுபிசகுதான் வாரா
வண்ணம் யெழிலுடனேசெய்துமலலேர வருள்தான்காணே. ௪௧௧

பொன்னுவாரை சூரணம்,

காணவேயின்னமொரு கருமானங்கேள் கவனமுடன் யானு
ரைப்பேன்கடியமூலி, நாணவேபொன்னிறுவாரை தன்னை நலமாகச்
சமூலமதைக்கொணர்வந்து, பானமெனும்ரவிதனிலே காயவைத்து
பாகமுடன் சூரணித்துவடிருன்கொண்டு, தோணவேபாண்டமதில்
பாலைவிட்டு துப்புரவாய்வேடுகட்டிசீலைமூடே. ௪௧௨

மூடியதோர்சீலைதனில் சூரணத்தைமுதிராமல்பதமுடனேதான
மைத்து, நீடியேமேற்பாண்டந்தன்னைமூடி நினைவாகத்தானெறிப்பா
யக்கினிமட்டும், சாடியேபாண்டமதைதிறந்துபார்த்து சட்டமுடன்

சூரணத்தையெடுத்துக்கொண்டு, வாடியேதிரியாமல்ரவியிற்றானுமவளமுடனே சூரணத்தைக்கொட்டிபாற்றே. ௪௬௩

ஆற்றியே சூரணத்தைநாவியிற்போட்டு அப்பனேகாய்ந்தபின்புயெடுத்துக்கொண்டு, தேற்றியுடன்முன்சொன்ன முப்புசிண்ணம்நெடிகானகளஞ்சியது கூடச்சேர்த்து, தூற்றியேசினியது சரியாய்க்கொண்டுதப்பு வாய்திரிகடிகைதன்னையப்பா, மாற்றியேவெண்ணெதனில்கொண்டாயானால் மண்டலத்தில் போகுமடாபிணிகள்தானே

தானானபிணிகளது சொல்லக்கேளும் சர்பானயிலையுடன்பிருமல்போகும், வேனானகுஷ்டம்பதினெட்டும்போகும்வேகமுடன்தழுவணையும்மாறிப்போகும், தேனானதேனதனில்கொண்டபோது தேற்றமுடன் சொரிசிறங்குபவுத்திரம்போம், ஊனானகசரோகம் தீரும் தீரும்வுத்தமனே சில்விஷங்களற்றுப்போமே. ௪௬௫

போகுமேசூலையொடுகரப்பன்போகும் பொல்லாத சில்விஷங்களனைத்தும்போகும், ஏகுமேதேகமதுகற்றாணாகும் பெழிலானசட்டயதுதள்ளும்பாரு, சாருமேகுழிச்சிலந்திபிளவையாவும்சன்னுமடாவுடலைவிட்டுக்காடேபோகும், பாகுடனேமேவிலைப்பு தீர்ந்துபோகும் பாரினிலேயிதுவுமொருகற்பமாமே. ௪௬௬

பேய்கள் ஆட.

கற்பமாமின்னமொருபாகஞ்சொல்வேன் கருவாகத்தான்கேட்பீர்கருத்துளப்பா, அற்பமென்று நினையாதேயிந்தபாகம் அப்பனே சூரியென்றநத்தைச்சூரி, பொற்பமுடன்வெள்ளிகாள் வேர்பிடிங்கிச் சுத்தமுடன்பூசைதனில்குளிசமாடி, சற்பமென்றராஜனிடமையைத் தீட்டி சட்டமுடன்வுருவேற்றித்தீபம்போடே. ௪௬௭

போடவேமாடனுமேயெதிரேநிற்பான்பொங்கமுடன்வுருவதுதான் லட்சமாகும், நீடவே பங்-சிங்-வங் கென்றேயோது கிலைக்குமடாமாரணமுமிதனலாகும், கூடவே நமசியென்றேயோதுகுடியோட்டுப்பூண்டுக்குக்காப்புகட்டி, தேடவேலட்சமுரு தன்னைப்போடு தெளிவானசித்திமுதலாகும்பாரே. ௪௬௮

பாரேதான்வட்சரத்தையெழுதியோதிபாகமுடன்குளிசமதில்அட்டுவாய் நீ, நேரேதான்லட்சமுருவோதிப்பின்பு நேர்மையுடன்தலைதனிலே நீரைவாரு, தேடேதான்லலாடமதில் கருமையைத்தான் தேற்றமுடன் தீட்டியல்லோகுக்தவைத்து, ஊரேதான் கிழக்குமுகந்தனிலிருந்திவுத்தமனே செபித்திடுவாய் பூதந்தானே. ௪௬௯

தானானபூதமது தலைசுழட்டி தாரணியில்நின்று விளையாடும்பாரு, கோனானயெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனார் தன்பாதம்வணங்கியல்லோ, தேனானமனோன்மணியைபத்தாபித்தேதான் தேற்றமுடன்சக்கரத்திலுந்தவைத்தால், மானானவேதாளம்பிரமராட்சன்மண் மீதிலிருந்துகொண்டு வாடும்பாரே. ௪௨௦

ஆடுமேகைதாளமதிகம்போடும் அப்பனேவூணுமென்றவஸ்து கேட்கும், பாடுமேகொண்டாட்ட மிகவடிக்கும் பார்த்தவரைக்கண்ணைலேமிகமயக்கும், ஓடுமேபஞ்சாட்சர மேலேபட்டால் வுத்தமனே சிரித்துவிளையாடும்பாரு, கேடும்கெடுதிகளு மிகவேபேசும் கேட்டதொருசேள்விக்கு யெதிர்சொல்லாமே. ௪௨௧

சொல்லவே பலபலவாய் வார்த்தைபேசி துரைமுகத்திலிருந்து கொண்டுகூத்தமாடும், புல்லவேகருவாலேயனேகம்வித்தைகபூதலத்தில்வெகுசாகயாட்டலாகும், கொள்ளவேபூதமது வினோதவித்தைக்கூறினர்பலபலவாம்சாத்திரத்தில், வெல்லவேநம்முடைய நூல்கள்யாவும்வெளிப்படையாய்க்காட்டினேன் மூலகத்தோர்க்கே. ௪௨௨

## பெருங்கொடுப்பைநெய்.

உலகத்தோர் பிழைக்கவென்றுபின்னுஞ்சொல்வோமுத்தமனே றுதிமனங்கண்டுதேரு, பலவகையாஞ்சாத்திரங்கள்பலவும்பார்த்து பாரினிலே கெட்டவர்கள்கோடாகோடி, நிலவுபோல்ஏழைகள்பிழைக்கவென்று நீணிலத்தில் போகர்யாம் பாடிவைத்தோம், சிலகதைகள்வீணென்றுசொல்லிவிட்டாலும் சிறப்புடன்வுட்கருவைவிடான் தான்பாரே. ௪௨௩

பார்க்கையிலேபெருங்கொடுப்பைகொண்டுவந்துபாலக்னேசார் பிழிந்துசாற்றக்கேளு, தீர்த்தமுடன்சேராதுதான்யெடுத்துமைந்தாதிறமுடனேசுக்கதுவும்சிரந்தானும், சேர்க்கவே நிப்பிலியுங்கோஷ்டத்தோடு செம்மையுடன்கஸ்தூரிக்கூடச்சேர்த்து, ஆர்க்கமுடன்கூகைநீர்தன்னோடொக்க அப்பனே யெடைகாலாய் யெடுத்துக்கொள்ளே.

கொள்ளவேயாவிநெய்சரியதாக கொற்றவனேதான்சேர்த்துக்காய்ச்சிக்கொண்டு, மெள்ளவே மெழுகுபதம் வடித்துக்கொண்டு மேன்மையுடன்மண்டலந்தான் கொண்டுவந்தால், கள்ளமென்னுங்கோழையது யெங்கேபோச்சு, கடிதானசயரோகம் தியங்கலாச்சு, உள்ளபடிமேகமென்றரோகம்போகும் வுத்தமனே சில்விஷங்களற்றுபோமே. ௪௨௫

அற்றதொருவரையாப்பு புரைகள்போகும் அப்பனேகண்டத்தின்மாலைதீரும், உற்றதொருவகுவையென்றகட்டிதீரும்வுளமாந்தை

குன்மமுதலகன்றுவோடும், பெற்றதொருமாதுக்குவயத்தில்சோகம் பேசாமல்லோடுமடா யின்னங்கேளு, மற்றதொருமேகங்கள்கஜரோகங்கள் மாநிலத்தில்நிற்காது திண்ணந்தானே. ௪௨௬

வல்லாரைநெய்.

திண்ணமாமின்னமொரு கற்பம்பாரு திறலான வல்லாரைபெரியாவாரை, நண்ணமுடன் மூசிதான்சேர்தாழை நலமுடனேகொண்டுவந்துசெப்பக்கேளு, வண்ணமுடன் திப்பிலியுங்கோஷ்டந்தானும்வளமானமிளகுடனே மதுரந்தானும், எண்ணமுடன்சுக்குடனே கூகைநீறும்யெழிலான கிராம்புடனே சாதிக்காயே. ௪௨௭

காயானவால்மிளகு கூடச்சேர்த்து கருத்துடனேசாபத்திரிசரியதாக, மாயானவலம்புரியு மிடம்புரியுஞ் சேர்த்துமன்னவனேமயங்காமல் குங்குமப்பூ, தாயான கஸ்தூரிகோரோசனைத்தானும் தகமையுடன்வகைக்கொரு களஞ்சதாக, தோயாதபாலுடனேயித்தனையும்போட்டு துப்புரவாய்தானரைப்பாய்செப்பக்கேளே. ௪௨௮

செப்பவென்றால் நெய்யதுவுஞ் சேர்தான்பாதி செம்மையுடன்வொன்றாகக்காச்சியேதான், ஒப்புடனேகடுகுபதம்தானிறக்கிவுத்தமனேகணபதிக்குப் பூசைசெய்து, தப்பிதங்கள்நேராமல் மைந்தா நீயும் தன்மையுடன்வடிபணிந்து சிரங்குவித்து, மைப்பதுவே சீஷாவிற்பதனம்பண்ணு மகத்தானநெய்யதுவுங் காணார்தாமே. ௪௨௯

காணாரே நெய்யதனை யார்தான்கண்டார் காசினியில் சித்தர்முனிரிஷிகள்வேதை, தோணவே காயகற்ப ரோகநெய்யாம் தொல்லுலகில் சீனபதி தேசத்தார்க்கு, வேணவேகாலாங்கி நாதர்தாமும் விருப்பமுடன் செப்பவென்ற நெய்யுமாச்சு, பூணவேயறிவுள்ளான் செய்துபார்த்துப் பொங்கமுடன் நேமித்தகாயமாமே. ௪௩0

காயமாமிந்தநெய்வதிதங்கேளுகாயாதிகற்பங்களுண்டபேர்க்கு நேயமுடன் வாரத்துக்கிரண்டுமாற்கம் நேர்மையுடன் வந்திசந்திக்கொள்ளவேண்டும், மாயமெனுங்கள்ளாசை நீக்கவேண்டும் மதுபானம்விரும்பினால் காயமில்லை, தூயமுடன்நெய்யதனைக்கொண்டபோது திடமானரோகமெல்லாந் துலைந்துபோமே. ௪௩௧

துலைந்துவிடுங் காய்ச்சலென்ற ரோகம்போகும்துறையான மதுமேகம்விட்டேயோடும், அலைந்துகெட்ட கசரோகமகன்றுபோகும் அப்பனே வரையாப்பு மேகம்போகும், தலைவலியிமண்டையிடிதன்

ணல் போகும் சண்டாளவயற்றுவலி தாவியோடும், கலைந்துவிடுமகாது நோய்கண்ணைப்போகும் கால்வலியுமேல்வலியும் தகைத்துபோமே.

தகைத்துமே வாய்ப்புண்ணுவாய்நாற்றம்போம் தாரணியில்லா தமென்றரோகம்போகும், திகைத்துமேகுன்மவலிகுன்மரோகம்தீர தகவுசிவென்றமகோதரங்கள், பகைப்புடனேபீசத்தின்வாயுவீக்கம் பாங்கானகுடைச்சல்முதல்வலிப்புதீரும், நகைப்புடைய மாதருட ரோகம்போகும் நாடாதுபிணிமூப்பு நாடாதன்றே. ௨௩௩

## சதாவெரி நெய்.

நாடாது காயகற்பங்கொண்டபேர்க்கு நலமானநெய்பது தான் கொள்ளவேண்டும், தேடானகாயத்துக் கிந்தநெய்தான் தேற்றமுடன்வாமத்துக்கிரண்டுமுறைப்பா, வீடானதேகத்துக்குறுதிநெய்யாம் விருப்பமுடன்பாடிவைத்தேன் போகர்நாமும், நாடானசதாவேரிச மூலங்கொண்டு தளர்ச்சியுடன் சார்பிழிந்து சாற்றக்கேளே. ௨௩௪

சாற்றவென்றால் சதாவேரி சேரதாகும் சார்பானமுசுமுசுக்கை சேரதாகும், கூற்றமென்னுங் குதம்பைச்சார் சேரதாகும் குணமானமாதளையுஞ்சேரதாகும், மாற்றமென்றவாவிநெய் சேரதாகும் மகத்தானதேனதுவுஞ் சேரதாகும், சிற்றமுடன்கடைசரக்கு செப்பக் கேளுசிறப்புடனேசேர்க்கும் வகைக்கூறக்கேளே. ௨௩௫

கேளேதான் திப்பிலியும் விசுவாசிதானும்கெடியானசுக்குடனே வோமந்தானும், விளேதான் கூகைநீர்பரங்கிதானும்வுத்தமனேகருவாயின்பட்டைதானும், பாளேதான்போகாமல் மதுரந்தானும் பாங்குடனேயில்வாலைசிவதைவேறும், தாளேதான்வகைக்குவொருபலம தாகச்சற்பனையாய்ப் போட்டுமிக்காச்சிடாயே. ௨௩௬

காய்ச்சிகையில் கஸ்தூரிகுங்குமப்பூ கருவானரோசனையுங்களஞ்சிசேர்த்து, மாய்ச்சலுடன் மெழுகுபதம் தானிறக்கிமன்னவனே வடிகட்டியெடுத்துக்கொண்டு, பாசசலுடன்வாரத்துக்கிரண்டுமுறைதானும் பாங்குடனேயந்திசந்தி கொண்டாயானால், மேச்சலென்னும் ரோகமதுவகன்றுபோகும் மேதினியி லெந்நாளுமிருக்கலாமே. ()

இருக்கலாம் கற்பாந்தகாலமட்டும் யெழிலுடனேவாசியோகங் கொள்ளலாகும், பொருக்கலாஞ்சிவயோகந்தன்னிற்சென்று பொங்கமுடன்வாசியைந்தான் மடக்கிச்சேரல், சுருக்கவேகாமேந்திரிய மனைத்தும்போக்கி சதாகாலஞ்சின்மயத்திலிருந்துகொண்டு, வெருப்புடனே மாயாதிரட்சைதன்னை வெறுப்பதுவேயுத்தமற்கு புனிதமாமே. ௨௩௮

புனிதமாம்நெய்யதனைக்கொண்டபோது புகழானகசரோகமக ன்றுபோகும், வனிதமுடன்வாயுவென்றதெண்பதும்போம் வாகான பித்தமதுநாற்பதும்போம், துனிதமுள்ளசூலைபதி னெட்டும்போகும் துலையாதகுன்மமென்றரோகம்போகும், பனிதமுடன்பரிசமாம் வா யுபோகும் பறக்குமடாதேகத்தில் ரோகம்போமே. ௪௩௯

போமேதான்கரப்பனென்றபதினெட்டும்போம் பொல்லாதவ யிற்றுவலிபொருமல்போகும், வேமேதான்கால்வாதம்கைவாதம்போ ம் மிக்கானகுடல்பிரட்டல்யாவும்போகும், நாமேதான் சொன்னபடி சேத்துமங்கள் நாடாதுயென்னுஞ்நாடாதப்பா, வேமேதான்காச மொடுயீளைபோகும் வேகமுடனவழலைவென்றகட்டிபோமே. ( )

கட்டியென்றால்கொரிவென்றகட்டிபோகும் கருவானவுதிரத்தி ன் கட்டிபோகும், அட்டியில்லாவனலதுவும்பறந்துபோகும் அப்ப னே குடைச்சல்முதலகன்றுபோகும், துட்டமெனுவகொடிரோகம் மார்நைநரோகம் துடித்துமேகூடுவிட்டுக்காடுபோகும், திட்டமுடன் காயாதிகற்பங்கொண்ட தேகத்துக்கிந்தநெய் வேண்டும்பாரே. ()

வேண்டுமேகாயாதிசெந்தூரத்தை விருப்பமுடன்கொண்டவற் கும்பேதியாகா, தீண்டவுமேவிஷமதுவுமேறவாகா திகழானவானமது சேரலாகா, காண்டிபனுயிருந்தாலும்காயகற்பம் காசினியில்கொள் ளாவிட்டால் காயம்பாழாம், தூண்டுமிகக்கருபானந்தானறிந்து துப் புரவாய்யுண்பவனே சித்தனுமே. ௪௪௨

சித்தனைப்பிறந்தாலும் வொன்றுமில்லைசெகதலத்தில் வுண்மை தனையறியவேண்டும், மெத்தவேவழியோடே காயகற்பம் வெகுபேர் களுண்டுமெல்லோ கெட்டுப்போனூர், சத்தேதுமறிவிருந்து நூலைப் பார்த்துசதாகாலம் நேர்மையதுபாராமற்றான், பித்தனைப்போல் கெட்டலைந்து பிசாசுபூண்டு பேருலகில் மாணடவர்கள்கோடியாமே.

கோடியிலேயொருவருண்டுகருவாளியப்பா குணமுடையான்ம ணமுடையான் மானமுள்ளான், பேடிகள்போலவாய்வீணர் மெத் தவுண்டு பேருலகில்யொன்றறியார் கழுதைமாண்பர், தேடியேவலை ந்துமல்லோ காயகற்பம் திறமுடனேயுண்டவன்றானென்றுசொல்லி வாடியேபதிகெட்டுநிலையுங்கெட்டுவாட்டமுடன்மாண்டவர்கள் கோ டியாமே. ௪௪௪

கேளேதான்சிலிம்புதனில்மூலியுண்டைகிருபையுடன்தான்வைத்துசொல்லக்கேளு, பாளேதான்போகாமல்அக்கினியைப்போடு பாகமுடன்சிலும்பிதனைக்குடித்தபோது, நாளேதான்நாதாக்கள்சொற்படிக்கு நலமானபுகையதுவுங்கபாலந்தன்னில், சூளேதான்புகையதுவும்மேலேநோக்கி சுருக்குடனேலாகிரியைக்காட்டும்பாரே. சஙுக

பாரேதான்சிலும்புதனில்புகையெழும்பி பண்பானலாகிரியைமீட்டும்போது, நேரேதான்காயாதிகற்பசெந்தூரந்தான் நீடாழிக்காலம்வரைப்பழுதாராது, கூரேதான்நவகோடிரிஷிகள்தாமும் குறிப்பானசித்தர்முனியனேகம்பேர், சீரேதான்யிப்படியே சொல்லாமற்றான்சீரானசெந்தூரங்கெடுத்தார்காணே. சஙுஉ

காணவேகாயாதிசெந்தூரத்தை காசினியிலிப்படியேகெடுத்தார்தாமும், தோணவேகாயாதிகற்பத்துக்கு துறைகோடிமுறைகோடிதொந்தங்கோடி, பூணவேயிப்புகையைச்செய்யாவிட்டால் புகழானசெந்தூரங்கெட்டுப்போகும், வாணவேகாயாதிகொண்டபேர்க்குவளமுடனேலாகிரிகள்வேண்டும்பாரே. சஙுங

வேண்டியதோர்கருமான மின்னஞ்சொல்வேன் விருப்பமுடன்காயாதிகொண்டபேர்கள், தூண்டியேமுன்சொன்னசூரணத்தை துப்புரவாய்கியாழமதுசெய்துகொண்டு, தாண்டியேயாவின்பால் சீனிதானும் சட்டமுடன்தான்போட்டு கியாழஞ்செய்து, தீண்டியேவிஷம்போகவந்திசந்தி திறமாககுடிப்பதுவேயமுர்தமாமே. சஙுச

ஆமேதான்கியாழமதையுண்டபோது அப்பனேகாயாதிதேகந்தானும், நாமேதான்சொன்னபடிக்கிச்சைசெய்தால் நலமானசெந்தூரமேனியூறும், போமேதான்கியாழமதுகாயாதிக்குப் பொங்கமுடனனுபானமென்னலாகும், தாமேதான்பின்னமொரு வயணஞ்சொல்வேன் தகமையுடன்கேட்பவனேசீஷனுமே. சஙுரு

சீஷனும்மானிடர்க்குச்சொல்வேன்பாரு சிறப்பானகாயாதிகற்பத்துக்கு, பாஷமென்றபசுமூலியுண்டைதன்னை பட்சமுடன்நெய்தேனுங்கூடச்சேர்த்து, கோஷமென்றசக்கரையைப்பாகுசெய்து கொப்பெனவேசூரணத்தைபோட்டுகிண்டி, தோஷமதாகிய்யெல்லாமைந்தாகேளு துப்புரவாய்லேகியம்போல்கிண்டிடாயே. சஙுசா

கிண்டியேலேகியத்தைப்பதனம்டன் னுகிர்த்தியுடன்வாரத்துக்கிரண்டுமுறைதானும், தொண்டுமுடன் அம்பாளைப்பூசித்தேதான் தே

சிக்காய்தானளவுகொண்டபோது, கொண்டவுடன்காயாதிதேகந்தா
னும் கொற்றவனேசற்றாணுமென்னலாகும், அண்டர்முனிதேவாதி
ரிஷிகள்தாமும் வன்புடனேலேகியத்தைக்கொள்வார்பாரே. சடுஎ

பாரேதான்காயாதிகற்பவிண்டை பாரினிலேகொண்டவர்க்குப்
பலனைக்கேளீர்,நேரேதான்யேழானைப்பலனுண்டாகும் நேர்மையுடன்
மானிலத்திலிருக்கலாம்பார், சீரேதான்சிவயோகந்தன்னிற்சென்றால்
சின்மயத்தின் அஷ்டாங்கம் காணலாகும், வேரேதான்காண்பதுவும்
வொன்றுமில்லை வேதாந்தசுடரொளியைகாணலாமே. சடுஅ

காணலாம்ஞானவெளிப் பிரகாசந்தான் கடிதானயேழுவகைத்
தோற்றந்தானும், பூணலாம்தேகாதிகாயத்துக்கு பூட்டலாம்வேதாந்
தத்தாயின்சாரம், பாணமுடன்ஞானவுபசாரந்தன்னை பார்வையுடன்
மனக்கண்ணால்காணலாகும், நாணமுடன்பரவெளியைக்கண்டபோது
நாதாந்தச்சித்தர்களிலொருவனாச்சே. சடுகூ

ஆச்சென்றபெரும்பாக்தைத்தன்னிற்சென்றால் அப்பனேதத்து
வங்கள்தொண்ணூற்றாறும், மாச்சனுடன்மானிலத்தில்காணார்சித்தர்
மனக்கண்ணு லேயொருவர் காண்பார்கண்டீர், மூச்சடங்கியோகங்
கள்செய்தபேர்கள் மூதுலகிலொருலாபங்கண்டதில்லை, பேச்சனுடன்
வெறுபேச்சுப்பேசியல்லோபேருலகில்வேர்தரெல்லாம்மண்ணுனரே

மண்ணுனர்வொருவருந்தான்மண்டலத்தில்மகிட்சியுடன்வாழ்ந்
தவர்களாருமில்லை,திண்ணமுடனிறந்தவர்களெழுந்ததுண்டோ தேச
த்தில்கட்டுமொழியென்னலாகும், நன்னமுடன்நாதாந்தச்சித்துவெல்
லாம்நலமுடனே ,வேதாந்தம்பேசியேதான், எண்ணமுடன் ,வெகு
கோடிமனதிலெண்ணி யேற்றமுடன்மாண்டதுவுமுண்மையாமே.

தத்துவப்பிரட்டு.

உண்மையாம்வெகுகோடிநூல்கள்தாமும் வுற்பனமும்விற்பன
முஞ்சொன்னார்பாரு, கண்மையுடன்மார்க்கண்டநாயர்தாமும் காசினி
யில்வெகுகாலமிருந்தாரென்று வண்மையுடனவர்கூறும்சாத்திரத்தில்
வயதுபதினாறென்றுகூறினார்பார், திண்மையுடனவருமல்லோ மண்
ணின்மாண்டார் தேசத்திலிருந்ததுண்டோபொய்யுமாச்சே. சகூஉ

பொய்யானசாத்திரங்களுள்வுஞ்சொல்லிபூதலத்திலிருந்ததுண்
டோகண்டதுண்டோ, மெய்யானவார்த்தையைபோல்வினயஞ்சொ
ல்லி.மேதினியில்கட்டுமொழிசொன்னார்கண்டீர் துய்யமுடன்மேதினி

சிக்காய்தானளவுகொண்டபோது, கொண்டவுடன்காயாதிதேகந்தானும் கொற்றவனேசற்றாணுமென்னலாகும், அண்டர்முனிதேவாதிரிஷிகள்தாமும் வன்புடனேலேகியத்தைக்கொள்வார்பாரே. சருஎ

பாரேதான்காயாதிகற்பவிண்டை பாரினிமேலகொண்டவர்க்குப் பலனைக்கேனீர்,நேரேதான்யேழானைப்பலனுண்டாகும் நேர்மையுடன் மானிலத்திலிருக்கலாம்பார், சீரேதான்சிவயோகந்தன்னிற்சென்றால் சின்மயத்தின் அஷ்டாங்கங் காணலாகும், வேரேதான்காண்பதுவும் வொன்றுமில்லை வேதாந்தசுடரொளியைகாணலாமே. சருஅ

காணலாம்ஞானவொளிப் பிரகாசந்தான் கடிதானயேழுவகைத் தோற்றந்தானும், பூணலாம்தேகாதிகாயத்துக்கு பூட்டலாம்வேதாந்தத்தாயின்சாரம், பாணமுடன்ஞானவுபசாரந்தன்னை பார்வையுடன் மனக்கண்ணால்காணலாகும், நாணமுடன்பரவெளியைக்கண்டபோது நாதாந்தச்சித்தர்களிலொருவனாச்சே. சருகூ

ஆச்சென்றபெரும்பாந்தத்தன்னிற்சென்றால் அப்பனேதத்துவங்கள்தொண்ணூற்றாறும், மாச்சலுடன்மானிலத்தில்காணார்சித்தர் மனக்கண்ணா லேயொருவர் காண்பார்கண்டீர், மூச்சடங்கியோகங்கள்செய்தபேர்கள் மூதுலகிலொருலாபங்கண்டதில்லை, பேச்சலுடன் வெறுபேச்சுப்பேசியல்லோபேருலகில்வேந்தரெல்லாம்மண்ணானாரே

மண்ணானார்வொருவருந்தான்மண்டலத்தில்மகிட்சியுடன்வாழ்ந்தவர்களாருமில்லை,திண்ணமுடனிறந்தவர்களெழுந்ததுண்டோ தேசத்தில்கட்டுமொழியென்னலாகும், நன்னமுடன்நாதாந்தச்சித்துவெல்லாம்நலமுடனே வேதாந்தம்பேசியேதான், எண்ணமுடன் வெகுகோடிமனதிலெண்ணி யேற்றமுடன்மாண்டதுவுமுண்மையாமே.

## தத்துவப்பிரட்டு.

உண்மையாம்வெகுகோடிநூல்கள்தாமும் வுற்பனமும்விற்பனமுஞ்சொன்னார்பாரு, கண்மையுடன்மார்க்கண்டாயர்தாமும் காசினியில்வெகுகாலமிருந்தாரென்று வண்மையுடனவர்கூறும்சாத்திரத்தில் வயதுபதினாரென்றுகூறினார்பார், திண்மையுடனவருமல்லோ மண்ணின்மாண்டார் தேசத்திலிருந்ததுண்டோபொய்யுமாச்சே. சகூஉ

பொய்யானசாத்திரங்களுள்வுஞ்சொல்லிபூதலத்திலிருந்ததுண்டோகண்டதுண்டோ, மெய்யானவார்த்தையைபபோல்வினயஞ்சொல்லி.மேதினியில்கட்டுமொழிசொன்னார்கண்டீர் துய்யமுடன்மேதினி

யில்தருமராஜன், துப்புரவாய்மேனியுடன்கைலாயத்தில் பையவேசென்றெழுந்துபோனுரென்று பாருனிலேயிதுவுமொருகதையுமாச்சே.

கதையான்கவிவாணர்கட்டுரைத்தகதைதனையே மேதினியில்மெய்யென்றெண்ணி, பதைபதைத்துவச்சிராங்கம்பாண்டியன்தான் பாரினிலேவெகுகோடிதவசிருந்தான், கெதையுடனேயீசனிடஞ்சென்றுமேதான் கீர்த்தியுடன்பேருலகில்வந்தானென்று புகையொத்தமனம்போலக்கினவுகண்டு பூதலத்தில்நடந்தமொழிபொய்யுமாச்சே. ௪௬௪

ஆச்சேதான்யின்னமொரு வயனஞ்சொல்வேன் அப்பனேசெயமுனியாம்ரிஷிகள்தாமும், பேச்சேதான்பேசாமல்சிலதுகாலம் பேருலகில்மண்மீதுயிருந்திட்டாராம், மூச்சடங்கிசிலகாலம்பிணம்போல்தாமும் மூர்ச்சையதுபோலிருந்தால்சித்துதாமும், நேச்சனுடன்சமாதிதனிலிருந்தாரென்று நீணிலத்தில்பேராச்சுசிவயோகிக்கே. ௪௬௫

யோகத்தைசாதிக்கவெகுகாலந்தான் வுலகத்திலிருந்தாராம்தேகத்தோடே, தேகத்தைதான்மறந்துவவருமாண்டார் தேகமதுமண்ணேடுமண்ணுமாச்சு, போகத்திலிருந்தவருமாண்டுபோனார் பொங்கமுடன்தேகமதுநிலையேயில்லை, யாகத்தைசெய்துமல்லோசெயமுனிவர்தாமும் யாக்கதனையொழித்தாரேவுலகில்தானே. ௪௬௬

தானனயாகமதுகூறப்போமோ தாரணியில்வற்புதங்கள்மிகவுஞ்செய்தார், கோனனையனதையர்காலாங்கிநாதர் கொற்றவனுர்தானிருக்குங்காலந்தன்னில். பானனசெயமுனியும்பாரிலேதான்பாடினார்வெகுகோடிகருக்கநூலாம், தேனனதேகமதைநிறுத்தவென்று செப்பினார்பலநூலுபண்பதாமே. ௪௬௭

பண்பானநூல்களிலேதேகம்நிற்கும்பாரினிலேவெகுகாலமிருக்கலாகும், திண்பானசமுசாரவாழ்க்கைதன்னில் திகழுடனேகாயாதிகற்பகாலம், நண்பானகுடிவாழ்க்கைதனிலிருந்து நலமுடனேவெகுகாலமாண்டார்தாமும், கண்பானலோகத்தில் வெல்லாம்பொய்யாம் காசினியோர்வாண்டார்களிப்படியேதாமே. ௪௬௮

தாமானகிரேதாயினுகத்திலப்பா தாரணியில்வஷ்டபாலரிருந்திட்டாராம், கோமானும்கிரேதாயினரசன்றானும் கொற்றவனும்ராச்சியத்தையாண்டபோது, பாமானவஷ்டபாலர்பெட்டுபேரும் பாரினிலேசாகாதவரங்கொண்டோர்போல், நாமானமிருந்தவரை யனேகம்பார்த்தோம் நலமுடனேஒருவருந்தானில்லைகாணே. ௪௬௯

காணவென்றால்மண்ணுக்குபிறையுமானார் காசினியில்சித்தமுனி ரிஷிகள்தாமும், மாணவேகோடிவரைதிரவியங்கள் மகாகோடிநிதிக ளெல்லாந்தேடிவைத்து, நாணமுடன்பிழைப்பதற்குவழியுங்கெட்டு நாதாக்கள்காண்பதிவும்அருமையாகும், தோணவேதொல்லுலகில் சாத்திரத்தில் துறைகோடிமுறைகளெல்லாம்மறைந்தார்பாரே. சஎ0

மறைந்ததொருபொருளதனைமானிலத்தில் மாளாமல்சேர்த்து வைத்துமாண்டுபோனார், திரைப்படனேசாத்திரங்களதிகங்கற்றுதீரா தபுவவினையைக்கட்டறுத்து, முறைப்படியேஞானவரம்பெற்றேனெ ன்று மூர்க்கமுடன்கோபமதைமறுத்தேனென்றும், குறைப்படியே குவலயத்திலெந்நாளும் கூறியேமானிடர்கள்கெட்டார்தந்தே. சஎக

வழலையருக்கச்சூரணம்.

தந்திவிரைதட்டிபெடுபலமிரண்டுதக்கதோர்மிளகுரண்டுகொம் பிரண்டு, முந்திபெடுகடுக்காயும்பலமுமெட்டு மூணைந்துநெல்விமுள்ளி படைமுன்னிடையுங்கூட்டி, பந்தமுடன்சிந்தூரந்தாதிரோற் பதமாக அறைத்துமைபோற்கதிரில்வைத்து, சுந்தரமாய்ப்பொடியாக்கிவைத் துக்கொள்ளு சுருதிதனையாய்ந்துணர்ந்தயாதிச்சொன்னார். சஎஉ

மூவிரற்றுளெடுத்துவைத்துமுன்சிந்தூர முற்றினதோரிலந்தை விரையளவுவைத்து, தேவர்தலையிடுந்தயிலங் குழைத்துவுண்ணச்செ ப்பமிடத்திரிநாளாமறுநாள்தன்னில், காவிமுத்திலெண்ணைவிட்டுமூழ் குமுன்னேகருத்திலினைபுளிதள்ளு மோர்சோருண்டால், தாவிவரு நாலெல்லாந்தானேபோகும்தாஷ்டிகமாய்ப்பித்தமருந்தன்மைதானே.

பித்தவெட்டைபாண்டுமகோதாமும்தீரும் பின்புதான்சொரிசிர ங்குமேகவாயு, குத்தலண்டசூலைமுதல்வெட்டைபோகும் கூறரிதித ன்குணங்கள்கொள்கைமெத்த.நித்தகித்தமயக்குகின்றபித்தமாலை நீங் குமென்றுபோகரிஷிசொன்னநீதி, புத்தியுள்ளரிஷிமார்கள்சொன்ன நீதி புகட்டினேனெட்டிதுரைபுகன்றவாறே. சஎச

மகோதரங்களுக்கு.

பதங்கலிங்கபற்பமதுபலமூகாலு பதியவெடுகொம்புமிளகோடு கூட்டி, விதம்பெறவேதந்திவிரைசுத்திபண்ணி விதமிடுநெல்விமுள்ளி கடிக்காய்நேராம், அதம்படவேவகையானீரரைத்துச்சாமம் அதையெ டுத்துகுடுக்கைதனிலடைத்துக்கொண்டு, இதம்படவேபணவிடைநால் கொள்ளச்சொல்ல எந்தமகோதரமும்போமிதமதாமே. சஎரு

சூலைமகோதரம்போகுமாம்பற்கட்டி தொடர்ந்தபித்தமகோதரமுஞ்சொல்லாதோடும், வேலைதனிற்போயவிடுங்காணும்பற்கட்டி விடுபடுங்காண்சிலேட்டுமமகோதரமும்போகும், ஆலைதனிற்கரும்பாகுமுப்பைத்தள்ளு ஆறுநாள்சென்றபின்புஸ்நானம்பண்ணி, காலைநேரெல்லாமுங்கூட்டிக்கொள்ளு கருத்துரைத்தார்போகரிஷிகருணைபாரே. சஎஎ

பாரமுடன்பதங்கபற்பம்பலமூனாலு பதமிடைமிளகுசுக்குகந்திகூட்டி, பாரமுளநெல்லிமுள்ளிக்கடுக்காய்நேராய் பார்த்துஅரைபடிநீரார்சாமம்ரண்டு, கோரமுளவுத்தியளவாகவுண்டை கொடுத்துவிடுமகோதரங்கள்முப்பத்தொன்றும், நேரமிலையோடிவிடும்நிமிஷந்தனில் நிச்சயமாய்போகரிஷிநேர்சொன்னரே. சஎஎ

சூதபற்பம்கெந்திவெங்காரநேரே தூக்கியரைதேள்கொடுக்குகுமரியாலும், விதமொருநாளரைப்பின்னெடுத்துருட்டி வியாதியறிந்தனுபானவிதத்திலீய, வாதமுதல்கணரோகம்ருத்திரவாய்வு மார்வலியுங்குன்மவகைசூலையாறும், சீதமதைக்கொண்டுவருமந்தார்காசஞ் செல்லுமதுயிம்மருந்தின்திரமையாமே. சஎஅ

கண்டுபெடுபணவெடைதான்தேனிலுண்ண கதிர்மதியாந்தேகமதுகற்றூணாகும், தொண்டுசெய்வாருலகத்தோர்சொல்லவேண்டாந் தோகையர்கள்வசமாவார்திலங்கத்தாலும், பண்டுசெய்தபழவினைகள்தீர்ந்துநல்ல பதிவானபினியகன்றுகடலேபுக்கும், வண்டுபோல்மயிராகும்பாகமாக வழுத்தினரிஷிதேவர்வன்மைதானே. சஎகூ

நாகப்பழம்போலாகுங்களங்குதானும் நற்சிவப்புசிந்தூரம்அலரிப்பூப்போல், பாகமதுசுன்னந்தான்மல்லிப்பூப்போல் பதிவானமெழுகுதானிளக்குமாகும், தாகமதுதயிலந்தானிறக்கறுப்பு தாட்டிகமாய்நிறங்களறிமருந்துதன்னை, யோகமதுவந்திடுங்காண்பாகமாகுமித்தொழிலையரிந்தபதஞ்சொன்னவாறே. சஅ0

நல்லறிவாமுபாசங்கள்நவலோகங்கள் நாடதிலேபாஷாணஞ்சாரங்காரம், சொல்லுமுன்னேசூதமுதல்சிந்தூரிக்கச்சுருதிபெறமால்தேவிசிலைதான்கெந்தி, கல்லானகெவுரியப்பிரகந்தித்தநாகம் கடிதானவெடியுப்புயிவைகள்சேரில், உல்லாசமாகயிதுசேர்தாணுகில் உண்மையெல்லாஞ்சிவந்திடுமென்தாய்சொன்னளே. சஅக

சாயமனஞ்சாக்கதுதான்சாற்றக்கேளு தடையற்றவுப்பினொடுநாகந்தங்கம், வாயமதாமிரும்போடுநிமிளைசூதம் வடிவுபெற்றகவுரியுடன்

வர்னமாகும், நாயமாரிதைப்பிரித்துச்சொன்னாரப்போ நான்பார்த்து உங்களுக்குநட்த்தச்சொன்னேன், காயமதுநிலையில்லைகண்டுமுன்னே கணக்காகசிந்தூரமுண்டுதேறே சஅஉ

எச்சரக்குங்கட்டவொருசேதிகேளுஇனியவெடிசுன்னத்தால்ச ரக்குக்கட்டும்,தற்செயலாந்தயிலத்தாற்சரக்குகட்டுந் தடையற்றதிரா வகத்தாற்சரக்குகட்டும், இச்சைபடச்செயநீராற்சரக்குகட்டும் இதமா னமெழுகாலேசரக்குகட்டும், நச்சாவாமூலிகையாற்சரக்குகட்டா நா கரிகயரிதேவர்நலஞ்சொன்னாரே அசங

## பித்தபாண்டுக்கு.

அங்குசமும்பலப்பத்து அப்புமுநேரா யதையரைத்துக்கையானுற் புடமுமிட்டால்,இங்கிதமாச்சிவந்துவிடுஞ்சத்திருத மிதமாகமூன்கண் டபெடைக்குப்பாதி, தங்காமலரைத்துமுன்னீர்தன்னைவிட்டு தக்க தொருகுடத்திலிட்டுமேலேமூடி, பங்கம்வாராதெரித்தெடுக்கச்சிவந் துபோகும் பதிவானகளிகூர்ந்துபலன்சொன்னாரே. சஅச

## கர்ப்பந்தரிக்க.

. தட்டியிட்டுக்கொம்மட்டிவித்தெடுத்துதாட்டிகமாய்த்தர்இவிரை யிடை ய்சேர்த்து, மொங்கைதனிலடைநிறையதூரில்பொத்து மூக் கியமாய்க்குழித்தயிலம்வாங்கிச்சட்டி, சட்டமதாயடைத்துகாங்காசு விட்டுச் சரியானமஞ்சளதுபொடித்துவுண்ண, வட்டவளைமாதவிடாய் த்தன்னிலுண்ண வையகத்தில்பாலநதுவுண்டாமபாரே. சஅரு

உரிக்குமடல்தாரமதை கன்னத்துள்ளே ஒருமூன்றுசாமமதை யெரித்துவாங்கி, முருக்கிலையுங்கரிசாலைபழச்சாற்விட்டு மெழுகுபட அரைத்துபழந்துணியிலூட்டி,அருக்கனிடகாய்ந்தகழிவெண்டிலேறி அங்கியிட்டுப்புகைவாங்கிமுக்கால்போக, கருக்கவேமறைப்பணமும் பிடிக்கவேதான் சுவாசமொடுமந்தாரக்காசமபோமே. சஅசு

சிறுகீரைவேர்தூக்குப்பதக்குப்பில்லும் சேர்த்தரைத்துவடித்தா வின்படிநெய்விட்டு, அரைத்தூக்குசக்கரையும்மிளகுஞ்சேரு அரைப் படிவந்திதனையோர்கிறமாயாவி, மறக்காமலரைப்பலமோர்பொழுதவு ண்ணமார்பு உண்மைபதினெட்டுவாதம்நீங்கி, சுருக்கோடேகழங்கு சிறங்குமேகஞ் சுகமாகுங்கைகண்டதொழிலுமாமே. சஅஎ

உள்ளியுடன்மிளகுசக்குகல்லுப்போடு ஒருநூறுவெற்றிலையின் காம்புகூட்டி,கள்ளியின்சாற்விட்டரைத்துச்சார்ந்து நிம்மக்காயளவுயி

ருகோசாஞ்சுநாளும்,கொள்ளுமிதையிநுபுராழமிழுத்துக்கொண்டுகுத்
தவிட்டு அடிவபறு அண்டம்வீங்கில், வுள்ளுநமள்வலிவீக்கம்வாங்கு
மென்று முன்னவர்கள்சொன்ன திண்மைமொழியிதாமே. ௪௮௮

காட்டினிடஆமணக்கின்னெண்ணெய்வாங்கிக் கசடகற்றிவச்சிரத்தி
ன்பாலைவிட்டு, நீட்டுமெனநீர்க்கட்டுமலக்கட்டுத்தான் நோசகமெத்த
வுந்தான்பேதியாகில் வாட்டிடுவாய்யாவின்பால்தனையேவுண்ண வை
கைக்குணமாம்பேதியதுவடிந்திநிற்கும், கூட்டிடவேமலக்கட்டிவிது
வேயாதிகுணமாகபோகரிஷிகுறித்தார்தானே. ௪௮௪

ஆமென்றதவமுறுதிக்கின்னமொன்று அன்பாகச்சொல்லுகிறே
ன் நன்றாய்க்கேளு, நாமென்றசொல்லகத்திபூமிநாதம் நன்றானநாதம
டாசத்திசத்தி,தாமென்றபிரிதிவியாந்தன்னோடொக்க தயவானகெவு
ரியுடன்சிலையுங்கூட்டி, ஊமென்றநாகரசங்கூட்டிச்சேர்த்து ஓர்நிறை
யாய்க்கல்வமதில்நன்றாயாட்டே. ௪௯0

ஆட்டுவதுசம்புளத்தின்சாறுலாட்டி அப்பனேநெட்டங்கநன்றா
யாட்டி, கூட்டுவதுஒன்றாக்கிஏட்டுபண்ணிக் குண்டலமாஞ்சட்டிதனி
ல்நடுவேவைத்து, பூட்டுவதுதாம்பரத்தின்கிண்ணந்தன்னால் பொருந்
தவேமூடிநன்றாய்மண்ணுப்பும்போட்டு, தாட்டிகமாத்தீயெரித்துப்
பாரு தயவானபதமதனைச்சொல்லுவேனே. ௪௯௧

சொல்லுவேன்சொரிந்தமணல்கருகிற்றானால் சுற்றமுள்ளபக்குவ
மென்றெடுத்துக்கொள்ளு, வெல்லுவேனிதற்குரெட்டிதாம்பரத்தை
விசையாகவுருக்குமுகந்தன்னில்மருந்தை, நல்நினைவாய்மருந்துத்தா
நீவாயாகில் நாற்றமுள்ளசெம்பதுவுங்கட்டிப்போகும், கொல்லுவே
னென்றுசொல்லிவெள்ளியேழில்குணமுள்ளசெம்புமுன்றொன்றாய்க்
கூட்டே. ௪௯௨

கூட்டிநன்றாய்க்குகைதனிலேயுருக்கிப்பாரு குருவருளால்திருவ
ருளால்மாத்தெட்டாகும், தாட்டிகமாய்ப்பத்திலொன்றுதங்கஞ்சேர்
க்க தயவானதங்கமடாமென்னசொல்வேன், பூட்டிநின்றபூட்டனுக்கு
சத்திசிவந்தன்னைப், பூரணமாய்க்கண்டுமனதறிவினாலே தீட்டிமுனைம
ருச்சுழிமுனையின்மீதே திருவானவருகுருவுந்தீபவொளியாமே ()

ஆமப்பாயின்னமொருகருவைக்கேளு ஆதியென்றலிங்கமுடன்து
ருசுகூட்டி, தாமப்பாகண்டிகைக்கு ஆதிசேர்த்து சம்பளத்தின்சாற்று
லேகல்வத்தாட்டி, காமப்பாசொன்னபடிவட்டுபண்ணி நன்மைபெறம
ண்மறைவில்புடத்தைப்போட்டு, சாமப்பாசரக்குவகைமூன்றுதானும்
சமரமாய்க்கட்டவுந்தான்திட்டமாமே. ௪௯௪

இட்டமுடன்புடமாறியெடுத்துக்கொண்டு செம்மையுடன்செம்
புருக்கிமருந்தையீவாய், இட்டமுடன்செம்பிடைக்குரட்டீவாய் யிரு
ண்டசெம்புவுருகியதுகட்டிநிற்கும், பட்டசெம்புநாலுடனேவெள்ளி
பாறு பக்குவமாயுருக்கிப்பார்மாற்றுகும், கட்டமென்னபத்திலொன்று
தங்கஞ்சேர்த்து நலமாகவெட்டுவயதாகும்பாரே. ௪௯௫

பத்திட்டுக்கடுமையாயெரித்துஆற்றிபதியவெடுபிரித்திடவேமே
லேயேறி, சத்துநிற்குமயிற்குச்சிதன்னாற்றானே தனைச்சரண்டிபீங்கா
னிற்பனியில்வைக்க, நித்தியமாய்ச்செயநீராம்ஆறுபோலாம் நிலைக்க
வெகுசீசாவிலடைத்துநீயும், முத்திபெறதுருசுதனைத்தோய்ச்சுவெ
ட்டு முதன்பெறவெட்டுநாள்தோச்சுப்போடே ௪௯௬

போட்டுமேசுண்ணாம்புவீரம்நேரே பொருந்தமஞ்சளாந்துருசு
மேலேகட்டு, நாட்டவேகவசமிடு அக்கியிட்டு நலமாமக்குக்குடத்தில்
நீறிப்போகும், கூட்டுமேசூதனிடைநீலம்போடு கூட்டியபரைசாரநீர்தன்
னிலே, வாட்டும்ரசகற்பூரநாவிலொன்று வகையாகநிறுத்திட்டு அ
ரைத்துக்கொள்ளே.
௪௯௭

நல்லாகவரைததுளட்டிலொன்றுவீர நல்லபச்சைக்கற்பூரமெட்டி
லொன்று, வில்லாசமுன்னீராலரைத்துச்சாமம் விருதுபடக்குக்குடத்
தேபோட்டெடுக்க, செல்லவொறுகுருவேகுந்துருசுச்செம்பில் இட
மாகவுருக்கியிடைகுருவைத்தாக்கு வெல்லுமதைவாங்கியது தட்டத்
தூளாம் வெள்ளிபதில்நால்சேர்த்துஆதிப்போடே. ௪௯௮

கனகமதுயிரண்டிடைதானிற்குமந்தக் கனகத்தையெடுத்துமென்
ளவிற்றுக்கொள்ளு, இன்மொத்தவிடந்தனிலேயின்றுவாழு மினமான
ஞானத்தையியல்புபாரு, உணவுடனேயாறுதலமேறிப்பாரு வுத்தமித்
தாய்வந்துநிற்பாளுலகந்தன்னில், சனகனருள்பெருவீராமிந்தபோக்கு
தாவ்டிகவான்போகரிஷிசொன்னவாறே. ௪௯௯

மறுபடியும் தத்துவங்கூறல்.

சொன்னேரேபின்னமொரு மார்க்கங்கேளு சொல்லுகிறேன் பாரினிலேகணேசருண்டு, மன்னேகேள் திரேதாயினுகத்திலப்பா மகாதேவரானவராங் கணேசர்தாமும், பன்னவேதும்பிக்கை ரூபங்கொண்டுபாரினிலே பிறந்தாராம்மனுஷரூபம், என்னவே வெகுகோடிகாலந்தானும் பெழிலான ஞானிபோலிருந்தார்தாமே, ௫௦௦

விநாயகர் உற்பவம்.

தாமானசமுசார வாழ்க்கையற்று தகமையுள்ள பேரின்ப வாழ்வுபெற்று, சாமான்மானதொரு வுலகவாழ்வை சர்ச்சனர்க்கு வுபயோகவிருத்திபோகம், நாமானசாத்திரங்கட்குபிராய்னின்று நமஸ்கரித்து கணபதியாங் கணேசரென்றும், தாமானநூலுக்கு முதற்காப்பாக தாரணியில் மானிடர்க்குசத்திதானே. ௫௦௧

தானேசத்திக்கு முதல்வன்காப்பு தாக்கானயீஸ்வரிக்கு முதல்வன்காப்பு, பானேதிரிமூர்த்தி முதல்வன்காப்பு பாங்குபெற மானிலத்திற்செய்தவேதம், கோனேரிஷிமுனிவர் சித்தாமும் கோடானகோடிநூல் செய்தார்பாரு, தேனேநூலுக்கு முதலாய்நின்று தேர்ந்தபிள்ளையாருமென்ற பேருமாச்சே. ௫௦௨

ஆச்சென்ற நூல்களுக்கு மிவரேயாதி அரவோம்நமசிவயமிதற்குள்ளாகும், பாச்சலென்ற ஓங்காரமிதற்குள்ளாகும் பாருலகில் வேதமெல்லாம் மிதற்குள்ளாகும், மாச்சலென்றகவிவாணர் நூலுக்காதி மகுடமுடி மன்னவர்க்கு மிவரேயாதி, கூச்சலென்றவேதமகா கோஷ்டத்தார்க்கும் குவலயத்தில் விநாயகரும் முதலாம்பாரே. ௫௦௩

பாரேதான் விநாயகரைக் காப்பேடாக்கி பாரினிலே நூலெல்லாம்பாடினார்கள், நேரேதான் சர்வகோடிபாடலுக்கு நேர்மையுடன் விநாயகரைமுதல்வனாக்கி, சீரேதான்காவியங்கள்பாவினங்கள் சிறப்பானவசனமென்றரூபந்தானும், கூரேதான் யெழுத்தாணிக்கை ரூபத்தால் கோடானகோடிநூல் யெழுதலாச்சே. ௫௦௪

எழுதவென்றால் நூலுரையோன் சொல்லும்நீதி யெழிலானஆக்கியொன்றன்பகரும்நீதி, பழுதறவேயெழுத்தாணிக்கைபிடித்துபாங்குபெறக்கணபதியைக்காப்புமிட்டு, தொழுதுமேசிறங்குனிந்துகைகுவித்துதொல்லுலகில் வாணரெல்லாங்காப்பிட்டார்கள், உழுதுபயிரிடுங்குடியாளர்தாமும் வுத்தமர்கள் மானிலத்தில்தொழுவார்பாரே

பாருலகில் கணபதியே தேவனென்றும் பட்சமுடன்மானிடர்
கள்தொழுதுபோற்றி, சீருடனே யஷ்டாங்கத் தனைநினைந்து சிறப்பு
டனேயஞ்சலிகள் மிகவுஞ்செய்து, ஊருடனே குடிமக்கள்மிகவுங்
கூடி வுத்தமாரங்கணபதியைக் கடவுளாக்கி, பேருடனே வையகத்
திற் சாமியென்றும் பேரானபுகழ்படைத்தா ரதிதமாமே. ௫௦௬

அதிதமாங்கண பதியுமென்றநாமம் அவனிதனில் மனிதரல்லா
ல்வேறொன்றல்ல, துதிதமுள்ள கடவுளா யிருப்பாரானல் தொல்லு
லகில்வுயிரோடே யிருக்காரோதான், பதிதமுள்ள பாடல்களில் சுவா
மியென்றும் பாடினார்வெகுகோடி மாந்தரப்பா, நிதிதமுள்ளகணபதி
யின்தேகந்தானும் நிலையாதயனித்திய மென்னலாச்சே. ௫௦௭

என்னவேகணபதியும் நீணிலத்தில் யெழிலானதேகத்தை மறந்
துபோனார், பன்னவேபாரினிலே தேவனானல் பாழானதேகமது
மண்ணுக்காமோ, துன்னவேகாயமது நிலைப்பதற்கு தொல்லுலகில்
கோடானகோடிகற்பம், முன்னமேகாயாதி கற்பமுண்டு மூதலகில்
கற்றாணாய் யிருந்தார்காணே. ௫௦௮

காணவேவவர்கூட்டந் தன்னிலப்பா கதுமையுட னிவருமொரு
சித்துமானார், தோணவேவெகு கோடிகாலமப்பா தொல்லுலகில் கா
யாதிகற்பமுண்டு, ஈணவேசமுசார வாழ்க்கைநீக்கி யெழிலுடனே
காயத்தையிருத்திக்கொண்டு, பூணவேபுவியுளோர்க்கு கவியாக புக
ழுடனே வெகுகாலம் யிருந்தார்தாமே. ௫௦௯

வீரபத்திரர் உற்பவம்.

இருந்தாரேயின்னமொரு மார்க்கங்கேளு யெழிலான வீரபத்தி
ரன்பாடுசொல்வோம், பொருந்தவே காலாங்கிநாயர்பாதம் போற்றி
யேமுடிவணங்கி தான்பணிந்து, திருந்தவே சீனபதிதேசத்தார்க்கு
சிறப்பான தேவதாதிமாந்தர்தம்மை, வருந்தியேவரலாறு காதை
சொல்வோம் வகுப்புடனேயின்னம்வெகு காதையுண்டே. ௫௧௦

உண்டானவீரபத்திரன் படைவீரன்றான் வுத்தமனேயதிவீரன்
போர்வீரன்றான், திண்டான சாத்திரங்கள் பெருநூல்யாவும் திறை
கோடிதிசைகோடி திகழ்கள்கோடி, கண்டாலும் பெருநூல்கள் விரி
நூல்தன்னில்காசினியி லவர்பெருமை மெத்தவுண்டு, அண்டாத சே
னைரதப்படைக்கூட்டத்தை அவனியிலேதான் செயித்த வீரனாமே.

வீரனுந்தக்கனது யாகந்தன்னை வீரமுடன்தான்செயித்த வீரப
த்திரன்,சூரனும்பத்மா வில்சூரன்தன்னை சுட்டெரித்தசூட்சாதியா

னமாரன், கோரமாம் டாகினியைக்கருவருத்த கொற்றவனுமென்றி வர்க்குப்பேருமாச்சு, பாரமுடன் யிதிகாசபுராணமெல்லாம் பாடி வைத்தார்கவிவாணர் திறமைபாரே ௫௧௨

திறமையுடன் சாத்திரத்திலதிதஞ்சொல்லி திறளாக சத்துரு சங்காரர்தன்னை, முறைமையுடன் கதைபேசியுறவுபேசி மூர்க்கமு டன் வெகுபேரைசெயித்தானென்றும், குறைமனதாய்தக்கனுடயா கந்தன்னை குவலயத்தில்வேரறுத்துச்சுட்டறுந்து, உறமுடனேவெகு கோடிகாலந்தானும் வுத்தமனும்மிருந்தா ரென்றுரைத்தார்பாரே. ()

உரைத்தாரே வீரபத்திரன்வீரன்தன்னை ஓகோகோநாதாக்கள் நம்புவாரோ, நிறைத்தாரே சாத்திரங்கள்புராணமெல்லாம் நிலையான தேவனென்றுஞ் சொன்னார்பாரு, பறைத்ததொரு காயமிதுதேவனா னல்பாரினிலே மற்றொருதெய்வமேன்தான், இரைத்தாரே யிவர்தா னுந்தெய்வமானால்யெழிலான வுலகமதிலிருக்கொண்ணாதோ. ௫௧௪

ஒண்ணாதுதேகமது கூடுவிட்டு வுலகத்தைதான்மறந்து மண்ணா ப்போச்சு, நண்ணமுடன் வாத்மாவுங்காணாதாச்சு நலமானசடலமது விழலாய்போச்சு, எண்ணமுடன் லோகமதிலிருந்ததுண்டோ யெழி லானதேகத்தால் யெடுத்தகாயம், உண்பதுவும்வுடுப்பதுவு மென்ன ரெகும் வுத்தமனேவீரபத்திர னரசென்மமாச்சே. ௫௧௫

ஆச்சப்பாசாத்திரங்கள் சொன்னார்கோடி அவனிதனில்வீரபத் திரன்கடவுளென்று, மூச்சடங்கிப்போனதொரு மனிதன்தன்னைமுசி யாமல்தேவனென்று தொழுதார்பாரு, வீச்சலுடன் காசினியிலவரு மாண்டார் விண்ணுலகி லாத்மாவும்போனதொன்று, எச்சானவுறுதி மொழிகானலாச்சே யென்மகனே வீரபத்திரன் மண்ணானே. ()

பத்திரகாளி உற்பவம்.

மண்ணானார்பின்னமொரு மார்க்கம்பாரு மகத்தான சேனபதி பிழைக்கவென்று, திண்ணைகவடபத்திர காளியம்மன் திரளானகூட்ட முடன்சென்றுதானும், குண்ணைநதிமலைகள்குகைகள்தேடி கொற் றவனும் யுத்தமது செய்யவென்று, வண்ணமுடன்மகுடாதி சூரன் தன்னை மார்பிளந்து வல்லயத்தில்குத்தினாளே. ௫௧௭

குத்தவேமகுடாதி சூரன்றானும் கொற்றவனுங் கிடாவயிற்றில வதரித்தான், சத்தமுடன்வபயமிட்டுக் கண்பிதுங்கி தரணிதனில் மலைபோலேவிழுந்தான்பாரு, பித்தனைப்போல்மதிமயங்கி வாக்குறை த்துபிசகான வார்த்தையது மிகவுஞ்சொல்லி, சித்தமடியேனென்று தொழுதுபோற்றி சிறப்புடனே மண்ணுலகில் மாண்டான்தானே

மாண்டாரேகாளியிட கைவசத்தால் மானிலத்தில் கேட்டவரு ஞ்சான்ஞேர்தாமும், கூண்டோடே சடமழிந்து மண்ணுப்போ ஞர் குவலயத்தி லிருந்தவரும் யாருமில்லை, பாண்டுமகா புத்திரரு மிப்படியேமாண்டார் பாரினிலேமாண்டவருமிப்படியேயுண்டு,காண் டிடமுங் தாம்பிடித்தபத்ரகாளி காசினியில்தான்வளர்ந்து மண்ணு நாளே. ருகக

மண்ணுனதேகமவள் சாமியாஞல் மானிலத்தி லிருப்பதற்கு வையமென்ன, வண்ணமுடன்தேகமதுவழிந்துபோச்சு மானிலத்தில் காளியவள்கூளியாஞள், எண்ணிமிகப்பார்க்கையிலே தேகம்பாழாம் யெக்காலமிருந்தாலும் மண்தான்வீடு, நண்ணமுடன் தேகமது மண் ணுமாச்சு நயமுடனே மண்கூறும்மண்ணுமாச்சே. ருஉ௦

ஆச்சென்றுபிரிதிவியோ டொக்கச்சேர்ந்து அப்பனேமண்கூடு தானுமாச்சு, மூச்சடங்கிதேகமது போகும்பாரு மூதலகிலொருவரு ந்தானிருந்ததில்லை, மாச்சலுடன் வீராதிவீரர்தாமும் மகாபத்திர காளியென்று வசனித்தார்கள், பாச்சலுடன் தேகமது பாழதாகி பாரினிலே மடிந்தார்கள் கோடியாமே. ருஉக

கிருஷ்ணனுற்பவம்.

கோடியாமின்னமொருகூத்துகேளீர்கூறுகிறேன்மானிடர்களறி யவென்று, நாடியேகிருஷ்ணவதாரனப்பா நலமான துவாரகையிற் பிறந்தார்கண்டீர், தேடியே லோகத்து மங்கைமாரை தேற்றமுடன் சிறையதுதானெடுத்தாரென்றும்,பாடியேபன்னீறுஆயிரம்பேர்பட்ச முடன் வலதழித்தக் கதைகேட்டோமே. ருஉஉ

கதையான மாந்தர்களை சிறையெடுத்து காசினியிலீலா விஞே தஞ்செய்து, கெதையுடனே சத்துருசங்காரம்செய்துகெவனமுடன் லீலாவிகுளிகைகொண்டு, சிதைவுபடதாரணியிலனந்தம்பேரைசீரழி த்துக்கெடுத்துவிட்ட கோபாலன்ருன், வதைச்செய்யும் கோபாலன் வடிவைப்பற்றிவையகத்து மாந்தரெல்லாம் மயங்கிஞரே. ருஉங

மயங்கிஞர் கோடானகோடிபெண்கள் மண்டலத்தில்கிருஷ்ணு வதாரனுக்கு, தியங்கியே கற்பழிந்ததேகந்தன்னை திகழுடனே தத் தமக்காய் செய்துகொண்டார், பயங்கமுடன் புராணங்கள் இதிகா சங்கள் பலபலவாங்கிருஷ்ணனது காதைதன்னை, புயங்கமுடன்புலவ ரெல்லாம் புகழ்ந்துபாடி பூதலத்தில்கதையுமுண்டாக்கிஞரே. ருஉச

உண்டானசாத்திரத்திலின்னஞ்சொல்வோம் வுத்தமனார்பஞ்ச பாண்டவர்க்குத்தானும், கொண்டானவுரவிகளும்மிகவாய்ச்செய்து கொற்றவனு மருச்சுனனார்தன்தமக்கு, பண்டான மைத்துனராய்ப் பேர்படைத்து பண்புடனே தங்கைதனை தானளித், துதிண்டானதிர வியங்களுதவிசெய்து நேசமுடன்பார்த்தனுக்குத்துணையானாரே. ()

துணையாகசத்த சாகரங்கடந்து தப்புறவாய்லோகளதிசயங்க ளெல்லாம், பிணையுடனே யிருவருமாய் லோகஞ்சுத்தி பிரியமுடன் சத்தகன்னிகையைக்கண்டு, பணையமுடன் திரவியங்களில்லாமற்றான் பாரினிலே வெகுதீரவானாக, கணையோடு வூர்வனத்தைச்சுற்றிவந் துகன்னிகையை மாலையிட்டார் கண்டீர்பாரே. ௫௨௬

பாரேதான்வடிவமுள்ள கன்னிமாரை பார்த்தனென்னும்வடி வழகன்மாலையிட்டு, நேரேதான் கீர்த்திப்பிரதாபனாக நெடுங்காலந் தானிருந்தார் தவசிருந்தார், ஊரேதான் பதியிழந்து மண்ணிழந்து வுத்தமனார் துரியனிட தீங்குதன்னால், போரேனுமென் றுரைத்துக் காட்டகத்தில் பொங்கமுடன்பயணை தனிலிருந்தார்தாமே. ௫௨௭

இருந்தாரே துரௌபதியுமைவர்தாமும் வெழிலான காட்டக த்தில்நெடுங்காலந்தான், பொருந்தாமல் வனவனமாய்த்தான்திரிந் துபொங்கமுடன்வெகுபாடு மிகவும்பட்டு, குருந்தமுடன்கற்சுகத்தை விட்டிழந்து குவலயத்தில்குடிவாழ்க்கைசெய்துகொண்டு, வருந்தியே வவர்கள்பட்டபாடுதன்னை வைகுந்தகிருஷ்ணனவர்பார்த்திட்டாரே.

பார்த்திட்ட கிருஷ்ணனவர் தெய்வமானால் பாருலகில் பஞ்சவ ரை ரட்சிக்காரோ, தீர்த்திட்டதேசமது மனிதசெனமம் திரளான சேனைகளுமிருந்துமென்ன, கார்த்திடவேகிருஷ்ணனவர்வல்லபத்தால் காசினியில் வெகுகோடிசெனங்கள்தம்மை, பூர்த்திட்டமாகவல்லோ புனிதபாலன் புகழுடனே ரட்சிக்கமுடியார்தாமே. ௫௨௯

முடியாது கோபாலர் தன்னாலப்பா மூதுலகில்வல்லமைகளிருந் துமென்ன, நெடிதானபாவத்துக்காளுமாகிநெடுங்காலந்தாமிருந்தார் பூலோகத்தில். வடிவானதேகமது மடிந்துபோச்சு, மண்டலத்தில்கிரு ஷ்ணனென்னும்பேரும்போச்சு, முடியானமுடிவேந்த ரெல்லாருந் தான்முனையான தெய்வமென்று தொழுதார்பாரே. ௫௩௦

தொழுதாரோ ராசாதிராசரெல்லாம் தொல்லுலகில் மாந்தர்மு தலனேகங்கோடி, அழுதாரேதெய்வமென்று காலாகாலம் அவனியி

லேபவருமல்லோமண்ணுப்பேரனார். பழுதவரா தென்றுரைத்ததே கந்தானும் பாரினிலேமண்ணோடமடியலாச்சு, முழுதுமேயிவர்தேகம் அழியாதென்று முனையான சாத்திரங்கள் சொல்லலாச்சே. ருகூக

ஆச்சென்றதேகமதுயழியலாச்சு வப்பனேசாஸ்திரமும்பொய்யுமாச்சு, வீச்சனுடன்கிருஷ்ணுவ தாரந்தானும் விண்ணுலகில்மடியவென்றநாளுமாச்சு, பாச்சலுடன் தேகமது பொய்பேவாழ்வு பாரினிலேயிருந்தவர்களொருவரில்லை, ஏச்சலுடன்யிவர்களெல்லாமனிதரல்லா லெழிலானதெய்வமென்று சொல்லொணுதே. ருகூஉ

நந்தி போகர் முன்னிலையாகச் சூதமுனிக்கு
உபதேசங்கூறல்,

சொல்லவென்றுமின்ன மொருகருமானங்கேள் சூட்சாதி சூட்சமுடன் செப்பக்கேளும், வெல்லவேகாலாங்கி நாதர்பாதம் விருப்பமுடன்றுள்பணிந்து விரித்துச்சொல்வேன், மெல்லவேயென் முன்னுய் நந்திதாமும் மேதினியில் சூதமுனிசித்தருக்கு, புல்லவேவுபதேசஞ் செய்தார்பாரில் பூவுலகில் சித்துமுனிநந்திதாமே. ருகூகூ

நந்தீசாவேதமுனி சூதமுனியிவர்கள் நாதனடிபோற்றிசெய்து மகிழ்ந்திருக்கும் வேளை, யிந்திவொலக்க மௌனவாதவித்தைசெய்யயேதுவகையென்று அருள்வேதமுனிதான்கேட்க, நந்திமுகனைப்பணிந்து வுரைத்திடுவார் நந்திதாரணியிலுள்ளவர்க்குச்சாகாத வரமும, மந்திரத்தால் சத்திசித்தியாகும்வரலாறு மாத்திரை மருத்துவத்தில் வளமாதிபகர்வாம். ருகூச

ஆதியானருமையாள் தன்னுடனே யன்பாயயனருளியசொல் வேதமுனிக் கரிவித்தார்நந்தி, சாதிலிங்கந் தன்னிலிருபது களஞ்சி வாங்கித் தாமாகசிறுபடதுபோல்நறுக்கி, நீதிசெறியெலுமிச்சம்பழச் சாற்றிலிட்டு நோரகவொரு சாமம்வெயில் வைத்தெடுத்து, சூதில்லா கொடிவேலி வேரதனைக்கொண்டு தூளாகயிடித்ததையும்வேறுவைத்துக்கொள்ளே. ருகூரு

வைத்தபின்பு தனித்தகண்டவாய் சேரும்பானை வகையேது ரெண்டுகொண்டுவந்ததிலேயொன்றில், யெய்த்திடவேகொடுவேலிப்பொடிபாதியிட்டு மேலாகசாதிலிங்கப்பொடிதனைவேபரப்பி, சித்தாகவதின் மேலுங்கொடியேலிவேர்பொடியை, சிறப்பாகசிறப்பிப்பின் மறுபானைதனக்கு, கைத்திடாவாழப்பழந்தினிலையுடனேகானமாமுருக்கை யிலையுங் கைகோர்த்துபிடியே. ருகூசு

பிடித்துயிருவகை யிலையுந்தனிச் சாறுமெடுத்து யிதமாக மேல்
பானை தூரிலேதடவி, வடித்தந்தபானை கொண்டுவாய் சேர்த்துமூடி
வகையாகச் சந்துவாயேழுசீலைமண்ணும், மடித்துநீ யுணர்த்தியதில்
வெடித்த விடந்தனக்கு பின்னுமந்த மண்தடவி யுணர்த்திவலுச்செ
ய்து படித்தவொருவஞ்செழுத்தால், முன்னவனைப்பணிந்து பாங்கா
னவுபதேசஞ்செய் தடுப்பிலேற்றே. ௫௩௭

எத்தியனற் கமலம்போல் மூப்பது நாழிகைக்குள் ளெரியிட்டு
ஆத்தியதையெடுத்து நீதுருக்கே, பாத்தியலவெய்வதைத் தந்தச்சீலை
மண்திறந்து பார்க்கவேமேல்பானை தூரிலேயிரதம், வேற்றுமையாயி
ருக்குமதைப் பன்றிமுடியதனால் மெதுவாகத்துடைத் தொடுத்து
விரும்பிவைத்துக் கொண்டால், நாற்றிசையும் பரக்கவே யெடுத்த
வகைக்கெல்லாம் நன்றாகக்கூடு மதில்வகைசொல்லினேட்டே. ௫௩௮

நாட்டுவேன் திருநாமம் நீலகண்டவாலை நந்தியுரைப்படி யரை
த்துசேர்க்கும் வகைகேளு, கூட்டுவேன்கண்டங் கத்திரியின் பழத்
தைக்கொண்டுவந்து பிடித்ததனை தனிச்சாறெடுத்து, வீட்டிவைத்
துக்கொண்டிதற்கு முன்னமேயெடுத்த வேதாந்தசாதிலிங்கபிரத்தை
நிறுத்து ஊட்டுநீகளஞ்சிக், காய்படிச்சாரளந்து யுறையுறைய விட்
டதனை வைத்தமட்டு மறையே. ௫௩௯

அரைத்தெடுத்துவொன்றிலே யடைத்துவைத்துகொண்டு அன்
பாகசிவகாமி பூசையேசெய்து, வுரைத்து அறவைத்தவெள்ளித் தக
டாக்கி யிதிலேயுறவாக நீலகண்டவாலைதனைப்பூசி, யிரைத்துவளர்க்
கிடுங் கோழிப்புடம் போட்டெடுத்தால்யிடுந் தங்கம் போல மாத்து
பத்தரையுங்காணும், வரைத்த அறவைத்தசெம்புத் தகட்டிலேபூசி
வளர் கோழிப்புடம்போட மாற்றுமாறரையே. ௫௪0

ஆறரையுங் காணுமல்லால் பின்னுமதில்வகைதான் அவனிதனி
ல்மானிடர்க்கு ஆனகற்பஞ்சொல்வேன், மாறடைந்த விடத்தலையின்
வடக்கானவேரை வாகாகவெட்டிவந்துசாணை தனிலுரைத்து வீறான
நெல்லிக்கா யளவிலேயுருட்டி, மேலானவாலைசம்பணவிடை காணு
ட்டி தேறுதபிணியாளர்க் கேழுநாள்கொடுக்க தீருமெனும் பிணிக்கு
வகை செப்புவதுமாமே. ௫௪௧

ஆமென்ற பிணிக்குவகை சொல்வதுகேளப்பா ஆக்கைதனிலே
யெழுந்தவாதமெண்பதுடனே, காமென்றுவரும் வாதகுலையறுபதுக்

கும்காயினுங்கேடாக்குமந்த கிரந்திபதினெட்டும், தாமென்று ஆண்மைசெய்புங்குஷ்ட மூடனைப்புந்தாமனிக்கும் பவுத்திரநதான், நீரெட்டும் மேமனுனென்றுமண்டவாதமாறுக்கும்யிது வாலைகற்பமென்று பயம்ப விண்ணில்போமே. ருசஉ

விண்ணில்போய் விடுமூலவியாதி யாறும்வேகமா யெழுந்தகுன்மம்பதினாறுங்கூடமண்ணில், தான்பிறப்பறுக்கும் செயரோகமாறும் மாயமெனவந்தடுக்குஞ் சன்னிபதினெட்டுஞ், சுரமாரல்சுரமும் யெண்ணித்தான் முடியாதயீசனருள், பதத்தில்யிருக்கு முசல்கண்டன் வலி பதினெட்டுமேகும். ருசங

யேகுமேபலபிணியுஞ் சகலவியாதிகளு மென்றுரைத்த நந்தி பின்னுமியம் பினத்தைக்கேளு, வாகுடையமானிடராக்கை யெடுத்தோர்கள் வகையானமுன்சொன்ன வாலைதனைசெய்தால்,பாகுடைய நிதிகோடி திரவியமுண்டாகும் பண்பாகப்பின்னுரைத்த வாலைகற்பங்கொண்டால்போருமே,யெண்ணமறனேபான தெல்லாம் பொய்யது கற்பத்தி லின்னம்வகை சொல்வாம். ருசச

வகைசொல்வோம் கற்பத்தை நசமாதியிலேயிருந்துவாதாக கொண்டவர்கள்நரைதிரையுமாறும், திகையாமல்மூன்று கற்பகாலமட்டும் தன்பேர் ஜெகமுழுதும் புறக்கவருள் தேசராயிருப்பார், நகையாதேநந்திசொன்ன வாக்கிது தப்பாது நாதனாணைசிச மின்னம்வகை கேளாய், திரையாதிமுன் சொன்னவிடத்தலையி னிலையேதிறமாகப் பறித்துவந்து சாக்தெனவே யரையே. ருசரு

சாக்தெனவே யரைத்ததிலேநெல்லிக்காயளவு சகலகுண முன்சொன்னநீல்கண்டவாலை,கூர்ந்தரைக்கால்பணவிடையுங்கூட்டி ஆவரையில்குணமுடைய அஞ்சவகைமருந்தெடுத்துணர்த்தி,நேர்ந்துபொடியாக்கியதில் வெருகடியஞ்சேர்த்து நிறையாக பசுவின்வெண்ணை அனுபானந்தனிலே,காந்தல்நீரிழிவெடுத் தோர்க்கிருபொழுதுயேழுநாள்தான்கையாற் கொடுக்கவிற்குங் காசினியோர்க்குறையே. ருசசு

காசினியெல்லாம்பிறக்கப் பின்னுமந்த முனிக்கிங்கங்காளியிர்தப்பம்வகை சொல்வாம்நந்தி, தேசிகனேமுன்சொன்ன சாதிலிங்கயிரதம்சிறக்கரைக்களஞ்சகுழிக் கல்விலிட்டு, மாசில்லாக்கண்டங்கத்திரி பழத்தின்சாற்றல் வாகாய்முக்காற்படியுமூன்றுவட்டமாத்த னுசிநீ

ராகவிட்டுப்பமெட்டு மறைத்துகருவாவே யெடுத்து நல்லதுரை தன் க்குள்ளாக்கே. ௫௪௭

ஆக்கியக்தகுகையிலே மணத்துவளைநெய்யை அரைமட்டும்விட்டு வாய்சில்லேமூடி நோக்கியிந்தமாயேழுசீலைமண்ணுஞ்செய்து நோவு தான்பெருகில் வைத்துச்சேவல் புடமாகத், தாக்கியேதிமூட்டியதை யாறிப்பின்னெடுத்தால் கப்பாதுபடிக்கிகிற் பற்பமாயிருக்கும் தாக் கியஞ் சேர்கணபதிக்குப்பூசைதனைசெய்து வளமாகப்பிரவினை யினையுஞ்செய்யே. ௫௪௮

பூசைதனைசெய்தபின்பு யிரதபற்பந்தன்னை பூராயமாகவொன் றிலடைத்துவைத்துக்கொண்டு, காசெனவேயெழுந்திருக்கும் யிய மொரு பலந்தான் கடுகவேயுருக்கியது தெளிந்துநிற்குமுகத்தில் வாசனைசேரிரதபற்பஞ்சாவடி கொடுக்க மாக்குயர்ந்தவெள்ளியது காசினிலுமதிகம் நேசனே தப்பாது நிசவெள்ளிபற்பம்நோராகுமானி டர்க்குப்பின்னுமதிங்கேளே. ௫௪௯

பின்னுமதில்வகைகேளு மானிடர்தமக்குப பிணிவந்தால் திரி கடுகுசூரணமேபண்ணி, புன்னும்வெருகடியளவேசூரணத்தைக் கூட்டி புறவாகயிரதபற்பம் பணவிடைகால்சேர்த்து, தன்னுள்ளே யனுபானந் தேனிலாகிலுமே லாயானபனவெல்லந் தனிலேயாகிலு மே யின்னுநோயாளருக்குயேழுநாள் கொள்ளயிருபிணியுந் திரும்பி ந்தபாகத்தானறிபே. ௫௫௦

பாகந்தானறியும்வகையெப்படியோகேளு பலபிணிக்குத்தக்கா னீ யனுபானமெடுத்த, வேகஞ்சேரிரதபற்பம, பணவிடைகல் கூட்டி விதமாகயிருபொழுது யேழுநாள்கொடுக்க சாகந்தாறைவொழி ந்துசகலவியாதிகளுந்தணியுமேபற்பத்தின்னவகைகேளு, தேகந் தான்பழுப்பேறிதளர்ந்து மானிடர்கள்சிறுவாலைமதன்போலே சிறப் பதற்குமாமே ௫௫௧

மதனுகவாவென்றால் சமாதியிலே யிருந்து வளமானயிரதபற் பம் பணவிடைகால்கொள்ள, அதமீறும்பனிவுடனே கசப்பெல்லாம் நீக்கி ஆவின்பாலுடன் குருவைஅரிசோறுண்ணு, திகம்பெறவே செ ழுந்ததிரைமாறிவாலையாம் நீணிலத்தில்நூறு கற்பகாலம் வரையிரு ப்பார் சுதன்போலே யிருநூறுயானைவலு வுண்டாம்சோதிதிருவானை னாதிசொன்னபடிசெய்யே. ௫௫௨

## ஸ்ரீராமன்செந்தூரம்.

செய்யவென்றுநந்தி பின்னும்வேதமுனிதனக்கு செப்புவான் ஸ்ரீராமன்செந்தூரம்வகைதான், வைப்பகமெல்லாஞ்சுத்தி செய்த

யிரவகம் கையாக அறுபதுகளஞ்சியதுபோலே வெப்பதோர்கெந்தமும்மிடை முன்போலேகூட்டு மேலானசாதிலிங்கம் பதினஞ்சுகளஞ்சு, அய்யமெனும் நினையாதே பொன்னரிதாரத்தை அன்பாக அன்பதுகளஞ்சியதுசேரே. ௫௫௩

களஞ்சிரண்டு தனித்தபிடை மனோசிலையுங்கூட்டு கடிதானதாகத்தை யிரஞ்சுவட்டம், வளஞ்செய்திலுப்பை வெண்ணை தனிலுருக்கிச் சாய்த்துவகைபாகநாற்பது களஞ்சியதில்சேர்த்து, உளஞ்செய்த தங்கத்தில்வொருகளஞ்சியாக ஒக்கயிருநாக்கிருபத் தென்களஞ்சி யெல்லாம் தளஞ்செய்த யெருக்கம்பால் தன்னிலொருசாமம் கசடறவே யரைத்து மறுசாறு புரசிலையே. ௫௫௪

புரசிலைதம்மையுடன் செருப்படிசெம்முள்ளி புகழானமாதலையினிலையுடனே அஞ்கம், வாமுறவேகொண்டுவந்து வெவ்வேரேயிடித்துவகையாகத் தனிச்சாறுயெடுத்து வைத்துக்கொண்டு, திரமுறவே யிச்சாறுவொருசாமந் தீற்கமுற்றசொல் முறையாய் சாமமஞ்சரைத்து காமறவேபின்னு மந்தமாதளையின் பூவுங்காணமுருக்கம் பூவுங்கலந்து சமன்கூட்டே. ௫௫௫

கலந்துசமன் கூட்டியதுபிடித்ததில் சாறெடுத்து கைசோரவொரு சாமம்பின்னும் நன்றாயரைத்து புலந்தமிழற் குள்ளுணர்த்திப் பொடியாக்கி யெடுத்துப் பூகமாடகெங்காசல குப்பிதனக்குள்ளே நிலந்தெளியச்தேயேழுசீலை மண்ணுஞ்செய்து, கோணவெய்யிலிலே யுணர்த்தி லெடுத்திடத்தில், பிலந்தவராதே மண்பூசிமெழுகிட்டு வேட்தமறக் குப்பிதனைப்பேணிமருந்தடையே. ௫௫௬

மருந்தானபொடி வகைபைகுப்பியரை மட்டும்வாகாக அடைத்தந்தவாய்வலப்பக்கலில் திருந்தவேமூடியதின் மேலுமடை மண்ணைதிறமாகமூடியொரு தாளிதனையெடுத்து பொருந்தியதிற்குள்ளே நாலுவிரலக்கணந்தான்கபாடிமணலை யிட்டதன்மேல்குப்புதனை வைத்துகுருந்தமாய்ப்பின்னும்மந்த மணல்தனையேபோட்டு குப்பிகுடமரைமதில் கொட்டியடுப்பாக்கே ௫௫௭

ஒடடியதோரப்புமிட்டுத் தாளியதன்மேலே யுள்ளாகப் புதையவைத்துமுன்னவர்க்குப் பூசையிட்டியன்பாய்செய்தபின்பு தீபமொருசாமம்யெரியிடும்தன்கமலம் போலிருசாமமெரித்தால்கெட்டியாக்கடுகயெரிவொருசாமந்தனக்குப்பிபேதமுடனிப்படியே சாமமாறெறித்து

விட்டபின்பு ஆறவைத்துமறுநாளிலிங்கேயிடுமோகவயிரவனைப்பூசை
பண்ணிக்கொள்ளே. ௫௫௮

வயிரவனைப்பூசைசெய்து குப்பிதனையெடுத்து வாகாகவுடைத்
துள்ளே, பார்க்கவேசெந்தூரம் ஒயிலானமுருக்கம்பூ நிறமாகயிருக்
கும் ஒன்றிலே பத்திரமாயடைத்து வைத்துக்கொண்டு, கயிலாசகிரி
தனிலோர் களஞ்சிதனிலுருக்கி கடுகவதில்மஞ்சாடிசெந்தூரங் கொ
டுக்க பயிலறியநின்மாற்று, ஒன்பதையுங்காணும் பற்ற அறவைற்ற
செம்புக்காறு குறையாதே. ௫௫௯

குறையாதுசெந்தூரம் விளைவதியங்கண்டால் குறிப்பதுதான்
கண்டறிந்துகுறைவுசெய்யவேண்டும், நிறைபானவிளைவுசற்றேகுறை
ந்துவிட்டுதாறு 'நிறையிலேகால்மஞ்சாடிகூட்டுவது நலமாம், மறை
நாலு மாராயும்நந்திவகையுரைத்தான்வாக்கிதுதப்பாது நிஜமானுனை
வண்மை திறமான ஜெகத்தினிலே வாதியென்றுவாராமல், செகத்தி
னிலே செய்வதுநற்கருமமென்று செப்பின்தொப்பினையே. ௫௬௦

ஒப்பறியஞூதமுனிநந்தியுரைகேட்டு வுளமகிழ்ந்தங்கவனுரைப்
பான்வுப்பைநீகேட்ட, அப்புமிஞ்கடல்நுரையை பொடியாக்கி யதி
லே அவரைப்பொடிங்கி மூன்றுபடி வுப்பதனைக்கூட்டி, செப்பரிய
வெள்ளாட்டு நீரதனைவிட்டு சேர்த்தரைத்தோர் கட்டியிற்குள்ளாக்
கியேபின்பு தப்பாமல், மறுவோடுதானகவிழ்த்துமூடி தட்டெரு
வில்புடம்போட்டு வெடுப்பதுவுமாமே. ௫௬௧

### தாம்பரச்சத்தி.

எடுத்திடுபின் செம்பதனைசுற்றி செய்யும்வாறு யெப்படியென்
றெண்ணாதேநீலப்பூவின், கடுத்தாக்கணத்திகிலேயரைத்துவாங்கிகள
ங்குபோலத்திரண்ட செம்மைபொதிவுதனைசெய்து, அடுத்த யீரஞ்
சுதிர்முருக்கிப்பின்பு அதிய புங்கன்வேரரைத்து அதிலுமுன்போல்
கொடுத்துருக்க, யீரஞ்சுதிரத்திலே செம்புசுத்தியென்று சொன்ன
வகை சொல்லவும் ஒண்ணாதே. ௫௬௨

### கெந்தகசுற்றி.

சொல்லாதேகெந்தகத்தைக் கட்டும்வாறு தோகையாகையுகிரி
தனிலவன்மேறும், நல்லமயிலாகஞ்சியிலே தனையரைத்து காட்டாவி
ன்தயிர்தனிலே கலவைசெய்து, வில்லையைப்போ லொருமோட்டில்
வட்டஞ்செய்து வெளிநடுவில்காலாறுதுவாரமிட்டுக், கொல்லவேகெ
ந்தகமூமோட்டிலிட்டு குளிதனிலே ஒருகலசம்வைத்துக்காணே. ()

காணம்வகைத் தந்னைக்கல்லை செய்தகனதயில் குறையவிட்டு கலசமாயில், தோலனைத்த மக்தக ஒட்டைவைத்துகோணமல் மறு ஒம் கவிழ்த்துமூடி, மேலபடிசீலையதுவனுவாகச்செய்துவேகமுடன் குழிவெட்டிப் புடத்தைப்போடு, பூணவைத்துமிப்படியி ரஞ்சவட்டம் புடத்திலிட்டுகெட்டிய செந்தகத்தைதச்சேரே. ருசுச

சேரப்பாரகமஞ்சு களஞ்சகொண்டு செப்பெனவே யின்னை மொன்றுசெய்தபின்பு, பாரப்பாமரிதாரஞ்சா திலிங்கம்பச்சைகிறமா கவுத்தநுருசடவேவயிரதம், காரப்பாகட்டிவைத்தகெந்தகத்தைகூட் டிதண்டுகொள்ளுவ்வகைதனக்குஒவ்வொருகளஞ்சி,சாரப்பாகளஞ்சி குளிக்கல்லிலேயிட்டுதளவாய் நீர்விட்டரைத்துகுழம்பாய்க்கூட்டே.

கூட்டியக்குழம்பதனைக்கின்னமதிலுள்ளுக்குவித்த புறந்தனி லுமரைசாந்துபோல்பூசி, நாட்டியல்பாய்கட்டிவைத்த மூன்றுபடி யுப்பைபகாகவடம்போல குளிர்ந்தசட்டிக்குள்ளிட்டு, விட்டிமையாய் சட்டியதின்மேலாகக்கின்னம் விளும்புசற்றே கண்காண வெளிதவி வில் பதித்துநாட்டிமையாய்க், கின்னத்தின் விளும்புதான் மறைச் சார்வாக சீலைமண் ஐந்துசெய்தடுப்பிலேற்றே. ருசுசு

அடுப்பிலேவைத்தபின்பு ஐங்கரர்க்குப்பூசை அன்பாகச் செய் துகொண்டு, கலத்தேக்கினிலையைக் கடுகவேயிடித்தநிலேகவாச்சார மிட்டுகசப்பில்லாத தனிச்சாறு மூன்றுபடியெடுத்து, தொடுப்பாக வனல்மூட்டி எரிபிமெல்லேனா சுறுக்காகப்படிமூன்றுஞ்சிலவறுந்த பின்பு, மெடுப்பாதயெரியிடுநீ பதினஞ்சநாழிகைக்கு நன்றாகஆறிய பின் னெடுத்திடச்செந்தூரம். ருசுஎ

செந்தூரந்தனையெடுத்துமுன்னுகவைத்து சிவகாமிபூசையுமற் சனையுஞ்செய்து, அந்தரங்கமாகவொன்றி லடைத்துவைத்து கொ ண்டு யறவைத்துவெள்ளிமேரூபணவிடையுங்கூட்டி, சிந்தனையாய் சுற்றிசெய்த செம்பினிலே மூன்றுசேர்த்தொருகளஞ்சி யொன்றுப் யுருக்கு முன்னெடுத்துவைத்தனையாய்ப், பின்னுமதையுருக்கி கிறந்தெ ளிந்தால் வைத்திருக்குஞ்செந்தூரமஞ்சாடிசேரே. ருசுஅ

துருசுசெம்பு.

மஞ்சாடிசேரு இடமாத்தேதம்மையுக்காணும்மாதவத்தோன்றுந முனிவாகவியம்பெரய்யாது, அஞ்சாதேபரமகுருஆணையுண்டு நிசமே அறிவதபின துருசுசெம்பாகும்வகைகேளு,மிஞ்சவேவெண்காரந்துரி சியொன்றுப்கூட்டி வெண்ணைதனிலே யரைத்து குடக்கரியில் வை

த்திஞ்சவே யுருக்க வந்தபூரிசியிலேபாதிசுற்றியுள்ளசெம்பிருக்குஞ் சொல்ல யின்னங்கேளே. ௫௬௯

கேளப்பா இன்னமைந்தனுகமதில்வகையேகோதறவேஇலுப் பெண்ணைதனை வைத்துக்கொண்டுனொப்ப இருக்குமந்தனுகத்தைத யுருக்கினுலுவட்டம வெண்ணையிலே சாய்ந்தபின்பெடுத்தால் தூள ப்பாலேகடந்தனுக மெழுகதுபோல சுத்தியாயிருக்குமது திணஞ் சுகளஞ்சால் ஆளப்பாவில்லையின் காய்குடிசைகைமுடியுமாய்அளவாக செய்பிரத மிடைபொப்பாவடையே. ௫௭௦

அடைத்தியரூபத்திலொன்று தங்கந்தான்கூட்டி யதற்கிணங்க குகைதனையுண்டாக்கி யந்தகுகைக்குள், உடைத்தகல்லுப்பிந்துப்பு நவாச்சாறந்தானும் முள்ளுறவேமுன்னிடையுனு சமனுகக்கொண்டுப டைமுந்தபெலுமிச்சம்பழச்சாற்றுவகைத்து பூணவேயொருபங்குகு கைக்குள்ளே பூசி சடைத்திடசந்தேகுகையை வெய்யலிலேவைத்து தப்பாமலொருபங்கு வேறுவைத்துணர்த்தே. ௫௭௧

உணர்த்தியெடுத்த மருந்தைப்பொடி யாக்கிகுகைக்குள் ஒரு விரலின் கனமாகபொதிபாதியிட்டு மிணைக்கமுறக்குகுடுக்கைதனைப் பொடிமீதில்வைத்துயிரை யளவுகண்மேலும் பொடிதனையே பரப்பி வணக்கமுடன்மண்சில்லால் குகைவாயைமூடிவகை, பாக்குகையேசி லைமண்ணுஞ்செய்து புணக்காதே யுணர்த்தி வெடித்தயிடந்தனக்கு ப்பின்னும்மண்பூசியப் புடத்தினிடஞ்செய்யே. ௫௭௨

இடமாக ஒருமுழத்தி லத்தனிவாக்கி நீளயெத்தாதே குழிநெ டுத்துப்பாதிமட்டும் பெருவையிடமாக அடக்கியதின் மேலக்குகை யைவைத்து பாங்காக குழிமறைய மேலும் யெருப்பொதிந்து, அட வாகயேழுநாள்வரைக்கும் மாறுதபீடத்திலிட்டு ஆத்திநீயெடுத்தால், திடமாகச்செந்தூரமிருக்கு மதையெடுத்து தீர்க்கமுள்ளவயிரவனைபூ சனையுஞ்செய்யே. ௫௭௩

தீர்க்கமுள்ள வயிரவனைப் பூசைசெய்தபின்பு செந்தூரமதனை யன்பாய்சிமிளில்வைத்துக்கொண்டு, ஆரமுள்ள வொருகளஞ்சிவெ ன்னிதனையுருக்கியது நிறமாய்த்தெளிவினிலே பணவிடைசெந்தூரம் வேகமாய்க்கொடுக்கமாத்தெட்டரையுங்காணும் ஈசனுருணையிதுதப் பாதுண்டாகும் நேத்தமென்று நினையாதேகுருமுனியுரைத்தான்நிச மாகவுண்டாகுமின்னவகை சொல்லே. ௫௭௪

## பாம்பாட்டி சித்தர் உற்பவம்.

சொல்லவேயின்னமொரு மார்க்கங்கேளு சொரூபமென்றபாம் பாட்டிசித்தனப்பா, வெல்லவேவெகுகாலம் வனந்தரத்தில் விநோத முன்பு சித்துமிக வாடிருந்தார், கொல்லவே அரவங்கள் தான்பிடித்து கொற்றவனார்சமூகமதிலே சன்றேயேகி, வேல்லவே அரவமதைநயாட் டியேதான் மேன்மையுடன் பரிசுமிகப்பெற்றார்தாமே. ௫எ௫

பெற்றாரேசிலகாலம்மலைகள்மீதுபேருலகில்கீர்த்தியுடன்வாழ்ந் திருந்தார், புற்றருகில்சென்றுமல்லோ சித்தர்தாமும் புனிதமுள்ள நவரத்தினபாம்புதன்னை, வெற்றியுடன்தான்பிடிக்கப்போகும்போ துவேதாந்தச் சட்டமுனியங்கிருந்தார், கற்றியேபாம்பாட்டி சித்தர் தாமும்சொரூபமுள்ள சித்தனைக்கண்டார்தாமே. ௫எ௬

கண்டாரேகைலாசசட்டர்தன்னை கருத்தினிலேயவர்பாதந்தொ ழுகவென்று, தெண்டமுடன் அடிபணிந்து சிரங்குவித்து தெளிவுட னேயஞ்சலிகள் மிகவுஞ்செய்து பண்டுடனேகாயாதிவர்க்கங்கொண் டுபோங்கானபாலுடனேபழமுங்கொண்டு, தண்டுளவமாலையணிதுள சிகொண்டுசர்ப்பனையா யர்ச்சித்துதமைகண்டார்தாமே. ௫எஎ

தாமானகாதாந்தநீத்துதம்மை தகமையுடன்பாம்பாட்டிக்கண் டபோது, நாமானகைலாச சட்டநாதர்நலமுடனே பாம்பாட்டித்த னைநோக்கி, பூமானமானதொரு சித்தைக்கேளும் புகழுடனேகாட் டகத்திலிருந்தீர்காலம், காமானகடியதொரு விஷத்தைத்தானுமகரு மானமில்லாமல் கற்றீர்தாமே. ௫எ௮

கற்றீரேயுககோடி காலந்தானும் கருத்தினிலேபொய்மெய்கள் காணுமற்றான், பெற்றீரேகாட்டகத்தில் திரிந்துகொண்டு போரான பாம்புகளைமடக்கியாட்டி, சுற்றிலுமேஞானோபதேசப்பாலைசொரூப முடன்சித்துதமைக்காணுமற்றான், பற்றாவேசமுசார வாழ்க்கைதன் னில்பாருலகில்சிலகாலமிருந்திட்டீரே. ௫எ௯

இருந்துமேஞானவாளுகவேதான் வெழிலானவுபதேசந் தன் னைநோக்க, பொருந்துமேவுபதேசம்பெற்றீரானல் பூதலத்தில்வெ குகாலமிருக்கலாகும், அருந்தியேஞானப்பால் தானுமுன்னேவப்பனே வுபதேசம்பெற்றுகொள்ள, வருந்தியேகைலாசசட்டநாதர் திறமுட னேவாக்களித்தார் பாம்பாட்டிக்கே. ௫௮௦

ஆட்டவென்றால் சித்தருமே ஞானம்பெற்று அவனியிலேவெகு
காலமிருந்தாரப்பா, கூட்டமுடன் பாம்பாட்டி சித்தர்தாமும் குவல
யத்தில்மாந்தரிருசிஷனுகி, காட்டமுடன்தாமறிந்த ஞானமெல்லாம்
நன்மையுடன்சிஷருக்கு வுபதேசித்தார், வாட்டமுடன்சிஷருக்கு
வுபதேசித்துவாகாச்சமாதியிலே யடைந்தார்பாரே. ௫௮௩

பாரேதான்சமாதியிலே யடைந்தபின்பு பாலகனேசிலகால மங்
கிருந்து, நேரேதான் திருஷ்டாந்திர மிகவுங்காட்டி நேர்மையுடன்
கற்பகாலமிருப்பே னென்றும், ஊரேதான் குடிப்படைகளெல்லாரு
ந்தான் வுத்தமர்க்குதொண்டுமிக வதிகஞ்செய்து, சீரேதான்சமாதி
யிடம் பூசைமார்க்கம் தெளிவாகச்செய்தார்கள் கோடியாமே. ()

கோடியாம் பின்னமொருமார்க்கங்கேளு கூறுகிறேன்பாம்பா
ட்டி மகிமைதன்னை, நீடியேபாம்பாட்டி நாதர்தானும் நெடுங்காலஞ்
சமாதியிலேயிருந்துபின்னும், நாடியேபூமிதனில் வெளியில்வந்து நா
தாந்தக் கூத்துகளுமிகவுமாடி, தேடியேவரைகோடி காலமப்பாதேச
த்தி லிருந்தாரேசித்துதாமே. ௫௮௫

தாமானபாம்பாட்டி சித்தர்தாமும் தாரணியில்சாகாம லிருந்
தாரோதான், நாமேதானறிந்தவரை யின்னஞ்சொல்வோம் நாதாந்
தசித்தருவும் மடிந்துபோனார், போமேதான்சித்தருவும் தேகந்த
ன்னை பெகங்கமுடன்சிலகாலம் மண்ணிற்சென்று, தூமானமாகவே
தான்வெளியில்வந்து துப்புறவாய்தேகமதை மறந்திட்டாரே. ()

மறந்திட்டார்தேகமது நிலைநில்லாது மண்டலத்திலாரேனு மிரு
ந்ததில்லை, துறந்திட்டார் நாதர்முனிசித்துதாமும் துறையான வுல
குதனில்மாண்டுபோனார், யுறந்திட்ட சித்தர்முனி ரிஷிகள்யாவும்
பேருலகில்மடிந்துமல்லோ மண்ணைப்போனார், இறந்துமேலோக
மெல்லாம் மடிந்தார்கண்டீர் பெழிலாகயிருந்தவர்களில்லைகாணே. ()

சுப்பிரமணியருற்பவம்.

தானுனவின்னமொரு கருமானங்கேள் தாரணியில்மானிடர்க
ளறியவென்று, கோனுனபெனதையர் காலாங்கிநாதர் கொற்றவனுர்
குருவினதுகடாட்சத்தாலே, தேனுனவடிவேலர் சுப்பராயர் தேசத்
திற் பிறந்ததோர் வண்மையாவும், பானுனசாத்திர யுத்தம்பார்த்து
பகருகிறேன்மாணுக்கன் பிழைக்கவென்று. ௫௮௮

பிழைக்கவேவடிவேலர் தம்மக்தானும் போனபூவுலகில்தேவ
னென்றும், வழக்கமுடன்சாத்திரங்கள் யிதிகாசங்கள் வளமாகப்
பாடிவைத்தார் வினயம்பாவும், மூழக்கமுடன்வடிவேலர் முருகன்
தானும் முற்பிறப்பில் பஞ்சநாக்கியனாக, தழக்கமுடன்பிறந்த தாய்
சாத்திரங்கள் தாரணியில் கவிவாணர்கட்டினாரே. ௫௮௭

கட்டினார்வடிவேலர் முருகன்றானும் காசினியிலருமுக சொரூ
பமாகி, கிட்டமுடன் பள்ளியிலேயோதும்போது தீரமுட னரினமே
வென்றுகூறி, இட்டமுடன்செல்லெனவேபிரம்மன்றானும்வெழிலா
னவடிவேலர்சொல்லேனென்றார், சட்டமுடன் அரிக்குத்தாத்பரியஞ்
சொன்னால்சாங்கமுடன் நானுரைப்பேன்சத்தியவானே. ௫௮௮

சத்தியமாய்ச் சொல்லுகையில் இந்திரன்றானும் சந்தோஷமாக
வல்லோதாமழைத்து, வெத்தியுடனசுரர்களைத்தான்செயிக்க விருப்
பமுடன் தானழைத்து சென்றபோது, புத்தியுடன்பகவானை நமஸ்க
ரித்து யுகமாகவரக்கர்களைச் சங்கரித்து, நித்தியமுஞ் சூரசங்காரனா
கனிலத்தில்வெகுகால மிருந்திட்டாரே. ௫௮௯

இருந்திட்டார் வள்ளிதனை சிறையெடுத்து யெழிலாகவவனித
னில்யிருக்காரென்றும், பொருந்தவே வுலகுதனில்சுவாமியாக பொங்
கமுடன்வீற்றிருக்கார் சதாகாலந்தான், வருந்திபேகோடிமனு பேர்
களெல்லாம்வையகத்தில் மகாதேவ னென்றுசொல்லி, திருந்தியே
நமஸ்கரித்து தலைகுனிந்து திகழுடனேகோடியுக மிருந்தார்தாமே ()

தாமனசாத்திரங்கள் சொன்னதெல்லாம் தகைமையுடன் பொ
ய்யாச்சுபொன்னுலோகம், நாமேதான்சொன்னபடி வடிவேலர்தானு
ம்காட்டிலேயிருந்தாரோ யில்லைகண்டீர், வேமேதான்பூலோகம் தன்
னைவிட்டுவிடுபட்டுத்தேகமதுமண்ணாய்ப்போச்சு, போமேதான்மண்
கூறு மண்ணாய்ப்போச்சு பூவுலகிலிருந்தாராம் காணோம்பாரே. ()

## கெந்தகத் தயிலம்.

உண்டாகுங்கெந்தகத் தயிலவகைகேளுவுன்னியஞானியண்டம்
பத்துதானெடுத்து, பிரண்டாதிவெள்ளற்றிலிட்டாவியென்றுவெண்
கருவைநீக்கிமஞ்சள் கருவாகவெடுத்து, தண்டாதசட்டியிலே யிட்
டடுப்பிலேற்றித் தனிவாகவெரிமூட்டி தாவியினாலிருக்கப், பண்டாதி
யருணாலைவருந்தயிலந்தன்னை பண்பாகவெடுக்கபின்னை கெந்தகத்தை
வாங்கே. ௫௯௨

கெந்தகத்தில்மூன் றுபங்கில்பசுவின்பாலில் கெந்தகம்விடமூன்
போலசுத்திசெய்தெடுத்து,துஞ்சாதேபொடியாக்கிசீலைதனில்பறப்பி
திரியாகத்திரித்து அண்டத்தயிலத்தைவைத்து, பந்தமாயனல்மூட்டி
தலைகீழாய்பிடித்து பாத்திரத்தைகீழ்வைத்துப்,பாங்காகயேந்திவந்து
சேர்ந்து தயிலத்தையொன்றிலேயடைத்தால் வாகாகப்பின்னுமதில்
வகைபகருவாமே. ௫௬௩

கருவாகவிந்தவகைப்பார்த்தெடுத்த பேர்களகங்கார நிறத்துடனே
மாற்றுகுறைந்திருந்துதானால், வுருவாகவேயிந்தத் தயிலமதில்பொ
ன்னைவுள்ளாக்கி யெதுவைத்து ஒருதிரந்தானுருக்கத், திருவாகநிறம்
பசுமையாகமாத்தேறும்,செப்பினும்பின்னுமதில்செப்பவகைகேளு
குருவானசொரிசிறந்தேனுயாளர்தனக்கு துளசியிலைத்தனில்கொடு
த்துதொகுத்துநீபாரே. ௫௬௪

தொகுத்துபோற்கவென்றல்வங்கவகைதனிலே சித்தியுள்ளசெ
ந்தூரம்சொல்வேன்கேளு, வருத்தபடிவிருஷம்நாத்திருபதுவும்செ
ன்று வளமாகநிற்குமந்தவேம்பினிடபழத்தை, வெகுத்தமுடன்கொ
ண்டுவந்துயிடித்ததில்சாறெடுத்து வெறுப்பில்லாதேவிரும்பி வைத்
துக்கொண்டு, பகுத்ததிலேபின்னுமொருபாத்திரத்தில்வாங்கி பாங்
காககருத்தவங்கமுருக்கியிதில்ச்சாயே. ௫௬௫

வுருக்கியந்தவங்கத்தைமூவேழுவட்டம் ஒன்றானசாத்திலேவ
ரைத்தபின்புயெடுத்து, தருக்கிசைந்தவோட்டில்வைத்து தாளகமுங்
கூட்டிதனித்தடுப்பிலேத்தியேனுயுருவிக்கப்பால், நெருக்கியதைவறு
த்துவங்கம் நீருக்கிப்பின்புநீள்குமரிச்சாற்றிலே,யொருசாமமரைத்து
திரிக்கிசைந்தகுகைக்குளிட்டு யெருவில்வைத்துசேவலின்புடமாகனு
லிவிடலாமே. ௫௬௬

சேவலின்புடமாகத்தினமும் ரெண்டுவட்டந்திறமாகச் சாற்றி
லரைத்திருவதனையிலே,யேவலுருபுடம் நாற்பத்தொன்னுகுறை
யாமல் யிடவேசெந்தூரம்முருக்கம்பூநிறமாம், ஆவலுறுவெள்ளிதனை
யொருகளஞ்சியுருக்கி அதுதெளிவில்பணவிடைசெந்தூரமதை, கொ
டுக்கநீவலுமையாகமாற்றேழரையுங்காணும் நிமலனார்திருவாணைநிச
ங்கவரையிதுவே. ௫௬௭

இதுதனிலுஞ்சுருக்கான இன்னமொருவகைகேளுஇன்னிலத்தி
லாதிமருந்தாவரையின்பட்டை, சதிராகக்கொண்டுவந்துவுணத்திபொ

ருபானைதனில்விட்டு, பாதாள அஞ்சனத்தில்தயிலமதுவாங்கி யிறக்கிய
பதையிம்மிவைத்துக்கொண்டு, மேலானகோழிமுட்டை வெண்கரு
வையதிலேமதுவாக, வுரைத்ததையுமாட்டிசேர்த்துவசமாகச்செய்த
பின்புஅருதாரம்வாங்கே. ௫௯௮

தாளசெந்தூரம்.

வாங்கியந்த அரிதாரக்கட்டிதனில்தயிலம் வாகாகவேயுரைத்து
வெய்யிலிலேவைத்தால். பாங்கானசெந்தூரமாகுமதையெடுத்துப்பக
மையாயாறவைத்த, வெள்ளிவொருகளச்சியேயங்கவே யுருக்கியதில்
பணவிடைசெந்தூரம், யேற்கையாய்கொடுக்கமாற்றேழு குறையாது
நீங்காதே, ருதமுனியுரைத்தவகையெல்லாம் நிசமாகுங்கண்டறிந்
தேறிநீபாரே. ௫௯௯

அனுமார் உற்பவம்.

பாரேதானின்னமொருகருமானங்கேள் பாலகனேயாநன்மைந்
தாசொல்வேனப்பா, நேரேதான் அனுமாரினுற்பவத்தை கோரானமா
ணுக்களறியவென்று [illegible]சிறப்பா
னநூலெல்லாஞ்சொன்னார்கண்டீர், கூறேதான்கவிவாண ரெல்லாங்
கூடி குவலயத்தில்கட்டுரைதானுரைத்தார்தானே. ௬00

உரைத்தாரேமுன்னோர்சொல்நூல்களெல்லாம் வுத்தமர்கள்பா
டிவிட்டார்அனுமாரைத்தான், நினைத்தாரேதேவனென்றும கர்த்த
னென்றும் நிலையாணயிதிகாசபுராணமெல்லாம், பகைத்தாரேசிரஞ்சீ
விப்பட்டமென்றும் பாருலகில்வரம்பெற்றஆஞ்சனென்றும், வரைத்
தாரேமிருகமென்றகூட்டந்தன்னை வலுவானமிருகமென்றும்வசனித்
தாரே. ௬0௧

வசனித்தார்மிருகமென்ற அனுமார்தானும்வன்மையுள்ளவானர
மாங்கூட்டம்தன்னில், புசவீரபராக்கிரமவீரனான புனிதமுள்ள ஆஞ்ச
னேயஜாதிகண்டீர், தசகோடிவானரமாய் ஆஞ்சநேயன் தாரணியில்
தேவனாயிருப்பானால், குசமுடையஸ்ரீராமர்பக்கல்நின்று குவலயத்
தில்மிகயுத்தஞ்செய்தார்தானே. ௬0௨

தானானஸ்ரீராமர்க்குதவியாக தாரணியில்வெகுயுத்தஞ்செய்து
மென்ன, கோனானஸ்ரீராமர்மாண்டுபோனார் குவலயத்தில்வானரங்க
ளெல்லாம்மாண்டார், பானானபாருலகிலாஞ்சனேயர் படைகூட்டந்
தன்னுடனேமன்னாய்ப்போனார், தேனானபெண்ணையர்காலாங்கிநாதர்
தெளிவுடனேயெந்தனுக்கு வுரைத்தார்தாமே. ௬0௩

வுரைத்தாரேகாலாங்கிசெனிற்படிக்கி வுத்தமனேஅடியேனுந்தான்
வணங்கி, வரைக்கமலம்பதாம்புயத்தைக்கரத்தால்தொட்டுவாகுடனே

யா னுரைப்பேனின்னங்கேளீர், மூறைக்கவேராமருடாஞ்சநேயர் மூதுலகில்பிறந்ததொருகதைமெய்யாச்சு, திரைக்கவேயுலகுதனிலிருந்தாரார்தான் இரண்டலேமண்கூறுப்போனார்தாமே. ௬௦௪

போனரேசாஸ்திரங்கள்புராணந்தன்னில் புகழான வனுமாரைக்கற்பகாலம், வானோர்கள்முதலானபேர்களெல்லாம் வையகத்திலிறஞ்சிவிப்பட்டம்பெற்றுன்வனேதான்விணுகமாண்டாளென்றுயெழிலானவார்த்தைதன்னைநம்பாமற்றுன், காணுதேகூர்முனிரிஷிகூட்டங்கள் கட்டுரைத்தவாக்கியமும்பொய்யாய்ப்போச்சே. ௬௦௫

பொய்யாகப்பிடாரனவன் பாம்புதன்னை பொய்க்கூடை... வைத்தகதையைப்போல, மெய்யாகஸ்ரீராமர் அனுமார்தன்னை ... மையுடன்கைப்பழக்கஞ்செய்திருப்பார், கையுடனே ஆயுதங்கள்தடிகொடுத்து காசினியில்யுத்தமதுபழக்கஞ்செய்து. ப...வேவானரத்தைவசமதாக்கி பாருலகில்பழக்கமதுசெய்தார்காணே. ௬௦௬

காணவேயுலகமதில்யிருந்தோருண்டு காசினியிலொருவருந்தானிருந்ததில்லை, பூணவேபூதத்தில்பொய்யேவாழ்வு புகழானமெய்வாழ்வுயாதொன்றில்லை, தோணவேதொல்லுலகி லெல்லாமாண்டார் தோற்றமுடன்தேகமதுமண்ணுய்ப்போச்சு, வேணவேகாயாதிகற்பங்கொண்டும் விண்ணுலகில்மடிந்ததுவும்மெய்யுமாச்சே. ௬௦௭

ஆச்சப்பாகாணவென்று லொன்றுமில்லை அப்பனேகோடானகோடிசெம்பொன், மூச்சப்பாதேகமதைவருத்திபல்லோ முனையானகோடிபொருள்படைத்துமென்ன, பேச்சப்பாபேசுமுன்னேவாசியோகம் பேரானமகத்துவங்கள்கொண்டுமென்ன, பாச்சனுடன்கூடிவிட்டுக்கூடிபாய்ந்து பாருலகிலிருந்தானும்வொன்றுங்காணே. ௬௦௮

ஒன்றுமேகாணுமனுடலாகி தன்னை வொழுக்கமுடன்கருவிகாணுதிபெல்லாம்; சென்றுமேகவத்தவாரங்களெல்லாம் சேகாமாய்த்தானடைத்துயிருந்துமென்ன, கன்றுதான்பால்தேடித்தாயைக்கண்டகதையைப்போல்வாச்சுதுபாருள்வாழ்வு, வென்றுமேயுபவாசமிருந்துமென்ன வேதாந்தக்கற்பமதைக்கொண்டார்பாரே. ௬௦௯

கொண்டுமேகாயாதிகற்பந்தன்னை குவலயத்தில்கோடிவரையுண்டுமென்ன, பண்டாளமேனியதுபாழாய்ப்போகும் பாருலகிலுயிர்தனைபேகாண்பதில்லை, அண்டர்முனிராட்சதர்களெவரானுலும் அவனிதனிலிருந்தவநம்மெய்யோசொல்வீர், கண்டபடிசாஸ்திரங்கள்மெய்போல்கூறி காசினியில்லொருவருந்தாவில்லைதானே. ௬௧0

சிவவாக்கியருற்பவம்.

யில்லையேயின்னமொருமார்க்கங்கேளு யெழிலானசினபதிப்பக் கந்தன்னில், கொள்ளவேகோடானகோடிசூழ்ந்த கொடுத்தவசிதில்லை வனம்அங்கொன்றுண்டு, எல்லோகர்சுற்றிலுமேகாணுர்தாமும் யெழிலானவேரடைகளும்நதிகளுண்டு, புல்லவேஐராவதங்கள்போல புகழானமலையுண்டுகுகைகளுண்டே. ௬௧௧

உண்டானமல்லிகார்ச்சுனையொன்றுண்டு வுத்தமனேரிஷிக்கூட்டம்முனிவர்சித்தர், திண்டானகாணுமத்திபத்தில் திறளானவாய்க்கால்மண்டபந்தான் வண்டுடனேகூட்டங்கள்கலந்துமெத்த வாகானமண்டபத்தைசுற்றியேதான், திண்டுபோல்குளவிகளு மோடிவந்து திரளானகூட்டமதைசேர்க்கொண்ணுதெ. ௬௧௨

ஒண்ணுதுரிஷிகூட்டம்முனிகள்கூட்டம் வுத்தமனுர்சிவவாக்கியசித்தர்பக்கல், கண்ணவிந்தபேர்களுக்கோருண்டல் போலகைக்குதவியாய்யிருந்தார்சித்தரெல்லாம், நண்ணமுடன்ஆயக்கால்பக்கம்நின்று நளினமுடன்சிவவாக்கியசித்தருக்கு, வண்ணமுடன் சோடவுபசாரமெத்தவாகுடனேசெய்துமல்லோயிருந்தார்பாரே. ௬௧௩

இருந்தாரேவெகுகோடிகாலமப்பா யெழிலாகச்சிவவாக்கியசித்துதாமும், பொருந்தமுடன்சிஷவர்க்கமார்க்கத்தோர்க்கு பொங்கமுடன்றுனுரைத்தவதிசயங்கேள், திருந்தமுடன்தேகமது கற்றாணுகும் தெளிவானசித்தர்முனிகேளுமென்று, குருந்தமரம்தன்னருகில்பக்கல் சென்றுகூறினுர்வுபதேசங்கூறினுரே. ௬௧௪

கூறினுர்சிலகாலஞ்சமாதிதன்னில் குவலயத்தையான்மறந்துயிருப்பேனென்று, தேறியதோர்சித்தர்முனிரிஷிகளுக்கு தேற்றமுடன் கூறியதோர்வண்ணங்கேளீர், மீறியதோர்முன்றுயுகம்யிருப்பேனென்றுமேன்மையுடன்தானுரைத்துசமாதிதன்னில், சீறியேதானிருந்து சித்தர்தாமும் சிறப்புடனேதாமிருந்தார்கோடியாமே. ௬௧௫

கோடியாம்யிருகோடிவெகுநாள்காலம் கொற்றவனுர்சமாதிதனிவிருந்ததுண்டு, நீடியேசிலகாலமிருக்துமேதான் நீதியுடன்பூமிதனில் எழுந்ததுண்டு, தேடியேஅனேகம்பேர்சித்துதாமும் தெளிவானசிவவாக்கியசித்துதம்மை, கூடியேகூட்டமிட்டுவதிகஞ்சொல்லி குவலயத்தில்சித்தரெல்லாம்மதிப்பிட்டாரே. ௬௧௬

மதிக்கவேசிவவாக்கிய சித்துதாமும்மார்க்க முடன்மண்மீதிலெ ழுந்தபின்பு, துதிக்கவேபலபேரும் அஞ்சலித்து துறையுடனேமூன் று முறைசமாதிசென்று, கதிக்கவேயவர்மனது துடிக்கக்கூறி காசி வியில்சமாதிதன்னில் பின்னுஞ்சென்றார், பதிக்கவேசிலகாலஞ்சமா திருந்துபட்ச முடன்பின்னுமல்லோ வெழுந்தார்பாரே. சுகஎ

பாரேதான்சிவவாக்கிய சித்துதாமும் பாருலகில்சித்தனைப்பிற ந்துமென்ன, சீரேதான்சமாதிதனில்போயுமென்ன சிறப்புடனேயங் கிருந்துவந்துமென்ன, நேரேதான்காயாதி கற்பங்கொண்டு நேர்மை யுடன்பூவுலகிலிருந்துமென்ன, தீரேதான்சித்தர்முனிகூட்டம்யாவும் திறமானசித்தனென்று சொன்னார்பாரே. சுகஅ

சொன்னாரேசிவவாக்கியர்வல்லபம் போல்தொல்லுலகிலாரே னு மிருந்ததுண்டோ, மன்னாகேள் சிவவாக்கியசித்துதம்மைமானிலத்தி ல்மதிப்பிட்டார்ரிஷிகள்தாமும், பன்னவேசிவவாக்கிய நாதர்தம்மை பட்சமுடனஞ்சலிகள் மிகவும்செய்தார், என்னவேநாதாந்தசித்துதா மும்எழிலான பூமிதன்னில்பிறந்தார்பாரே சுகக

இறந்தாரேகற்பாதி கற்பங்கொண்ட யெழிலான்சித்துமுனி நா தர்தாமும், மறந்தாரேதன்தேக மண்ணிலப்பாமானிலத்திலவர்தேக ம்மண்ணாய்ப்போச்சு, துறந்தாரேசகல கலைக்கியான மெல்லாம்துப் புரவாய்தானறிந்து மாண்டார்தாமும், சிறந்ததொருசிவவாக்கிய தே கந்தானும்சீரழிந்துமண் தனிலேமக்கலாச்சே. சுஉ௦

ஆச்சப்பாதேகமதுமண்ணாய்ப்போச்சு, அவனியிலேயிருந்தவர் களாருமில்லை, பாச்சலுடன்பிரிதீவுதான்மண்ணாய்ப்போச்சு, பாங்கா னதேகமதுகிலேகில்லாது, மாச்சலென்றவாழ் வதுவுமிவ்வளவேயாச் சுமானிலத்தில்வாத்திமமும் பிரிந்துபோச்சு, ஏச்சலென்றபிரிதீவா மண்கூறுச்சுயெல்லாரு மிப்படியேபோகலாச்சே. சுஉக

யூகிமுனிவர் உற்பவம்.

போகலாமின்ன மொருமார்க்கம்பாரு பூதலத்தில்வதிசயங்க ளி ன்னஞ்சொல்வேன், வேகமுடன்சித்தர்களில்வொருவனப்பா வுலகு தனிலிருந்தாரே யூகிதாமும், சோகமுடன்சமுசார வாழ்க்கைதன்னி ல் செருக்குடனேவெகு காலமிருந்தாரப்பா, சாகமுடன்சம்தக்கினி முனிவருக்கும் சார்பானதிரணக்கிய முனிவர்தாமே. சுஉஉ

தாமானமுனிவருக்கு குருவேயாகும்தண்மையுள்ளகுருவினது கீர்த்திதன்னை, கோமானுங்காலாங்கி நாதர்தாமும்செப்பெனவே யடி

யேனுக் குரைத்ததுண்டு, காமானமாகவல்லோ வறிந்தமட்டும் - நா தாக்கள்வரலாறை நாமுரைப்போம், நிமானமில்லாமல் யடியேன்று னும் திறமுடனேசொல்லு கிறேன்பண்பாய்க் கேளே. ௫௨௩

பண்பானயூகிமுனி யென்போர்தாமும் பாருலகில்தட்சணப்பிர வேசத்தில், மண்பானமலைவளம் சுத்தும்போது கண்டாரேவராகவி ரியென்றமேரு, இன்பானமலைவளத்தை சுற்றியேதான்திறமுடன்நடு மத்திகாட தன்னில், வன்பானகுத்துக்கல் கண்டாரங்கேவாகுடனே வதிசயமொன் றிருக்கலாச்சே. ௫௨௪

இருந்தவொருவதிசயத்தைக்கண்டாரப்பா வெழிலானயூகிமுனி சித்தர்தாமும், பொருந்தவேமலை யோரம்சமாதிகண்டு பொங்கமுட ன்றுனிருக்கும் காலந்தன்னில், இருந்தமுடன்சமாதிபுரம சத்தம்கே ட்டுத்திடுக்கிட்டுமெய் மறந்துநிற்கும்போது, அருந்துதிபோல் சோ திபொன்று காணலாச்சு அப்போதுசித்தொளிவைக்கண்டார்பாரே.

கண்டாரேசித்தொளிவைக் கண்டபோது கண்காணுசோதிமய மென்னசொல்வோம், அண்டசராசரங்க ளெல்லாம் இடுஇடுத்து அங் ஙனவேவொளிதனிலே மயங்கிப்போனர், தெண்டமுடன் கண்திறந் துபார்க்கும்போது தெளிவான ஸ்ரீசம்பாரனையுமப்பா, பண்டுமிகப்பி ரகாயந்தான் பாரினிலேதோற்றமது காணலாச்சே. ௫௨௬

காணவேயூகிமுனிசித்துபாலன் கண்டாரே ஸ்ரீசம்பாரனையர்த ன்னை, தோணவேயவர் பாதந்தொட்டுமேதான் தொல்லுலகில்கீர்த்தியு டனடிபணிந்து, வேணதொருவர மெனக்குத்தருக வென்றுவிருப்ப முட னஞ்சலிகள் செய்துகொண்டார், பூணவேரிஷியாருமுனியாருக் குப்புகழாக ஞானேபதேசஞ்செய்தார்பாரே. ௫௨௭

பாரேதான்ஞானேபதேசம்பெற்றுப்பாலகனும்சமாதிக்குமுன்ன தாக, கூரேதான்சிலகாலமிருக்கவென்று கொற்றவனும் வுறுதியது மிகவுமாகி, தேரேதான்லட்சணங்கள்விதியேற்பாடுதெளிவானமுறை யோடுசமாதிக்கேக, சேரேதான்யூகி முனிசித்துதாமும்நெடுங்கால சமாதிதனிலிருந்தார் தாமே. ௫௨௮

## யூகிமுனி திருஷ்டாந்தம்.

இருக்கவேயூகிமுனி சிலதுகாலம்யெண்ணமுற்றுச் சமாதிக்குப் போகும்போது, உருக்கவென்ற கல்லின் மேல்வரைந்தருபம்வுத்தம னேசொல்லுகிறேன் மைந்தாகேளு, பொருக்கவேசிலகாலம் சமாதி ருந்துபுவிமீதில்வரும்போதுவடையாளந்தான், கருக்கலாய்ப்பாவிரவு மிரண்டுமொன்றாய்ப் பாருலகமிருக்குமென்று யெழுதலாச்சே.

எழுதவேசிஷவர்க்கந்தன்னைக்கேட்டு யேற்றமுடன்சமாதிதனிலருகிருந்தார், தொழுதுமேசிலகாலமிருந்தாரங்கே தோற்றமுடன்சப்தமதுகேட்கலாச்சு, பழுதுபடாதேகமதுயென்னசொல்வேன் பாரினிலேவெகுகாலமிருந்மேதுதான்,விழுதுபோல்ரோமங்கள்மிகவளர்ந்திருப்பமுடன்மேதினியில்வந்தார்காணே. சுருo

காணவேவதிசயங்கள்சொல்லியேதான் காசினியில்வெளிப்பட்டார்யூகிதாமும், பூணவேகாயகற்பமுண்டுமல்லோ புகழாகச்சமாதிதனிலிருந்துவந்தார், வேணபடியுபசாரமதிகமாகி மேதினியில்தாமிருந்தார்கோடிகாலம், தோணவேகூடுவிட்டுக்கூடுபாய்ந்தார் தோராமல்தேகமதுவேறாய்த்தானே. சுருக

வேறாகத்தானிருந்தவன்மைசொல்வேன் வேண்டியேகைவேறாய்க்கால்கள்வேறாய், நேராகயுடல்வேறாய்த்தலையும்வேறாய் நேர்மையுடன்பூமிதனிலிருந்தசித்து,சீராகலோகமதில்வனேகங்கூத்துகள் சிறப்புடனேயாடினதுமெத்தவுண்டு, பாராமல்கேட்டவரும்பார்த்தோருண்டுபாரினிலே வதிசயங்கள்மெத்ததானே. சுருஉ

தானனவதிசயங்கள்சாற்றக்கேளும் தகமையுள்ளகுருபரனார்வித்தைகோடி, தேனனநூல்கள்முதல்யாவுந்தேர்ந்து தெளிவுறவேயோகமுதலுளவுகற்று, கோனனையென்தைபார்காலாங்கிநாதர் குருபரனாருடனேபாஷங்கொண்டார்,வேனனவெகுசித்துசொரூபசித்துவெளியானதைவொளிவதீதமாமே. சுருரு

அதீதமாம்வதிசயங்கள்மெத்தசெய்து அவனியிலேயிருந்தவர்களுண்டோசொல்லும், துதீதமுடன்மண்கூறுப்போனாரப்பா துரைராஜர்வுலகுதனிலிருந்ததுண்டோ,கதீதமுள்ளதேகமதுநிலைநில்லாது காசினியில்யாரேனுமிருப்பாருண்டோ,பதீதமுள்ளபொய்வாழ்வுயென்னலாகும் பாரினிலேயெல்லாமிப்படியேபாரே. சுருச

பார்க்கையிலேதேகமதுநிலைநில்லாது பார்லோகமெல்லாமிப்படிதானாகும், தீர்க்கமுடன்தேகத்தைநம்பியல்லோ திறமைகெட்டுமாண்டவர்கள்கோடாகோடி, ஊக்கமுடன்சித்துதமைக்கடவுளென்று வுத்தமர்கள்கோடித்தார்பலருமப்பா, நேர்க்கமலம்வீற்றிருக்கும்வாணிபாதம் நேர்மையுடன்பாடிவைத்தக்காண்டமாமே. சுருரு

காண்டமாமின்னூல்தான்சத்தகாண்டம் கருவானசித்தருடமர புமாற்கம், ஆண்டவனார்நாதாந்தசித்தனென்றும் வவனியிலேபொய் ஞானி மெய்ஞானியென்றும், தூண்டியேசகலகலா ஞானியென்றும் துறையானசமாதிபிடபீடந்தானும், வேண்டியேசித்தருடசொரூபம் யாவும் வினையமுடன்பாடினதோர்காண்டமாமே. ௬௩௬

காண்டமாமிக்காண்டம்நான்காம்காண்டம் காசினியிலிருந்தசெதா ருசித்துதாமும், வேண்டியதோரற்புதங்கள்மகிமையாவும் மேன்மை யுடன்பாடிவைத்தேனிக்காண்டத்துள், தாண்டவம்போல்யின்னம் வெகுசித்துமார்க்கம் சாற்றுகிறேன்காலாங்கிநாதர்தம்மால், மாண்ட தோர்மானிடர்கள்சித்துதாமும் மார்க்கமுடனறியலாமிதற்குள்தானே.

புலிப்பாணி உற்பவம்

மாணவின்னமொருமார்க்கம்பாரு தன்மையுள்ளஎன்சீஷனொ ருவனப்பா, தேனைபுலிப்பாணியென்னுஞ்சித்தன் தேசத்தில்வேங் கையைவாகனமதாக்கி, கோனையெனதையர்காலாங்கிநாதர் கொற் றவனார்தன்னிடத்தில்சென்றுமேதான், மானைவுபதேசம்பெற்றுக் கொண்டு மானிலத்தில்செய்தவொருவன்மைபாரே. ௬௩௮

வன்மையுடன்வெகுகாலம்லோகந்தன்னில் வளமையுடன்வேங் கையின்மேலேறிக்கொண்டு, திண்மையுடன்வலசாரியாயிடைசாரியாக திறமுடனேசுத்திவந்தசித்தனப்பா, கண்மையாய்சிலகாலம்வுபதேசம் பெற்றுக் காலாங்கிநாதருடகிருபையாலே, உண்மையாய்சமாதிக்கு யேகவென்று வுத்தமனும்மனவுறுதிகொண்டான்காணே. ௬௩௯

காணவேகாடுமலைசுத்திவந்து கடிதானசிக்கிந்தாமலையிலோரம், பூணவேசமாதிக்குகிட முந்தேட புண்ணியனார்போகுமந்தகாலந்தன் னில்,வேணபடிசித்துவொருசமாதிகண்டார் விருப்பமுடன்சமாதிக்கு வருகேசென்று, சாணளவுதூரமதுநிற்கும்போது சப்தமொன்றுகே ட்கலுற்றார்சித்துபாரே. ௬௪௦

பாரேதான்சித்தொளிவுசப்தம்கேட்டுப் பாருலகில்மெத்தவதிச யந்தானப்பா,நேரேதான்சமாதிக்குமுன்னேநிற்க நேரானசமாதியது திறந்துவங்கே, சீரேதான்நாதாந்தசித்துதாமும் சிறப்புடனேவெளி ப்பட்டார்சோதியாக, கூரேதான்யவர்தன்னைக்கண்டபோது கொற்ற வனார்திடுக்கிட்டுப்பயந்திட்டாரே. ௬௪௧

பயந்திட்ட புலிப்பாணிமுனிவர்தாமும் பாரினிலே சித்தொளி வைக்கண்டபோது, நயந்திட்டநமஸ்கார வஞ்சலிகள்செய்து நலமுடனேசித்தர்தாமும் முன்னெதிரேநின்று, சயந்திட்டமனதோடு வுபதேசங்கள்சாங்கமுடன் பெறுவதற்குமனதிலெண்ணி, வயங்கவே சித்தருகில்வந்துநின்று வண்மையுடன்கேள்விக்கு முன்னின்றாரே.

முன்னின்றபுலிப்பாணி தம்மைநோக்கி முன்யுகத்தில் சமாதி யதிலிருந்தசித்து, தன்முகமாய்நின்ற தொருபுலிப்பாணிதம்மை நகமையுடன்சித்துமுனியாரென்றென்ன, சொன்னமொழிகள்தனையே கேட்டபாணிசொரூப மென்றசித்துக்குக் கூறலுற்றார், கன்னவனார் முன்னாளில்சிறந்த சித்துகைலாசபோக ரிஷிசிஷனே. ௯௪௩

நானேதான்போகரிஷிசிஷனென்றால்நன்மையுடன்சித்துமுனி மனதுவந்து, நானேதான்புலிப் பாணிதம்மைநோக்கி சட்டமுடன் திருவாக்குக்கூறலுற்றார், வானோர்கள்துதிக்குமந்தபோகர்தன்னின் வளமானசிஷனென்று சொன்னதாலே, ஞானோபதேசமது செய்வேனென்று வண்மையுடன்தாமுரைத்தார்சித்துதாமே. ௯௪௪

தாமானசித்தொளிவுநாதர்தாமும் தன்மையுடன் புலிப்பாணி நாதருக்கு, நாமேதான்சொன்ன படிவுபசாரங்கள் நலமுடனே செய்துமல்லோஆசீர்மித்து, போமேதான்முன்யுகத்தில் பிரம்மாவுக்கும் பொங்கமுடன்வரசனுக்கு நடந்தசாபம், வேமேதான்மேதினியி லெல்லாருந்தான் வெழிலாகக்கண்டிருப்பார் முனிவர்தாமே. ௯௪௫

புலிப்பாணிக்குச் சாபந்தீர்த்தது.

தானானசாபமது தீர்வதற்கு தனியானரிஷியொருவ ரங்கிருந்தார், கோனானபிரமருக்கு தேவேந்திரபட்டம் கொடுத்துமே சாபமதைதீர்த்துவிட்டார், பானானபாரபரியாளாசீர்மத்தால் பாருலகில் நீருமென்னைக்கண்டீரிங்கே, கோனானவுன்பாட்டன் காலாங்கிநாதர் கொற்றவனார்பேருரைத்தீர் புண்ணியவானே. ௯௪௬

புண்ணியனே பேர்சொன்ன படிபாலப்பா பூதலத்தி லுந்தனுக்குவேங்கைசாபம்,திண்ணமுடன் தீர்த்துமல்லோயுந்தனுக்கு நேரமுடனுபதேசஞ் செய்வேனென்றார், வண்ணமுட னுபதேசம்பெற்றுமல்லோ வானுலகில் யெமனுக்குமிடமில்லாமல், கண்ணபிரான் தனனைப்போல்வாழும்பெற்று காசினியில்வெகுகால மிருவென்றாரே. ()

1 இருவென்றபோதையிலேபுலிப்பாணிதாமும்யெழிலான்சித்த க்குவணக்கஞ்செய்து திருதலுடன்முன்னின்று, வாய்புதைத்து நீர் மையுடன் குருவணக்கம்மிகவுஞ்செய்து, பொருதவேவா மெனக்கு வேண்டுமென்ன பொங்கமுடன்சித்ததுவுங்கொடுத்தாரங்கே, வருத லுடன்புலிப்பாணிமுனிவர்தாமு வல்லமைகள்மிகவாகிவந்திட்டாரே

வந்திட்டபோதையிலே முனிவர்தாமும் வாகுடனேபுலகுதனி ல்வதிசயங்கள், தந்திட்டார்லோகத்துமாந்தருக்கு தாரணியில்வெகு கோடிசித்துசெய்தார், முந்திட்டசாஸ்திரத்தில் சொல்லாதெல்லாம் முனையாகப்பாடிவைத்தாரின் னூலுக்குள், தொந்திட்டமானதொரு வித்தைமார்க்கம் தொழிலெல்லா மிப்புவியிலாடலாச்சே. ௬௪௯

ஆடினார்கோடான கோடிவித்தை அப்பனே யிப்புவியிலாடலா ச்சு, கோடானகோடியுகம் யிருக்கவென்று கொப்பெனவே காயாதி கற்பங்கொண்டார், காடாண்மையாகவேதான் சித்துதாமும் தார ணியில்வெகுகோடி ஜாலஞ்செய்தார், கூடானகூடுவிட்டு பாய்ந்துமே தான்குவலயத்தில் சித்துமுனியில்லைதானே. ௬௫௦

இல்லையேசித்துமுனி பாலன்றானும் யெழிலான மண்ணுக்கு யிரையேயானார், அல்லல்மிகபட்டுமல்லோவவனிதன்னில் அப்பனே யவருமல்லோ மாண்டுபோனார், கல்லானதேகமது யென்றிருந்தார் காசினியிலவர்தேகம் மண்ணாய்ப்போச்சு, புல்லானபுல்லோடேபுழு தியாகி பூதலத்தில்புலிப்பாணி மாண்டார்பாரே. ௬௫௧

பாரேதான் வுலகமதில்சித்துயாவும் பாங்காகக்கற்றறிந்து யிரு ந்துமென்ன, நேரானசிவயோகந் தன்னின்று நிஷ்டையிலேதானிரு ந்து பலனுமென்ன, கூரானகுறிப்பறிந்து குவலயத்தில் கொற்றவ னேகாயகற்பங் கொண்டுமென்ன, வீரானதேகமது விழலாய்ப்போ ச்சு விருத்தமுடனிப்படியே மாண்டார்தானே. ௬௫௨

## கொங்கணவ ருற்பவம்.

மாண்டாரேயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் மகத்தானசித் தொளியின் வண்மைகேளும், தாண்டவம்போல் கொங்கணவசித்து தாமுந்தாரணியிலொருமுனிவரிருந்தாரப்பா, ஆண்டகையாமெனதை யர்காலாங்கிநாதர் அவனியிலே சித்தொருவரிருந்தாருண்டு, பூண்ட மனதுறுதியினால் சித்துதாமும் பொங்கமுடன் வெகுகாலமிருந்தார் தாமே. ௬௫௩

தாமானகொங்கணவமுனிவர்தாமும் தாரணியில்சிலநூல்கள்செ ய்தாரென்றும்,நாமானகொங்கணவர்முக்காண்டமப்பாகாட்டினிலே

செய்துவைத்த தன்மைதன்னை, பாமானமாகவல்லோ பாடிவைத்த பளிங்கானகாண்டமென்னுஞ் சாஸ்திரத்தை, பூமான்களெல்லவரும் பாராமற்றான் புகழாகசாஸ்திரத்தில் மறைப்பென்றாரே. ௯௫௬

மறைந்தாரே கொங்கணவர்சாஸ்திரத்தை மார்க்கமுடன் கருவெல்லாந்தெரியாமற்றான், நிறைப்புடனே கொங்கணவர் காண்டந்தன்னை நிராதசங்கை பிரமாண்டமென்றார், முறைப்படியேமுழுமக்கள்பாராமற்றான்முநி சொன்ன நூலதனை சங்கையென்றார், குறையகற்றி வுட்கருவையறிவதற்கு குவலயத்தில்யுத்தியில்லாமதிபோனாரே.

போனாரேவெகு கோடிமாந்தர்தாமும் பொங்கமுடன் கொங்கணவர் நூல்கள்தன்னில், ஆனாரே கருவிகரணாதியெல்லாம் அப்பனே மறைத்துவைத்தா ரென்றுசொல்லி, ஏனோதான் மதிமோசந்தானுமாகி யெழிலானசாஸ்திரத்தில் குற்றஞ்சொன்னார், மானேகேள்மதிகெட்டு யிப்படியே நூலில்மகாதோஷஞ்சொன்னாரே மாந்தர்காணே.

காணவே கொங்கணவசித்துதாமும் கருவானமுக்காண்டம் பாடிக்கொண்டு, காணவேநாதாக்கள்முனிவர்தாமும் நாணிலத்தில் நடுக்கமுடன் திடுக்கிட்டேங்க, வேணபடி நூலுக்குப் பலமுங்கட்டிவேகமுடன்கொண்டு மல்லோவருகும்போது, தோணவேமகாமேரு தன்னிற்பக்கம் தொடர்ந்தாரே கொங்கணவமுனிவர் தானே. ௯௫௭

தானானகொங்கணவ முனிவர்தாமும் தாக்கானமேருவிடந்தன்னிற்சென்று, மானானமலைபக்கல்குகையிற்சென்றுமயக்கமுடன்சமாதிக்கிடமுந்தேட, பானானபரமமுனிமனதிலெண்ணி பட்சமுடன் சமாதிதனிலிறங்கவென்று, கோனான கொங்கணரும் யெண்ணியல்லோகொப்பெனவே பாறையின்மேல் படுத்தார்தானே. ௯௫௮

படுத்துமேபாறையின்மேல்நித்திரசங்கம் பரிவாகப்பராபரியை நினைந்துகொண்டு, அடுத்துமேசுழுத்தியிலே சொப்பனமுங்கொண்டு ஆண்டவனார்தேக மதைமறந்துவிட்டு, தொடுத்துமே பூரணத்தை மனதிலுன்னிதோற்றமல்வாசி யோகஞ்செய்துகொண்டு, விடுத்துமே நித்திரைகள்நீங்கியே தான்விருத்தமுடன் கண்விழித்துப்பார்த்தார் தானே. ௯௫௯

கௌதமரிஷியைக் கண்டது.

பார்க்கையிலேபலபலவாந்தோற்றங்காணும் பாரினிலேவதிசயங்கள்மிகவாய்த்தோற்றும், ஏர்க்கையிலேகுன்றருகே சப்தங்காணும் யெழிலானவாத்தியங்கள் மிகவேகேட்கும், தீர்க்கமுடன் தேவதா

கோஷ்டந்தானும், நீசமுடன்செவிதனி லேகேட்கும்பாருஆர்க்கவே கொங்கணரு மிகவேகேட்டு அப்பனேமதிமயங்கி நின்றார்பாரே. ()

நின்றாரேகுன்றருகே மலைபினோரம் நீடானசுனையுண்டு வுதகமுண்டு, குன்றானமலைபோரக் குத்துக்கல்லுண்டு கூரான மண்டபமுமங்கொன்றுண்டு, வன்றானகாறுநீர்த்தமுண்டு வகையானபுலியுறங்கும்விடுதியுண்டு, தன்றானதடாகமது மிருக்கும்பாருதன்மையுள்ள சமாதியொன்று கண்டார்பாரே. ௬௬௧

பார்த்துமே கொங்கணவர் முனிவர்தாமும் பரிவுடனேசமாதியிடமருகிற்சென்றார், தீர்த்தமுடன் தடாகமது மூழ்கியேதான் திருப்பணிக்கி புட்பமதுகையிலேந்தி, நார்க்கமலப்பட்டுடுத்தி வினயம்பூண்டு நமஸ்காரவஞ்சலிகள்மிகவுஞ்செய்து, ஏர்க்கமுடன்சமாதிக்கி முன்னேநின்று பெழிலானகொங்கணரு மர்ச்சிப்பாரே. ௬௬௨

அர்ச்சித்துகொங்கணவமுனிவர்தாமும் அட்டாங்கப்பூசையது மிகவுஞ்செய்து, உர்ச்சிதமாய்சிரங்குனிந்துகாங்குவித்து வுற்பனமாம்வட்சரத்தை யோதும்போது, தர்ப்பரானர் கௌதம ரிஷியார்தாமும் தன்மையுடன்வுள்ளிருந்துசமாதிதானும், கற்பதிந்தபாறையது வெடிக்கவேதான் கைலாச கவுதமரும்வெளிவந்தாரே. ௬௬௩

வந்தாரே சோதிரிஷிபோலேயப்பா மகத்தானகௌதமரிஷியார்தாமும், சொந்தமுடன்கொங்கணரைச் சிஷனென்று சேர்த்துமே மனதுவந்து பட்சம்வைத்து, எந்தனிதந்தனிலப்பா யிந்தகாடுபெழிலானகாவனத்தே வந்ததென்ன, அந்தமுடனெந்தனுக்குச்சொல்லுமென்று அபயாஸ்தம்தான் கொடுத்தார்ரிஷியார்தாமே. ௬௬௪

கௌதமர் கொங்கணவர்வரலாறுகூறல்.

கொடுத்தாரே வபயமதுதந்தபின்பு கொப்பெனவேகொங்கணருங்கூறலுற்றார், அடுத்தேனேசமாதியிடம் அடியேன்றானும் அய்யனேபள்ளிகொண்ட பாறைமீதில், படுத்தேனே நடுச்சாமவேளைதன்னில்பராபரியைத்தானினைந்துயேங்கும்போது, எடுத்ததொருகோஷ்டங்கள்வாத்தியங்கள் பெழிலாகச்செவி தனக்குக்கேட்கலாச்சே. ()

கேட்டவுடனடியேனுங் கிடுகிடுத்து கிருபையுடன்சமாதியுடனருகில்வந்து, நீட்டமுடன்சமாதிதனிலிறங்கவென்று நீதியுடன்தடாகமதில்மூழ்கியேதான், வாட்டமுடன் புட்பமலர்தானெடுத்து வளம்

பெறவே சவாதியிடம் வந்தேன்யானும், தேட்டமுடன் மனோன் மணியைத்தானினேக்கு தெளிவாகவட்சரத்தை யோதினேனே.

ஓதவேசமாதியின்மேல் பாரற்தானும் வுத்தமரே வெடிக்கவல்லோ தம்மைக்கண்டேன்; போதமுள்ளரிஷியாரே யடியேனுக்கு பொங்கமுடன் காட்சிதா வேண்டுமென்று, நீதமுடன்கௌதமரிஷியர்தாமும் நீதியுள்ளகொங்கணனூர் பாலனுக்கு, வேதமுதலாகமங்ள் விரிநூல்யாவும் விருப்பமுடன்போதித்தார் ரிஷியார்தாமே. ()

தாமானகௌதமனூர் ரிஷியார்தாமும் சாங்கமுடன்கொங்கணர்க்குக் கூறல்வண்ணம், கோமானும்ராஜாதி ராசர்தாமும் குவலயத்தில்கோடியே ரிருந்தாரப்பா, பூமான்களௌத்தனையோ ஞானங்கற்று பொன்னுலகுநாட்டுக்குப் போனாரையா, சாமான்னியமானதொரு கொங்கணரோ சமாதிக்குட்சென்றாலும் ஒன்றுங்காணே. ௬௬௮

காணவேயுலகுதனில் கற்பங்கொண்டு கைலாசமேருவுக்குமிடமில்லாமல், பூணவேஞானசாகரத்தைப்பூண்டுபூவுலகுதன்னிலே யிருந்துமென்ன, வேணபடிகற்பமுறை யுண்டுநீரும் வேதாந்தமனோன் மணியைக் கண்டுமென்ன, தோணவேசமுசாரத் தொல்லைவிட்டு தோராமல் சமாதியிலே வொன்றுங்காணே. ௬௬௯

ஒன்றுமேயில்லையப்பா யுலகுதன்னில் உயிரோடேசமாதியிலே யிறங்கியென்ன, கன்றுதான்தாய்தேடுங் கதையைப்போல காசினியி லவரவர்கள் சமாதிதேடி, தென்றிசையிலநதிமலையி லனேகஞ்சித்தர் சிருடனேயிப்படியே சமாதிகொண்டார், வென்றிடவே கொங்கணரு நீருமிங்கேவேகமுடன் சமாதிக்கிவந்திட்டீரே. ௬௭௦

வந்திட்டசித்தருக்கு வுபதேசங்கேள் வளமையுடன்தாமுறைத்தார் ரிஷியார்தாமும், தந்திட்டஞானேபதேசத்தோடு தாரணியில் சமாதிக்கு யிடமுந்தந்தார், கொந்திட்டகொங்கணரும் விடையும்பெற்று நோக்கமுடன் சமாதிக்குப் போகும்போது, முந்திட்டரிஷியாருங் கூறும்வண்ணம் முதன்மையாய்க் கொங்கணருங் களிகொண்டாரே. ௬௭௧

களிகொண்டகொங்கணனூர் முனிவர்தாமும் கௌதமனூர் ரிஷியிடத்தில்சாபம்நீங்கி, யளிதனையேநிவர்த்திசெய்து முனிவர்தாமும் பட்சமுடன் சமாதிக்குச் சென்றபோது, வளியுடனே கவுதமனூர் ரிஷியார்தாமும் வாக்குரைத்தார் சிலகாலமிருக்கவென்று, துளியுடனேமழைமாறி பொழிந்துமேதான் தப்புறவாய்சமாதிபது மூடலாச்சே. ௬௭௨

ஆச்சப்பாசமாதிபது மூடிக்கொண்டு அங்ஙனவே கொங்கணருமு
னிவர்தாமும், மூச்சடங்கிசிலகாலமிருந்தாரங்கேமூதுலகோர்தானடு
க்க வந்தார்பின்னும், பேச்சடங்கிப் பனிரெண்டுவருடகாலம்பேச
மல்தானிருந்த சித்துவப்பா, மாச்சனுடன்சமாதிபதுதான்வெடித்து
மார்க்கமுடன் கொங்கணரும் வந்தார்பாரே. ௬௭௩

## கொங்கணவர் சமாதியிலிருந்துவந்தது.

பாரேதான்கொங்கணவர் முனிவர்தாமும் பங்கினிலேவந்துமல்
லோ யாகஞ்செய்தார், நேரேதான்யாகமதுசெய்யும்போது கோரான
கவுதமனர் சிஷியார்தாமும், சீரேதான்யாகமதுக் கெதிரேநின்று
செப்புவார்க் கொங்கணர்க்கு வுபதேசங்கள், தீரேதான்கொங்கண
வர் தன்னைப்பார்த்து தீரமுடன் சாபமது செப்புவாரே. ௬௭௪

## கௌதமர் கொங்கணர்க்கு சாபங்கொடுத்தது.

செப்புவார்கொங்கணவர் முனிவர்தன்னை தீரமுடன்யாகமது
செய்ததாலே, எப்படிநீயாகமது செய்யலாகும் யென்போல சிஷி
யாருஞ் செய்யும்யாகம், ஒப்புடனேயாகமது செய்வதற்கு புத்த
மனேநீர்கொண்டயுறுதியென்ன, தப்பானயாகமது செய்ததாலே
தாரணியிலுந்தனுக்கு சாபமாச்சே. ௬௭௫

ஆச்சப்பாசாபமது பெற்றுக்கொண்டு அப்பனேதில்லைவனம்
போகவென்றார், பாச்சனுடன் கொங்கணர் முனிவர்தாமும் பரம
சிஷியரிடஞ் சாபம்பெற்று, வாச்சுவந்தானழிந்து வனமேபோகி
வந்துவிட்டார் தில்லைவனம் நாட்டகத்தை,பாச்சனுடன் சிலகாலமங்
கிருந்து மானிலத்தில் கொங்கணரும் சிஷியனுரே. ௬௭௬

ஆனுரேகொங்கணர் முனிவர்தாமும் அங்ஙனவேசிஷிபோலே
யிருந்துகொண்டு, போனுரேதவயோகநிலையில்நின்று பொங்கமுடன்
யாகமது செய்யும்போது, ஞானோபதேசமது பெற்றிருக்கும் நலமா
னசித்தொருவ ரங்கிருந்தார், தேனேடுதினமாவும் பொசித்திருந்து
தீரமுடன் யாகமதுக் கெதிர்நின்றாரே. ௬௭௭

எதிர்நின்ற கொங்கணவர் தன்னைப்பார்த்து பெழிலானசிஷியா
ரும் கூறலுற்றார், சதுருடனேயாகத்தைப் பார்த்துமேதான் சட்ட
முடன் சிஷியாருஞ் சொன்னதென்றால், கதிரோன்போல் யாகமது
செய்யுந்தீரா னமானகொங்கணரே கேளுமென்றார், மதிபோன்ற
யாகமதுசெய்வதென்ன மன்னவனேயுந்தனுக்கு வுரையென்றாரே.

### கொங்கணருக்குப் பராகரிஷிசாபந்தீர்த்தது.

உறையென்றபோதையிலேமுனிவர்தாமும் ஓகோகோநாதாந்த
சித்துயென்று, சிறையிட்டசாபமதுதீர்க்கவென்று சித்தொளிவுவந்
தாரோயென்றுசொல்லி, முறையிட்டுஅவரிடத்தில் குறைகள் சொல்
லி முத்திபெறும் வழிதனையே படையவென்றும், குறையிட்டுகேட்
பதற்கு மனதிலெண்ணி கொபமெனவே கொங்கணரும் கூறுவாரே.

கூறுவார்கொங்கணரும் வார்த்தைசொல்வார்சோடி சூரியப்பி
ரகாசமானதேவா, மாறுடையவெந்தனுக்குச்சாபம் நேர்ந்துமானில
த்தில்கௌதமனார்ரிஷியார் தம்மால், வேறுவினையாகவல்லோ வடியே
னுக்குவேகமுடன் சாபமதுநேர்ந்ததாலே, தூறில்லாருந்தனுடவாசிர்
மத்தில்துப்புறவா யாகமது செயலந்தேனே. சு௮௦

செய்யவேவந்தேனன் சுவாமிநாதா செகதலத்திலுந்தனுடகீர்
த்திகண்டு, எய்யதொருசமாதிபுரம் யாகம்செய்தேன் வுத்தமனேயெ
ந்தனுக்கு கிருபைசெய்து, பெய்யவேமழைபதனை வருட்சித்தேதான்
பேரானவுலகுதனில் கீர்த்திபோங்க, துய்யதொருகிருபையா லுந்த
னுக்கு துரைராஜசுந்தரனேவரமீயாவே. சு௮௧

வரமெனக்கு கொடுத்தல்லோ புண்ணியவானே வாகுடனே
ஞானோபதேசஞ்செய்து, புரம்விட்டு யெந்தனிடபதிபோகத்தான்
பொங்கமுடன்வாழ்த்துதல் கூறுமென்ன, கரமெடுத்து கைபிடித்து
கொங்கணற்கு கர்த்தாவாம் ரிஷியாரும் விடைகொடுத்து தாமுட
னே யனுப்பிவிட்டார் சாபந்தீர்த்து சாங்கமுடன் கொங்கணரும்
வந்திட்டாரே. சு௮௨

வந்திட்டகொங்கணரைக் கௌதமரும்பார்த்து வண்மையுட
னிரண்டாவதுயாகஞ்செய்து, தந்திட்டவரமதுவும் பெற்றுவந்த தக
மையுள்ளகொங்கணற்குப்பின் னுஞ் சொல்வார், முந்திட்டசமாதியது
சிலதுகாலம்முதன்மையுடன்றாமிருந்தீர் மைந்தாநீயும் பந்திட்டமாக
வல்லோவுலகுதன்னில் பரிவுடனே சிலகாலமிருவென்றாரே சு௮௩

என்றுமேகோடானவற்புதங்கள் யெழிலாகக்கற்பித்தார்கொங்
கணற்கு, வென்றிடவேசித்தர்முனி காணப்போக்கு லேணதொரு வ
திசயங்கள்யாவுஞ்சொல்லி, துன்றிடவேபிராணைபகற்பந்தன்னை துறை
யோடுமுறையோடுஞ் சொல்லிப்பின்பு, நன்றுடனேதேகமதைப்போ
க்கடிக்க நல்லவழியுபாயமது வருள்செய்தாரே. சு௮௪

செய்யவேகொங்கணருமுனிவர்தாமும் செயலானபாக்கியமுமா
சையற்று பையவேவுலகமதில்கற்பகோடிகாலம் பண்புடன்தானிருந்

தானுமென்னலாபம், மெய்யதுவும் நானுரைத்தபோருமல்லால்மேதினியில்யாதொன்றுங்கண்டதில்லை, எய்யவேதேகமது கில்லாதுவென்றுமிலை டவேசமாதிக்குமிறங்கிட்டாரே. ௬௮௫

இறங்கியேபோம்போதுமனேகசிஷர் வெழிலானகூட்டமது கிற்கும்போது, உறங்கியேதானிருந்துபாசமற்று வுத்தமரும் கண்மூடிலைத்துக்கொண்டு, நிறமுடனே தன்னறிவு மிருக்கும்போது நீரமுடன் விசாரணைக்குச் சரியதாக குறங்குடைய மனமதுவுங் கோபகத்தில் குறிப்புடனே சொக்கியல்லேர்குழிசென்றாரே. ௬௮௬

சென்றாரேயோர்கடிகை தன்னில்நேரம் செம்மையுடன் கொங்கணருமறையும்போது, நன்றானசிஷவர்க்கமாயிரம்பேர் கலமுடனே கிட்டிருந்து வேதஞ்சொன்னார், வென்றிடவே தேகமது மண்ணால்மூடி மேன்மையுடன் கற்பூரமுறை கொண்டுசாத்தி, இன்றுமுதல் வோராண்டு பூசைமார்க்கம் பருளுடனே நடத்தவென்ன முடிவுமாச்சே. ௬௮௭

ஆச்சப்பாசப்தமது சொன்னார்பாரு அப்பனேமுப்பதுவாண்டுபின்பு, பேச்சப்பாயாருக்குஞ் சொல்லவேண்டாம் பேரான சமாதியை திறந்துபாரு, மூச்சப்பாவிருந்தாக்கால் பின்னும்யானும் மூதலகில் நான்வருவேன்வென்றுசொல்லி, ஏச்சப்பா மூச்சடங்கிப்போனானுந்தான் மெழிலானசமாதியதுமூடென்றாரே. ௬௮௮

மூடியேகொங்கணருமாண்டாரென்று மூதலகில்போகரும்பேரின்பத்தில், கூடியேகூட்டுமிட்டுப் பேசிக்கொண்டு பேருலகில் கைசெய்வாரிந்தவாழ்வு, தேடியேபேரின்பநிலையும்பொய்யே தெளிவானதொன்றுமில்லைவையகத்தில், நாடியேபார்த்தாக்காலெல்லாம்பொய்யே நாதாக்கள்வாழ்வதுமிப் படிதானுச்சே. ௬௮௯

இப்படிதானுலகெல்லாம்பொய்வாழ்வப்பா வெழிலுடனேயிருந்தவர்களாருமில்லை, எப்படிநானம்புவது தேகந்தன்னை வெழிலாகமாண்டார்கள் வையகத்தில் செப்பவே தேகமது மண்ணாய்ப் போச்சே தேசமதிலிருந்தவர்களாருமில்லை, ஒப்புடனே யாம்கண்ட வரைக்குஞ் சொன்னேனும் வுத்தமனேகாலாங்கி கடாட்சந்தானே. ௬௯௦

தானானகாலாங்கி சொன்னமார்க்கம் தாரணியில் மெய்யல்லால் பொய்யொன்றில்லை, வேனானவெனதையர் கூறும்வார்த்தை மேதினியில் யாவருக்குஞ்சத்தியந்தான். பானானபராபரியை மனதிலெண்ணி பாடினேன் போகரேழாயிரந்தான், தேனானயீந்நூல்தான் காலாங்காண்டம் தெளிவுடனே செப்பிவைத்தேன்மாந்தர்தாமே. ௬௯௧

ஆமேதானின்னமொருமார்க்கம்பாரு அப்பனேயாம்கண்டவரை க்குஞ்சொல்வோம், போமேதான்சித்தர்முனி ரிஷிகள்யாவும்பொங்க முடன்சாஸ்திரங்கள்கட்டிவைத்தார், வேமேதான்வெகுநூலின்கருவு வும் வெளிப்படையாய்ச்சொல்லவில்லையின் நூல்போல, நாமேதான்க ண்டமட்டுஞ்சொல்லிவிட்டோம்நாதாந்தசித்தொளியினருமைபாரே

பாரேதான்கபிலமுனிசித்துதாமும் பாருலகில்வெகுகாலமிருந் தாரென்று, நேரேதான்கவிவாணர்கட்டுவாக்கியம் நேர்மையுடன்கட் டிவைத்தார்வெகுநூல்தன்னில், சீரேதான்காயாதிகற்பமுண்டு சில காலம்பூமிதனிலிருந்தாரென்று, கூறேதான்சாஸ்திரங்கள் சொன்ன மார்க்கம் குவலயத்தில்மெய்யாகவுறுதிகாணே. சுசுங

காணவேகபிலமுனிசித்துதாமும் கானகத்திற்சமாதியதுபூண்டு மேதான், வேணதொருசிஷவர்க்கந்தன்னையொட்டாக்க விருப்பமுடன்கூ ட்டமதாய்க்கூடிக்கொண்டு, ஞானவேஞானோபதேசந்தன்னை நாதாந் தசித்தொளிவுகபிலர்தாமும், பூணவேயுபதேசஞ்செய்யும்போதுபொ ன்னடிக்குத்தெண்டனிட்டார்கோடியாமே. சுசுச

கோடியாஞ்சிஷவர்க்கம்கபிலருக்கு கொப்பனவேயஞ்சலிகள்மி கவுஞ்செய்து, நீடியேசிஷவர்க்கம்விடையும்பெற்று நிலையானசமாதியி டமருகிற்சென்று, கூடியேகருவிகரணாதியெல்லாம் குறிப்புடனேதா னடக்கிகலைதான்மாறி, வாடியேமுகந்தளர்ந்துமனதுவாராய் மயக்கமு டன்கபிலருந்தான்குழிசென்றாரே. சுசுரு

சென்றாரேகபிலமுனிசித்துதாமும் செம்மையுடன்சமாதிதனி லிறங்கியேதான், நின்றுமேமூச்சதனைவுள்ளடக்கிநிலையானபடுபள்ளந் தன்னிற்சென்று, வென்றிடவேதாம்பேர்த்தார்பள்ளமீதில் மேதினியி ல்பாறைதனைமூடச்சொல்லி, இன்றுமுதல்இருபத்துஆண்டுரெண்டும் மெழிலாகச்சமாதிக்குப்பூசைபாரே. சுசுசு

கார்க்கவேசிஷவர்க்கமெல்லோருக்குங்கருத்துடனேதாமுறைத் தார்கபிலர்தாமும், நீர்க்கமுடன்சிஷவர்க்கக்கூட்டத்தார்கள் திறமுட னேகுருவினதுவாக்குபோல, பார்க்கவேசமாதியதுபூசைதானும்பாரு லகில்செய்துவந்தார்ஆண்டுமட்டும், ஏர்க்கமுடன்ரெண்டுபத்துவாண்டு போகவெழிலாகசமாதியிடஞ்சூழ்ந்திட்டாரே. சுசுஎ

சூழவேசமாதிக்குகெடுவுமாகி சுந்தரமாஞ்சிஷவர்க்க மாயிரம் பேர், தாழவே[illegible]பிடபக்கல்நின்று சட்டமுடன்சிவபூசைச்செய்

யும்போது,ஆழவேகற்பாறைத்தான்வெடித்து நேரானகபிலமுனிசித்
துதாமும், ஆழவேசொரூபமுடன்கபிலர்தாமும் அங்ஙனவேவெளி
யானவதிதம்பாரே. ௬௯௮

பாரேதான்கபிலமுனிசித்துதாமும் பண்புடனேவதிசயங்களெ
ல்லாங்கண்டு, நீரேதான்செகதலத்தில்மாந்தர்தம்மை நிர்க்கமுடன்
தான்பார்த்துக்கூறலுற்றார், நேரேதான்காயாதிகற்பங்கொண்டு தெ
ளிவுடனேபூமிதனிலிருந்தார்சித்து, நேரேதான்கோடிவரையிருந்து
மென்ன நேர்மையுள்ளதேகமதுமண்ணாய்ப்போமே. ௬௯௯

மண்ணானதேகமதுமரிக்காமற்றான் மானிலத்திற்சிலகாலமிருந்
தார்சித்து, நண்ணவுடன்வூர்வனத்தைச்சுற்றவல்லோ நாதாந்தரிஷி
யாரும்வனமேபோனார்,விண்ணமுடன்தட்சணயாகங்கள்செய்து வீர
முடன்காவனத்தேவந்துநின்று, குண்ணனமலைதேடிகுகைகள்தேடி
குருபானர்ரிஷியொருவர்தனைக்கண்டாரே. ௭௦௦

கண்டாரேகபிலமுனிசித்துதாமும காட்டகத்தேகுருபானர்த
ம்மைத்தானும், தெண்டமுடன் அஞ்சலிகள்மிகவுஞ்செய்து தேவாதி
தேவனேயென்றுசொல்லி, கொண்டனைத்துமவர்பாதந்தொட்டுமே
தான் கொப்பெனவேயென்றனுக்குவுபதேசங்கள், அண்டிவந்தவென்
தனையும்வாதரித்து அய்யனேகெதியென்றுவணங்கிட்டாரே. ௭௦௧

வணங்கியதோரெந்தனுக்குருபானர்தாமும் வாக்குடனேவபயா
ஸ்தந்தான்கொடுத்து, இணங்கவேயெந்தனதுயாகந்தன்னில் வெழி
லுடனே நீரிருந்துகடத்திவந்தால், குணங்குடியார்மஸ்தானின்சாகி
போல குவலயத்திலுந்தனுக்குவாமுங்கந்து, மணமுடனேவாக்களி
த்துரிஷியார்தாமும் வகுப்புடனேயுபதேசஞ்செய்தார்தாமே. ௭௦௨

தாமானவுபதேசஞ்செய்துமல்லோ சுதாகோடிகாலமதுயிருப்ப
தற்கு, பூமானசித்தொளிவர்முனிவர்தாமும் பூதலத்தில்வெகுகாலங்
கற்பமுண்டு, காமானஞானோபதேசமெல்லாம் கருத்துடனேயெங்கா
ளுமுறுதிகொண்டு, வேமானமாகவேதான்விரும்பிசித்து விவரமுட
ன்போதித்தார்முனிவருக்கே. ௭௦௩

குருபாரிஷி யாகம்.

முனியான கபிலமுனிசித்துதாமும் முனையானகுருபானர்ரிஷி
யார்பக்கல், கனிவுடனே தாமிருந்தார்சிலதுகாலம் காணுதகாட்சியெ
ல்லாங்கண்ணிற்கண்டார், பனிமதிசூழ்சடைபூண்டரிஷியார்தாமும்
பாரினிலேயாகமதுசெய்யும்போது, தொனிவுடனேசாமரங்கள்வாத்
தியங்கள் தொல்லுலகில்வனந்தமதைக்கண்டோந்தானே. ௭௦௪

காணுவநியங்கள்மெத்தவுண்டு தாக்கானகுருபாஞர்தன்றன்
பக்கல்,பாஞனரிஷிமுனிவர்கூட்டத்தார்கள் பண்புடனேரிஷியினிட
பக்கல்தன்னில், தேனுனசாஸ்திரத்தில்சொன்னநீதி தெளிவாகச்சொ
ல்லிவிட்டேன்மாந்தர்க்காக,பாஞனபாரபரிமைமனதிலெண்ணி பாடி
வைத்தேன் பண்புள்ளநீதியாமே. ௭௦௫

நீதியாம்பின்னூல்போல்யாருஞ்சொல்வார் நீணிலத்தில்யாங்க
ண்டவரைக்குஞ்சொல்வோம், சோதியுடன்ரிஷியாருஞ்சமாதிபோக
தோற்றமுடன்யாகமதுசெய்யும்போது,வாதியாககமலமுனிசித்துதா
மும் வளமையுடன்தாமிருந்துவாமுங்கேட்டு, ஆகியாக்குருபாஞர்
வாக்குபோல அங்ஙனமேசிலகாலமிருந்தார்தாமே. ௭௦௬

இருந்தாரேகபிலமுனிசித்துதாமும் வெழிலாகரிஷியினிடமிருக்
கும்போது, பொருந்தவேரிஷியாரும்வன்புகூர்ந்து பொங்கமுடசமா
திக்குயிடமுஞ்சொல்லி, குருந்தமுடனுபதேசம்யாவுங்கூர்ந்து குவல
யத்தில்சிலகாலக்காட்சிகாண, வருந்தியேகுருபாஞர்யாகவானும் வர
மதுவுங்கொடுத்தாரேபுண்ணியவானே. ௭௦௭

புண்ணியனுஞ்சிலகாலமங்கிருந்து பொங்கமுடன்யாகமதுமுடிந்
தபின்பு, திண்ணமுடன்சமாதிக்குபோகவென்று திட்டமுடன்வரம
துவுங்கொடுத்தபின்பு,வண்ணமுடன்கபிலமுனிசித்துதாமும் வளமு
டனேபின்னுமேசமாதிக்கேக, எண்ணமுடன்தன்மனதிலெண்ணுக்கும்
போது வெழிலானசித்துமுனிகூறுவாரே. ௭௦௮

கூறுவார்வையகந்தனிலிருந்து கொற்றவனேபலனென்றுமில்லை
யப்பா, தேறுவார்மானிலத்தில்சிவயோகம்பூண்டு திறமுடனேகருவி
காணுதியெல்லாம், மீறுவார்தாமதிகம்பெற்றுக்கொண்டு மிக்கானச
மாதிக்குப்போய்தாமென்ன, ஆறுவார்பிறவியால்யென்னலாபம் வப்
பனேயென்றிலேகண்டிலேனே. ௭௦௯

கண்டிலேன்சமாதிக்குப்போய்தானென்ன காலனுக்குவுட்படுவ
துண்மையாகும், வண்டினம்மதுவையுண்டுசெனனமாண்டு வையகத்
திலிருப்பதினுலாபமென்ன, தண்டகத்துமுனிவரெல்லாமாண்டுபோ
னர் தாரணியிலொருவருந்தானில்லைகண்டீர், பண்டிதர்கள்சொன்ன
படியாதொன்றில்லை பாரினிலேயெப்போதும்பொய்வாழ்வாச்சே.

ஆச்சப்பாபொய்யானவாழ்வைநம்பி அப்பனேசமாதிக்குப்போ
கவேண்டாம்,மூச்சப்பாக்ஷணநேரம்வாழ்வதாகும் மூதுலகில்யாதொ

ன்றும்வருவதில்லை,எச்சப்பாவுலகத்தார்க்கேச்சேயாகும் யெழிலான சடலமதுகிலைதானில்லை,பாச்சலுடன்வாழ்வனைத்துமிப்படியேயாகும் பாங்குடனேசமாதிக்குப்போகாநன்றே. ௭௧௧

நன்றானவாழ்வல்லவென்றுசொல்லி நாதாந்தசித்துபரம்சொன்னபோது, குன்றியேகபிலமுனிதாமுங்கேட்டுக் கொப்பெனவேமறுவிடையுங்கூறலுற்றார், வென்றிடவேகபிலமுனிவிடையுங்கேட்டு விருப்பமுடன்சிஷவர்க்கந்தனையழைத்து, தென்றிசைக்குச்சிலகாலம்யானுஞ்சென்று செவ்வையுடன்கொஞ்சநாள்சமாதிபூணே. ௭௧௨

பூணவேயெந்தனுக்குவிருப்பமுண்டு புகழாகயெந்தனிடபக்கல் நீங்கள், தோணவேயெல்லாருமங்கிட்டிருந்து குறையோடுசமாதிக்குவருகவென்று,வேணபடிவார்த்தைவதைமிகவும்பேசி விடைபெற்றுமேதன்துரைவந்துமேதான், வானளுடன்மலைமேல்யோரக்குகைகள்கண்டுவளமுடனேசிலகாலமிருந்தார்தாமே. ௭௧௩

இருந்தாரே சமாதிக்குசிலதுகாலம் யெழிலாகத் தானிருக்கும் வேளைதன்னில்,பொருந்தமுடன்சமாதியதுயிடமுங்கண்டு பொங்கமுடன்சமாதியதுகுழிதான்வெட்டி,குருந்தமரமொன்றுவங்கேவைக்கச் செய்தார் கொற்றவர்களப்படியேசெய்துவைத்தார், வருந்தியேதவசுடனேபூண வாகுடனேகபிலரங்கேகினைத்தார்தாமே. ௭௧௪

கபிலர்சமாதிக்குப்போகும்போதுவதிசயங்கள்.

நினைக்கவேகபிலமுனிசித்துதாமும் நீடாழிகாலம்வரைசமாதிபூண்டு, புனைப்புடனேசிஷர்களைத்தாமழைத்து புகழுடனேகூறலுற்றார்வண்ணங்கேளீர், நினைப்புடனேமுப்பத்துமூன்றுவாண்டு நீராமுடனிருப்பதற்குயெண்ணங்கொண்டு, சுனைப்புடனேவாக்கதுவுங்கூறலுற்றார் சிரானகபிலமுனிசித்துதாமே. ௭௧௫

சித்தானகபிலமுனிசொன்னவாக்குச் சிறப்புடனேசமாதிக்குச் சென்றபின்பு,முத்தானவதிசயங்களென்னவென்றால் மூதுலகில்யான வரும்வேளைதன்னில்,பத்திபுடன்பாறைமேல்பெழுதும்வண்ணம்பாரினிலேயிருளதுவுமிகவுண்டாகி, சுத்தியேசூரியனைக் கண்மறைந்துதுப்புறவாய்மூன்றுநாளிருக்கும்பாரே. ௭௧௬

பாரேதான்யிருளதுவுமிகவுமாகி பாரினிலேசத்தவொலி மிஞ்சலாகி,நேரேதான்வானுலகுதன்னிற்றோற்றும் நேரானதேவரெல்லாங்காணலாகும், சீரேதான்கிருஸ்துவிடநாளைப்போலத் தேசமெல்லாம் விருளாகிவதிதங்காட்டும், ஊரேதான்காண்பதுவுமில்லையப்பா வுத்தாரப்படியாகநடக்குந்தானே. ௭௧௭

தானானசமாதிக்கும்பின்னாலப்பாசட்டமுடன்றுநாட்கள்நாலு
பேர்கள், கோனானகுருசொன்னவாக்குபோல கொற்றவர்கள்வேந்த
னுக்குமுன்னதாக, பானானபாரபத்தினுத்தாரந்தான் பதமுடனே
முன்னிற்பார்தேவர்வாக்கு, தேனானமனோன்மணியாள்சித்தருபிதேற்
றமுடன்வெதிர்நிற்பாள்திண்ணமாமே. ௭௧௮

திண்ணமுடன்சமாதியதுவெடித்தபின்பு திறமுடனேயடியே
னும்வெளியில்வந்து, வண்ணமுடன்வதிசயங்கள்மிகவுண்டாகும் வா
குடனேசிலகாலமிருந்துமேதான், நண்ணமுடன்வரும்போதுலோக
மெல்லார்க்களிமுடன்வதிசயங்கள்தானடக்கும், குண்ணமுடன்ற
மனுருமென்னைவந்து கூப்பிட்டுப்போவாரென்றுரைத்தார்தாமே. ( )

என்றபடிதாமுரைத்தவண்ணம்போல வெழிலாகத்தானடந்து
சிலதுகாலம், வென்றிடவேகபிலமுனிசித்துதாமும் வேகமுடன்மன்
னுக்கேயிறையுமானார், தென்றிசையில்சதுரகிரிபக்கலாகததேற்றமு
டன்சமாதிக்குயிடமுங்கண்டு, அன்றிடமாம்சமாதியதுமிகவும்பூண்டு
அங்ஙனவேமண்ணுகைப்போனார்தாமே. ௭௨௦

தாமானவாழ்வதுவும் பொய்யுமாகும் தாரணியிலிருந்ததொரு
சித்துமில்லை, காமானசொன்னதொருமார்க்கம்போகும் நாடெல்லா
மிப்படியேபொய்யேவாழ்வு, சாமானவாழ்வுக்குவெகுகோடிகாலம்
தகைமையுடனைசயது மிகவுமாகி, பூமான்கள்வெல்லவருமன்னு
யப்போனார் பூதலத்தில்வாழ்வெல்லாமிப்படிதானாச்சே. ௭௨௧

ஆச்சப்பாவாழ்வெல்லாம்பொய்யேயல்லாமல் அப்பனேயாதொ
ன்றுமில்லைகண்டீர், மூச்சப்பாபோய்விடும் கடிகைதன்னில் முதலா
னபாக்கியமும்மொழிந்து போகும், எச்சப்பாதேகமது இருந்தாலுந்
தான் வெப்படியுமலாபமென்னவொன்றுமில்லை, கூச்சமன்றிதேகத்
தைமறைந்தாயானால் குவலயத்தில்மெய்யானசித்தென்பாரே. ௭௨௨

## மச்சமுனிஉற்பவம்.

சித்தனுமின்னமொருமார்க்கம்பாரு சீரானவென்மகனேசொல்
லக்கேளு, சுத்தமுடன்மச்சமென்றமுனிவர்தாமும் சொரூபரமென்
றொருவர்சித்துவுண்டு, புத்தியுள்ளசித்தனப்பாமச்சர்தாமும் புகழாக
சமாதிக்கிடமுங்காண, முத்தியுடன்பெறுவதற்கு காவனத்தை
நோக்கிமுயன்றுமேவராககிரிவந்திட்டாரே. ௭௨௩

வந்திட்டபோதுமல்லோ சித்துதாமும் வளமுடனேவராககிரி
தன்னைக்கண்டு, பந்திட்டமாகவல்லோசமாதிபூண பாங்குடனேசிஷ
யர்க்கமனேகம்பேர்கள், தந்திட்டமாகவல்லோகூட்டங்கூடித் தமதடி

யார்வாசிர்மம்விட்டுவந்துமூந்திட்டுக்குழிய துமிகவாய்ச்செய்து மூது
லகில்யோகமதுநீந்திட்டாரே. ௭௨௪

நீங்கியேசமாதியதுபோகவென் றுநீணிலத்தில்மச்சமுனிரிஷியார்
தானும், நோக்கமுடன்குழிதோண்டவிடையுந்தந்து நுணுக்கமுட
ன்சிசருக்குவுபதேசித்து, நாக்கமலம்வீற்றிருக்கும் மனோன்மணி
யாள்தம்மை நயமுடனேகாணுதற்குவெண்ணங்கொண்டு, தூக்கமுட
ன்சிவயோகந்தன்னில்நின் றுசத்தமுடன்குழிதனிலேபடுத்தார்தாமே

படுத்தாரேமச்சமுனிரிஷியார்தாமும் பாருலகில்சிஷரெல்லாந்
திடுக்கிட்டேங்க,தொடுத்தாரேரசகபூரணத்தைதானும் தோற்றமு
டன்லாகிரியிலகித்துக்கொண்டு,விடுத்தாரேகாவிகஷாயந்தன்னை விட்
டெறிந்தார்மேதினியில்பலரும்பார்க்க,கொடுத்தாரேயிதிகாசபுராண
மெல்லாம் கொற்றவனார்சிஷருடன்கொடுத்தார்தாமே. ௭௨௬

தாமானசாஸ்திரத்தைக்கொடுத்துவிட்டுத் தகைமையுடன்சித்
தரவர்கண்ணைமூடி, பாமானபராபரியைமனதிலுன்னிப் பாகமுடன்
கையிரண்டுமேந்திக்கொண்டு, சீரானலோகமதுவாழ்வுமறந்து சிறப்
புடனேசின்மயத்திலிருந்துகொண்டு,கோமானசிஷவர்க்கந்தனையழை
த்துக்கொப்பெனவேதாமுரைத்தார்வதீதந்தானே. ௭௨௭

தானானவதீதமதுயென்னவென்றால் சாற்றினார்சிஷவர்க்கம்யெல்
லோருக்கும், தேனானமொழியதுவுமென்னவென்றால் தெளிந்தநல்ல
சிஷர்களேவெந்தனுக்கு,கோனானகுருசொன்னபடியாகத்தான்குறிப்
புடனேபாறையதுமேலேமூடி;பானனையீஸ்பரியாள்கடாட்சத்தாலே
பாரினிலேகீர்த்தியதுபிறப்பிப்பீரே. ௭௨௮

பிறக்கவேகாயமதுசமாதிபூண்டு பேருலகில்பேரின்பந்தன்னைக்
கொண்டு இறங்கிறேன் சமாதியதுதன்னிலப்பாயெழிலானதேகமது
மூச்சடங்கி, உறக்கமுடன்படுத்திடவேமச்சர்தாமும் வுத்தமற்கள்கற்
றைகொண்டு மூடி, திறக்கவேபனிரண்டுவாண்டுதானும் தீர்க்கமுடன்
கட்டளைகள்பிறக்கலாச்சே. ௭௨௯

ஆச்சப்பாபனிரண்டுங்கடந்தும்போச்சு அப்பனேமச்சமுனிசித்
து தாமும்,மூச்சடங்கியிருந்தாரேசித்து தாமும் மூதுலகில்வருவதற்கு
நாளுமாச்சே, பாச்சலுடன்மச்சமுனிரிஷியார்தாமும் பாங்குடனே
வருவதற்குமுன்னதாக, மாச்சலுடன்சிஷவர்க்கமாயிரம்பேர் மதிப்
புடனேசமாதிக்குவந்திட்டாரே. ௭௩௦

வந்ததுவும்சமாதியதுவெடித்துமேதான் வாகுடனேபிரசன்ன
சொரூபராக, அந்தமுடன்மச்சமுனிசித்துதாமும் அவனியிலேவந்த
வுடன்சிஷவர்க்கம், சொந்தமுடன்ஆயிரம்பேராடிவந்து சொரூப

மென்றசித்தொளிவைக்கண்டபோது, ர்தமுடன்மச்சமுனிரிசியார்
தாமும் பாருலகிலனேகவிதவளஞ்சொன்னரே. ௭௩௧

சொன்னரேபலபலவாம்சித்துதாமும் தோற்றமுடன்சிஷவர்க்
கமனேகமாக, பன்னியேதாந்தசித்துதாமும்பாருலகிலதிசயங்கள்
கூறும்வண்ணம், உன்னவேவாதிசேடனிலுமாகாவுலகத்தில் கண்டறி
யவாருமோசொல், மன்னவர்கள்முதலானோரிப்படியேவாழ்வு மானி
லத்தில்பாரேனுமிப்படி தான்பாரே. ௭௩௨

பாரேதான்மச்சமுநிசித்துதாமும்பாருலகிலிருந்தாரோமண்ணு
ய்ப்போனர், நேரேதான்சித்தொளிவுசிலதுகாலம் நேர்மையுடன்
பூமிதனிலிருப்பதுண்டு, சீரேதான்சிலகாலமிருந்துசென்று சிறப்புட
னேமேதினிக்குவருவதுண்டு, வேரேதான்தேகமதுயிறப்புமுண்டோ
வித்தகனேநிட்சயந்தானில்லைதானே. ௭௩௩

தானேதான்வாக்கியங்கள்கட்டுமொழியுண்டு தாரணியில்யெல்
லா நூல்பொய்யுமாகும், தேனையெனதையர்காலாங்கிநாதர் திகழுட
னேயெந்தனக்குச்சொன்னநீதி, பானுமுறைப்படியேசாத்திரம்பார்
வைபிட்டுசெனனமதுபொய்யென்றெண்ணி, மாணுகானிலத்தில்குளி
கைபூண்டு மார்க்கமுடன்சீனபதிபோனேன்பாரே. ௭௩௪

பார்த்தேனேசீனபதிதன்னின்மார்க்கம் பாங்குடனேயவ்விடத்
தில்சித்துதாமும், தீர்க்கமுடன்நதிமலைகள்சித்துவாடி சென்றுபேசி
னபதிகடலோரந்தான், ஏர்க்கவேசமாதியதுபூண்டுகொண்டு யெழி
லாகத்தாமிருந்தார்வனேகம்பேர்கள், மூர்க்கமுடன்ரிஷிதேவர்தேகந்
தன்னை மூதுலகில்விட்டுமல்லோசவமானுரே. ௭௩௫

சவமாகிப்பிணபாகிமண்ணிற்றானும் சட்டமுடன்சிலகாலமிருந்
துமேதான், தவமொழிந்துகாயாதிகற்பமுண்டு சங்கமுடன்பூவுலகி
லிருந்துகொண்டு, பவமகற்றியெந்நாளும்வுருதிபூண்டுபாரினிலேசித்
தரைப்போல்நியமம்பூண்டு, நிவமுடனேபவமகற்றிதேகந்தன்னை நிட்
சயமாய்மறந்திட்டார்சிலதுபேரே. ௭௩௬

பேரானவாழ்வதும்பொய்யேவாழ்வு பாருலகில்பொய்யல்லால்
மெய்யொன்றில்லை, நேரானசாஸ்திரமுமிப்படியேயாச்சு நிட்சயங்க
ளொன்றில்லைபூலோகத்தில், கூரானமன்னனுக்குமெல்லாம்போவார்
கொற்றவர்களாருந்தானில்லையப்பா, தாரானசாத்திரங்கள்பொய்யல்
லாது தாரணியிலிருப்பார்களில்லையாமே. ௭௩௭

சட்டமுனிவுற்பவம்

ஆமேதானின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் அப்பனேசட்ட
முனியென்றசித்து, தாமேதானொருவராப்பாசித்துதாமும் தாரணி

யில்வெகுகாலமிருந்தாரப்பா, பேரமேதான்காவணத்தே வெகுகாலந்
தான் பொங்கமுடன் தானிருந்தார் தவத்தில்யாகம், நாமேதான்சொ
ன்னபடிகற்பமுண்டு நாதாந்தசித்தொளிவுமிருந்தார்தாமே. ௭௩௮

காமானசித்தொளிவுசிலதுகாலம் தாரணியில்சமுசாரவாழ்க்கை
யற்று, காமானமானதொருகற்பமுண்டு காயத்தையெங்காளும்நிறுத்
தவென்று, வேமானமின்றியேதான்சமாதிபூண வேகமுடன்கானகத்
தைச்சென்றுதாமும், பூமாலைலோகமதிலிருக்கலாகா புகழ்பெறவே
சமாதிக்குயிடங்கொண்டாரே. ௭௩௯

கொண்டதொருயிடமேதுவென்னவென்றால்கொடுந்தூரங்காகிக்
குமேற்கேயப்பா, அண்டமெனுஞ்சூரியருங்காணுக்காடு அவ்விடமாம்
டாகினியாளிருக்குங்காடு, தொண்டருடன்சீஷர்களாயிரம்பேர் தொ
டர்ந்துமேபின்வரத்தானடந்தார், தண்டுளபமாலைபணிபாத்திரங்கள்
சட்டமுள்ளகமண்டலமும்செயகண்டியாமே. ௭௪௰

செயமுடனேவீரமணிவீரசங்கு செம்மையுடன்கமண்டலமுந்
திருவோடுதாமும், பயமில்லாக்குளிகைபாதுகையிலேந்தி பாரினிலே
தானடந்தார்கூட்டத்தோடு, தயவுடனே சீஷவர்க்கமனேகம்பேர்கள்
தாரணியில்பின்றொடர்ந்து தயவாய்சென்று, வயலுடனேகுன்றொன்று
யிருக்கப்பார்த்து வளமுடையகுகையென்று தங்கிட்டாரே. ௭௪௧

தங்கியேகுகையாறுநதியுங்கண்டு தகைமையுடன்குன்றருகேவ
ந்துசென்று, மங்கியேமனம்வாடிசித்துதாமும் மார்க்கமுடன்சமாதிக்
குயெடமுங்கொண்டு, அங்கமுடனிவ்வூறுநல்லூரும் அத்வானகானக
மாம்சித்துதாமும், தங்கமுடன்சீஷர்களைத்தாமழைத்து துறையா
னகுழியதுவுந்தோண்டென்றாரே. ௭௪௨

தோண்டியேசமாதியதுகட்டுமென்றார்தொல்லுலகில்ஆசையது
விட்டேனென்றார், வேண்டியதோருடைமானமறந்தேனென்றார் வே
கமுடன்மனைவியையுந் துறந்தேனென்றார், தூண்டியதோர்மண்ணா
சையற்றேனென்றார் துணைபானசோதரருமிழந்தேனென்றார், பூண்
டிருந்தவாபரணமிட்டேனென்றார் பூதலத்தில்தனையர்களைமறந்திட்
டேனே. ௭௪௩

மறந்தேனேவையகத்துவாசையெல்லாம்மார்க்கமுடன்றானிழந்
துமண்ணிற்சாய, துறந்தேனேகாவிகாஷாயந்தன்னை துப்புறவாய்விட்
டெறிந்தேன்மண்ணின்மேலே, கறந்ததொருபால்போலவாசையற்று
க்கயிலாசங்காணுகிறயிடமுங்கண்டு, பறந்திடவேயென்னமதுகொ
ண்டுமல்லோ பட்சமுடன்சமாதிக்குப்போறேன்றானே. ௭௪௪

தானேதான்சமாதியிலேசென்றபின்பு தகமையுள்ளசட்டமுனி நாதற்தாமும், கோனை நமதையர் தட்சணுயன் குருபரனேந்தானி னேந்துமமாநிறுன்னி, வேனுனயெனதையர் சாமிநாதர் [illegible]டேனே விண்ணுலகிலாசையெல்லாம், போனேனேசமாதி யிட்டவந்தாங்கம் பொன்னுலகு நாட்டுக்குச்சென்றேன் நானே. எசரு

சட்டமுனிநாதரிடம் அசரீரிவாக்குபிறந்தது.

சென்றாரும்சட்டமுனி ரிஷியார்தாமும்சிறப்புடனே சமாதிய னிலிருக்கும்போது, நின்றதொருசிஷவர்க்க மாயிரம்பேர்நிலையான சமாதிதனில்பாதுகார்க்க, வென்றிடவே அசரீரிவாக்குதானும் விரு ப்பமுடன் சிஷவர்க்கங்கேட்கலாச்சு, இன்றுமுதல்முப்புத்திரண்டு வாண்டு முனிவரும் மிருக்கவென்றவாக்குண்டாச்சே. எசசு

ஆச்சப்பாசித்தமுனி சொரூபர்தாமும் அங்கனவேசிஷர்கட்கு ரக்குறைத்தார், மூச்சப்பாதேகமது வடங்கிப்போச்சுமூதலக்கா ரபதற்கு வெகுநாட்செல்லும், போச்சப்பாதேகமது வொடுங்கிப் பாச்சு போனசடலமது மண்ணுள்ளாச்சு, ஏச்சப்பா தேகமது பியாதென்று வெழிலுடனேசப்தமது பிறக்கலாச்சே. எசஎ

பிறந்ததொரு சப்தமதைச் சிஷவர்க்கம் போனவாயிரம்பேர் கட்டபின்பு, இறந்ததொருசட்டமுனிமடிவதில்லைபினிதிரும்பி வரு தற்குஐயமில்லை, திறமுடனேநமதையர் சட்டநாதர் தீரமுடன் பூவு செல்வருவாரென்று, உறமுடனேமாணுக்கராயிரம்பேர் வுற்றதொரு மாதியிடங் கார்த்தார்பாரே. எசஅ

பாரேதான்சமாதியிடங் கார்த்தபோதுபாருலகில் நெடுங்காலங் நூமாச்சு, சீரேதான்சித்துரைுங் காலமாச்சுசீரானவாயிரம் பேர் வர்க்கம், ஊரோடுகூடியல்லோ கும்பலாகவுந்தமர்கள்சிஷவர்க்க சமாதிசென்று, தோனசமாதியிடம் நின்றுகொண்டு தோற்றமு வேதங்களோதுவாரே. எசகூ

ஓதவேசமாதியிடங் கெடுவுமாச்சுவுத்தமர்கள் வேதபாராயண ,நீதமுடன் அர்ச்சனைகள்சமாதிபூசை நித்திலங்கும் பூமுடியா ம்போது, வேதமுடன்கைலாச சட்டநாதர்வேதாந்த சித்தொ சமாதிதானும், நீதமுடன்பாறையது வெடித்தபோது திரளு புறப்பட்டார்சித்ததாமே. எரு0

சித்தான சட்டமுனிநாதர் தாமும் செகசோதி காயமதுவுலகி ன்ன. பத்தியுடன்காயாதிகற்பங் கொண்ட பாங்கான தேகமது

ஜாதிபின்ன வெந்நிபுடன்மேதினியில்வந்தாரும் விருப்பமுடன் சீஷர்களையாசீர்மித்து. புந்தியதுமிகவாகச் சீஷருக்கு போதித்தார் சட்டமுனிநாதர் தாமே. எ௫க

போதித்தவசீரிவாக்கு தன்னைப்பொங்கமுடன் தான்கேட்டுத் தாள்பணிந்து, ஆதித்தன்போலுதித்த சித்துதம்மையடியார்கள் கூட்டமெல்லாஞ்சிறந்துனிந்து, சோதித்தசட்டமுனிநாதர் தம்மை செகருபமுடன்முன்னின்று வினயங்கேட்க, பேதித்தகைலாசநாதர் தாமும் போனசீஷருக்கு வுரைப்பார்தானே. எ௫உ

தானேதான்சீஷவர்க் கந்தனையழைத்து தகைமையுள்ளலே கவிசயங்களெல்லாம், மானேதான்யான் கண்டவரைக்குஞ் சொல்வேன்மகத்தானவாழ்வதுவும் பொய்யேவாழ்வு, தேனான சீஷர்களே யின்னஞ்சொல்வேன் தேகமதுவுலகுதனில்நிலையில்லாது, போனவர்கள் மண்தனிலே மடிந்தபேர்கள் பொங்கமுடன்பூமிதனில் வருவார்தாமே. எ௫௩

வருவாரேகாயாதிகற்பங் கொண்டவரமுடைய ரிஷியாரும்வருவாருண்டோ, குருவானவெனதையர் கடாட்சத்தாலேகொற்றவனேயுபதேசம் பெற்றேன்யானும், அருளானவுபதேசங் கொண்டதாலே அவனியிலேமறுபடியும்வந்தேனென்று, திருவானமனோன்மணியாள் கடாட்சம்பெற்றுதிரும்பி வந்தேன்மாணாக்களென்றிட்டாரே. எ௫ச

என்றுமேசட்டமுனி நாதர்தாமும் யெழிலாகத் தாமுரைப்பார் சீஷருக்கு, தென்றிசைக்குச்சில காலம்போரேனென்று நேர்மேவந்த சீஷருக்கு விடையுஞ்சொல்ல, நன்றதென்றுசீஷ வர்க்கமாயிரம்பேர் நலமுடனேயாம்கூடவருவோமென்று, அன்றனுடன் பின்றொடர்ந்தார் மாய்கைவிட்டு அடர்ந்துமே பின்றொடர்ந்தார் சீஷர்தாமே எ௫ரு

சட்டமுனிநாதர் பொதிகைசாற்பில் சமாதியடைந்தது.

தொடர்ந்துமே காவனத்தைவிட்டுநீங்கிதோற்றமுடன் பொதிகைக்குச் செல்லும்போது, அடர்ந்ததொருகானுறு மலைகள்தாண்டி ஐயமுடன்பின் றொடர்ந்தாராயிரம்பேர், கடந்துமே மலைகுகைகளைவிட்டுநீங்கி வடிதானபொதிகை மலைச்சாற்பிற்சென்று, நடந்துமே கைலாசசட்டநாதர் நாதாந்தக்கூட்டமுட னமர்ந்திட்டாரே. எ௫௬

இட்டாரேசட்டமுனி நாதர்தாமும் யெழிலான குகைதேசந்தன்னிற்சென்று, பட்டமரமொன்று தனைக்கண்டாரங்கே கண்டதும்பட்டமரந்தனிருண்டாகி, சட்டமுடனின்றுநி சமாதிபூணசரக்

முடன்மலை யோரமிருந்தானென்று, வெட்டவெளிதனில் நின்றுமயங்கும்போது வேதாந்த குருபரமும்வந்திட்டாரே. எ௬௭

சட்டமுனிநாதர் வேதாந்தரிஷியைக் கண்டது.

வந்திட்டவேதாந்த ரிஷியார்தம்மை வாகுடனேசட்டமுனியாருங்கண்டு, நொந்திட்டமனதுடனே வினயங்கொண்டு நுணுக்கமுடன் சித்தொளிவைக் கண்ணிற்கண்டு, அந்தமுடனென்சாமி குருவேயென்று வடிபணிந்து கைலாசசட்டநாதர், சிந்தனையுமிகத் தளர்ந்து மெய்மறந்துசீர்பாதந் தொட்டுமல்லோ பணிந்திட்டாரே. எ௬அ

பணிந்திட்ட கைலாசசட்டர்தம்மை பரமகுரு வேதாந்த சித்துதாமும், தணிவுடனே வார்த்தையதுமிகவுஞ்சொல்லி தாரணியில் சிலகாலமிருக்கவென்று, அணியணியாய் சீஷவர்கம்பக்கலிற்க அங்ஙனவே சட்டமுனிநாதர்தாமும், துணிவுடனேவுபதேச மிகவுஞ்சொல்லி துப்புறவாய்சமாதிக்கு யிடந்தந்தாரே. எ௬௯

தந்தாரேவேதாந்த ரிஷியார்தாமும் தகைமையுடன் சட்டமுனிநாதருக்கு, வந்துமேவுபதேச மிகவுஞ்சொல்லி வளமையுடன் சிலகாலமிருந்தபின்பு, சொந்தமுடன் தன் பக்கல் சமாதிபூண சந்தமுடன் சட்டமுனிக்குபதேசித்தது, இந்தவுலகினிலிருக்க நீதியில்லையென்றுமே வேதரிஷி மறைந்திட்டாரே. எ௭0

மறைந்துமேபோகையிலேவிருட்சந்தானும் மறுபடியும் துளிராதுவுமொடிங்கியேதான், குறைந்துமேபச்சை மரம்பட்டுப்போச்சு குவலயத்தில்பேராச்சு மகிமைதானும், நிறைந்துமேசமாதியது மூடலாச்சு திண்மையுள்ளசட்டமுனி மயங்கிநின்று, முறைந்துமே விசனமது மிகவாய்க்கொண்டுமுடிவணங்கிசமாதிதனைப்பணிந்திட்டாரே.

பணிந்துமேசிலகாலஞ் சென்றபின்பு பாரினிலேசட்டமுனிநாதர்தாமும், துணிந்துமேசமாதிக்குப் பின்னுஞ்செல்ல துறையான சீஷவர்க்கந்தனையழைத்து. அணியணியாய்யென் முன்னே சுற்றிருங்கள் வப்பனேவதிசயங்கள் பிறக்கலாகும், மணிபோன்ற வோசையது கேட்கும்பாரு மகத்தானசமாதியிட பீடந்தானே. எ௭௨

சட்டமுனிசமாதியில் சிலம்போசைக்கேட்பது.

தானானசமாதியிடபீடந் தன்னில்தண்மையுள்ள சீஷவர்க்கமாயிரம்பேர், தேனானமணிபோலே சீஷவர்க்கந் தெளிவாகமுன்னிற்கவேண்டுமென்பார், மானானவையகத்தில்வதிசயங்கள்மார்க்கமுடன்

நான் காண்பிர்வதிதமெத்த,பானுனபராபரியாள் கண்ணிற்றேற்றும்
பாருலகிலிருள்வந்து மூடிப்போமே. எசுங

மூடிப்போம்பகல்தனிலேபரிதிகாணூர் மூவேழுமண்டலமுமிரு
ளாய்ப்போகும், நாடியேசித்தர்முனிகடுங்குவார்கள் நாதாந்தசித்
தொளிவுசொரூபங்காணூர், கூடியேகூட்டமிட்டுவார்த்தைபேசி குவ
லயத்திலிவர்போலசித்துண்டோசொல், வாடியேமதிகலங்கமனமும்
பொங்கி வையகத்தில்மதிமயங்கிநிற்பார்தாமே. எசுச

### சட்டமுனிநாதர்மறுபடியுஞ் சமாதிக்குப்போகல்.

நிற்பாரேசமாதியிடநடுமையத்தில்நிலேயானதேகமதைதானிறு
த்தி, கற்போன்றகாயத்தைமூச்சடக்கி காசினியிலெல்லவரும்பிரமித்
தேங்க, தற்பரமாஞ்சொரூபமதையுள்ளடிக்கித் தாரணியில்சமாதிக்
குள்தானிறங்கி, சிற்பரனைத்தியானித்துமனதிலேதான் சின்மயத்தி
லிருந்துகொண்டுசெபித்திட்டாரே. எசுரு

இருந்தாரேமூச்சடங்கிமூன்றுநாளும் செழிலானசிவானந்தவ
முர்தம்பூண்டு, பொருந்தியேகாயமதைமண்ணிற்சாய்ந்து பொங்க
முடன்மேற்பதவிபெறவேயெண்ணி, வருந்தியேசீஷர்களைத்தாமழை
த்து வசனித்தாருபதேசமனேகங்கோடி, திருந்தியேதாமுறைத்துப்
பாறைமூட திகழானபுத்திமதியோதிட்டாரே. எசுசு

ஓதவேசீஷவர்க்கமாயிரம்பேர் ஓகோஓகோநாதாந்தசித்துதாமும்
நீதமுடன்பினனுமவர்சமாதிபூண்டு, நீணிலத்தில்மண்ணேடேகாயந்
தன்னை, தோதமுடன்வுள்ளடக்கியிருப்பதற்கு தொல்லுலகில்பாச
மதைச்சுட்டறுத்து, வேதமுனிவேதாந்தவாக்குபோல வீரமுடன்
தாமறைந்தார்சித்துதாமே. எசுஎ

சித்தானசட்டமுனிநாதர்தாமும்சிறப்புடனேமண்ணதனில்மறை
ந்தபோது, புத்தானமண்ணதுவும்மூடியல்லோ பொங்கமுடன்தான்
சமைந்துவளர்ந்திருக்கும், முத்தானபூசையதுமிகநடக்கும் மூதுல
கில்சட்டமுனிசமாதியென்றும், நித்தமுடன்பூசையதுமிகநடக்கும்
நேர்மையுடனதிசயங்கள்காணலாமே. எசுஅ

காணலாமசரீரிவாக்குண்டாச்சு காசினியில்பதிறுவருடமட்
டும், பூணலாஞ்சமாதிதனிலிருப்பேனென்றும் புகழானவாக்கியமுங்

கேட்கலாச்சு தோணவேதிரிகாலபூசைமார்க்கம் தொல்லுலகில்சீடவ...க்கஞ்செய்வார்பாரு, வேணவேகிதங்கள் வாத்தியங்கள்விருப்பமு...ஞ்செய்பவர்களனந்தமாமே. ௭௬௯

அனந்தமாம்மாவாசைபருவந்தன்னில்வப்பனேயாண்டுக்குஒருனளப்பா, அனந்தமாஞ்சிலம்பொலிபின்னைசகேட்கும் வப்பனேநடுச்சாமவேளைதன்னில், அனந்தமாம்வேதமுறை கோஷ்டந்தானு மவனிபெலாங்கிடுகிடுத்துவதிரனுண்டாம், அனந்தமாஞ்சமாதியதுசுழனுண்டாகும் வப்பனேகோஷ்டமது மிகவுண்டாமே. ௭௭0

உண்டாகுமிவ்வளவுமகிமைதானும் வுத்தமனேசட்டமுனிசமாதிதன்னில் திண்டானவதிசயங்கள் சொல்லப்போமோ திகழானசமாதிக்குவுள்ளதாக,நண்புடனேவதிசயங்கள்மிகநடக்கும் நாதாந்தவித்தொளிவின்மகிமையப்பா, கண்பானசித்துமுனிசட்டநாதர் நாசினியில்வருவதற்கு நாளுமாச்சே. ௭௭௧

ஆச்சப்பாசட்டமுனிவருகுங்காலம் வப்பனேபதினைறுவாண்டுமாச்சு, பேச்சப்பாசொன்னபடி திருஷ்டாந்திரங்கள்பேருலகில்நடந்துவரக்கண்டார்தாமும், மூச்சடங்கிப்போன தொருதேகந்தானும் முன்போலவருவதற்கு நாளுமாகி, பாச்சவுடன்சட்டமுனிநாதர்தாமும்பாறையென்றபுத்தநுவும் வெடிக்கலாச்சே. ௭௭௨

வெடித்தபின்புகைலாசசட்டநாதர் மேன்மையுடன் மேதினியில்வந்தாரங்கேநடிக்கவேநாதாந்தக்கூட்டத்தார்கள்நன்மையுடன் கிட்டிவைத்து நமஸ்கரித்து, துடிப்புடனே கைலாசசட்டர்தம்மைத்தொழுதிறங்கி தெண்டனிட்டுவணக்கங்கூற, கடிப்பிடிவோன்முரசோடுவாத்தியங்கள்கருத்துடனே தானைகைதுத் தொழுதிட்டாரே. ()

தொழுதுமேசீடவர்க்கம்மாயிரம்பேர்தோராமல்மணிவிடைக்குமுன்னேநின்று, பழுதுபடாத்திருமேனி தன்னைப்பார்த்துபட்சமுடன்தானுரைப்பார் சீடரெல்லாம்,வழுவ்வுதும்சோராதமேனிதன்னைவளமுடனே தான்பார்த்துபிரமைகொண்டு, புழுகுடனேவரசனைகள்கையிலேந்தி பொன்னடிக்கு வர்ச்சனைகள் செய்திட்டாரே. ௭௭௪

## சட்டமுனிவர் சீடர்களுக்கு புத்திகூறல.

செய்யவே சீடவர்க்கமாயிரம்பேர் சிறப்பானகெதியெமக்குயென்னவென்று,பையவேதொழுதிறங்கி கேட்கும்போது பட்சமுள்ளகைலாசர்கூறலுற்றார்மெய்யானதேரமதைநம்பவேண்டாம்மேதினியி

லிருந்தாலும் லாபமென்ன துய்யசெம்பொன்கோடிமிகவைத்திட்டாலும் துப்புறவாய்வொன்று வரங்காணேன்பாரே. எஎரு

பாரப்பாமானிலத்தி லிருந்துமென்ன பாங்குடனே மாளிகை தான்கட்டிமென்ன, நேரப்பாவுலகுதனை யாண்டுமென்ன நேர்மையுடன்சிவயோகஞ்செய்துமென்ன, சூரப்பாபலநூலுங்கற்று மென்ன கொற்றவனும்மதியூகியானாலென்ன,வேரே தான்காயாதி கற்பங்கொண்டுவிருப்பமுடன்யிருந்தென்னலாபங்காணே. எஎசு

காணேனே லாபமொன்றும் பார்த்ததில்லை காசினியி லாசைக் கோரளவுமில்லை, பூணாரம்பூண்டென்ன காயத்துக்கு புகழானதேக மதுநிலைநில்லாது, வீணானவுலகுதனிலாசைகொண்டு விருப்பமுடன் கெட்டவர்கள் கோடாகோடி தோணுதகருவெல்லாந்தோன்றச்செய்து தொல்லுலகிலிறந்தவர்கள் கோடியாமே. எஎஎ

கோடியாம்புகாந்தவரை காலமப்பா கொற்றவனே யிருந்தாலு மொன்றுமில்லை,நாடியேபராபரத்தை நண்ணலொபமாங்கலமுடனே பாரினிலேயிருந்துகொண்டுதேடியேநாள்வருகுங்காலம்மட்டும்தேசமதில்பவக்கடலைநீக்கியே தான்வோடியேபலவழியிற் சென்றுநீதான் வுத்தமனே புனிதனாயிருந்துகொள்ளே. எஎஅ

கொள்ளவே நன்னிலையி லிருந்துகொண்டு கொடும்பாசந் தனையகற்றிக்,குவலயத்தில்விள்ளவேபாசமென்ற கயத்தைநீக்கிவேதாந்த நூட்பத்தின்செயலுங்கண்டு, மெள்ளவேகும்பகத்திலிருந்துகொண்டு மேலானசிவயோகந் தன்னிற்சென்று, வுள்ளபடியாத்தும் கந்தனாகிவுலகுதனில்சிலகாலமிருந்திடாயே. எஎகூ

இருந்தாலுந்தேகமதுநிலைநில்லாது வெழிலான காயமதுமண்ணாய்ப்போகும்,குருந்தவேகாயாதி கொண்டிட்டாலும் கொப்பெனவேமண்ணோடே மண்ணாய்ப்போகும், பொருந்தவே நானிருந்தேன் கோடிகாலம் பொங்கமுடன்காட்சிகளுமனேகங்கண்டேன் வருந்தியே பராபரத்தை மனதிலுன்னி வாகுடனே காண்பதுவே மோட்சந்தானே. எஅ0

தானானமோட்சவழிக்கிடமேதேடி சதாகாலமிருப்பதுவேசாயுச்சியந்தான்,கோனானயென்னையர் சொற்படிக்கிகொற்றவனேயிரண்டுமுறைசமாதிகண்டேன்தேனானசீடர்களேநீங்களுந்தான்தெரிந்திரு

ந்துபவக்கடலிற்சாரவேண்டாம், மானைவையகத்தில்சிலநாள்தங்கி மார்க்கமென்னும்மோட்சவழிசேருவீரே. ௭௮௧

சேருவீரென்றலுமேசட்டநாதர் செம்மலுடன்பூலோகவாசை விட்டு, பாருள்ளேமறுபடியுஞ்சமாதிக்கேக பட்சமுடன்சீஷருக்குத் தாமுரைத்து, சீருடனேசமாதிக்குள்பிரவேசமாகி சிறப்புடனேசமாதிதனைமூடுமென்று, தூருடனேசமாதியதுதிறக்கவேண்டாம் துப்புறவாய்த்தேகமதுமண்ணாய்ப்போமே ௭௮௨

போமேதான்சடலமதுமண்ணாய்ப்போகும் பொங்கமுடன்திரக்காமலென்றுசொல்லி, ஏகுமேசட்டரிடவாக்குதப்பி யெழிலானசமாதியதுதிறக்கவேண்டாம், ஆகுமேதேகமதுவழிந்துபோகும் வப்பனேயான்வருகமாட்டேனென்றார், சாகுமேதேகமதுசதாகாலந்தான் சட்டமுடனிருந்தாலும்பலங்காணேனே. ௭௮௩

காணேனேகாயாதிகற்பந்தன்னை கருவாகயான்கொண்டபடியினாலே,வீணாகதேகமதுவழியாதப்பா மேதினியில்வெகுகாலமிருக்கலாகும், பூணாதசமாதியதுமூடியல்லோ பொங்கமுடன்சதாகாலமிருக்கவேண்டும், கோணாதவுலகமதுமுடிவுகாலம் தோற்றமுடன்வருவதும்வுண்மையாமே. ௭௮௪

### கமலமுனிஉற்பவம்.

உண்மையாயின்னமொரு மார்க்கஞ்சொல்வேன் வுத்தமரேமாணாக்கரறியவென்று,வண்மையாங்கமலரென்றமுனிவரப்பாவரைசோடிவெகுகாலமிருந்தசித்து, நன்மையாந்திரை கடல்களேழுஞ்சுத்திநாட்டிலுள்ள வளப்பமெல்லாங்கண்டாராய்ந்து, தண்மையுடன்சீனபதிதந்துமல்லோ தாக்கானபதிதேடியமர்ந்திட்டாரே. ௭௮௫

அமர்ந்தாரேஅலைகடலிலோரமப்பா அங்குள்ளகற்பாறைத்தன்னிலேதான், சுமர்ந்திடவேபிரதமையாமொன்றுதானும் சுசீலமுடன்மலைதன்னையேசுமந்துகொண்டு, சுமர்ந்திடவேமலைதனிலேகுகைதானுண்டு தடாகமுண்டுகானாறுவதிலேயுண்டு, சுமர்ந்திடவேகமலமுனிசித்துதாமும் கருவாகசுனையோரமிருந்திட்டாரே. ௭௮௬

இருக்கவேகமலமுனிசித்துதாமும் யெழிலானசிவயோகந்தன்னில்நிற்க, வருகவேமலைதனிலேசீஷவர்க்கம் வளமாகநூறுபேர்கூடிருந்தார், பொருக்கவேகமலமுனிவருகிற்சென்று பொங்கமுடன் சாஷ்டாங்கசரணஞ்செய்தார், தருக்கவேகமலமுனிசித்துதாமும் நயவுடனேயாரென்றுகேட்டார்தாமே. ௭௮௭

கேட்டதொருவிடைகனக்குருவுக்காரமென்றார் செவனமுடன்க
மலமுனிசொன்னதற்கு,மீட்டமுடன் சீஷவர்கம் நூறுபேறும்நேர்மை
யுடன்குருதனக்குக்கூறலுற்றார், நாட்டிகமாய்பலைதனிலேவந்தசித்து
தாரணியிலபுருபசித்துவென்று, நாட்டமுடன்நாங்களெல்லாந் தம்
மைக்கண்டு நலமுடனேசுகம்பெறவேவந்திட்டோமே. ௭௮௮

வந்தோமேசித்தொளிவின்பதாம்புயத்தை வாகுடனேகண்டுதெ
ரிசிப்பதற்கு, அந்தமுடன்வந்ததொருயெங்களைத்தான் வாதரிக்கவே
ண்டுமென்றுவடிபணிந்து, யெந்தவிதந்தன்னிலே தானெங்களுக்கு
வெழிலானவுபதேசஞ்செய்வீரென்று, முந்தவேகுகைதேடிவந்தோ
மையா முன்னின்றுகார்க்கவெனவருந்திட்டாரே. ௭௮௯

வருந்திட்டசீஷருக்குக் கமலர்தாமும் வளம்பெறவேஞானோப
தேசஞ்சொல்வார்,தொகுக்கிட்டமலை தனிலேயிருந்துகொண்டு தோ
ற்றலுடன்சமாதிக்குயிடமுஞ்சொல்லி, பகுத்திட்டமாகவேதான்சமா
திபூண்டு பட்சமுடன்தாமுறைந்தார்சீஷருக்கு, விகுத்திட்டமாகவல்
லோகமலர்தாமும் பேரானசமாதியிடம்நின்றார்பாரே. ௭௯௦

## சீஷருக்குகமலமுனி புத்திகூறல்.

பாரேதான் சீஷவர்க்கந்தனையழைத்து பாங்குடனேகமலமுனிகூ
றும்வண்ணம், நேரேதான்தேகமதைமறந்தேனப்பா நேர்மையுடன்
பாசபந்தமற்றேனென்றார், சீருடனேவுயிர்த்தோழனிழந்தேனென்
றார் சிறப்பானசீஷவர்க்கமறந்தேனென்றார், நீரேதான்பாருலகுமறந்
தேனென்றார் நீரமுடன்மூவாசையற்றேன்தானே. ௭௯௧

## கமமுனிசமாதிக்குயேகும்போது புஜண்டரைநினைத்தல்.

தானானபேரின்ப நிலையில்நின்று சார்பானசித்தின்பநிலைமறந்
தேன், தேனானயெனதையர்புஜண்டரப்பா குருவினதுவாக்குபிசகா
துவண்ணம்,பானானமனோன்மணியைமனதிலுன்னி பாருலகில்வாக்கு
முறைகூறலுற்றார், தேனானயென்குருவேபுஜண்டநாதர் தேற்றமுட
ன்சமாதிக்குப்போரென்றானே. ௭௯௨

போர்கின்றேன்வையகத்தையான்மறந்து பொங்கமுடன்சமாதி
தனிலிறங்கவேதான், சாகின்றசமாதியதுவடியேன்றனும் சட்டமுட
ன்சிலகாலமிருப்பதற்கு, நோகின்றேன்யெனதையர் புஜண்டநாதர்
நோக்கமுடன்னடியேனுஞ்சமாதிபூண, யாகின்றவடியேனும்நினைக்
குங்காலம் பட்சமுடனுதரிக்கவேண்டும்பாரே. ௭௯௩

வேண்டியேகமலமுனிசித்துதாமும் வேதாந்தபுஜண்டரைத்தா
ன்நினைந்துமல்லோ,கூண்டுடனேகாயமதுவழியாமற்றான் சொப்பென
வேசமாதிதனி லிறங்கும்போது, தூண்டியேசிஷர்களைத் தாமழை
த்து துப்புறவாய்கூறலுற்றார்கமலர்தாமும்,மாண்டுமேசினபதிதன்னி
லப்பா மகத்தானசமாதிதனிலிறங்கிட்டேனே. எகூச

இட்டேனேநெடுங்காலமிருபதாண்டு யெழிலானசமாதிதனிலி
ருப்பேனென்று, சட்டமுடன்சரீரவாக்குண்டாச்சு சதானந்தசிஷரெ
ல்லாங்காதிற்கேட்டார், திட்டமுடன்யிருபதுவாண்டுபின்பு நீரமுட
ன்மேதினியில்வருவேனென்று, கட்டானவாக்கியமும்பிறக்கலாச்சு
கருவானசிஷரெல்லாம்பயந்திட்டாரே. எகூரு

பயந்திட்டுநெடுநெடுங்கிநிற்கும்போது பாருலகில்சப்தமதுபின்னு
மாச்சு, நயந்திடவேகுழிதனிலேபாறைதன்னை நயமுடனேமூடவென்
றுவாக்குண்டாச்சு, தயவுடனேசிஷரெல்லாமௌனங்கொண்டு தரா
ணிபினிசும்மாயிருக்கலாகா, வியந்துமேகற்பாறைதன்னையெடுத்து
விருப்பமுடன்சமாதிபதுமூடிட்டாரே. எகூசு

மூடியேநிற்குமந்தக்காலந்தன்னில் மூசியாமல்கமலமுனிசித்து
தாமும், நாடியேசிஷவர்க்கம்பாவுங்கேட்க நளினமுடன்அசரீரவாக்
குறைப்பார், தேடியேசமாதிதனிலிருபதாண்டு தேற்றமுடன்யானி
ருந்துவருகும்போது, வாடியதோர்பயிரெல்லாஞ் செழித்திருக்கும்
வளமையுடன்பட்சிமுதல்பேசும்பாரே. எகூஎ

பேசுமேமிருகமெல்லாஞ் ஞானங்கூறும் பேரானமலைதனிலே
சோதிகாணும், ஏசுவின்றன்சிஷரெல்லாமெதிர்நிற்பார்கள் யெழிலா
னகுருடரெல்லாங்கண்திறப்பார், மாசில்லாநிலவதுவுஞ்சூரியன்போல்
மானிலத்திலூமையவன்பேசுவான்பார், தேசுபுகழ்சப்பாணிநடப்பா
ன்பாரு தேசத்தில்மகிமையதுமிகவுண்டாமே. எகூஅ

உண்டானவதிசயங்களின்னங்கேளு வுத்தமனேதானடக்கும்ம
கிமைகோடி,கண்டாலும்லோகமதுயிருளடைந்து கதிரோனுங்கண்ம
றைந்துநிற்பான்பாரு, அண்டமுடநட்சத்திரமதிரல்காணும் அவனி
யெலாங்கிடுகிடுத்துயிடியுமுண்டாம், கொண்டல்வண்ணமேகமதுகர்ச்
சிக்கும்பார் குவலயத்தில்தேவர்முனிகாணலாமே. எகூகூ

காணலாம்தேவாதிதேவர்தானும் காசினியில்கண்ணுக்குத்தோ
ற்றுவார்பார், வேணபடிராட்சதபூதங்களெல்லாம் வேடிக்கையாகவல்

லோகிதம்பாடும்,தோணவேபலபலவாந்தெய்வம்யாவும் தொல்லுலகி
ல்கண்ணுக்குத்தோற்றலாகும், வேணபடிவதிசயங்கள்மிகவாய்க்கா
ணும் விண்ணுலகுதத்தளிக்குஞ்சேடனுமே. ௮௦௦

சேடனும்ஆதியென்றசேடந்தானும் திடுக்கிட்டுமெய்மறந்துமன
ந்தளர்ந்து, கூடனுடன்கமலமுனிகுவலயத்தில் கொப்பெனவே வரு
வதற்குநாளுமாச்சு, தேடவேசிஷாதிசிஷரெல்லாம் திடுக்கிட்டுமெய்
மறந்துசமாதிபக்கல், நாடவேசமாதியதுமுன்னேநிற்க நலமானபா
றையதுவெடிக்கலாச்சே. ௮௦௧

வெடித்தபின்புகமலமுனிசித்துதாமும் விருப்பமுடன்புஜண்ட
ரைத்தான்மனதிலெண்ணி, அடிப்படையிலிருந்துமல்லோசித்துதா
மும் அவனியிலேபாறையதுவெடித்தபின்பு,நடிப்புடனேசெகசோதி
மின்னல்போல நாதாந்தசித்தொளிவும்வெளியில்வந்து,துடிப்புடனே
சிஷவர்க்கந்தன்னைக்கண்டு தீர்க்கமுடன்தாமுரைத்தாரதீதமாமே. ()

அதிதமாங்கமலமுனிசித்துதாமும் வன்பாகசிஷவர்க்கந்தன்னை
நோக்கி, பதிதமுள்ளவதிசயங்கள்சொன்னதெல்லாம் பாருலகில்நடந்
ததுண்டோசிஷமாரே, கதிதமுடன்மெய்யாச்சுபெந்தநாதர் காசினியி
ல்யாவற்றுங் கண்டோம்நாங்கள், பதிதமுடன்குருசொன்ன வாக்கு
போல பூவுலகில்நடந்தேறிப்போச்சென்றாரே. ௮௦௩

போச்சென்றுசொல்லுகையில்புனிதனார் புகழானபுஜண்டரைத்
தான்நினைத்துமல்லோ,மாச்சனுடன்சிலகாலம்பூமிதன்னில் மகாகற்ப
மூண்டுமல்லோவாசிபூண்டு, ஏச்சலில்லாவையகத்தில் சித்துதாமும்
யெழிலாகசிலகாலமிருந்தாரங்கே, பாச்சனுடன்மறுபடியுஞ்சமாதிக்
கேக பாங்குடனேபுஜண்டரைத்தான்நினைத்தார்தானே. ௮௦௪

தானனகமலமுனிநினைத்தபோது தகமையுள்ளபுஜண்டரிஷித்
தாமுங்கேட்டு, பானனகமலமுனிநாதருக்கு பாங்குடனேயசரீரிவாக்
குதந்தார், கோனனயெனதையர்காலாங்கிநாதர் கொற்றவனே துவாப
ரயுகத்திலப்பா, தேனனசீனபதிசமாதிதன்னில் தெரிசினைகள்தான்
கொடுத்து லடங்கினாரே. ௮௦௫

அடங்கியேசமாதிதனிலொடுக்கமாகி அவனிதனிலாசைதன்னை வி
ட்டொழித்து, தடங்கண்டுசீனபதிசமாதிபூண்டு தாரணியிலிருக்கும
ந்தகாலந்தன்னில், உடங்கொண்டுயெந்தனையுஞ்சமாதிக்கேக வுத்த

மனுர்தாமுறைத்தாரெந்தனுக்கு, படமுடனேயவர்பக்கல் யானுஞ்
சென்று பாரினிலேவாசையெல்லாமறந்திட்டேனே. ௮௦௬

மறந்திட்டேன்லோகாசைத்தனைவெறுத்து மார்க்கமுடனவர்பக்
கல்சமாதிபூண்டேன், திறந்திட்டார்ஞானோபதேசமெல்லாம் தீர்க்க
மூடன்யான்கேட்டுசமாதிகொண்டேன், குறந்திட்டதேகமதுநிலைநில்
லாது கொப்பெனவேசீஷர்க்காரீயுமப்பா, பறந்திட்டபூமிதனைவிட்
டொழித்து பாங்குடனேசமாதியிடஞ்சேருவீரே. ௮௦௭

சேரவென்றுசொல்லுகையில்புஜண்டர்தாமும் சிறப்புடனேகமல
முனிகூறலுற்றார், தீரமுடன்வுலகுதனில்பதினாறுண்டு திறமுடனே
யானிருந்துவருவேனென்று, கூறவேகமலமுனிசித்துதாமும் கொப்
பெனவேதானுறைக்கசீஷரெல்லாம், பாரமுடன்சித்தொளிவில்பக்கம்
நின்று பாங்குடனேவெகுகாலம்பணிசெய்தாரே. ௮௦௮

கமலமுனி இரண்டாவது சமாதிக்கு ஏகல்.

செய்தாரேகமலமுனிரிஷியாருக்கு சிறப்புடனேபணிவிடைகள்
மிகவுஞ்செய்து,மெய்யாகசீஷர்க்கங்கூடிருந்து மேதினியில்சித்தொ
ளிக்குப்பணிகள்செய்து, பையவேபதினறுவாண்டுமட்டும் பாருல
கில்கூடிருந்தார்சீஷர்தாமும், மெய்யாகதேகமது வருந்தியேதான்
மேதினியில்வெகுகாலம்காத்தார்தாமே. ௮௦௯

காத்தாரேசீஷர்க்கமனந்தம்பேரும் காசினியில்சித்தொளிவு
நாதருக்கு, பூர்த்தியாய்ப்பதினறுவாண்டுமாச்சு பொங்கமுடன்சீஷர்
களைத்தாமழைத்து, நேர்த்தியுடன்சமாதிக்குச்செல்வதற்கு நேர்மை
யுடன்காலமதுநெருங்கிப்போச்சு, சாத்திரத்திலுள்ளபடிதப்பாவண்
ணம்தகமையுடன்போகுகின்றேன்வண்மையாரே. ௮௧௦

பாரேதான்சமாதியிடஞ்சென்றாரப்பா பான்மையுடன்குழிதனி
லேயிறங்கிநின்று, நேரேதான்கும்பகத்திலிருந்துகொண்டு நேர்மை
யுடன்கண்ணிரண்டும்மூடியல்லோ, சீரேதான்காங்குவித்துதலைநிமிர்
ந்து சிறப்பானநாதாந்தசித்திதாமும், கூரவேகற்பாறைத்தனையெடு
த்து குறிப்புடனேசமாதிதனைமூடிட்டாரே. ௮௧௧

கமலமுனிசீஷர்களுக்கு அசரீரிவாக்குகூறல்.

மூடிட்டசமாதிதனிலதிசயங்கள் மூதுலகில்கேட்பதற்குவளமை
சொல்வார், நாடிட்டநான்வருகும்நாளைதன்னில் நலமானவதிசயங்கள்
மிகநடக்கும், பாடிட்டபார்லோகமிருண்டுபோகும் பகலிரவுபகலா

கத்தோற்றும்பாரு, கூடிட்டமிருக்மெல்லாம்ஞானம்பேசும் குறிப்பா னபட்சிகள் தான்பேசும்பாரே. அகஉ

பேசுகையில்கமலமுனிவருவரென்று போனபட்சிகளும்மிக வேகூறும், வீசுபுகழ்தேவரெல்லாம்புட்பமாரி மேதினியில்பொழி வதுபோல்தோன்றும்பாரு, மாசுணடையஞானமதுசோதிவீசும் மகத் தானநட்சத்திரமதிரும்பாரு,ஏசுடையசிஷவர்க்கமானபேர்கள் யெழி லானசமாதிமுன்னேநிற்பார்பாரே. அகங

பாரேதான்சிஷவர்க்கம் நிற்கும்போது பாங்கானகுருடனவன் கண்திறப்பான், நேரேதான்மனக்கண்ணுபவனுக்குண்டாய் நீணிலத் தில்நடப்பதெல்லா முன்னேசொல்வான், சீரேதான்சப்பாணிவூமை தானும் சிறப்பானரூபமதை மாற்றிக்கொள்வார், வேரேதன்சப்பாணி வூமையாவான் வீரானவூமையவன்சப்பாணியாமே. அகச

ஆமேதான்யின்னம்வெகுவதிசயங்கள் அப்பனேதானடக்கும திந்துபாரு, நாமேதான்சொன்னபடிபிரளயங்காணும் நலமானராசா திராசரெல்லாம், போமேதான்பிரளயத்தில்மாண்டுபோவார் பொங்க முடன்வாரிதியும்வற்றிப்போகும, தாமேதானசுராக்கள்கூட்டந்தா னும் தாரணியில்சமாதியிடங்காண்பார்பாரே. அகரு

காண்பாரேலோகவதிசயங்களெல்லாங் காசினியில்வெகுகோடி சித்துவித்தை,வீண்பாகுருவில்லாசிஷன்முன்னேவித்தையென்னுங் கவிதனையேகற்றுப்போல, மாண்பமைந்தவதிசயங்களெல்லாந்தோன் றும் மானிலத்திலசரீரவாக்குதோன்றும், ஆண்மையுள்ளசிஷரெல் லாங்காதாற்கேட்டு வவனியிலேதானடுங்கிமயங்குவாரே. அகசு

மயங்கியேநிற்கையிலேயசரீரிவாக்கு மானிலத்திலதிகமதாய்க் கேட்கலாகும், தியங்கியேசப்தமதுவடங்கிப்போச்சு திறளானகூட் டத்தார்சிலதுகாலம், புயங்கமுடனங்கிருந்தார்சிஷவர்க்கம் புகழானசித் தொளிவுவருகுமட்டும், தயங்கியேகாத்திருந்தார்சமாதிதன்னில்தார ணியில்சித்துவரும்நாளுமாச்சே. அகஎ

ஆச்சப்பாசித்துவரும்காலமாச்சு அங்கிருந்தசிஷரெல்லாஞ்சமா திமுன்னே, மூச்சடங்கிபோனதொருசித்துதாமும் மூதிலகில்வரு கின்றநாளுமாச்சு,பாச்சலுடன்மனதில்நினைக்கும்போது பளிச்சென் றுபாறையதுவெடித்திதங்கே, கூச்சலுடன்தேவதா கோஷ்டந்தா னும் கொப்பெனவேசிஷருக்குகேட்கலாச்சே. அகஅ

கேட்டுமேசித்தொளிவை வெளியிற்காணகெவனமுடன்சிஷமெ
ல்லாம்பயந்துயேங்கி, நீட்டமுடன்மேதினியில் வந்தபோதுநேர்மை
யுடன் சிஷவர்க்கந்தாள்பணிந்து, கோட்டமுடன் சித்தொளிவைச்சூ
ழ்ந்துகொண்டு கொப்பெனவே யாசீர்மம்மிகவுஞ்செய்ய, தேட்டமு
டன் கமலமுனிசித்துதாமும் தேற்றலுடன் ஞானோபமோதுவாரே.

ஓதியேசிஷவர்க்கந் தன்னைக்கேட்டார் வுத்தமரேவதிசயங்கள்ந
டந்ததென்ன, நீதமுடனசரீரிவாக்குவண்ணம் நிலைதப்பிப் போகாம
ல்நடந்ததுண்டோ, வேதமொழிதப்பாதுயானுரைத்தேன்மேதினியி
லதிசயங்க ளுள்ளதெல்லாம், சோதனையின் பிரகாரஞ் சூட்சாதாரம்
சொரூபமதைத்தானறிந்து சொன்னேன்பாரே. ௮௨௦

பாரேதான்கமலமுனி சொன்னவாக்குப் பாரினிலே மெய்யல்
லால்பொய்யொன்றில்லை, சிரேதான்சொன்னபடி நடக்கலாச்சு சிறப்
பானவுபதேசம்மெய்யுமாச்சு, நேரேதான்வேதமுறை தப்பாவண்ண
ம் நேர்மையுடன்ஞானோபம்பெறுவதற்கு, தேரேதான்நாளாச்சுயெ
ன்றுசொல்லி தெளிவுடனேகமலமுனி யுறைத்தார்தாமே. ௮௨௧

தாமானசிஷவர்க்கந்தன்னைப்பார்த்து தகமையுடன்ஞானோபஞ்
சொல்லும்போது, பூமானுஞ்சிஷவர்க்க மனைத்தும்பார்த்து பூவுலகில
திசயங்களெல்லாந்தேர்ந்து, நாமானகபிலமுனி சொன்னவாக்குநளி
னமுடன்நடந்தேறிப் போச்சுதென்று, ஆமெனவேசிஷவர்க்க மொ
ன்றாய்க்கூடி அடிவணங்கிமுடிவணங்கித் தொழுதிட்டாரே. ௮௨௨

இட்டதொருகமலமுனி சொன்னவாக்கு யெழிலுடனேபின்னு
ம்யான்சமாதிபூண, சட்டமுடன்தாரணியில் நிற்கேனென்றும்சாங்க
முடன்தாமுறைத்தார் கமலர்தாமும், திட்டமுடன்சமாதிக்குப்போ
ரேனென்றும் தீரமுடன்கோடிவரை யிருப்பேனென்றும், வட்டமுட
ன்காயாதிகொண்டதாலே வாகானதேகமது வழியாதன்றே. ௮௨௩

அன்றானகாயாதிகற்பந்தன்னால் அழியாது தன்தேகமழியாதெ
ன்றும், குன்றானமலைபோலே யிருப்பேனென்றுங்குவலயத்திலின்ன
ம்வெகுவதிசயங்கள், வென்றிடவேசமாதிதனி லிருப்பேனென்றுவீ
ரமுடன் தாமுறைத்தார்சிஷருக்கு, சென்றிடவே யினிதிரும்பிவருவ
தில்லை சேர்வையதுவுலகுநாள்முடிவுமாச்சே. ௮௨௪

ஆச்சப்பாவுலகுதனில் முடிவுகாலம் அவனியிலே யாவரையுங்
காணலாகும, பேச்சப்பாயிறந்தவர்கள் வருவதில்லை போனவுலகு
தனில்மொழிபொய்யாகும், மூச்சடங்கிப்போனதொரு தேகந்தானும்

மூதுலகில்மறுபடியும் வருவதுண்டோ, பாச்சலுடன்தேகமது முடி வுகாலம்பாரினிலேயாவரையுங் காணலாமே. அஉரு

கர்ணலா மென்றலுமே கமலர்தாமுங்காசினியில் தாமுறைந்து சமாதிபூண்டார், தோணவேதொல்லுலகைத்தான்மறந்து துறையோ டும்முறையோடுஞ் சமாதிபூண்டு வேணவேயிதிகாச புராணகற்பையி ருப்பமுடன் தாமறிந்த சித்துவாமும், பூணவேமிகவறிந்துசிஷருக்கு புத்திமதிசொல்லியல்லோ மறைந்திட்டாரே. அஉசு

மறைந்தாரேசினபதிக் கடலோரந்தான் மகத்தானகமலமுனி நாதர்தாமும், இருந்தாரேபுஜண்டருட சமாதிபக்கல் வெழிலான கட லோரந்தன்னிலப்பா, துறந்துமேசிஷவர்க்கந் தனைப்பிரிந்து தொல் லுலகில்சமுசார வாழ்க்கையற்று, திறமுடனேசமாதிதனிலிறங்கியே தான் தீரமுடன்பூமிலயிக்கிபமானாரே. அஉஎ

கலாங்கி நாதருற்பவம்.

ஆனாரேகாலாங்கிநாதரப்பா அப்பனேசமாதியது சொல்வேன் பாரு, தேனமிர்தமுண்டு மல்லோபூமிதன்னில்தெளிவுடனேசிலகால மிருந்தார்தாமும், கோனனெனதையர்சாமிதானும்குவலயத்திலதி சயங்கள் மிகவும்பார்த்து, பானனசாத்திரத்தின்படியாகத்தான் பத னமுடன்சமாதிக்கு நண்ணினாரே. அஉஅ

நண்ணவே லோகமெல்லாஞ்சுத்திவந்து நலமானகானாறுமலைக ள்தாண்டி, குண்ணதனில் வெகுபேர்கள் சித்துதம்மைக் குறிப்புட னேகண்டுமல்லோ மிகவாதித்து, எண்ணமுடன்சினபதிக் கடலோர ந்தான்வெழிலாகச் சமாதியது மிகவேபூண, வண்ணமுடன்நாதாந்த சித்துதாமும் வளமையுடன்சமாதியிடம்சேர்வந்திட்டாரே. அஉகூ

வந்திட்டகாலாங்கிநாதர் தாமும்வண்மையுடன்சமாதிக்குப்போ றேனென்று, நொந்திட்டதன்மனது வுறுதிகொண்டுநொடிக்குள்ளே சமாதிக்குப் போறேனென்று வெந்திட்ட தன்மனது கருகிவேறுப் வேதாந்தசற்குருவை மகாதிலெண்ணி, அந்தமுடன் வவனிதனிலா சையற்றேன் அன்பானதோழனைத்தான் மறந்திட்டாரே. அகூ0

மறந்திட்டகாலாங்கி போகர்தம்மைமாற்கமுடன்றானழைத்துக் கூறலுற்றார், சிறந்திடவேசமாதிக்குப் போரேனப்பாசிருள்ளகாய திகற்பங்கொண்டு, திறமுடனேவையகத்தி லிருந்துமென்னதீர்க்கமு

டன்தேகமதுநிலைநில்லாது, அறந்தழைக்கவெப்போதும் புனிதவா ளுய் அவனியிலேவாக்குறைத்தார்காலங்தானே அஙக

தானனகாலாங்கி நாதர்தாமும் தாரணியில்வெகுகோடி காலம ப்பா,தேனனகற்பமதுவுண்டுமல்லோ தேசத்தில்வெகுகாலமிருந்தசி த்து, ஊனனசடலமதுவெறுத்தசித்து வுலகுதனில்மாய்கைதனைத்தி ண்டாசித்து, கோனனயெனதையர்காலாங்கிசித்து கொற்றவனுர்க தையுரைப்பேன்பண்பாய்த்தானே. அஙஉ

பண்பானகாலாங்கிநாதர்தாமும் பாருலகில்மூவாசையற்றசித்து, தண்மையுடன்சினமதுவுமில்லாச்சித்து, தாரணியில்வேதமதைத்து றந்தசித்து, வண்பானவையகத்தோர்துதிக்குஞ்சித்து வாமையுடன் சினபதியமருஞ்சித்து,கண்பானசாத்திரங்கள்யாவுங்கண்டு கரைகண் டகாலாங்கிசித்துதாமே. அஙந

சித்தானகாலாங்கியென்றசித்து திறமுடையகாயாதிகற்பங்கொ ண்டு,மூத்தானகூடுவிட்டுக்கூடுபாய்ந்து மூனியாகநன்மறையுஞ்சித்து தாமும், சத்தானசாகரமுங்கரைகண்டசித்து சாங்கமுடன்சமாதிக்கு ச்செல்லுஞ்சித்து, கத்தனென்னுங்கைலங்கிரிநாதர்தம்மை காட்சியு டன்கண்டதொருசித்துதாமே. அஙந

தாமானராஜாங்கசித்துவப்பா தாரணியில்யாரேனும்பணியுஞ் சித்து, சமானமானதொருசித்துதானும் சதாகாலம்வையகத்திலிருந் தசித்து, கோமான்கள்கொண்டாடுஞ்சித்துவப்பா குவலயத்திலரிஷி கள்முதல்போற்றுஞ்சித்து, நாமானகண்டமட்டும்சொல்வோம்பாரீர் நாதாக்கள்பிழைக்கவென்றுநவிலத்தானே. அஙச

போகருக்குகாலாங்கிபுத்திகூறல்.

நவிலவேபோகரென்றயெந்தனைத்தான் நாதாந்தசித்தொளிவைத் தானழைத்து, புவிலமுடன்சித்தொளிவுசொன்னநீதி புகழுடனே வண்ணமுடன்யானுரைப்பேன், கவிலமதாய்காசினியிலாசைவிட்டுக் கர்த்தரிடபதிதேடிபோறேனப்பா, தவிலமுடன்யெப்போதும்புத்தி மானுய் தாரணியில்யெந்தன்பேர்கொள்ளென்றாரே. அஙரு

கொள்ளவேசன்மார்க்கப்புத்திவேண்டுங்குவலயத்தில்மதிப்புள் ளசிஷனுக, எள்ளளவும்பிசகின்றிநடக்காவண்ணம் யெழிலானசிஷ னுக்குகந்தவானுய், கள்ளமின்றிபொய்சூதுகபடுதந்திரங் காசினியில ற்றதொருபூமானுக, விள்ளவேயாவருக்குமன்பனுக மேதினியிலிருப் பதுவேபுத்தியாமே. அஙசு

புத்தியுடன்றானிருந்துச்சாயுச்சியகாலம் புகழாகதாரணியில்கீர்த்
திபெற்று, சத்தியத்துக்கோர்நாளுந்தவறில்லாமல் சட்டமுடன்மே
தினியிலிருந்துகொண்டு, நித்தியமுஞ்சுதாகாலம்குருவைப்போற்றி
நீதியுடன்னிட்டையிலேதானிருந்து, முத்தியுடன்நாற்பதவிபெறவே
வேண்டு மூதுலகிலிருக்கவெனவறைந்திட்டாரே. அகூஎ

அறையவேகாலாங்கிதானுரைத்த அன்பானவார்த்தைக்குவடி
யேன்றானும், குறைகளுந்தான்நேராமலடியேன்றானும் குற்றமறநட
ப்பேனானென்றுசொல்லி, நிறையகற்றியவர்பாதம்தொழுதுபோற்றி
சிந்தனையாம்மெய்மறந்துநமஸ்கரித்து, முறையோடுசோடசவுபசாரத்
தோடு முடிவணங்கிதொழுதிட்டேன்காலர்தாமே. அகூஅ

காலராமென்மீதில்பட்சம்வைத்துக் கவனமுடனடப்பதற்குமிக
வாய்க்கூறி, பாலமுடன்நேசர்கள்மிகக்கொள்ளாதே பாரினிலேகர்மி
களும்பாவியுண்டு, கோலமுடன்நல்லவர்போலிருப்பாரப்பா பொங்க
முடனவர்களைத்தான்நம்பவேண்டாம், சீலமுடன்யாவருக்குநண்பனு
கச் சிறப்புடனேவாழ்கவென்றுவரந்தந்தாரே. அகூகூ

வரமுடனேதான்கொடுத்துக்காலாங்கிநாதர் வண்மையுடனசமா
திக்குப்போகவென்று,கரமெடுத்துக்கண்ணதனில்வொத்திக்கொண்டு
கருத்துடனேகாலாங்கி நாதர்தாமும், சிரங்குனிந்துதன்னீருதான்
நலக்கி சிறப்புடனேயெந்தனுக்குப்புத்திகூறி, மரம்போலத்தானிரு
ந்துகாலாங்கிநாதர் மயக்கமுடன்விடைகொடுத்தாரெனக்குத்தானே.

தானேதான்மனந்தளர்ந்துவடியேன்றானும் தகைமையுடன்ம
றுபடியுங்கூறலுற்றார், தேனனையென்சீஷர்போகநாதா தேற்றமுடன்
வுந்தனுக்குப்பின்னுஞ்சொல்வேன்,மானிலவையகத்தில்கோடிசித்து
மகத்தானநாதாக்களிருப்பார்பாரு, பானுமனோன்மணியாள் பாதம்
பெற்ற பட்சமுள்ளசித்துகளுமிருப்பார்தாமே. அசக

இருப்பாரேகுவலயத்தில் கோடிசித்து யெதிர்த்துமிகப்பேசா
தேயெந்தன்சீஷா, பொருப்புடனேயவர்களுக்குப் பணிவாய்நில்லு
பொங்கமுடனவர்களுமேவணக்கஞ்சொல்லி, தருப்புடனேயுந்தனுக்
குவுபதேசங்கள் சாத்துவார்வபிமானந்தன்னதான விருப்புடனேசாப
மதுசொல்வாரானால் வீரமுடன்யெந்தனையுநினைத்திடாயே. அசஉ

நினைக்கையிலேசாபமது சுவர்ந்துபோகும் நீணிலத்தி லுந்தனை
யுமதிப்புகொண்டு, பனைப்புடனேகாலாங்கிசீஷனென்று பட்சம்வை
த்துஞானோபம்பின்னுஞ்சொல்வார், இனையளவுகோபமதுவாராதப்பா
திறமையுடன்நீயுமொருசித்தனவாய், மனையுடனேசமுசார வாழ்க்
கையற்று மானிலத்தில்வாழ்கவென்றுவசனித்தாரே. அசச

வசனித்தசொற்கேட்டுவடியேன்றானும் வையகத்திலெகுகோடிசித்துவாடி, நசமுடனேபத்துயுகமிருக்கவென்று தாரணியில்காலாங்கிதம்மிடத்தில், நிசமானகுளிகைபதுபெற்றுக்கொண்டு நேர்மையுடன்வுபதேசமிகவுங்கேட்டு, குசமுடனேயட்டதிசைசெல்லவென்று கொப்பெனவேவுபதேசமபெற்றேனென்பாரே. ௮௪௪

## போகர்சீடனாகிய புலிப்பாணிக்குக்கூறல்.

பாரப்பாபுலிப்பாணிமைந்தாகேளு பாங்குடனேகாலாங்கிநாதர்தாமும், நேருடனேசமாதிக்குச்சென்றபோது நேர்மையுடன்வுபதேசம்பின்னுஞ்சொல்வார், சீருடனேயெந்தன்மேல்பட்சம்வைத்து சிவியசாலமதுவுள்ளமட்டும், பாருடனேஎந்தனேயுஞ்சித்தர்தாமும் பட்சமுடன்காக்கவென்றுபதஞ்சொல்வாரே. ௮௪௫

## காலாங்கிநாதர்சமாதியிலிருந்து மறுபடியும் போகருக்குபுத்திகூறல்.

சொல்வாரேயெந்தனதுபோகநாதா தொல்லுலகில்ரிஷிமுனியாரனேகருண்டு, வெல்லவேயவர்களிடம்வாய்பேசாதே விறைசித்தர்முனிகருமியுண்டு,நல்லவர்போலுந்தனிடம்வுறவுபேசி நாதாந்தசித்தொளிவுநான்தானென்று, சொல்லவேமனந்தனிலேவினயம்பேசி கூடிருந்துவுந்தனுக்குவினைசெய்வாரே. ௮௪௬

வினையானநல்வினையுமுனக்கிருக்க விட்டகுறைதீவினைக்கியாளாக்கி, இனையளவுபொன்னதுமுனக்குக்கூறார் ஈங்கினையேவிளம்பார்கருமிமாண்பர், சினங்கொண்டுவலியவேவாதுபேசி ஞானவுபதேசங்கிடைப்பதற்கு, மனங்கொண்டுதொடருவாருந்தன்பக்கல் மர்மத்தைக்காட்டாதேமன்னுகேளே. ௮௪௭

காட்டாதேநானில்லாக்காலமாச்சு கண்மணியேகலியுகமும்பிறக்கலாச்சு, வாட்டமுடன்வாதனக்குபிதவுரைத்து வாருடனேநல்லவன்போலிருந்துகொண்டு, தேட்டமுடன்சிவயோகந்தன்னிற்சென்று தெளிவானசித்தர்முனிதம்மைக்கண்டு, நாட்டமுடனவர்பாதந்தொழுதுபோற்றி நலம்பெறவேபூமிதனிலிருப்பாய்தானே. ௮௪௮

தானனையெந்தனிடபோகநாதா தன்மையுள்ளகண்மணியேபின்னுஞ்சொல்வேன், தேன்னதெள்ளமுர்தசிவராஜயோகா தெளிவானதினபதிக்கரசுள்ளதீரா,பானனைமனேன்மணிபாள்துகந்தநற்பாலாபாருலகில்சித்தர்மெச்சும்பண்புடையதேகா, மானனைவையகத்தில்யோனகுகந்தசிஷா மாட்சியுடன்நானுரைப்பேன்யின்னமிகக்கேளே. ௮௪௯

கேளேதான்சீனபதிமார்க்கந்தன்னில் கெவனமுடன்குளிகையதுகொண்டுநீயும்,காளடாகோட்டையதுக்காவல்தாண்டி நலமுடனே ...

தான்போகும்வழியிலப்பா, கேளடாசித்தர்முனியதிககூட்டம் கும்ப
ல்கும்பலாகவல்லோகூடிருப்பார், விடாகுளிகைகொண்டுபோகும்
போது வின்னுலகுசித்தனென்றுசபிப்பார்பார்பாரே. அ௱௦

பாரானசித்தர்முனிசபிப்பாரப்பா பாரினிலேமகிமையுள்ளசித்
தருண்டு,சீரமுடனெந்தனையும்போற்றமற்றான் சீர்க்கமுடன்சபிப்பதற்
குவருவாரப்பா, கோரமுடன்ரிஷிமுனிவர்வந்தபோது கோபத்தை
யடக்கியல்லோவிதையஞ்சொல்லி,நேசமதாவும்பேரில்நேசமற்றான்
சொற்சேர்வநேசமல்துணிவாயில்லை. அ௱௧

நிற்கையிலேசித்தமுனி யாரென்றாலே நீதியுள்ளகாலாங்கிசிஷ
னென்று, சொற்பமுள்ளபோகரிஷிதான்தானென்று சூட்சமுடன்த
லைகுனிந்து வணக்கஞ்சொல்லி, அற்பமுள்ளவெந்தனையும்வாதரிக்க
ஆண்டவனேயுன்னைவிடகுருதானுண்டோ, தப்புறவேயவர்பாதந்தொ
ழுதிட்டாக்கால் தொல்லுலகில்வெகுகாலமிருக்கலாமே அ௱௨

இருக்கலாம்கோடிவரையிருக்கலாகும் யெழிலானகன்னியனே
போகநாதா,பொருக்கவேயெந்தனுக்குஞானோபதேசம் பொருமையு
டன்கொடுக்கவென்றுவரமுங்கேளு, அருக்கனேயென்தேவர்காலாங்
கிநாதர் அவர்தானேநீயென்றுதாள்பணிந்து, பெருக்கமுடன்கரங்கு
வித்துபதம்பணிந்து பேரானவுபதேசஞ்செய்குவீரே. அ௱௩

செப்பவென்றுகேட்கையிலேபோகநாதா சேர்வைதரயுந்தன்மே
ல்கிருபைவைத்து, வுப்பதொருகருணிகரஞானியெல்லா முந்தமனேயு
ந்தனுக்குத்தத்தஞ்செய்வார், மைவிழியார்தன்னாசையகற்றியேதான்
மானிலத்தில்சமுசாரவாழ்க்கைபற்று, பெய்யவேயுந்தனுக்குமனதுவ
ந்து பேரானவுபதேசம்போதித்தாரே. அ௱௪

### போகர்இமயகிரிக்குப் போவாரானால் காலாங்கி நாதர்சமாதியில் சொன்னபுத்தி.

போதிப்பார்காலாங்கிநாதர்தாமும் பொன்னானகண்மணியேபுக
லக்கேளு, ஆதித்தகன்போலுதித்தபோகநாதா வன்புடையசீனேயி
ன்னங்கேளு,சோதியென்னும்மகம்மேருபர்வதத்தில் சுந்தரகுளிகை
கொண்டுபோகும்போது, பாதிபதிசடையணிந்த தம்பிரான்போல்
பாலகனேவேடமதுபூணுவாயே. அ௱௫

பூணுவாய்குளிகைபதுமிக்வேபூண்டு புகழுடனேமேருகிரிதன்
னிற்சென்று,காணுதற்குநீயுமங்கேபோவாயானால் கனமானசித்தொ
ளிவுயனேகமுண்டு, வேணவுபசாரமுமிகவமிந்து வேகமுடன்குளி
கைகொண்டு சொல்லும்போது, மூனுமேமுவரைநீனயேகாணவெ
ன்றமுனியாகப்போம்போதுவரிசைகேளே. அ௱௬

வரிசையுடன்வொவ்வொருவர்கள்மேரு றும்வண்மையுள்ளசித்தர்முனிரிஷிகள் கூட்டம், பரிவுடனையாரென்றுகேட்பாரப்பா பாலகனையுந்தனையுமெங்கேவந்தார, சரிப்பானசித்தனைபோல்குளிகைகொண்டு சட்டமுடன்மேருதனில்வந்தானென்று. மரியாதைத்தனையுமாறி வம்புமீறி மகமேரில்வந்தவரீயாரென்பாரே. அ௫எ

ஆரென்றுகேட்டுமல்லோ யுனைமிரட்டி வப்பனேகண்மணியே போகநாதா, பேரென்னவென்றுறைத்துயுள்ளேகேட்டு பேராவமலை தனிலேவந்தவன்யார், ஊரென்னபதியென்னயவர் தானப்பா வுத்தமனேகுளிகைகொண்டுவந்ததென்ன, நீரென்னவலுவல்கொண்டுயிங்குவந்தீர் நிட்சயமாய்ச்சொல்லுமெனவினவுவாரே. அ௫அ

வினவியேகேட்கையிலேபோகநாதா விருப்பமுடன்மனதுவந்து சொல்லக்கேளும், தினகரன்றன்னொளிவீசுங்காலாங்கிநாதர் திகழ்வேந்தசத்தொளிவின்சீஷனென்று, மனதுவந்துநீர்தானேசொல்வீரானால் மன்னவுனையுன்மீதிற்கிருபைவைத்து, சினமதுவைவிட்டொழித்துசித்தர்தாமும் சிறப்புடனேயுநதனுக்குவிதிசொலவாரே. ()

விதியானவுபதேசஞ்சொல்லுவார்கள் விண்ணுலகுவதிசயங்கள் மிகவுரைப்பார், மதிப்போன்றயெந்தனிடபோகநாதர் வையகத்தில் கீர்காணும்புத்திமானாய், துதியுடனேகாலாங்கிசீஷனென்று துப்புறவாய்நீயுரைத்தபோதேயப்பா, கதிபெறவேயுந்தனுக்குபாவுஞ்சொல்லி கருவானபோகரென்றுகருதுவாரே. அ௬௦

கருதவேகுளிகைகொண்டுபோகநாதர் கடலேழுஞ்சுத்திவருங்காலந்தன்னில், நிருதமுள்ளரிஷிக்கூட்டங்காணும்போதுநித்திலங்கும்பூமுடியாசொல்வேனமகனே, விருதுடையகுளிகைதனைப்பார்த்தபோது விண்ணுலகுசித்தனென்றுமனதிலெண்ணி, துரிதமுடன்குளிகைதனைப்பறிப்பதற்கு சூதுமுறைசெய்வார்கள்சித்துதாமே. அ௬க

சித்தானமுனிவருடசூதுபார்த்து சீருள்ளகண்மணியேபோகநாதா, பத்தியுடனெந்தனையுங்நினைத்தபோது பட்சமுடனுந்தனுக்கு முதலாய்நின்று, வெத்தியுடன்மேதினியில்வாள்வதற்கு வேதாந்தத்தாயினதுகடாட்சத்தாலே, சத்தியமாய்பாதுகாப்பேனென்றுசொல்லி சமாதிக்குள்சத்தியங்கள்கூறினாரே. அ௬உ

இராமதேவரென்னும் யாக்கோபுடற்பவம்.

கூறவேயின்னமொருமார்க்கஞ்சொல்வேனகுவலயத்திலெந்தனதிருகுருவானநாதர், தேறவேகாலாங்கிநாதர்தாமும் தெளிவுடனேயெந்தனுக்குவுரைத்தவண்ணம்மாறவேராமரென்னும்பேர்தான்கொண்ட மகத்தானயாக்கோபுசித்துதாமும், ஆறவேசிலகாலம் பூமிதன்னில் அனேகவண்ணவதிசயங்கள்செய்திட்டாரே. அ௬௩

செய்திட்டாரென்றலுமேயெனக்குரைத்த தெளிவானவதிசயத் தைச்சொல்வேன்பாரீர், வையகத்தில்மேவங்கைதனில்வீற்றிருக்கும் வளமானபுலிப்பாணிசித்தேகேளும், துய்யகல்லயாக்கோபுரிஷியார் தாமும் துன்பசாகரமென்னும்மாய்கைதன்னை, பையவேவிட்டொ ழித்துப்பாருமப்பா பாங்குடனேமக்காவுக்கேகினரே. அசுச

யாக்கோபுமக்காபுரியில் சமாதியடைந்தன.

ஏகினர்யாக்கோபுமுனிவர்தாமும் பெழிலானமக்காபுரித்தன் னைக்கண்டார், பூகிகாமதிமந்திரியோகவானும்வுத்தமனாங்கொருவர் தானிருந்தார், யோகியாஞ்சின்மயத்தில், சேர்ந்தசித்துயொளிவான ரிஷியொருவராங்கிருந்தார், சாகினியாம்யாக்கோபுநாதர்தாமும் சட்ட முடன்யுபதேசஞ்செயதார்பாரே. அசுரு

பாரானயாக்கோபுநாதர்தாமும் பண்புடனேசித்தொளிக்குவுப தேசித்து, நேரானதனக்குகந்தசீஷனுக்கி நேர்மையுடன்தான்கற்ற கல்வியெலலாம், சீரானசித்தமுனிரிஷியாருக்கு சிறப்புடனேவைய கத்துமார்க்கமெல்லாம், தூரானமந்திரமாம்ஞானவர்க்கம்துறையோ டும்முறையோடுமோதினரே. அசுசு

ஓதியேசிலகாலமங்கிருந்துவுத்தமனர்யாக்கோபுமுனிவர்தாமும், நீதியுடன்சமாதிக்குப்போகவெண்ணி நித்திலங்குஞ்சீஷனைத்தான்ம னதுநோக்கி, சாதியுடனமறப்புள்ளோரெல்லாம்தமமை சட்டமுடன் தானமறந்துசமாதிக்கேக, சோதியுடபரவொளியைக்காணவென்று சுத்தமுடன்மனந்தனிலேயெண்ணினரே. அசுஎ

எண்ணியேதனக்குகந்தசீஷனுக்கு பெழிலாகத்தாமுரைப்பார் யாக்கோபாரும், தண்ணமுடனசமுசாரவாழ்க்கையற்றேன் தகமை யுள்ளமைந்தாகளையான்மறந்து, நண்ணியேயில்லறத்தைத்துறந்து மல்லா நாதாந்தப்பேரொளியைக்காண்பதற்கு, வண்ணமுடனசமா திதனிலிறங்கவென்று வையகத்துவாசையெல்லாமறந்திட்டாரே. ()

மறந்தாரேபூலோகவாசையெல்லாம் மார்க்கமுடன்சின்மயத்தி னொளிவுகாண, துறந்தாரேமூவாசையற்றேனென்றார் துறவிக்குவேந் தெல்லாந்துரும்பேயென்பார், சிறந்ததொருவஷ்டபாக்கியமறந்தேன் செயலானந்திகளெல்லாம்விட்டொழித்தேன், இரந்தாரேதேகத்தை விட்டொழிந்து பெழிலானசமாதிதனிலிறங்கிட்டாரே. சுசுகூ

இறங்கியேசமாதிதனிலிருந்துகொண்டு பெழிலாகச்சீஷனுக்கு வத்தஞ்சொலவார், சிரங்கமெனகுழிதனிலேபோனேனப்பா கருந் பொருளகருங்கரணதியெல்லாம், யாங்கமுடன்வுளளடக்கிமனதிருத

திவையகத்தின்வாழ்க்கையெலாந்தினையாகற்றுவுறங்களுடள்பத்தான்
டியிருப்பேனென்று வுத்தமியே யாக்கோபுகூறினாரே. ௮௭௦

கூறினார்சமாதிதனிலிருந்துகொண்டு கொற்றவனேயென்சிஷர்கு
ருவாயெண்ணி, மாறிடவேகற்பாறைதன்னைமூடி பகத்தானசமா
திக்குப்பூசைமார்க்கம்,தேறிடவேதினந்தோறுமாச்சித்தேதான திக
மூடனேநான்வருகுங்காலந்தன்னில், வேறிடவேயெந்தனிடஞ்சமா
திமுன்னே விருப்பமுடன்காத்திருந்துகாண்பீர்தானே. ௮௭௧

தானேதான்நான்வருகுங்காலந்தன்னில் தகமையுள்ளவதிசயங்
கள்மிகநடக்கும், போனவுடனமக்காவிலதிசயங்கள் பொங்கமுடன்நா
விற்சொல்லொண்ணாது, தேனமிர்தமானதொருமுழைதான்பெயும்
தேசமெல்லாந்தேறுவோடும்பாரு, மானமிர்தமானதொருவுத்தா
ரையின் மார்க்கமுன்ளசமாதியதுவெடிக்கும்பாரே. ௮௭௨

நபியின் சமாதியிடம் வாக்குபிறந்தது.

வெடித்தபின்புவசரீரிசவாக்குண்டாகும் வேதாந்தயாக்கோபுவரு
வாரென்று, மடிந்தவரும்மாந்தரெல்லாங்கடைசிநாளில் வையகத்தில்
நாதாந்தநபியாருக்கு, துடியானகுற்றமதைக்கேள்விகேட்டு துப்புற
வாங்காதாந்த நபியாருக்கு, முடியரசர்முதலானோர் முனிவர்தாமும்
முன்னின்றுகேள்விக்குவிடைசொல்வாரே ௮௭௩

விடையானவார்த்தைக்குவுறுதிசொல்லி மேன்மையுடன்பதவிக்
குயிடமுந்தேடி, தடையறவேகுற்றத்திற்காளதாகி தரணிதனில்வெ
குபாவந்தலைமேற்கொண்டு, கடையானநாளதனில்பாவத்துக்காளா
ய்ப் பாருலகில்படுநரகம்வாய்க்கும்பாரு, குடையானகர்ணனுமிருந்தி
ட்டாலும் குவலயத்தில்பாவத்துக்குறுதியாமே. ௮௭௪

உறுதியாமின்னம்வெகுவதிசயங்கள் வுத்தமனேசொல்லுகிறே
னன்பாய்க்கேளும்,குருடமுடன்வக்கினியாம்மாருபெய்யுங் குன்றின்
மேல்காடெல்லாமெரிந்துகொல்லும், சொரூபமுள்ளசித்தர்முனிரி
ஷிகள்பேரில் சொர்ணமழைபெய்வதும்மகிமையாகும்,அருமையுடன்
தானியங்களெல்லாந்தங்கம் வப்பனேபொன்போலேவீசும்பாரே. ()

பொன்னனமழைமாரிப்பொழியும்போது பொங்கமுடன்பூமிக்
குள்ளிடியுண்டாகும், சின்னமுடன்சமாதிதனில் கோஷ்டந்தானும்
திறமுடனேபூமிதனில்கேட்குப்பாரு, மன்னவர்கள்ராசாதிராசரெல்
லாம் மானிலத்தில்திசைமாறிப்போவார்கண்டீர்,துன்னவேசூரியாள்
சந்திராளும் துறைகாணார்திசைதனில்நிற்பார்தாமே. ௮௭௬

நிற்பாரேயருந்து திசை ... ... னூ... லேனிலத்தில்மிருகமெல்லாம் ஞானங்கூறும், அற்பமி... ... ... சனிதன்னில் ஆண்டவனார் கபுருபன்கிருபைதனைனல், சொற்பெரியசமாதிதனில்புத்துண்டாகும் சொர்ணமென்றவைந்து நல்நாகமப்பா, கற்பாறைமேலிருந்துஞானஞ் சொலனும் ... சிறியில்யாக்கோபுவருளைச்சே. அளஎ

யாக்கோபுவருலவென்று ஐந்துநல்நாகங்கூறினது.

...ன்றுகூறுமப்பாநாகந்தானும் வவனியிலேயாக்கோபுவரு வாரென்று, மூச்சடங்கிபோனவொருசித்துதாமும் மூதுலகில்வரப் போ...ன்றுசொல்லி, பச்சனுடன் நாகமதுபரிந்துகூறும் பாருலகி ல்பார்த்தவர்கள்பிரம்மைகொள்வார், கூச்சனுடன்கபிக்கூட்டமார்கள ப்பா செத்தறவனேசமாதியிடம்வருவார்ப்பாரே. அளஅ

பாரேதான்பார்லோகந்தத்தளிக்கும் பாங்கானசமாதியதுவெடி த்துதங்கே, நேரேதான்யாக்கோபுமுனிவர்தானும் நேர்மையுடன்செ கசோதிபோலவந்தார், சீரேதான் அல்லாவுத்தாலாவென்று சிறப்பு டனேவாய் தனிலேகூறிக்கொண்டு, சேரேதான்வையகத்தில்வந்தார ப்பா சிறப்பானயாக்கோபுமுனிவர்தானே. அளகூ

முனியானயாக்கோபுசித்துதாமும் மூதுலகில்சமாதிவிட்டு வரு கும்போது, கனியானநவக்கனிகளொன்பதோடுங் கடிதானரொட்டி யொன்றுகையிலேயேந்தார், தொனியானவாத்தியங்களோடுதானும் தோற்றமுடன்வையகத்திலவருகும்போது, தனியானசிஷனவர்தன் னைப்பார்த்து தன்மையுடன்ஞானோபமோதுவாரே. அஅ0

ஓதுவார்யாக்கோபுமுனிவர்தாமும் ஓகோகோநாதாந்தசிஷருக் கு,நீதமுடன்ஞானோபதேசந்தன்னை நேர்மையுடன்தானுரைத்துபுத் திகூறி, போதமுடன்சீடர்முகந்தன்னைநோக்கி பொங்கமுடன்யாக் கோபுகேட்கலுற்றார்,சாதமுடனசமாதிக்குச்சென்றபோது தாரணி யிலதிசயங்களென்னென்றாரே. அஅக

என்றுமேயாக்கோயுசொன்னதற்குயெழிலாகச்சுஷனவர்தானு ரைத்தார், குன்றுனையனதேவர்குருவேநாதா குவலயத்தைவிட்டு மல்லேசமாதிதனனில், அன்றுதான்போனவுட னவனிதன்னில் அனேகமாய்க்கூட்டமதுமிகவாய்க்கூடி, இன்றுதான்யாக்கோபுசமாதி சென்றார்யினிதிரும்பிவருவதில்லையெனறிட்டாரே. அஅஉ

யாக்கோபுசமாதியிலிருந்து வந்தவுடன்பூலோகத்தில்.

நடந்தஅதிசயமென்னவென்று சீடனைவினவ.

இட்டாரேவெகுமாண்பர் கும்பல்கூடி யெழிலாகவேவளிதங்கள் மிகவுஞ்சொன்னார், திட்டமுடன்யாககோபுசமாதிசென்று திரும்பி

வருங்காலமது மில்லையென்றார், பட்டதொருதேகமது மண்ணுப்
போச்சு, பாரினிலேயாக்கோபு மடிந்துபோனார், சட்டமுடன் யாக்
கோபு மடிந்தாரென்று தாரணியில்பெருங்கூக்கல் பிறந்தியாச்சே.

ஆச்சப்பாவென்றேதான் சாமிநாதா அவனிதனிலடிமேலிருந்தே நட
டிருந்தேன், பேச்சடங்கிப்போனதொருயாக்கையேதானும் ...றநல
இல் வருவதுவும்பொய்யோதானும், கூச்சலுடன்வெகுமான்பர்களும்பல்
கூடி குவலயத்தில்வெகுறடன் வார்த்தைசொன்னார், ஏச்சாகக்கூறி
னதோர்மொழிகட்கெல்லாம் யெதிராகயானொன்றும்பேசேன்பாரே.

பாரேதான்வெகுகாலஞ் சமாதிபக்கல் பாரினிலேவருவாரும்
போவாருண்டு, நேரேதான் அவர்களிடம் வார்த்தைபேசேன் நேர்
மையுடன்சமாதியிடம் பள்ளிகொள்வேன், கூரேதான்சமாதியிடம்
இருந்துகொண்டு கொப்பெனவேதேவர்வருங்காலமட்டும், ஊனேதா
ன்போகாமல் காத்திருந்து உறுதியுடன்சேர்வையதுகண்டிட்டேனே.

கண்டிட்டேனென்றேதான் குருவேயென்ன கருவானயாக்கோ
புமனதுவக்க, பண்டிதர்கள்கொண்டதொருசீடனுக்கு பட்சமுட
ன்தானுரைப்பார் தரணிமீதில், வண்டதுவும்மதுதனையே கவிழ்ந்
தாப்போலும் மானபொம்யாக்கோபு முனிவர்தாமும், தண்டைய
மானதொருதேகந்தானும் தாரணியிலிருந்ததென்ன மாணுண்டாச்சே.

ஆச்சப்பாதேகமதுசிதைவில்லாது அப்பனேயுலகமெல்லாம் பொய்
யேவாழு, மூச்சடங்கிசமாதிதனிலிருந்துமென்ன மூதுலகில்பெரு
ண்டாய்வாழ்ந்துமென்ன, பாச்சலுடன்சீடர்களு மாயிரம்பேர் பக்க
மதில்தேகமதைக்காத்துமென்ன, பாச்சலுடன்மகாதேசம் விதிக
ளெல்லாம் மானிலத்தில்யான்தேடி வென்றுங்காணேன் ௮௮௭

காணேனேதேகமது காயகற்பங்கருவாக யான்கொண்டுபலனு
மில்லை, தோணவேகாலுபுகமிருந்துமென்ன தொல்லுலகை யொரு
குடையிலாண்டுமென்ன, வேணவேலாபமது வொன்றுங்காணேன்
வின்னுலகுகாணுவது மெத்தநன்று, பூணவேசமாதிகொள்வேனெ
ன்று புகழுடனேசீடனுக்கு வுரைத்தார்தானே. ௮௮௮

யாக்கோபு இரண்டாவது சமாதிக்கு ஏகல்.

தானேசீடனுக்குப்பின்னுஞ்சொல்வார் தன்மையுள்ளயாக்கோ
புமுனிவர்தாமும், கோனேகநாயகன்சொன்னவாக்குகொப்பென
வெகுவலயத்தில்பொய்யாவண்ணம், பானுவை...ன்மணியாள்கடா
ட்சத்தாலே பாரினிலேசமாதிக்குப்பின்னுஞ்செல்வேன், தேனான
கன்மணியேசீடபாலா தேகமனைநம்பவில்லை... ன்றார்தாமே.

தாமேதான்யாக்கோபுசித்துதாமும் சட்டமுடன்சமாதிஇ
பக்கல்வந்து, போமேதான்முன்சென்ற சமாதி...னில் செ...

முடன் அடைவதற்கு முனிவர்தாமும், நேமமுடன்குழிதனிலே யிருந்துநின்று திட்டமென்னுஞ் சதாசிவத்தை மனதிலெண்ணி, நாமமுடன் அல்லாவுத் தலைவனவை சாங்கமுடன் மனத்தனிலே எண்ணினாரே, ௬௱௰

எண்ணியேயாக்கோபு முனிவர்தாமும் வெழிலானசீஷனைத்தா மழைத்து, வண்ணமுடன்வையகத்தைத் தான்மறந்து வாகுடனே சீஷனுக்கு வுரைத்தவர்தாமும், கண்ணுனகண்மணியே சீஷபாலா தாசி னிவாயன்சமறந்தேகன் பாறைதன்னை, இன்னமுடன் மூடியல்லவே சமாதிதன்னை திர்க்கமுடன்காத்திருக்க வென்றிட்டாரே. ௬௱௰௧

அசரீரி வாக்குகூறல்.

என்றவொருயாக்கோபு முனிவர்தாமும் வெழிலானவார்த்தை யது சொல்லக்கேட்டு, நன்றுடனே சீஷனவர்பாறைதன்னை நலமாக மூடியல்லவே பக்கல்நின்றார், குன்றனையாக்கோபுவாக்குதத்தங்கூறு வார்சீஷனுக்கு வாசிர்தம்மை, வென்றிடவேரிஷிபாரும் மனதுவந்து விருப்பமுடன்முப்பத்து வாண்டுதானே. ௬௱௰௨

ஆண்டானமுப்பதுவருஷகாலம் லப்பனேசமாதிதனிலிருப்பே னென்றும், மாண்பேமேதகமது மண்ணிற்சென்று மறுபடியுஞ்சமா திட்டு வருவேனென்று, கூண்டுவிட்டுக்கூண்டடைந்த கதையைப் போலகொப்பெனவேமேதினியில் வருவேனென்று, ஆண்டகையா ந்தனைநினைந்து முனிவர்தாமும் வன்புடனேதாமுரைத்தார் வாக்கு தானே. ௬௱௰௩

வாக்கானவாக்கதுவுங் கூறியல்லோ வையகத்தில்யாக்கோபு பின்னுஞ்சொல்வார், தாக்கானசமாதிதனி லிருந்துமேதான் தண் மையுள்ளசீஷனுக்குப் பின்னுஞ்சொல்வார், நோக்கமுடன்சமாதி முன்சென்றபாதுகொடிதாவகமரைத்தசீஷவர்க்கம், ஆக்கமுடன் தாமுரைத்த சீஷரெல்லாம் அவனிதனில்குருடாக்க காணபீர்தாமே

யாக்கோபு சாபத்தால் சீஷர் குருடானது.

காணவேயின்னம்வெகு வருஷங்கள் கலியுகத்து மாண்பருக்கு மகிமைசொல்வேன், பூணவேயான்வருங்காலந்தன்னில் புகழுடனே வக்கரசங்கம் வெளிச்சங்காணும், காணவேகாதாக்கள் முனியர்தாமும் நடுக்கமுடன்நபிதமக்கு வஞ்சியல்லோ, தோணவேயர்ச்சனைகள்மிக வுஞ்செய்து தோற்றமுடன்சமாதிக்கு முன்னிற்பாரே. ௬௱௰௪

முன்னின்றுயாக்கோபுவருவதெப்போ மூலனென்சாபமது தனி ர்ப்பதெப்போ, மன்னவர்கள்மாண்பரிடம் வினையைநீக்கி மானிலத் தில்வரங்கொடுக்கும் காலமெப்போ சொன்னதொரு வாக்குமொழி பிசகாவண்ணம் தொல்லுலகில் மகிமைதனைக்காண்பதெப்போ, தன் மையாய்க்காதாக்தமுனியர்தாமும் நயமுடனேயாக்கோபைத் துதித் திட்டாரே. ௬௱௰௫

அதித்தொருசித்தரெல்லாமெச்சவேதான் துரைராஜசுந்திரரு
ம்யாக்கோபாரும், மதித்திடவேசமாதிதனிலிருந்துமேதான் மார்க்க
முடன்செகசோதிபிரகாசம்போல், கதிப்புடனேசமாதிவிட்டுயேகியே
தான் கனமானயாக்கோபுமுனிவர்தாமும், விதிப்படியேவாக்குறைக
ள்பொய்யாவண்ணம், விருப்பமுடன்நிறைவேற்றவந்திட்டாரே.

வந்ததொருயாக்கோபுமுனிவர்தாமும் வாகுடனேபகடுறைத்த
மாந்தரெல்லாம், சிந்தனையாய்மனங்கலங்கிமெய்நடுங்கி சிற்பானார்யாக்
கோபுவந்தாரென்று, தந்தமக்குள்பயந்துமல்லோஒடுக்கமாகி தாரணி
யிலவர்மயங்கிநிற்கும்போது, நிந்தனையாய்வந்ததொரு சாபத்தாலே
நீணிலத்திலெல்லவருங்குருடானாரே. ௮௯௮

குருடாய்ப்போனவர்கள்சிலதுமாண்பர் குவலயத்திலழிந்தவர்
கள்சிலதுமாண்பர், இருடாரயொளித்தவர்கள்சிலதுமாண்பர் தீர்க்கமு
டன்வாய்குளறிசிலதுமாண்பர், இருளதனில்கண்ணொளிவுமயங்கியே
தான் யீராக்காலங்தெரியாமற்போனபேர்கள், வாகுடமாம்வெகுகால
மிக்கோலந்தான் வதைபட்டுவழிந்தாரேகோடிபாரே. ௮௯௯

கோடியாஞ்சிலபேர்கள்ஞானவான்கள் குவலயத்தில்வெகுநாளா
ய்ப்பேருண்டாக, நாடியேசமாதியிடங்கிட்டிருக்கு நாதாந்தப்பேரொ
ளியின்சமாதிமுன்னே, கூடியேவெகுகாலமிருந்தாரங்கே கொற்றவர்
கள்சமாதியிடந்தன்னிலேதான், வாடியேகாத்திருந்தசித்தர்தாமும்
வண்மையுடனுபதேசம்பெற்றார்தானே. ௯00

தானானயாக்கோபுமுனிவர்தாமும் தகமையுடனுபதேசம்பின்னு
ஞ்சொல்வார், 'கோனானகுருதனையேமனதிலெண்ணி கொப்பெனவே
தாமுறைப்பார்பின்னுஞ்சொல்வோம், வேனானசிஷிமுனிவர்சித்தரு
க்கு மேதினியிலுபதேசஞ்செய்துமேதான், தேனானயாக்கோபுமுனி
வர்தாமும் தீர்க்கமுடன்முடிவுதன்னைக்கூறுவாரே. ௯0௧

## யாக்கோபுகடைசிசமாதி.

கூறுவார்யக்கோபுசித்துதாமும் குவலயத்தில்தேகமதாயிருந்து
மென்ன, மாறுபடுபேதங்கள்செய்துமென்ன யகத்தானவசியமுதல்
கற்றுமென்ன, நீறுபுகழ்மோகனங்களறிந்துமென்ன நீணிலத்தில்வா
தமதுசெய்துமென்ன, தூறுடையவஷ்டமாசிவித்தை துறைமுதலுங்
கற்றென்னவொன்றுங்காணே. ௯0௨

காணவேபிரபஞ்சவாழ்க்கைபற்று காசினியிலிருந்தாலுமொன்
றுமில்லை, பூணவேநவகோடிதிரவியங்கள் பூவுலகில்தேடியென்னலா
பமில்லை, நாணமுடன்வுலகுதனில்வாழ்ந்துமென்ன நாதாந்தப்பே

சொளிவைக்கண்டுமென்ன, வேணபடியுலகமெலாம் ஒருகுடைக்கீழ் வுத்தமனேயாண்டாலும்ஒன்றுங்காணே. ௯௦௩

ஒன்றானதேகமதுபொய்ப்போவாழ்வு ஓகோகோகோதாக்களாயிருந்தார்,குன்றானகல்லதுபோல்தேகந்தானும் குவலயத்திலிருந்தாலுமொன்றுமில்லை, தன்றானதேகமதாயிரும்பானாலும் தாரணியில்நில்லாதுமெய்யேயாகும், சென்றாலுங்காயமதுபோவதுண்மை சடமழிந்துபோகுவதும்முண்மைதானே. ௯௦௪

உண்மையாம்யாக்கோபுமுனிவர்தாமும் வுலகத்திலிருந்ததுவும்போதுமென்று, நன்மையாஞ்சீஷவர்க்கமானபேர்க்கு நாதாந்தயாக்கோபுமுனிவர்தாமும், வன்மையாம்லோகமதைமறந்தேனப்பா வாகுடனேசமாதிக்குப்பின்னுஞ்செல்வேன், என்னமுடன்சீஷருக்குவாக்குரைத்து வெழிலாகசமாதிக்குப்போவார்தாமே, ௯௦௫

போகவேயாக்கோபுமுனிவர்தாமும் பொங்கமுடன்சமாதிக்குச்செல்வேனென்றும், வாகடங்கள்விதிமுறைப்போல் தப்பாவண்ணம்வளமுடனேதானறிந்தசித்துதாமும், வேகமுடன்சமாதிதனிலிறங்கியேதான் வேதாந்தசித்தொளிவுசொரூபந்தம்மை யோகமுடன்தானிருந்துமுனிவர்தாமும் வுத்தமர்க்குவசரீரியுரைத்தார்பாரே. ௯௦௬

பாரேதான்யாக்கோபுசித்துதானும் பாருலகிலிதுவரையிலிருந்தகோலம், நேரேதான்சுகமறிந்ததேகந்தன்னை நேர்மையுடன்பிரிதிவிவில்சேர்ப்பதற்கு, விரேதான்விண்ணுலகவாசையற்று வேதாந்தயாக்கோபுசித்தருக்கு, சீரேதான்யுகமுடிவுகாலமாச்சு சிறப்பானதேகமதுமண்ணாய்ப்போமே. ௯௦௭

மண்ணாகிப்போனாலுங்காயகற்பம் மகத்தானதேகமதுவழியும்பாரு, திண்ணமுடன்நபிதானுமுடிவுகாளில் தீர்க்கமுடன்கேழ்வியதுகேட்கும்போது, எண்ணமதில்யாக்கோபுமுனிவர்தாமும் வெழிலாகவந்தும்மைக்காண்பேனென்று, திண்ணமாய்வாக்குரைந்தார்சித்துதாமும் நீடாழியுலகத்தின்நேர்மைதானே. ௯௦௮

புலஸ்தியருற்பவம்.

நேர்மையாமின்னமொருமார்க்கங்கேளு ஞானவகஸ்தியனார்க்குகந்தசீஷன், பார்மனதாய்யுலகுதனில்பெயர்வகுத்த பண்பானசிவராஜயோகியென்பார், தீர்மையுள்ளபுலஸ்தியாமென்றசித்து திகழானசமாதிதனைச்சொல்வோம்பாரு,வார்மையுடன்சினபதிமேற்கேயப்பா வளமானதென்பொதிகைசார்புமாச்சே. ௯௦௯

ஆச்சப்பாபுலிப்பாணிப்பாலாகேளு வன்பானவெனதையர்காலாங்கிதானும், முச்சடங்கிச்சினபதியிருந்தபோது முதலங்கில்வளமை

யெல்லாஞ்சொன்னார்முன்பு, பாச்சலுடன்பொதிகமலைச் சார்புதன்னில் பாங்கானகடலோரம்பூமிவட்டம்,கூச்சலுடன்சித்தர்முனிரிஷிகளோடுகுவலயத்திில்சமாதிக்குவந்தார்தானே. ௬௧௦

வந்தாரேசிஷனார்தேரையரோடு வளமாகசீனபதிக்கடலோரந்தான், அந்தமுடன்பொதிகைமலைக்குன்னின்பக்கம் வகஸ்தியனார்சிஷனதுபாலன்றானும்,சொர்க்கமுடன்சமாதிதனிலிரங்கவென்று சுத்தமுள்ளபுலஸ்தியருங்கூறலுற்றார், வந்தவழிபோவதுவேயுண்மையென்று வளமுடனேசமாதியிடந்தேடினாரே. ௬௧௧

தேடியேசமாதியிடமருகிற்சென்று திறளானசிஷவர்க்ககூட்டத்தோடு, நாடியேசமுசாரவாழ்க்கையற்று நாதாந்தப்பேரொளியைக்கண்டுதேர்ந்து,கூடியேகுவலயத்திில்நேர்மையெல்லாங் கொற்றவனார்தான்வெறுத்துசமாதிக்கேக, நீடியேபுலஸ்தியருஞ்சிஷர்தம்மை நீட்சியுடன்தானழைத்துகூறுவாரே. ௬௧௨

கூறுவார்வாய்திறந்துசிஷவர்க்கம் குவலயத்தின்மகிமையெல்லாங்கண்டாராய்ந்தேன், சீருடனேசிற்றின்பவாழ்க்கையற்று சீரானபேரின்பநிலையைக்காண, நேருடனேவுலகுதனையான்மறந்து நேர்மையுடன்காயமதைநிலைநிறுத்தி, பாருள்ளேசமாதிதனிலிருப்பேனென்று பட்சமுடன் சிஷநக்குவுரைத்தார்பாரே. ௬௧௩

## புலஸ்தியர்சமாதிக்குபோகும்போது தேரையருக்குப் புன்சொல்கூறல்.

பாரேதான்தேரையர்மைந்தாகேளுபாருளிலேசமாதிக்குப்போரேன்யானும்,சீரேதான்யிருபத்திவாண்டுதானும்சிறப்புடனேசமாதிதனிலிருப்பேனென்று,நேரேதான்சமாதிதனிலிருந்துகொண்டு நேர்மையுடன்சரீரிவாக்குசொல்வேன், தீரேதான்யான்வருகுங்காலமட்டும் தீர்க்கமுடன்சமாதியிடமிருந்திடாயே. ௬௧௪

இருந்துமேசமாதியதுபூசைகொண்டு யெழிலாகநான்வருகுநாளுமட்டும், இருந்தவேயென்சிஷாபிராணநாதா தெருள்கலையில்தேர்ந்ததொருசித்துபாலா,பொருந்தவேவுபதேசம்மிகவுங்கேட்டுபொங்கமுடன்சமாதிதனிலிருந்துகொண்டு,வருந்தவேநான்வருகும்நாளையெண்ணி வளமுடனேநினைத்துநிற்பீர்தானே. ௬௧௫

தானானயென்சிஷாயின்னங்கேளு தகமையுள்ளசித்தர்முனியும்மைக்கண்டு, கோனானவுன்குருவுயெங்கென்றாக்கால் கொற்றவனேசமாதியிடஞ்சென்றாரென்று, தேனானபுலஸ்தியருவ்வருநாள்மட்டும் தேர்வேந்தசித்தருக்குப் பணிதிபூண்டு, மானானமன்னன்மணியைத்தொழுதுபோற்றி மலையோரஞ்சமாதியிடமிருக்கின்றேனே. ௬௧௬

இருக்குமேனென்றுரைத்தாயிதவுசொன்னால் லெழிலானசித்தர்முனிபகடுரைப்பார், வெருக்கவேபுலஸ்தியரும்மடிந்தாரென்று வீண்ணுலகில்மறுபடியுந்திரும்பாரென்று, பெருக்கமுடன்வகடுமிகக்கூறுவார்கள் பேரானகர்மியென்றசித்துதானும், உருக்கமுடன்நீயுரைக்கும்போதேயப்பா வுத்தமர்கள்பழிகூறுசொல்லுவாரே. ௬௧௭

சொல்லுவாரவர்களிடம்வாய்பேசாதேசுந்தரனேசிவராஜயோகிபாலா,வெல்லுவாருந்தனிடஞ்சூதுபேசி வேகமுடன்கொள்ளவதற்குமனமுங்கொள்வார், புல்லுவார்துானவார்த்தைகூறி புகழானவுச்சிதங்கள்மிகவுஞ்சொல்லி, அல்லலுடனுந்தனிடஞ்சூதுபேசி வப்பனேவதைசெய்யவெண்ணுவாரே. ௬௧௮

என்னுவார்தேறையர்யெந்தன்சிஷா யெழிலானகண்மணியேயின்னஞ்சொல்வேன், திண்ணமுடன்ஞானமதைக் கேட்பார்போலதீர்க்கமுடன்ஞானோபதேசந்தன்னை, வண்ணமுடன்கரைகண்டசித்துபோலே வாரானயெழுத்துக்கள்மாரட்டஞ்சொல்லி, நண்ணமுடன்செகஜோதிசொரூபங்காணநானுரைப்பேன்விதியதனைமகிழென்பாரே

என்பாரேபொய்சூதுகபடுதந்திர மெழிலானவுன்குருவைதூறுபேசி,வன்பானவார்த்தைகளுமிகவுரைத்து வளமானசமாதிக்குயிடர்கள்தேடி, இன்பமுடன்மெய்போலேபொய்யுங்கூறி யெழிலாகவுந்தனுக்குப்புகட்டிசொல்வார், தென்பாகமகிழாதேசிஷபாலா நேர்மையுடனெப்போதுபுகழ்வாய்நில்லே. ௬௨௦

புலஸ்தியர்சமாதியிலிருந்து வருகும்போதுவதிசயங்கள்.

நிற்கையிலேபுலஸ்தியாமுனிவர்தாமும்நீடானசமாதிதனிலிருந்துகொண்டு,அற்புதங்கள்மிகவுரைப்பார்சீஷருக்குவன்பானமகிமைகளுமெத்தவுண்டு,தற்பரனார்புலஸ்தியரும்வருகும்போதுதாரணியிலதிசயங்கள்மிகநடக்கும், கறபாறைபானதொருபொதிகைதானும் கடல்தனிலேயதிரவுடன்யரையும்பாரே. ௬௨௧

அதிருமேநான்வருகுங்காலந்தன்னிலாகாயகோடையிடிபோலேசத்தம், சதிரானபொதிகைமலைச்சுழலுண்டாகும் சப்தரிஷிதவமுனிகள்நடுங்குவார்கள், மதிலோடகோட்டைமுதல்அலங்கம்யாவும்மாறியேதலைகீழாய்விந்துபோகும், உதிருமேவானத்து மீன்களெல்லாம் வுத்தமனேவதிரலதுகாணும்பாரே. ௬௨௨

பாரேதான்சத்தசாகரமும்பொங்கும் பாரினிலேதேர்வேந்தராஜரெல்லாம், நேரேதான்போர்முகத்தில் நிற்பார்பாரு நேர்மையுடன்திசைமாறிதேவரெல்லாம், வேரேதானவரவர்கள்பதிகள்கெட்டு மேதினியிலசுகிலேயாள்வார்பாரு,கூரேதான்வாக்கதுவும்பொய்யாதப்பாகுணமானதேரரிஷிசொல்லக்கேளே. ௬௨௩

புலஸ்தியர்சமாதியிலிருந்து வருதல்.

சொல்லவே தேரமுனி சித்துகேளும் சுகமான புலஸ்தியரும் வருநாளாச்சு, புல்லவேசமாதியது திறப்பதற்கு புகழானபுலஸ்தியரு ம்வருநாளாச்சு, வெல்லவே மேதினியில்சித்தாமும் வேதாந்த ஞானப்பிரகாசத்தோடு,நல்லதொருசமாதிதனில் பாரைதானும் நலமுடனே தான்வெடித்துவருகலாச்சே. ௬௨௪

வருகவேசித்துவரும் நாளுமாகிவாகுடனே புலஸ்தியரும்வந்துமேதான், பெருகவேபுலஸ்தியரும் வந்தபோது பேரானதேரையமுனிவர்தானும், திருதலுடன்புலஸ்தியரைக் கண்டபோது தீர்க்கமுடனமஸ்காரமஞ்சலித்து, தருகவெனவாசிர்மங் கொண்டவனைத்து தக்கபடிமனுமுறைகள் கேட்டிட்டாரே. ௬௨௫

கேட்டவுடன்புலஸ்தியருட மகிழ்ந்துமேதான் கெடியானவார்த்தையதுமிகவுங்கூறி, நீட்டமுடன்லோகவதிசயங்களெல்லாம்நேர்மையுடன்தானுரைத்தார் சீஷனுக்கு, வாட்டமுடன்பூலோகவதிசயங்கள் வளமையுடன்போச்சுதென்று மனதிலுன்னி, தாட்டிகமாய்த்தேரையமுனிவர்தாமும் தமியேனைக்காக்கவென்று பணிந்திட்டாரே ௬௨௬

பணிந்துமேதேரையசித்துதாமும்பாங்குடனே. குருபதத்தைத்தாள்பணிந்து, துணிவுடனே சொன்னதொரு மொழிகளெல்லாந் துரைராஜ சுந்திரனேநடந்துபோச்சு, அணியணியாய்சமாதியிட பக்கம்வந்து வன்புடனே காத்திருந்தார்சீஷவர்க்கம், கனிவுடனே சொகசோதிவருநாளாச்சு கர்த்தனே பதியைவிட்டுயேகினாரே. ௬௨௭

ஏகவேயதிசயங்களெல்லாங்கண்டு யெழிலானபரமகுரு சித்துதாமும், போகருடகுருவர்க்கங் காலாங்கிநாதர் பொங்கமுடன்செய்ததொருவதிசயம்போல், வேகமுடனகஸ்தியனார்சீஷர்தாமும் வேதாந்தப்புலஸ்தியனார் செய்தார்கண்டீர், சாகமுடன்சித்தரெல்லா பிரமித்தேதங்கி சட்டமுடனவர்பதிக்குப் போனார்தாமே. ௬௨௮

போனாரேசித்தர்கள்தான் சென்றபின்பு பொங்கமுடன்தேரையமுனிவருக்குத், தேனானபுலஸ்தியரும் பின்னுஞ்சொல்வார் தெளிவானயென்சீஷா மைந்தாகேளு, கோனனகுவலயத்தி லிருந்துமென்ன கொப்பெனவே தேகமதுநிற்பதில்லை, மானனவையகத்தினைவிட்டேன் மன்னவனேசமாதிக்குப் போறேன்தானே. ௬௨௯

புலஸ்தியர் இரண்டாவது சமாதிக்கேகல்.

போகின்றேன்தேரை முனிசித்துகேளும் பொங்கமுடன்வையகத்தையான்மறந்தேன், சாகின்றசடலமது யிருந்துமென்ன சதாகாலமேமகிட்டைக் கொண்டுமென்ன, தாகின்ற பொன்மணிபின்சோதி

போனுஞ்சதாகாலமெப்போதுந் துலங்கவேண்டும், வேகின்றநெஞ்ச மதையிதங்கவைத்து வேகமுடன்சதானித்தம் பணியநன்றே. ௯௫௦

பணியவேபுதாம்புயத்தை நண்ணவேண்டும் பாங்கான மோட்ச மதைக்கருதவேண்டும், அணியவே மறுபடியுஞ் சமாதிக்கேக வப்ப னேயான்கொண்டவுறுதிதன்னை, துணிவுடனேஎன்ஷோசித்துபாலா துணையாகநீயிருந்துசெல்லுமட்டும், கனிவுடனேவுபதேசம் பெற்று மல்லோ காசினியிலிருப்பவனே சித்துவாமே. ௯௫௧

சித்தானசித்துமுனி தேரையாகேள் சிறப்புடனே சமாதிக்குப் போறேனப்பா, புத்தானமண்மீதில்வருவதில்லைபுகழான தேகமதை மறந்துவிட்டேன், சத்தமதுதானடங்கி மண்ணுப்போறேன் சாகின் றதேகமது விழலாய்ப்போச்சு, பத்தியுடனுலகுவரை முடிவுநாளில் பாலகனேயெந்தனையுங் காணலாமே. ௯௫௨

தன்வந்திரிவுற்பவம்.

காணலாமின்னமொருமார்க்கஞ்சொல்வேன் காசினியில்தன்வந் திரியென்றசித்து, நீணவேகிரேதாயி னுகத்திலப்பா நீடானவிஷ்ணு வவதாரங்கொண்ட, பூணவே தன்வந்திரியானசித்து புகழானமகா விஷ்ணுவவதாரத்தால், வேணவேமேதினியில் சித்துமாகி வேதாந்த தன்வந்திரியென்னலாச்சே. ௯௫௩

என்னவேதன்வந்திரி யென்றசித்து யெழிலானகாயாதி கற்பங் கொண்டு, தென்பொதிகைதனிற்சென்று மேருதன்னில் தேற்றமுட னகத்தியனார் தன்னைக்கண்டு, வண்பானசாத்திரங்க ளுள்ளாராய்ந்து அவர்மீதில்பட்சம்வைத்து வன்புகூர்ந்து, சொன்னமொழிதப்பாமல் நயங்கள்பேசி சூட்சாதிசூட்சமெல்லா மறிந்தார்தானே. ௯௫௪

அறியவேயகஸ்தியனார் செய்தநூலாம் அகண்டமெனும்பெருங் கடலுக்கொப்பதாகும், முறியாமல்தன்வந்திரி செய்தநூலை மூன்றுல ட்சங்கிரந்தமெனவகுக்கலாகும், சரியொத்தநூல்களுமே பாடிவைத் தார்சரிபாகவகத்தியரு பதேசபாற்சொன்னார், தெரியவே லோகாதி மாண்பருக்கு தேற்றமுடன்பாடிவைத்தார் நூல்கள்தாமே ௯௫௫

பாடிவைத்தமூன்றுலட்சங்கிரந்தந்தன்னை பாரினிலேவெகுகோ டிசித்தர்தாமும், நாடியேமிகப்பார்த்துக் கண்டாராய்ந்து நலமுடனே பதினெண்பேர் சித்தரெல்லாம், கூடியேவெகுநூல்கள்செய்தார்பாரு குவலயத்திலெவராலுஞ் சொல்லப்போமோ, தேடியேதன்வந்திரிபக வான்றானும்தீர்க்கமுடன் சமாதிக்கியெண்ணினாரே. ௯௫௬

எண்ணினார்காயாதி கற்பங்கொண்டு யெழிலாகத்தாமிருந்தார் வுலகுதன்னில், நண்ணமுடன் சீஷவர்க்கமனேகம்பேர்கள் நாடினார்

ன்வந்திரிபகவான்றன்னை, வண்ணமுடன் வெகுகாலமிருந்தசித்த சப்ளமையுடன் சதுராதிமார்க்கமெல்லாம், கண்ணபிரான்தானறிந்த தேசாரூபசித்து காசினியிலவர்போலுஞ் சொல்லப்போமோ. கூஙஎ

## தன்வந்திரிசிஷர்களுக்கு யோகமார்க்கங்கூறல்

சொல்லவேசிஷருக்கு ஞானமார்க்கம்செப்பினர் சரிகைகிரியோகமெல்லாம், வெல்லவேவிடகம்பம் பிரிதிமார்க்கம் வேதாந்த ஆகடியம்சௌபாக்கியந்தான், புல்லவேசோபனமா மதிசண்டமார்க்கம் புகழானசுககர்மம்திரிதிபாதை, மெல்லவேசூலமொடுகண்டபத்திரம் மேதினியில் நேர்மையுடன் பிரைத்தார்பாரே. கூஙஅ

பாரேதான் விருத்தியுடன் துருபம்பாவும் பாங்கானவியாகாதம் அரிஷணவேதம், சீரேதான்வச்சிரமாஞ் சித்தியோகம்சிறப்பானவிதிபாதமனந்தங்கோடி, நேரேதான்விரியாகம் ப்திகம்யாவும் நேர்மையுடன்சிவகண்டஞ் சித்தபோதம், தீரேதான்சாத்திரங்கள் சுவாணகர்மம்சித்தமுடன் சிவசுப்பிரம் பிரம்மந்தானே. கூஙகூ

தானான பிரம்மமொடு வயிந்திரபேதம்தாக்கான வைகிருதியொக்கத்தானும், பானானயோகமதுயிருபத்தேழும் பாகமுடன்பாலித்தார்சிஷருக்கு, கோனான தன்வந்திரி பகவான்றானும் குவலயத்தில்சிஷர் மேல்பட்சம்வைத்து, தேனானயோகமென்ற மார்க்கந்தன்னைதெளிவுடனேதாமுறைத்தார் மந்திரியாமே. கூச௦

ஆமேதான் பலமுடனே பாலவமுந்தானும் வப்பனேகௌலமுடன்கைதுலையுமாகும், வேமேதான்காசியுடன்வணசிவமுமாகும் வெட்டவெனிபத்திரையாம் சகுனியிடமாகும், தாமேதான் சதுடாதம் நாகவமுமாகும் தாக்கானகிமஸ்துவுடன் காணமாகும், போமேதான் காணமதுபதினொன்றாகும் போக்கானயோகத்துக்குநதியர்ச்சே. ()

## சிஷர்களுக்கு ராசிகூறல்.

ஆச்சப்பாயிராசியது சொல்வேன்பாரு வப்பனே மேடமுடன் ரிஷபமாகும், மாச்சனுடன்மிதுன மதுகடகந்தானும்மகத்தானசிங்கமதுகன்னியாகும், வீச்சப்பாதுலாவுடனே விருச்சிகந்தான் விரைவானதனுசுடன் மகாமாகும், பாச்சனுடன்கும்பமது மீனமாகும் பாங்கானராசியது பனிரெண்டுமாமே. கூசஉ

ரெண்டுடனேதுலாராசி மெத்தநன்று யெழிலுடனேகன்னிசிங்கமிருந்தால்நன்று, பண்டானசாத்திரங்கள்யாவுமல்லோ பாங்குடனே கண்டறிந்தசித்துயோகன், கண்டாலும்விடுவார்கள்சித்துநான்காசி

யில்தன்னைடே சேர்த்துக்கொள்வார், உண்டானபொருளல்லா மா க்கேயோதி வுத்தமனேசீஷர்களாய்ச் செய்வார்தானே. கூசா

செய்தாரேதன்வந்திரி பகவானுனும் செபலான பாக்கியமும் நூலுந்தந்தார், உய்யவேசிஷவர்க்கங் கண்டாராய்ந்து வுத்தமனே தேடினதோராயிரம்பேர், கையவேசிஷவர்க்க மாயிரம்பேர் நலமுடனே விட்டகுறையுள்ளபேர்கள், தய்யவேதேர்ந்தெடுத்தோரிவர்களாகும் துரைராசசுந்தரனே சொல்லேவன்பாரே. கூசச

பார்க்கவேயெனதையர் காலாங்கிநாதர் பட்சமுடனெந்தனுக்கு வுரைத்தசேதி, தீர்க்கமுடன்யானுமல்லோ குளிகைகொண்டுதேசாதிதேசமெல்லாந்தான்திரிந்து, ஏர்க்கமுடன்லோகவதிசயத்தையெல்லாமெழிலாகத்தான்பார்த்துகண்டாராய்ந்து, மார்க்கமுடன்பாடிவைத்த சத்தகாண்டம் மகத்தான நடுக்காண்டமிதுதானேமே. கூசரு

தன்வந்திரிசமாதிக்கேகல்.

நடுவானகாண்டமதுயேழாயிரந்தான்நலமானகாவியத்துக்கிணை வேறுண்டோ, வடுவான தன்வந்திரிபகவான்றானும் மார்க்கமுடன் சமாதிக்கேகவெண்ணி, அடுமையாமானதொரு சீஷவர்க்கம் வன்புடனே தானகைத்தார் வதிதமார்க்கம், படுகுழியில் சமாதிதனில் செல்லவென்று பண்புடனே தாமுறைத்தார் பகவான்றானே. கூசசு

சமாதியிடம்சீஷர்களுக்குபுத்திகூறல்.

தானான தன்வந்திரிபகவான்றானும் தன்மையுடன் சீஷருக்குத் தாமுறைப்பார், தேனானகண்மணியே சீஷவர்க்கம்தெளிவுடனே யெல்லவரும் கேட்டிருங்கள், பானுனபாரின்மிசைபாசைவிட்டேன் பாங்கானசமுசார வாழ்க்கையற்றேன், மானனமனோன்மணியை மனதிலெண்ணி வையகத்தினசையெல்லா மறந்திட்டேனே. கூசஎ

மறந்திட்டேன் காயாதி கற்பங்கொண்டு மானிலத்தில் சிலகாலமிருக்கவென்று, துறந்திட்டேன்சமாதிக்குச்சிலதுகாலம் தொல்லுலகையான்மறந்து மண்ணிற்சென்று, கறந்திட்டபாலதுபோல் வடிவமாகி காசினியில்மறுபடியும்வருவேனென்று, உறமுடனே ஞானோபதேசந்தன்னை வுண்மையுடன் போதித்தார்சீடர்தாமே. கூசஅ

போதித்தநாள்முதலாய் பகவான்றானும் பொங்கமுடன்மேருகிரிதன்னிற்சென்று, ஆதித்தன்காணுதவதிசுநாடு அங்கானவேசென்றுராம்பகவான்றானும், சாதித்து மனதாறுதிகொண்டுமல்லோ சட்டமுடன் சீடவர்க்கங் கூட்டத்தோடு, பாதிமதிசடையணிந்த தம்பிரான்போல் பதிதனக்குஏகினார் பகவான்றானே. கூசகூ

ஏகவேபொதிகைமலைக் கடலோரந்தான் யெழிலான தீவுதனில் சமாதிதன்னை, பாகமுடன்படுகுழிகள் வெட்டினார்பார் பழங்குடனே நீரோடும்பாகுமட்டும், ஏகமுடன் சமாதியதுகட்டினார்கள் யெழிலான தன்வந்திரிபகவானுக்கு, சாகமுடன்குழிதனிலே யிராங்கினாராம் சட்டமுடன் திறைகொண்டுமூடினாரே. கூ௫௦

தன்வந்திரிபகவான் சமாதியிலிருந்துசீஷர்களுக்கு வசரீரிவாக்குகூறல்.

மூடினார்சீஷவர்க்க மாயிரம்பேர் மூதலரைக்காணமல் மறைந்தார்சித்து, நாடியேசீஷரெல்லாஞ் சமாதிபக்கல் நலமுடனே கார்த்திருந்தார் கும்பலாக, வாடியேசீஷரெல்லா மிருக்கும்போது மகத்தான தன்வந்திரிபகவான்றானும், தேடியேசீஷருக்குச்சொல்லார் பாரு தெளிவுடனே கேட்டிருங்கள் மாணாக்காளே. கூ௫௧

கேட்கவே தன்வந்திரிபகவான்றானும் கிருபையுடன் சீஷருக்குங் கூறினார்பார், நீட்கமுடன்வருபதுவாண்டுமட்டும் நிலையான சமாதிதனிலிருப்பேனென்றும், வேட்கமுடன்சரீரி வாக்குதானும் வீரமுடன் கூறினார்பகவான்றானும், திட்கமுடன்சீஷவர்க்கங் கேட்டிருந்தார் திறைகோடிவறைகோடிகாலமாச்சே. கூ௫௨

ஆச்சப்பாயான்யான்வருகுங்காலந்தன்னில் அவனிதனிலதிசயங்கள் மிகநடக்கும், மூச்சடங்கிப்போனதொருதேசந்தானும் மூதலகில் வருவதற்கு முன்னதாக, ஏச்சலுடன்வதிசயங்கள் மிகநடக்குமெழிலானபொதிகைமலை சார்புதன்னில், கூச்சலுடன் தேவாதி ரிஷிகளெல்லாங் கொற்றவனார்வருங்காலந்தானுமாச்சே. கூ௫௩

தானுமேரிஷிக்கூட்ட முனிவர்தானும் தன்வந்திரிபகவானும் வருநாளாச்சு, வானுலகுதேவரெல்லாம் வருந்தியல்லோ வருணமழைப் புஷ்பமதுபொழிந்தாரங்கே, தானுலகுராஜாதிராஜரெல்லாங் காணிக்கைகொண்டுவந்து பகவானுக்கு, தேனமுதுகனிவுடனே புட்பதீபம் தேர்வேந்தபகவானுக்கொடுசென்றாரே. கூ௫௪

தன்வந்திரிசமாதியை அகத்தியர்காணவந்தது.

சென்றாரேசமாதியிட பக்கந்தன்னில் சிறப்புடனே சித்தர்முனி நிற்கும்போது, குன்றானபொதிகைமலைக் கும்பயோனி குவலயத்திலதிசயத்தைப்பார்க்கவெண்ணி, தென்திசையில்மலையை விட்டு பகவன்றன்னைதேற்றமுடன் காண்பதற்கு முனிவர்தாமும், வென்றிடவே சமாதியிட பக்கந்தன்னில் வேதாந்த சித்தொளிவும் வந்திட்டாரே. கூ௫௫

வந்ததொருசேதி தன்னைநந்திகேட்டு வண்மையுடன் தன் வந்திரிபகவான்றன்னை, சிந்தையிலே நற்சீடனென்றறிந்து சீரானபகவானைக்காணவென்று, பந்தமுடன்நற்சீடனென்று சொல்லி பாரினிலேகண்டு நெடுநேரமாச்சு, அந்தமுடன்சமாதிவிட்டு வருதலுக்கு வன்பானநந்திசர்வந்திட்டாரே. ௯௫௬

தன்வந்திரிசமாதியைநந்தீசர்காணவருதல்.

இட்டாரேநந்தீசர்முனிவர் தாமும் எழிலானசமாதியிட பக்கந்தன்னில், விட்டகுறை யிருந்ததினால் பின்னுங்காண விருப்பமுடன் வருவதற்கு வந்தாரல்லோ, பட்டதொரு தன்வந்திரி பகவான்றன்னை பட்சமுடன்காணுகைக்கு நந்திதாமும், கிட்டிபேசமாதியிட வலபக்கந்தான் கிருபையுடன்காண்பதற்கு நின்றார்பாரே. ௯௫௭

தன்வந்திரியைக்காண அசுவனியும்விசுவனியும்வருதல்.

பாரேதான் அசுவனியாம்விசுவனிபாந்தேவர் பட்சமுடன் தன்வந்திரிபகவான்றன்னை, நேரேதான்சமாதியிடங்காணவென்று நேர்மையுடன்சென்றாராம் சமாதிபக்கல், கூரேதான்சித்துவரும் நாளுமாச்சு குவலயத்தில்சித்தரெல்லாம் கும்பாய்நிற்க, சீரேதானபுவிமீதிலதிசயங்கள் சிறப்புடனே தானடக்கும் மகிமைதானே. ௯௫௮

தானானவறுபது வாண்டுதன்னில் தாக்கானசமாதியின் பக்கல் தன்னில், மானானகுருடர் முதல்சப்பாணிதானும் மகத்தான ஊமை முதல்பேசுவான்பார், தேனான தன்வந்திரி பகவான்றானும் தேற்றமுடன் சமாதிவிட்டு வெளியேவந்தார், பானானபகவானும்பாரின்மீதில் பரமவொளிசொரூபராய் வந்திட்டாரே. ௯௫௯

வந்தாரேபகவானும்பூமிமீதில்வண்மையுடன் சீடவர்க்கந்தன்னைக்கண்டு, சிந்தனையாய் சீடவர்க்கம்தன்னைநோக்கி சிறப்புடனேவுபதேசம் மிகவாய்ச்செய்து, தந்தமக்குவரமதுவும் பகவான்றானும் தன்மையுடன் தான்கொடுத்துவாசிர்மித்து, வந்தனையாய்வுலகினுட மகிமைதன்னைவாருடனே தான்கேட்டார் பகவான்றானே. ௯௬0

தானேதான் கேட்கையிலே சிஷவர்க்கம் தகமையுடனுத்தாரங் கூறுகின்றார், தேனான தெள்ளமுர்தம்பெந்தன்கோவே தேற்றமுட காமுரைப்போம் பகவானுக்கு, பானானகுருடர் சப்பாணியாரும் பாங்குடனேகண்திறந்து நடக்கலாச்சு, வேனனயுலகுதனில் தங்கள்வார்த்தைவேணபடியதிசயங்கள் கண்டோம்தாமே. ௯௬௧

கண்டோமேயென்றனுமே சிஷர்தாமுங்கருத்துடனே தாமுறை
ப்பார்பகவான்றானும், அண்டமூல களந்தெதாரு ஆதிபாலன் அல்ல
வருங்கேட்டிருக்கத் தாமுறைப்பார், விண்ணுலகிலிருந்து மென்ன
சிஷமாரேவினேதவகைமகிமையெல்லாங்கண்டுமென்ன, சண்டமாரு
தமானகாயகற்பம், சட்டமுடன்கொண்டென்னவொன்றுங்காணே.

காணவேகாயாதிக் கொண்டுமென்ன கலிபுகத்தில் கோடிவரை
யிருந்துமென்ன, வேணடிவேதநூல் செய்துமென்ன விட்டகுறை
யிருந்தென்னபோயுமென்ன, பூணவேசமூசாரவாழ்க்கையற்று பூவுல
கிலிருந்தென்ன மடிந்துமென்ன,தோணவே சின்மயத்தைக் கடந்து
மென்னதொல்லையெல்லாமற்றானு மொன்றுங்காணே. ௬௬௩

ஒன்றானதேகமது பொய்யேவாழ்வு வுத்தமனேலோகத்திலொ
ன்றுமில்லை,பன்றானபொய்களவுயாவுமுண்டுபாரினில்விசுவாசமருளு
மில்லை, குன்றான்விசுவாசமருள்கொண்டாலும் குவலயத்தி லொன்று
மில்லை பாருபாயே, தன்றானவையகத்து வாழ்க்கையெல்லாந் தாரணி
யில் இப்படியே மேவலாச்சே. ௬௬௪

தன்வந்திரிமறுபடியுஞ் சமாதிக்கேகல்.

ஆச்சப்பாசிஷவர்க்கஞ் சொல்லக்கேளும் வப்பனே பின்னுமல்
லோசமாதிசொல்வேன், மூச்சடங்கிசமாதிதனில் யிருப்பேனென்
றும் மூதுலகில் மறுபடியும்வருவதில்லை, மாச்சலுடன் வுலோகமது
முடிவுகாலம் மகிட்சியுடன்சிஷர்களைக்காணலாகும்,வாச்சுதேவிட்ட
குறைநேருமானல் வளமானசிஷரெல்லாங்காண்பேன்பாரே. ௬௬௫

பாரேதான் யென்றனுமேபகவான்றானும் பாரின்மிசை யாசை
யதுவிட்டொழித்து, நேரேதான்சமாதிக்குச்சென்றாரங்கே நேர்மை
யுடன்பகவானும் மண்ணிற்சென்று, போரேன்யான பொன்னுலகப்
பதியைத்தேடி பொங்கமுடன் யெந்தனதுவாசையற்று, சீராகதானி
ருங்கள் சிஷவர்க்கம்சிற்பரனுற் பதிபோரேனென்றார்தாமே. ௬௬௬

சுந்தரானந்த ருற்பவம்.

தாமானபின்னமொருசூட்சங்கேளு தகைமையுள்ளசுந்தரானந்த
சித்து, காமானசித்தினுட பெருமைசொல்வேன் காசினியிலிவர்போ
லுஞ் சித்துவுண்டோ, வேமானமானதொரு சித்துதாமும் வெகு
கோடிகாலம்வரைதாமிருந்தார், நாமானமென்றதொரு காயகற்பம்
நாதாந்தசித்துமுனி கொண்டார்தாமே. ௬௬௭

கொண்டதொரு சுந்தரானந்தர்தாமும் குவலயத்தில் வெகுமா ன்பர்சிந்தருக்கு, அண்டமுடியானதொரு சாத்திரங்கள் வனேகமா ய்க் கற்பித்தார்சித்தர் தாமும், கண்டறிந்தசித்துவர்க்க மாயிரம்பேர் கருவாளிக்கூடிருந்தார் சித்துதாமும், தொண்டரெனும் சித்துமுனி சீஷவர்க்கம் துரைராசசுந்தரனைச் சூழ்ந்தார்பாரே. ௬௬௮

அயிராவதமருகிற்சமாதிபடைதல்.

பாரேதான் சுந்தரானந்தசித்து பாரினிலே யிருந்தசுகம்போது மென்று, நேரேதான்வடக்குமுகந்தன்னிலப்பா நெடுந்தூரமானவயி ராவதந்தான், சீரேதான் வெண்ணூறுகாதமப்பா சிறப்பான வயிரா வத மலைதானுகும், ஆரொன்று மலையோரந்தன்னிலுண்டு வழகான மண்டபந்தா னிருக்குந்தானே. ௬௬௯

தானான மண்டபந்தான்லட்சங்காலாம் தாக்கானவாய்க்கால் நடு மையத்தில், கோனானயெனதையர்காலாங்கிநாதர்கொற்றவனார்சொ ற்படிக்கிக் கண்டேனயானும், தேனானமனோன்மணியாள் கடாட்சத் தாலே தேசமெல்லாஞ்சுத்திவந்தசொரூபசித்து, வானானவையகத்தி லிருந்தசித்து வளமுடனேகாலாங்கி யென்னும்பாரே. ௬௭௦

பேரானசுந்தரானந்தசித்து பெருமையுடன்வுலகுதனில்வாழ்ந்த சித்து, சீரானசுந்தரானாதர்தாமும் சிறப்புடனே சமாதிக்குச்செல்ல வெண்ணி, கூரான சீஷவர்க்ககூட்டத்தோடு கொடிமுடி கைலாசர் போலேதானும, சேரானவருங்கடலைத் தேடியல்லோ சேனையுடன் வந்தாரே சித்துகாணே. ௬௭௧

சித்தானசொரூபமென்ற சித்துதாமும் செழுமையுடன் சில காலமிருந்துமேதான, முத்தானபவக்கடலையொழிந்துமல்லோ மூது லகில்சமாதிக்குப்போகவென்று, பத்தியாய்சீஷருடன்பரமநாதா பா ருலகுவாசல்தனைவிட்டொழிந்து,நித்தியமுதானதொருகடவுடன்னை நிட்களமாய்த்தானினைந்து துதித்திட்டாரே. ௬௭௨

துதித்துமேஅயிராவதத்தின்பக்கல்துறையானவாற்றோரந்தன் னிற்சென்று, மதிப்பான சங்கநிதிபதுமநிதிதன்னை மாற்கமுடன்கண் டல்லோசித்துதாமும், விதிப்படியேசமாதிக்குயிடமுந்தேடி விருப்ப முடன் தானழைத்துசீஷர்தம்மை, ததியானமாண்பர்களேயின்னுங் கேளும் தன்மையுடன்சமாதிக்குச் செல்வேன்பாரே. ௬௭௩

பாரப்பாசமாதிதனில்கிருகியல்லோ பத்தாண்டுவரைமுடியிரு ப்பேனென்றும், சீரப்பாசிலகாலஞ்சென்றபின்பு சிறப்புடனேவைய கத்தில்வருவேனென்றும், காரப்பா சமாதியிடம்வீற்றிருங்கள் காசி னியிலவெகு கோடிவதிசயங்கள் ,நேரப்பாவதிசயங்கள் காணப்போ றீர் நேர்மையுடன்சித்தனது வுரைபொய்யாதே. ௬௭௪

சீஷனுபெடமாரகந்தர் புத்திகூறல்.

பொய்யானவுலகத்தில்மாந்தரப்பாபொக்கமுடன்கருமிகளுமெ-
த்தவுண்டு, மெய்யாக்வவர்களிடம் வாய்பேசாதே வேதாந்த நுட்ப
மதைக்காட்டவேண்டாம், துய்யதொருகாயாதி கற்பந்தன்னை சூட்
சந்து துறையதனைக்கூறவேண்டாம், வையவேவுறவுகண்டுவிடையுங்
கேட்பார் பகராதே ஒருக்காலுமகிழ்ந்திடாதே. ௯௭௫

மகிழவேயுந்தனுக்கு யிதவுசொல்லிமாராட்டமாகவல்லோ கும்
பல்கூடி, நெகிழவேஞானத்துக்குறுதிகேட்டார் நெடிதானபாலமூர்த
போதையுண்டு, மகிழவேதமோட்ட மிகவேகூறி தருக்கமதுசெய்து
மல்லோகருவிகேட்பார், அகிழவேகருவதனை யுன்னைக்கொல்ல வப்
பனே கபடதந்திரஞ்செய் வார்பாரே. ௯௭௬

பாரேதான்முழுமக்கள் கருமியோடுபகாரதேவுன்னுக்குள் மரு
மவித்தை, நீரமுடன்சிவயோகநிலையிற்சென்று நீர்க்கமுடன்சதாசித்
தம்பருவமாகி, நேரேதான்தீவழியை விட்டுநீங்கி நேர்மையுடன் நல்
வழிக்கியாளதாகி, கூரேதான்குவலயத்தி லடக்கங்கொண்டு நொற்ற
வனே வாழ்குவது புத்தியாமே. ௯௭௭

புத்தியாமின்னம்வெகு மார்க்கஞ்சொல்வேன்புகழானகண்மணிம
யேபுகலக்கேளும், சத்தியத்துக்கொருகாலுங் குறைவாராது தாரணி
யில் நீயுமொருசித்தனவாய், வெத்தியுண்டுவிசுவாசமருளுமுண்டுவே
தாந்தப்பெருங் கடலைவெல்லலாகும், எத்திசையுமுந்தனையே புகழ்
வார்பாரு வெழிலானசீஷவர்க்க முதல்வனாமே. ௯௭௮

ஆமேதான்அறிவுள்ள டமாரகந்தர்வவனியிலேநீயுமொருபுத்தி
வானாய், தாமேதான் யான்வருகுங்காலமட்டும்தன்மையுடன் சமாதி
யிடபக்கல்நின்று, காமேதான்சொன்னபடிவிதியின்மார்க்கம் காட்ட
முடன்தானிருந்து பக்திகொண்டு, போமேதான் வீண்காலங்கழியா
மற்றுன் பொக்கமுடன்சமாதியிடம் நிற்பீர்தாமே. ௯௭௯

டமாரகந்தருக்கு சுந்தாரகந்தர் சமாதியில் அசரீரிகூறல்.

நிற்கவேசுந்தாரகந்தர்தாமும் நெடிதான வசரீரிவாக்குசொல்வா
ர், விற்பனமாங்கொண்டதொரு சீஷர்தாமும் விண்ணுலகிலெல்லவ
ருங்கேட்டிருங்கள், சொற்படியே தானடக்குஞ்சுந்தரன்சொல் தொ
ல்லுலகில்பொய்யாது மெய்யேயாகும், கற்புதைததப் பாறையதுவெ
டிக்கும்போது கைலாசசுந்தரரும் வருவன்றானே. ௯௮௦

தானனசுந்தரரும் வருகும்போது தாரணியில்வெகுகோடி வதி
சயங்கள், பானுனபராபரியும் முன்னேநிற்பாள் பாருலகத்தனிக்கு

ஞ்சோதிகாணும், மானான வையகங்களிருந்தும்போகும் மகத்தான
நாதாக்கள் நடுங்குவார்கள், கூனமொண்டிசப் பாணியெல்லாம்
குரைநீங்கி பிணிநீங்கி யெதிர்நிற்பாரே. ௬௮௧

எதிரான சூரியனும் மங்கிநிற்பான் யெழுகடலுந் திலைசமாறிப்
பொங்கிநிற்கும், சதிரானகாலயுகவதிசயங்கள்சார்புடனேயெக்கால
ங்காணலாகும், மதிபோன்ற சந்திரனும் யெதிரேநிற்பான் மாசற்றவ
குந்ததியும் நடுங்கும்பாரு, துதியான வஞ்சலிகள் மிகவேசெய்வார்
தொல்லுலகந்தத்தளிக்கக் காணலாமே. ௬௮௨

காணலாங்கைலாச மேருநாலுங்கண்ணுக்குத்தோற்றுமே கடி
னமில்லை, வேணபடியுபசாரமிகநடக்கும் மேதினியில்சுந்தரனார் வாக்
குபொய்யா, தோணவே யித்தியாதிவதிசயங்கள்தொல்லுலகில் தான
டக்குஞ்சத்தியசத்தியம், நீண்டவே யெந்தனது சமாதிபாறை நெடிய
தொருவதிசயங்களின்னங் கேளே. ௬௮௩

கேளப்பாயான்வருருங் காலந்தன்னில் கெணிதமுடன் பாறை
யதமீதிலப்பா, நாளப்பாவருகுநா ளெழுதலாகும்நாதாக்கள் புத்தி
யுள்ளோர்காணுவீர்கள், ஆளப்பா வாசகத்தைக்கண்டபோது வப்ப
னேசமாதியுள்சிலம்பினோசை, விளப்பாசெவிதனி லேகேட்கும்பாரு
விட்டகுறையிருந்தோர்க்கு லபிக்குந்தானே. ௬௮௪

தானேகேள் சித்துவரும் நாளுமாச்சு தாரணியில் வெகுகோடி
மகிமைமெத்த, மானேகேள்சொரூபமென்றசித்துநாமும்மகத்தான
நவகோடி ரிஷிகள்முன்னே, கானமுடன் சமாதிவிட்டு வெளியேவந்
தார் கைலாயமேருகிரி சொரூபம்போலே, பானமிர்தமுண்டமெல்லோ
பாரின்மீது பட்சமுடன்சித்தொளிவைக் கண்டிட்டாரே. ௬௮௫

கண்டவுடன் சிஷவர்க்க மொன்றுய்க்கூடி கருத்துடனேவஞ்ச
லிகள்மிகவுஞ்செய்து, தெண்டமுடன்சாஷ்டாங்கமிகவும்பூண்டு தே
ற்றமுடன் ஞானோபதேசம்பெற்று, பண்புடனே நவகனியுமமுர்தக்
தானும்பட்சமுடன்சித்துவுக்குக்கொண்டுசென்று, விண்டதொருவுப
தேசம்பெற்றுக்கொண்டு வுத்தமர்கள் தாமிருந்தாருண்மைபாரே. ()

உண்மையாயிப்படிநா ளிருக்கும்போது ஓசைகோ நாதாந்த
சித்துநாமும், வண்மையுடன் வையகத்தில் வந்துமல்லோ மகாகோடி
வற்புதங்கள்செய்தார்பாரு, தன்மையாய்தானுரைத்தவாக்குபாவும்
தாரணியில்நிறைவேறிப் போச்சுதல்லோ, நன்மைபெறச்சிஷவர்க்கங்
காணலாச்சநாடனைதும் சுந்தரனார்கீர்த்தியுண்டோ. ௬௮௭

உண்டானசீர்த்திபதுமிகவுமாகி வுண்மையுடன் கிரியைமுதல் வசரீர்தானும், தொண்டர்கட்குத் தாமுரைத்தவாக்கு போலதொல் லுலகில் வதிசயங்கள் மிகவுமாகி, மண்டலத்தில நாதாக்கள்சித்துதாமும் மதித்தாரே சுந்தரரைமதித்தார்பாரு, கண்டமுடி மாண்பரெல் லாந்தலைகுனிந்து கைலாசசுந்தரரைத் துதித்தாரபாரே ௯௮௮

சுந்தரானந்தர்மறுபடியும் சமாதிக்கேகல்

பாரேதான்பின்னமொருமார்க்கஞ்சொல்வேன் பண்பானசுந்தரானந்தர்தானும், நேரேதான் நெடுங்காலம் வையகத்தில் நேர்மையுடன் தாமிருந்தார் சீஷரோடு, சேரேதான் சிலகாலஞ் சென்றபின்புசிறப்புடனே பூலோகவாழ்வுதன்னை, கூரேதான் பொய்யென்று மனதிலெண்ணி கொப்பெனவே சமாதி செல்வேனென்றிட்டாரே()

இட்டாரே சுந்தரானந்தர்தாமும்மெழிலாகச் சமாதிக்குச்செல்லவென்று, திட்டமுடன் மறுபடியுஞ் சமாதிக்கேக தீரமுடன் சீஷருக்கு விடையுஞ்சொல்லி, சட்டமுடன் சமாதிக்குப் போறனப்பா தாரணியில் சதாகாலம் நீங்களெல்லாம், கிட்டிருந்து நானவருகுங் காலமட்டும் கிருபையுடனெதிர்பார்த்து நிர்பீர்தாமே. ௯௯௦

நிற்பீரேசில காலஞ்சமாதிபக்கல் நீடூழிகாலம் வரைமுடிவு மட்டும், நற்பமென்றவாழ்வதனைமெய்யென்றெண்ணி வவனியிலேமதி மயங்கிநிற்கவேண்டாம், சொற்படியேசமாதிவிட்டு வருவேனானல் சுந்தரனே யென்னைநீர் துதித்துக்கொள்ளும், அற்பசுகதேகமது வழிந்துபோனால் ஆண்டவன்முன் கடைசிவரைக் காணலாமே ௯௯௧

காணலாம் வுலகமது முடிவுதன்னில் கைலாசநாதரிடம் நிற்பேன்யானும், தோணவேயெந்தனையுங் காணலாகும் தொல்லுலகுமுடிவுவரை நாளிலப்பா, வேணபடிநீதிமனு முறைகள்யாவும் விருப்பமுடன் தானடக்குந் தேவர்பக்கல், நீணவேசிடவர்க்கமனைத்துமேதான் நீடூழி முடிவுதனில் காணலாமே. ௯௯௨

ஆமேதான் வுலகுதனில் யிருந்துமென்னவப்பனே தேகமதை மறந்துவிட்டேன், நாமேதான் பாசமதைத் துறந்துவிட்டேன் நாட்டினிலே நாதாக்களாசைவிட்டேன், போமேதான்வுலகத்திலிருந்தாலுந்தான் பொன்னுலகு மெப்போதுங் காணியாகும், தாமேதான் தேகமது பொய்யே வாழ்வுசதாநித்தமமோட்சமென்ற வீடுதானே.

தானான லோகமதில் யெல்லாம்பொய்யே சட்டமுடனிருந்தவர்களாருமில்லை, கோனான குருசொன்ன நூலும்பொய்யே குவலயமு

மொரு காலமழிந்துபோகும், தேனனசத்தசாகர மும்பா திறைமே வெரை காணுதாகிப்போகும், பானவுலகமது வழிந்துபோகும்பா ருலகை கண்டவர்க ளில்லைதானே. ௬௯௪

இல்லையே நாதங்கள் சித்துதாமும் வெழினுடனே யெல்லவரு மாண்டாரப்பா, தொல்லையெனும் பிறவியதுயற்றுப்போச்சுதோற்ற மில்லவண்ட சராசரங்களெல்லாம், வல்லதொருவாத்மாவும் காணப் போகாமகத்தானலோகத்துமார்க்கமப்பா, சொல்லவென்றால்நாவில் லைப்பாவுமில்லை தொல்லுலகை மறந்தவனே சித்தனாமே ௬௯௫

போகர் திக்குவதிசயம்

சித்தனாய்ப் பிறந்துமே பாலன்றனும் சிறப்புடனே காலாங்கி கிருபைதன்னால், சுத்தமுடன் கிழக்கு தென்கிழக்குதானும் சூட்ச முடன் தென்மேற்கு தெற்குதானும், பக்தியுடன் மேற்குவட மேற் குதானும் பாங்கானவட, கிழக்குவடக்குதானும்-வெத்தியுடன்சுத்தி வந்தேன் குளிகைதன்னால் வேதாந்தத்தாயினது வொளிகண்டேன்.

கண்டதொரு குளிகைதன்னால் கைலையெல்லாங் காசினியோர் தான் புகழசுத்திவந்தேன், அண்டமுடனதிசயங்களெல்லாம்பார்த் தவப்பனே காலாங்கி கடாட்சத்தாலே, விண்டிடவேலோகாதி வதி சயங்கள் விருப்பமுடன், பாடிவைத்தேன் சத்தகாண்டம் சண்டமா ருதம்போலவேழாயிரந்தான்சாற்றினேன் லோகத்துமாண்பருக்கே

மாண்பானபெருநூ லேழாயிரந்தான் மகத்தானநூலிது தானு லாங்காண்டம், காண்பான சத்தகாண்டந் தன்னிலேதான் கருவிகர ணாதியெல்லாந், திரட்டிவைத்தேன், நீண்பானகாண்டமது யேழுக் குள்ளே நினைத்தவொரு, பொருள்களெல்லாங் காணலாகும், தாண் பான சீனபதியுலகத்தார்க்கு தகமையுடன் செப்பினதோர் நூலி தாமே ௬௯௮

நூலான நூலிதுதான் நாலாங்காண்டம் நுணுக்கமுடன்பாடி வைத்த சத்தகாண்டம், பாலானநூலதுபோல் யாருஞ்சொல்லார்பா லகனே வாயிரத்துக் கொருகாண்டந்தான், சேலானகாண்டமது யே ழுமாகும் சிறப்பானகாவிய, மேழாயிரந்தான் மாலானகுருநூலாம் பொருநூலாகும் மகத்தானகாண்டமது நான்குமுற்றே. ௬௯௯

போகர்சத்தகாண்டம் -எது

சுவதகாண்டம்-முற்றிற்று.